3001

NCA Debates

Official Report

CP No 9

©

April 1988

V211,31 N83
N83.51.4
136049

வெளியீடு 4-1-1984] [Issued 4-1-1984

(12)
ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி
31 மார் 1984
3001
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 27, 1983—தொகுதி LP எண். 4

Wednesday the April 27th 1983 Volume LP No.4

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department Fort St. George
Madras-600 009.

விலை ரூ. 3-50 பைசா] [Price Rs. 3-50 Paise

D
V2;11,31 N83
N83.51.4
136049
சென்னை-600 008.

உள்ளடக்கம்

27-4-1983


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்— விடைகள் | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 389 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் | 514—548 |
| 2. கிருஷ்ணா நதிநீர் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டிய தமிழக முதல்வருக்கு வாழ்த்து. | 415—46 |
| 3. தகவல் கோரல்: | |
| (அ) பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏட்டிற்குத் திருத்தம். | 416 |
| (ஆ) கரும்புக்கு கூடுதலாக அறிவிக்கப்பெற்ற தொகை விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்தல். | 416 |
| (இ) பீடித் தொழிலாளர்கள் பிரச்சினை. | 416—417 |
| (ஈ) மங்களதேவி கோவில் தமிழர்கள் வழிபாடு செய்ய வசதி செய்து கொடுத்தல். | 417 |
| (உ) திண்டுக்கலில் நிலவும் குடிதண்ணீர் பிரச்சினை. | 417—418 |
| (ஊ) நிலக்கோட்டைத் தொகுதியில் காலரா பரவி வருவதான செய்தி. | 418 |
| (எ) தேன் உற்பத்தியாளர் நிலைமை. | 418—419 |
| (ஏ) அம்பாசமுத்திரம் முன்சீப் கோர்ட் | 419 |
| (ஐ) தொலைக் காட்சி மூலம் இந்தி திணிக்கப் படுவதாக புகார். | 419 |
| (ஒ) பழனியில் நிலவும் குடிதண்ணீர் பிரச்சினை. | 419—42 |
| (ஓ) மின்வாரியப் பொறியாளர்கள் மாற்றம் | 42 |
| (ஔ) அரவங்காடு வெடிமருந்து தொழிற்சாலை ஊழியர்கள் போராட்டம். | 420 |
| (க) விவசாயத் தொழிலாளர்களுக்கு கத்தறி ஆடை வழங்குவது. | 420 |

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அப்படிப்பட்ட கருத்துரு அரசு தரப்பில் இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினரின் உணர்வுகள் தக்க நேரத்தில் ஆலோசிக்கப்படும்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மாட்டுத் தீவனம் என்பது இன்றைக்கு மிக முக்கியமான பிரச்சினையாக வந்திருக்கிறது. இன்றைக்கு சமூக காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மேய்ச்சல் நிலங்களைக் கொண்டு வந்து விட்டார்கள். ஆகவே ஒவ்வொரு மாவட்டத்திலும் மாட்டுத் தீவனம் தயாரிக்கக்கூடிய தொழில் கூடம் ஏற்படுத்த அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ.கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, தமிழகத்திலே மூன்று இடங் களில் மாதவரம், ஆம்பூர், ஈரோடு ஆகிய இடங்களில் மாட்டுத் தீவன தொழிற்சாலைஇயங்கிக் கொண்டிருக்கிறது. நான்காவதாக மாட்டுத் தீவன தொழிற்சாலை ஒன்று மதுரை மாவட்டத்தில் தேசிய பால்வள நிறுவனத்தின் மூலமாக சுமார் ஒரு கோடி ரூபாய் முதலீட்டில் கப்பலூர் தொழில்பேட்டை பகுதியில் அமைய இருக்கிறது. இது சுமார் ஓராண்டுக் காலத்திலே செயல்பட விருக்கிறது. நாள் ஒன்றிற்கு 100 டன் உற்பத்தி செய்யும் திறனை கொண்டதாக கப்பலூர் தொழில்பேட்டையில், மதுரை மாவட்டத்தில் புதியதாக அமையவிருக்கிற இந்தத் தொழிற்சாலை, விவசாயிகளுக்கு பால் உற்பத்தியாளர்களுக்கு உதவியாக இருக்கும்.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கால்நடைகள் அதிகமாக இருக்கிற குமரி மாவட்டத்திலே மாட்டுத் தீவனம் அடுத்த மாவட்டங்களிலிருந்து தான் வரவேண்டியிருக்கிறது. ஆகவே மாட்டுத் தீவனத்தை உற்பத்தி செய்வதற்கு, அந்த மாவட்டத்தில் தொழில் வாய்ப்புகள் மிக கம்மியாக இருக்கிறதால், அடுத்து ஒரு திட்டத்தை தயாரிக்கிறபோது அதற்கு முன்னுரிமை தந்து அந்த மாவட்டத்திலே இந்தத் தொழிலை ஆரம்பிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் மாண்புமிகு உறுப்பினருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். உரிய நேரத்தில் நிச்சயமாக உங்களுடைய வேண்டுகோள் அனுதாபத் துடன் கவனிக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று இடத்திலே இருக்கின்ற இந்த மாட்டுத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலைகளிலே தயாரிக்கப்படும் அந்த தீவனம் விலை அதிகமாக இருக்கிறது என்று சொல்லப் படுகிறதே, வெண்மைப் புரட்சி, நடத்தி முடிக்க வேண்டும்



என்று தீவிரமாகஇருக்கின்றஅமைச்சர் அவர்களின் எண்ணத்திற்கு மிக உதவியாக இருக்கக்கூடிய முறையிலே இன்றைக்கு எல்லா இடங்களிலும் பால் பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டு வருகிறது. இதற்கு மிக முக்கியமானது இந்தத் தீவனம். இதை வெளியிலே வாங்கினால் விலை மிகவும் அதிகமாக இருக்கிறது. நாம் தயாரிக் கின்ற அரசு பொறுப்பிலே இருக்கின்ற இந்த தொழிற்சாலைகள் தயாரிக்கின்ற அந்த தீவனங்கள்கூட அதிக விலையாக இருக் கிறது. அதைக் குறைப்பதற்கும், அதோடு இந்த தீவனங்கள் தயாரிப்பதிலே என்னென்ன மூலப் பொருள்கள் சேர்த்து இந்தத் தீவனங்கள் தயாரிக்கப்படுகிறது என்பதையும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன மூலப் பொருள்கள் இந்த மாட்டுத் தீவனம் தயாரிப்பதற்குத் தேவைப்படும் என்ற விவரம் என்னிடத்திலே தற்போது இல்லை. ஆனால் விலை பிரச்னை பற்றி அவர்கள் சொன்னார்கள். நிச்சயமாக விலையில்கட்டுமான அளவிற்கு, நஷ்டம் வராத அளவிற்கு, தொழிற்சாலைகளுக்கும் கஷ்டம் வரக்கூடாது, வாங்குகின்ற விவசாயிகளுக்கு நட்டுமானம் ஆகின்ற அளவிற்கு ஒரு நியாயமான விலையை நிச்சயமாக தமிழக அரசு மேற்கொள்ளும். இப்போது வறட்சிக் காலத்தை முன்னிட்டுக்கூட இன்றையதினம் நாம் ஒரு கிலோ 1 ரூபாய் 32 காசுக்கு விற்றுக் கொண்டு இருக்கின்ற மாட்டுத் தீவனத்தை இந்த வறட்சியை முன்னிட்டு 1 ரூபாயாக இன்றைய தினம் நம்முடைய பால் உற்பத்தியாளர்களுக்குக் கொடுத்து அவர்களுக்கு உதவி செய்து கொண்டு வருகிறோம். அதுமட்டு மல்லாமல் இந்த வறட்சியான காலத்திலே நம்முடைய பால் உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு மேலும் 2 வகையிலே குறிப்பாக மராட்டிய மாநிலத்திலேயிருந்து உலர் தீவனம் வாங்குவதற்கு நாங்கள் ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக் கிறோம். இரண்டாவதாக அனிமல் ஹஸ்பண்டரி துறையின் மூலமாக, கால்நடைப் பராமரிப்புத் துறையின் மூலமாக ஆந்திரா மாநிலத்திலிருந்து விரைவில் வைக்கோலை நியாயமான விலையிலே பெற்று இங்கே நியாயமான விலையிலே விவசாயி களுக்கு வழங்கவும் இந்த இணையம் முயன்று கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இ.எஸ்.எம்.பக்கீர் முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் இந்த வறட்சிக் காலத்திலே கிலோ ஒரு ரூபாய்க்கு நாங்கள் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள்—அதை நான் வரவேற்கிறேன். இப்படி ஒவ்வொரு மாவட்டத்திலேயும் மாடுகள் அதிகமாக இருந்து கொண்டிருக்கின்றன. அதற்காக நாம் லோன் அதிகமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகையினால் இப்படிப்பட்ட மாடு லோன் அதிகமாகக் கொடுக்கக்கூடிய இடங்களிலே இப்படிப்பட்ட தொழிற்சாலைகள் ஆரம்பித்து இன்னும் அதிக அளவிற்கு—ஏன் என்றால் இப்போது மாடுகள் வாங்குகின்ற வர்கள் எல்லாம் லோன் வாங்குகின்றார்களே தவிர, அந்த

| | பக்கங்கள் |
|---|---|
| (ங) கண்ணகி கோயில் சிலை கல்வெட்டு | 420—421 |
| (ச) அமராவதி ஆற்றுக் கால்வாய் பாசனம் | 421 |
| (ஞ) பட்டுச் சேலைகள் விற்பனையாகாது தேங்கியுள்ள நிலை. | 421 |
| (ட) தேவிகுளம்பீர்மேடு பகுதி தமிழகத்தோடு இணைக்கப்படுவது. | 421 |
| (ண) திருவில்லிப்புத்தூரில் தொடர்ந்து மின்வாரிய அலுவலகம் இயங்கச் செய்வது. | 422 |
| (த) சென்னை நகரில் நிலவும் குடிதண்ணீர் பிரச்சினை. | 422 |
| (ந) வடாற்காடு மாவட்டம் வறட்சிப் பகுதியாக அறிவிக்கப்பெற வேண்டுமென்ற நிலை. | 422—423 |
| 3. (அ) தலைவருக்குப் பாராட்டு. | 423 |
| 4. உரிமைப் பிரச்சினைகள்: | |
| (அ) வருவாய்த் துறை அமைச்சர் மீது—தீர்ப்பு | 423—425 |
| (ஆ) திரு. எம். கே. சீனிவாசன் மீதும், 'எதிரொலி' நாளிதழ் மீதும். | 425—420 |
| 5. அறிவிப்புகள்; | |
| (அ) அரசினர் சட்ட முன்வடிவுகள் (மேலவைச் செய்தி) | 426 |
| (ஆ) பேரவை கூட்டத் தொடர் பற்றிய—தகவல்கள் | 506—510 |
| 6. கவன ஈர்ப்புகள் | |
| (அ) காவேரிப்பட்டணம் மேல்நிலைப் பள்ளியை பழுது பார்த்தல். | 427—428 |
| (ஆ) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள குறைபாடுகளை நீக்குவது. | 428—431 |
| 7. அரசினர் சட்ட முன்வடிவுகள்: | |
| (அ) நுழைவு வரி விதிக்கும் சட்ட முன்வடிவு, 1983. | 431—506 |
| (ஆ) கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1983 | 509 |
| 8. அரசினர் தீர்மானம்: | |
| 9. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் | 510—511 |


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**புதன்கிழமை, 1983 ஏப்ரல் 27,**

**சித்திரை 14, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2014.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'' நன்றாற்ற லுள்ளுந் தவறுண்டு அவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.''

அவரவருடைய பண்புகளை ஆராய்ந்து அறிந்துஅவற்றிற்கு ஏற்ற முறையில் அவர்களுக்கு ஒரு நன்மையைச் செய்யாவிட்டால், நாம் செய்யும் நன்மையால் அவர்களுக்குத் தீமையே உண்டாகும்.

### 1. வினாக்கள்—விடைகள்

#### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**குமரி மாவட்டத்தில் மாட்டுத் தீவனம் தயாரிக்கும் தொழிற்கூடம் அமைக்கும் திட்டம்.**

*வினா எண். 878—திரு. டி. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) குமரி மாவட்டத்தில் மாட்டுத் தீவனம் தயாரிக்கும் தொழிற்கூடம் அமைக்க அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் தொழில் துறையில் பின்தங்கி இருக்கும் குமரிமாவட்டத்தில், அதிலும் குறிப்பாக விளவன்கோடு வட்டத்தில் இப்படிப்பட்ட தொழில்களை ஆரம்பிப்பதற்கு தொழில் துறையில் ஏழு ஏக்கர் நிலமும், நான்கு கட்டிடங்களும் காலியாக இருக்கிற மார்த்தாண்டம் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் பகுதியில் இந்த மாட்டுத் தீவனத்தை தயார் செய்கிற தொழிற்சாலையை அமைக்க புனர் பரிசீலனை செய்து அந்த மாவட்டத்திற்கு உதவி செய்யக்கூடிய அளவிற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அளவிற்கு கடனைத்திருப்பிக் கொடுக்கின்ற அளவிற்கு மாட்டுக்கு தீவனம் கொடுக்கக்கூடிய ஒரு நிலையில்லாமல் இருக்கிறது. ஆகையினாலே தஞ்சை மாவட்டத்திலே இப்படிப்பட்ட ஒரு தொழிற்கூடம் ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை அளவிலே எல்லா மாவட்டங் களிலும் ஆரம்பிக்க வேண்டும் என்பதுதான் கொள்கை. அரசினுடைய கொள்கை. ஏற்கனவே நான் சொன்னதைப் போல 3 மாவட்டங்களினுடைய தலைநகரங்களிலே ஆரம்பித் திருக்கிறோம். நான்காவதாக, மதுரையில் கப்பலூர் தொழிற் பேட்டையிலே இந்த ஆண்டு ஒரு கோடி மூலதனத்திலே ஆரம்பிக்கிறோம். தொடர்ந்து பல மாவட்டங்களிலே அவ்வப் போது ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

எண்டியூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம்

*வினா எண் 879—திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திண்டிவனம் வட்டம், எண்டியூர் கிராமத்தில், பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கஅரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) இத் திட்டம் பற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) மற்றும் (ஆ) திண்டிவனம் பகுதியில் ஓர் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று ஒரு கோரிக்கை, தமிழ்நாடு பால் உற்பத்தி யாளர் கூட்டுறவு இணையத்தின் பரிசீலனையில் உள்ளது. இக்கோரிக்கைக்கு முடிவெடுக்கும்போது, எண்டியூரிலும் மற்ற ஊர்களிலும் குளிர் நிலையம் அமைப்பதற்கான பல்வேறு வசதி களையும் ஆராய்ந்து, உரிய நேரத்தில் முடிவெடுக்கப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக இந்த குளிரூட்டும் நிலையம் ஏற்படுத்து வதற்கு அந்தப் பகுதியில் எத்தனை லிட்டர் பால் ஆரம்பக் கூட்டுறவு நிலையங்களிலிருந்து வந்தால் இப்படி புதிதாக ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் ஆர்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஏற்கனவே மாண்புமிகு புரட்சித் தலைவர்





பொறுப்பேற்ற பிறகு இரண்டு இடங்களில், ஒன்று விழுப்புரம் இரண்டு சின்ன சேலம் ஆகிய இரண்டு இடங்களில், குளிரூட்டு நிலையங்கள், 50 இலட்சம் ரூபாய் முதலீட்டில் 60 ஆயிரம் லிட்டர் திறன்கொண்ட குளிர் பதனம் செய்கின்ற நிலையத்தை உருவாக்கியிருக்கிறோம். மூன்றாவதாக சேத்தியாதோப்பில் புவனகிரி தொகுதியில் நெய்வேலிக்கு அருகில் இன்டகிரேட்டட் ரூரல் டெவலப்மெண்ட் புரோகிராம் அடிப்படையிலே 10 ஆயிரம் லிட்டர் கொள்திறன் கொண்ட ஒரு குளிரூட்டு நிலையம் உருவாகிக் கொண்டிருக்கிறது. ஒன்றிரண்டு திங்களில் அது செயல்படத் துவங்கயிருக்கிறது. ஆக இப்போது ஏறத்தாழ 70 ஆயிரம் அளவிற்கு இன்றையதினம் கொள் திறனைக் கொண்ட வசதிகள், இன்பிராஸ்டரக்சர் இருக்கிறது. ஆனால் இந்த இரண்டாவது பால் பெருக்குத் திட்டம் முடிவதற் குள்ளாக மேலும் 25 லட்சம் ரூபாய் முதலீடு செய்து விழுப்புரத்தை 50 ஆயிரமாகவும், சின்ன சேலத்தை 50 ஆயிர மாகவும் ஆக்குகின்ற கருத்துருவும் அரசிடத்திலே இருக்கிறது.

(முற்பகல் 9-10)

அதற்காக 25 இலட்சம் ரூபாயையும் அரசு ஒதுக்கியிருக் கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தென்னார்க் காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இரண்டாவது பால் பெருக்கத் திட்டம் முடிவடைந்ததும் 1,10,000 லிட்டர் பாலைக் குளிரூட்டுகின்ற வசதியை அந்த மாவட்டம் பெறும்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க இருப்பதைப்போல, இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு தமிழகத்தில் எத்தனை பால் குளிரூட்டும் நிலையங்களை அமைத்திருக்கிறது? இன்னும் எத்தனை பால் குளிரூட்டும் நிலையங்களைத் தமிழகம் முழுவதும் அமைப்பதற்கு அரசு திட்டமிட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது பொதுக் கேள்வியாக இருக்கிறது. அருள்கூர்ந்து தனிக்கேள்வி போடுமாறு உறுப்பினரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நூலகத்தில் பணி புரியும் அலுவலர்களை
அரசு ஊழியர்களாக்கும் திட்டம்

*வினா எண். 880—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நூலகத்தில் பணிபுரியும் அலுவலர்களை அரசு ஊழியர் களாக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு.செ,அரங்கநாயகம்: 3-5-1982 தேதியிடப்பட்ட கல்வி,அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையின் அரசாணை நிலை எண் 820-ல் நூலகத்தில் பணிபுரியும் அலுவலர்களை 1-4-1982 முதல் அரசு ஊழியர்களாக அறிவித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, நூலகத்தில் பணிபுரியும் அலுவலர்களை அரசு ஊழியர்களாக்கும் செயற்குறிப்பு நீண்ட நாட்களாகப் பரிசீலனை யில் இருந்தது. அந்தக் கோரிக்கையை நிறைவேற்றியதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களுக்கும், மாண்புமிகு கல்வியமைச்சரவர்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். தனியார் நூல கங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு அவர்கள் குறைந்த சம்பளம்தான் கொடுக்கிறார்கள். எனவே, தனியார் நூலகங் களையும் அரசே ஏற்றுக்கொண்டு அந்த ஊழியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.செ.அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர்களே, அப்படிப்பட்டயோசனை அரசுக்கு இல்லை.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு தலைவரவர்களே, கார்ப்பரேஷன், முனிசிபாலிட்டிகளில் உள்ள நூலகங்கள் ஆரம்பிக்கப்பட்டு கிட்டத்தட்ட 25 ஆண்டுகள் ஆகியிருக்கும். அங்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டிருந்தும் அவர்கள் அந்த உத்தரவை அமல் செய்யாமல் இருக்கிறாகள். எனவே, தனியான ஒரு உத்தரவைக் கொடுத்தாவது, அப்படிப் பட்ட இடங்களில் ரிசர்வேஷனைப் பூர்த்தி செய்ய வேண்டு மென்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறதா? இல்லையென்றால், வருங்காலத்திலாவது அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சதவீதத்தை அமல் நடத்த வேண்டுமென்று அரசாங்கம் அதிகாரிகளுக்கு புதிதாக உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். மாண்புமிகு தலைவரவர் களே, நூலகங்களைப் பொறுத்தவரையில் கடந்த நான்கைந்து ஆண்டுக் காலமாக மேற்கொண்டு புதிதாக நூலகங்களைத் திறக்கவில்லை. ஆகவே, புதிய ஆட்களை எடுக்கின்ற வாய்ப்பு மிகவும் குறைவாகத்தான் இருக்கிறது. ஆனால் புதிய ஆட் களை எடுக்கும்பொழுது அந்த விகிதாச்சாரத்தை மனத்தில் வைத்துக்கொண்டுதான் எடுப்போம். அதை மீறி யாரும் செய்ய முடியாது. முனிசிபாலிட்டி அல்லது கார்ப்பரேஷன் அல்லது பஞ்சாயத்து போர்டு நூலகங்களைப் பற்றி என்னிடத்தில் தற்போது விவரங்கள் இல்லை. எனவே அதுபற்றிப் பதில் சொல்லக் கூடிய நிலையில் இல்லை. அதுபற்றித் தனிக் கேள்வி கேட்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



திரு. சு. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, நூலகங்களைப் பொறுத்தவரையில் சென்னை மாநகராட்சியாலே ஆரம்பிக்கப்பட்டு அதன் வசத்தில் இருந்தபொழுது, ஆங்காங்கு வட்டங்களில் துவக்கப்பட்ட நேரத்தில், நூலகங்களில் படிக் கின்ற மக்கள் அதிகம் இல்லாத நேரத்தில், அப்பொழுது சிறிய கட்டிடங்களாகக் கட்டப்பட்டன. ஆனால் இப்பொழுது நூல கங்களில் படிக்கின்றவர்களின் எண்ணிக்கை அதிகமாக வளர்ந் துள்ளது. ஏற்கனவே உள்ள கட்டிடங்கள் பழுதடைந்து சரியான இடவசதி இல்லாத காரணத்தினால், ஒவ்வொரு வட்டத்திலேயும் இருக்கின்ற கட்டிடங்களை மாற்றிய மக்கின்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர் களே சென்னை நகரத்திலே இருக்கின்ற கி ள நூலகங்களுக் கெல்லாம் கூடுமானவரையில் புதுக் கட்டிடங்களாக கட்ட வேண்டுமென்று அறிவித்து அ செயல்படுத்த பட்டு வருகிறது. இடங்கள் கிடைத்தவுடன் கட்டி ங்களை ஆரம்பித்துக் கட்டி வருகிறார்கள். இடம் கி டைப்பதிலே பெரிய சிரமங்கள் இருந்து வருகின்றன. அதற்குமேல் பத்து வட்டங்களுக்கு ஒரு சர்க்கிள் லைப்ரரி என்ற முறையில் பெரிய லைப்ரரியாகக் கட்ட வேண்டு மென்று சொல்லி அந்த வேலைகளும் நடந்து வருகின்றன. எங்கேயாவது வட்டத்திலேயோ, சர்க்கிளிலேயோ கட்டப்பட வில்லை யென்றால் இடம் கிடைக்காத காரணத்தினால் கட்டப் படாமல் இருக்கலாம். இடம் கிடைத்தால் ஆங்காங்கு வேலை களைத் துவங்குவார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவ வர்களே, நூலகங் களுக்குப் பள்ளி மாணவர்கள் புத்தகங்கள் பத்திரிகைகள் இவைகளைப் படிக்கச் செல்கிறார்கள். அங்கே சினிமாச் செய்திகள் பத்திரிகைகளிலே வருகிறது. கமலஹாசன், ரஜினிகாந்த், பாக்கியரா ஜ் ரசிக கள் அவர்களுக்குப் பிடிக்காத பக்கத்தைக் கிழித்துவிடுகிறார்கள். அதனால் செய்திகளை முழுமையா ப் படிக்கமுடியா ல் போய்விடுகிறது அவைகளைக் கண்காணிக்க நூலகங்களில் அதிக லுவலர்களைப் போட அரசு முன்வருமா எ பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அ ங்கநாயகம்: தலைவரவர்களே, சினிமாப் பத்திரிகை ளைக் கி ப்பது, அல்லது புத்தகங்களைக் கிழிப்பது, அல்லது ஏமாந்தால் புத்தகங் ளை எடுத்துச்செல்வது எல்லா இடங்களிலும் ந்தத் தவறான கா ரியங் ள் இருக்கத்தான் செய்கிறது, அங்கே மட்டுமல்ல. எல்லா இடங்களிலும், அது லைப்ரரியாக இருந்தாலும் சரி, வேறு இடமானாலும் சரி, இந்தக் குறைபாடு ள் இருக்கின்றன. அது அதிகமாகிவிடாமல், குறைகின்ற விதத்திலே, கண்காணிப்புக் கொஞ் ம் டுமையாக வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. நாமும் அவ்வப்போது எச்சரிக்கை செய்து வருகிறோம், இன்னும சொல்லப்போனால்,

அதிகமான அளவில் நஷ்டம் ஏற்பட்டால் அதற்கு அந்த ஊழியர்கள் தான் பொறுப்பு என்ற நிலைமையை உருவாக்கி, அந்த ஊழியர்கள் அதிலே அதிகமாக கவனிக்கும்படி செய்து வருகிறோம்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய நூல்கங்களில் ஏற்கனவே பணியாற்றுகின்ற இரவுக் காவலர்கள், தற்போது நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறது உண்மைதான். அதற்கு மிக்க நன்றி. அவர்களுடைய சம்பளத்தைப் பொறுத்தவரையில், ஏற்கனவே அந்த வாச் மேனுடைய அடிப்படைச் சம்பளம் ரூ. 49 ஆக இருந்தது. இப்போதுஅவர்கள்சிற்றூழியர்கள் ஆக ஆக்கப்பட்டதற்குப் பிறகு, ரூ. 18 ஆக குறைக்கப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்ல அவர்கள் ஏற்கனவே பெற்றுவந்த வாய்ப்புகளெல்லாம் கணிசமாகக் குறைக்கப்பட்டு வந்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. அப்படி இருக்குமானால் அதை உடனடியாக நிவர்த்தி செய்ய, அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விருப்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றிய விவரம் என்னிடத்தில் தற்போது இல்லை. தனியாக எழுதித் தந்தால், அதுபற்றி நான் பரிசீலிக்கச் சொல்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, நூலகங்களில் பணி புரிந்த ஊழியர்கள், அதற்கு முன்பு லோகல் லைப்ரரி ஊழியர்களாக இருந்தபொழுது, அவர்களுக்குக் கிடைத்த ஊதியத்தை விட தற்போது அரசாங்க ஊழியர்களாக மாற்றப் பட்ட பிறகு, அடிப்படைச் சம்பளம் ரூ. 55 மாதச் சம்பளமாக குறைவாகக் கொடுக்கின்றது. இந்தக் குறையை நிவர்த்திக்க அரசு உடனடியாக ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்களும் இதே கேள்வியைக் கேட்டிருக்கிறார் எனக் கருதுகிறேன். இதைப்பற்றி பரிசீலிக்கச் சொல்கிறேன்.

திரு. சா. கிருட்டிணமூர்த்தி : தலைவரவர்களே, அரசு நூல் நிலையங்களை, தலைமை இடங்களில் தேர்வு செய்தும், இன்னும் நூல் நிலையங்கள் அமைக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அரியலூர், ஜயங்கொண்டான், ஆண்டிமடம் போன்ற இடங்களில் பார்த்த பின்பும், இன்னும் நூல் நிலையங்கள் அமைக்கப்படவில்லை. எனவே அது சம்பந்தமாக அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : புதிய கட்டிடங்கள் கட்டுவது என்பது, அந்தந்த மாவட்ட நூலக ஆணைக் குழுக்களிடத்திலே இருக்கின்ற நிதி வசதியைப் பொறுத்துத்தான் அமையும். ஆகவே நிதி வசதியைப் பொறுத்து அந்தக் கட்டிடங்களைக் கட்டுகின்ற வேலைகளைச் செய்வார்கள்.





திரு. கே. ஆர் சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, மாவட்டத் தலைநகரங்களிலே அல்லது வேறு சில இடங்களிலே, புதிய நூலகங்களைக் கட்டுவதற்கு, இலவசமாக இடம் கிடைக்காத காரணத்தினால் கட்டப்படாமல் இருக்கிறது. அரசே காலி இடங்களைப் பார்த்து விலைக்குப் பெற்று, கட்டிடம் கட்ட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வேறு இடங்களிலே, இலவசமாகத் தருவார்களேயானால், நாம் அங்கே கட்டவேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே பணத்தைக் கொஞ்சமாக வைத்துக் கொண்டு எங்கே பொதுமக்கள் ஆதரவு, ஒத்துழைப்பு இருக்கிறதோ, அந்த இடத்திலேதான் நாம் முதலிலே வேலையைத் தொடங்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற குடியாத்தம் பகுதியில் இந்த வேலை நடைபெறுவது தள்ளிப் போடக் கூடாது என்று விரும்புவாரே யானால், அது போன்ற ஒத்துழைப்பை அவர்களும் தந்தாக வேண்டும். அதுமட்டுமல்ல, நாம் இப்போது கட்டிடம் சட்ட வேண்டும் என்கிற நடவடிக்கைக்கு ஆதரவு தருகின்ற காரணம், நாம் வைத்திருக்கிற கட்டிடங்கள், நூல் நிலையங்களுக்கு ஒத்துவரக்கூடிய நிலையில் இல்லாத காரணத்தினால்தான். ஆகவே 2, 3 மணி நேரம் உட்கார்ந்து படிக்கக் கூடிய அளவிற்கு அந்தக் கட்டிட அமைப்பு இருக்கவேண்டுமென்று கருதுவதாலே தான் பல இடங்களிலே, குறிப்பாக மாவட்டத் தலைநகரங்களிலே, அதற்கான வடிவமைக்கப்பட்டு கட்ட வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். அந்த அடிப்படையிலே தான், இப்போது சில மாவட்டத் தலைநகரங்களில் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

பருகூர் மேல்நிலைப் பள்ளிக் கட்டடம்.

*வினா எண். 881—திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பருகூர் மேல்நிலைப் பள்ளி ஏரியில் கட்டியுள்ளதால் மழைக் காலங்களில் பள்ளியில் நீர்த்தேக்கம் ஏற்படுவதைத் தடுக்க அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பருகூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் எந்தக் கட்டடமும் ஏரியில் கட்டப்பட வில்லை எனவும் மழைக்காலத்தில் ஏரியில் நீர்வரும்போது பள்ளியின் விளையாட்டு மைதானத்தில் மட்டும் சிறிது நீர்த்தேக்கம் ஏற்படுகிறது எனவும் இதனால் மாணவர்களுக்கு பெரிய அளவில் பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[1983 ஏப்ரல் 27

[முற்பகல் 9–20]

திரு. க. இரா. சின்னராசு : தலைவரவர்களே, பருகூர் மேல்நிலைப்பள்ளி கட்டப்பட்டிருப்பது ஒரு ஏரிக்கு மேல் பகுதியாகும். அந்த ஏரிக்கு எந்தவிதமான பாசனமும் இல்லை. ஆகையால் அந்த ஏரிக்கு கரையாக அமைந்திருப்பதை எடுத்து விட்டால் தண்ணீர் அகன்றுவிடும். அதனால் பள்ளிக்கூடத்திற்கு எந்தவிதமான விளைவும் ஏற்படாது. ஆகவே அதை அகற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட வாய்ப்பு இருக்குமானால் கல்வித்துறை அதுபற்றி முயற்சி எடுக்கும்.

## தமிழ்நாட்டில் அஞ்சல்வழி பாடத்திட்டம் மூலம் S,S.L.C. தேர்வு எழுதும் திட்டம்.

*வினா எண். 882—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அஞ்சல்வழி பாடத்திட்டம் மூலம் S.S.L.C. படித்து தேர்வு எழுதுவதற்கு ஏதேனும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆம்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, இதுபோன்ற அஞ்சல்வழி கல்வித் துறைக்கு தனியாக ஒரு இலாகா அமைத்து செயல்படுத்தப்படுமா ? இப்போது அதற்கான நடவடிக்கை எடுத்து இருப்பதாகக் கூறினார்கள். அதன் விவரங்களை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்த திறந்தவெளி கல்வி என்ற அடிப்படையில் (ஓப்பன் ஸ்கூல்) நடத்துவது என்ற கருத்துரு அரசினுடைய தீவிர பரிசீலனையில் இருந்துவருகிறது. இதை நம்முடைய தமிழ்நாடு கல்வி மற்றும் பயிற்சி ஆராய்ச்சி நிறுவனம் ஏற்று நடத்துவதாக முடிவு செய்திருக்கிறோம். இந்த திறந்தவெளி கல்வியின் முக்கிய நோக்கம் இடைநிலைக் கல்வியை 8-வது வகுப்போடு நிறுத்தியவர்களுக்கு — இல்லத்தரசிகள், தாய்மார்கள், வேலை செய்து வீட்டோடு இருக்கிற தாய்மார்கள் மற்றும் இடை நிலைக் கல்வி பயில இயலாதவர்கள்—மேல்நிலை கல்வி பயில விருபினால் அவர்களுக்கு இடைநிலைக் கல்வியை நிறைவு செய்யும் வண்ணம் வழிவகை செய்வது. இதில் இப்போது வருஷத்திற்கு 5000 பேர்களையாவது சேர்த்து கல்வி தர வேண்டுமென்று விரும்புகிறோம். ஆனால் இறுதியான முடிவு இன்னும் எடுக்கப் படவில்லை. இதிலே பொதுக் கல்வி, தொழில் பிரிவு என்று இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. தொழில் பிரிவு என்றால்



1983 ஏப்ரல் 27]

தொழில் பயிற்சி அல்ல. ஆனால் தொழில் பற்றிய கல்வியை அவர்கள் தந்து கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்த விரும்பி, அந்தக் கருத்துரு அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்த அஞ்சல்வழி பாடத் திட்டத்தில் சேருகின்றவர்களுக்கு வயது வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதாக அறிகிறேன். அதை தளர்த்தி, படிக்க விரும்புகின்ற அனைவரும் இந்தத் திட்டத்தில் சேர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, படிப்பை இடையிலே நிறுத்திவிட்டு, மறுபடியும் படிக்க வேண்டுமென்று விரும்புகிறவர்களுக்கு என்று கொண்டுவருகிற திட்டம் இது. ஆகையால் கூடியவரை எவ்வளவு அதிகமான பேர்களுக்கு படிக்க வாய்ப்பை ஏற்படுத்தித் தரமுடியுமோ அந்த அளவுக்கு செய்ய அந்தத் திட்டம் இறுதிவடிவம் பெறும்போது விதிகளை நாம் அமைக்க இருக்கிறோம்.

திரு. இல. பலராமன் : தலைவரவர்களே, இந்த அஞ்சல்வழி கல்வித் திட்டம் பற்றி அரசு ஆலோசிக்கிறது, எப்படி செயல்படுத்துவது என்பது பரிசீலனையில் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். இதற்கென்று எவ்வளவு திட்ட மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது ? மத்திய அரசினுடைய கொள்கை அல்லது ஆலோசனை அடிப்படையில் இது நடத்தப்பட இருக்கிறதா அல்லது மாநில அரசே தனிப்பட்ட முறையில் நடத்த திட்டம் தீட்டப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, மத்திய அரசும் இதேபோல் திட்டத்தை நடத்தி வருகிறார்கள். ஆனால அது அவ்வளவு வெற்றிகரமாக நடைபெறவில்லை என்ற கருத்து சொல்லப்படுகிறது. அதிலே தொடர்புடைய அதிகாரிகளை நாம் இதிலே இந்த ஆலோசனைக் குழுவில் நாம் போட்டு அவர்கள் கருத்துக்களையெல்லாம் வைத்துத்தான் நாம் இப்போது இந்தத் திட்டத்தைத் தயாரித்திருக்கிறோம். அஞ்சல் மூலம், அச்சடித்து 200 பக்கங்கள் கொண்ட பாடப் பகுதிகள், 20 முதல் 30 பாடப் பகுதிகள் இருபது தவணைகளில் மாணவர்களுக்கு அனுப்பப்படும். 102 மையங்களில் ஆண்டுக்கு ஏழு நாட்கள் நேர்முகமாக மாணவர்கள் ஆசிரியர்களைச் சந்தித்து பாடங்களில் ஏற்படும் ஐயங்களை அவர்கள் தெளிவாக்கிக்கொள்ள வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. கரஸ்பாண்டன்ஸ்–கம்–காண்ட்டாக்ட் கோர்ஸ், அஞ்சல் வழி தொடர்போடுகூட நேர்முகத் தொடர்பும் ஏழு நாட்கள் என்று ஒரு திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். மத்திய அரசு நடத்தும் திட்டம் நாடு முழுவதும் தழுவி இருக்கிற காரணத்தால் அதை நடத்துவதில் பல்வேறு சிரமங்கள் சில நேரங்களில்

இருக்கக்கூடும். ஆனால் நம் மாநிலத்தில் நடத்துகிறபோது அந்த சிரமங்கள் இதில் இருக்காது. இதை நல்லமுறையில் நடத்தமுடியும் என்று நம்புகிறோம். ஆனால் ஆரம்பத்தில் குறைவான எண்ணிக்கையில் நாம் ஆரம்பிக்கலாம் என்றிருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இந்த அஞ்சல் வழி பாட திட்டம் என்பதில் எஸ்.எஸ்.எல்.சி. படித்து தேர்வு பெறுவதற்காக நடக்கிற இத்திட்டத்தில் முதலில் சேருவதற்கு ஆரம்பத்தில் ஏதாவது படித்து சர்டிபிக்கேட் வேண்டும் என்று விதிகள் செய்ய அரசு நினைக்கிறதா? அல்லது அப்படிப் படிக்காமல், ப்ரைவேட்டாக படித்தவர்கள் நேரிடையாக அஞ்சல்வழி படித்து பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, ஓப்பன் ஸ்கூல் என்பதே எந்தத் தகுதியும் இல்லாமல் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் அதன் அர்த்தம். இருந்தாலும் இந்தத் திட்டத்தை ஆரம்பத்திலேயே அந்தளவிற்கு விரிவு படுத்தாமல் குறைந்தது எட்டாவது படித்திருக்கவேண்டும் என்ற வகையில் இதைச் செயல்படுத்தலாம் என்று கருதுகிறோம்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரியில் நடைபெற்று வந்த மாலைநேர வகுப்புகள் சென்ற ஆண்டு முதல் நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த வாய்ப்பை இழந்திருக்கக்கூடியவர்களுக்கு அஞ்சல் வழி சட்டக் கல்வி பயில அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அஞ்சல் வழி பாடத் திட்டம் மூலம் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதும் திட்டம் பற்றிய கேள்வி.

### 1982-83-ல் புதியதாகத் துவக்க அனுமதி வழங்கப்பட்ட பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள்.

*வினா எண். 883—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982-1983-ல் தமிழகத்தில் எத்தனை புதிய பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் துவக்க அரசு எண்ணியுள்ளது ?

(ஆ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், செய்யூர் கிராமத்தில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி துவக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 1982—83-ம் கல்வியாண்டில் 15 புதிய பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் துவக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

(ஆ) இல்லை.



திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மொத்தம் எவ்வளவு பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் துவங்க மனுக்கள் வந்திருக்கின்றன ? சென்ற ஆண்டு 15 அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு எவ்வளவு பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் துவங்க அரசு எண்ணியுள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, எவ்வளவு இடங்களிலிருந்து வந்தது என்ற கணக்கு இப்போது என்னிடம் இல்லை. ஆனால் நாமே ஒரு திட்டத்தை சென்ற ஆண்டு துவக்கினோம். 200-க்கு அதிகமான பெண்கள் பயிலும் உயர்நிலைப் பள்ளிகள் பிரிக்கப்பட்டு பெண்களுக்கென தனி உயர்நிலைப் பள்ளி துவக்கப்பட வேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தக் கருத்துக்கு செயல்வடிவம் கொடுப்பதற்கு பத்து மேல்நிலைப் பள்ளிகளைப் பிரித்து பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் துவங்க ஆணை யிட்டோம். அது தவிர மூன்று பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் துவக்கியிருக்கிறோம். ஆகவே விண்ணப்பங்கள் வரவில்லை என்றாலும்கூட சிலயிடங்களில் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் துவக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு நாம் எவ்வளவு துவங்கப் போகிறோம் என்பதுபற்றி இப்போது சொல்வதற்கில்லை. வந்திருக்கிற விண்ணப்பங்களை வைத்து நாம் ஆராய்ந்து முன் உரிமை பிரகாரம் துவக்க விரும்புகிறோம்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, செய்யூர் கிராமத்தில் தற்போதுள்ள அரசாங்க உயர்நிலைப் பள்ளியில் சுமார் 1,700 மாணவ மாணவியர் கல்வி கற்கிறார்கள். அந்தப் பள்ளியில் தற்போது 500 மாணவிகள் கல்வி பயில்கிறார்கள். அந்நிலையில் செய்யூர் கிராமத்தில் இந்த ஆண்டாவது அந்தப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி துவக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இது பெரும்பாலும் நாம் நகரத்திலும் நகரத்தைப் போன்ற பகுதிகளிலேயும் பெண்களுக்கென தனியாக பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கக்கூடிய ஒரு கோரிக்கை வலுவாகச் சொல்லப்படுகிற காரணத்தால் முதலில் அவர்களுக்கு முதலிடம் தரவேண்டியவர்களாக இருக்கிறோம். கிராமப்புறங்களில் ஆண்களும் பெண்களும் படிப்பதால் பெரும்பாலும் பிரச்னைகள் அதிகமாகத் தோன்றுவதில்லை என்ற காரணத்தால் அதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே அதிகமாக, 200-க்கு மேற்பட்ட பெண்கள் படிக்கிற பள்ளிகளை பிரித்து பெண்களுக்கு என்று தனியாகப் பள்ளிகள் ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்கிறோம். அந்த இடங்களில் துவக்க வேண்டும் என்ற நிலையில் அந்த இடங்களுக்கு முதல் உரிமை தந்து நாம் இதைச் செய்து வருகிறோம். ஆனால் நாளா வட்டத்தில் அதுபோன்ற இடங்களையும் இரண்டாவதாக பெண்களுக்கென ஒரு உயர்நிலைப் பள்ளி வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[1973 ஏப்ரல் 27

(முற்பகல் 9–30)

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்துவது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்வது, 1981–82, 1982–83ஆம் ஆண்டுகளில் அரசாங்கம் அறிவித்தபடி மக்கள் தொகையையும் அதற்கேற்ப பங்குத்தொகையும், அதற்கான இடமும் கொடுக்கவேண்டுமென்ற விதியின் அடிப்படையில், அந்த மாதிரி பங்குத் தொகையும், இடமும் கொடுத்த திருத்துறைப்பூண்டிக்கு முன்னுரிமை வழங்கப் படுமா என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, புதிதாக உயர்நிலைப் பள்ளிகள் துவங்க வேண்டுமென்று சொல்லுகிறபோது, ரூ. 10,000, ரூ. 12,000 பங்குத் தொகை கொடுப்பதோடு, அதற்கான இடத்தைத் தருவது, தற்காலிகமான கட்டிடத்தைத் தருவது போன்ற நிபந்தனைகளையெல்லாம் வைத்து, விண்ணப்பிக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. ஏறத்தாழ அப்படி எல்லோருமே விண்ணப்பிக்கிறார்கள். அதிலே நாம் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிற காரணத்தினால், அப்படி அவர்கள் விண்ணப்பித்திருந்தாலும், எவைகள் உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமோ, அதற்கு முன்னுரிமை கொடுத்துக் கொண்டிருக்கிறோம். திருத்துறைப் பூண்டிக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா என்று கேட்டார்கள். அப்படித் தருவதற்கில்லை. எல்லா ஊர்களிலிருந்தும் வரக் கூடியவற்றை மனதிலே வைத்து, பரிசீலிக்கப்படுகின்றது. இன்னும் சொல்லப்போனால், சாதாரணமாக ஒருவர் செய்து வந்த காரியத்தை, இப்போது இதற்கென ஒரு குழுவைப் போட்டு, அவர்கள் எல்லாவற்றையும் பரிசீலித்து, செலக்ட் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட ஒருவர் சிபார்சு செய்யக்கூடிய நிலைமையை இப்போது தடுத்திருக்கிறோம்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் கல்வி நிலையங்களிலே பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்று சொல்லப்படுகிறது. அப்படியானால், எத்தனை சதவிகிதம் அதிகரித்து வருகின்றது என்பதை அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியே பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் புதிதாக துவங்கப்படுமா என்பதாகும். நான் சொன்ன பதிலிலும், புதிதாக துவங்கப்பட்டு வருகின்றது என்பதாகும். உயர்நிலைப்பள்ளிகள் அதிகரித்து வருகின்றது என்பது, பெண்கள் அதிகமாகப் படிக்க வருகின்றார்கள் என்பதை எடுத்துக்காட்டுகிறது. இன்றைக்கு 1, 2வது வகுப்புகளிலே இருந்து, 12வது வகுப்பு வரையிலும் ஏறத்தாழ 90 லட்சம் குழந்தைகள்



1983 ஏப்ரல் 27]

படிப்பதில், 45, 46 சதவிகிதம் பெண்கள் படிக்கின்ற நிலைமையிருக்கிறது. இது அதிகரித்து வருகின்றது? இன்னும் இரண்டு ஆண்டுகளில், ஆண்களுக்குச் சமமாக பெண்கள் வந்து, ஆண்களைவிட அதிகமான அளவிற்கு போகக்கூடிய நிலைமை தமிழ்நாட்டிலே இப்போது உருவாகியிருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலில் 46 சதவிகிதம் அளவில் இன்றைக்குப் பெண்கள் படிக்கின்றார்கள் என்று சொன்னார்கள் இன்னும் இரண்டு ஆண்டுகளில், ஆண்களுக்குச் சமமாக படித்துவிடுவார்கள் என்றும் சொன்னார்கள். இன்றைக்கு அப்படி நிறைய பெண்கள் எஸ்.எஸ் எல்.சி., 10-வது, 9-வது வகுப்புகள் வர படித்துவிட்டு, ஒருவிதமான வேலையும் இல்லாமல் அவஸ்தைப்படுகிறார்கள் என்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படியென்றால், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஐ.டி.ஐ. அமைப்பு பெண்களுக்கென தனியாக ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது படிப்பு வேண்டுமென்று சொல்லி, படிப்பதற்கு நாம் வாய்ப்பைத் தருகிறோம். வேலை தரவேண்டுமென்று வருகின்றபோது, அந்தத் துறையைச் சார்ந்த அமைச்சரிடத்தில் கேள்வியைக் கேட்டு, அதற்கான முயற்சிக்கு ஊக்கத்தைத் தந்து, நாம் ஏற்பாடு செய்யவேண்டும். குறிப்பாக கல்வித் துறையைப் பொறுத்த மட்டில், இந்த 2,3 ஆண்டுகளில் மட்டும் 5, 6 பாலிடெக்னிக்குகள் பெண்களுக்காக ஆரம்பித்திருக்கிறோம். இரண்டு பாலிடெக்னிக்குகளில் பெண்களுக்கென தனிப் பிரிவை ஆரம்பித்திருக்கிறோம். இந்தியாவிலேயே அதிகமான பெண்கள் பாலிடெக்னிக்குகள் இருப்பது தமிழ்நாட்டிலேதான். பெண்கள் பாலிடெக்னிக்குகள் மட்டுமல்ல; அவர்கள் தொழிற் கல்வி பெற வேண்டுமென்று வெளிப்படையாகச் சொல்லி, அந்தந்த நிலைக்கு ஏற்ப முயற்சிகளை மேற்கொண்டு வரக்கூடிய, அரசு தமிழக அரசுதான் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற அரசு உயர்நிலைப் பள்ளியை மலைப் பகுதியில் ஆரம்பிப்பதற்கு, அவர்கள் பாதித் தொகையை அதாவது ரூ. 5,000 கட்டினால் போதுமென்று சொல்லப் படுகிறது. அப்படி அரசு ஏதாவது அறிவித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுபற்றிய விவரம் இங்கே இல்லை. தனிக் கேள்வியைப் போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தனியார்கள் நடத்திவந்த ஆரம்பப் பள்ளிகளை முன்பு ஊராட்சி ஒன்றியங்கள் எடுத்துக் கொண்டது. அதே போல், இப்போது தனியார் நடத்தக்கூடிய ஆரம்பப் பள்ளிகளை அப்படி கொடுப்பதற்கு அவர்கள் முன்வந்தால், அந்த ஆரம்பப் பள்ளிகளை உடனடியாக அரசு ஏற்று நடத்த முன்வருமா? அதற்கான ஆணை பிறப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இது பற்றி தனியாகக் கேட்கவேண்டும். அப்படி ஏதாவது ஒரு நிலை இருக்குமானால் அது பற்றி ஒரு விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் எழுதி அனுப்புவாரானால் அதைப் பரிசீலித்து அதற்குத் தக்க பரிகாரத்தை அரசு காணும்.

திரு. என். வரதராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புதிய உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிப்பதற்கு ஒரு குழு அமைத்து இருப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் பரிசீலிக்கின்ற நேரத்தில் பின் தங்கிய கிராமப்புறப் பகுதிகளையும், 10 மைல் சுற்றளவில் பள்ளிகள் இல்லாத நிலைமைகளையும் கவனத்தில் கொண்டு பரிந்துரைகளை அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, பின் தங்கிய பகுதி, தூரம், அங்கேயிருக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை, சுற்றுப்புறத்தில் இருக்கின்ற தொடக்கப் பள்ளிகளில் இருக்கும் மாணவர்கள் எண்ணிக்கை அங்கேயிருந்து உயர்நிலைப் பள்ளிக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கை, ஆகிய அனைத்தையும் கருத்தில் வைத்துத்தான் அவர்கள் பரிந்துரை செய்வார்கள்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் தமிழ் நாட்டிலேதான் பெண்கள் அதிகமாகக் கல்வி பயிலுகிறார்கள் என்று சொன்னார்கள். அதைப்போலவே, பாலிடெக்னிக்குகளிலும் பெண்கள்தான் அதிகம் படிக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆகவே, அந்தக் கருத்தின் அடிப்படையில், இந்த ஆண்டில் புதிய பாலிடெக்னிக்குகள் ஏதேனும் ஆரம்பிப்பதற்கான உத்தரவை அரசு வெளியிடுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இதுவரைக்கும் அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் இல்லை





## 1981–82-ம் நிதியாண்டில் விற்கப்பட்ட கைத்தறி துணிகள்

*வினா எண். 884 திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981-82—ம் நிதியாண்டில் எவ்வளவு கைத்தறி துணிகள் விற்கப்பட்டன?

(ஆ) மத்திய அரசு, மற்றும் மாநில அரசு வழங்கிய தள்ளுபடி தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 1981-82—ம் நிதியாண்டில் விற்பனை செய்யப்பட்ட கைத்தறி துணிகளின் மதிப்பு கீழ் வருமாறு:

| | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் மூலம் விற்கப்பட்ட துணியின் மதிப்பு | 7,065.00 |
| பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விற்கப்பட்ட துணியின் மதிப்பு | 3,5 70.00 |
| மொத்தம் .. | 10,635.00 |

(ஆ) 1981—82-ம் நிதியாண்டில், தள்ளுபடி திட்டத்தின் கீழ் ரூ. 559.98 இலட்சம் வழங்கப்பட்டது. இதில், மத்திய மற்றும் மாநில அரசின் பங்கு முறையே ரூ. 302.38 இலட்சம் மற்றும் ரூ. 257.60 இலட்சம் ஆகும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: பேரவைத்தலைவர் அவர்களே, ஆண்டுக்காண்டு விற்பனை கூடியிருந்தாலும், அதிக அளவிற்குத் துணித் தேக்கம் ஏற்பட்டு இருக்கிறது. இந்தத் தேக்கத்திற்குக் காரணம், புதிய ரகங்கள் புகுத்தாததா, அல்லது புதிய நூல்களை அறிமுகப்படுத்தி புதிய ரகங்களைத் தயார் செய்யாததா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தேக்கம் அதிகமாக இருப்பதற்குக் காரணம் உற்பத்தி அதிகரித்து வருவதுதான். ஆண்டுக்காண்டு உற்பத்தியை அதிகரித்து வருகிறோம். இதற்கு முன்னால் கைத்தறித் தொழில் என்பது ஒரு சீரழிந்து வரும் க்ஷீணித்து வரும் தொழிலாகத்தான் இருந்தது. ஆனால் இப்போது அந்தத் தொழில் தொடர்ந்து வளர்ந்து வரும் நிலையை நாம் உருவாக்கியிருக்கிறோம். அதன் காரணமாக கைத்தறி நெசவாளர்கள் தற்போது அதிகமான அளவில் துணியை உற்பத்தி செய்வதால் தேக்கம் ஏற்படுகிறது. இன்று இருக்கும் நிலையைப் பார்க்கிறபோது, தேக்கத்திற்குக் காரணம் கடும் வறட்சி. இது கைத்தறித் துறையில் மட்டுமல்ல, எல்லாத் துறைகளிலும் இருக்கிறது.

திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துணி உற்பத்தி அதிகரித்து இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழ் நாட்டில் வறட்சியின் காரணமாக கிராமப் புறங்களில் உள்ள மக்கள் அதிக அளவிற்கு துணிகள் வாங்க முடியவில்லை. அதனாலும் தேக்கம் இருக்கிறது. மேலும் அவர்கள் செய்கிற உற்பத்தியில் 50% தான் அரசாங்கம் வங்கி மீதிய வாங்காமல் இருப்பதால் அந்தக் கைத்தறித் துணி நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். மேலும், அவர்கள் வேலை இல்லாமலும் இருக்கிறார்கள். ஆகவே, அரசே முழு உற்பத்தியையும் கொள் முதல் செய்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே அதற்காகத்தான் ஒரு சிறப்புத் திட்டத்தை இப்போது போட்டு இந்தக் கூட்டத்தொடரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஜனதா வேட்டி, சேலைகளை வாங்கி விவசாயத் தொழிலாளர்களுக்குத் தருவது என்ற திட்டத்தை நாம் அமல்படுத்துவதன் மூலமாக அந்த ஜனதா ரகத் துணிகள் தேக்கம் இருந்த நிலை மாறி, அதற்கும் மேலே இப்போது கூடுதலாக அவர்கள் அந்த ரகங்களை உற்பத்தி செய்யவேண்டிய நிலை ஏற்பட்டு இருப்பதாக அதிகாரிகள் விவரம் தெரிவிக் கிறார்கள் என்பதை இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

திரு கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை விவசாய கூலித் தொழிலாளர்களுக்கு' மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு கைத்தறி வேட்டியையும் சேலையையும் வழங்கியதே, கைத்தறி வாரியம் அதை அரசுக்கு விற்றதற்காக கைத்தறி வாரியத்திற்கு தள்ளுபடி தொகையை அரசு கழித்து விட்டதா? மைய அரசும் அதன் பங்குக்கான தள்ளுபடி தொகையை—ஏழை கூலி தொழிலாளர்களுக்கு துணிகள் தருவதற்கான பங்கை— மாநில அரசுக்கு மைய அரசு தரவேண்டிய தொகையை வழங்கியதா? அந்த தொழிலாளர்களுக்கு வேட்டியும் சேலையும் வழங்குவது தற்காலிகமா அல்லது ஆண்டுக்கு ஒரு முறை மேலும் வழங்கப்படுமா? அப்படி வழங்கப்படும் என்று சொன்னால், அடுத்த ஆண்டில், அமரர் அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவில் அதை வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆண்டுக்கு மட்டும் தான் அதை அறிவித் திருக்கிறோம் இந்த ஆண்டுதான் எதிர்பாராத வகையில் ஒரு பாதிப்பு நெசவாளிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதிலே ஜனதா ரகங்களை உற்பத்தி செய்வதிலே மைய அரசு நமக்கு உதவி செய்கிறது. அது நாம் எவ்வளவு துணிகளை உற்பத்தி செய்கிறோம் என்பதைப் பொறுத்து, உதவித் தொகை அமையும்



எவ்வளவு தொகை தருவார்கள் என்பது பிறகுதான் தெரியும். ஆனால் மைய அரசின் உதவியும் இதற்கு இருக்கிறது. அந்த ஜனதா ரக துணிகளை விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்குவது என்பது இந்த ஆண்டுக்கு மட்டும் தான் என்ற அடிப் படையில்தான் சொல்லியிருக்கிறோம். தொடர்ந்து இந்த முறை இருக்குமா இல்லையா என்பதைப்பற்றி அரசுதான் பிறகு முடிவு எடுக்கும்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே கைத்தறி துணி தேக்கம் இருப்பதற்கு காரணம் உற்பத்தி அதிகரித்துக் கொண்டேபோவதுதான் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள் உற்பத்திக்கு ஏற்ற அளவிற்கு அதை விற்பனை செய்வதற்கு, வாரத்திற்கு ஒரு நாளை கைத்தறி நாள் என்று வைத்து, கல்லூரி மாணவ, மாணவிகளும் அரசாங்க பணியிலே உள்ளவர்களும் பயன்படுத்தும் அளவிற்கு ஒரு பெரிய பிரச்சாரத் திட்டம் ஒன்றை உருவாக்க அரசாங்கம் ஆலோசிக்குமா? கைத்தறி நாள் என்ற அந்த நாளிலே, அனை வருமே கைத்தறித் துணியைத்தான் உடுத்துவது, கல்லூரி, மாணவ மாணவிகளோ, மற்ற அரசாங்கப் பணியாளர்களோ, பொது மக்களோ அனைவருமே அதை உடுத்த வேண்டும் என்ற அளவில் பிரச்சாரத்தை செய்ய வேண்டும். அதேநேரத்தில் அவர்களுக்கெல்லாம், மக்கள் நலம் நாடும் நற்பணிகள் என்றிதழ்கள் வழங்கவும் அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுவாக பெண்கள், தாய்மார்கள் என்று பார்க்கிறபோது, அவர்கள் அதிகமான அளவுக்கு கைத்தறி துணிகளை ஆதரித்துத்தான் வருகிறார்கள். சேலைகள் கட்டு வதன் மூலமாக. ஆனால் கல்லூரிகளிலே போய் வாரத்திற்கு ஒரு நாள் என்று கட்டாயப்படுத்துவோமேயானால், கைத்தறிக்கு ஆதரவு கிடைப்பதற்கு பதிலாக எதிர்பாராத நிலைமைகளும் உருவாகக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. கல்லூரி மாணவர் களிடத்திலே மட்டும் எதையும் கட்டாயப்படுத்துகிற நிலைமையிலே நாம் இருக்கக்கூடாது. அதற்குப் பதிலாக கைத்தறி துணிகளின் உற்பத்தி அவர்களுடைய கவனத்தை கவருகிற அளவுக்கு இருக்குமேயானால், அவர்களாகவே அதை விரும்பி வாங்கி அணிவார்கள். ஆகவே கைத்தறி துணிகளை நெய்வது என்பதே மக்கள் விரும்புகிற அளவுக்கு இருக்க வேண்டும் என்று ஏற்னெவே சொல்லியிருக்கிறோம். ஆகவே, அந்த வகையிலே மாணவ, மாணவிகள் விரும்பி அணிகிற அளவுக்கு நல்லவிதமான முறையிலே துணிகளை நெய்வார்களேயானால் அதுதான் சிறப்பான முறையாக

இருக்கும் பிரச்சாரத்தை பொறுத்தவரையில் எவ்வளவோ வகைகளில் அதை செய்து வருகிறோம். நாட்டினுடைய நலனில் அக்கறை கொண்டுள்ள மாணவர்கள் நிச்சயமாக அதைப் பயன் படுத்துவார்கள்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னை மாநகரத்திலே கைத்தறி கண்காட்சி நடந்து வருகிறது. அந்தக் கண்காட்சியிலே தள்ளுபடி தொகை அறிவிக்கப்பட்டது போதாத காரணத்தால் விற்பனை அவ்வளவாக இல்லை என்று சொல்லப்படுவது உண்மையா? கோவாப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலே வழங்கப்படக்கூடிய தள்ளுபடி விற்பனைச் சலுகையை தமிழகத்தில் இருக்கிற அத்தனை கைத்தறி சங்கங்களுக்கும் வழங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு.** செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அது பற்றிய முடிவு விரைவிலே எடுக்கப்பட்டு அறிவிக்கப்படும்.

### வேடசந்தூர் தாலுகாவிலுள்ள ஊராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்ட வானொலிப் பெட்டிகள்

*வினா எண். 885 திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தாலுகாவிலுள்ள வேடசந்தூர், குசிலியம்பாறை, வடமதுரை ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள எத்தனை ஊராட்சி மன்றங்களுக்கு வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டன?

(ஆ) அவைகளில் பழுதடைந்து செயலற்று இருக்கும் வானொலிப் பெட்டிகள் எத்தனை?

(இ) அவைகள் தற்பொழுது யாருடைய பொறுப்பில் உள்ளன?

**மாண்புமிகு திரு.** ப குழந்தைவேலு: (அ) வேடசந்தூர் வட்டாரத்திலுள்ள வேடசந்தூர், குசிலியம்பாறை, வடமதுரை, ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 59 ஊராட்சி மற்றும் பேரூராட்சி மன்றங்களுக்கு 390 வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன

(ஆ) 134 (28-2-83 அன்றைய நிலவரப்படி).

(இ) அவை வேடசந்தூர் வானொலி மேற்பார்வையாளரின் பராமரிப்பில் உள்ளன.



### ஓமலூர் நகரப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம்.

*வினா எண். 886—திரு. செ. செம்மலை; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஓமலூர் நகரப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு.** ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) இது பற்றிய செயற்குறிப்பு அரசுக்கு வந்து சேர்ந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, ஓமலூர் நகரம் தாலுக்கா மையமாக இருந்தபோதிலும் அங்கே பேருந்து நிலைய வசதி இல்லாத குறைபாடு இருக்கிறது. ஓமலூர் பேரூட்சியைப் பொறுத்தவரையில் அங்கே நிதி பற்றாக்குறை காரணமாக, தன்னுடைய சொந்த நிதியிலிருந்து அந்தப் பேருந்து நிலையத்தை விரிவு படுத்த முடியாத நிலை இருக்கிறது ஐ.யு.டி.பி. ஸ்கீமிலே எல்லாம் கடன் கேட்டு பார்த்து மனு விண்ணப்பித்திருக்கிறார்கள். எனவே அந்தக் கடன் மனு மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, அங்கே பேருந்து நிலையத்தை அமைப்பதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு.** ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சியினுடைய தீர்மானம் அரசுக்கு வந்து சேரவில்லை. வந்து சேர்ந்த உடன் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் பேருந்து நிலையம் கட்டுவதற்குரிய வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.

### கீரனூரில் பாதாள அறையை சுத்தம் செய்யும்பொழுது இறந்துபோன நகரசுத்தி தொழிலாளர்கள்.

*வினா எண். 887 திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூரில் உள்ள மூன்று நகர சுத்தி தொழிலாளர்கள் கீரனூரில் உள்ள பள்ளி வாசலுக்குச் சொந்தமான கழிப்பிடத்தில் பாதாள அறையை சுத்தம் செய்யும்போது இறந்து போனது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அவர்களது குடும்பத்திற்கு அரசு ஏதேனும் நிதி உதவி செய்துள்ளதா?

**மாண்புமிகு திரு.** ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

[1983 ஏப்ரல் 27

## கீழ்ப்பவானிப் பாசன திட்டப் பகுதியிலுள்ள கிணறுகள்

*வினா எண். 888—திரு. ச. பாலகிருஷ்ணன்; மாண்புமிகு நீர்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்பவானி பாசனத்திட்டப் பகுதியில் உள்ள கிணறுகளில் 10 குதிரை சக்திக்கு மேல் மின் இணைப்பு வழங்கப் படமாட்டாது என்ற அரசு உத்தரவு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அந்த உத்தரவு எந்த ஆண்டு போடப் பட்டது?

(இ) அதைத் தளர்த்தும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) ஆம்.

(ஆ) 1967-ம் ஆண்டு உத்தரவு போடப்பட்டது.

(இ) இல்லை.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கீழ்பவானி பாசனத்திட்ட பகுதியில் உள்ள கிணறுகளில் 10 குதிரை சக்திக்கு மேல் மின் இணைப்பு வழங்கப் படமாட்டாது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். தற்போது அந்த பகுதியில் ஒரு கிணற்றில் 5, 6 பங்குதாரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மின் இணைப்பு பெறுவது என்றால் தனித்தனியாக தான் மின் இணைப்பு பெறுவதற்கு அந்த பகுதியில் உள்ளவர்கள் விரும்புகிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் அப்படி பங்குதாரர்கள் கிணறுகளுக்கு மட்டும் அந்த சலுகையை வழங்கிட அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கீழ்பவானி ஆயக்கட்டில் அதைச் சுற்றிலும் உள்ள பகுதியில் புதிய கிணறுகள் தோண்டுவது குறித்து 1963, 1965, 1967 ஆகிய 3 கால கட்டங்களில் அரசு பல்வேறு கோரிக்கைகளை பரிசீலனைச் செய்து சில முடிவுகளை எடுத்து இருக்கிறது. அதன்படிதான் இப்போது 100 மீட்டர் தூரத்திற்குள் ஒரு 10 குதிரை சக்தி அளவுக்கு அவர்கள் மின் இணைப்பு பெற்று அந்த மின் பொறிகளை பயன்படுத்தலாம் என்று நாம் உத்திரவு போட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது போல் மேலும் சில மாற்றங்கள் செய்ய அதாவது பிரதான கால்வாயிலிருந்து 100 மீட்டர் தூரத்திற்கு மேலும் அதைப்போல் கிளைக் கால்வாயிலிருந்து 50 மீட்டர் மேலுள்ள எல்லா கிணறுகளிலும் 10 குதிரை சக்தி இருக்க வேண்டும் என்ற கருத்துரு அரசு பரிசீலனை செய்து இருக்கிறது. அப்படி வருகிறபோது கிளைக் கால்வாய், பிரதான கால்வாய் என்ற பாகுபாடு இல்லாமல் 100 மீட்டர், 50 மீட்டர் பாகுபாடு இல்லாமல் ஒரே அளவு கோலை வேண்டுமானால் பின்பற்றலாம் என்ற கருத்துருவை அரசு தற்போது பரிசீலனையில் எடுத்துக்கொண்டு இருக்கிறது.



1983 ஏப்ரல் 27]

## கிருஷ்ணகிரி அணையிலுள்ள பூங்காவினை அழகுபடுத்தும் திட்டம்.

*வினா எண். 889—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரி அணை பூங்காவினை அழகுபடுத்த மின் விளக்கு பொருத்த எவ்வளவு தொகை ஒதுக்கியுள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களால் 1,69,700/- ரூபாய்க்கான மதிப்பீடு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இச்செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆண்டியப்பனூர் என்னுமிடத்தில் புதிய அணை கட்டும் திட்டம்.

*வினா எண் 890—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆண்டியப்பனூர் என்னுமிடத்தில் புதிய அணை கட்ட பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் விரைவில் கட்டி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) & (ஆ) திட்ட அறிக்கையின் மீது நில நிர்வாக ஆணையாளரின் அறிக்கை எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதி நிலத்தடி நீரை நம்பியிருக்கிற பகுதி. இந்த ஆண்டியப்பனூரில் நீண்ட காலமாக அணைக் கட்ட வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்து அதற்கு பின்னால் அந்த அணை கட்டுவதற்கு பொறியாளர்கள் பார்வையிட்டு அங்கே கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்கு பின்னால் கூட இந்த சட்டமன்றத்தில் பல முறை கேள்விகள் கேட்கப்பட்டு 1981-ம் ஆண்டு பட்ஜெட் புத்தகத்தில் இந்த அணை எடுத்துக்கொள்ளப்படும் 1985க்குள் முடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்குண்டான என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்த அணையை கட்டுவதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம் வாணியம்பாடி வட்டத்தில் ஆண்டியப்பனூர் ஓடையின் குறுக்கே ரூபாய் 323 லட்சம் செலவில் ஒரு நீர் தேக்கம் அமைப்பதற்கான திட்ட அறிக்கைகள், மதிப்பீடுகள் எல்லாம் பாசனத்துறை பொறுத்த அளவில் தயார் செய்யப்பட்டு இப்போது அரசுக்கு அது வந்து விட்டது. இந்த திட்டம் பற்றிய நில நிர்வாக ஆணையாள ருடைய அறிக்கை வந்த பிறகு இந்த திட்டத்தை எடுத்துக் கொள்வதற்கான வாய்ப்பு இருப்பதாகத்தான் அரசு இதுவரை கருதுகிறது. அப்படி வருகிறபோது மிகவும் பின்தங்கிய அந்த பகுதி வளம் அடைவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. எனவே திட்டத்தை விரைவில் எடுத்து செயல்படுத்துவதற்கு அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும்.

(முற்பகல் 9-50)

திரு. ப. சுந்தரம்; தலைவர் அவர்களே, நில ஆர்ஜிதம் செய்யப்படுவதற்காக பொறியாளர்கள் அமைக்கப்பட்டிருப்ப தாகச்சொல்லப்படுகிறது. அதை உடனடியாக அரசு செய்து இந்த ஆண்டிலேயே அதற்குண்டான வேலைகளை எல்லாம் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: திட்டத்தை எடுத்துக் கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற் கொள்ளும்.

திரு. கி. அன்பழகன்; தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதாலே எவ்வளவு ஏக்கர் பாசன வசதி பெறும் அந்த ஆண்டியப்பனூர் கால்வாய் செல்கிற பகுதிகளிலே அந்த ஏரிப்பகுதிகளின் மூலமாக பாசனம் பெறும் நிலங்களுக்கும் பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுக்க அந்தப் பகுதிகளிலேயும் பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கத் திட்டத்தினால் சுமார் 2 ஆயிரம் ஏக்கர் நிலம் இரு போக புஞ்சை சாகுபடி செய்ய பாசன வசதி கிடைக்கும் நீர்தேக்கத்தினுடைய கொள்ளளவு 112.20 மில்லியன் கன அடியாகும். அதன் காரணமாக 4349 டன் கூடுதலாக உணவு உற்பத்தி பெருகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போல் அந்தச் சில பகுதிகளிலே ஏற்கெனவே பாசன வசதி பெறக்கூடிய அந்த இடங்களையும் சேர்த்து அவர்களுக்கு பாசன வசதியை அளிக்கக்கூடிய வாய்ப்பு களையும் அரசு ஆராய்ந்து வருகிறது.



கடையகோட்டை அருகே நங்காஞ்சி ஆற்றில் அணை கட்டும் திட்டம்.

*வினா எண். 891—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் கடையகோட்டை அருகில் நங்காஞ்சி ஆற்றில் அணை கட்டும் திட்டம் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது செயல்படுத்த படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது; (அ) ஆம்.

(ஆ) இத் திட்டத்திற்கான ஆய்வு வேலை முடிந்தப்பின் பரிசீலிக்கப்படும்.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: தலைவர் அவர் களே, இந்தத் திட்டத்தினால் எவ்வளவு ஏக்கர் நிலம் பாசனம் பெறும்? இந்தத் திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது; தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால், 1116 ஏக்கர் புஞ்சை நிலங்களும், 59 ஏக்கர் நஞ்சை நிலங்களும் பயன் அடையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அதோடு தண்ணீர் பற்றாக்குறை உள்ள 429 ஏக்கர் நஞ்சை நிலங்களுக்கும் பாசன வசதி அளிக்க வாய்ப்பு இருக்கிறது. இதைத் தவிர மற்ற விவரங்களை தனிக் கேள்வி போட்டால் பதில் தெரிவிக்க முடியும்.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : தலைவர் அவர் களே, இந்தத் திட்டத்தை தனிப்பட்ட சிலரின் நிலங்கள் பாதிக்கப்படுகிறது என்ற காரணத்தினால் நிறுத்தி வைப்பதற் கான முயற்சி ஏதாவது நடைபெறுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் பழனி தாலுகா இடையகோட்டை அருகில் நங்காஞ்சி ஆறு நீர்த்தேக்கத் திட்டம் என்பது மிகவும் பின் தங்கிய வறண்ட ஒரு பகுதிக்கு நாம் நன்மை செய்ய வேண்டு மென்ற அடிப்படையிலே எடுத்துக்கொண்டிருக்கிற ஒரு திட்டம். அதை நிறுத்தி வைக்கக்கூடிய முயற்சி எதுவும் நடக்கவில்லை. மாறாக சிலருடைய நிலங்கள் பாதிக்கப்படுகிறது. ஆகவே, அதனுடைய அளவை குறைக்கவேண்டுமென்று முயற்சிப்பதாக அரசுக்குத் தகவல் வந்து அப்படியெல்லாம் ஒருசிலருடைய நிலம் பாதிக்கப்படுகிறது என்ற காரணத்திற்காக நூற்றுக்கணக் கான ஏழை விவசாயிகள் பயன்பெறக்கூடிய அளவைக் குறைத்துவிடக்கூடாது என்ற கருத்தை அரசு வலியுறுத்தியிருக் கிறது. எனவே அந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. கே. குப்புசாமி: தலைவர் அவர்களே, தற்போது பொறியாளர்களால் தயாரிக்கப்பட்டிருக்கிற இந்தத் திட்டத்தின்கீழ் இந்த அணையில் 30 அடி தண்ணீர் தேங்குகிற அளவிலே தயாரிக்கப்பட்டிருக்கிறது. அங்கே வேறு பாசன வசதிகள் இல்லாத காரணத்தினால் அதை 60 அடி என்று உயர்த்தி இடையகோட்ட, அரவக்குறிச்சி போன்ற வடமேற்குப் பகுதிகளிலே உள்ள புஞ்சை நிலங்களுக்கு கிணறுகளிலாவது தண்ணீர் கிடைக்கும் என்ற அளவுக்கு அந்த அணையை இப்போது திட்டமிட்டிருக்கிற அளவை உயர்த்திக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, இப்போது ஆய்வு நிலையில் இருக்கக்கூடிய சூழ்நிலையில் பொதுவான கருத்துக்களைத்தான் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல் நிச்சயமாக ஒருசில ஏக்கர் அதுவும் ஒருசில நபர்களுடைய நன்மையைக் கருதி பாதிக்கப்படுகிறது என்பதற்காக திட்டத்தினுடைய அளவைக் குறைக்கவோ அணையின் உயரத்தைக் குறைக்கவோ யார் முயற்சித்தாலும் அரசு அதை ஏற்றுக்கொள்ளாது, அதிக அளவில் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு அந்தத் திட்டத்தை விரிவாக்கம் செய்து பெரிய திட்டமாகச் செயல்படுத்துவதற்கு அரசு விரும்புகிறது. அந்த நடவடிக்கைகளை அரசு உறுதியாக மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறி துறை போன்று கதர் துறைக்கும் எல்லா சலுகைகளும் அளிக்கும் திட்டம்.

*வினா எண். 892—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி துறை போன்ற கதர் துறைக்கும் எல்லா சலுகைகளும் அளிக்கக் கோரி கிராம கைத்தொழில் கமிஷன் வேண்டுகோள் விடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (அ) ஆம்.

(ஆ) கைத்தறி நெசவாளருக்கு அளிக்கப்படும் வீட்டுவசதி திட்டம் போன்ற சலுகைகள் பெரும்பாலும் கதர் நெசவாளர் தொழில் நுட்பப் பயிற்சி உதவி சேமிப்பு மற்றும் பாதுகாப்புகளுக்கும் அளிக்கப்படுகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி தொழிலுக்கு வடிவமைப்பு நிலையம் இருப்பதைப்போல, கதர் தொழிலுக்கும் வடிவமைப்பு நிலையம் ஆரம்பிக்கும் செயல்குறிப்பு அரசிற்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ரகத் துணிகளை வெளியிட வேண்டுமென்ற எண்ணம் வாரியத்திற்கு இருக்கிறது. கதர் பட்டுக்கும், கதர் துணிகளுக்கும் வரவேற்பு இருந்தாலும் புது ரகத் துணிகளை அறிமுகப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டு புதிய வடிவமைப்பு நிலையம் டிசைனிங் சென்டர் ஆரம்பிப்பதற்கான முயற்சியை வாரியம் எடுத்து வருகிறது. இது பட்டுத் துணிக்கு மட்டுமல்ல, கதர் துணிக்கும் புதிய ரக சேலைகளை அறிமுகப்படுத்துவதற்கான முயற்சியை எடுத்து வருகிறது. சமீபத்தில் கதர் துறையில் தயாரிக்கிற சேலையில் ஜெய்ப்பூரிலே பிரிண்ட் செய்து வெளியிடவிருக்கிறது. அதற்கு மீனாட்சி என்று பெயர் வைத்து சுவர்ச்சிகரமாக 60 ரூபாய் விலையிலே வெளியிடவிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) கிருஷ்ணாநதி நீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டிய தமிழக முதல்வருக்கு வாழ்த்துக்கள்.

திரு. மி. வின்செண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு நிரந்தரமாக குடி தண்ணீர் பஞ்சத்தைப் போக்க கிருஷ்ணா ஆற்றில் ஸ்ரீசைலம் அணையிலிருந்து 250 மைல் நீளம் கால்வாய் வெட்டும் பணியை தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆந்திர மாநிலம் கடப்பா மாவட்டத்தில் பிரம்மகிரிமடம் என்ற இடத்திலே ஒரு அணைக் கட்டிற்கு அடிக்கல் நாட்டிக் கொண்டிருப்பது கண்ணெதிரே கலகலவென்று தெரிகிறது. இந்திய பிரதமரும், இந்திய ஜனாதிபதியும் வாழ்த்து கூறி விட்டனர். தமிழகத்திற்கு இந்தத் திட்டம் கொண்டு வந்த தானைத் தலைவர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். (மேசைத் தட்டும் ஒலி).

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, இதெல்லாம் பாயிண்ட் ஆப் ஆர்டரில் வருமா....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறார்கள்.

## 3. தகவல் கோரல்.

### (அ) பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏட்டிற்கு திருத்தம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொரணம் அவர்களும் நாங்களும் சேர்ந்து மூன்று பேர்கள் 5-4-82 அன்று நோட்டிபிகேஷன் நம்பர் 8 இஷ்யூட் இன் ஜி.ஓ.எம்.எஸ். நம்பர் 723 லேபர் அண்டு எம்ப்ளாய்மென்ட் டிபார்ட்மென்ட், 7-4-82க்கு ஒரு அமென்ட்மென்ட் மூவ் பண்ணியிருந்தோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழுவிலே அதற்கு நேரம் ஒதுக்கப்படவில்லை.

### (ஆ) கரும்புக்கு கூடுதலாக அறிவிக்கப்பெற்ற தொகை விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்தல்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற மாதம் கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகள் கோரிக்கை வைத்து வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கரும்பு உற்பத்தியாளர்களுக்கு 20 ரூபாய் கூடுதலாக கொடுப்பதாக அறிவித்தார்கள். கூடுதலாக அறிவிக்கப்பட்டது குறித்த உத்தரவு கரும்பு ஆலைகளுக்கு அரசாங்கம் அனுப்பாததால், விவசாயிகளுக்கு அதிகப்படியான தொகை கிடைக்காமலிருக்கிறது. எனவே அந்த உத்தரவு கரும்பு ஆலைகளுக்கு விரைவில் அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் அவையில் இல்லை.

### (இ) பீடித் தொழிலாளர்கள் பிரச்சினை.

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு தலைவர் அவர்களே, மூன்று லட்சம் பீடித் தொழிலாளிகள் பாதிக்கப்படக்கூடிய பிரச்னையைப்பற்றி என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்களும் மற்றவர்களும் கவனஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தார்கள். பஞ்சப்படி விஷயத்திலே சரியாக வரையறுக்கப்படாததால் பெரிய குழப்பம் அங்கே நிலவுகிறது. இதனால் மூன்று லட்சம் பீடித் தொழிலாளிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு ஒரு டைரக்ஷன் கொடுத்து அவர்களின் பிரச்னையைத் தீர்த்து வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்குத்





தான் சட்டசபையின் கடைசி நாள் என்பதால் அவர்களின் பிரச்னையைப்பற்றி அரசாங்க தரப்பில் ஒரு வாக்குறுதி கொடுக்கும்படிச் செய்தால் நலமாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபற்றி பூங்காவனம் அவர்கள் நேற்றே கேட்டார்கள். நேற்றே அவருக்கு இதுபற்றி சொன்னேன். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கவனத்தில் இநதப் பிரச்சினை இருக்கிறதென்று கருதுகிறேன். பேச்சு வார்த்தைகள் மூலமாக நல்ல முடிவாக காண்பார்கள் என்று நம்புகிறேன்.

### (ஈ) மங்களதேவி கோவிலில் தமிழர்கள் வழிபாடு செய்ய வசதி செய்து கொடுத்தல்

திரு. ஆர். டி. கோபாலன்; தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு சொந்தமான மங்களதேவி கோவிலிலே நடைபெறவிருக்கும் சித்திரா பௌர்ணமி திருவிழாவில் தமிழ்நாட்டு மக்கள் பீதியில்லாமல் வழிபாடு செய்ய மாண்புமிகு உள்துறை அமைச்சர் சேத்தி அவர்கள் சொல்லியிருந்தும், கேரளா அரசு பல கடுமையான கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி அவர்கள் பீதியடையும்படியும் ஒரு சூழ்நிலையை எற்படுத்தியிருப்பதால் தமிழக அரசு, மத்திய அரசுடனும், கேரள அரசுடனும் தொடர்பு கொண்டு அவர்களின் அச்சத்தை போக்க எற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றைய தினம் இந்த மன்றத்திலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசி பதிலளித்தார்கள். உங்களுடைய கருத்தை அரசாங்கம் கவனிக்குமென்று நம்புகிறேன்.

(முற்பகல் 10-00)

திரு. கோவைத்தம்பி; * மாண்புமிகு * பேரவைத் * தலைவர் அவர்களே *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுமாதிரி பிரச்னைகளைக் கிளப்பாதீர்கள், நல்லதல்ல. அது அவைக் குறிப்பில் கூட ஏற வேண்டாம்.

### உ. திண்டுக்கல்லில் நிலவும் குடிதண்ணிர் பிரச்சினை

திரு. என். வரதராஜன்; பேரவைத் தலைவர் அவர்களே, நான் 54வது விதியின்படி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். நீங்களே திண்டுகல்லுக்கு நேரடியாக வந்து தண்ணீர் பற்றாக்குறையைப்பார்த்தீர்கள், 10 நாட்களுக்கு ஒருமுறை கூட தண்ணீர் கிடைக்கவில்லை. இந்தச் சட்டசபைக் கூட்டம் முடிந்தவுடன் விதி 54-ன் கீழ் கொடுத்ததையும் முடிந்ததாகக் கருதாமல் அதன்மீது நடவடிக்கை எடுத்து கவனிக்க வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திண்டுக்கல் தண்ணீர் பிரச்னையை பொறுத்தவரைக்கும் இந்த மாமன்றத்தில் நிறைய பேசப்பட்டு இருக்கிறது. மேதகு ஆளுநர் அவர்களும் பேசியிருக்கிறார்கள் ஆகவே தகுந்த பரிகாரம் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன்.

(ஊ) நிலக்கோட்டைத் தொகுதியில் காலரா பரவி வருவதான செய்தி.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் இரண்டு மூன்று கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்தேன். அவை வரவில்லை. வரா விட்டாலும் பரவாயில்லை. அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ஆனால், நேற்றையதினம் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் தலைவரிடம் கொடுத்திருந்தேன். என்னுடைய மதுரை மாவட்டம் நிலக்கோட்டை தொகுதி அம்மாத்தூரில் ஒரே நாளில் 30, 40 பேர்களுக்குக் காலரா கண்டு, அதிலே 10 பேர்கள் இறந்து விட்டார்கள் என்று நேற்றையதினம் எனக்குத் தகவல் வந்திருக்கிறது. என்னுடைய ஊருக்கு 4—வது மைலில் இருக்கிறது. 10 பேர்களுக்கு மேல் இறந்துவிட்டதாக தகவல் வந்திருக்கிறது. ஆனால், மருத்துவ மனையிலே நல்லமுறையிலே கவனித்திருக்கிறார்கள். இருந்தாலும் அதனைத் தடுக்கக் கூடிய அளவிலே உடனடியாக நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டு முடிக்கின்றேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஒன்றும் சரியான செய்தி அல்ல. 4, 5 பேர்கள் வாந்தி பேதியாலே அவதிப்பட்டார்கள், உடனடியாக சிகிச்சை செய்யப்பட்டது. மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். யாரும் இறந்து போகவில்லை. ஆகவே, ஒரு பீதியை உண்டாக்கத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புகளைப் பொறுத்த வரைக்கும் எல்லா கவன ஈர்ப்புகளும் அரசுத் துறைக்கு அனுப்பப்படுகின்றன. அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள். (குறுக்கீடு) எல்லாமே போயிருக்கிறது. ஆகவே. கவன ஈர்ப்புத் தீர்மானம் அனுப்பியவர்கள் எங்களுக்கு வரவில்லையே, ஆகவே, என்ன ஆகுமோ என்ற அச்சமோ, ஆயாசமோ படத் தேவையில்லை,

(எ) தேன் உற்பத்தியாளர் நிலைமை

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்திலே, குறிப்பாக, குமரி மாவட்டத்திலே தேன் விலை வீழ்ச்சியின் காரணமாகத் தேன் உற்பத்தியாளர்கள் மத்தியிலே ஒரு........



மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒரு கவன ஈர்ப்பிலே இதைப் பற்றி பேசிவிட்டீர்கள். திருப்பி, திருப்பி இதையே சொல்லிக்கொண்டிருக்க வேண்டாம்.

(ஏ) அம்பாசமுத்திரம் முன்சிப் கோர்ட்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 100 ஆண்டுகளாக நடைபெற்று வரும் அம்பாசமுத்திரம் முனிசிப் கோர்ட் படிப்படியாக, மூடப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதை ஆட்சேபித்து வழக்கறிஞர்கள் பகிஷ்கரித்து இருக்கிறார்கள். ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது இதுவரைக்கும் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது.

(ஐ) தொலைக்காட்சி மூலம் இந்தி திணிக்கப்படுவதற்கான புகார்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே இருக்கக்கூடிய டெலிவிஷனில் கடந்த ஞாயிற்றுக் கிழமை முழுமையாக தமிழிலே நிகழ்ச்சிகளே இல்லை. 17 நிமிடம் மட்டும் செய்திகள் மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. 6.30 மணிக்குச் சொல்லக்கூடிய செய்திச் சுருக்கம் கூட அன்றையதினம் 7.30 மணிக்குத் தள்ளிச் சொல்லப்பட்டிருக்கிறது. நாம் இந்தி எதிர்ப்பைப் பற்றி இவ்வளவு தூரம் சொல்லிக் கொண்டிருக்கும்போது, வழக்கு மன்றத்திலே இருக்கிற பொழுதுகூட, கடந்த ஞாயிற்றுக்கிழமை 6.30 மணிக்குச் சொல்ல வேண்டிய தமிழ்ச் செய்தியை ஒத்தி வைத்து 7.30 மணிக்கு 2 நிமிடம் சொல்லி அதற்குப் பிறகு 8.30 மணிக்குச் சொல்லியிருக்கிறார்கள். தொடர்ந்து அது நடந்து கொண்டேயிருக்கிற காரணத்தால், இந்த இந்தித் திணிப்பைப் பற்றி அரசாங்கம் தனியாக அக்கறை செலுத்தி தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(ஒ) பழனியில் நிலவும் குடிதண்ணீர் பிரச்சினை.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே இன்றையதினம் பழனிக்கு தண்ணீர் சப்ளை செய்யக்கூடிய கொடைக்கானல் லேக்கிலிருந்து தண்ணீர் எடுத்து விட வேண்டுமென்று சொல்லி. அமைச்சரிடம் நானும் ஒட்டன் சத்திரம் சட்ட மன்ற உறுப்பினரும் கையெழுத்து வாங்கித் தங்களிடம் கொடுத்தோம். ஆனால், இதுவரையில் தண்ணீர் எடுக்கவிடவில்லை. 5.6 தினங்களுக்கு ஒருமுறை அங்கே தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது. ஆகவே, அது பழனியிலே மிகுந்த பதட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இன்றையதினம் இதைப்பற்றி பேசுவதற்கு அனுமதித்துவிட்டு........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசுவதற்கு அனுமதிப்பதென்ன? பேசியாயிற்று.

(ஒ) மின்வாரியப் பொறியாளர்கள் மாற்றம்.

திரு. என். வி. என். சோமு: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மின்சாரத் துறையில் ஆயிரக்கணக்கான இன்ஜினீயர்கள் டிரான்ஸ்பர் செய்யப்படுகின்றார்கள் என்று கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்தேன். மாண்புமிகு அமைச்சர் கூட இங்கே இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை அனுமதிக்கவே இல்லை. நிர்வாகத்திலே இருப்பதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தால் காலம் எப்படி போதும்?

(ஓ) அரவங்காடு வெடிமருந்து தொழிற்சாலை ஊழியர்கள் போராட்டம்.

திரு. மு. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவங்காட்டிலே வெடி மருந்து தொழிற்சாலை தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருப்பது பற்றியும், அதே போல் குன்னூர் முன்சீப் கோர்ட்டுக்கு ஊழியர்களை நியமிக்காதது பற்றியும் நான் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லா ஒத்திவைப்புத் தீர்மானங்களும் அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன.

(க) விவசாயத் தொழிலாளர்களுக்கு கைத்தறியாடை வழங்குவது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தேங்கியிருக்கக்கூடிய கைத்தறித் துணிகளை அரசே கொள்முதல் செய்து 60 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்று இந்த அவையில் அறிவிக்கப்பட்டது. ஆனால், அமைச்சர்கள் வழங்கியதைத் தவிர, வேறு எங்குமே வழங்கியதாகத் தெரியவில்லையே, அப்படி அவையில் அறிவித்தவாறு, கைத்தறி துணிகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வழங்கிக் கொண்டுதானிருக்கிறார்கள். என் தொகுதியில் பூராவும் வழங்கி விட்டார்கள்.

(ங) கண்ணகிகோயில் சிலை கல்வெட்டு.

திரு. கோ. விஸ்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நாம் அனைவருமே கண்ணகிக் கோயிலைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். இந்தக்



கோயிலிலே இருக்கிற சிலையைப் பற்றி கல்வெட்டு தமிழறிஞர் திரு. கோவிந்தராஜனார் என்பவர் 20 ஆண்டுகளுக்கு முன்பு 3 ஆண்டுகளாக முயற்சி எடுத்து......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுதானே கண்ணகி கோயிலைப் பற்றி திரு. கோபால் கேட்டார். அப்பொழுது நீங்கள் இல்லையென்று நினைக்கிறேன்.

(ச) அமராவதி ஆற்றுக் கால்வாய் பாசனம்

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமராவதி ஆற்றில் மாற்றுக்கோம் அருகிலே விவசாயத்திற்காக விடுகின்ற தண்ணீரை அங்கேயிருக்கிற கால்வாயின் வழியாக எடுத்துக்கொள்வது பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அது இதுவரையில் வரவில்லை. அது குறித்து அரசு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(ஞ) பட்டு சேலைகள் விற்பனையாகாது தேங்கியுள்ள நிலை

திரு. ப. வெங்கட சுப்பிரமணியம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான காஞ்சிபுரம் நகரிலே இருக்கிற அனைத்து பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களும் லட்சக்கணக்கான வரி மதிப்புள்ள பட்டுச் சேலைகள் தேங்கி இருப்பதைப் பற்றி அரசு வறட்சி நிவாரண நடவடிக்கையாக அவைகளை வாங்கிக்கொள்ள வேண்டுமென்று ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் .....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பட்டுச் சேலைகளைப்பற்றி சென்ற வாரம் நீங்கள் பேசியிருக்கிறீர்கள். திரும்பத் திரும்ப அதையே பேசினால் எப்படி? கவன ஈர்ப்பு எல்லாம் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

(ட) தேவிகுளம் பீர்மேடு பகுதி தமிழகத்தோடு இணைக்கப்படுவது

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தேவிகுளம் பீர்மேடு பகுதியை தமிழகத்தோடு இணைக்க வேண்டுமென்று கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்புகளை அரசுக்கு அனுப்பியிருக்கிறேன் என்று ஏற்கனவே சொன்னேன்

(ண) திருவில்லிப்புத்தூரில் தொடர்ந்து மின்வாரிய அலுவலகம் இயங்கச் செய்வது

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே? ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் இதுவரையில் இயங்கிக் கொண்டிருந்த மின்துறை அலுவலகமும் ஆதிதிராவிட நல அலுவலகமும் வேறு ஊருக்கு மாற்றப் போவதாக ஸ்ரீவில்லிப் புத்தூரிலிருந்து இரவு 2 மணிக்கு ஒரு தந்தி வந்தது. இதனால். அந்தப் பகுதியில் ஒரு பெரும்பதட்ட நிலையிருக்கிறது. அங்கேயுள்ள அந்த அலுவலகங்களை மாற்றாமல் அங்கே இருக்கச் செய்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

(த) சென்னை நகரில் நிலவும் குடிதண்ணீர் பிரச்சினை

திரு. சு. பாலன் மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னையிலே குடிதண்ணீர் பற்றாக்குறைஇருக்கிறது என்பது நமக்கெல்லாம்தெரியும். ஆனால், குடிநீர் வாரியம் இப் பொழுது ஒன்று விட்டு ஒருநாள் குடிநீர் சப்ளை செய்வதாலே சரியான முறையிலே மக்களுக்குக் குடிநீர் கிடைக்கவில்லை. இப் பொழுதே ரெயில்மூலம் தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. இன்னும்3 மாதங்களுக்குக் கடும் வெயிலின்காரணமாக, கடும் பற்றாக்குறை இருக்கும். கடும் பற்றாக்குறை அதிகமாகும். மக்கள் அவதிப்படுகிறார்கள். ஆகவே, இந்த 3 மாதங்களுக்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதைத் தெரிவிக்குமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது.

(ந) வடாற்காடு மாவட்டம் வறட்சிப் பகுதியாக அறிவிக்கப் பெற வேண்டுமென்ற நிலை

திரு. துரை முருகன்பேரவைத் தலைவர் அவர்களே' நான் ஏற்கனவே தந்திருக்கும் அடிப்படையிலே பேசுகிறேன். அதாவது, வறட்சி என்பது தமிழகம் முழுவதும் இருந்தாலும், அதற்காக அரசு நடவடிக்கை எடுத்தது, மத்திய அரசு உதவியிருக்கிறது என்றாலும், குறிப்பாக, வட ஆற்காடு மாவட்டம் மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், அதை வறட்சிப் பகுதி என்று அறிவிக்க வேண்டுமென்று நான் தந்திருக்கிறேன்.





(முற்பகல் 10–10)

காரணம், வறட்சிப் பகுதி என்று அறிவிக்காத காரணத்தால் பல விவசாயிகள் பல ஜப்திகளுக்குப் ஆளாக்கப்படுகிறார்கள்; பல்வேறு பிரச்னைகளுக்கு ஆளாகிறார்கள். Drought declared area என்று வந்துவிட்டால் சில சலுகைகள் அவர்களுக்குக் கிடைக்கும். எனவே இது மிகவும் முக்கியமான பிரச்சினை. எனவே, வட ஆற்காடு மாவட்டத்தை வறட்சிப் பகுதி என்று அறிவிக்க வேண்டும். என்ற அடிப்படையில் அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழகம் முழுவதும் வறட்சிப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதனால் ஏதாவது செய்வார்கள்.

3. (அ)தலைவருக்குப் பாராட்டு

திரு. சு. முத்துகிருஷ்ணன் தலைவர் அவர்களே இந்த தொடர் கூட்டத்தைதாங்கள் சிறப்பாக நடத்தி தந்துள்ளதற்கு இந்தச் சமயத்தில் நான் எங்கள் பாராட்டுகளைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நன்றி, இது போல் தலைவரைப் பாராட்டுவது இருக்கட்டும். தொல்லை இல்லாது இருந்தால் சரி

4. உரிமைப் பிரச்சினைகள்.

(அ) வருவாய்த்துறை அமைச்சர் மீது தீர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நுழைவு வரி குறித்து நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்ட விவரங்கள் மற்றும் மாண்புமிகு நிதியமைச்சர் அவையில் கொடுத்த வாக்குறுதிகள் ஆகியவற்றிற்கு முரண்பாடாக மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் புதிய மசோதாவை சமர்ப்பித்துள்ளார்கள் என்றும் அவையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளைச் செயல் இழக்க வைப்பதோ அல்லது உறுதிமொழிகளுக்கு விரோதமாகச் செயல்படுவதோ அவையை அவமதிப்பதாகும் என்றும், எனவே வருவாய்த்துறை அமைச்சரின் செயல் அவை உரிமை மீறிய செயலாகும் என்றும் குறிப்பிட்டு பேரவை விதி 246—ன் கீழ் அவை உரிமை மீறல் பிரச்சினையை அவையில் எழுப்ப எனது இசைவை கேட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு ரகுமான்கான் அவர்கள் ஒரு முன்னறிவிப்பினை கொடுத்துள்ளார்கள்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேரவையின் 14–3–1983 அன்று நிதி அறிக்கையின் விவாதத்தில் பதிலுரையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்கள்—

[பேரவைத் தலைவர்] [1983 ஏப்ரல் 27

நாம் இங்கே மற்றவர்கள் எடுத்துச் சொன்ன காரணத்தி னாலும் அந்தப் பொருட்களிலே மண்ணெண்ணெய்க்கு விலக்கு அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சர்க்கரை என்ற தலைப்பின் கீழ் சர்க்கரை மிட்டாய், கன்பக்ஷனரிஸ் போன்றவற்றிற்கு மட்டும் விலக்கு அளிக்கப் படுகிறது. மின்சாரப் பொருள்கள் என்ற தலைப்பின் கீழ் பல்புகள், குழாய் விளக்குகள்வயர்கள் ஹால்டர்கள் பிளக்குகள், சுவிட்சுகள் போன்ற வீடுகளுக்கு எல்லாம் பயன்படுகிற அளவுக்கு இருக்கிற சிறு சிறு பொருட்களுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது. அதனுடைய முழு விவரமும் பின்னாலே அறிவிக்கப்படும். மருந்து பொருட்களும் மருந்து வகைகளும் என்ற தலைப்பின்கீழ் சித்த மருந்துகள், யுனானி மருந்துகள் ஆயுர்வேத மருந்துகள் அரிஷ்டம் அசவாசம் உட்பட நுழைவு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. துணி வகைகள் என்ற தலைப்பின்சீழ் கைத்தறித் துணிகள், கைத்தறிப் பட்டுத் துணி வகைகள் கதர் வகைகள் ஆகியவற்றிற்கு விலக்கு அளிக்கப்படுகிறது. அதை நடைமுறைப்படுத்தும் விதம் பின்னர் அறிவிக்கப்படும். நுழைவு வரியைப் பொறுத்த வரையில் பல பேர்களும் ஐயப்பாடுகளை வியாபாரிகளும் மற்றவர்களும் கிளப்பி இருக்கிறார்கள். இந்த நுழைவு வரி 16 நகராட்சி மன்றங்களிலே நுழையும் போது போடுகிற போது பல முறைகள் ஒவ்வொரு இடத்திலேயும் 2 சதவிகிதம் என்று போட்டு மல்டிபாயிண்ட் வரியாகி 8 சதவீதம் 9 சதவீதம் ஆகி விடுமோ என்று சொல்கிறார்கள் ஆகவே திட்டவமாக தெளிவாக ஐயப்பாடுகளைப் போக்க விரும்புகிறேன் இந்த நுழைவு வரி 2 என்பது ஏதேனும் ஒரு கட்டத்தில் மட்டும் ஒரு இடத்தில் மட்டும் போடப்படும் அதற்கான விதிமுறைகளும் மற்றவை களும் வகுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எவ்வளவு குறைந்தாலும் தாங்க வேண்டும் இன்னமும் சொல்கிறேன் வியாபாரிகளும் மற்றவர்களும் முக்கியமான சிலவற்றை இன்றியமையாப் பொருட்கள் என்று கருதி ஏழை எளியவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சொன்னாலுங்கூட பேச்சுவார்த்தை நடத்தி சிலபல நன்மைகளைச் சிந்திப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவைகள் பேரவையின் உறுதிமொழிகளானாலும் அரசின் நிதிக் கொள்கை அறிவிப்புகள் ஆகும். மேலும் இவ்வறிவிப்புகள் வரிவிதிப்புக் கொள்கைகள் பற்றியதாகும். கொள்கைகள் அவையில் வெளியிட்டபின் அரசு மசோதாக்கள் அல்லது சட்டமுன்வடிவுகள் அறிவித்த கொள்கைகளுக்கேற்பத்தான் அமைய வேண்டும். கொள்கைகளில் ஏதேனும் மாற்றம் இருந்தால் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்வதற்கு முன் பேரவைக்கு அறிவித்து மாற்றம் செய்வதே நல்ல பாராளு மன்ற முறையாகும்.



[1983 ஏப்ரல் 27 [பேரவைத் தலைவர்]

உறுப்பினர் விழிப்புணர்ச்சியை பாராட்டலாம், நேற்று இது குறித்து உறுப்பினர் எழுப்ப முயன்றபோது பேரவை முன்னவர்தான் அவையில் கூறிய எல்லா கொள்கை அறிவிப்பின் அடிப்படையில் அரசு திருத்தங்கள் கொண்டு வரப்படும் என்று கூறியதும் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

அரசு கொள்கையை எப்பொழுது வேண்டுமானாலும் மாற்றிக்கொள்ள உரிமை உண்டு. இதில் அவை மீறல் ஒன்றுமில்லை. ஏனென்றால் சட்டமுன்வடிவு பேரவையின் அனுமதியைப் பெற்றுத்தான் சட்டமாக முடியும். எனவே இதன் மீதான இறுதி முடிவு பேரவையின் கையில்தான் உள்ளது.

எனவே, இதில் எவ்வித உரிமை மீறல் பிரச்சினையும் எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

(ஆ) திரு. எம்.கே. சீனிவாசன் மீதும் எதிரொலி நாளிதழ் மீதும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்சென்னை 21–4–1983 எதிரொலி நாளிதழில் சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்த அறிவிப்பு களை சட்டமன்ற செயலாளர் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கவில்லை என்று அதற்கு ஒரு உள்நோக்கத்தினையும் கற்பித்து திரு எம் கே சீனிவாசன் போலீசிற்கும், சபாநாய கருக்கும் புகார் செய்துள்ளதாக செய்தி வெளியிட்டுள்ளது எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

பேரவையில் அறிவிப்புகள் அனுமதிப்பதும், மறுப்பதும் பேரவைத் தலைவர் ஆணையின்மீது நடைபெறுகிறதேயன்றி செயலாளரின் விருப்பு வெறுப்பிற்கேற்ப அல்ல. The Secretary is the adviser to the Speaker in the matter of exercise of all the powers and functions that belong to the Speaker and to the House through the Speaker He acts under the authoriny and in the name of the Speaker but does not act under delegated authority மேலும் இந்த அறிவிப்புகள் எல்லாம் நேரடியாக என்னால் ஆணைகள் இடப்பட்டவை.

உறுப்பினர்களுக்குள்ள உரிமை செயலாளருக்குப் பொருந் தாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறு மட்டுமல்ல அது ஒரு உள்நோக்குடன் அவர்கள் தங்கள்கடமைகளைச் செவ்வனே செய்வதற்கு இடையூறாக அமைகின்றது. உறுப்பினர்களுக்குள்ள எல்லா உரிமைகளும் செயலாளருக்கு மட்டுமன்றி பேரவையில் பணிபுரியும் ஒவ்வொரு அலுவலருக்கும் பேரவையின் பணியிலோ கடமையிலோ ஈடுபட்டிருக்கும் பொழுது முழுமையாகப் பொருந்தும் அவ்வாறில்லை விடில் இந்த அவையின் பணிகள் செவ்வனே நடைபெறாது என்பதுதான் அடிப்படை. அதே அடிப்படையில் தான் பேரவைச் செயலகத்தை பற்றி பேரவையில் விவாதிக்கக் கூடாது என்ற மரபு கையாளப் படுகிறது.

நேர்முகமாகவின்றிமறைமுகமாக அவர்களது பணி இடையூறு செய்யப்பட்டாலும் அவை நடவடிக்கை எடுக்கும்,

Maay Parlimentary Practic 155வது பக்கத்தில் பின்வருமாறு உள்ளது.

Both House will treat as breaches of their Privillege, not onlyacts directly tending to obstruct their officers in excution of their duty but also any conduct which may tend to deter them from doing their duty,

இந்த வெளியீட்டிற்குக் காரணமான திரு. சீனிவாசனும் இதை வெளியிட்ட நாளிதழ் எதிரொலியும் இப்பிரச்சினைக்கு பொறுப்பாவார்கள். எனவே இவர்கள் மீதுள்ள பிரச்னையை ஆய்ந்து அறிக்கையை பேரவைக்கு அனுப்பி வைப்பதற்காக பேரவை விதி 255ன் கீழ் உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்.

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே எதிரொலி பத்திரிகையின் மீதும், மற்றவை மீதும் கொடுக்கப்பெற்ற உரிமைப் பிரச்சினையை எடுத்துக் கொண்டீர்கள். ஆனால் நான் 'அண்ணா' பத்திரிகையின்மீது கொடுத்த உரிமைப் பிரச்சினையை ஏன் எடுத்துக் கொள்ளவில்லை,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் உரிமைப் பிரச்சினையாகக் கொடுக்கவில்லை. (குறுக்கீடு) அது என்னவென்று பார்க்கிறேன்

5. அறிவிப்புகள்

(அ) அரசினர் சட்ட முன்வடிவுகள் (மே. செ)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவுகள் ஆய்வு செய்யப்பெற்று பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப்பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1983. ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 30 1983)
2. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 2/1983)
3. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கைவரிஇரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 6/1983)
4. தமிழ்நாடு 1983—ஆம் ஆண்டு விளம்பர வரிச்சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 28/1983)



6. கவன ஈர்ப்புகள்

(அ) காவேரிப்பட்டணம் மேல்நிலைப் பள்ளியைப் பழுதுபார்த்தல்

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திலுள்ள காவேரிப்பட்டணம் அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் பெண்கள் உயர்நிலைபள்ளிக் கட்டிடம் பழுதடைந்த நிலையில் உள்ளது குறித்து அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, தருமபுரி மாவட்டம், காவேரிப்பட்டணம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியும், அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளியும் ஒரே கட்டடத்தில் நடைபெற்று வருகின்றன. ஆண்கள் மேல் நிலைப்பள்ளியில் 1974 மாணவர்கள் 42 பிரிவுகளில் படித்து வருகிறார்கள். பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் 920மாணவிகள் 19 பிரிவுகளில் படித்து வருகிறார்கள். ஆண்கள் மேல் நிலைப்பள்ளிக்குச் சொந்தமான 9 வகுப்பறைகள் கொண்ட ஒரு கட்டடத்திற்கு பூச்சு வேலை செய்ய வேண்டியுள்ளது என்றும், கற்காரைதளம் அமைத்த மூன்று வகுப்பறைகள் கொண்டகட்டடம் ஒன்றுசிறிது ஒழுகுவதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை பழுது பார்க்க பொதுப்பணித்துறையினர் மூலம் தகுந்தநடவடிக்கை எடுக்கப்படும் என்று பள்ளி கல்வி இயக்குநர் அறிவித்துள்ளார். இதுவன்றி பள்ளிக்கூடம் நடத்த முடியாமல் கட்டடம் பழுதடைந்து இடிந்து விழுந்து விடும் நிலையில் இருப்பதாகவோ ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகளிடையே கவலை நிலவும் நிலை உள்ளதாகவோ தகவல் ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள நிலை இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 10-20)

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே அறிக்கை கொடுக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் உண்மையிலே நான் சென்றபோது கூட ஒரு பாம்பு மேல் ஓட்டிலிருந்து கீழே விழுந்து அங்கேயிருந்த ஆசிரியர்கள் குழந்தைகள் எல்லாம் வெளியிலே வந்துவிடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. அங்கே ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்திலேயிருந்துதான் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு கொஞ்சம் கட்டிடம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. அந்த இடத்திலே முழுமையாவே மேலே இருக்கின்ற ஓடுகள் சிதைந்தும், கூரைகள் எல்லாம் தகர்த்தப்

பட்டிருக்கின்றன. ஆகவே தயவு செய்து இவைகளை உடனடியாக பழுது பார்த்து அதைச் சீர்திருத்துவதற்கு உரிய வழிவகைகளை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்,

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஆ) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை யிலுள்ள குறைபாடுகளை நீக்குவது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர்கள் எம். ஆறுமுகம், ஏ டி. குலசேகர் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு எம். ஆறுமுகம்:** துணைத் தலைவர் அவர்களே' ''கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், இந்திய மருத்துவ கவுன்சில் குறிப்பிட்டுள்ள குறைபாடுகள் நீக்கப்பெறாததால் அக் கல்லூரியின் அங்கீகாரம் ரத்தாகும் அபாயம் குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மருத்துவக் கல்லூரியை இந்திய மருத்துவக் குழுவின் ஆய்வாளர்கள் ஆய்வு செய்து, ஆய்வு அறிக்கை ஒன்றை கொடுத்துள்ளார்கள். அந்த ஆய்வு அறிக்கையில் மருத்துவக் கல்லூரி மற்றும் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள சில துறைகளை ஆய்வு செய்து அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அவ்வறிக்கையில் சில குறைபாடுகளும் அவற்றை நிறைவு செய்வதற்கான யோசனை களும் கூறப்பட்டுள்ளன. குறைபாடுகளை நீக்குவதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அக்குறைகளை நீக்குவதற்கு அரசு ஆவன செய்யும்.

எனவே, கோவை மருத்துவக் கல்லூரிக்கு உள்ள அங்கீகாரம் ரத்தாகும் அபாயம் ஏதுமில்லை.

**திரு. ஏ. டி. குலசேகர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய மருத்துவக்கவுன்சில் கோயம்புத்தூர் மருத்துவமனைக்கு அங்கீகாரம் தர மறுப்பதாக நாங்கள் கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். அங்கே கோவை மருத்துவ மனைக் கல்லூரி மருத்துவ மனையிலே இருதயப் பிரிவிலே இருதய நோயாளி



களுக்கான இ. சி. ஜி. மெசின் வேலை செய்வதில்லை. அதை யொட்டி அங்கே அறுவைச் சிகிச்சை செய்வதற்காக உள்ள தியேட்டரில் சிலிண்டர்கள் மற்றும் உள்ள தண்ணீர் வசதி, மின்சார வசதி இல்லாமல் இருப்பதால் பெரிய அறுவைச் சிகிச்சைகள் தவிர்க்கப்படுகின்றன. இதன் காரணமாகவும் அங்கே உள்ள மருத்துவமனை மிகவும் அசுத்தமான நிலையிலே இருக்கின்ற காரணத்தாலும், மேலும் போஸ்ட்-கிராஜுவேட் எம் டி.,எம்.எஸ்.,டி.ஜி.ஓ. போன்ற கோர்ஸ்கள் ஆரம்பித்த காரணத்தால், இங்கே 2ஆண்டுகாலம் கௌரவமாக பணியாற்றிய மருத்துவர்கள் எல்லாம் சரிவர அங்கே வராத காரணத்தாலும் எக்ஸ்ரே மெசின் ஆறு மாதக் காலம்பிலிம் இல்லாததினால் அங்கே எக்ஸ்ரேக்கள் எடுக்கப்படவில்லை. அவசரமாக ஆக்சிடென்ட் ஏற்பட்டு வருகின்றநோயாளிகளுக்குமட்டும்அங்கே எடுக்கிறார்கள். மற்றபடி பொதுவாக வருகின்ற நோயாளிகளுக்கு எக்ஸ்ரேக்கள் எடுப்பது இல்லை. அதேபோன்று படுக்கைகள் மிகவும் பற்றாக் குறையாக இருக்கிறது. எனவே மருத்துவமனைக்கு வருகின்ற நோயாளிகள் சாகின்ற நிலைமையில் இருந்தால்தான் அங்கே அவர்கள் அனுமதிக்கப்படுகின்ற ஒரு நிலையிருக்கிறது. எனவே இதையெல்லாம் அனுசரித்துத்தான் இந்திய மருத்துவக் கவுன்சில் அங்கீகாரத்தை ரத்து செய்வதற்கு, இருக்கிறது. எனவே இந்தக் குறைகளைப் போக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச், வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானம் என்பது இந்தியன் மெடிக்கல் கவுன்சில் என்ன குறைபாடுகளைச் சொல்லியிருக்கிறது. அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா என்பதை கேட்டிருந்தால் நான் தெளிவாக பதில் சொல்லி யிருப்பேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த மருத்துவ மனையில் தனியாக ஏற்படுகின்ற தொல்லைகள், சங்கடங்கள், அங்கே உள்ள சில குறைபாடுகள் எல்லாவற்றையும் ஒரு பட்டியலாகச் சொல்லி இருக்கிறார்கள். அதிலே எந்த அளவிற்கு நாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைகளாக இருக்கின்றன, ஏற்றுக்கொள்ள முடியாத குறைகளாக இருக்கின்றன என்று தெளிவாக ஒரு பெரிய பதில் சொல்லவேண்டியிருக்கிறது. ஆகவே அந்த விவரத்திற்குள் நுழையாமல் இந்தியன் மெடிக்கல் கவுன்சில் சொல்லியிருக்கின்ற கருத்து என்னவென்றால், வேறு ஏதாவது குறைகள் இருக்குமானால் பலமுறை சொல்லியிருக்கிறார்கள், நான் போய் சோத்னை செய்திருக்கிறேன், பார்த்திருக்கிறேன். அங்கே நோயாளிகள் பல பேர்கள் அனுமதிக்கப்பட்டிருக் கிறார்கள். அங்கேயிருக்கும் பிரச்சினை என்னவென்று சொன்னால் சாதாரண நோய் என்று இருந்தால் கூட அனுமதிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்துவதுதான். சீரியஸ் நோய் என்று இருந்து, அவர்கள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்க வேண்டும் என்ற நிலைஇருந்து, அவர்கள் அனுமதிக்கப்படவேண்டும் என்று

சொன்னால் பிரச்னை வராது எல்லோரும் அனுமதிக்கப்பட வேண்டும் என்று கோருகிறார்கள் அதற்குப் பலபேரிடமிருந்து சிபார்சு பெற்று வருகிறார்கள். அப்படி பலர் சிபார்சு செய்கிற நேரத்தில்எல்லோரும் அனுமதிக்க வேண்டும் என்ற வற்புறுத்தலும் ஏற்படுகிறது. ஆகவே, அந்தப் பிரச்னைகளுக்குள் எல்லாம் நான் நுழையாமல் அந்த கவுன்சில் சொல்லி இருக்கிற கருத்துக்களை மட்டும் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அவர்கள் ஆப்பரேஷன் தியேட்டர் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அங்கே ஒன்று—இரண்டு ஆபரேஷ தியேட்டர் இருப்பதாக யாரும் கருதிவிடக் கூடாது. அங்கே பத்து ஆபரேஷன் தியேட்டர்கள் இருக்கின்றன. அந்த மெடிகல் கவுன்சில் சொல்லியிருப்பது—அந்த ஆபரேஷன் தியேட்டர்கள் ஏர் கன்டிஷன் செய்யப்படவில்லை. அந்த ஆபரேஷன் தியேட்டர் இரண்டு மூன்று டிப்பார்ட்மென்ட்டுகள் பங்கிட்டுக்கொள்கின்றன. E.N.T. and Opthalmology Departments are sharing the same operation theatre which has to be separated. They want a separate operation theatre for Obstcterics and gynaecology. இவைகளையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குறைபாடுகளை எல்லாம் உடனடியாக கவனித்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளச் சொல்லியிருக்கிறோம்.

இன்னொன்றையும் சொல்கிறேன். நம்முடைய இந்தியாவிலே பல்வேறு மருத்துவ மனைகள் இருக்கின்றன. கல்லூரிகளோடு இணைக்கப்பட்ட மருத்துவ மனைகள் இருக்கின்றன. அந்தப் பட்டியலைப் பார்க்கிறபோது, இது தரமான மருத்துவமனை என்ற தகுதியோடுதான் இருக்கிறது. இந்திய மருத்துவக் கவுன்சில் குறைபாடுகள் சொல்வதால் நமக்கு நல்லதுதான். அதிலே ஒன்றும் தவறு இல்லை. அவர்கள் அதை இன்ஸ்பெக்ஷன் செய்து அந்தக் குறைபாடுகளைச் சொன்னதன் மூலம் நாம் அவைகளை நிவர்த்தி செய்து அதை சீர்செய்ய முடியும். அதனால் ஒன்றும் பாதகம் இல்லை.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது இந்திய மெடிகல் கவுன்சில் அந்தக் கல்லூரியில் உள்ள சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியிருப்பதாக சொன்னார்கள். அதிலே சொல்லியிருப்பது—குறிப்பாக—ஆபரேஷன் தியேட்டர் ஏர்-கன்டிஷன் செய்யப்படவில்லை; ஒவ்வொரு துறைக்கும் தனித்தனி ஆபரேஷன் தியேட்டர் இல்லை. என்று சொல்லி இருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, அந்த மெடிகல் கவுன்சில் சுட்டிக்காட்டிய குறைபாடுகளின் அடிப்படையில், அந்த ஆபரேஷன் தியேட்டர்கள் ஏர்-கன்டிஷன் செய்யப்பட்டு விட்டனவா, ஒவ்வொரு துறைக்கும் என்று தனித்தனி ஆபரேஷன் தியேட்டர் கட்டப்பட்டு விட்டதா? இல்லையெனில் அவற்றைச் செய்வதற்கு அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்குமா? அதற்காக ஒதுக்கிய தொகை எவ்வளவு? தற்போது வேலைகள் ஏதேனும் நடைபெற்று வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நவம்பர் 1982-ல் தான் அவர்கள் பார்வையிட்டு இரண்டு மாதத்திற்குப் பிறகு அறிக்கை கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே, அதற்குப் பிறகு தான் அதற்கான மதிப்பீடுகள் தயாரித்து, அதைச் செய்ய முடியும். அவர்கள் அனுப்பிய பரிந்துரைகளின் அடிப்படையில் தக்க நடவடிக்கைகள் உடனடியாக எடுத்துக்கொள்ளப்படும் என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 7. அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) நுழைவு வரி விதிக்கும் சட்டமுன்வடிவு 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு உள்ளூர்ப் பகுதிகளில் நுகர்தலுக்காக, பயன்படுத்தலுக்காக, விற்பனை செய்வதற்காக வரும் சரக்குகள் மீது நுழைவு வரி விதிக்கும் சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.34/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில், மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு உள்ளூர்ப் பகுதி வில் நுகர்தலுக்காக, பயன்படுத்துதலுக்காக, விற்பனை செய்வதற்காக வரும் சரக்குகள் மீது நுழைவு வரி விதிக்கும் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 34/1983).... சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைக் கொண்ட ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பெற வேண்டும்."

திரு. என். சங்கரய்யா: துணைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திருத்தத்தை வழிமொழிகிறேன்.

---

*1983-ம் ஆண்டு ஏப்ரல் 21-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பற்றுள்ளது.

(முற்பகல் 10–30)

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலேஇருக்கின்றமிகப்பெரும்பாலான மக்களாலே வணிகர்களாலே, தொழில் துறையில் இருக்கின்றவர்களாலே மிகக் கடுமையாக எதிர்க்கப்பட்ட நுழைவு வரி இன்றைக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் இதற்கு முன்னாலே ஒரு வரி இந்த மாதிரி கடுமையாக மக்களாலே கண்டிக்கப்பட்டிருக்கிறதா என்று நான் எண்ணிப் பார்க்கிறேன். எனக்குத் தெரிந்த வரையில் இதைப் போன்று கண்டனத்திற்குரிய வரி இதற்கு முன்னாலே இங்கே விதிக்கப்படவில்லை. இன்றைக்குக் காலையிலே கூட செய்தி ஏடுகளில் பார்த்தேன். தமிழ்நாட்டில் இருக்கிற வணிகர்கள் எல்லாம் இந்த நுழைவு வரிக்கு ஏற்கெனவே கடைகள், தொழில் நிறுவனங்களை மூடி கண்டனம் தெரிவித்திருந்தாலும் வரும் காலத்தில் 3 நாட்களுக்கு கடைகளையும் தொழில் நிறுவனங்களையும் மூடி அதன் மூலம் மக்கள் படுகின்ற இன்னலை எடுத்துச் சொல்ல இருக்கிறார்கள்.

இந்த நுழைவு வரியைப் பொறுத்தவரையில் இந்த சட்ட மன்றத்திலே எதிர் வரிசையில் இருக்கிற அத்தனை எதிர்க் கட்சி உறுப்பினர்களும் திருத்தம் கொடுத்திருக்கிறோம்! கண்டனம் தெரிவித்திருக்கிறோம். இந்த நுழைவு வரியை தமிழ்நாட்டில் நுழையவிடக்கூடாது என்று பல்வேறு காலகட்டங்களில் சொல்லியிருக்கிறோம். தமிழகஅரசைப் பொறுத்தவரையில் இந்த வணிக வரி என்பதன் மூலம் தமிழக வருவாயில் நிரம்பக் கிடைக்கிறது. ஏறத்தாழ இந்த ஆண்டு கணக்கை எடுத்துக் கொண்டால் 750 கோடி ரூபாய்க்குமேல் வருவாய் கிடைக்கிற ''தங்க முட்டையிடுகிற பொன் வாத்தாக'' இருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

மாற்றுத் தலைவரவர்களே, நான் உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் தங்க முட்டையிடுகின்ற இந்த பொன் வாத்தை அறுத்து விடாதீர்கள், நிறைய தங்க முட்டை இருக்கும் என்று நினைத்து பொன்வாத்தை அறுத்தால் எப்படி இருக்குமோ அதைப்போன்று தான் அரசின் எண்ணத்திற்கு மாறான பலனை இந்த வரி தோற்றுவிக்கும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அதிலும் இந்த நுழைவு வரி என்பது சில பல இனங்களை குறிப்பிட்டு, 10 அல்லது 15 இனங்களுக்குத்தான் போடப் படுகிறது என்று சொன்னாலும் கூட பல்வேறு இனங்களைப் பார்க்கும்போது, அவற்றிலே, நூற்றுக்கணக்கான, ஆயிரக் கணக்கான பிரிவுகள் இருப்பதை எங்களால் பார்க்க முடிகிறது. அந்தப் பிரிவுகளுக்கும் இந்த வரி பொருந்துவதாக இருக்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் பெட்ரோலியம் பொருள் என்று எடுத்துக்கொண்டால் அதிலே நூற்றுக்கணக்கான பொருள் இருக்கிறது. புகையிலை, ஜவுளி வகைகள் என்று





எடுத்துக்கொண்டால், அதிலும் நூற்றுக்கணக்கான பொருள் இருக்கிறது. ஆக மாண்புமிகு அமைச்சர் அவர்களாலே சர்க்கரை வனஸ்பதி, ஜவுளி வகைகள், சிமெண்ட், பெட்ரோலியப் பொருள்கள், காகிதமும் காகித அட்டைகளும், மருந்துப் பொருள்களும், மருந்து வகைகளும், மின்சாரப் பொருள்கள், மோட்டார் வாகனங்கள், இரும்பும் எஃகும், வெட்டி எடுத்த கனிப்பொருள்கள். நிலக்கரி போன்ற பொருள்களுக்குத்தான் இந்த வரி என்று சொல்லப்பட்டாலும் அவற்றின் பிரிவுகளைப் பார்க்கும் போது ஆயிரக்கணக்கான பொருள்களுக்கு இந்த வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஏற்கெனவே பல்வேறு மாநிலங்களிலே இந்த வரி விதிக்கப் பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல். வார்கள். பல்வேறு மாநிலங்களில் இது போடப்பட்டிருந்தாலும் கூட அந்தந்த உள்ளாட்சிகளுக்கு வருவாய் கிடைக்கின்ற 'அக்ட்ராய்' என்ற வகையில்தான் மற்ற மாநிலங்களில் இருக்கிறது. நம்முடைய அரசு இந்த வரியை குறிப்பாக நகராட்சி, மாநகராட்சிகளில் கணக்கிட்டு, அவை மூலம் போடுவதாக இருந்தாலும் ஏற்கெனவே இருக்கிற விலைவாசி உயர்வால் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அது மட்டு மல்லாமல் இன்றைக்கு வறட்சியால், பற்றாக்குறையால் மக்கள் அல்லல்படும்போது இந்த வரி அவர்கள்மீது வைக்கிற இன்னொரு சுமை என்று குறிப்பிட விரும்புகிறேன். அது மட்டும் அல்ல, இந்த வரி விதிப்பிலாலே, நகர எல்லைகளில் சோதனைச் சாவடிகள் நிறுவப்பட மாட்டாது என்று அறிவிக்கப்பட்டிருந் தாலுங்கூட, நாளடைவிலே வரி வசூலை ஒழுங்குபடுத்துவதற்காக அதற்கென தனியாக சோதனைச் சாவடிகளை ஏற்படுத்தப்பட வேண்டிய கட்டாயம் வரும். அந்தச் சோதனைச் சாவடிகளில் பேருந்துகள் மாத்திரம் என்றில்லாமல், தனியார் வாகனங்களில் வரும் பயணிகளும், இந்தச் சோதனைச் சாவடிகளில் நிறுத்தப் படுவதன் விளைவாக வீணான சிரமத்திற்கும், கால தாமதத்திற்கும் உள்ளாக்கப்படுவார்கள் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். அன்னிய நாடுகளிலிருந்து நமது நாட்டுக்கு வரும், இந்தியர்களுக்கும், மற்றும் அன்னிய சுற்றுலாப் பயணி களுக்கும் நமது சோதனைச் சுங்கச் சாவடிகளிலே, ஏற்படும் இன்னல்களைப் போலவே, இதனாலும் மக்களுக்கு இன்னல் ஏற்படும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல, நுழைவு வரி சோதனைச் சாவடிகளினால் நெடுஞ்சாலைகளிலே சரக்கு போக்குவரத்து வாகனங்கள் நிறுத்தப்படுவதினாலே எரிபொருள் வீணாகிறது, என்பது மட்டும் அல்ல, இதனால் ஏற்படும் செலவு என்பது 80 ஆயிரம் போக்குவரத்து வாகனங்கள் செயலற்று நிறுத்துவதற்கு ஒவ்வியது என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாறு எரிபொருள் வீணாவதுடன், நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து இடைஞ்சல் களும் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இவை எல்லாவற்றையும்விட இந்த நுழைவு வரியினாலே, லஞ்ச ஊழல்கள் பெருக இடம் இருக்கிறது.

அரசினர் எதிர் பார்க்கின்ற. வரி 20 கோடி என்று சொன்னாலும் கூட, நான் எண்ணிப் பார்க்கிறேன். அது 70 அல்லது 80 கோடி ரூபாய்க்கு மேலேபோனாலும் போகலாம் என்று. அப்படி அரசுக்கு வருவாய் அதிகமாக வந்துகொண்டிருக்கிற இந்த நேரத்திலும் கூட, இந்த வரி தவிர்க்கப்படுகிற காரணத் தாலே, நீக்கப்படுகிற காரணத்தாலே, அரசாங்கத்திற்கு வரி இழப்பு ஏற்படுவதற்கான இன்னொரு சாத்தியக்கூறும் ஏற்படுகிறது ஆகையினால் லஞ்சமும் ஊழலும், பெருகு தற்கு இந்த நுழைவு வரி வாய்ப்பாக இருக்கும் என்று இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன். அந்த வரி விதிப்பினாலே தொழிற்சாலைகளிலே உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களின் விற்பனை மற்ற மாநிலங்களோடு போட்டியிட்டு விற்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு, நம்முடைய மாநிலத்திலேதொழில்கள் பாதிக்கக்கூடிய ஒரு நிலையும் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

நுழைவு வரியைப் பொறுத்த அளவிலே உலகெங்கும் உள்ள பொருளாதார மற்றும் வரிவிதிப்பு நிபுணர்களால் தீவிரமாக விவாதிக்கப்பெற்று, அது நாட்டுக்கு ஒவ்வாது என்று பல்வேறு கால கட்டங்களில் அது கைவிடப்பட்டது என்பதையும், இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நுழைவு வரி ஒரு பிற்போக்கான வரி என்றும், அதை மாநிலங்கள் ரத்து செய்து விட வேண்டும் என்றும் பாரதப் பிரதமர் அவர்கள் கூட ஒரு முறை சொன்னதாகவும், அதற்குப் பிறகு மேதகு சுகாதியா தலைமையிலே அமைக்கப்பட்டிருந்த குழு கூட, ஒரு சமயத்திலே இது பற்றிய விவரங்கள் தெரிவித்திருப்பதாக நான் எண்ணிப் பார்க்கிறேன். வரிகள் கட்டணங்கள் சம்பந்தமாக ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க மைய அரசு நியமித்த எல்.கே.ஜா குழுவும், நுழைவு வரியை ஒழித்துவிட வேண்டும் என்று வலியுறுத்தியதாக நான் கருதுகிறேன்.

இவை எல்லாவற்றையும் விட, அந்த வரியை வசூலிப்பதிலே ஒரு ரூபாய்க்கு 82 காசு செலவு ஆகும் என்று முன்னாள் மைய ராஜாங்க கப்பல் அமைச்சர் திரு. பூட்டாசிங் அவர்கள் ஒரு முறை தெரிவித்திருக்கிறார்கள். அவர் பாராளுமன்றத்திலே பேசுகிறபோது, நாட்டிலே நுழைவு வரி சோதனைச் சாவடிகளை அகற்றி விட்டால், நாட்டிலே பெட்ரோல், டீசல் உபயோகம் 10 சதவீதம் குறையும் என்றும், அதன் மூலமாக 236 கோடி ரூபாய் அன்னிய செலாவணி மிச்சமாகும் என்றும் ஒரு முறை கூறியதாக கூட நான் எண்ணிப் பார்க்கிறேன். ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது எல்லாம், இந்த நுழைவு வரிகளை பல்வேறு இனங்களுக்கு வைத்திருப்பதாலே பணக்காரர்களுக்கு மட்டும் அல்ல, நடுத்தர மக்கள், இன்னும் சமுதாயத்தில் பொருளாதார துறையில் அடித்தளத்தில் இருக்கும் மக்கள் கூட பாதிக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது.





உதாரணமாக மருந்து பொருள்களுக்கு, இந்த நுழைவு வரி போடப்படுகிறது. மருந்து உற்பத்தியை எடுத்துக் கொண்டால், 1974 ஆம் ஆண்டு வரை அது பலமுனை வரியாக இருந்து 74 ஆம் ஆண்டுக்கு பின்னாலே ஒரு முனை வரியாக 8 சதவீதமாக விதிக்கப்பட்டது என்று நான் அறிகிறேன். அதற்கு மேலேயும் கூட 5 சதவீதம் சர்-சார்ஜும், அதற்கும், மேலே 5 சதவீதம் அடிஷனல் சர்சார்ஜும், அதற்கு மேலேயும் கூட அடிஷனல் டர்ன் ஓவர் டாக்ஸ் என்று சொல்லி, 3 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாக கொண்டு வந்து, ஒட்டு மொத்தமாக வியாபாரத் தொகை 3 லட்சத்திற்கு மேலே போனால் செலுத்த வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே, இப்படி ஏற்கெனவே மிகுந்த இடர்பாட்டுக்கு உட்பட்டிருக்கிற, அந்த மருந்துகளுக்கு அரசாங்கம்போட்டிருக்கிற வரிகளினாலே மேலும் விலையை அதிகரிப்பதோடு, அதனை உட்கொள்ளுகிற சாதாரண ஏழைநடுத்தர மக்களுக்கு அதனுடைய விலை அதிகமாக போகிற காரணத்தாலே, இந்த வரி வசதியானவர்களை மட்டும் அல்ல, சாதாரண மக்களையும் பாதிக்க இருக்கிறது என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல, அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் வரி விதிக்கின்ற நேரத்திலே தமிழகம் முழுவதற்கும் ஒட்டு மொத்தமாக ஒரே மாதிரியாக இருக்கவேண்டுமே தவிர, ஒரு சில நகராட்சிகளுக்கு அல்லது மாநகராட்சிகளுக்கு என்று விதிப்பது தவறு. அது மட்டும் அல்லாமல், இந்த வரியே, மாநகராட்சிகளும், நகராட்சிகளும் மட்டுமே விதிக்க வேண்டிய வரிகளே தவிர, அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், அந்த வரி விதிப்பு சரிதானா என்ற கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன்.

(முற்பகல் 10 40)

அது மட்டும் அல்ல, இந்தவரியை வசூலிக்கின்ற நேரத்திலே, சம்பந்தப்பட்ட வியாபாரி வரி ஏதாவது பாக்கி வைத்திருந்தால், அந்த வியாபாரி வரி செலுத்தவில்லை என்று சொன்னால், அவருக்கு யார் பணம் கொடுக்க வேண்டுமோ, அவரிடம் இருந்து வசூல் செய்யலாம் என்ற ஒரு பகுதி கூட அந்த வரி விதிப்பின் மூலமாக ஏற்பட்டிருப்பதாக நான் பார்க்கிறேன். இது எந்தக் காலத்திலேயாவது சரியாக இருக்குமா? வணிக வரியைப் பொறுத்த அளவிலே கூட, இதற்கு முன்னாலே வணிக வரி பாக்கியாக இருந்தால் கூட, இப்படி வசூலிக்கின்ற முறை இல்லை என்றுதான் நான் கருதுகிறேன். அப்படி இருக்கிற போது, இந்தத் துறைக்கு மட்டும் அது எப்படி பொருத்தமாக இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. அதிலும் கூட இந்த வரி விதிப்பிலிருந்து மேல் முறையீடு செய்கிற நேரத்தில் அப்பலேட் அதிகாரிக்கு மேல்முறையீட்டு அதிகாரிக்கு 30 நாட்களுக்குள்ளாகவே அவர்கள் மேல் முறையீடு செய்ய வேண்டும் என்று இதில் போடப்பட்டிருக்கிறது. வணிக வரி

பற்றி பல்வேறு கால கட்டங்களில் பேசுகிறபோது இந்த மேல்
முறையீடு முறையே தேவை இல்லை. ஏன் என்று சொன்னால்
கீழே இருக்கக்கூடிய ஒரு அதிகாரி போடுகின்ற வரியை சரி
என்று சொல்வதற்கு மேலே ஒரு அதிகாரி தேவை இல்லை.
ஆகவே மேல்முறையீட்டைப் பொறுத்த அளவில் டிரிபுனல்
என்று சொல்லுகின்ற நடுவர் மன்றத்திற்கு விடுவது வியாபாரி
களைப் பொறுத்த அளவில் மக்களைப் பொறுத்தவரையில்
தொல்லைகளை குறைப்பதோடு விரைவில் அவர்களுக்கு
நிவாரணம் கிடைப்பதற்கு வழியாக இருக்கும். ஆகவே இந்த
வரியை பொறுத்த அளவில் இதற்கு முன்னால் சொல்லப்பட்ட
பல்வேறு காரணங்களையும் வாதங்களையும் ஏற்றுக்கொள்ள
வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்
கிறேன். அமைச்சர் அவர்கள் ஏனைய மாநிலங்களில்இருக்கின்றன
என்ற ஒரு காரணத்தை திரும்ப திரும்ப சொல்வார் என்று
நான் கருதுகிறேன். ஏனைய மாநிலங்களில் இருந்தாலும் கூட
தமிழகத்தைப் பொறுத்த வரையில் இதுவரை இந்த வரி
இல்லாமல் இருந்தது. ஆகவே வருகின்ற காலத்திலும் இந்த வரி
இல்லாமல் ஆட்சி செய்யக்கூடிய முறையை நாம் தொடரலாம்.

அது மட்டும் அல்ல, அரசாங்கத்திற்கு வரி தேவையாக
இருக்குமானால் நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்
அவர்கள் பேசுகிற நேரத்தில் ஒன்றைச் சொன்னார்கள்
சாராய கலவை ஆலையை பொறுத்த அளவில் இன்றைக்கு
தனியார் துறைக்கு கொடுத்து இருப்பதை விடுத்து அரசே
ஏற்றுக்கொள்ளுமானால் அரசாங்கத் துறையிலேயும், கூட்டுறவுத்
துறையிலேயும் அதை செயல்படுத்தப்படுமானால் அதன் மூலம்
வருகின்ற வரி இந்த நுழைவு வரி மூலமாக கிடைக்கின்ற வரியை
விட அதிகமான வரி கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது.
அதைப்போலவே அரசாங்கத்தின் வரி வசூல் செய்வதிலே
இன்றைக்கு இருப்பதைவிட அதிகமான அக்கறை காட்டப்
படுமானால் பறக்கும் படை போன்ற நிறுவனங்களை அரசு
இன்னும் கொஞ்சம் முனைப்பாகசெயல்படுமானால் வரி வசூலை
வியாபாரிகளிடமிருந்து பெறுவதிலே அரசு இன்னும் கொஞ்சம்
அதிக அக்கறை காட்டுமானால் அரசுக்கு கிடைக்கிற வரி,
கிடைக்கின்ற முறை இருக்கின்ற காரணத்தினால் இந்த நுழைவு
வரியை அரசு ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். இதற்கு முன்னால் நான் சொன்னதைப்போல இப்படி
ஒரு எதிர்ப்பு இருக்கிற காரணத்தினால் அரசு இதை பரிவுடன்
ஏற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு முன்னால் கூட நீதி
விசாரணைப்பற்றி பேசுகிற போது அன்றைக்கு எதிர் வரிசையில்
இருக்கின்ற அத்தனைக் கட்சித் தலைவர்களும் சொன்ன
கோரிக்கையை நமது முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு
சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற அரிசன பெண் இறப்பு
சம்பந்தமாக நீதி விசாரணைக்கு அவர்கள் உத்தரவிட்டார்கள்.
அதைப்போலவே இந்த நியாயமான ஒரு கோரிக்கையை





அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு இந்த நுழைவு வரியை
அவர்கள் திரும்பப் பெறவேண்டும் என்று இந்த நேரத்தில் நான்
கேட்டுக்கொள்கிறேன். அப்படி அந்த நுழைவு வரியை திரும்பப்
பெறுவதிலே அவர்களுக்குஏதாவது தயக்கம் இருக்குமானால் இதை
ஒரு பொறுக்கு குழுவினுடைய ஆய்வுக்கு விடவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். பொறுக்குக் குழுவில் இந்த மாமன்றத்தில்
இருக்கின்ற உறுப்பினர்களும் மேலவையில் இருக்கின்ற
உறுப்பினர்கள் எல்லாம் அங்கம் பெறச்செய்து அதை
கொஞ்சம் விரிவாக விசாரித்து சமுதாயத்தில் இருக்கின்ற
மக்கள், வணிகத்துறையில் இருக்கின்ற மக்கள் தொழில்
துறையில் இருக்கின்ற மக்கள், வரி செலுத்துகின்ற
அத்தனை பேருடைய எண்ணங்களையும் கருத்தில் கொண்டு
அதன் மூலமாக இந்த வரியை வசூலிப்பதா வேண்டாமா
என்பதை முடிவு செய்வது பொருத்தமாக இருக்கும் என்று
நான் கூறிக்கொண்டு இந்த நுழைவு வரியைப் பொறுத்த
வரையில் அரசு பிடிவாதமாக இதைப் போட்டுதான் ஆக
வேண்டும் என்ற நிலையில் இன்றைக்கு இல்லை. இன்னும்
கொஞ்சம் ஜனநாயக அமைப்போடு எதிர்க் கட்சியினுடைய
குரலுக்கு மரியாதை தெரிவிக்கின்ற வகையில் அமைச்சர்
அவர்கள் இதை கொஞ்சம் தீர ஆலோசித்து ஒன்று திரும்பப் பெற
வேண்டும் அல்லது திரும்பப் பெறுவதிலே சிக்கல் இருக்குமானால்
பொறுக்குக் குழுவினுடைய ஆய்வுக்குவிட வேண்டும் என்று
சொல்லி என்னுடைய திருத்தத்தை வலியுறுத்தி அமைகிறேன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,
பாயின்ட் ஆப் ஆர்டர். அதாவது அரசாங்கத்தினுடைய தரப்பி
லிருந்து ஏற்கனவே நிதியமைச்சர் அவர்கள் 2 சதவீதம்
போடலாம் என்று சொன்னார்கள். இப்போது 5 சதவீதம்
என்று மாற்றி இருக்கிறார்கள். இந்த அவையில் ஏற்கனவே
நிதியமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதிக்கு முரணானது
என்று தான் நண்பர் ரகுமான்கான் அவர்கள் இங்கே ஒரு
உரிமைப் பிரச்னை கொடுத்து மாண்புமிகு சபாநாயகர் அவர்கள்
கூட இது நியாயம்தான் என்று அவர்கள் தீர்ப்பு அளித்து
இருக்கிறார்கள். இப்போது இந்த பில்லை நாம் ஆய்வுக்கு
எடுத்துக்கொள்ளப் போகிறோம். இப்போது அரசுத் தரப்பில்
அதற்கு வேண்டிய அமென்டுமென்டு, திருத்தங்கள் தரப்பட்டு
இருக்கிறதா? திருத்தங்கள் தரப்பட்டால் தான் அதன்மீது நாம்
எழுந்து பேசலாம். அப்படி என்றால் ஏற்கனவே கொடுக்கப்பட்ட
பில்லின் மீது விவாதம் நடைபெறுமானால் சபாநாயகர் அவர்கள்
சொன்ன தீர்ப்புக்கு அமென்டுமென்டு கொடுத்து இருக்க
வேண்டும். இப்போது அதற்கு மதிப்பு இல்லாமல்போய்விடுகிறது.
சபைத் தலைவருடைய ஆணையை மதிக்காமல் அவையினுடைய
முன்னவராக இருக்கின்ற நிதியமைச்சர் அவர்கள் 2 சதவீதம்
என்று சொன்னதையும் மீறி இப்போது 5 சதவீதத்திலே நாம்
விவாதம் நடத்துவதா? அப்படி என்றால் சபாநாயகருடைய
தீர்ப்பு என்ன ஆவது. இதற்கு அரசு தரப்பிலிருந்து விளக்கங்கள்
தந்தால்தான் நாங்கள் பேசமுடியும். சபாநாயகர் அவர்கள்
சொல்லியதற்கு கவர்மெண்டு சைடில் அமெண்டுமென்டு

கொடுத்து இருக்கவேண்டும். அவர்கள் தீர்ப்பு கொடுத்து ஆகிவிட்டது. சர்க்கார் தரபபிலே கொடுக்கவில்லை. சபாநாயகருடைய ஆணையையே ஆளுங்கட்சியிலே மந்திரிகள் வரிசையிலே மதிக்கவில்லை என்ற நிலை உருவாகியிருக்கிறது. எனவே அதைத் தெரிந்துகொண்ட பிறகுதான் நாங்கள் இதைப் பற்றி பேசமுடியும். எனவே இதிலே தங்களுடைய தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே சட்ட முன்வடிவு கொண்டுவருகிறபோது not exceeding 5 per cent என்று இருக்கிறது. எப்போதும் பொதுவாக சட்ட முன்வடிவு கொண்டுவரப்படுகிற போது அதற்கு மேல் போகக்கூடாது என்று அரசு கொண்டுவருவதுதான் முறையாக இருக்கிறது. சில நாட்களுக்கு முன்னாலே இங்கே விவாதிக்கப்பட்டபோதுகூட சி லடுகளுக்கும்/சுருள்களுக்கும் எவ்வளவு போடவேண்டுமென்று சொல்கிறபோது "Not exceeding 0.90 per cent per slide and not exceeding 1.5 per cent for "Surul" என்றுதான் கொண்டுவந்திருக்கிறோம். ஆனாலும் பட்ஜெட்டிலே வருகிறபோது அதற்கு 30 பைசா என்றும் இதற்கு 60 பைசா என்றும் இருக்கிறது. "not exceeding" என்று சொன்னால் அதற்கு மேல் போகக்கூடாது என்றுதான் அர்த்தமே தவிர வேறு ஒன்றும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் எல்லாவற்றையும் படித்தால் தெரியும். நான் கூட அவர்களுக்கு கடைசியிலே அவைகளைப் படித்துக் காட்டலாம் என்று இருந்தேன். இருந்தாலும் இப்போது அவர்கள் அதை திருப்பித் திருப்பி சொல்வதினாலே நான் சொல்லவிரும்புகிறேன், not exceeding 5 per cent என்பதை not exceeding 2 per cent என்று திருத்திக்கொள்கிற முறையிலே அந்த அமண் மன்டை சேர்த்து ஏற்றுக்கொண்டு நீங்கள் பேசலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அதுமாதிரி அரசு தரப்பிலே ஏதாவது திருத்தம் கொண்டு வருகிறீர்களா என்பதைச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, Not exceeding 5 per cent என்று இருப்பதை Not exceeding 2 per cent என்றுதிருத்திக்கொள்கிறமுறையிலே அமெண்ட்மென்ட் வருவதாக வைத்துக்கொண்டு அதை நான் முன்மொழிகிறேன். Not exceeding என்று வருகிறது என்று இந்த அவையிலே சொன்னதற்குப் பிறகு எப்படி திருப்பிக் கேட்க முடியும்?

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இரண்டாவது பாயின்ட். ஏற்கெனவே பல பொருட்களுக்கு பட்டு, கைத்தறி துணி, மண்ணெண்ணெய், வீட்டுக்குப் பயன்படுத்தும் மின் விளக்குகள், வயர், சுவிட்சுகள், வெல்லக்கட்டி, சித்தா யுனானி, ஆயுர்வேத மருந்துப் பொருட்களுக்கு விதிவிலக்கு முழுவு விற்விருந்து......



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது எல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டரிலே வராது. இது எல்லாம் டீடெய்ல்ஸ். இவ்வளவு டீடெய்லாக பாயின்ட் ஆப் ஆர்டரிலே வராது.

திரு. க. அன்பழகன்: துணைத் தலைவர் அவர்களே, தலைவர் அவர்கள் காலையிலே அளித்த தீர்ப்பு அடிப்படையில் ஏற்கனவே முன்னவர் அவர்கள் நிதியமைச்சர் என்ற முறையில் எந்த எந்தப் பொருட்களுக்கு இந்த வரி முறை கைகொள்ளப்பட மாட்டாது என்று அறிவித்திருக்கிறார்களோ அந்தப் பொருள்களும் இந்தப் பில்லிலே இருக்கிற காரணத்தினாலே அவைகளுக்கும் நீங்கள் அமெண்ட்மென்ட் மூலமாக திருத்தங்கள் தருவீர்களா என்று கேட்பதற்குத்தான் துரைமுருகன் கேட்கிறார். அது சட்டமன்ற நடைமுறைப் பிரச்சினை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, பேராசிரியர் அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். அதேபோல் வழக்கறிஞர் துரைமுருகன் சொல்லியிருக்கிறார்கள். உங்களுக்கு இதிலே விளக்கமாக தெரிவித்து இருக்கிறோம். சட்டத்திலே வரியை நீக்குவதற்கோ குறைப்பதற்கோ எல்லாவிதமான அதிகாரமும் அரசுக்கு மட்டும் என்று எடுத்துக்கொண்டிருக்கிறோம். ரூல்ஸ் போடுகிறபோது சட்டமன்றத்திலே நிதியமைச்சர் அவர்கள் எதை எதைச் சொன்னார்களோ சொன்னது அத்தனையும் ரூல்ஸிலே போட்டு விதிகளிலே போட்டு நடைமுறைப்படுத்தப் படும். சென்ற ஆண்டிலே பட்ஜெட்டிலேகூட கொண்டுவரப் பட்டிருக்கிறது, அதற்குப் பிறகு நிதியமைச்சர் அவர்கள் சில விதிவிலக்குகளைக் கொடுத்ததற்குப் பிறகு விற்பனை வரியிலே நாம் ரூல்ஸ் மூலமாகத்தான் அதைச் செய்திருக்கிறோம். ஆனால் ரூல்ஸ் போட்டாலும்கூட நோட்டிபிகேஷன் ஆப் ரூல்ஸ் தான் அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். நோட்டிபிகேஷன் ஆப் ரூல்ஸில் போட்டால் உடனடியாக அதை ஏற்றுக்கொள்வதற்கும் ஏற்றுக்கொள்ளாததற்கும் இரண்டு அவைகளுக்கும் அதிகாரம் இருக்கிறது. நோட்டிபிகேஷன் ஆப் ரூல்ஸ் என்று போட்ட பிறகு உடனடியாக அவையிலே வைத்து நிறைவேற்றப்படும். நிதியமைச்சர் என்ன அவையிலே சொன்னார்களோ அது அத்தனையும் நடைமுறைப்படுத்தப்படும்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிற விளக்கம் எதிர்காலத்திலே அரசாங்கத் திலுடைய ரூல்ஸ் மூலம் விதிமுறைகள் மூலமாக முன்னவர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்துக்கள் இடம்பெறச்செய்யப்படும், அந்தக் கருத்துக்களுக்குட்பட்டு இயற்றப்படும் என்று தெரிவிக் கிறார்கள். இந்தச் சட்டத்திலே ஷெட்யூல்ட் குட்ஸ் என்று பட்டியலிலே பார்க்கிறபோது முன்னவர் அவர்சள் சொன்ன அயிட்டங்களும் சேர்க்கப்பட்டிருப்பதாக திட்டவட்டமாக தெரிகிறது. முன்னவர் அவர்கள் சொன்ன நாவலர் அவர்கள் இங்கே தெரிவித்துள்ள அந்த பொருட்கள் உள்ளிட்ட ஷெட்யூல்ட்

குட்ஸ் என்ற தலைப்பிலே வருகிற அந்தக் கருத்துக்களும்
ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீஸன்ஸ் என்பதிலே
பொருட்களும் அந்தத் தலைப்புக்களுக்கு அந்தப் பெயர்களுக்கு
உள்பட்ட பொருட்களில் பல இந்த விலக்குக்கு உரியதாக
முன்னவர் அவர்களால் சொல்லப்பட்டிருக்கிற காரணத்தினாலே
அந்த திருத்தம் இதிலே இடம் பெறுவதுதான் அவசியமாக தேவை.
ஏனென்றால் விதிமுறைகள் செய்கிறபோது இந்த கருத்துக்களை
மனதிலே கொள்ளப்படும் என்று சொன்னாலும், விளக்கங்கள்
சொல்கிறபோது வேறு விதமாக மாறும். எனவே இந்த
சட்டத்திலே ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ்
என்று வந்திருப்பதிலும், 'ஷெட்யூல்ட் கூட்ஸ்' பட்டியலிலும்
நிச்சயமாக மாற்றம் செய்யப்பட்டால் தான், திருத்தம் இருந்தால்
தான் இந்த அவையில் பேசுகிறவர்கள் தங்கள் கருத்துக்களை
தெளிவாக சொல்ல ஏதுவாக இருக்கும்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, பேராசிரியர் அவர்களை இந்த அறிக்கையில் ஆங்கிலப்
பிரதியில் 20-ம் பக்கத்தையும், தமிழ் பிரதியில் 2-ம் பக்கத்
தையும் பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அதில் 36-வது
விதியில் விளக்கமாக சொல்லியிருக்கிறோம். " the application of
the provisions of this Act would cause undue hardship to the general
public" ஜெனரல் பப்ளிக் எங்கெங்கு கஷ்டப்படுகிறார்களோ
அங்கேயெல்லாம் நீக்கப்படுமென்றும், ".... by notification issued,
whether prospectively or retrospectively, make an exemption, or reduc-
tion in rate, in respect of tax payable under this Act on any
scheduled goods or class of scheduled goods" ஷெட்யூல்ட் கூட்ஸ்
எங்கே இருக்கிறதோ அதற்கும் தான் சொல்லியிருக்கிறோம்.
அதுமட்டுமல்லாமல் இது எப்போதும் வாடிக்கையாக செய்கிற
ஒன்றுதான். இந்த அவையில் வரி நீக்கப்பட்டதென்று சொன்னவை
களுக்கு திருப்பி தாங்கள் வரி போட மாட்டோம். அதற்கு பிறகு
இப்போது சேர்க்க வேண்டும், சேர்க்கவேண்டுமென்று சொன்னால்
என்ன செய்வது? பேரவையில் என்ன சொல்லப்பட்டதோ அது
நிறைவேற்றப்படும். இதை பேராசிரியர் ஏற்றுக்கொள்ள வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த
சட்டத்தினுடைய 36 வது விதியைக் கொண்டு அரசு எல்லா
உரிமைகளையும் பெற்றிருக்கிறது. நீக்கவோ, தளர்த்தவோ,
விலக்கவோ அல்லது இன்னும் சொல்லப்போனால் மொத்தமாக
இந்த பில்லை கைவிடக் கூட அதிகாரம் அரசிற்கு இருக்கிறது.
ஒரு கடமை கூட இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் வரி
விதிப்பிற்காக ஐடெம்கள் கொடுக்கப்பட்டு ஒரு சட்டத்திலே
நிறைவேறுகிறபோது அவைகளுக்கு உட்பட்டவை என்று திட்ட
வட்டமாக சொல்லப்பட வேண்டும். ஏனென்றால் விரிவாக





நீங்கள் ஷெட்யூல் தருகிறபோது, இந்த அவையிலே சொல்லப்
பட்ட அந்த கருத்து இங்கே 'டொபோக்கோ அண்ட் இட்ஸ்
புராடக்ட்ஸ்' என்று இருக்குமானால் அதிலே ஏதாவது
விதிவிலக்கு அல்லது நீக்கப்படுவதாக இருந்தால் அது இதிலே
சொல்லப்படவேண்டும். விதிமுறைகளிலே சொல்வோம் என்று
சொல்வது அரசாங்கத்திற்கு இருக்கக்கூடிய அதிகாரத்தை
எப்போதும் நீங்கள் பயன்படுத்தக்கூடிய ஒன்று. அது இன்றைக்கு
மட்டுமல்ல, இந்த சட்டத்தில் மட்டுமல்ல, என்றைக்கும்
உங்களுக்கு இருக்கக்கூடிய ஒன்று. எனவே அமெண்ட்மென்ட்
கொடுப்பது உங்களுக்கு கஷ்டமில்லை. அப்படி அமெண்ட்மென்ட்
வருமானால் இதை இன்னும் தெளிவாக வாதிடப் பயன்படும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு
தலைவர் அவர்களே, நான் இதற்கு மேலே விளக்கம் சொல்லத்
தேவையில்லை என்பதால் சொல்லவில்லை. முடிவு எடுத்த பிறகு
அதற்கு போட வேண்டும், போடவேண்டுமென்று சொன்னால்—
விடாப்பிடியாக நீங்கள் கேட்கிறீர்களே தவிர வேறல்ல.

திரு. துரைமுருகன் : 5 பெர்சண்ட்டை 2 பெர்சண்டிற்கு
மிகாமல் என்று அமெண்ட்மென்ட் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று
சொன்னீர்களே, இதெல்லாம் நீக்கப்படும் என்று சொல்ல
வேண்டியதுதானே; இதிலே என்ன மர்மம்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; அதையெல்லாம்
நீங்கள் பேசுகிறபோது பேசலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, அரசாங்கம் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்த நுழைவு
வரியை திராவிட முன்னேற்றக் கழகம் மிக கடுமையாக எதிர்க்
கிறது என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நேற்றைய
தினம் நிதியமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம் தந்த சமயத்திலே
கூட கெரோசின் போன்ற பொருள்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்
படுமென்று பட்ஜெட் உரையிலே பதிலிலே சொல்லியிருக்கிறேன்
என்றும், அதற்கான அமெண்ட்மென்ட் சட்டத்தைக் கொண்டு
வருகிறபோது இந்த மன்றத்திலே தாக்கல் செய்யப்படுமென்றும்
அவை முன்னவர் நேற்றையதினம் உறுதிமொழி அளித்தார்கள்,
அதன் அடிப்படையில் மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர்
அவர்கள் அதை நிறைவேற்றுகிற விதத்திலே அந்த அமெண்ட்
மென்ட்களைச் சட்டமன்றம் இந்தச் சட்டத்தை விவாதிக்கிற
சமயத்திலே எந்தெந்தப் பொருள்களுக்கு வரிவிலக்கு அளிக்க
வேண்டுமோ அவைகளுக்குண்டான அமெண்ட்மென்ட்களை
தாக்கல் செய்வதுதான் முறை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர்
அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் வாக்குறுதி
அளித்திருக்கிறார்கள். அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படும்.
அதுமட்டுமல்லாமல் இப்போது நீங்கள் எல்லாம் பேசுகின்றபோது
கூட வேறு எதையும் கேட்பீர்கள். எல்லாவற்றிற்கும் சேர்த்து
ஒன்றாக ரூல்ஸ் போட்டுவிடலாம்.

[1983 ஏப்ரல் 27

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நுழைவு வரி தமிழ்நாட்டிலே கொண்டு வரப்படும் என்று அறிமுகப்படுத்தியதற்குப் பிறகு, தமிழ்நாட்டிலே இருக்கக் கூடிய வியாபாரிகள், பொதுமக்கள், எல்லோரும் அடங்கிய குழுவினர்கள் சட்ட மன்றத்திலே எங்கள் மூலமாக, இதனை எடுத்து வைத்து, இந்த நுழைவு வரி தவிர்க்கப்பட வேண்டு மென்றும் தேவையற்றது என்றும் இந்தச் சட்டத்தை முன்மொழி கின்ற காலத்திலேயே நாங்கள் கூறியிருக்கின்றோம். அதனைத் தொடர்ந்து நம்முடைய நிதியமைச்சரும், அவையின் முன்னவரும் கூட இது ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து அமுல்படுத்தப் படும் என்றும் பட்ஜெட் உரையிலே குறிப்பிட்டிருந்தாலும், அது ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து அமுலுக்கு வராது சட்டம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றியதற்குப் பிறகுதான் அமுலுக்கு வரும் என்று மார்ச் 31 ஆம் தேதிக்கு முன்னதாகவே அவர்கள் அறிவித்தார்கள். என்ன காரணத்திற்காக அப்படி அறிவித்தார்கள்? இந்தச் சட்டத்தை 31 ஆம் தே ிக்கு முன்னதாகவே இன்ட்ரடியூஸ் செய்வதிலே என்ன சிரமம்? என்ன பேரம்? என்ன வாக்குவாதம்? அதிலே தோல்வி கண்டதற்குப் பிறகு இன்றையதினம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றக்கூடிய கட்டாயத்திலே ஆளுங்கட்சியினர்—அரசாங்கம் தள்ளப்படுகிறதோ என்று நான் ஐயப்படுகிறேன். ஒன்றை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்பு கிறேன். முன்பெ லாம் வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆண்ட காலத்தில் ஆக்ட்ராயாக இருந்தது. ஆக்ட்ராயாக இருந்ததை மாற்றி, ஆக்ட்ராய் நாகரீகமான முறையிலே விதிக்கப்படக்கூடிய வரி அல்ல; போட்டவரி, இடத்திற்கு இடம் மாறுபட்டு, அதனால் பல தொல்லைகள் வருகின்றன என்ற காரணத்தினால்தான் அந்த ஆக்ட்ராய்க்குப் பதில க, விற்பனை வரியை வெள்ளைக்காரன் காலத்திலே கொண்டு வந்தார்கள். மத்திய அரசாங்கம் வெளியிட்டுள்ள "Sales Tax Administration in India" என்ற புத்தகத்திலே, மிகத் தெளிவாக அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

''Comptrolle: and A:dito -General of India has stated, "in India the Todhunter Committee, i.e., Indian Taxation Enquiry Committee, 1924 recommended for the first time that local etail tax may be introduced as a substitute for Octroi and Terminal Taxes levied by the Municipalities.'' இந்தியாவிலே சேல்ஸ் டாக்ஸ் வந்ததற்கு மூல காரணமே, ஆக்ட்ராய் என்று அந்தக் காலத்திலேயே ஒவ்வொரு நகராட்சியிலும் வசூலித்தார்கள், அது காட்டுமிராண்டித்தனமான வரி. அந்தக் காட்டு மிராண்டித்தனமான வரியினை வசூலிப்பது தவறு என்று கருதித்தான் 1924-லே வெள்ளைக்காரர்கள் டாடண்டர் கமிட்டியிலே விவாதித்து, முடிவு செய்த பிரகாரம், ஆக்ட்ராயும், டெர்மினல் டாக்சும் ஒழிக்கப்படவேண்டிய வரிகள், அதற்குப் பதிலாக, விற்பனை வரியைப் போடலாம் என்று பரிந்துரை செய்தார்கள். அவர்கள் பரிந்துரை செய்ததனுடைய அடிப்படையிலேதான் "In the Government of India Act 1935, Tax on sale of goods and on advertisement was made a provincial subject, byentry number 48 in the list II Schedule VII 1935''லே ஹவுஸ் ஆப் காமன்சிலே நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டத்தின்



1983 ஏப்ரல் 27] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

பட்ட அந்தச் சட்டத்தின் பிரகாரம், மத்திய அரசினுடைய 35-வது சட்டத்தினுடைய பிரகாரம், மாநிலங்கள் ஆக்ட்ராய்க்கு பதிலாக, டெர்மினல் டாக்சுக்குப் பதிலாக, விற்பனை வரியைக் கொண்டு வரலாம்.

இது மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்ட உரிமையாகும் என்று அன்றையதினம் ஹவுஸ் ஆஃப் காமன்ஸ்-இலே முடிவு செய்தார்கள். அதையொட்டித்தான் சென்ட்ரல் ப்ராவின்சஸ் என்று சொல்லக்கூடிய மத்திய மாகாணத்திலே முதன்முதலிலே அவர்கள் பெட்ரோல் டாக்ஸ் என்று 1938-இலே முதலிலே போட்டார்கள். அதற்குப் பிறகுதான், 'For all practical purposes, the ep ch-making event in the History of sales tax was the passing of the Madras General Sales Tax primarily to make up the loss of revenue due to the introduction of prohibition.' 1939-இல் இராஜாஜி அவர்கள் தமிழ்நாட்டினுடைய, (மட்ராஸ் பிரசி டென்ஸி னுடைய பிரைம் மினிஸ்டராக அல்லது சீஃப் மினிஸ்டராக அன்றையதினம் இருந்த சமயத்தில் கவர்ன் மென்ட் ஆஃப் இந்தியா ஆக்டினுடைய அடிப்படையில் இந்த ஆக்ட்ராய்க்குப் பதிலாக, டெ ர்மினல் டாக்சுக்குப் பதிலாக சேல்ஸ் டாக்ஸ் போடலாம், அது மாநிலங்களுக்குக் கொடுக்கப் பட்ட உரிமை என்று ஹவுஸ்.ஆஃப் காமன்ஸ்—லே நிறைவேற்றிய சட்டத் னுடைய அடிப்படையில் அவர்கள் இங்கே இந்த சேல்ஸ் டாக்சை கொண்டு வந்தார்கள். இதற்கு ஓரிரண்டு ஆண்டு களுக்கு முன்னதாகவே மத்திய மாகாணங்களிலே, சென்ட்ரல் ப்ராவின்சஸிலே சில செலக்ட்டட் குட்ஸ்-க்கு பெட்ரோல் டாக்ஸ் என்ற விதத்திலே சேல்ஸ் டாக்ஸை விதித்தார்கள். காம்ப்ரஹென்சிவ் ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் என்ற முறையில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான் முதன்முதலாகக் கொண்டு வந்த ர்கள்.

(முற்பகல் 11-00)

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அப்பொழுது அவர்கள் கொண்டு வந்ததற்கு நியாயம் கற்பிக்கும் வகையில் அவர்கள் சொன்ன வாதங்களெல்லாம் மது விலக்கை அமல்படுத்துவதன் காரணமாக மாநிலங்கள் வருவாயை இழந்து விடுகின்றன; அந்த இழப்பைச் சரிக் கட்டுவதற்காக இப்படி இந்த விற்பனை வரியைக் கொண்டு வந்தால், அது மது விலக்கினால் வரக்கூடிய வரியிழப்பினைத் தடுப்பதற்குச் சாதக மாக இருக்கும் என்றுதான் அன்றையதினம் திரு. இராஜாஜி அவர்கள் கொண்டு வந்தார்கள்.

அப்படிக் கொண்டு வந்த சமயத்தில் தமிழ்நாட்டினுடைய வரி எத்தனை கோடி? இன்றையதினம் எத்தனை கோடி என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். அந்தக் காலத்திலே, இத் பொருட்களுக்கு விற்பனை வரி இருந்தது, இன்றையதினம்

விற்பனை வரி இல்லாத பொருளே இல்லை என்று சொல்லுகின்ற அளவிற்கு எல்லாயிடங்களிலும், எல்லாப் பொருட்களுக்கும்-ஏறக்குறைய எல்லாப் பொருட்களுக்கும் விற்பனை வரி போடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு, இன்றையதினம் சற்றேறக் குறைய 100 கோடி ரூபாய்க்கு மேலே, நம்முடைய பட்ஜெட்டினுடைய வருவாயில் சற்றேறக்குறைய பாதிக்குக் குறையாமல் கற்பக விருட்சமாக, காமதேனுவாக விற்பனை வரி அமல்படுத்தப் பட்டு வருகிறது.

இந்த அரசாங்கத்திற்கு உள்ளபடியே முனிசிபாலிட்டிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருக்குமேயானால், அந்தக் கார்ப்பரேஷனுக்கும், முனிசிபாலிட்டிகளுக்கும் இன்னும் கொஞ்சம் பணம் தேவை அதைக் கொடுக்க வேண்டுமென்ற என்ற நிர்ப்பந்தம் உண்டாகுமேயானால் அது பத்து கோடியாக இருந்தாலும் சரி, அல்ல 20 கோடியாக இருந்தாலும் சரி இப்பொழுது அமுலில் இருக்கக்கூடிய விற்பனை வரியை வசூல் செய்தால், முறையாகச் செய்து, அதிலே வரி ஏய்ப்பு ஏற்படாமல் தீர்க்கப்படுமேயானால் இந்த 20 கோடிக்குப் பதிலாக இன்னும் சற்றேறக்குறைய 50 கோடி ரூபாய் அளவிற்கு, இப்பொழுது இருக்கக்கூடிய விற்பனை வரிச் சட்டத்திலேயே வசூல் செய்யக் கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. அவ்வாறு செய்யாமல், அன்றையதினம் ஒரு பேரலல் லெஜிஸ்லேஷன் என்று சொல்வதைப் போல இருக்கிறது. திரு இராஜாஜி அவர்கள் அன்றையதினம் மது விலக்குக்காக என்று விற்பனை வரியைக் கொண்டு வந்தார்கள். அன்றையதினம் மதுவிலக்கும் கிடையாது; விற்பனை வரியும் நிரந்தரமாகிவிட்டது. அது ஏறக்குறைய 600 கோடி ரூபாய்க்கு, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய கன்ஸ்யூமர்ஸ் தலையிலே சுமத்தப்பட்டிருக்கக்கூடிய ஒரு நிலமைக்கு எப்படி அது சுமைக்கப்பட்டதோ அதேபோலத்தான் இன்றையதினம் கொண்டு வந்திருக்கக்கூடிய நுழைவு வரியும் ஒரு பேரலல் லெஜிஸ்லேஷனாக, மெட்ராஸ் ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் என்று சொல்வதைப்போல இது இன்னொரு அங்கமாக விங்காக இருந்து கொண்டு, தமிழ்நாட்டிலே உள்ள பல முனிசிபாலிட்டிகளுக்கும் இவைகளை எக்ஸ்டன்ட் செய்யக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தினால் இது பொதுமக்களையும், வியாபாரிகளையும் மிகவும் கடுமையாகப் பாதிக்கும் என்பதை நான் இங்கே சொல்லி கொள்ள விரும்புகிறேன்.

இதை இங்கே நான் சொல்லுகின்ற சமயத்தில் இன்னொன்றையும் சொல்லியாக வேண்டும். மத்திய அரசாங்கத்தினுடைய போக்கையும் நான் இங்கே கூற விரும்புகிறேன். மத்திய அரசாங்கமே சேல்ஸ் டாக்ஸ்களை ஒழிக்க வேண்டுமென்று அண்மைக் காலத்திலே பேசி வருகிறார்கள். அவர்கள் எக்சைஸ் டியூட்டியினால், இழப்பு ஏற்படுவதற்கு நாங்கள் எக்சைஸ் டூட்டியிலே [illegible] கொடுத்து விடுகிறோம் என்று, விற்பனை வரியை [illegible] வேண்டுமென்று மத்திய அரசாங்கம் முயன்று கொண்





டிருக்கக்கூடிய இந்தக் காலகட்டத்தில், இந்த வரியைக் கொண்டு வருவது மத்திய அரசாங்கத்திற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவர்கள் எடுக்கின்ற முயற்சிகளுக்கு எதிர் நடவடிக்கையாகத்தான் இந்தச் சட்டம் இந்த மாமன்றத்திலே கொண்டு வரப்படுகிறது என்பதை இங்கே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசாங்கம் சென்ட்ரல் சேல்ஸ் டாக்சினை போட்டிருக்கிறார்கள். அந்த சென்ட்ரல் சேல்ஸ் டாக்சை டிக்ளேர் செய்வதற்கு இந்த நுழைவு வரியைப் பயன்படுத்தக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதை இங்கே நான் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. மத்திய அரசாங்கம் சில பொருள்களை டிக்ளேர் செய்திருக்கிறார்கள். அந்தப் பொருள்களுக்கெல்லாம் சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் போட்டு, அவைகளையெல்லாம் 'பார்லிமெண்டரி டிக்ளேர்டு குட்ஸ்' என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பொருள்களுக்கு எல்லாம் நுழைவு வரி என்ற பெயரால் இங்கே புதிய வரி போடுவது ஏற்கத்தக்கதல்ல என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது தவிர்க்கப் படவேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி, மத்திய அரசிற்காக பேசுகிறார்களா அல்லது மாநில அரசிற்காகப் பேசுகிறார்களா என்று தெரியவில்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நான் மக்களுக்காகச் சொல்கிறேன். கத்தி எடுத்து கழுத்தை வெட்டக்கூடியவர்கள் நீங்கலாக இருந்தாலும் சரி, அல்லது அவர்களாக இருந்தாலும் சரி, அது தவறு. மக்களின் நலனைக் கருதி, நாம் பாதுகாக்க வேண்டுமென்ற அடிப்படையிலே தான் நான் சொல்கிறேன். நீங்கள் இரண்டு பேரும் போட்டி போட்டுக்கொண்டு மக்களின் கழுத்தை அறுக்காதீர்கள் என்று சொல்கிறேன். நீங்கள் அறுக்க மாட்டீர்கள். உங்களால் முடியாது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மத்திய அரசு வரி போடுகிறது என்பதற்காக நாம் போட்டு விட்டால், அது நமக்கு நல்லதல்லவா? நம்முடைய மாநிலத்தை பொறுத்தவரைக்கும்..

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நான் சொல்லக் கூடியதெல்லாம், consumer is already very much affected இங்கே வாங்கி உபயோகிக்கக் கூடியவன் அந்தப் பொருள்களுக்கு, ஏறத்தாழ 30% வரியாகக் கொடுக்கிறான். எக்ஸைஸ் டியூட்டி, சி.எஸ்.டி. அல்லது சேல்ஸ் டேக்ஸ் மூலமாக கொடுக்கிறான். இப்போது அதையும் சேர்த்து

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1983 ஏப்ரல் 27

விட்டால், அவர்கள் வாங்கக்கூடிய பொருளுக்கு மூன்றில் ஒரு பங்கு வரியாகக் கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்படும். அதை நீங்கள் செய்தாலும், அவர்கள் செய்தாலும் தவிர்க்கப்பட வேண்டும். பொதுமக்களின் நன்மையைக் கருதி, இது குறைக்கப்பட வேண்டும். ஆகவே விரைவாக, வேகமாக, இரண்டுபேரும் மக்களுடைய பாக்கெட்டிலிருந்து, போட்டிப் போட்டுக்கொண்டு நாங்கள் எடுக்கிறதா, அவர்கள் எடுக்கிறதா என்று செய்வது நல்லதல்ல.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். 1956-ல் சென்ட்ரல் சேல்ஸ் டேக்ஸ் அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டது. மாநிலங்களுக்கு சேல்ஸ் டேக்ஸ் அதிகாரங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டதற்கு பிறகு, ஒவ்வொரு மாநிலமும் போட்டி போட்டுக்கொண்டு, இண்டர் ஸ்டேட் சேல்ஸ் டேக்ஸ்-வரி போடுவதற்கு முற்பட்டன. பிறகு 1956-ல் 6-வது அமெண்ட்மெண்டு டு தி கான்ஷ்ஸ்டிடியூஷன் என்கிற தலைப்பில், அரசியல் சட்டம் 286-வது பிரிவிற்கு திருத்தங்களைக் கொண்டுவந்தார்கள். அப்படி அவர்கள் திருத்தங்களைக் கொண்டுவருவதன் மூலமாக, மத்திய அரசாங்கம் நோட்டிஃபை செய்யக்கூடிய பொருள்களுக்கு மாநிலங்கள் சேல்ஸ் டேக்சை போடக்கூடாது அல்லது அந்த மாநிலத்திற்குள்ளே நுழைக்கின்ற போது, வரி வசூலிக்கக்கூடாது என்ற அதிகாரத்தை 6-வது அமெண்டுமெண்ட் ஆப் தி கான்ஸ்டிடியூஷன் 1956 சென்ட்ரல் சேல்ஸ் டேக்ஸ் அதிகாரத்தை பாராளுமன்றத்திற்கு வழங்கி, அந்த அரசியல் சட்டத்தை திருத்தினார்கள். 286 பிரிவு ஒன்றிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்—'No law of a State shall impose, or authorise the imposition of, a tax on the sale or purchase of goods where such sale or purchase shall take place—என்று சொல்லிவிட்டு, மூன்றாவது பிரிவிலே கீழே குறிப்பிட்டபடி சொல்கிறார்கள். Any law of a State shall, in so far as it imposes or authorises the imposition of, a tax on the sale or purchase of goods declared by Parliament by law to be of special importance in inter-State trade or commerce, be subject to such restrictions.......' இவைகள் எல்லாம் ரெஸ்ட்ரிக்ஷன் இல்லாமல் எப்படியாகும்? இன்றையதினம் நோட்டிபிகேஷனிலே நீங்கள் என்னென்ன பொருள்களுக்கு வரி போட்டிருக்கிறீர்கள் என்று பார்த்தால், சர்க்கரை, டெக்ஸ்டைல்ஸ், டொபேக்கோ, சிமெண்ட், பெட்ரோலியம் ப்ராடக்ட்ஸ், வனஸ்பதி, ட்ரக்ஸ், பேப்பர், கார்ட்போர்டுகள், அயர்ன் அண்டு ஸ்டீல், கோல் அண்டு கோக், லக்ட்ரிகல் குட்ஸ், அட் டாமொபைல்ஸ், ஓர்ஸ்—இவைகளிலே சற்றேறக்குறைய அனைத்தும் வெளி மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்கு வருமேயானால், அவர்கள் போடக்கூடிய சி.எஸ்.டி., சென்னையிலே இருக்கக்கூடிய ஒரு வியாபாரி ஆந்திரத்திலிருந்து ஒரு மூலப்பொருளைக் கொண்டுவருகிறபோது விதிக்கப்படுகிறது ஆனால் இங்கிருந்து ஆந்திராவிற்குப் போனால் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?



1983 ஏப்ரல் 27] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

(முற்பகல் 11–10)

நீங்கள் சி.எஸ்.டி. என்று இங்கே 4 பர்செண்ட் கொடுத்து
விட்டால் மட்டும் போதாது, எங்களுக்கும் ஒரு என்ட்ரி டாக்ஸ்
கொடுங்கள் என்று கேட்கப் போகிறீர்கள். இது இந்திய அரசியல்
சட்டத்திலே மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கக்கூடிய
அதிகாரத்தை மீறுகின்ற செயல் அல்லவா என்ற வினாவை நான்
கேட்கவிரும்புகிறேன். ஆகையினாலே தான் நான் சொல்லுகிறேன்.
"Any law of a State shall in so far as it imposes, authorises the
imposition of the tax on the sale or purchase of the goods declared
by Parliament, by law to be of special importance in inter-State
trade or commerce be subject to such restrictions and conditions"
இது ரெஸ்ட்டிரிக்சன் அல்லவா? இந்த என்ட்ரி டாக்ஸ் மத்திய
அரசாங்கத்தினுடைய சென்ட்ரல் சேல்ஸ் டாக்சினை கட்டுப்
படுத்தக்கூடிய, இன்னும் சொல்லப்போனால் அதற்கு மேலே வரி
விதிக்கக்கூடிய அளவிற்கு புகுத்தப்படக்கூடியது அல்லவா என்ற
கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன். ஆகையினாலேதான்
இந்த நுழைவு வரி மிகப் பிற்போக்கான வரியாகும். இவைகள்
எல்லாம் மிடிவியில் சிட்டி ஸ்டேட் என்று ஏறக்குறைய 12 ஆம்
நூற்றாண்டு அல்லது 13 ஆம் நூற்றாண்டில் மிடிவியில் சிட்டி
ஸ்டேட் என்று சொல்லக்கூடிய காலத்திலே அவர்கள்தான் இந்த
என்ட்ரி டாக்சை வைத்து இருந்தார்கள். அந்த ஒரு கால
சட்டத்திற்கு இப்போது நம்முடைய நாட்டிலே இருக்கின்ற
முனிசிபல் நகரங்கள் எல்லாம், சிட்டி ஸ்டேட்ஸ் கான்செப்ட்
நீங்கள் தள்ளுகின்றீர்களா என்று என்னால் புரிந்து
கொள்ளமுடியவில்லை. ஆகையினாலே இந்த வரியை நாங்கள்
மிகக் கடுமையாக எதிர்க்கிறோம். எங்களுடைய கட்சித் தலைவர்
அதைக் கொண்டு வரக்கூடிய சமயத்திலே சொன்னார்கள்.
அரசாங்கத்திற்கு உண்மையாக வரி தேவைப்படுமானால், இன்னும்
ஒரு 20 கோடி அதிகமாகத் தேவைப்படுமானால், இப்படி ஆயிரக்
கணக்கான, லட்சக்கணக்கான வியாபாரிகள் இருக்கக்கூடிய
சேல்ஸ் டாக்ஸ் கமிஷனரிடத்திலே, அதிகாரிகளிடத்திலே புஸ்த
கத்தைக் கொண்டு காட்டியபிறகு நடங்கள் என்று சொல்லியும்
செக்போஸ்ட் என்று வைத்துக்கொண்டு அவர்களுக்கு தொல்லைகள்
கொடுப்பதை விட்டுவிடுவது நலம். 10 பிளண்ட்டிங் யூனிட்
மூலமாக—அவைகள் தேசியமயமாக்கிவிட்டால்—வரக்கூடிய
ஏறக்குறைய 20, 24 கோடி ரூபாய்—எவன் எவனோ சாப்பிடு
கிறான்—அவைகள் எல்லாம் அரசாங்கத்திற்கு வந்துவிடுமானால்
அரசாங்கத்திற்குத் தேவையான வரி கிடைக்காதா? பணம்
கிடைக்காதா என்ற கேள்வியைத்தான் எங்களுடைய கட்சித்
தலைவர் அவர்கள் எடுத்து வைத்தார்கள் என்று கூறி இந்தச்
சட்டத்தை திராவிட முன்னேற்றக்கழகம் எதிர்க்கின்றது. இதை
அரசாங்கம் உடனடியாக வாபஸ் வாங்கவேண்டும் என்று சொல்லி,
இது ஊழலுக்கு வழிவகுக்கும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

[1983 ஏப்ரல் 27

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்
இந்தச் சட்டமன்றத்திலே வைத்திருக்கின்ற நுழைவு வரி விதிக்கும்
சட்ட முன்வடிவின் மீது சில கருத்துக்களைச் சொல்ல அனுமதித்த
தற்காக உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து ஒருசில
கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தச் சட்டமுன்
வடிவிலே பேசுகின்ற எதிர்க்கட்சி நண்பர்கள் எல்லாம் இந்தச்
சட்டம் கொண்டு வரப்பட்டால் நாட்டிலே ஊழல் அதிகமாக
தலைவிரித்தாடும் என்றும், இதனால் பல்வேறு தரப்பட்ட
மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்றும் சொன்னார்கள். ஆனால்
நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஊழல் என்று
சொல்வது ஏதோ புதிதாக இந்த நாட்டிலே மட்டும் அல்ல,
தமிழ்நாட்டிலே மட்டும் அல்ல, இந்தியாவிலே புதிதாக இப்போது
தான் நுழைவதாகக் கற்பனை செய்து கொண்டு சொல்வதைத்
தான் நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்தச் சட்ட
மானது இந்தியாவிலே ஏறக்குறைய 14 மாநிலங்களிலே இருக்
கின்றது. அதிலும் குறிப்பாக மேற்கு வங்கம் உள்பட இந்தியா
விலே உள்ள காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்கின்ற 12 மாநிலங்
களிலும் இருக்கின்றது என்று சொன்னால் அவர்கள் எல்லாம்
ஒன்றும் தெரியாமலோ அல்லது அறியாமலோ கொண்டு வந்திருக்
கிறார்கள் என்று யாரும் யூகம் செய்ய முடியாது. ஆகவே
இப்படிப்பட்ட சட்டங்களைச் செயல்படுத்துவதற்கு அதிகமாக
செலவு ஆகிறது என்றும், அதனால் அதிகமான அதிகாரிகளை
நியமிக்க நேரிடுகிறது என்றும், ஆகவே அரசுக்கு அதிகமான
செலவு ஏற்படும் என்றும் இங்கே தெரிவித்த அவர்களுக்கு நான்
பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கனவே இருந்த
அதிகாரிகளை வைத்து இந்தச் சட்டத்தைச் செயல்படுத்துவதற்கு
நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, அவர்கள் சொன்னது
எல்லாம் எதிர்க்கட்சிகள் என்ற பெயராலே எதை எடுத்தாலும்
எதிர்த்துக்கொண்டு இருப்பது என்று சொல்கிறார்களே தவிர,
இந்த வரியால் அரசுக்கு என்ன லாபம், அந்த லாபத்தால் அரசு
மக்களுக்கு என்ன செய்ய இருக்கிறது என்பதைக் கொஞ்சம்கூட
புரிந்து கொள்ளாமலேயே சொல்வதை எண்ணிப் பார்த்துத்தான்
இந்தச் சட்டத்தால் என்ன லாபம் இருக்கிறது என்பதை நான்
தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பாவேந்தன் பாரதிதாசன் பாடினான். 'கோரிக்கையற்றுக்
கிடக்குதண்ணே, இங்கு வேரில் பழுத்த பலா, மிகக் கொடியது
என்று எண்ணிடப்பட்டுதண்ணே, குளிர் வடிகின்ற வட்டநிலா'
என்று கோரிக்கை அற்றுக் கிடக்கும் சமுதாயத்தைப் பார்த்துப்
பாடினான். சமுதாயத்திலே நலிந்தவர்களைப் பார்த்துப்
பாடினான். அப்படிப் பாடிய பாவேந்தன் பாரதிதாசன் கனவை
நனவாக்கும் வகையில் இன்றையதினம் இதய தெய்வம் புரட்சித்
தலைவர் அவர்கள் அப்படிப்பட்ட சமுதாயத்தில் உள்ள மக்களை,
அப்படிப்பட்ட சமுதாயத்திலே பெற்று எடுத்த இளம் சிறார்களை
பஞ்சத்தில் இருந்து, பட்டினியில் இருந்து காப்பாற்றவேண்டும்
என்று தான் இந்த நாட்டிலே சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு
வந்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சத்துணவுத் திட்டத்



1983 ஏப்ரல் 27] [திரு. க. பாலசுப்பிரமணியன்]

திற்கு சத்து கொடுப்பதற்காக இப்படிப்பட்ட வரி போடப்பட்டு
இருக்கிறது. உலகத்திலே எங்கும் இல்லாத வகையில் தன்னிறைவுத்
திட்டம் தமிழகத்தில் தான் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது.
இன்று தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாகத் தொடர்பு இல்லாத
கிராமங்கள் தொடர்பு பெற்று இருக்கின்றன. பள்ளிகள் எல்லாம்
நிரந்தரமான கட்டிடங்களைப் பெற்று இருக்கின்றன. மர
நிழலில் இருந்த பள்ளிகள் இன்றைக்கு மாடிக்கட்டிடங்களில்
மாறியிருக்கின்றன. இதற்குக் காரணம் முறையாக வரிகளை
விதித்து, முறையாக அதை வசூலித்து, இப்படிப்பட்ட நல்ல
காரியங்களுக்காக அவை செலவிடப்படுகின்றன என்பதுதான்.

இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பூதாகரமான
கற்பனைகளை இங்கே தெரிவித்தார்கள் ஏதோ சென்னையில்
புறப்படுகிற ஒரு வாகனம் சென்னையில் இருந்து புறப்படுகிறது
என்று சொன்னால், செங்கற்பட்டு நகரத்தில் நுழைகிறபோது
வரி கட்டவேண்டும், அதற்கு அடுத்து திண்டிவனத்தில் நுழைகிற
போது வரி கட்டவேண்டும் அதைத்தாண்டி பண்ருட்டி செல்கிற
போது அங்கே வரி கட்டவேண்டும், அதையும் தாண்டி தஞ்சை
செல்கிறது என்று சொன்னால், அங்கேயும் வரி கட்டவேண்டும்
இப்படி ஏறக்குறைய 10,15 இடங்களில் வரி கட்டவேண்டிய.
நிலை வரும் என்று கற்பனை செய்து நாட்டு மக்களிடையே ஒரு
பீதியை ஏற்படுத்தும் வகையில் சொன்னார்கள். இதில் இருந்து
என்ன தெரிகிறது என்று சொன்னால், ஒரு இடத்தில் வரி கட்டி
விட்டால் மற்ற இடத்தில் வரி கட்டாமல் செல்லலாம். ஆனால்
இவர்கள் சொல்வதன் மூலம் என்ன நிலைமையேற்படும் என்று
சொன்னால் ஆங்காங்கு இருக்கின்ற நகராட்சியில் இருக்கும்
வியாபாரிகள், மாநகராட்சியில் இருக்கும் வியாபாரிகள்
ஆகியோரை இப்போதிருந்தே பலதரப்பட்ட ஊழல்களுக்குத்
தயாராக இருங்கள் என்று சொல்வதுபோல் இருக்கிறது.
ஆனால் நான் தெரிவித்துக்கொள்வேன், புரட்சித் தலைவர்
ஆட்சியில் ஒரு வரி போடப்படுகிறது என்று சொன்னால் அந்த
வரியை யாருக்குப் போடவேண்டும், அதன் காரணமாக யாருக்குப்
பாதகம் ஏற்படும் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டு தான்
போடுகிறார்கள்.

இங்கே பேசிய மாண்புமிகு பெரியவர் நெல்லிக்குப்பம்
கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுகிறபோது மத்திய அரசு பொது
விற்பனைச் சட்டம் மூலம் வரி போடுகிறது என்பதை எதிர்க்கும்
அளவிற்கு அல்லது அதை காப்பி அடிக்கும் வகையில் செய்யப்
படுகிறது என்று சொன்னார்கள். மத்திய அரசு செய்வதைக்
காப்பி அடிக்கக் கூடாது என்று ஒன்றும் இல்லை. அப்படியானால்
மத்திய அரசு செய்யும் எதையும் நாம் செய்யக்கூடாது என்று
சொல்கிறார்களா? மாநில அரசு போடுகின்ற இந்த வரி விதிப்பு
மூலம் சாதாரண ஏழை எளிய மக்களுக்கு இன்னும் சொல்லப்
போனால், சமுதாயத்தில் நலிந்தவர்கள், வறுமைக்கோட்டிற்குக்
கீழே இருப்பவர்கள் ஆகியோரை இது பாதிக்காது என்று
தெளிவாகச் சொல்லித்தான் இதைச்செய்கிறார்கள். இங்கே
யிருக்கிற வருவாய்த்துறை அமைச்சராக இருந்தாலும் சரி,

முதலமைச்சராக இருந்தாலும் சரி, மற்ற அமைச்சர்களாக இருந்தாலும் சரி, போடுகின்ற வரி எந்த மக்களிடமிருந்து பெறப்படுகிறது, அந்த வரியால் மக்களுக்கு லாபம் ஏற்படுகிறதா என்பதைச் சிந்தித்துப் பார்த்துத்தான் வரியைப் போடுகிறார்கள். 100 க்கு 80 மக்களுக்கு லாபம் ஏற்பட்டு 20 சதவீதம் மக்கள் வரி கட்டும் நிலையைத்தான் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த வரியை நல்ல முறையில் செயல்படுத்துவதற்கு வர இருக்கின்ற காலத்தில் தமிழக அரசு நல்ல ஏற்பாடுகளைச் செய்யும் என்பதிலே நம்பிக்கை இல்லை என்று அவர்கள் சொன்னாலும், எல்லாக் காலங்களிலும் புரட்சித் தலைவரை நம்பிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதிலும் புரட்சித் தலைவர் அவர்களைத் தாராளமாக நம்பலாம் என்று கூறி இந்த வரி விதிப்பை ஆதரித்து என் உரையை முடிக்கிறேன்.

(முற்பகல் 11 20)

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு உள்ளூர்ப்பகுதிகளில் நுகர்தலுக்காக, பயன்படுத்துதலுக்காக, விற்பனை செய்வதற்காக வரும் சரக்குகள் மீது நுழைவு வரி விதிக்கும் இந்தச் சட்ட முன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எதிர்க்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இன்றைக்குப் பல்வேறு வகைகளில் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில் இப்படிப்பட்ட புதிய வரியைப் போட்டு அவர்களை மேலும் பல சிக்கல்களுக்கு ஆளாக்கியிருப்பது வருந்தத்தக்கது, கண்டிக்கத் தக்கது. ஏற்கெனவே மத்திய சர்க்காரின் பட்ஜெட் மூலம் விலைவாசி ஏறியிருக்கிறது. இரயில்வே பட்ஜெட்டிலே போட்ட சரக்கு இரயில் கட்டணம் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. தபால் கவர் 50 பைசாவாக இருந்தது இன்றைக்கு 55 பைசாவாக ஆகியிருக்கிறது. அந்த அளவுக்கு மிக நுணுக்கமாக வாய்ப்பு உள்ள இடங்களில் எல்லாம் வரி போட்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில் தமிழ்நாட்டில் இந்த அரசின் சார்பாக இப்படிப்பட்ட ஒரு புதிய வரியைப் போடுவது மிகவும் கண்டிக்கத்தக்கது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, தமிழ்நாடு பூராவும் வறட்சியால் பாதிக்கப்பட்டிக்கிறது. எங்கு பார்த்தாலும் தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கிறது. சென்னை நகரிலும், திண்டுக்கல்லிலும் அதைப் போன்ற மற்ற இடங்களிலும் தண்ணீரை விலைகொடுத்து வாங்கிக் குடிக்கக்கூடிய பரிதாபம் ஒருபுறம் இருக்கிறது. தண்ணீருக்கு என்று சில வீடுகளில் 5 ரூபாயிலிருந்து 50 ரூபாய் வரையில் தினம் செலவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த அரசினுடைய தொலைநோக்கு இல்லாத காரணத்தால், மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டு தமிழகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. மின்சாரத்தட்டுப்பாட்டால் வரலாறு காணாத அளவுக்குத் தொழிற்சாலைகளை மூடக்கூடிய அளவிற்கு நிலைமை இருக்கிறது.



தொழிற்சாலைகள் மூடப்பட்ட காரணத்தால் இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஒரு புறம் இருக்கிறது. 'லே ஆப்' என்ற நிலைமையால் பல்வேறு தொழிற்சாலைகளில் நிரந்தரத் தொழிலாளர்களுக்குப் பாதிச் சம்பளம் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது ; தற்காலிகத் தொழிலாளர்கள் வேலையை இழந்திருக்கிறார்கள். ஆக இப்படித் தொடர்ச்சியாகப் பல்வேறு சூழ்நிலைகளில் தமிழக மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் இன்றைக்குப் புதிய வரியைப் போட்டு, அவர்களை மேலும் பல கஷ்டங்களுக்கு ஆளாக்குவது கண்டிக்கத்தக்கது. அது தடுக்கப்பட வேண்டும். ஆகவே இந்தச் சட்ட முன்வடிவை ஆய்வு செய்யாமல் தயவுசெய்து வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் இங்கே நேர்முக வரி ஆண்டுக்காண்டு குறைந்து கொண்டே வருகிற அதே நேரத்தில் மறைமுக வரி ஒவ்வோராண்டும் கூடிக்கொண்டே போகக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நேர்முக வரி என்பது வசதி படைத்தவர்கள், தொழிலதிபர்கள் செலுத்துகின்ற வருமான வரி போன்றது. போடக்கூடிய 19 சதவீத வரியைக் கூட தொழிலதிபர்கள் முறையாக செலுத்தத்தயாராக இல்லை அதன் காரணமாக கோடிக்கணக்கான ரூபாய் வருமான வரி டிமிக்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று மைய அரசின் சார்பில் பாராளுமன்றத்தில் கூறப்பட்டு, பத்திரிகைகளில் செய்திவந்ததைப்பார்த்திருக்கிறோம். ஏற்கெனவே 45 சதவீதமாக இருந்த இந்த மறைமுக வரியானது இன்றைக்கு 81 சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. மறைமுக வரி என்பது ஏழை எளிய மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்கள்மீது போடக்கூடிய வரி. அதன் மூலம் சாதாரண மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். வெளியில் சொல்வதோ ''வரியைக் குறைப்போம், வசதியைப் பெருக்குவோம்'' என்று. ஆனால் நடைமுறையைப் பார்த்தால் நேர்மாறாக இருக்கிறது. இப்படிப்பட்ட சாதாரண மக்கள் பயன்படுத்தும் பொருள்களுக்கு போடக்கூடிய விற்பனை வரி, மறைமுக வரி நிச்சயமாகத் தடுக்கப்பட வேண்டும். அது மட்டுமல்லாமல் புதிய வரி போடுவதை நிச்சயமாகப் போடக்கூடாது என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் 5 சதவீதம் என்பதை 2 சதவீதம் என்ற அளவுக்கு வரியைக் குறைப்போம் என்று சொன்னார்கள். அதை வாக்குறுதியாகச் சொல்கிறேன் என்றார்கள். ஆனால் அதுபற்றி ஒரு ஆதாரபூர்வமாக, எழுத்துப்பூர்வமாக திருத்தம் கொடுக்க தயாராக இல்லை. இப்படிப்பட்ட ஒருசூழ்நிலை இருக்குமானால் இந்த அரசு அவ்வப்போது இந்த வரியை உயர்த்தக்கூடிய நிலைமை ஏற்படும். அந்த நிலைமை இருந்தால் நிச்சயமாக சதவீதம் என்பது நாளை 5 சதவீதமாக ஆக்கப்படலாம். அந்த அபாயம் இதிலே இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே நிச்சயமாக, ஒட்டுமொத்தமாக இந்த வரி கூடாது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. ரா. கிருஷ்ணன்] [1983 ஏப்ரல் 27

அதோடு, இந்தப் புதிய வரி மூலம் 20 கோடி ரூபாய் வசூல்செய்ய இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இந்த ஆண்டு சரியான முறையில் வரியை வசூல் செய்த காரணத்தால் சென்ற ஆண்டைவிட சுமார் 60 கோடி ரூபாய் அதிகமாக வசூல் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஏற்கெனவே மத்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ள எல். கே. ஜா குழுவினுடைய அறிக்கையிலும் கூட, புதிய வரிகள் போடுவது சரியல்ல என்றும், அதே நேரத்தில் இருக்கக் கூடிய வரிகளை முறைப்படுத்தி, சரிப்படுத்தி வசூல் செய்வதன் மூலமாகவே வருவாயை அதிகரிக்க முடியும் என்றும் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் புதியதாகப் போடுகின்ற இந்த நுழைவு வரிகளை நீக்கிவிட்டு, ஏற்கெனவே இருக்கக்கூடிய வரிகளை, சட்ட அமைப்பு விதிகளின் மூலமாக முறையாக வசூல் செய்யக்கூடிய வகையினை சரிப்படுத்த வேண்டும். அதுதான் ஒரு சரியான வழியாக இருக்க முடியும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏற்கெனவே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இதைப் பற்றி பேசுகிறபோது, அப்படிப்பட்ட நுழைவு வரிகள் பல்வேறு மாநிலங்களிலேயும் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டினார்கள். அது உண்மைதான். ஆனால் பல்வேறு மாநிலங்களிலேயும் இருக்கின்ற அந்த நுழைவு வரிகளை, மத்திய அரசாங்கத்தின் ஆலோசனைகளின் பேரில், அந்த அரசாங்கங்கள் நீக்குவதற்குத் தயாராக இல்லை. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இன்னமும் அதிகமான நிதியினை மத்திய அரசாங்கத்திடமிருந்து நாம் எதிர் பார்க்கிறோம். மத்திய அரசாங்கமும் கொடுப்பதற்குத் தயாராக இல்லை. ஆகவே இப்படிப்பட்ட புதிய வரிகளைப் போட்டு மத்திய அரசாங்கத்தை நிர்ப்பந்தப்படுத்துவதன் மூலமாகக் கூட நமக்கு அதிகமான நிதி கொடுக்க முன் வந்தால், இப்படிப்பட்ட வரிகளை போடுவதை நாம் அவசியமாகத்தான் நினைப்போம் என்றும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆனால் இதில் நான் குறிப்பிட விரும்புவது கொக்கு தலையில் வெண்ணெய் வைத்து பிடிக்கின்ற கதைதான் இது நேரிடையாக மத்திய அரசாங்கத்திடமிருந்து நமக்கு கிடைக்க வேண்டிய நியாயமான நிதி உதவியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பதை விட்டுவிட்டு, சுற்றி வளைத்து புதிய ஒரு சட்டத்தையும் வரிகளையும் போட்டு, அதன் விளைவாகத் தமிழக மக்களின் மீது அதிகமான வரிப் பளுவைச் சுமத்தி, அதை நிவர்த்தி செய்ய மத்திய அரசாங்கம் நிதி உதவி செய்ய முன் வரும் என்று கற்பனையாக நீங்கள் நினைப்பீர்களேயானால், நிச்சயமாக அது தவறான எண்ணம் தான் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு இன்றைக்கு தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இங்கேபல்வேறு நிலைகளிலே இருக்கக்கூடியவியாபாரிகள்சங்கங்கள் இந்த வரிகளை எதிர்த்து, அங்களுடைய கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்திருக்கின்றன. ஆனால் இந்த வரிகளினால் அவர்கள் மட்டும் தான் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது அல்ல, தமிழ்



1983 ஏப்ரல் 27] (திரு. ரா. கிருஷ்ணன்)

நாட்டினுடைய பொது மக்கள் தான் இதனால் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அதோடு ஏற்கெனவே இருக்கிற சில வரி வசூல் முறையிலே கூட அரசாங்கம் சரியான வாய்ப்புகளைப் பயன்படுத்தத் தயாராக இருக்கிறதா இல்லையா என்று நான் கேட்க விரும்புகிறேன். காரணம் இங்கேயேகூட பலர் அதுபற்றிப் பேசினார்கள். உருக்கு உருட்டு ஆலை சம்பந்தமாக.

அதில் 4 சதவீதமாக உயர்த்திப் போடப்பட்ட வரி, உயர் நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெறப்பட்டு, பிறகு உச்ச நீதி மன்றத்தில் அப்படி வசூல் செய்யலாம் என்று தீர்ப்பு வழங்கப் பட்டும் கூட, போடப்பட்ட அந்த வரி ரத்து செய்யப்பட்டிருப்பது எவ்வளவு கோடி ரூபாயைத் தமிழ்நாட்டு அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுத்தியிருக்கிறது என்பதை அனைவரும் அறிவார்கள். ஒரு பக்கம் அப்படி உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு மாறாக வரி பாக்கிகளை ரத்து செய்வது, இங்கே இன்னொரு பக்கம் நுழைவு வரி என்ற பெயரால் தமிழ்நாட்டு மக்களின் தலைமீது புதிய பளுவைப் போட்டு, அரசாங்கத்திற்கு வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்காகப், போடவேண்டியிருக்கிறது என்று காரணம் சொல்வதை, நிச்சயமாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் இன்னொன்றையும் நான் கூற விரும்புவது, ஏற்கெனவே மதுவிலக்கு தளர்த்திய சட்டத்தின் மூலமாகப் பல கோடி ரூபாய் வருமானம் அரசுக்கு ஏற்பட்டு வருகிறது. ஆனால் கள்ளச்சாராயம் பெருகி வருவதன் காரணமாக, அரசாங்கத்திற்கு வரவேண்டிய அதிக வருமானம் கணிசமான அளவுக்கு குறைகிறது. இவைகளையெல்லாம் முறைப்படுத்தி, சரிப்படுத்துவதன் மூலமாக அரசாங்கத்தின் வருவாயை உயர்த்த வழி இருக்கிறது. ஆகவே இருக்கிற நிலைமைகளை மாற்றி அமைக்கிறபோது, நமக்கு நிச்சயமாகக் கூடுதலாக வருமானத்தை எதிர்பார்க்கிற வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்புகளை அரசாங்கம் உபயோகப்படுத்திக் கொண்டு, இந்த நுழைவு வரிகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல தமிழ்நாட்டிலே பலவகையான தொழிற்சாலைகள் இருக்கின்றன அந்தத் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் மூலப்பொருள்களை நாம் அதிக அளவில் வெளி மாநிலங்களிலே இருந்துதான் வரவழைக்கிறோம். அப்படி நம்முடைய தொழிற் சாலைகளுக்கு மூலப்பொருள்கள் வருகிறபோது இங்கே குறிப்பிடப் பட்டிருக்கிற ஷெட்யூலில் இருக்கிற அந்த மூலப்பொருள்களின் மீது வரியைப் போடுவதன் காரணமாக, நிச்சயமாக தொழிற் சாலைகளின் நிலைமை பாதிக்கப்படும். தொழில்கள் பாதிக்கப் படும், உற்பத்தி குறையும், அதன் மூலமாகத் தமிழ்நாட்டினுடைய வருமானம் கணிசமாகப் பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது)

(திரு. ரா. கிருஷ்ணன்) [1983 ஏப்ரல் 27

ஒன்றை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். அத்தோடு ஏற்கெனவே இங்கே பிரிவு 5 (4) (1)–ல், அந்த அதிகாரி ளுக்குத் தன்னிச்சையாக முடிவு செய்யக்கூடிய அதிகாரத்தை வழங்க இந்த சட்டம் வகை செய்கிறது. அப்படித் தன்னிச்சையாக முடிவு செய்யக் கூடிய நிலைமை ஏற்படுமேயானால், நிச்சயமாக ஊழல்கள் நாட்டிலே அதிகரிக்கும். சோதனைச் சாவடிகளில் எப்போதுமே நாம் வழக்கமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் — இதற்கு முன்பு கூட — அங்கே மிகவும் பயங்கரமான ஊழல்கள் இருக்கின்றன. ஆகவே ஊழல்களை அதிகரிக்கக்கூடிய இந்தச் சட்டத்தை நிச்சயமாகத் தமிழ்நாடு அரசாங்கம் திரும்பப் பெற்றுக் கொண்டு, தமிழ்நாட்டு மக்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்யவேண்டும் என்று கூறி முடிக்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 11-30)

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இப்போது இங்கே நம்முடைய விவாதத் திற்குவந்து இருக்கிற மசோதா சம்பந்தமாக இது ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தும்போதே இந்த அவையில் இருக்கின்ற அத்தனை எதிர் வரிசையில் இருக்கின்ற கட்சிகள் எல்லாம் இந்த வரி சம்பந்தமாக இதை நீங்கள் அறிமுகப்படுத்துவதை நாங்கள் எதிர்க்கிறோம், இதை நீங்கள் திரும்பப்பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அப்போதே வற்புறுத்தியிருக்கிறோம். அதை எல்லாம் மீறி திரும்பவும் மசோதா கொண்டு வந்து இந்த வரி விதிக்கக்கூடிய இந்த ஒரு நிலையை ஏற்படுத்துவதற்காக இங்கே திரும்பவும் கொண்டு வந்து இருக்கிறீர்கள். அட்ட வணையில் சொல்லக்கூடிய இந்தப் பொருள்களுக்கு நுழைவு வரி நீங்கள் விதிக்க உத்தேசித்து இருக்கிற இந்த பொருள்கள், சர்க்கரை, துணிகள், புகையிலை அதன் துணைப் பொருள்கள், சிமெண்டு, பெட்ரோலியம் பொருட்கள், வனஸ்பதி, மருந்துகள் மருந்துப் பொருட்கள், காகித அட்டைகள் இப்படி சாதாரண மக்கள் ஏழை எளிய மக்கள் உபயோகிக்கின்ற பொருட்களுக்குக் கூட அத்தனை பொருட்கள் மீதும் இப்போது நீங்கள் இந்த வரியை விதிப்பதற்காக இங்கே மசோதா கொண்டு வந்து இருக்கிறீர்கள் இந்த வரி விதிப்பு சம்பந்தமாக ஏற்கனவே வணிகர்கள் பூராவும், தமிழ்நாடு பூராவும் உள்ளவர்கள் எல்லாம் இது எப்படி அவர்களை பாதிக்கிறது என்பது மட்டும் அல்லாமல் பொதுமக்களை எப்படி பாதிக்கும் என்று ஏற்கனவே இது சம்பந்தமாக உண்ணாவிரதப் போராட்டம் மற்ற இயக்கங்கள் எல்லாம் நடத்தியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்கிறநேரத்தில் இது பல மாநிலங்களில்—14 மாநிலங்களில்—இது மாதிரி நகர் பிரவேச வரி ஆக்ட்ராய் வரி போன்ற வரிகள் இருக்கின்றன. அது மாதிரியாக நாங்கள் இங்கே கொண்டு வந்து இருக்கிறோம் என்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த நுழைவு வரி சம்பந்தமாக இங்கே சொல்லக்கூடிய வாதம் நியாயமான வாதம் அல்ல என்பதை



1983 ஏப்ரல் 27] (திரு. சோ. அழகர்சாமி)

நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கனவே இது எவ்வளவு
மோசமான வரி என்பதை இந்த ஆக்ட்ராய் வரி ஒரு அருவறுக்கத்
தக்க வரி, இது கைவிடப்படவேண்டும் என்று சொல்லி
ஏற்கனவே இருக்கின்ற பல மாநிலங்களில் வரி சம்பந்தமாக
பொருளாதார நிர்வாக சீர்திருத்த கமிஷனுடைய தலைவர்
திரு. எல். கே. ஜா. போன்றவர்கள் எல்லாம் கூறியிருக்கிறார்கள்
என்பதை ஏற்கனவே சொல்லியிருக்கிறார்கள்; நாங்களும் சொல்லி
யிருக்கிறோம். அது மட்டும் அல்லாமல் இன்றைக்கு நம்முடைய
தமிழகத்திலே விற்பனை வரி சம்பந்தமாக சென்ற ஆண்டுக்கு
முந்தைய ஆண்டு 490 கோடி ரூபாய்க்கு நம் அரசுக்கு விற்பனை
வரியாகக கிடைத்து இருக்கிறது. சென்ற ஆண்டு 1981–82 ம்
ஆண்டு 590 கோடி ரூபாய் நாம் எதிர்பார்த்ததை விட அதிகமாக
50–60 கோடி ரூபாய் கிடைத்து இருக்கிறது. இந்த
ஆண்டு 1982–83க்கு ஏறக்குறைய 690 கோடி ரூபாய் விற்பனை
வரி மூலமாக அரசுக்கு வருமானம் கிடைக்க இருக்கிறது. டிசம்பர்
வரை வந்த கணக்கீட்டு அடிப்படையில் பார்ப்போம் என்று
சொன்னால் சென்ற ஆண்டு கிடைத்ததை விட 100 கோடி
ரூபாய்க்கு அதிகமாக விற்பனை வரி மூலமாக கிடைக்கிறது.
இதிலே கூட வியாபாரிகள் ஒரு யோசனையை அமைச்சர்
இடத்திலே நேராகச்சொன்னார்கள். 26 கோடி ரூபாய் நீங்கள்
எதிர்பார்க்கிறீர்கள், அதற்கு இந்த வரிக்குப் பதிலாக வேறு
ஆலோசனை சொல்கிறோம். விற்பனை வரியில் சில மாற்றங்களை
செய்வதன் மூலமாக இந்த 26 கோடி ரூபாய்க்கு அதிகமான
வருமானம் வரக்கூடிய ஒரு ஏற்பாட்டை சுலபமாக கிடைப்பதற்கு
வழியை சொல்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்
பற்றி எல்லாம் அரசு ஆலோசிக்காமல் இந்த மாதிரி ஒரு நுழைவு
வரி கொண்டு வருவதன் காரணமாக நீங்கள் பட்ஜெட்டில்
சொல்கிற காலத்தில் 26 கோடி ரூபாய் என்று சொன்னீர்கள்.
இந்த 2 சதவீதம் வரி என்று சொல்லும் நேரத்திலே 20 கோடிவரும்
என்று நீங்கள் சொன்ன நேரத்தில் வியாபாரிகள் சொன்னார்கள்
இந்த நுழைவு வரி என்று சொல்லக்கூடிய பொருட்களுக்கு
எல்லாம் நீங்கள் வரி விதிப்பதால் ஏறக்குறைய 60 கோடி ரூபாய்
வரையில் அரசுக்கு வரி கிடைக்கும். அவர்கள் உத்தேசமாக
ஒரு கணக்கு போட்டு சொல்லியிருக்கிறார்கள். ஏன் என்றால்
இன்றைக்கு இருக்கின்ற பொருட்கள் அத்தனை பொருட்களும்
நகரத்திற்கு வந்துதான் மறுபடியும் கிராமத்திற்குப் போக
வேண்டும். ஆகவே நகரத்திற்கு வருகின்ற நேரத்தில் நீங்கள்
நுழைவு வரி என்று சொல்லக்கூடிய வரியைப் போடுவதன்
காரணமாக விற்பனை வரியை நீங்கள் 5 சதவீதம் உயர்த்து
கிறீர்கள் என்று தான் அர்த்தமே தவிர இதற்கு வேறு அர்த்தமே
கிடையாது. இருக்கிற சேல்ஸ்டாக்ஸ் நேரிடையாக உயர்த்து
வதற்குப் பதிலாக மறைமுகமாக 5 சதவீதம் உயர்த்துகிறீர்கள்
என்று அர்த்தம். அது மட்டும் அல்லாமல் நான் ஒன்றைச் சொல்ல
விரும்புகிறேன், பட்ஜெட் உரையிலே நம்முடைய மாண்புமிகு
நிதியமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்தில் நுழைவு வரி 2
சதவீதம் விதிக்கப்படும் என்று சொன்னார்கள். நீங்கள் இப்போது
கொண்டு வருகிற இந்த மசோதாவில் 5 சதவீதத்திற்கு

(திரு. சோ. அழகர்சாமி) [1983 ஏப்ரல் 27

மேற்படாமல் என்று போட்டுவிட்டு, அந்த 5 சதவீதத்திற்கு மேற்படாமல் என்று சொல்லிவிட்டு அப்போது வெவ்வேறு நகரத்தில் வெவ்வேறு விதத்தில் அரசு நிர்ணயிக்கும் அளவிலே அரசு நிர்ணயிக்கிறார்கள். வரி விதிப்பதற்கு அதிகாரத்தைப் பெறுகிறீர்கள். அப்படி என்றால் ஒரு நகரத்தில் 5 ஒரு நகரத்தில் 4, ஒரு நகரத்தில் 3 உங்களுடைய நோக்கம் போல. எந்த எந்த நகரத்தில் எப்படி எப்படி இந்தப் பொருட்களுக்கு போடலாம் என்று சொல்லக்கூடிய முறையில் நீங்கள் போடுவதற்கு அதிகாரத்தைப் பெறுகிறீர்கள். இது என்ன விநோதமான சட்டமாக இருக்கிறது. இதற்கு முன்னால் எத்தனையோ சட்டங்கள் வந்து இருக்கின்றன. போடுகிற நேரத்திலே இந்த பொருட்களுக்கு இத்தனை சதவீதம் வரி இந்தப் பொருட்களுக்கு 2 சதவீதம் இதற்கு 1 சதவீதம், இதற்கு ஒரு முனை வரி இதற்கு பல முனை வரி என்று போடுகிறார்கள். இந்தச் சட்டத்திலே 5 சதவீதத்திற்கு மேற்படாமல் என்று சொல்லிவிட்டு இந்த பொருட்களுக்கு இவ்வளவு வரி என்று சொல்லாமல் நீங்கள் நினைத்தபடி எல்லாம் 5 சதவீதம்வரை போடுவதற்கு வேண்டிய அதிகாரத்தைப் பெறுவதற்கு இந்தச் சட்டத்திலே நீங்கள் வரி வகையை வைத்து அதிகாரம் கேட்கிறீர்கள். ஆகவே வரி சம்பந்தமாக இது ஏற்கெனவே இந்த 13 பொருட்களுக்கும் 2 சதவீதம் என்று சொன்னாலும் 60 கோடி ரூபாய் வரையில் வருமானம் வரும் என்று வியாபாரிகள் சொல்கிறார்கள். இப்போது 4 சதவீதம், 5 சதவீதம் என்று வைத்தாலும் ஏறக்குறைய 100 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் அரசுக்கு வரும். ஏற்கெனவே சாதாரண மக்கள் வாங்குகிற பொருட்களின் விலைகள் எல்லாம் உயர்ந்ததன் காரணமாகத் தங்களுடைய வாழ்க்கையை நடத்தமுடியாத அளவுக்கு மிக மிகக் கஷ்டத்திற்கு அவர்கள் ஆளாகியிருக்கிற நேரத்திலே மேலும் நுழைவு வரி என்று போடுவதன் காரணமாக—சென்னையிலேயும் சென்னையிலிருந்து வாங்கிக்கொண்டு போய் திருச்சியிலே விற்கிறபோது, அதைத் திருச்சியிலிருந்து வாங்கிக் கொண்டுபோய் திருநெல்வேலியில் விற்கிறபோது இப்படி மூன்று இடங்களிலே 5 ரூபாய் 5 ரூபாய் வீதமாக மொத்தம் 15 ரூபாய் 100 ரூபாய்க்கு அதிகப்படுகிற காரணத்தினாலே 115 ரூபாய் கொடுத்து வாங்கவேண்டிய நிலை மக்களுக்கு ஏற்படுகிறது. அதைப்போலவே ஏற்கெனவே துணிகளுக்கு எக்சைஸ் டியுட்டிதான் போடுவார்கள், கைத்தறிக்கோ மற்றவைகளுக்கோ விற்பனை வரி கிடையாது, ஏற்கெனவே ஒரு லட்சம், 2 லட்சம் விற்பனை ஆகிற இடங்களிலே கூட வரி இல்லாத காரணத்தினாலே அங்கேயெல்லாம் ஒழுங்காகக் கணக்குகளை எழுதுகிறார்கள். பிரச்சினை இல்லை அதிலே. இப்போது இந்த வரியைப் போட்டால் ஒரு வேஷ்டி, சேலை வாங்கினால் அதற்கு 10 ரூபாய் அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இன்னொரு நகரத்திற்குப் போனால் இன்னொரு 10 சதவீதம் போடுகிற நிலைமை இருப்பதால் இன்னொரு பத்து ரூபாய் அதிகமாகிறது. பொது மக்கள் தலையிலே — ஏற்கெனவே விலைவாசி உயர்வினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற சாதாரண மக்கள் மீது—இன்னும் பெரிய பாரத்தைத் தூக்கி வைக்கிறீர்கள்.



1983 ஏப்ரல் 27] (திரு. சோ. அழகர்சாமி)

இந்த வரி சம்பந்தமாக வியாபாரிகளுக்கு ஏகப்பட்ட தொந்தரவுகள் தொல்லைகள் ஏற்படும். அது மட்டுமல்ல, சென்னைக்கு நாங்கள் பஸ்ஸிலே வருகிறபோது பார்க்கிறோம். செக்போஸ்டிலே எல்லா லாரிகளையும் வரிசையாக நிறுத்தி வைத்துப் பார்ப்பதைப் பார்க்கிறோம். அதைப்போலவே இந்த வரியைக் கொண்டுவந்தால் ஒவ்வொரு நகரத்திலேயும் லாரிகளை நிறுத்தி என்ன என்ன பொருட்கள் இருக்கின்றன, இன்வாய்சை கொண்டுவா என்று சொல்லி கேட்கின்ற நிலை ஏற்பட்டு அதன் காரணமாக லாரிகள் மூலமாகப் பொருட்களைக் கொண்டு வருவதிலே காலதாமதம் ஏற்படும்.

இந்த சேல்ஸ்டாக்ஸ் என்பதை 1937 ஆம் ஆண்டிலே இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழ்நாட்டிலேதான் கொண்டு வந்தார்கள். மதுவிலக்கைக் கொண்டுவந்ததற்காக அப்போது ஒரு பைசா என்று—அந்த ஒரு பைசா இன்றைக்கு அரை பைசா தான் மதிப்பு வரும்—ராஜாஜி முதலமைச்சராக இருந்தபோது கொண்டுவரப்பட்டது. அப்போது அதன் மூலமாக வருமானம் அரசுக்கு 22 கோடி ரூபாய் தான் வந்தது. இன்றைக்கு அதுவே வளர்ந்து கிட்டத்தட்ட 600 கோடி ரூபாய்க்கு உயர்ந்திருக்கிறது. சாதாரணமாக ஒரு ஆள் ஒரு மனிதன்மீது 120 ரூபாய் வரையில் வரியைத் திணிக்கக்கூடிய நிலைமை ஏற்கனவே இருக்கிறபோது இப்போது இந்த நுழைவு வரி என்ற முறையிலே கொண்டுவருவது சரியல்ல, அத்தனை பேர்களும் இந்த வரி வேண்டாம் என்று சொல்கிறபோது, எதிர்க்கட்சிகள் எல்லாம் இது வேண்டாம என்று சொல்கிறபோது இது மக்களைப் பெரிதும் பாதிக்கும் என்றும் வியாபாரிகளுக்கு தொந்திரவுகளை, தொல்லைகளை ஏற்படுத்தும், ஊழல்களை அதிகப்படுத்தும் என்றும் அத்தனை பேர்களும் சொல்கிறபோது, இப்படியெல்லாம் இருக்கிறபோது வரி விதிப்பைக் கொண்டு வருவது நியாயமல்ல. இந்த நேரத்திலாவது இந்த எண்ணத்தை கைவிட்டு இந்த மசோதாவை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த வரி விதிப்பு சரக்குப் போக்குவரத்தில் மிகுந்த காலதாமதத்தை ஏற்படுத்தும், வியாபாரிகளுக்கு மிகுந்த தொந்திரவுகளை, தொல்லைகளை உருவாக்கும், ஊழல்கள் பெருகுவதற்கு வழிவகுக்கும், பொருட்களின் விலைகள் உயர்ந்து சாதாரண ஏழை எளிய மக்கள் பாதிப்புக்கு ஆளாவார்கள் என்ற காரணத்தினாலே இந்த வரிவிதிப்பைக் கைவிட்டுவிட்டு இந்த மசோதாவைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

(முற்பகல் 11-40)

திரு. பி. முகமது இஸ்மாயில்: மாண்புமிகு மாற்றுத் தலைவா அவர்களே, நுழைவு வரி மசோதாவிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிற விவாதத்தில் பங்கேற்று ஜனதா கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்திலே வைக்க விழைகிறேன். நுழைவு வரி மிக மிக பிற்போக்கான வரி; எனவே அது நிறுத்தம் செய்யப்பட வேண்டுமென்று

பொருளாதார சீர்திருத்தக் கமிஷன் தலைவர் அவர்களும், ஏனைய பொருளாதார நிபுணர்களும் கருத்து வழங்கி வருகிற இந்த வேளையில் தமிழக சர்க்கார் முனைந்து நின்று எங்கேயிருந்தோ இந்தப் புதிய வரியைக் கண்டுபிடித்து இங்கே திணிப்பதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறது. எனவே ஜனதா கட்சி இதை மிகக் கடுமையாக எதிர்க்கிறது. இந்த மன்றத்திலே நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்கிறபோது நிதியமைச்சர் அவர்கள் இத்தகைய வரி வரப்போகிறது என்று கோடிட்டு காட்டினார்கள். அப்போதே இந்த மன்றத்திலே பல கட்சிகளுடன் ஜனதா கட்சியும் கடுமையாக எதிர்த்தது. மேலவையிலே எதிர்ப்பு தெரிவித்ததாக செய்திகள் வந்தன. வணிக பிரமுகர்கள், வணிக சமுதாயம் முழுமையாக எதிர்த்துக் கொண்டிருக்கிறது. மக்கள் சமுதாயத்தில் பெரும்பகுதி இந்த வரியை முழுமையாக எதிர்த்துக் கொண்டிருக்கிறது. இந்த எதிப்புகளை எல்லாம் பொருட்படுத்தாமல் இந்த அரசு நுழைவு வரியை எப்படியும் நுழைத்து விடுவது என்று முனைந்து செயல்படுவதைப் பார்த்து நாங்கள் வேதனைப்படுகிறோம். இந்த வரி விதிப்பிற்கு சொலலப் படுகிற காரணம் அரசிற்கு அதிகமான செலவுகள் ஏற்படுகின்றன, செலவுகளை சரிகட்டுவதற்கு வருவாய் தேவை என்று நியாயம் கற்பிக்கிறார்கள். அதிகமான செலவுகள் ஏற்படுகின்றன என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். அதற்கு அதிகமாக வருவாய் தேவைப்படுகிறது என்பதையும் ஏற்றுக் கொள் கிறோம். அதிகமாக ஏற்படுகிற செலவுகளைச் சரிக் கட்டுவதற்காக ஏற்கெனவே பல வழிகளிலே வருவாய் ஆதாரங்களை நீங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். மதுவிலக்கைத் தளர்த்தியதன் காரணமாக ஏழைகள் சிரித்துக்கொண்டே இந்த அரசிற்கு 155 கோடி ரூபாய்களை வரியாகத் தந்து கொண்டிருக்கிறார்கள். மதிய உணவுத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். அதற்கு அதிகப் படியாகப் பணம் தேவைப்படுகிறது, 134 கோடி ரூபாய் பணம் தேவைப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இங்கே இதற்கு முன்னாலே சுட்டிக்காட்டிய ஒரு கருத்தை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். மதிய உணவுத் திட்டத்திற்குப் புதிய பெயர் வைத்த காரணத்தினால் 134 கோடி ரூபாய் இந்த அரசு செலவிடுகிற ஒரு கட்டாய நிலைக்கு தள்ளப்படுகிறதோ என்ற அச்சம் எங்களுக்கு உண்டு; இதை நான் சொல்வதற்கு காரணம் இதேமாதிரியான திட்டத்தை ஆந்திரா மநிலமும் அமல்படுத்திக் கொண்டிருக்கிறது. அதன் பெயர் மதிா உணவுத் திட்டம்டி அந்தத் திட்டத்தின் செலவை சரிக்கட்டுவதகாக 100 கோக ரூபாயை அவர்கள் மத்திய அரசிலேயிருந்து மானியமாய்ப் பெறுகிற வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் இங்கே நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் மதிய உணவுத் திட்டத்திற்கு முதல்வரின் சத்துணவுத் திட்டம் என்று பெயர் மாற்றி வத்ததன் காரணத்தால் மத்திய அரசிலேயிருந்து அத்தகைய மானியத்தைப் பெறுவதற்கு வகையற்ற நிலையில் இருக்கிறோம். எனவே அரசு 134 கோடி ரூபாய் அதிகமாகச் செலவிட வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. மத்திய அரசு நமக்கு உதவி செவதாகவும் இல்லை. எனவோ



கேட்டுக் கொள்வது. மதிய உணவுத்
இந்த மன்றத்திலே வரிப்பணத்திலேயிருந்து தான் நாம்
திட்டத்தையும் மக்கள் தருகிற
அமல்படுத்துகிறோம். முதல்வரால் கொண்டு வரப்படுகிற
திட்டம், முதல்வரின் திட்டம் என்று பெருமையாகக் கூறிக்
கொள்வதுண்டு. ஆனால் திட்டங்கள் அனைத்தும் அரசின்
திட்டங்களாக வெளியிடப்படுகின்றன. ஆனால் மதிய உணவுத்
திட்டம் என்பதை முதல்வரின் திட்டம் என்று எதற்காகப்
பெயர் வைத்தீர்கள் என்று எங்களுக்குத் தெரியவில்லை.
ஒருவேளை அரசாங்கத்திற்கு விளம்பரத்திற்கு அது துணை
புரியலாம். ஆனால் அதேநேரத்தில் இப்போது மக்கள் 100
கோடி ரூபாயை இழந்திருக்கிறார்களே, அதை கணக்கில் எடுக்க
வேண்டாமா என்று கேட்டுக் கொள்கிறேன். அதிகமான
செலவுகளைச் சரிகட்டுவதற்காகப் புதிய வரிகளை திணிக்க இந்த
அரசு முனைந்து கொண்டிருக்கிறது. இங்கே எதிர்ப்புக் குரல்
எழுப்பப்பட்ட போது பல பொருள்களுக்கு விதிவிலக்கு
அளிக்கப்படுமென்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த
மன்றத்திலே உறுதியளித்தார்கள், ஆனால் அந்த பொருள்களுக்கு
இதுவரையில் விதிவிலக்கு அளிப்பதற்கான திருத்தங்கள் இந்த
மன்றத்தின் முன்னால் வைக்கப்படவில்லை. இருக்கிற நிலையில்
இந்தச் சட்டம் நிறைவேறுவதாக இருந்தால், இங்கே சுட்டிக்
காட்டியிருக்கிற அத்தனை பொருள்களுக்கும் ஒட்டுமொத்தமாகச்
சுட்டிக்காட்டியிருக்கிற 13 பொருள்களுக்கும், அதன்கீழ் வருகிற
நூற்றுக்கணக்கான பொருள்களுக்கும் வரி விதிப்பதற்கான
அதிகாரத்தை இந்த அரசு இந்தச் சட்டம் மூலமாகப் பெறுகிறது
என்பதை மறந்துவிடக் கூடாது. எனவே தான் நீங்கள் வாக்குறுதி
அளித்ததைப் போல, விதிவிலக்கு என்று சுட்டிக்காட்டுகிற
பொருள்கள் மீது வரிவிதிப்பு செய்வதற்கான
போது, அந்தப் பொருள்கள் இல்லாமல் போய்விடும். இப்போது
அதிகாரம் இந்த அரசிற்கு இல்லாமல் போய்விடும். இப்போது
அந்த அதிகாரத்தை இந்தச் சட்டத்தின் வாயிலாக நீங்கள்
பெற்றிருக்கிறீர்கள். அதற்கு விதியளிக்கிற அதிகாரத்தை
நிர்வாகத் துறைக்கு வழங்கயிருப்பதாகச் சொல்லப்படுகிறது.
நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்வது நிதி
ஆதாரத்தை தேடிக்கொள்கிறபோது, குறிப்பாக புதிய வரி
களை புகுத்துகிறபோது இந்த மாமன்றத்தின் அங்கீகாரத்தையும்
ஆதரவையும் பெற்று சட்டம் நிறைவேற்றப்பட வேண்டு
மென்பது தான் மரபு. அந்த மரபுகளை எல்லாம் மீறி நிர்வாகத்
துறைக்கு அதிகமான அதிகாரத்தை சட்டத்தின் வாயிலாக,
இந்த சட்டமுன்வடிவு வழங்குவதற்கு முற்படுகிறதோ என்ற
சந்தேகம் எங்களுக்கு ஏற்படுகிறது. இங்கே இதனால் வசூலிக்கிற
தொகையில் ஒரு பகுதியை உள்ளூரிலேயிருக்கிற அமைப்புகளுக்கு
வழங்கிவிடுவதற்கான குறிப்பையும் பிரிவு 34 சுட்டிக்காட்டுகிறது;
அது எந்த அளவிற்கு எந்தெந்த நகரசபைகளுக்கு அல்லது
உள்ளூர் பகுதிகளுக்கு வழங்கப்படுகிறதென்பதை இந்த சட்டத்தில்
கோடிட்டுக் காட்டவில்லை. எனவே அந்தக் கொண்டிருக்கிற
அதிகாரத்தை நிர்வாகமே தங்களுடைய கரங்களில் வைத்திருக்
கிறதென்று இதிலேயிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.
இந்தப் புதிய வரியின் வாயிலாக எனக்கு முன்னால் பேசிய

(திரு. பி. முகமது இஸ்மாயில்) [1983 ஏப்ரல் 27

மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளதைப் போல, ஊழல்கள் அதிகமாகும்; விலைவாசிகள் ஏற்றம் பெறும். ஏற்கனவே, விலைவாசி ஏற்றம் காரணமாக, மக்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். இப்பொழுது போடும் வரியினால், மக்கள் இன்னும் அதிகமாகப் பாதிக்கப்படுகிற நிலை ஏற்படுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விழைகிறேன். ஏற்கனவே, மத்திய அரசாங்கம் பல கோடிக்கணக்கான ரூபாய்களை வரியாக விதித்திருக்கிறது. விலைவாசிகள் கட்டுக்கடங்காமல் ஏறிக் கொண்டே இருக்கின்றன. ஏழை, எளியவர்களுக்கு அத்தியா வசியமான பண்டங்கள் அத்தனையின் விலையும் ஏறிக் கொண்டே இருக்கின்றன. சென்ற சில தினங்களுக்கு முன்னால் பத்திரிகையிலே வந்த செய்தியைப் பார்க்கும்போது, மிகுந்த அச்ச உணர்வு நமக்கு ஏற்படுகிறது. விலைவாசிகள் எந்த அளவிற்கு அதிகமாக ஏறிக் கொண்டிருக்கின்றன என்பதைப் புள்ளி விவரங்கள் நமக்குத் தகவல் தந்து கொண்டிருக்கின்றன. சென்ற 15 தினங்களுக்கு முன்னால், நுகர்வோர் குறியீட்டு எண் ஏறி, மத்திய அரசின் பணியாளர்களுக்கு இரண்டு முறைகள் பஞ்சப்படி தருவது என்று அரசு முடிவு மேற்கொண்டிருக்கிறது. அதோடு நின்றுவிடாமல் எஞ்சிய குறுகிய 3 மாதங்களிலே நுகர்வோர் குறியீட்டு எண் 500-ஐத் தாண்டி விட்டது. 1960-61 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாக எடுத்துக் கொண்டால், 500-ஐத் தாண்டியிருக்கிறது. அதைக் கணக்கிட்டுப் பார்க்கின்றபொழுது, இன்னும் 3 தவணைகள் பஞ்சப்படி தருகின்ற அளவுக்கு மத்திய அரசும் மாநில அரசும் தள்ளப் படுகின்ற நிலையிருக்கிறது. அந்த அளவுக்கு விலைகள் மிக அதிகமாக ஏறிக் கொண்டிருக்கின்றன. சுருக்கமாகச் சொல்வது என்றால், மாதம் ஒன்றுக்கு 8 புள்ளிகளை, நுகர்வோர் விலையீட்டுக் குறி எண் தாண்டிக் கொண்டு வருகிறது என்பதை இந்த மன்றத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இத்தகைய கடுமையான புதிய வரி விதிப்பின் வாயிலாக மக்களுக்கு ஏற்படுகின்ற இந்தத் துயரங்களையெல்லாம் கணக்கில் எடுத்து, பொருள்களின் விலைவாசிகள் ஏற்றப்படுவதற்கு மத்திய அரசோடு நாமும் போட்டியிட்டுக் கொண்டு புதிய வரிகளைப் புகுத்தி, விலைவாசி ஏற்றத்திற்குத் துணை நிற்க வேண்டா மென்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே நீங்கள் சுட்டிக்காட்டியிருக்கிற பொருள்களைப் பார்க்கும் போது, அத்தியாவசியமான பொருள்களுக்கு வரி விதிக்கப்படுவதில் முனைப்பு காட்டப்படுகிறது. அன்றாடத் தேவைப் பொருள்கள் அனைத்தையும் இங்கே சுட்டிக்காட்டி யிருக்கிறீர்கள். லக்சரி பொருள்கள் ஏதாவது இந்த அரசின் கண்ணோட்டத்தில் வந்ததா என்பதை நாம் எண்ணிப் பார்க் கின்றபொழுது, ஆடம்பரப் பொருள்கள் அனைத்தும் விடுதலை பெற்றிருக்கின்றன. அந்த ஆடம்பரப் பொருள்கள் உங்கள் கண் களுக்கு தெரிந்ததாகவே தெரியவில்லை. ஆடம்பரப் பொருள் களை எல்லாம் விட்டுவிட்டு ஏழைகள் அன்றாடம் உபயோகிக் கின்ற பண்டங்கள் மீது



1983 ஏப்ரல் 27]

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, ஆடம்பரப் பொருள்கள் விடப்பட்டது என்று சொன்னார்கள். என்ன, என்ன பொருள்கள் விடப் பட்டிருக்கின்றன என்று சொன்னால், அதை அரசு யோசிக்கும்.

**திரு. பி. முகமது இஸ்மாயில்:** எலெக்ட்ரிக் கூட்ஸ் என்று சொல்லியிருக்கிறீர்கள். எலெக்ட்ரிக் கூட்ஸில் நீங்கள் விளக்கமாகத் தந்திருக்கிற பொருள்களைப் பார்த்தபொழுது, டெலிவிஷன் போன்ற பொருள்களை நாம் பார்க்க முடியவில்லை, ஏர் கூலர் போன்ற பொருள்களை நாம் பார்க்க முடியவில்லை. இந்தப் பொருள்களை எல்லாம் ஆடம்பரப் பொருள்கள் என்ற அளவுக்கு இன்று அளவும் இந்தச் சமுதாயம் ஏற்றிருக்கிறது. அவைகள் எல்லாம் உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையென்பதை நான் சுட்டிக்காட்ட விழைகிறேன். ஆக, ஏற்கனவே, எனக்கு முன்னால் பேசிய தோழர்கள் சுட்டிக்காட்டிய குறைகளை எல்லாம் போக்குகின்ற வகையிலும் இந்தச் சட்ட முன்வடிவை, முடிந்தால் வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டும்; இல்லாவிட்டால், ஒரு செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி, மிக ஆழமாக ஆராய்ந்து, பிறகு கொண்டு வரவேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

(முற்பகல் 11-50)

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நுழைவு வரி விதிப்பதற்கு வகை செய்யும் சட்ட முன்வடிவில் காந்தி-காமராஜ் தேசிய காங்கிரசினுடைய கருத்தாக, அதனை இங்கே கொண்டு வருதல் கூடாது என்பதற்கு ஆதாரமாக சில சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், கொண்டு வந்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிலபல பொருள்களை இந்த வரவு செலவுத் திட்டத்திலே அறிவித்திருந்தார்கள். ஏழை, எளியவர்கள் பயன்படுத்திக்கொண்டிருந்த சிம்னி விளக்கு போன்றவைகளுக் கெல்லாம் வரி விலக்கு கொடுத்தார்கள், மாட்டுத் தீவனத்திலே மரவள்ளிக்கிழங்கு திப்பி போன்றவைகளுக் கல்லாம் இருந்த வரியினை இல்லையென்று சொன்னார்கள். ''கோவலர் வாழ்க்கை கொடும்பாடு உடையது அன்று'' என்று சொன்னதைப் போலே, அந்த ஆவினங்களை வைத்துப் பிழைக்கின்றவர் களெல்லாம் இவருக்குப் பாமாலை சூட்டுகின்ற அளவிற்கு மகிழ்ச்சியடைந்தார்கள். அந்த அமைச்சரிடமிருந்தா இந்த வரி வருகிறது என்பதனை எண்ணிப் பார்க்கின்ற பொழுதுதான் என்ன காரணம் என்று தெரியாமல் நாங்கள் திகைக்கின்றோம். மலரிலிருந்து நல்ல கள்ளை எதிர்பார்க்கிறோமே தவிர, கல்லை அல்ல.

அதைப்போலத்தான், இந்த வரியைப் பொறுத்தவரையில் நுழைப்பு வரியாக இருக்கின்ற இந்த வரி பலரினுடைய உழைப்பைக் கெடுக்கும் என்பது எங்களுடைய எண்ணம். ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்றபொழுது இது சட்ட வடிவம்

[திரு. குமரி அனந்தன்] [1983 ஏப்ரல் 27

அப்படியே பெறுமேயானால், ஏன் இது சட்டமாகவே ஆகுமேயானால் இலஞ்சத்திற்கு மஞ்சம் அமைத்துக் கொடுத்த தாக அமையும்; ஊழலுக்கு ஊற்றுக்கால் தோண்டிக் கொடுத்த தாக அமையும்.

இன்னும் சொல்லப்போனால் அரசுக்கு வரி செலுத்துவதை விட, அரசுக்கு வரி கட்டுவதைவிட அதிகாரிகளைச் சரிக்கட்டுவது எப்படி என்று சிந்திக்கின்ற வியாபாரிகளினுடைய பட்டியலை அதிகரிக்கச் செய்யும். சாலையோரத்திலிருக்கின்ற சேதனைச் சாவடிகள் அத்தனையும் வேதனைச் சாவடியாக ஆகும். அவை சாவடிகளா அல்லது நம்மைச் சாகடிப்பவைகளா என்று எண்ணுகின்ற அளவிற்கு வணிகர்களும், அந்தப் பொருட்களை எடுத்துச் செல்லுகின்றவர்களும் வேதனையால் வெந்து, நொந்து துடிக்கின்ற அளவிற்குச் செயல்கள் நடைபெறும்.

ஆதலாலே, இந்தச் சட்ட முன்வடிவின் முன்னால் நாம் என்னென்ன பிரச்னைகளைச் சந்திக்க இருக்கின்றோம் என்று சொல்லுகின்ற தகவல்களை நான் இங்கே தர இருக்கிறேன். விலைவாசி ஏறும் என்பதிலே, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போலவே உலகத்திலிருக் கின்றவர்கள் அத்தனை பேர்களும் ஒத்துக் கொள்வார்கள். அந்தக் கருத்து உண்மைதான் என்று. ஆனால் உயர்கின்ற விலைவாசிக் கேற்ப வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களினுடைய வாங்கும் சக்தி, அதன் மூலம் மக்களினுடைய நிதிநிலை உயருமா என்றால் நிச்சயமாக உயராது.

இது ஆக்ட்ராய் என்று சொல்லப்பட்டு, அந்தப் பெயரே சரியாக இல்லை என்று அதற்குப் பதிலாகத்தான் நம்முடைய அமைச்சரவர்கள் நுழைவு வரி என்று போட்டிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். இது ஆக்ட்ராயையும் சேரவில்லை; வெறும் நுழைவு வரியையும் சேரவில்லை. இந்த இரண்டும் சேர்ந்த ஒரு கலப்பட வரியாக இருந்து கொண்டிருக்கிறது.

இதைப் பொறுத்தவரையிலே பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் இருக்கின்ற நேரத்திலேயும் சில அதிகாரிகள் இந்த வரிகளை நீங்கள் போடலாமே என்று சொன்னது உண்டு. ஏனென்றால் அமைச்சர் பெருமகனுக்கு ஆலோசனை சொல்லு கின்ற அதிகாரிகளிலே சிலர் இப்படிப்பட்ட வரிகளின் மூலம்தான் வருமானத்தைப் பெருக்க முடியும் என்று நினைத்து அதனை அமைச்சர் பெருமகனாருக்குச் சொல்லியிருக்கலாம். இதே கருத்துக்களை, இதே ஆலோசனைகளை முன்பு முதலமைச்சராக இருந்த பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் ஆட்சிக் காலத் திலேயும் இந்த அதிகாரிகள் சொன்னது உண்டு. ஆனால், கூடாது என்று ஒரே வரியிலே அதனைத் தடுத்து நிறுத்தி விட்டார்; இந்த வரி வேண்டாமென்று ஒரு வரியிலே தடுத்து நிறுத்தியவர் அவர்.



1983 ஏப்ரல் 27] [திரு. குமரி அனந்தன்]

அதற்குப் பின்னாலே பேரறிஞர் அண்ணா என்று போற்றப் பட்டு முதலமைச்சராக இருந்தவர் காலத்திலேயும் அதிகாரிகள் ஆலோசனையைச் சொன்னார்கள். இவைகளையெல்லாம் ஏதோ உங்களுடைய உணர்வுக்குத் தருகின்ற உவையாக நான் கருத வில்லை. ஏற்கனவே அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து எடுத்த பகுதிகளைக் கையிலே வைத்திருக்கின்ற காரணத்தினாலே சொல்கிறேன். அவர்கள் இவைகளையெல்லாம் ஆதரிக்கவில்லை. ஆதலால், அந்த வரிகள் அந்தக் காலத்திலே போடப்படவில்லை எங்கள் பெருந்தலைவர் காமராஜருடைய காலத்திலே இது வேண்டாமென்று ஒதுக்கப்பட்டு, தள்ளப்பட்டது. அதைப் போலவே பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலேயும் வெறுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டது. அப்படிப்பட்ட ஒன்றை நீங்கள் இங்கே மீண்டும் கொண்டு வர வேண்டுமா என்பதுதான். Tapping the rich என்று சொல் கிறார்கள். அதுதான் கொள்கை என்றெல்லாம் பேசுகிறோம். Tapping the rich and pating the poor என்று சொல்லுகின்ற பொழுது இந்த நுழைவு வரிச் சட்டத்தை நான் பார்க்கிறேன். அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரங்கள் அநேகம்; அனந்தம். அந்த அதிகாரங்களை அவர்கள் வைத்துக் கொண்டிருந்தால் எத்தனை அனர்த்தம் வரும் என்பதை நம்மால் எண்ணிப்பார்க்க முடியவில்லை. ஆகவே, wrapping the rich with so much of power என்று சொல்லுகிறபோது என்ன நடக்கும்? grabbing the merchants ஆக வந்து சேரும். அவர்களை யெல்லாம் ஒரு பொறியிலே மாட்டி வைத்தது போலேயாகும். அவர்களை அதிகாரிகள் அலைக்கழிக்கின்ற ஒரு சூழ்நிலை அங்கே உருவாகும். அதைப்போலவே உற்பத்தி நமக்குக் குறைந்து போகும். இங்கிருக்கின்ற தொழிலை வெளியே தூக்கிக்கொண்டு போகலாமா என்று சொல்லுகின்ற சிந்தனை தொழிலதிபர் களுக்கு ஏற்படும். இங்கே இன்று வேலை செய்து பிழைத்துக் கொண்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் உருவாகுமோ என்று சொல்லுகின்ற அச்ச நிலை ஏற்படும்.

இவைகளையெல்லாம் பார்த்துத்தான் நான் மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்வேன், நல்ல செய்திகளை யெல்லாம் உங்கள் காதிலே போடுகின்ற நேரத்தில், நீங்கள் அவைகளை ஏற்றுச் செய்வீர்கள் என்ற நம்பிக்கையின் அடிப் படையிலே சொல்கிறேன். இந்த நுழைப்பு வரியிலே என்ன நியாயம் இருக்கிறது என்பதைச் சிந்தித்துக் கூட எங்களால் பார்க்க முடியவில்லை.

உதாரணமாகச் சொல்லப் போனால், ரூ. 20 கோடி தான் வருவாய் வரும் என்று நினைக்கிறீர்கள். நீங்கள் இதன்மூலம் விவரம் அறிந்தவர்கள் சொல்கிறார்கள். ரூ. 200 ஆனால் கோடியைத் தாண்டும் வருமானம் என்று. ரூ 200 கோடிக்கு மேல் வருமேயானால், ஒரு நூறு என்ன, பல நூறு கோடி, வேறு எங்கோ போய்ச் சேரும். விளைந்து கிடக்கின்ற கதிர்களாக

இருந்து கொண்டிருக்கின்ற கழனியிலே போகின்ற ஒரு களிறானது' அதன் வாய்க்குப்போவது கொஞ்சம், அதனுடைய காலிலே பட்டு சிதறுவது அதிகம் என்பது போல, அரசுக்குப் போகிற வருமானம் கொஞ்சமாகும் என்றும், அதிகாரிகளுக்குப் போகின்ற லஞ்சம் மிக அதிகமாகவும் இருக்கும் என்பது தான் இன்று இதனைத் தெரிந்தவர்கள் போடுகின்ற கணிப்பு.

பிற மாநிலங்கள் 14, இப்படிப்பட்ட வரிகளைப் போடவில்லையா என்று அமைச்சரவர்கள் ஒரு வினாவை கொடுக்கிறார்கள். பிற மாநிலங்கள் எதற்காக போட்டன என்கிற விவாதத்திற்குள்ளே நுழையாமல், பிற மாநிலங்கள் செய்வதில் நன்மை இருந்தால், அதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமே தவிர, பிற மாநிலங்கள் மிகப் பிற்போக்காக ஒன்றைச் செய்கின்றபோது பேசுகின்ற நாம் அதனை எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதுதான் என்னுடைய பணிவான வேண்டுதல்.

பக்கத்திலே இருக்கின்ற மாநிலத்தை எடுத்துக் கொண்டால், ஆந்திராவிலே 1981—ல் இந்த வரியினை போட்டார்கள். அங்கு இருக்கின்ற வணிகப் பெருமக்கள், அறிஞர் பெருமக்கள், பொது மக்கள் அத்தனை பேரும் எதிர்ப்பு தெரிவித்த காரணத்தினாலே ஆந்திராவிலே 1981-லே கொண்டு வரப்பட்டது இப்போது கைவிடப்பட்டது. ஆக பக்கத்து மாநிலமே, கிருஷ்ணா நீரை விடுகின்ற மாநிலமே, அதைக் கைவிட்டு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கின்றபோது, என்றாவது அதனுடைய ஞாபகம் வரவேண்டுமென்றபதற்காகத்தான் அதன் தொடர்பாக நாம் இதைக் கைவிடலாமா என்று சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதுவும் ஆந்திராவே விடுகின்றது என்கிற போது, இன்னொரு முக்கியத்துவம் இரு கிறது. 1983-84-லே விற்பனை வரியா வர இருப்பது, ரூ. 710 கோடி என்று சொல்கிறார்கள். ஏறத்தாழ 4.8 கோடி மக்களைக் கொண்டிருக்கிற தமிழகத்திலே 710 கோடி ரூபாய் வருமானம் வரும் என்று நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் ஆந்திர மாநிலம் 6 கோடி மக்களைக் கொண்டதாக இருந்தாலும், இன்றைக்கு அருகாமையிலே கூட அந்த வருமானத்தை எட்டிப் பிடிக்க முடியாத நிலையிலே அது இருந்து கொண்டிருக்கிறது. நம்மை விட ஏறத்தாழ ரூ. 150 கோடிக்கு குறைவானது தான் வருமானம். 6 கோடி மக்கள். ஆனால் நம்முடைய அளவிற்கு அவர்கள் வருவாய் இல்லை. ஆக நீங்கள் தலைக்கு தலை என்று கணக்குப் பார்த்தால், 'பர் கேபிட்டா'' நாம் கொடுக்கின்ற அளவிற்கு, பக்கத்திலே இருக்கின்ற கேரளாவோ, கர்நாடகமோ, ஆந்திராவோ, அல்லது வேறு எந்த மாநிலமோ, இந்த அளவிற்கு வரி செலுத்தவில்லை என்று சொல்கிற அளவிற்கு, விற்பனை வரியின் மூலமாக மேலும் பெருக்கிக் கொண்டிருக்கிறோம். அதற்கு மேலே இப்போது என்ன நடக்கிறது என்று சொன்னால், இங்கிருந்து ஒவ்வொரு பகுதிக்கு போகும்போது சில மாற்றங்கள் வரும் என்று நான் கருதுகின்றேன். உதாரணத்திற்கு சிலவற்றைச் சொல்கிறேன். வெளியிலிருந்து வருகின்ற ஒவ்வொரு சரக்கிற்கும்



இந்த ஊரிலே மூலப்பொருள்கள் நமக்குக் குறைவு. இன்ஜினீயரிங் தட்ஸ் என்று நாம் எல்லாம் வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்கின்ற அளவிற்கு விற்பண்ணர்களாக இருக்கிறோம். விற்பனையிலும் கெட்டிக்காரர்களாக இங்கே இருக்கிறோம். ஆனால் எத்தனை பொருள்கள் இங்கே கிடைக்கிறது? சேலத்திலிருந்து வரும் உருக்கு அதை நினைத்துப் பார்த்தால், நெஞ்சு உருகுகிறதே தவிர, இங்கே உருக்கு வரவில்லையே. உருட்டு ஆலைதான் வந்திருக்கிறது. வேறு எது வருகிறது? உருக்கு வருகிறதா, இரும்பு வருகிறதா? எல்லாவற்றையும் வெளியூரிலிருந்து' கொண்டுவர வேண்டியிருக்கிறது. வெளியூரிலிருந்து கொண்டு வந்து, இந்த ஊரிலே நுழைவு வரியைச் சேர்த்து விதித்தால்' பக்கத்தில் இருக்கின்ற மாநிலத்தோடு நாம் போட்டியிட்டு வணிகத்தைப் பெருக்க முடியுமா? நாம் உற்பத்தி செய்த பொருள்களை விற்பனை செய்ய முடியுமா? என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

உதாரணமாக சிமெண்டிற்கு 82—லே நாம் 8 சதவிகித வரி விதித்திருக்கிறோம். இப்போது 12 சதவீதம் என்று வரி விதித்திருக்கிறோம். இப்படி 12 சதவீதமாக்கியதற்கு பின்னால் அந்த சிமெண்டை கோடீஸ்வரன் மட்டும் தான் பயன்படுத்துகிறானா, அந்த தெருக் கோடியிலே இருக்கிறவன் ஒரு சின்ன வீட்டைக் கட்டுவதற்காக அதைப் பயன்தடுத்துகிறான் அல்லவா? அந்தப் பகுதியிலே இருக்கிற, ஒரு சிற்றூரிலே இருக்கிற ஒரு விவசாயி தனது கிணற்றிற்குப் பயன்படுத்துகிறான் அல்லவா? இப்படிப்பட்டவர்கள் உபயோகிக்கிற சிமெண்டிற்கு வரி போடப்பட்டிருக்கிறது.

அது மட்டுமன்று. கைத்தறித் துணிக்கு இன்றைக்கு அந்த வரிவிலக்கு அளித்திருப்பதாகச் சொன்னார்கள், கைத்தறித் துணிக்கு விலக்கு என்று சொன்னதை மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் இங்கே படித்தும் உறுதிபடுத்தினார்கள். அது தவிர மற்ற மாநிலத்தவரோடு போட்டியிடுகின்ற டெக்ஸ்டைல்ஸ்களிலே, இப்போது சென்னையிலே ஏராளமான டெக்ஸ்டைல்ஸ், கோயம்புத்தூர் போன்ற பகுதிகளிலே உற்பத்தி ஆகின்ற துணிகள் எல்லாம் வெளி மாநிலங்களுக்குப் போவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அங்கே இந்த வரியைப் போட்டு, வரியைப் போட்டு எங்கே நாம் வைத்திருக்கின்ற சந்தைகளை பக்கத்திலே இருக்கின்ற மாநிலம் பிடித்துக்கொள்ளுமோ என்று சொல்கிற அச்சம் இருக்கிறது, அதைப்போலவே கைத்தறித் துணி, கைத்தறி பட்டு, கதர்த் துணி, இது தவிர மற்ற துணிகளுக்கு எல்லாம் வரி என்று சொல்கிற போது, சைக்கிளிலே வைத்து வியாபாரம் செய்கின்றவன் இருக்கிறான். சிறிய சிறிய அளவிலே வியாபாரம் செய்கின்றவன் இருக்கின்றான் இவர்கள் எல்லாம் கிராமப்புறங்களிலே இருக்கின்ற மக்களுக்குக் கூட, கண்ணிலே பளபளவென்று தெரியட்டும் என்று பட்டுத் துணிகளை, கைத்தறித் துணியைப் போல் இல்லாது, பட்டுத் துணிகளைக் கொண்டு

(நண்பகல் 12-00)

போவது உண்டு. துணியை எடுத்துக்கொண்டால் * ** வரி போடலாமா? எல்லோராலும் பாராட்டப்படுகின்ற எல்லோருடைய கண்ணையும் கவருகின்ற ** பட்டுக்கு நீங்கள் வரி போடுகிறோம் என்று சொன்னால் * ** நான் சொல்வது இங்கே நெய்யப்பட்ட, அல்லது இயந்திரத்திலே நெய்யப்பட்ட பட்டுக்கு, சாதாரண பட்டுப்புடவை என்று சொல்கிறோமே, கிராமத்திலே இருக்கின்ற பட்டிக்காட்டிலேயிருக்கிற பெண்கள் கூட அவர்களுடைய திருமணத்திலாவது பயன்படுத்த வேண்டுமென்று நினைக்கிறார்களே, அந்த பட்டுக்குமா நாம் வரி போடுவது, அதுவும் நுழைவு வரி போடுவது என்பதை எல்லாம் எண்ணுகிறபோது, எத்தனையோ வகையிலே மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல ஏற்கனவே புகையிலைக்கும், துணிக்கும் சிமெண்ட்டுக்கும் எக்சைஸ் டியூட்டி இருக்கிறது. ஆக விற்பனை வரி இல்லாமல் எக்சைஸ் டியூட்டி என்று இருப்பதற்கு நாம் வரி போடுவதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறோமோ என்ற ஐயப்பாடு நமக்கெல்லாம் ஏற்படுகிறது. எக்சைஸ் டியூட்டிலேயிருந்து நமக்கு கிடைக்க வேண்டிய விகிதாச்சாரம் அதிகமாக கிடைக்க வேண்டும் என்று சொன்னால், அதற்கு வாதாடுவதற்கு அதற்காக போராடுவதற்கு இந்த ஆளும் கட்சியோடு சேர்ந்து போராடுவதற்கு நாமும் தயாராக இருக்கிறோம். மத்திய அரசாங்கம் நமக்குக் கூடுதலாகத் தரவேண்டுமென்று சொல்வதற்கு தயாராக இருக்கிறோம். ஆனால் அதேநேரத்திலே மீண்டும் மீண்டும் வரி என்று சொல்கின்ற நேரத்திலே, உதாரணத்திற்குச் சொல்லப்போனால் வெளியிலேயிருந்து வருகின்ற எல்லாப் பொருள்களுக்கும், அந்தப் பொருள்களின் மீது நீங்கள் வரி விதிக்கிறீர்கள் என்று சொல்கிற எண்ணம் வந்தது என்று சொன்னால் வணிகர்கள் வரியைத் தவிர்ப்பதற்கு முயற்சித்திருக்கலாம். நான் ஏமாற்றுவது என்று கூடச் சொல்லவில்லை. நான் அவாய்ட்ன்ஸ் என்று சொல்கிறேன். சீட்டிங் என்று கூடச் சொல்லவில்லை. ஆனால் அவாய்ட்ன்ஸ் என்று வருகிறது அல்லவா. உதாரணமாக வெளியிலேயிருந்து கப்பல் மூலம் வருகின்ற ஒன்றினை நீங்கள் டெஸ்டிநேஷனுக்குத்தான் போய்ச் சேருகின்ற இடத்திற்குத்தான் வரி என்ற நிலை இருக்குமானால் அவர்கள் இங்கே சென்னையிலே அதை இறக்குவதற்குப் பதிலாக டெஸ்டிநேசன் கூடுவாஞ்சேரி என்று போட்டு, கூடுவாஞ்சேரியிலே ஒரு கோடவுனைப் போட்டு அதன்மூலம் இங்கே வருகின்ற வரியை அவர்கள் தவிர்ப்பதற்கு முயலலாம் அல்லவா, அப்படித் தவிர்ப்பதற்கு முயன்றால் என்ன செய்வது என்பதற்குத்தானோ என்னவோ அதிலே வரி என்று சொல்

* * பேரவைத் தலைவரின் குறிப்புரைக்கிணங்க பட்டு என்று மாற்றப்பட்டது.

* * *பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.



கிறார்கள். எனவே கூடுவாஞ்சேரியிலே ஒரு கோடவுனை வைத்துக்கொண்டு அந்தக் கோடவுன் மூலமாக அந்த வணிகத்தை அவர்கள் செய்யத் தொடங்குவார்களானால், அரசாங்கத்திற்கு வருகின்ற வருவாய் எல்லாம் கெட்டுவிடுகின்றது என்று சொல்லுகின்ற கவலை எல்லாம் நமக்கு இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல் பெட்ரோலுக்கு நீங்கள் வரி போடுவதன்மூலம் ஒரு லிட்டர் பெட்ரோல் 13 காசு அதிகமாகிறது. ஒரு லிட்டர் டீசல் 7 காசு அதிகமாகிறது. வருகின்றவர்கள் தாம்பரத்திலே பிடித்துக்கொள்ள மாட்டார்களா? இங்கேயிருக்கின்ற வணிகர்கள் அவர்களுடைய வணிகத்திற்கு பாதகம் ஏற்படாதா? தாம்பரத்திற்கு ஒரு பட்டுத் துணி வருகிறது என்று சொன்னால், அதனை நுழைவு வரிக்கு உட்பட்ட ஒன்றாக நீங்கள் ஆக்கிவிடுவீர்கள். இவைகளையெல்லாம் நான் குறிப்பிட்டு முடிவுரையாக சொல்ல விரும்புவது நீங்கள் அதிகாரம் கேட்கிறீர்கள்? எந்த இடம் என்று அறிவிக்கின்ற உரிமை எங்களுக்கு வேண்டும். எவ்வளவு விகிதாச்சாரம் என்று அறிவிக்கின்ற உரிமை எங்களுக்கு வேண்டும். எவ்வளவு அபராதம் என்று விதிக்கின்ற உரிமை அதிகாரிகளுக்கு வேண்டும், இந்தச் சட்டப் பேரவையினுடைய மன்றத்தினுடைய உரிமைகள் அத்தனையையும் நீங்கள் கேட்கிறீர்கள். signing our own death warrant. என்று சொல்வதைப் போல எங்களுடைய உரிமைகளை வெட்டிக் குழி தோண்டி புதைப்பதற்கு நாங்களே மண் வெட்டிக் கொடுப்பதைப் போல ஒரு காரியத்தை நாங்கள் செய்ய இயலாது என்ற காரணத்திற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக் கொள்வேன், இந்த வரியை எடுத்துவிடுங்கள். உங்களுடைய மதிப்பு, மரியாதை உயர்கின்ற அளவிலே வேறு வகையிலே நமது வருமானத்தைப் பெருக்குகின்ற அளவிற்கு காரியங்களைச் செய்யலாம். எனவே, இந்த சட்ட முன்வடிவை இந்த வரி விதிக்கின்ற இந்த சட்டத்தை வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டு, அதை வாபஸ் வாங்க முடியவில்லை என்றாலும் அதை செலக்ட் கமிட்டி என்று சொல்லுகின்ற அந்தக் கமிட்டிக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு சட்டப் பேரவை தற்காலிகத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நடந்து கொண்டிருக்கக்கூடிய இந்த விவாதத்திலே ஒரு சில கருத்துக்களை மட்டும் நான் இங்கே கூற விரும்புகிறேன். இந்த வரியைப் பொறுத்த வரைக்கும் இந்தியாவிலே பல மாநிலங்களிலே இருக்கின்றது என்று காரணம் சொல்லப்படுகின்றது. இங்கே பேசிய ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் மேற்கு வங்கத்திலே இருக்கிறது என்று சொன்னார்கள். உண்மை. 1972 ஆம் ஆண்டிலே அங்கேயிருந்த ஆட்சியின்போது அது அங்கே கொண்டு வரப்பட்டது. ஆகவே இன்று இந்தியாவிலே பல்வேறு மாநிலங்களிலே இந்த வரி இருக்கிறது என்பது தமிழகத்திற்குப் பொருந்தாது என்று எதற்குச் சொல்கிறேன் என்றால் தமிழகத்திலே மிக உயர்ந்த அளவிற்கு விற்பனை வரி உயர்ந்து கொண்டே வருகிறது.

[திரு. என். சங்கரய்யா] [1983 ஏப்ரல் 27

ஓராண்டு காலம், இரண்டாண்டு காலம் என்ற கால அளவிலே மட்டும் 100 கோடி ரூபாய்க்கு மேல் விற்பனை வரியிலே அதிக வருமானம் தமிழகத்திற்கு கிடைத்து இருக்கிறது. இந்த விற்பனை வரி என்ற மறைமுகமான வரி மூலமாகவே பொருள்களின் விலை யானது ஏராளமாக உயர்ந்து இறுதியில் சாதாரண மக்களை அது பாதிக்கிறது என்பது தெரியும். இதிலே கொடுக்கப்பட்டு இருக்கும் பொருள்கள் மிகவு விரிவான ஒரு பட்டியல் என்ற வகையில் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இந்த விரிவான பட்டியல் பொருள்களின் மீது நுழைவு வரி போடப்படுமானால் நிச்சயமாக அடுத்து வரும் காலத்தில் தமிழகத்தில் பொதுமக்கள் வாங்கி உபயோகிக்கும் பொருள்களின் விலை அதிகரிக்கும் என்பது தெளிவாகத் தெரிகிறது. அரசாங்கத்திற்கு இதிலே சொல்லப் பட்டு இருப்பதுபோல் 20 கோடி சொச்சம் தான் வருமானம் என்று சொல்வதை நான் ஆட்சேபிக்கிறேன். காரணம் இது ஒரு மேஜிக் பறவை பறந்து விரிந்து வருகிறமாதிரி செய்யப்படக் கூடிய ஒரு வரியாகும். இப்போது கொடுத்து இருக்கும் திருத்தத்தின்படி பார்த்தால்கூட 2 சதவீத வரி விதிக்கப் படுகிறது என்று இருந்தாலுங்கூட அது ஊராட்சிப் பகுதி, நகரியப்பகுதி, மற்றும் தமிழகத்தின் அந்தந்த முனிசிபாலிட்டிகள் மற்றும் தமிழகத்திலே உள்ள 17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பஞ்சாயத்துக்கள் என்று எங்கே வேண்டுமானாலும் இந்த வரியைக் கொண்டு வரலாம் என்றால் இதன் வியாபகம் பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்க்குமேல் வரி வசூல் செய்வதற்கு இந்த அரசாங்கம் வழி வகுத்துக் கொண்டு இருக்கிறது என்பது தான் பொருள். இதற்கு பதிலாக நேரடியாக விவசாய வருமான வரியை உயர்த்துவதன் மூலமாக சற்று அதிகப் பணம் தமிழக அரசுக்கு பெற வாய்ப்பு இருக்குமானால், அது மக்களை பாதிக்காது. ஆனால் அந்த விவசாய வருமான வரி சம்பந்தப் பட்ட சட்ட முன்வடிவு இன்னும் ஆய்வுக் குழுவின் ஆய்வில் இருந்துகொண்டு இருக்கிற காரணத்தால் அதைப்பற்றி எந்த விதமான முடிவும் செய்யப்படாமல் இருக்கிறது அந்த நேரடி யான வரி போடுவதுதான் சரியான பாதையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு இந்த வரி என்பது அரசாங்கம் சொல்வதைப்போல் பலமடங்கு தொகையைக் கொண்டு வரக்கூடிய, மக்களிடமிருந்து வசூலிக்கக்கூடிய ஒரு வரியாக இருக்கிறது என்பதை நாம் தெளிவாக உணர வேண்டும்.

இந்தச் சட்டத்திலே ஏராளமான உப பிரிவுகள் இருக்கின்றன. இது ஒரு சிறிய சட்டம் அல்ல. ஓரிரு பக்கங்களைக் கொண்ட சட்டம் அல்ல. எத்தனையோ பக்கங்களைக் கொண்ட சட்ட மாகும். இதிலே பெனல்டி—அபராதம்— போடப்பட்டு இருக்கும் பல ஷரத்துக்கள் இருக்கின்றன. செக்யூரிட்டி டெபாசிட் வாங்க வேண்டும் என்று சொல்லப்படும் பல ஷரத்துக்கள் எல்லாம் இதிலே இருக்கின்றன என்பதால் இதை நிதானமாக பரிசீலிக்கப் பட வேண்டிய கட்டாயம் இருக்கிறது. தமிழகத்தில் உள்ள சிறிய வியாபாரிகள், மத்திய தர வியாபாரிகள் மற்றும்



1983 ஏப்ரல் 27] (திரு. என். சங்கரய்யா)

அனைத்து ரக வியாபாரிகளும் இதற்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து இருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு இந்த வரியைக் கொண்டு வரலாம் என்று யோசனை தெரிவித்து இருக்கும் அதிகாரிகள் இந்த அரசுக்கு நல்லது செய்யவில்லை என்பது எங்களுடைய திட்டவட்டமான அபிப்பிராயம். காரணம், தமிழகம் முழுவதும் இன்றைக்குக் கடுமையான வறட்சி நிலவிக் கொண்டு இருக்கிறது. இதன் காரணமாக மக்கள் பெரிதும பாதிக்கப்பட்டு இருக்கும் சூழ்நிலை இருக்கிறது. தமிழகத்தில் உள்ள மக்கள் இந்த நிலையை எப்படிச் சமாளிப்பது என்று தெரியாமல் திகைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இத்தகைய நிலையில் இந்த வரியைக் கொண்டு வருவதன் மூலமாக அரசாங் கத்திற்கு வர்த்தகர்கள் வட்டாரத்தில் மட்டுமல்ல, தமிழக பொதுமக்கள் மத்தியிலும் இதற்கு கடுமையான எதிர்ப்பு இருக்கிறது. இத்தகைய நிலையில் இந்தச் சட்டத்தைக்கொண்டு வருவது நியாயம்தானா என்பதை நான் கேட்டுக் கொள்கிறேன். அரசியல் கட்சி என்ற முறையில் ஆளும் கட்சிக்கு இது நல்லது தானா என்று கேட்டால், இது நல்லது அல்ல என்ற ஒரே ஒரு முடிவுக்குத்தான் நாம் வரமுடியும். ஆகவே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அரசாங்கத்திற்கு மீண்டும் சொல்வது இதைப்பற்றி மறுபரிசீலனை செய்யலாம். அவசர அவசரமாக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து இன்றைக்கே நிறைவேற்றி விட வேண்டும் என்பது அல்ல. ஆகவே, எத்தனையோ சமயங்களில் இத்தகைய மறுபரிசீலனை செய்யப்பட்டு இருக்கிறது. இந்த எதிர்வரிசையில் இருக்கும் அத்தனை கட்சிகளும் இதை எதிர்க்கிறார்கள் என்று சொன்னால், தமிழகத்தில் உள்ள பெரும்பகுதி மக்கள் இதை எதிர்க்கிறார்கள் என்பதுதான் பொருள். நான் அறிந்த வரையில் கடந்த பல ஆண்டுகளில் தமிழகத்தில் இருக்கும் வணிகப்பெருமக்கள் இத்தகைய அளவிற்குக் கடுமையான எந்த வரிவிதிப்பையும் எதிர்த்தது இல்லை. அவர்களுக்கு விதிக்கப்பட்டு இருக்கிற கணக்குப் புத்தகம் வைப்பது, அவர்கள் கணக்கு கொண்டுவந்து மாதாமாதம் சமர்ப்பிக்க வேண்டும் என்று சொல்வது, ஒரு மாதத்திற்கு எவ்வளவு வரி வரும் என்று அவர்கள் நினைக்கி றார்களோ அதை முன்கூட்டியே கட்ட வேண்டியது என்பது எல்லாம் 'ட்ரகோனியன்' ஷரத்துக்கள் அவைகள் இந்த நாட்டு மக்களையும், வணிகப் பெருமக்களையும் பெரிதும் கடுமையான முறையில் பாதிக்கும் என்பதால் அவர்கள் 3 நாள் ஹர்த்தால் செய்யும் முடிவுக்கு வந்து இருக்கிறார்கள். அரசாங்கம் இதை ஏதோ ஒரு அரசியல் நோக்கத்திற்காக என்று கிஞ்சித்தும் நினைக்க வேண்டாம்.

(பிற்பகல் 12-10)

இன்றைக்கு இந்தப் பிரச்சனையின் தன்மையைப் பார்க்கும் போது இது மிகவும் கடுமையானது என்று நாங்கள் கருது கிறோம். தமிழக மக்களை இது கடுமையாகப் பாதிக்கும்

என்பதால் 20 கோடி ரூபாய் வருமானம் வரும் என்று சொன்னாலும் அரசாங்கம் அந்த வருமானத்தை வேறு இனங்களிலே பெற்றுக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தால் இதை அரசாங்கம் கைவிட வேண்டும்.

இன்றைக்கு வருகின்ற விற்பனை வரியின் மூலமாக வருமானத்தைப் பெருக்க முடியும். ஏற்கெனவே சொல்லியிருப்பதைப்போல சாராயம் சம்பந்தப்பட்ட பிளன்டிங் யூனிட்டுகளை அரசாங்கம் ஏற்று நடத்தினால் பல மடங்கு வருமானத்தைப் பெருக்க முடியும். வருமான வரியின் மூலம் அதிக வருமானம் பெற முடியும். பிளான்டேஷன் மூலமாக வருமானம் பெற முடியும். நிலக்கிழார்களிடமிருந்து நேரடியாக வரி பெற முடியும். அதை எல்லாம் விட்டுவிட்டு இதைக் கொண்டு வந்திருப்பது நல்லது அல்ல; மக்களுக்கு நல்லது அல்ல; அரசாங்கத்திற்கு நல்லது அல்ல; ஆளும் கட்சிக்கு நல்லது அல்ல; மக்கள் எதிர்ப்பு தான் உருவாகும் என்பதால் இந்த வரி விதிப்பைக் கைவிட வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டு அமர்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவரவர்களே, பயன்படுத்துகின்ற பொதுமக்களாலும் வாணிபத் துறையிலே ஈடுபட்டிருக்கின்ற பல்வேறு வகையான வணிகப் பெருமக்களாலும் எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களாலும் நாட்டிலே இருக்கின்ற அரசியல் சார்புடைய ஏடுகள் மாத்திரம் அல்லாமல், நடுநிலையாக இருக்கின்ற பல்வேறு ஏடுகளாலும் கண்டிக்கப்படுகின்ற ஒரு வரியை நுழைவு வரி என்கின்ற பெயரால் இந்த அவையிலே அவையினுடைய முன்னவர் நிதி அமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே அறிவித்த காலம் தொட்டு, அதிலே சில பொருள்களுக்கு விலக்கு அளிக்கப்படும் என்று அவர்கள் ஆறுதல் கூறியதும் ஏற்கத்தக்கது அல்ல. முழுமையாக கைவிட வேண்டுமென்று குரல் எழுப்பப்பட்டு, சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்ட நேரத்திலும் இந்த அவையிலே அனைத்துக் கட்சிகளால், ஆளும் கட்சியை தவிர மற்ற கட்சிகளால் கடுமையான எதிர்ப்பு உணர்வு காட்டப்பட்டும், அனைத்தையும் மீறி இன்றையதினம் ஜனநாயகத்தை கிஞ்சிற்றும் மதிக்காத ஒரு நிலையில் இந்த வரியை விதித்தே தீருவோம் என்ற பிடிவாத நோக்கத்தோடு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் மூலமாக இந்த அரசு இந்த அவையிலே விவாதிப்பதற்கு வைத்து, ஆளும் கட்சிக்கு இருக்கிற பெரும்பான்மை பலத்தின் காரணமாக நிறைவேற்றி விடலாம் என்கின்ற அந்த துணிவோடு செயல்பட்டுக் கொண்டு இருப்பதை மீண்டும் ஒரு முறை நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வன்மையாகக் கண்டிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.





(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்த வரியைப் பற்றி கூறப்படுகிற நேரத்தில் பொருளாதார நிர்வாக சீர்திருத்தக் குழுவினுடைய தலைவர் எல்.கே.ஜா அவர்கள் 'ஆக்ட்ராய்' வரி ஒரு அருவருக்கத்தக்க வரி, இதை கைவிட வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அதே கருத்தை சட்ட நிபுணர் பல்கிவாலா அவர்கள் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அரசியல் கட்சி ஏடு அல்லாத பொதுவாக நடைபெறுகிற ஏடு என்று பலரும் கருதிக் கொண்டிருக்கிற தினமணியில் எழுதிய தலையங்கத்தில் கூட இந்த வரியினால் சரக்குப் போக்குவரத்து தாமதமடையும்; வணிகர்களுக்குத் தொல்லை உண்டுபண்ணும்; ஊழலுக்கு வித்திடும். அதனைவிட பொருள்களின் விலை உயர்ந்து மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. எனவே இந்த வரியைக் கைவிட வேண்டுவது அவசியமாகும்; இப்போது கொண்டுவரப்பட்டுள்ள மசோதாவை வாபஸ் பெற வேண்டும். அப்படி முடியாவிட்டால் இதனை சட்ட மன்றத்தின் கூட்டு ஆய்வுக் குழுவின் பரிசீலனைக்கு விடுவதே நல்லது. கூட்டு ஆய்வுக் குழு பொது மக்களின் கருத்தை அறிந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். இந்த மசோதாவை அவசர கோலமாக நிறைவேற்றுவதைத் தவிர்க்க வேண்டும் என்று 23-4-1983 தேதியிட்ட தினமணி பத்திரிகையின் தலையங்கம் சுட்டிக் காட்டியிருக்கிறது.

ஆனால் எதையும் பொருட்படுத்தாமல் எல்லாவிதமான கருத்துக்களையும் புறக்கணித்து விட்டு, இந்த நுழைவு வரியைத் திணிப்பது அரசாங்கத்தினுடைய பிடிவாத குணத்தைத்தான் காட்டுகிறது என்பதை நான் சுட்டிக்காட்டிச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

இதிலே கூட காலையிலே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த சில பிரச்னைகளை நாம் மறந்துவிடுவதற்கில்லை. நிதிநிலை அறிக்கை விவாதம் நடைபெற்று பதில் அளித்த நேரத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சில பொருள்களைக் குறிப்பிட்டு, அவைகள் எல்லாம் இந்த வரிகளிலேயிருந்து விலக்கு அளிக்கப்படும் என்று எடுத்துக் கூறினார்கள். அப்படி விலக்கு அளிக்கப்படாத சூழலில் இந்த சட்ட முன்வடிவு தயாரிக்கப்பட்டிருக்கிறதே அது சரிதானா என்கிற ஒழுங்குப் பிரச்னையை அல்லது உரிமைப் பிரச்னையை எல்லாம் இங்கே எழுப்பப்பட்டு, அதற்கு அவைத் தலைவராகிய தாங்களும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய விழிப்புணர்ச்சியை நான் பாராட்டுகிறேன் என்று கூறிவிட்டு, அதைப்போல அதற்கான திருத்தங்கள் இந்த அவையிலே வைக்கப்படும் என்று சொன்ன அவை முன்னவர் அவர்களுடைய அந்தப் பரந்த மனப்பான்மையையும் தாங்கள் பாராட்டுவதாகச் சொன்னீர்கள்.

ஆனால் இங்கே எதிர்க்கட்சியினுடைய துணைத்தலைவர் பேராசிரியர் அவர்கள் அது குறித்து, பிரச்னையை எழுப்பிய போது, வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அவர்கள் குறிப்பிட்டது ''இதிலே நான், இவைகளில்

எல்லாம் எது எது நீக்கப்படும் என்று நிதியமைச்சர் அவர்கள் கூறினார்களோ, அவைகளை எல்லாம் குறிப்பிடவில்லை என்று சொன்னாலும் கூட, அவைகள் குறிப்பிலே ஏற்றுக்கொள்ளப் பட்ட பின்னர், அதற்கான விதிமுறைகள் வகுப்பதற்கான நடவடிக்கைகள் கவனிக்கப்படும் என்று சொன்னார்கள்.''

இங்கே தரப்பட்டிருக்கிற சட்ட முன்வடிவினுடைய 29வது பக்கத்தில் விவர அட்டவணை என்கிற பகுதியில் 2 (1) என்கிற பிரிவினை காண்க என்ற தலைப்பின் கீழ், 'அட்டவணையிடப் பட்ட சரக்குகள்' என்ற தலைப்பில், என்ன சொல்லப்பட்டிருக் கிறது என்றால், மூன்றாவதாக சர்க்கரை என்று குறிப்பிட்டு விட்டு, நிதியமைச்சர் அதற்கு என்ன அறிவித்தார்களோ, எது எது நீக்கப்படும் என்று சொன்னார்களோ, அதை அந்த சர்க்கரை என்ற தலைப்பிலே மாத்திரம், வளைவு அடைப்புக்குள் (கற்கண்டு, மிட்டாய் போன்றவை நீங்கலாக)—என்று நிதி யமைச்சர் எடுத்துச் சொன்ன அந்தப் பகுதியை மாத்திரம், வளைவு அடைப்புகளுக்குள்ளே அமைக்கப்பட்டிருக்கிறது. அதுவும் சர்க்கரை என்ற பொருளுக்கு மாத்திரம்.

ஆனால் ஐந்தாவதாக, பெட்ரோலியப் பொருள்கள் என்று வருகிற அந்தப் பகுதியில், மண்ணெண்ணெய்க்கு விலக்கு அளிக்கப் படும் என்று நிதியமைச்சர் அவர்கள் சொன்னார். ஆனால் இதில் அப்படி மண்ணெண்ணெய்க்கு விலக்கு அளிக்கப்படவில்லை. அதிலே வரிசையாக பெட்ரோல், டீசல், விமான எரிபொருள், தூய்மைப் படுத்தப்படாத எண்ணெய், கனிம எண்ணெய்வகைகள், உயர் எண்ணெய், வெப்பம் தணிக்கும் எண்ணெய், மசகு, தார், திரவ பெட்ரோலிய வாயு, மண்ணெண்ணெய் நாப்தா என்று எல்லாவற்றையும் அடக்கிப் போடப்பட்டிருக்கிறது. இதிலே ஏன் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூறியதுபோல் விலக்கு அளிக்கப்பட்ட பொருள்கள், அடைப்பு வளைவுக் குறிகளுக் குள்ளாவது போடப்படவில்லை? சர்க்கரையை குறிப்பிடும்போது மாத்திரம், கற்கண்டு, மிட்டாய் போன்றவை நீங்கலாக என்று வளைவு குறி போட்டு சுட்டிக் காட்டியிருப்பது ஏன்? அதே போல மண்ணெண்ணெய்க்கும் அப்படி வளைவு குறி போட்டு, அது நீங்கலாக என்று ஏன் சுட்டிக் காட்டப்படவில்லை என்று கேட்க விரும்புகிறேன்? ஆகவே, இது ஒரு அவசர கோலம் அள்ளித் தெளி என்ற வகையிலேதான் இந்தச் சட்ட முன்வடிவு தயாரிக்கப் பெற்றிருக்கிறது. அதனாலேதான் ஏற்ற திருத்தங்கள் கூட வைக்கப்படாமல், அவையில் இந்தச் சட்ட முன்வடிவு விவாதத்திற்கு ஏற்றுக்கொள்ளப் பெற்று, உறுப்பினர்கள் அதற்குரிய பிரச்னைகளை எழுப்பிய பிறகு, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் வாய்மொழியாகவே சொன்னார்.

''நான் 5 சதவீதத்திற்கு மேற்படாமல்'' என்று குறித்து இருப்பதை '2 சதவீதத்திற்கு மேற்படாமல் என்று திருத்திக் கொள்கிறோம்" என்று வாய்மொழியாகவே சொல்லி, பலரும் பேசி, கிட்டத்தட்ட நான் பேச இருக்கிற, ஒரு 5 அல்லது 10 நிமிடங்களுக்கு முன்புதான் வாய்மொழியாகச் சொன்ன அந்த திருத்தம் எழுத்து வடிவத்திலே; 2 சதவீதம் தான் என்ற அளவிலே எங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.





இவைகளையெல்லாம் குறிப்பிடுவதற்குக் காரணம், இந்தச் சட்டத்தைப் பற்றி உங்களுக்கே ஒரு வகைதொகையான, நிலையான கருத்து இல்லை. உங்களுக்கே பெரும் குழப்பங்கள் ஏற்பட்டிருக்கிற காரணத்தாலேதான், சரியான திருத்தங்கள் வைக்கப்படாமல், அல்லது நிதியமைச்சர் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல், இப்படிப்பட்ட முரண் பாடான சட்ட முன்வடிவு இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-20)

பல உறுப்பினர்களும், கட்சியினுடைய தலைவர்களும் இங்கே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். மிக வேடிக்கையானதும், இதுவரையில் எந்த வரி விதிப்புச் சட்ட முன்வடிவிலேயும் இல்லாததுமான ஒரு விசித்திரம் பக்கம் 3-லே குறிப்பிடப்பட்டி ருக்கிறது. ''....வெவ்வேறு சரக்குகளுக்கு. வெவ்வேறு உள்ளூர்ப் பகுதிகளுக்கு வெவ்வேறு வீதங்களில் இவ்வரியை அரசு குறிப் பிடலாம்'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது எத்தகைய சிக்கலான பிரச்னையை உருவாக்கக் கூடும் என்பதை இந்த அரசு எண்ணிப் பார்க்க வேண்டும். வெவ்வேறு சரக்குகள் என்றால் என்னென்ன சரக்குகள்? இதிலே குறிப்பிட்டிருக்கிறபடி இன்னதுதான் என்று கிடையாதா? வெவ்வேறு உள்ளூர்ப் பகுதிகள் என்ன என்ன பகுதிகள் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறதா கிடையாது வெவ்வேறு வீதங்கள் என்ன என்ன வீதங்கள் எந்த எந்த சரக்குகள் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறதா என்றால் கிடையாது, இந்த சிக்கல் எவ்வளவு பெரிய ஊழலுக்கு வழி வகுக்கும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஏன் என்றால் இந்த வெவ்வேறு சரக்குகள் என்று வருகிற நேரத்தில் ஒரு வியாபாரி அல்லது ஒரு வணிகர் தன்னிடத்தில் இருக்கின்ற சரக்கு இன்ன சரக்குதான் என்று எழுதச் சொல்கின்ற அந்த சலுகையை அதிகாரியிடத்தில் பெறுகின்ற நேரத்தில் அங்கே எத்தகைய ஊழல் தொடங்கும் அல்லது ஏற்கனவே இருக்கின்ற ஊழல் பெருகும் என்பதை தயவு செய்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

அதைப்போல்தான் 4-வது பக்கத்தில் 3-வது பகுதியில் உள்ளூர் பகுதிக்குள் தன் சொந்தக் கணக்கிலோ அல்லது தன் முதலாளிக் கணக்கிலோ அச்சரக்குகளைக் கொண்டுவருகிற அல்லது கொண்டு வரும்படிச் செய்கிற பதிவானவணிகரால்அல்லது தம்மை வணிகராகப் பதிவு செய்துகொள்வதற்கு உட்பட்டவரால் அல்லது அச்சரக்குகள் அவ்வாறு கொண்டு வரப்படும்போது ஒப்படை எடுத்து கொள்பவரால் அல்லது ஒப்படை எடுத்துக் கொள்ள உரிமையுடையவரால் இந்த வரி செலுத்தப்பட வேண்டும், என்று 4-வது பக்கத்திலே 3-வது பகுதியில் சொல்லப் பட்டிருக்கிறது. இதே பக்கத்தில் அத்தியாயம் 3-ல் 5-வது பகுதியில் விவாக் கணக்குகளும் வரி விதிப்பும்:—(1) 8-ஆம் பிரிவில் என்ன சொல்லப்பட்டிருந்த போதிலும், இச்சட்டத்தின்

கீழ் பதிவு செய்துகொண்டுள்ள ஒவ்வொரு வணிகரும், இச் சட்டத்தின் கீழ் பதிவு செய்துகொள்வதற்குட்பட்ட ஒவ்வொரு வணிகரும், வரையறுக்கப்படக்கூடிய கால அளவிற்குள்ளும், முறையிலும், வரையறுக்கக்கூடிய தகவல்கள் அடங்கிய கணக்குகளை, வரி விதிப்பு அதிகாரிக்கு ஒவ்வொரு ஆண்டும் அனுப்ப வேண்டும், என்று இருக்கிறது. எனவே நண்பர் அழகர்சாமி இங்கே எடுத்துக் காட்டியதுபோல் இது நுழைவு வரியா அல்லது உள்ளபடியே விற்பனை வரியை இன்னும் உயர்த்தி விதிக்கப்படுகின்ற ஒரு வரியா என்பதை அரசுதான் எங்களுக்கு விளக்க வேண்டும். ஏன் என்றால் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு வரப்படுகின்ற பொருட்களுக்கு அந்த நகரத்தினுடைய எல்லையில் விதிக்கப்படுகின்ற வரிக்கு பெயர் நுழைவு வரி.

ஆனால் இங்கே காட்டப்படுகின்ற குறிப்புகளை படிக்கின்ற நேரத்தில் வணிகப் பெருமக்கள் அதற்கான ரெக்கார்டுகளை வைத்துக்கொள்ள வேண்டும், கணக்கு பதிவேடுகளை வைத்துக்கொள்ள வேண்டும், அதற்கான பதிவுகளை செய்துகொள்ள வேண்டும் என்று எல்லாம் வருகின்ற இந்த பிரிவுகளை பார்க்கும்போது இது ஒவ்வொரு நகரத்திலும் இருக்கின்ற வியாபாரிகளிடத்தில் வணிகர்களிடத்தில் வழக்கம்போல் விற்பனை வரி அதிகாரிகள் சென்று கணக்கு கேட்டு விற்பனை வரி பெறுவதைப்போல் நுழைவு வரி என்ற பெயரில் பலமடங்கு அதிகமான விற்பனை வரியை செலுத்தக்கூடிய ஒரு இன்னலுக்கு வியாபாரிகள் ஆளாகி அப்படி ஆளாகின்ற வியாபாரிகள் வாங்கி பயன்படுத்துகின்ற பொதுமக்கள் தலையில் அந்த சுமையை சுமத்த அதன் காரணமாக பொதுமக்கள், ஏழை எளியவர்கள், விவசாய பெருங்குடி மக்கள், தொழிலாளர்கள் அத்தனை பேரும் பாதிக்கின்ற ஒரு நிலைமைதான் ஏற்படுகிறது. எல்லா கட்சித் தலைவர்களுக்கும் அனுப்பியிருக்கின்ற வியாபாரிகளுடைய பல்வேறு சங்கங்களைச் சேர்ந்த மகஜர்களில் குறிப்பாக ஜவுளி வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கின்ற வியாபாரிகள் அனுப்பியிருக்கின்ற மகஜரைப் படித்துப் பார்த்தால் இந்த நுழைவு வரியால் எந்த கைத்தறியைக் காப்பாற்ற வேண்டும் என்று நாம் எல்லாம் இன்றைக்கு கவலைப்படுக் கொண்டு இருக்கிறோமோ அந்தக் கைத்தறிக்கு கிராமத்தில் இருக்கின்ற மக்களுக்கும், எவ்வளவு இடையூறுகள் ஏற்படுகின்றன என்பதை அந்த மகஜரில் உள்ள சில வாசகங்களை படித்துப் பார்த்தால் புரிந்துகொள்ளலாம். இந்த வரி அமுலுக்கு வந்தால் சிறிய நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் கிராமத்திலுள்ள சிறிய வர்த்தகர்கள் தங்கள் கொள் முதலை அண்டை மாநிலங்களில் செய்வார்கள். இதனால் தமிழகத்தில் மொத்த வணிகம் பாதிக்கப்பட்டு அண்டை மாநிலங்கள் பயனடையும். நம் மாநிலத்தில் பொருளாதார சீர்குலைவு ஏற்படும். இதை நம்பி வாழும் சிப்பந்திகள், மூட்டை கட்டுகின்றவர்கள், கைவண்டி இழுப்பவர்கள், லாரிகள், பாரம் தூக்குகிறவர்கள் முதலிய அனைவரும் பாதிக்கப்படுவார்கள். அதே சமயம் மாநிலங்களில் உற்பத்தியாகும் கைத்தறி துணிகள்



வர்த்தகமும் பெரிதும் பாதிக்கப்படும். உதாரணமாக மில் துணி கொள்முதலுக்கு அண்டை மாநிலத்தை அணுகும் வியாபாரிகள் அங்கேயே கைத்தறி துணியையும் வாங்கி விடுவார்கள் என்று கைத்தறி துணி வியாபாரத்தில் ஏற்படக்கூடிய அந்த சீர்கேட்டினையும் அவர்கள் இந்த மகஜரின் மூலமாக சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இப்படி பல்வேறு வணிக நிறுவனங்களின் சார்பாக அவர்களுடைய பெரிய சங்கங்களின் சார்பாக மகஜர்கள் அளிக்கப்பட்டும், முதலமைச்சர் அவர்களை நேரிடையாக சந்தித்து அவர்களுடைய பிரதிநிதிகள் உரையாடல் நிகழ்த்தியும் கூட இறுதியாக தாங்கள் கொண்டதே கொள்கை என்கின்ற வகையில் மிக பிடிவாதமாக இந்த வரியை திணிப்பதை திராவிட முன்னேற்றக்கழகத்தால் மிகவும் வன்மையாக கண்டிக்கப்படுகிறது என்பதை நான் மீண்டும் வலியுறுத்துகின்றேன்.

நம்முடைய ஜனதா கட்சியினுடைய தலைவர் அவர்கள் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போதும் இங்கே குறிப்பிட்டார்கள். பல்வேறு வகையில் இந்த அரசு பணத்தை விரையம் ஆக்குவதை அல்லது வரவேண்டிய வருமானங்களை இழப்பதைச் சரி செய்யுமேயானால் இந்த வரி விதிப்புக்கு இடமே இருந்திருக்காது என்று குறிப்பிட்டார்கள். ஜனதா கட்சியினுடைய தலைவர் நண்பர் இஸ்மாயில் அவர்கள் சொல்கிறபோது சொன்னார்கள். பக்கத்திலே இருக்கிற ஆந்திர மாநிலத்தில் நம்முடைய உடன்பிறப்பு எம். டி. ராமராவ் ஆண்டுகொண்டிருக்கிற ஆந்திர மாநிலத்தில் 67 லட்சம் குழந்தைகளுக்கு அங்கே இந்த மதிய உணவிற்காக செலவிடப்படுகிற தொகை 100 கோடிக்கு குறைவானது இன்னும் சொல்லப்போனால் 80 அல்லது 85 கோடி தான் என்று அங்கிருந்து சய்திகள் வருகின்றன. ஆனால் தமிழ்நாட்டில் 130 கோடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்டு அதே நேரத்திலே சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிடமிருந்து அரிசி வாங்குகிற காரணத்தினால் அவர்களுக்குத் தருகிற இழப்பு என்ற பெயரால் 50 கோடி ரூபாய் அரசு அந்த இழப்பை ஏற்றுக்கொள்கிற வகையில் சற்றொப்ப 185 கோடி ரூபாய் அளவுக்கு அடுத்தடுத்து வருகிற ஆண்டுகளில் 200கோடி ரூபாய் அளவுக்கு இந்த சத்துணவுத் திட்டத்திற்குச் செலவிடப்படுகிறது என்றால் ஆந்திரத்திலே அதே எண்ணிக்கையிலே உள்ள குழந்தைகளுக்கு 100 கோடிக்கும் குறைவாக செலவாகும் பொழுது இங்கே 200 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது என்றால் எங்கேயோ தவறு இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடலாமா?

அதைப்போலவே வரவேண்டிய வருமானத்தை வருவாயை நாம் இழந்து இருக்கிறோம். வரிவிதிப்பே வருவாய்த் துறையைப் பொறுத்த விஷயம் என்ற காரணத்தினால் வருவாயைப் பற்றி பேசுவதில் தவறு இல்லை, ஏனென்றால் எத்தனையோ உறவில்லாத விஷயங்கள் பல, சில நேரங்களிலே இந்தச் சபையிலே அங்கீகரிக்கப்பட்ட காரணத்தினால் இதுவும் அங்கீகரிக்கப்படும், இது

பொருத்தமுடைய விஷயம் என்பதால் சொல்கிறேன். வருவாய் வரியினாலே கிடைக்கிறது. ஆனால் அப்படிக் கிடைக்க வேண்டிய வரிகளை எல்லாம் உதறித் தள்ளிய பெரும் குற்றச்சாட்டுக்கு ஆளான ஒரு அரசு இன்றைக்கு உள்ள இந்த அரசு என்பதை நான் எடுத்துக் காட்டுவது என்னுடைய கடமையாகும்.

ஸ்டீல் ரீரோலிங் மில் இவைகள் வரி கட்டுவதைப்பற்றி ஒரு பிரச்சினை எழுந்து தங்களால் வரி கட்ட இயலாது எனவே தள்ளுபடி செய்யவேண்டும் அல்லது .......

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தூண்டில் போடுகிறபோது இங்கேதான் வரப் போகிறார்கள் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். இதற்கு முன்பே பேசியதற்கு நான் பதில் சொல்லி இருக்கிறேன். நீங்கள் இங்கே பேசுவதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. நீங்கள் பேசலாம்;

டாக்டர் மு. கருணாநிதி: வீராணம்பற்றி பல முறை பேசப்பட்டிருக்கிறது. இருந்தாலும் வீராணம் பற்றி மறுபடியும் பேசப்படவில்லையா? அதைப்போல் நான் சொன்னால் இப்போது மறுபடியும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் பதில் அளிப்பார்கள், அது புதிய பதிலாகக்கூட இருக்கும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். வேறு யாரும் குற்றஞ் சாட்ட வேண்டியதில்லை. பொதுக் கணக்குக் குழு அதனுடைய தலைவராக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. வி. கிருஷ்ணமூர்த்தி இருந்தாலுங்கூட அந்தக் குழுவிலே இருப்பவர்கள் பெரும்பாலோர் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள். நிதிய மைச்சர் உள்ளிட்ட பெரும்பாலோர் அந்தப் பொதுக் கணக்குக் குழுவிலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அந்தக் குழு என்ன தெரிவிக்கிறது? ஸ்டீல் ரீ ரோலிங் மில்ஸ், அந்த ஆலைகளே முன்வந்து விற்பனை வரிக் கடனைக் கடனாகக் கோரியிருந்தபோது பணிக்குழு விற்பனை வரிக் கடனுக்குப் பதிலாக விற்பனை வரி விலக்கு முன்னுரிமை அளித்து பரிந்துரை செய்தது கண்டு பொதுக் கணக்குக் குழு வியப்படைகிறது அந்தப் பரிந்துரையால் அரசுக்குப் பல கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. தவிர்த்திருக்கக்கூடிய அந்த இழப்புக்குப் பொறுப்பாளியாக இருந்த எல்லோர் மீதும் பொறுப்பு நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று பொதுக் கணக்குக் குழு விழைகிறது. ஆக 1970 ஆம் ஆண்டிலிருந்து 1982 ஆம் ஆண்டு வரையில் 12 ஆண்டுகளாக ஆண்டு ஒன்றுக்கு 3.12 கோடி 3 கோடியே சொச்சம் ரூபாய் வீதம் 37 கோடி ரூபாயை நாம் வலிய இழந்திருக்கிறோம். அவர்கள் கேட்டது அதை கடனாக பாவியுங்கள், கடனாகவா கேட்கிறீர்கள், நாங்கள் வரியையே விலக்கு செய்கிறோம் என்று அவர்களுக்கு வரியையே விலக்குச் செய்துகொடுத்தது. அது மாத்திரமல்ல, திராவிட முன்னேற்றக் கழக அரசில் இந்தப் பிரச்சினை உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு 1976 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் அரசுக்குச் சார்பாக அந்த ஆலை அதிபர்கள் அந்த வரியைக் கட்டித்தான் தீர வேண்டும் என்று



ஒரு தீர்ப்பை அளித்தபிறகும் அந்தத் தீர்ப்பைத் தூக்கிக் குப்பைக் கூடையிலே போட்டுவிட்டு நீங்கள் கடனா கேட்கிறீர்கள், கடன் கூட இல்லை, வரி விலக்கே கூட செய்கிறோம் என்ற அளவிற்கு ஆசீர்வாதம் செய்து ஆலை அதிபர்களைக் காப்பாற்றிய அசகாய சூரர்களுடைய அரசாங்கத்தான் இந்த அரசு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. நம்முடைய மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர் திரு. சங்கரய்யா அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். நானும் நிதிநிலை அறிக்கையிலே பேசுகிறபோது குறிப்பிட்டிருக்கிறேன். பாட்லிங், பிளென்டிங், சாராயக் கலவை தொழிற்சாலை மூலமாக ஏறத்தாழ 30 கோடி ரூபாய் தனியார்களுக்கு போகிறது. யாரோ ** அல்லது ** இருந்து கொண்டு, ** வைத்துக்கொண்டு 30 கோடி ரூபாயை தனி அதிபர்கள் ஆதாயங்கள் பெறுகிறார்கள்.

(பிற்பகல் 12-30)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: எங்கள் மேலே சாட்டப்பட்ட குற்றச்சாட்டே நாங்கள் ** கொடுத்திருக்கிறோம் என்பதுதான். அது ** இல்லையா என்பதைப் பற்றிதான் விசாரணை செய்வதற்கு விசாரணைக் குழு போட்டிருக்கிறது. ஆகவே, அதிலே ** இருக்கிறது; யாருக்கே கொடுத்திருக்கிறோம். ** இருக்கிறவர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். எதிர்க்கட்சித், தலைவர் அவர்கள் மிகுந்த அனுபவம் உள்ளவர்கள். அவர்கள் பேசுவதில் தவறு கண்டுபிடிப்பதாக தயவுசெய்து கருதக் கூடாது. ஏனென்றால் நீங்கள் எங்கள் மேலே சாட்டப்பட்ட குற்றச்சாட்டே ** கொடுத்திருக்கிறது என்பதுதான். எங்கள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டே ** உள்ளவர்களுக்குக் கொடுக்கப்பட்டது என்பதுதான். அது உண்மையா, இல்லையா என்பதை விசாரிப்பதற்காகத் தான் விசாரணைக் குழு எங்கள் மீது நாங்களே, போட்டுக் காண்டிருக்கிறோம். ஆகவே அந்த வார்த்தைகள் அவைக்குறிப்பிலே இல்லாமல்இருப்பது நலமாகயிருக்குமென்று தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த அவை எல்லா உரிமைகளையும் பெற்றது. நீதிபதிகளைப் பற்றி விமர்சிக்கலாம் என்ற அளவிற்கு இந்த அவையில் தாங்கள் எங்களுக்கு உரிமை அளித்திருக்கிற நேரத்தில் ஒரு விசாரணை கமிஷனிலேயிருக்கிற பிரச்னைப் பற்றி பேசுவது தவறல்ல என்று தான் நான் கருதுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1983 ஏப்ரல் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீதிபதிகளை விமர்சிக்கலாம் என்று நான் சொல்லவில்லை. நீதிமன்றங்களிலிருக்கிற தீர்ப்புகளைப்பற்றித்தான் சொன்னேன். நீதிபதிகள் என்று சொன்னதை மாற்றிக்கொள்ள வேண்டும்.

டாக்டர் மு. கருணாநிதி : நான் தீர்ப்புக்களைக் கூட விமர்சிக்கவில்லை. விவரங்களைத்தான் சொல்கிறேன். சாராயக் கலவைத் தொழிற்சாலையில். . . .

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே' நான் அவர்கள் பேசியதிலே ** இருக்கிறது; ** கொடுக்கப்பட்டிருக்கிறதென்று சொன்னவைகள் அவைக் குறிப்பிலே இருக்கக் கூடாது; நீக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அதில் தங்களின் உத்தரவைக் கோருகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : ** லைசென்சே பெறவில்லையா? அதையாவது சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த இடத்திலே உங்களுக்கு பிரச்சினை?

மாண்புமிகு திரு எஸ் டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, எங்கள் மேலே சாட்டப்பட்ட குற்றசாட்டே, அது பிளெண்டிங் யூனிட் ஆனாலும் சரி, அல்லது சில்லரைக் கடையானாலும் சரி, அல்லது ஹோல்சேல் கடையானாலும் சரி, இவைகளில் நான் படித்துக் காண்பித்தேன். அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்றால் இவைகளில் எல்லாம் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. அதிலே அதிகமாக மார்ஜின் கொடுத்து, பிராபிட் மார்ஜினில் எல்லாம் எங்களுக்கு பங்குண்டு என்று கூறப்பட்ட குற்றச்சாட்டை விசாரிப்பதற்குத்தான் விசாரணைக்கமிஷன் போடப்பட்டிருக்கிறது. விசாரணைக் கமிஷன் போடப்பட்டிருக்கிறதாலே ** உள்ளவர் பெயரும் அதிலே வந்திருக்கிறது. ஆகவே ** என்றும் அதிலே வந்திருக்கிறது. அவைகளைத் தவிர மற்றவற்றைப் பேசுவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மது என்றுகூட சொல்லக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மது என்று சொல்வதைப் பற்றியல்ல. விசாரணைக் குழுவிலே இருப்பதைப் பேசவேண்டிய தில்லை, அது குறித்துப் பேசப்பட்டவைகளைத்தான் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.

டாக்டர் மு. கருணாநிதி : விசாரணைக் குழு என்ற வார்த்தையையே நான் பயன்படுத்தவில்லை. நான் சொல்வது தனியார்கள் ** இருப்பவர்கள் . . .

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



1983 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது விசாரணைக் குழுவின் முன்பு இருக்கிற சப்ஜெக்ட் என்று அமைச்சர் சொல்கிறார்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 26 கோடி ரூபாய் தனிப்பட்ட முதலாளிகள் ** உள்ளவர்களோ, ** உள்ளவர்களோ, சம்பாதிப்பதை அரசே ஏற்றுக்கொள்ளுமானால் அதனால் ஏற்ற வருவாய் அரசிற்கு கிடைக்குமென்பதைத் தான் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் எதிர்க கட்சித் தலைவர் அவர்களுக்கு இருக்கிற சாமர்த்தியமும், திறமையும் அதைச் சொல்கிறபோது எந்த அளவிற்குச் சொல்லவேண்டுமோ அந்தச் சொல்கிற அனுபவம் அவர்களுக்கு இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பு இப்படி ** என்று பேசியது, ** என்று பேசியதை எல்லாம் நீங்கள் நீக்கியிருக்கிறீர்கள். எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒன்றாகவும், மற்றவர்களுக்கு ஒன்றாகவும் நீங்கள் தீர்ப்பளிப்பது நியாயமில்லை. அதிலே ** என்ற வார்த்தையும் ** என்ற வார்த்தையும் இருக்க வேண்டாம் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்று சொல்வதிலே ** என்று சொல்வதிலே பிரச்சினைகள் இல்லை. குற்றச்சாட்டு மாதிரி வருவதால் தான் பிரச்சினை வருகிறது. ** இரண்டையும் விட்டுவிட்டு மீதி எல்லாம் பேசுங்கள். அவைகள் மட்டும் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன.

டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே கொழுத்திருக்கிற தனியார் முதலாளிகளுக்கு—கொடுத்திருக்கிற அல்ல; கொழுத்திருக்கிற தனியார் முதலாளிகளுக்கு—ஏறத்தாழ ரூ.30 கோடி இந்த பிளண்டிங் பாட்லிங் தொழிற்சாலை மூலமாகவும், மாவட்ட சாராய மொத்த வியாபார நிலையங்களின் மூலமாகவும் செல்லுகின்ற அந்த வருவாய் அரசுக்குக் கிடைக்க, இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லப்பட்ட யோசனைகள், பல்வேறு கட்சிகள் செயற்குழு, பொதுக்குழுக்களில் நிறைவேற்றிய அந்தக் கருத்துக்கள் இவைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டாலே, இந்த அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டாலே, போட்ட வரிகளை எல்லாம் நம்பித்தான் அரசு நடத்தவேண்டு மன்று இந்தப் பயங்கரமான, ஊழல்கள் மலியக் கூடிய புதிய வரியைப் போடுகின்ற அபாயத்திலிருந்து அரசு தன்னை மீட்டுக்கொண்டிருக்க முடியும் என்பதற்காகத்தான் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

(டாக்டர் மு. கருணாநிதி) [1983 ஏப்ரல் 27

எந்த அளவிற்குப் பணம் விரயம் ஆகிறது என்பதையும் இங்கே எங்களுக்குத் தந்திருக்கிற அறிக்கையிலேயிருந்து என்னால் காட்டமுடியும். ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு, 1981—தணிக்கை செய்யப்பட்ட மாநாட்டுக் கணக்குகள் விவரம் இங்கே எங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. அதிலே இந்த உலகத் தமிழ் மாநாட்டிற்காக சுமார் ரூ. 10 கோடி மொத்தமாகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்றுள்ளது. கேட்டால் நிரந்தரமாக சில காரியங்கள் செய்யப்பட்டன என்று முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு, அல்லது அதற்கு முந்தைய ஆண்டு, இங்கே பேசியபொழுது, தன்னுடைய பதில் உரையில் குறிப்பிட்டார்கள். நிரந்தரமான செலவுக்காக, ரூ. 9 கோடி, அந்த ரூ. 10 கோடியில் செலவிடப் பட்டதாகச் சொன்னார்கள். ஆனால், இங்கே வைக்கப் பட்டிருக்கிற, தணிக்கை செய்யப்பட்ட மாநாட்டுக் கணக்கு விவரத்தில், ரூ. 9 கோடி அல்ல; ரூ. 6 கோடி நிரந்தரச் செலவுக்காகச் செய்யப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நிரந்தரச் செலவுகூட என்ன? கட்டணம் செலுத்திச் செல்ல வேண்டிய கழிப்பிடங்கள்—கக்கூஸ்கள்—மதுரை மாநகரத்தில், ரூ. 1 கோடியே 11 இலட்சம் செலவில் கட்டப்பட்டிருக்கிறது. இன்று அவைகளும் பயன்படுகின்றனவா என்பதை மதுரையிலே உள்ளவர்களை விசாரித்தால் தெரியும். அதைப்போல, சாலை வசதி, மதுரை மாநகராட்சிக்கும், திருப்பரங்குன்றத்திற்கும் ரூ. 3½ கோடிக்குச் செய்யப்பட்டிருக்கிறது. அந்தச் சாலைகள் எல்லாம் இன்று பயன்படக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்றனவா என்று சென்று பார்த்தால் தெரியும். மதுரையிலே, ரூ. 1.18 கோடிக்குக் குடிநீர் வசதி செய்யப்பட்டதாக அதிலே கணக்கு இருக்கிறது. ஆனால், மதுரை நகரத்தில் குடிநீர் இல்லாமல், இன்றைக்கு மக்கள் தவித்துக் கொண்டிருக்கிற நிலைமையையும் நம்மால் காண முடிகிறது. அதிலே இன்னொரு குறிப்பு—குமரிக் கண்டம் என்ற ஒரு படம், 2,000 அல்லது 3,000 அடிகள் கொண்ட படம். அது 11 பிரதிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்காகியிருக்கிற செலவு ரூ 9¼ இலட்சம். அந்தத் துறையிலே அனுபவம் உள்ளவன் என்ற முறையில் சொல்கிறேன். பெரிய நடிகர்களை வைத்துப் படம் எடுத்தால் கூட, ரூ. 12 இலட்சம். . . . .

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, முன்பே நீங்கள் இங்கே தெரிவித்திருக்கிறீர்கள், சில தினங்களுக்கு முன்னால், திடீரென்று குற்றச்சாட்டைச் சொன்னால் எப்படி மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்ல முடியும் என்று. இன்றைக்கு இப்படித் திடீரென்று சொன்னால், எப்படிப் பதில் சொல்ல முடியும்? என்னுடைய இலாகாவைப் பற்றியது அல்ல அது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டுகள் அல்ல, தணிக்கை அறிக்கையிலே வந்துள்ள செய்திகளைச் சொல்கிறார்.



1983 ஏப்ரல் 27]

டாக்டர் மு. கருணாநிதி : பெரிய நடிகர்களை வைத்துப் படம் எடுத்தால்கூட, 12,000 அடி கொண்ட கலர் படத்தை வெளியிட்டால்கூட, ரூ. 10 இலட்சம் அல்லது ரூ. 11 இலட்சம்தான் ஆகும். அந்தக் குமரிக் கண்டத்திலே பெரிய நடிகர்கள் யாரும் நடித்ததாகத் தெரியவில்லை. 2,000 அல்லது 3,000 அடி உள்ள ஒரு டாக்குமென்டரி பிலிம், 11 பிரதிகள் எடுப்பதற்கு ரூ. 9¼ இலட்சம் செலவிடப்பட்டது என்பது நம்பத்தகுந்ததாக இல்லை. இப்படிப் பல செலவுகள். அதைப் போலவே, உலகத் தமிழ் மாநாடு நிகழ்ச்சிகளை, ஊர்வலத்தை நிழல் படம்—திரைப் படம் அல்ல; நிழல் படம்—எடுக்க ஆகி இருக்கிற செலவு போட்டோ எடுக்க செலவு ரூ. 2½ இலட்சம் என்று இந்தத் தணிக்கைக் குழு ரிப்போர்ட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது. இப்படித் தேவையற்ற, அதே நேரத்திலே, அநாவசியமான, அதே நேரத்திலே அளந்து போடாத கணக்கற்ற நிலையிலே செலவைச் செய்து நிதிப் பற்றாக்குறை. நிதிப் பற்றாக்குறை. ஆகவே வரி போடுகிறோம் என்று கூறுவது எப்படிப் பொருத்தம் உடையதாகும்?

(பிற்பகல் 12-40)

கடந்த நான்கைந்தாண்டுக் காலத்திலே மாத்திரம் பத்திரிகைகளுக்குச் செய்தித் துறை மூலம் பல்வேறு இலாகாக்களுடைய விளம்பரங்கள் இதுவரையிலே காங்கிரஸ் அரசுக் காலத்திலோ, கழக ஆட்சிக் காலத்திலோ இல்லாத அளவிற்கு ஆறு கோடி ரூபாய் பத்திரிகை விளம்பரத்திற்காக இந்த அரசு செலவிட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, பல நேரங்களில், கேள்வி நேரங்களிலேகூட நம்முடைய அமைச்சர்களெல்லாம் சொல்வார்கள். இந்தப் பிரச்னை மத்திய அரசிலே இருக்கிறது; பாராளுமன்ற உறுப்பினர்கள் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், காங்கிரஸ் உறுப்பினர்கள் இவர்களெல்லாம் சென்று மத்தியிலே இருக்கின்ற அரசிடம் வலியுறுத்துங்கள் என்று அமைச்சர்கள் கேள்வி நேரத்திலே சொன்னதையெல்லாம் நான் கேட்டிருக்கின்றேன். இப்படிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இங்கே இருக்கும்பொழுது, அதுவன்னியில் அரசு அதிகாரிகள் இருக்கும்பொழுது டெல்லியிலே தமிழ்நாட்டு அரசாங்கத்தினுடைய பிரதிநிதி என்கின்ற ஒருவர் தேவைதானா? அதற்கு இரண்டாயிரம் ரூபாய் மாதச் சம்பளம் தர வேண்டியதுதானா? அது எவ்வளவு செலவு?

அரசுப் பிரதிநிதியாகத் தலைவர் அவர்களே, தாங்கள் இருந்தீர்கள். தாங்கள் அந்தப் பணியை, தங்கள் அரசுப் பிரதிநிதியாக ஒரு மகுடம் சூட்டப்பட்டு உட்கார வைக்கப்படாவிட்டாலும் கூட அந்தப்பணியைநிறைவேற்றுவதிலே வல்லவர் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். (குறுக்கீடு) அது தேவைப்படும், கோடைக் காலம்தான், எனவே அது தேவைப்படும்.

ஆனால் தொடர்ந்து அரசு அரசியல் கட்சி சார்புடையவர்களை, அதிகாரிகள் அல்லாதவர்களை இப்படிப்பட்ட பணிக்கு அங்கே ஈடுபடுத்துவதன் மூலமாக அவர்கள் எந்தக் காரியத்தையும் அங்கே இந்த அரசின் சார்பாகச் செய்யாத ஒரு சூழ்நிலையில் இலட்சக்கணக்கான ரூபாய்—இதுவரையில் அந்தக் கணக்கு தரப்படவில்லை—அந்த அளவிற்கு அரசுப் பிரதிநிதி என்கின்ற பெயரால் செலவழிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட வீண் செலவுகளைக் குறைத்துப், வரவேண்டிய வருவாய்களை ஒழுங்காகக் கவனித்து அவைகளைப் பெறுகின்ற முயற்சியிலே ஈடுபட்டு இந் அரசு இயங்குமேயானால் இப்படிப்பட்ட வரிகளைப் போட வேண்டிய அவசியமே இல்லை. எனவேதான் இதைபொறு ஆய்வுக் குழுவிற்கு, பொறுக்குக் குழுவிற்கு விடவேண்டுமென்றுகூட நம்முடைய நண்பர்கள் திரு. சித்தன் அவர்களும் மற்றும் பலகட்சிகளைச் சேர்ந்தவர்களும், எனக்கு முன்னால் பேசிய திரு. சங்கரய்யா அவர்களும், நண்பர் திரு. குமரி அனந்தன் அவர்களும் இங்கே சுட்டிக்காட்டினார்கள்.

இது பொறுக்குக் குழுவிற்கு விடப்படும் என்றால், அந்தக் காலதாமதத்தினால் பல்வேறு காரியங்கள் தவறாகக்கூட நடைபெறக்கூடும். பொறுக்குக் குழுவிற்கு அதை விடலாம் என்றால்கூட இதனுடைய அடிப்படையை நாம் ஏற்றுக்கொண்டதாக அர்த்தம், எனவே, இந்த அடிப்படையையே தகர்க்கின்ற அளவிற்கு இந்த நுழைவு வரியைத் தமிழகத்திலே நுழைய விடாமல் தடுக்க வேண்டுமென்கின்ற முறையோடு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த வரிவிதிப்பை மீண்டும் மீண்டும் வன்மையாகக் கண்டித்து, இதைத் திரும்பப் பெறுவதே உசிதமான வழி என்று வருவாய்த் துறை அமைச்சருக்கும், இந்த அரசுக்கும் அறிவித்து அமைகின்றேன் வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த நுழைவு வரியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களையெல்லாம் இங்கே சொல்லியிருக்கிறார்கள். கருத்துக்களைச் சொல்கிறபொழுது, புதிதாக நம்முடைய மாநிலத்திலே வந்திருக்கிறது என்பதனாலேயே மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், வெளியே இருக்கின்ற வியாபாரிகள் புதிதாக ஒரு வரி வருகிறது; புதிதாக வருவதை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்திவிட வேண்டுமென்றும், ஆகவே தங்களுடைய பலத்தையெல்லாம் ஒன்றாகத் திரட்டிக் காண்பித்து, அதை மக்களிடத்திலே சொல்வது மட்டுமல்ல, செய்தித் தாள் மூலமாகவும் விளம்பரங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் வைத்துக்கொண்டு இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.





இங்கே சொல்கிறபொழுது ஒன்றைச் சொன்னார்கள். இதில் தவறுகள் நடந்து விடுமோ என்கின்ற எண்ணத்தையெல்லாம் இங்கே சொல்லியிருக்கிறார்கள். தவறுகள் நடந்து விடுமே என்றால், தவறுகள் நடக்கும் என்பதற்காக, நல்ல காரியங்களை நாம் செய்வதற்கு முற்படும்பொழுது அதைச் செய்யாமல் நிற்க முடியாது. தவறு நடக்குமே என்றால், தவறு நடக்காமல் தடுத்து நிறுத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் ஊழல்கள் வந்து விடுமே, இலஞ்சம் அதிகரித்து விடுமே என்று அவர்களுடைய ஒருமித்த கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எந்தத் துறையாக இருந்தாலும், எதுவாக இருந்தாலும், தவறுகள் நடக்கத்தான் செய்கின்றன.

தவறுகள் இன்றைக்கா வருகின்றன? மன்னர் காலத்திலே ஆரம்பித்த அந்த ஊழல்கள், தவறுகள் தொடர்ந்து ஜனநாயகக் காலத்தில் இன்றுவரையில் வருகின்றன. அதிகரிக்கின்றன, அல்லது குறைகின்றன. அதற்காக, அதிகரிக்கின்றன என்பதனாலேயோ, குறைகின்றன என்பதனாலேயோ அதை நாம் விட்டுவிட முடியாது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், வணிக வரித் துறையைப் பற்றிச் சொல்கின்றபொழுது, எல்லா அதிகாரிகளும் பணம் வாங்குகிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் சொல்கிறபடி எல்லா அதிகாரிகளும் பணம் வாங்குவது இல்லை. என்னுடைய முழு மனதுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தவறு செய்கிறவர்கள் எல்லா இடங்களிலும், எல்லாத் துறைகளிலும் இருக்கிறார்கள். தவறு செய்யாதவர்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள். இதை நாம் தவிர்க்க முடியாது. ஆகையால் இலஞ்சத்தை ஒழிக்கமுடியாது என்று நான் சொல்கிறபோது, லஞ்சத்தை ஒழிக்கமுடியாது என்பதற்காக லஞ்சத்திற்கு முத்தம் கொடுக்க நான் தயாராக இல்லை. நான் மட்டும் அதற்கு முத்தம் கொடுக்கத் தயாராக இருந்தால், அது எப்படி நடைபெற முடியும்? சமுதாயத்தில் அத்தனை பேருடைய ஒத்துழைப்பும் இருந்தால்தான் அந்த இலஞ்சத்தை ஒழிக்க முடியும். இல்லையென்றால் அதை ஒழிக்கமுடியாது என்ற காரணத்தினால், இதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியுமா என்று பார்க்க வேண்டும்.

உணவுக் கட்டுப்பாடு. உணவுக் கட்டுப்பாட்டில், இன்றைக்கு அங்கேயும் சில தவறுகள் நடக்கின்றன. சிறு சிறு தவறுகள் ஏற்படுகின்றன என்ற காரணத்தினால், உணவுக் கட்டுப்பாட்டை வேண்டாம் என்று கருதமுடியுமா? அரிசி கொள்முதல் செய்யாமல் இருக்கமுடியுமா? சமுதாயத்தின் அடித்தளத்திலே உள்ளவர்கள், ஏழை எளியவர்கள், குறைந்த விலையில் அவர்களுக்கு எப்படி அரிசியைக் கொடுக்கமுடியும்? எப்படிப்பட்ட தவறுகள் நடந்தாலும், எப்படிக் கொடுக்கவேண்டுமென்கிற நிலைமையில்தான் நாம் இருக்க வேண்டுமென்று சொல்லிக்

கொள்ள ஆசைப்படுகிறேன். இல்லாவிட்டால், உணவுக் கட்டுப்பாட்டில் தவறு நடைபெறுகிறது என்ற காரணத்தால், நல்ல காரியம் செய்வதை விட்டுவிடக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு இந்த சட்டத்தை ஏன் கொண்டுவருகிறோம் என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். இன்றைக்கு இந்த அரசிற்கு எப்படிப் பற்றாக்குறை வந்தது? 1983–84-ஆம் ஆண்டு ஏறக்குறைய ரூ. 184.55 கோடி பற்றாக் குறை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட பற்றாக்குறை ஏற்படுகிறபோது, அது இங்கு மட்டுமல்ல. பல மாநிலங்களிலே உள்ள அரசுகளுக்கும் ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசிற்கும் ஏற்பட்டிருக்கிறது. அப்படி வருகிறபோது நாம் சரிகட்ட வேண்டாமா இல்லையா என்பதற்கு சரிகட்ட வேண்டியது அரசினுடைய கடமையாகும் என்பதை தெரிவித்துக்கொள் கிறேன். அப்படி சரிகட்டும்போது சில இடங்களில் வரிபோடுகிற நிலை ஏற்படுகிறது. அது ஏழைகளை பாதிக்கிறதா, பணக்காரர் களைப் பாதிக்கிறதா என்பதை அரசும் எண்ணக் கடமைப்பட்டிருக் கிறது. மாண்புமிகு உறுப்பினர்களும், தங்களுடைய கருத்துக் களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

சென்ற ஆண்டில், 1981-ல் வறட்சி வந்தது. வறட்சிக் காக மத்திய அரசை நாம் கேட்டது எவ்வளவு என்றால் ரூ. 110 கோடி. அவர்கள் அனுமதித்தது ரூ. 49.7 கோடி, அவர்கள் கடனாகக் கொடுத்தது ரூ. 22.58 கோடி, மானிய மாகக் கொடுத்தது ரூ. 9.68. ஆக மீதமுள்ளவைகளுக்கு என்ன செய்வது? ரூ 58 கோடி தக்காவிக் கடனில் ரூ. 18 கோடியை நாம் செலவு செய்திருக்கிறோம் மத்திய அரசிட மிருந்து கடனாகவும் மானியமாகவும், ரூ. 31 கோடிதான் கிடைத்தது. இத்தகைய நிலையில் நாம் எவ்வாறு சமாளிக்க வேண்டும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்

தற்சமயம் நாடு பூராவும் வறட்சியாக இருக்கிறது. நாடு பூராவும் என்றால்: இந்தியா பூராவும் என்று சொல்கிறார்கள். நாம் நாடு பூராவும் என்று சொன்னால், தமிழகத்தைச் சொல் கிறோம், மற்ற மாநிலங்களைப் பார்க்கிறோம், கேட்டது ரூ. 217 கோடி. அவர்கள் அனுமதித்தது ரூ. 57.6 கோடி. ஆனால் இன்று வரை மத்திய அரசு அனுமதித்தது ரூ. 47.63 கோடியாகும் ஆனல் மத்தியப் பேரரசு கொடுத்தது எவ்வளவு என்றால் ரூ 15 கோடி. அப்படி யென்றால், இந்த இடைவெளியை எப்படிச் சமாளிப்பது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட நிலையில், விவசாயக் கடன்களை ரத்து செய்யவேண்டுமென்று அரசிற்கு விண்ணப்பங்கள் வருகின்றன. ஏன் இந்த நுழைவு வரி வசூல் என்ற கருத்தை எல்லோரும் கேட்கிறார்கள்.

வறட்சி ஏற்படுகிறபோது, விவசாயத் தொழிலாளர் களும், மற்றவர்களும் இன்றைக்கு நாட்டிலே வேலையில்லாமல் சங்கடப்படுகிறார்கள். அதற்கு நிதியுதவி செய்து, இந்த அரசிற்கு மத்திய அரசு கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும்



(பிற்பகல் 12–50)

பொதுப்பணித் துறையில், நெடுஞ்சாலை வளர்ச்சித் துறையிலே ஊரக வளர்ச்சித் துறையிலே அவர்களுக்கு வேலை கொடுப்பதற் கான பணிகளைப் பெருக்கி. வேலை வாய்ப்பை உருவாக்கி யிருக்கிறது. அப்படி வேலை வாய்ப்பை உருவாக்கியது மட்டு மல்ல, உங்களுக்குத் தெரியும், நம்முடைய செய்தித்தாள் களிலே வந்திருக்கிறது இங்கேயும் சொல்லப்பட்டு இருக்கிறது. இன்றைக்குத் தமிழகத்திலே ஏறக்குறைய— ஏறக்குறைய என்று சொல்வதைவிட சரியாகக்கூடச் சொல்லலாம். — 70 லட்சம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். 70 லட்சம் தொழிலாளர்கள் என்றால், அதிலே ஒரு குடும்பத்திற்கு 6 பேர்கள், 7 பேர்கள் என்றாலே 6 லட்சம், 7 லட்சம் அல்லது 10 லட்சம் குடும்பங்கள் இருக்கின்றன. ஒரு குடும்பத்திற்கு ஒரு வேட்டி ஒரு சேலை என்றால் 10 லட்சம் கொடுக்க வேண்டியிருக்கிறது அப்படி 10 லட்சம் கொடுப்பதற்கு என்ன செலவாகும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், இதில் இந்த அரசு ஏழை விவசாயிகள் நிலமற்ற விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தருவது என்பதை இங்கே உள்ள அத்தனை உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்பது எனக்குத் தெரியும். சரி, அவர் களுக்கு வேட்டி கொடுப்போம், சேலை கொடுப்போம் என்பதையும் இங்கே உள்ள அத்தனை பேர்களும் ஏற்றுக் கொள்வார்கள், மறுக்க மாட்டார்கள். இந்தச் செல வினங்களை நீங்கள் யாரும் மறுக்கமாட்டீர்கள். இந்தச் செலவினங்களை மறுக்காமல் இருக்கிறபோது, அதற்கு வர வேண்டுமே. சட்டியிலே இருந்தால்தானே அகப்பையில் வரும். சட்டியை மட்டும் வைத்துக்கொண்டு, அதுவும் மொட்டைச் சட்டியை வைத்துக் கொண்டு நல்ல பெரிய அகப்பையை வைத்துக்கொண்டு துழாவினால் எப்படி வரும். எனவே இன்றைக்கு இருக்கிற சங்கடங்களை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதேபோல் இந்தச் சத்துணவுத்திட்டம். இந்தத் திட்டத் திலே மாறுபட்ட பல்வேறு கருத்துக்கள் இருக்கும். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறபோது நீங்கள் அதிகமாக செலவழிக்கிறீர்கள் என்று சொன்னார்கள். ஆனால் இதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன் சத்துணவுத் திட்டம் நல்ல திட்டம். ஏழை எளிய மாணவர்களுக்கு எல்லாம், உணவு அளிக்கவேண்டும் என்பதை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் ஆனால் சத்துணவுத் திட்டம் என்கிறபோது ஏதோ ஒரு சோத்துப் பிரச்னையாக யாரும் அதை எண்ணக்கூடாது. சோத்துப் பிரச்னை அல்ல. விஞ்ஞான ரீதியாக கண்டுபிடிக்கிறபோது குழந்தைகளுக்கு எப்போது அறிவு வளர்கிறது என்றால் 3 வயதிலிருந்து 6, 7

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1983 ஏப்ரல் 27

வயது வரையிலும் வளர்கிறது. ஆளும் வளரனும், அறிவும் வளரனும் என்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் பாடியதைப் போல ஆளும் வளர வேண்டும், அறிவும் வளர வேண்டும், சத்துணவு இல்லாவிட்டால் என்ன செய்யமுடியும்? சத்துணவுக் கொடுத்தால் தானே. நான் இன்னும் உங்களுக்குச் சொல்வேன், எதிர்காலத்திலே இந்தச் சமுதாயம் அறிவுள்ள சமுதாயமாக ஆற்றலுள்ள சமுதாயமாக ஆகவேண்டும். இந்த நாடு பொருளாதார ரீதியில், விஞ்ஞான ரீதியில், வளரவேண்டும் என்றால் எப்படி வளரமுடியும். எதிர்கால சந்ததிகள் அறிவுள்ள சமுதாயமாக ஆகவேண்டும் அதிலே பாரதிதாசன் சொல்லி யதைச் சொல்லவேண்டுமென்றால், குன்றினைப் போல் உடல் வலிமை வேண்டும், கொடுமைகள் தீர போராடுதல் வேண்டும். குன்றினைப் போல் உடல் வலிமை வேண்டும், கொடுமைகள் தீரப் போராடுதல் வேண்டும் என்றால் நோஞ்சானாக இருந்தால் எப்படி முடியும். அதுமட்டுமல்ல, தின்றவே தின்று தெவிட்டல் இல்லாமல், அன்றன்று வாழ்வில் புதுமை காணவேண்டும். அறிவோடு ஆண்மையை கூர்மையாக வளர்க்கவேண்டும் என்று இப்படி பாரதிதாசன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே விஞ்ஞான ரீதியிலேதான் இது கொடுக்கப்படுகிறது. இன்றைக்குத் தமிழகத்தை எடுத்துக் கொண்டாலும், இந்தியத் துணைக் கண்டத்தை எடுத்துக்கொண்டாலும், வைட்டமின் ஏ இல்லாமல் பல பேர்கள் கண்ணை இழக்கிறார்கள் என்று சொல் கிறார்கள். இப்படிக் கண் பார்வை இழப்பதை எல்லாம் பார்த்துத்தான் முதல்வர் அவர்கள் இதை வெறும் சோத்துப் பிரச்னையாகப் பார்க்காமல் விஞ்ஞான ரீதியாக இந்தச்சத்துணவு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்:

மற்றொன்று சொல்லவேண்டுமென்றால், நியாய விலைக் கடைகள். மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசுகிறபோது நியாய விலைக் கடைகளிலே எல்லாப் பொருள்களும் இருக்க வேண்டும், குறைந்த விலையிலே கிடைக்கவேண்டும். அரிசி இல்லை, ஏன் ஒரு குடும்பத்திற்கு 20 கிலோ அரிசி வில்லை? ஏன் 10 கிலோ அரிசி கொடுக்கிறீர்கள் என்று கேட்டார்கள். அப்படி நியாயவிலைக் கடைகள் என்று தமிழகத் திலே எவ்வளவு இருக்கின்றன என்றால் 17,844 நியாயவிலைக் கடைகள் இருக்கின்றன. இவைகள் எல்லாம் தேவை என்று எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். இந்த நியாயவிலைக் கடைகளை நடத்துவதற்கும் பணம் கொடுக்கிறது அரசு. அப்படிச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், 1979 80-ல் ரூ 125 லட்சம் கொடுத்திருக்கிறது. 1980—81-ல் ரூ. 132 லட்சம், 1981-82-ல் ரூ. 254 லட்சம், என்று இப்படிக் கடைகளை நடத்து வதற்குப் பணம் கொடுக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அரிசி அங்கே கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுக்கப்படுகிற அரிசி எவ்வளவு கொடுக்கப்படுகிறது என்று சொன்னால், நல்ல ரகமாக இருந்தால் 2 ரூபாய், சாதாரண ரகமாக இருந்தால் 1¾ ரூபாய், 1 கிலோ. 1 கிலோ





1983 ஏப்ரல் 27] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

அரிசி-நல்ல ரகமாக இருந்தால். 3 ரூபாய். மோட்டா ரக மாக இருந்தால் ரூ 2.50. இப்படி வாங்குகிற அரிசியைக்குறைந்த விலைக்குக் கொடுக்கிறபோது நமக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படு கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இது எப்போதும் நடந்தது இல்லை. நாட்டிலே நன்றாக மழை பெய்து, நன்றாக பயிர்கள் விளைகிறபோது இந்த நியாய விலைக் கடைகளில் அதிகமாக விற்கவில்லை. உங்களுக்கு உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், 1979-80-ல் 1.00 லட்சம் மெட்ரிக் டன் அரிசிதான் விற்று இருக்கிறது. அன்று அதற்குக் கொடுத்த உதவிப்பணம் எவ்வளவு என்றால் ரூ. 293.80 லட்சம்தான். ஆனால் 81.82—ல் 2.25 லட்சம் மெட்ரிக் டன் உதவித் தொகை 681.8 லட்சம் வறட்சி எப்போது வந்தது, 81—82—ல். 2.25 லட்சம் மெட்ரிக் டன் நியாயவிலைக் கடையில் நாம் விற்று இருக்கிறோம். ஒரே ஆண்டில் நாம் கொடுத்த உதவித்தொகை பலமடங்கு ஏறியிருக்கிறது. 1981—82—ல் 7.05 லட்சம் மெட்ரிக் டன் கொடுத்து இருக்கிறோம். அந்த வருஷம் மட்டும் அரசு கொடுத்த பணம் எவ்வளவு என்றால் ரூ. 3525 லட்சம்—முதல் வருஷம் சுமார் 600 லட்சம். அடுத்த வருஷம் ரூ. 3525 லட்சம் என்றால் 6 மடங்கு 7 மடங்கு அதிகரித்து இருக்கிறது ஒரே ஆண்டில் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். அதே நிலை இன்று நீடிக்கிறது. இன்று 1982-83—ல் 8 லட்சம் மெட்ரிக் டன் அரிசி கொடுத்து இருக்கிறோம். அதற்கு ரூ. 600 லட்ச ரூபாய் அரசு மானியமாகக் கொடுத்து இருக்கிறது. 3.50 ரூபாய் ரூ. 2½ என்ற அளவிற்கு வாங்கப்படுகிற அரிசியை ரூ. 2 1 3/4 என்று விற்றால், அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. இப்போது வருகிற ஆண்டில், 1983-84—ல் இன்னும் வறட்சி இருக்கிறது என்பதால், அரிசி எவ்வளவு செலவாகும் என்றால், 9 லட்சம் மெட்ரிக் டன். எதிர்பார்க்கிற நஷ்டம் எவ்வளவு என்றால் இந்த ஆண்டில் ரூ. 60 கோடி வருகிறது. இந்தப் பணத்திற்கு எங்கே போவது? மாண்புமிகு உறுப்பினர்கள் இதை யெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இப்படி வரிகள் போடுகிறோம் என்று சொன்னால், அது ஏழை எளியவர்களுக்கு, வாழ்க்கையின் அடி தளத்தில் உள்ளவர்களுக்கு உதவி செய்வதற்குத்தான். அரசு எவ்வளவு கஷ்டப்பட்டாலும் கடன் வாங்கியாவது அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று சொல்லுகிற மாண்புமிகு உறுப்பினர்களின் அந்த எண்ணங்களைப் பார்க்கிறபோது, இவ்வளவு செலவினங்கள் வருகிறதே என்பதை எண்ணிப்பார்க்கிறபோது, இப்படிப்பட்ட வரிகளைக் கொண்டு வரவேண்டிய நிலைமை இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இன்றைக்குக் காவல்துறைக்குக் குறைந்த விலைக்குப்பொருள்கள் தருகிறோம். அரிசி 1 கிலோ 1 ரூபாய், துவரம் பருப்பு ஒரு கிலோ ரூ 2.50, கடலைப்பருப்பு ரூ. 2¼ என்று இப்படியெல்லாம் குறைந்த விலைக்குக் கொடுக்கிறோம். இதன் காரணமாக 2

கோடி ரூபாய், 3 கோடி ரூபாய் அதிகமாகி ஒரு வருஷத்திற்குச் செலவிடவேண்டிய நிலை இருக்கிறது. இவையெல்லாம் செய்வதற்குப் பணம் வேண்டும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நீங்கள் எல்லாம் மிகமிக ஆவலோடும், ஆர்வத்தோடும் இந்த நாட்டு மக்களுக்காக, சென்னை நகர மக்களுக்காக கிருஷ்ணா நீர் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டீர்கள். அது குறித்து இந்த அரசு செய்துகொண்ட ஒப்பந்தத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கே படித்துக் காட்டினார்கள். அதற்கு எவ்வளவு செலவாகும் என்பதையும் எடுத்துச் சொன்னார்கள். அந்தப் பணத்திற்கு எங்கே போவது? அது மட்டுமல்லாமல், நம்முடைய வாய்க்கால்களைச் சீர்படுத்தி, ஏரிகளைப் பலப்படுத்தி, அந்தத தண்ணீரை சேமித்து வைப்பதற்காக ஏறத்தாழ 236 கோடி ரூபாய் செலவு வருகிறது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஆந்திராவில் செய்யப்படுகிற வேலைகளுக்கு நம்முடைய பங்காக அவர்களுக்கு நாம் ஆண்டுக்கு 60 கோடி ரூபாய் தரவேண்டியிருக்கிறது. ஏறத்தாழ 200 கோடி ரூபாய் நம் தரவேண்டும். எனவே ஏறத்தாழ 436 கோடி ரூபாய் நாம் இதற்கு செலவிட வேண்டியிருக்கிறது என்றால் என்ன செய்வது? இவைகளையெல்லாம் எண்ணிப்பார்த்து, இன்றையதினம் நம்முடைய வருவாயை ஓரளவிற்குச் சரிப்படுத்த இந்த நுழைவு வரி இங்கே கொண்டு வரப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இதை சொல்லுகிறபோது இங்கே நான் உங்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வரி ஒருமுறைதான் வசூல் செய்யப்படும்; இரண்டாம் முறை வசூல் செய்யப்படமாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

(பிற்பகல் 1-00)

இன்றைக்கு இங்கே பேசும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் செக் போஸ்டிலே நிறுத்திவிடுவார்கள், சில சங்கடங்களை உருவாக்குவார்கள் என்று சொன்னார்கள். நிச்சயமாக செக் போஸ்டிலே நிறுத்தமாட்டார்கள். இதை எல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் இந்த வரியைக் கொண்டு வந்திருக்கிறோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியிலே இதைக் கொண்டு வந்திருக்கிறோம். அண்ணா அவர்கள் என்ன சொன்னார்கள்?

திரு. துரைமுருகன் : அண்ணா அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால் இந்தமாதிரி நுழைவு வரி எல்லாம் போடக் கூடாது அப்படி என்று சொன்னார்கள். (சிரிப்பு);





மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அண்ணா அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை, உறுப்பினர்கள் தெரிந்துகொள்வதற்காக, படித்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இவ்வளவு செலவினங்கள் இருக்கின்றன என்று தெரிவித்துக்கொண்டேன். ஆனால் இப்போது நாங்கள் வரியைக் கொண்டு வருகிறோம் என்றால் ஏதோ விளையாட்டுக்காகக் கொண்டு வரவில்லை. மன்னர் ஆட்சியில் எவ்வளவு வேண்டுமானாலும் பணத்தை வாங்கலாம்; அதை எப்படி வேண்டுமானாலும் செலவழிக்கலாம். ஆடம்பரமாகச் செலவிடலாம். ஆனால் இங்கே முடியாது. இப்போது நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் கூட நாங்கள் செய்திருக்கிற கணக்கையும். இன்றைக்கு சி. ஏ. ஜி. ஆடிட் செய்திருக்கிறதையும் படித்துக் காட்டினார்கள். ஒவ்வொரு இடத்திலும் இங்கே செக்கிங் இருக்கிறது; தடுப்புச் சுவர் இருக்கிறது. ஆனால் அப்படிச் சொல்லுகிறபோது வரியைப் போடுவது மட்டுமல்ல; வரியைப் போட்டபிறகு முறையாக வாங்கி, முறையாகச் செலவிடுகிற கடமையும் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு இருக்கிறது. இல்லை என்றால் சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல; பொது மக்களே கேட்பார்கள், நீங்கள் வரி போட்டீர்களே, என்ன செய்தீர்கள் என்று.

அண்ணா வழியில்தான் நாங்கள் வரியைக் கொண்டு வந்திருக்கிறோம். இன்னும் சொல்ல வேண்டுமானால் 1967 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17–ந்தேதி வரவு–செலவுத் திட்டத்தில் அண்ணா அவர்கள் சொன்னதைப் படிக்கிறேன். ஏனென்றால் அண்ணா அவர்கள் சொன்னாரா இல்லையா என்று கேட்பார்கள். "வரி குறைப்பு முறையிலும், வரி அறிவிப்புத் திட்டத்திலும், சலுகை தரும் முறையிலும் சமூகத்தில் குறைந்த வருவாய்ப் பிரிவினர் நலனைப் பாதுகாக்கும் நோக்குடன் அமைக்கப்படுவதே சரியான சமூக நீதி என்று இந்த அரசுக் கருதுகிறது" இதை ஏன் சொல்கிறேன் என்றால் இது அண்ணா அரசுதான். அண்ணா எதை நினைத்தாரோ அதைத்தான் இந்த அரசு நினைக்கிறது; அதன்படி நடக்கிறது. "தாங்கள் கூறிய தரத்தில் உள்ளவர்களை (மேஜராக இருப்பவர்கள், சேர்த்து, கோடிக் கணக்கில் உள்ளவர்களுக்கு இந்தச் சலுகைகளைத் தந்துவிடுவது பொருளற்ற போக்காகும். வறிய நிலையில் உள்ளோர் நலனுக்காகவும், நாட்டின் பொது நலனுக்காகவும், நலிந்த வாழ்வினர் நலனுக்காகவும் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கையாக....

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் புரிகின்ற வாதத்திலிருந்து இந்த 'என்ட்ரி டாக்ஸ்', நுழைவு வரியை அண்ணா அவர்களே அன்றைக்கு ஆதரித்திருக்கிறார்கள் என்கின்ற ஒரு தவறான கருத்து பொதுமக்களிடத்திலே பரப்பப்பட்டுவிடக் கூடாது. அண்ணா சொல்லித்தான் இந்த வரியைப் போட்டோம் என்பதைப்போல அமைச்சரவர்கள்

கூறுகின்றார்கள். அண்ணா கூறிய பொதுப்படையான கருத்தை இதற்காகப் பயன்படுத்துவது நல்லதல்ல. எங்காவது அண்ணா அவர்கள் நுழைவு வரி போடவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்களா என்று படித்துக் காட்டினால் நலம். ஏனென்றால் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலும் அதற்குப் பின்னால் கழக ஆட்சி நடைபெற்ற போதும் சென்னை மேயராக இருந்த நண்பர் முனுசாமி அவர்கள் அண்ணா அவர்களை அணுகி, பிறகு அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு எங்களை அணுகி, இந்த நுழைவு வரியை சென்னைக்கு மாத்திரமாவது போட வேண்டும்; மாநகராட்சி மன்றம் அதனுடைய பயனைத் துய்க்க வேண்டுமென்று கேட்டபோது அண்ணா அவர்களும் மறுத்துவிட்டார்கள், அண்ணாவுக்குப் பிறகு நம்முடைய ஆட்சியிலும் — உங்களையும் சேர்த்துதான் சொல்லுகிறேன் -- நண்பர் முனுசாமி அவர்களுடைய கோரிக்கை மறுக்கப்பட்டுவிட்டது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, வரி போடுவதைப்பற்றி அண்ணா அவர்கள் என்ன கருத்தை வைத்திருந்தார்கள் என்பதைத் தெரிவிக்கிறேன். அதற்கு வசதி நிறைந்து உள்ளோர் நாட்டின் பொது நலனுக்காகவும் நலிந்த வாழ்வினர் நலனுக்காகவும் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்காகவும் செலவுத் தொகையில் இங்கே தான் அண்ணா வருகிறார்—ஒரு கணிசமான பகுதியைத் தந்து உதவும் பொறுப்பை மேற்கொள்வதை பாரம் என்று கருதக் கூடாது. அறம், பொறுப்பு என்று கருத வேண்டும். அது மட்டுமல்லாமல் இப்படிப்பட்ட வரி போடுவதை நல்லோர் அங்ஙனமே கருதுவர் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

டாக்டர் மு. கருணாநிதி ; தலைவர் அவர்களே, அண்ணா அவர்கள் இப்படிப்பட்ட ஒரு நுழைவு வரியைப்போடலாம் என்று உத்தரவிட்டாரா? நண்பர் முனுசாமி அவர்கள் சொன்ன நுழைவு வரி சம்பந்தமான கருத்துக்களை அவர் ஏற்றுக் கொண்டாரா இல்லையா என்பதை, அப்போதைய அமைச்சராக இருந்த, இப்போது நிதியமைச்சராக உள்ள நாவலர் அவர்கள் குறிப்பிடுவார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நுழைவு வரியை அண்ணா ஏற்றுக் கொள்ளவில்லையே தவிர, எல்லோரும் சொன்னது மாதிரி வரியே போடவேண்டாம் என்று சொல்லவில்லை. வரி போடலாம் என்றுதான் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி—கூச்சல் குழப்பம்) எத்தனையோ வரிகளை அண்ணா அவர்கள் காலத்தில் போடவில்லை. பிறகு நாம் போட்டுக் கொண்டு வந்தோம். அதே மாதிரி பண்டித ஜவஹர்லால் நேரு காலத்திலும் கூட போடப்படாத எத்தனையோ வரிகள் தற்போது பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் காலத்திலே





போடப்பட்டு வருகின்றன. அது மட்டும் அல்லாமல் நுழைவு வரி எங்கேயிருந்து வந்தது? அதை எங்கேயிருந்து கொண்டு வந்தீர்கள் என்று மாண்புமிகு காங்கிரஸ் கட்சி தலைவர் அவர்கள் கேட்ட உடனேயே காங்கிரஸ் மாநிலங்களிலேயிருந்துதான் அதை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம் என்று நான் பதில் சொன்னேன். (சிரிப்பு) வேண்டும் என்றால், அந்த மாநிலங்களுக்கெல்லாம் சென்று நேரிடையாக ஆராய்ந்து பார்த்து, இதிலே எந்தவிதத் தவறோ, புகாராறுகளோ ஏற்படாத அளவுக்கு அவர்கள் எப்படிச் சாமர்த்தியமாக நடந்து கொண்டு வருகிறார்கள் என்பதைப் பார்த்து, அவைகளைப் பயன்படுத்தி நம் மாநிலத்திலும் குற்றங்குறைகள் ஏற்படாமல் நடவடிக்கை எடுக்கலாமே தவிர, வரியே போடக்கூடாது என்பது சரியல்ல. வரிகளைப் போடத்தான் வேண்டும். ஆனால் இதைக்கூட நாங்கள் ஒன்றும் மகிழ்ச்சியாகப் போடவில்லை, வேறு வழி இல்லாமல்தான் போடுகிறோமே தவிர, வேறல்ல. ஆகவே, இந்த வரிகளைப் போடலாம் என்பது என்னுடைய கருத்து.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப் : மிஸ்டர் ஸ்பீக்கர் சார், எந்தெந்த இனங்களுக்கு நுழைவு வரி போடப் போவதாக இங்கே சொல்லியிருக்கிறார்களோ, அவைகளில் பல பொருள்களின் மீது 2,3 தடவை சேல்ஸ் டாக்ஸ் இன்க்ளூட் செய்யப்பட்டிருக்கிறது. நுழைவு வரியும் போட்டு, சேல்ஸ் டேக்ஸும் போட்டுப் பார்க்கும்போது அது மிக அதிகமாக விலை உயரும் நிலை இருக்கிறது......

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் பேசி முடித்து விடுகிறேன். பின்னால் வேண்டுமானால் சொல்லுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நான் அண்ணா அவர்கள் பேசிய கருத்துக்களைக் கூறிக் கொண்டிருந்தபோது, அதை பாதியிலேயே வெட்டி விட்டார்கள். அதைப் மேலும் வெட்டி விடலாம் என்று நீங்கள் வேறு வகையிலே கேள்வி கேட்கிறீர்கள். இதற்கெல்லாம் நான் பின்னால் பதில் சொல்கிறேன். மாண்புமிகு அண்ணா அவர்கள் அப்படிச் சொல்லவில்லை. இப்படி வரிகள் போடுவதை ஏற்றுக் கொள்வதை பாரம் என்று கருதக் கூடாது, அறம் என்று கருதவேண்டும். அதற்குப் பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும். அது மட்டும் அல்ல, நல்லவர்கள் அதனை அங்கீகரிப்பார்கள் — என்னைப் போல — என்றும் சொன்னார்கள். (சிரிப்பு) நுழைவு வரி போடுவதை அண்ணா அவர்கள் ஏற்றார்களா என்று கேட்டார்கள். இதுபோன்று எதிர்க்கட்சிகள் எதிர்காலத்தில் கேட்பார்கள் என்று எண்ணியிருந்தால், எந்தெந்த வரிகளை எல்லாம் போடலாம், எவைகளையெல்லாம் போடவேண்டாம் என்று அண்ணா அவர்கள் எழுதி வைத்திருக்கக்கூடும். ஆனால் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படும், இப்படிப்பட்ட கேள்விகள் கேட்பார்கள் என்று அண்ணா அவர்கள் அப்போது எதிர்பார்க்கவில்லை. (சிரிப்பு)

அது மட்டும் அல்ல, அவர்கள் மேலும் சொல்கிறார்கள் — வரியைப் போடாமல் ஆட்சியை நடத்தவேண்டும் என்று நான் குறிப்பிட மாட்டேன் — அப்படி என்றால் வரி போடவோம் என்று அர்த்தம் — போடுகின்ற வரியை போடத்தக்க இடத்திலே போடவேண்டிய முறைப்படி போடவேண்டும், என்றும் குறிப்பிடுகிறார்கள். வரியைப் போடவேண்டிய இடத்தில் போடவில்லை, போடவேண்டிய முறைப்படி போட வில்லை என்று எடுத்துச் சொல்லுங்கள். அதை மாற்றிக் கொள்கிறேன்.... (குறுக்கீடு).... அண்ணா பேசுவதைக் குறிப்பிடப்போகிறேன். ஆகவே, இப்போது அண்ணா பேசப் போகிறார், அண்ணா பேசும்போது குறுக்கிடக்கூடாது. 'அப்படி வரியைப் போடாமலேயே ஆட்சியை நடத்தலாம் என்று நாங்கள் சொல்லவில்லை' என்று குறிப்பிட்டு, அவர் மேலும் சொல்கிறார் — வரியைப் போடுகிற முறையிலே போடத்தக்க இடத்திலே போடவேண்டும். வரியைப் போடாமலே ஆட்சியை நடத்தலாம் என்று நாங்கள் சொல்லவில்லை, ஆனால் நான் சொன்னதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்து வைத்துக்கொண்டு, வரியே போடமாட்டோம், என்று நாங்கள் சொன்னதாக சொல்கிறார் — இப்போதும் எதிர்க் கட்சித் தலைவர் சொல்வது போல — ஆனால் நான் அதைப் பற்றி என்னுடைய முதல் பேச்சிலே சட்டமன்றத்திலேயும் ஒரே மாதிரித்தான் சொன்னேன். வெளியிலே பொதுக்கூட்டங் களிலேயும் அப்படித்தான் நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம்— ஆனால் நான் சொன்னதிலே, ஏழைகளுக்கு வரி போட மாட்டோம், மற்றவர்களுக்கு வரி போடுவோம் என்று சொன்னதிலே, ஏழைகள் என்ற ஒரு வார்த்தையை மட்டும் அவர்கள் எடுத்து விட்டார்கள் என்று அவர்கள் சொன் னார்கள்.

(பிற்பகல் 1-10)

ஆகவே தாங்கக் கூடியவர்களுக்கு வரி போடவேண்டும். அப்படிப் போடப்பட்ட வரிகளை தக்க காரியங்களுக்குப் பயன் படுத்த வேண்டும் என்றுதான் நான் சொன்னேன் என்று அண்ண அவர்களே குறிப்பிட்டிருக்கிறார். நான் இங்கே அண்ணா சொன்னதைச் சொல்வதற்கு காரணம் நான் இதற்கு முன்னால் படித்துக் காண்பிக்கிறபோது இந்த அரசு எது எதற்கு வரி போட்டுக்கொண்டு வருகிறது, அப்படிச் செய்து கொண்டு வருகிறபோது என்ன என்ன நன்மை செய் கிறோம் அதற்குப் பணம் வேண்டுமா; வேண்டாமா என்பதற்குத் தான் இதை நான் படித்துக் காண்பித்தேன் என்பதை உங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல, இங்கே வரி போடுகின்றபோது நாங்கள் மட்டும் போடவில்லை என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். இங்கே சட்டம் கொண்டுவருகிறபோது மாண்புமிகு நிதி





யமைச்சர் அவர்கள் 'நாட் எக்ஸீடிங் ஆப் 2%' என்று சொன்னதை இந்த அரசு ஏற்றுக்கொண்டு அமெண்டுமெண்டு உங்களுக்கு கொடுத்து இருக்கிறார்கள். நான் கடைசியில் அமெண்டுமெண்டை படிக்கிறேன். ஆனால் இந்தப் பொருட் களில் சிலவற்றுக்கு எடுக்க வேண்டும் என்று சொன்னார்களோ, விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்று சொன்னார்களோ சர்க்கரை, துணிகள், புகையிலை ஆனால் இங்கே பட்டுக்கு வரி உண்டா என்று கேட்டார்கள். நிச்சயமாக, பட்டுக்கு வரி போட வில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் பேசுகிறபோது எப்படி பட்டுக்கு முதலில் சொன்னீர்களோ அப்படித்தான் நானும் பட்டுக்கு முதலில் சொல்லிவிட்டேன். துணிகள், புகையிலை, உற்பத்திப் பொருட்கள், சிமிண்ட், பெட் ரோலியம், வனஸ்பதி, காகித அட்டைகள், நிலக்கரி, இரும்பு, மின்சாரப் பொருட்கள் மோட்டார் வாகனங்கள், வெட்டி எடுக்கப் படும் பொருட்கள் இவைகளுக்கு எல்லாம் வரி என்று சொல்லி, வரி எது எதற்கு இல்லை என்று கேட்டார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப் பினர்கள் சட்டமன்றத்தில் நன்கு இருந்து பழக்கப்பட்டவர்கள், வழக்கறிஞர்களுக்கு நன்கு தெரியும். அரசு ஒரு நோட்டிபிகேஷன் ஆனாலும் சரி, விதிமுறைகள் ஆனாலும் சரி அதையே வெளியே நான் சொன்ன பிறகு நடைமுறைப்படுத்தப்பட்டாலும் இங்கே சட்டமன்றப் பேரவையிலும், மேலவையிலும் கொண்டு வந்து அதைநீங்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏற்றுக்கொள்ள வில்லை என்றால் திரும்ப அது கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்லியபடி அவர்கள் என்ன என்ன சொன்னார்களோ அவை நடைமுறைப்படுத்தப்படும். இந்த வரியை என்றைக்கு வசூல் செய்கிறோமோ வரி வசூல் செய்கிற அன்றிலிருந்து இவை களுக்கு எல்லாம் விதிவிலக்கு உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சர்க்கரை என்ற தலைப்பின் கீழ் சர்க்கரை மிட்டாய், மற்றும் மிட்டாய் வகைகள், மின்சாரப் பொருட்கள் என்ற தலைப்பின் கீழ் பல்புகள், குழல் விளக்குகள், ஒயர், ஹோல்டர், பிளக்குகள், மற்றும் ஸ்விச்சுகள், மருந்து பொருட்கள் என்ற தலைப்பின் கீழ் இங்கே முதலிலே நமது நிதியமைச்சர் அவர்கள் தெரிவிக்கும்போது சித்த மருந்துகள், யூனானி மருந்துகள், ஆயுர்வேத மருந்துகள் என்று தெரிவித்தார்கள். ஆனால் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தபடி எல்லா மருந்துப் பொருட்களுக்கும் வரிவிலக்கு கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலில் சட்டத்தைக் கொண்டு வந்து இருப்போமானால் இவைகள் வந்து இருக்காது இப்போது. நான் விளக்கமாகச் சொன்னேன் நிதியமைச்சர் சொல்லாததையும் மாண்புமிகு உறுப்பினர்கள் விருப்பத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்றால் அதையும் யோசித்து இந்த அரசு செய்யும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். துணி வகைகள் என்ற தலைப்பின் கீழ் கைத்தறித் துணிகள், கைத்தறி பட்டுத் துணிகள் மற்றும் கதர் துணிகள், பெட்ரோலிய

பொருட்கள என்ற தலைப்பின் கீழ் மண்ணெண்ணை இவைகளுக்கு எல்லாம் வரி இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * என்ற பெயர் தவறுதலாக வார்த்தைகள் வெளியே வந்து சிரிப்பு எல்லாம் ஏற்பட்டது என்று நான் கேள்விப்பட்டேன். ஆகவே *என்பதற்குப் பதிலா *என்ற இடத்திலே எல்லாவற்றிலும் பட்டு என்று வரும்.

திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * *

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் 2 பேரும் பேசியது எப்படி அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டதோ அதைப் போலவே நான் முதலிலே பேசுகிறபோது நான் பேசியதையும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியதிலேயும் அந்த பினாமி என்ற வார்த்தையை நான் பயன்படுத்தியதையும் பினாமி என்ற வார்த்தையை அவர் பயன்படுத்தியதையும் அதையும் சேர்த்து நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எல்லாம் நீக்கி ஆகிவிட்டது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் *போட்டுக் கொள்வது இல்லை,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்திரவிடுகிறேன்.

மாபுண்மிகு திரு. எஸ். டி.. சோமசுந்தரம்: அது மட்டுமல்ல, இந்த நுழைவு வரி, ஆக்ட்ராய் என்பது இங்கே மட்டும் கொண்டுவரப்படவில்லை. நான் முதலிலேயே தெரிவித்தபடி மகாராட்டிரம், பஞ்சாப், இராஜஸ்தான், உத்திரபிரதேசம் மேற்கு வங்கம், கர்நாடகம், குஜராத், ஹரியானா, ஜம்மு காஷ்மீர், மணிப்பூர், டெல்லி, பாண்டிச்சேரி என்கின்ற 14 மாநிலங்களிலே கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் இங்கே போடுகிறபோது
not exceeding two per cent
என்றால் பாயின்ட் நாட், நாட், நாட்." என்றுகூட வரும்; வராது என்று சொல்லவில்லை; வராது மகாராட்டிரத்திலே என்னவென்றால் அரை சதவீதத்திலிருந்து
not exceeding two per cent

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.





என்று போட்டிருக்கிறார்கள. அதேபோல் கட்டடப் பொருட்கள் மற்ற பொருட்களுக்குப் போட்டிருக்கிறார்கள், நான் அதைப் படிக்கவேண்டாமென்று கருதுகிறேன். அதைப் போல் கர்நாடகத்திலே துணிவகைகளுக்கு 1 சதவீதம் போட்டிருக்கிறார்கள். மேற்கு வங்கத்திலே மருந்து வகைகளுக்கு— குறிப்பாக இங்கே மருந்துக்கு வரியே பூராவும் எடுத்துவிட்டோம், நிதியமைச்சருடைய அனுமதியின்பேரில் மற்ற அமைச்சர்களின் அனுமதியின்பேரில் மருத்துகளுக்கு வரியே பூரணமாக நீக்கி விட்டோம்—மருந்துகளுக்கு மதிப்பில் 8 சதவீதம் போட்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் வரி போடவேண்டும், வாங்க வேண்டும் என்று இல்லை. உங்களுக்கு ஒன்று சொல்லவேண்டுமென்றால் நெல், அரிசி கோதுமை, சோளம், கம்பு, ராகி, தினை, வரகு, சாமை, குதிரை, ரவா, தேங்காய் பால் பன், பொறை போன்ற அனைத்து உணவுப் பொருட்களுக்கும் இந்த அரசு வரி விதித்து இருக்கிறது. நெல்லுக்கு ஆந்திரா மாநிலத்திலே 4%; கர்நாடகத்தில் 4%; கேரளத்தில் 1%; அரிசிக்கு ஆந்திரத்திலே 4%; கர்நாடகத்திலே 4%; கேரளத்திலே 1%; நாம் வரிப் போடவில்லை, கோதுமைக்கு ஆந்திரத்திலே 4% கர்நாடகத்திலே 4%; கேரளத்திலே 1%; சோளம், மக்கா சோளம், கேழ்வரகு இவற்றிற்கு நாம் வரி போடவில்லை, அவர்கள் எல்லாவற்றிற்கும் 2%, 3%, 4%, 4%, என்று போட்டு இருக்கிறார்கள். நாம்அந்த அளவுக்கு வ போடாமல் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது ஒன்றைச் சொன்னார்கள். இங்கே எதிர்க்கட்சித் தலைவர் பேசுகின்ற போது ஒன்றைச் சொன்னார்கள். ஸ்டீல் ரோலிங் மில் பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றிச் சொல்கிறபோது உயர்நீதி மன்றத்திலே வழக்கு சென்றது. உயர் நீதி மன்றம் அரசுக்குள்ள அதிகாரத்தை நிர்ணயித்தது. இந்த அரசுக்கு அதிகாரம் இருக்கிறதா, இல்லையா என்ற ஒரு கேள்வி வருகிறபோது உயர்நீதிமன்றம் அரசுக்கு அதிகாரம் உண்டு என்று சொல்லியிருக்கிறது. அது மட்டுமல்ல, நான் பலமுறை சொல்லியபடி இங்கே சொல்லவேண்டுமென்றால் ரோலிங் மில், அங்கே கச்சா பொருள் முதலிலே எங்காவது ஒரு இடத்திலே அதற்கு வரி போட்டிருந்தால் அதுவும் இந்த மாநிலத்தில் வரி போட்டிருந்தால் அதனுடைய புராடக்டுக்கு உருக்கி வெளியே அனுப்புவதற்கு வரியில்லை. எங்காவது வரி போட்டிருந்தால்? அதற்கு வரி உண்டு என்பதை விளக்கமாக நான் தெரிவித்து இருக்கிறேன். இன்றைக்கு அவர்கள் ஏறக்குறைய 62 பேர்கள் ரோலிங் மிலிலே உள்ளவர்கள்—எதிர்க்கட்சித் தலைவர் எடுத்தவுடனே பேசியதால் நான் அது எங்கே இருக்கிறதுஎன்று தேடிப் பிடித்தேன், 62 மில்காரர்களும்—அரசிடத்திலே வரிவிலக்குதான் கேட்டிருக்கிறார்கள். ஆனால் இந்தியன் ஸ்டீல் ரோலிங் மில் மட்டும்தான் வரி விதிப்பும் ஹாலிடே—கடனாக—வைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்

என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சாதாரண
மாக அதுபற்றி ஒரு கமிட்டி போடப்பட்டது. கொடுக்க
வேண்டுமென்று அந்தக் கமிட்டியிலே உள்ளவர்கள் சொன்ன
தற்குப் பிறகு இந்த அரசு பரிசீலனை செய்து கொடுத்தது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1.20)

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, அந்த டாஸ்க்
கமிட்டியினுடைய மினிட்ஸ் புக்கை பப்ளிக் அக்கவுண்ட்ஸ்
கமிட்டியிலே கேட்டு தரமாட்டேன் என்று சொல்லியிருக்
கிறார்கள். என்ன கேட்டார்கள்? எப்படி டிஸ்கஷன் நடந்த
தென்று கேட்டால், பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டிக்கே அந்த
ரிப்போர்ட்டை, கொடுக்க மாட்டேன் என்று சொல்லி
விட்டார்கள்? நான் அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன், என்ன
நிலைமைகள் என்பதை இந்த மன்றத்திலே வைத்துவிடுங்களேன்.
இந்த மன்றத்தை விட சுப்ரீம் பாடி வேறு டையாது என்று
சபாநாயகர் சொல்லிக் கொண்டிருக்கிறார். மினிட் புக்கை
இந்த அவையிலே வைப்பதற்கு உங்களுக்கு என்ன தயக்கம்?
அதிலே என்ன மயக்கம்? வைக்கப்படுமா என்று அமைச்சர் அவர்
களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி சோமசுந்தரம்: தலைவர் அவர்களே,
நான் முதலிலேயே தெரிவித்தேன்; நம்முடைய விதிகள்
232(1)-ன்படி ஆவணங்கள் அளிப்பது பொது நலனுக்கு
ஒவ்வாது என்ற காரணத்தின் அடிப்படையில் அந்த ஆவணங்
களைக் குழுவின் முன்பு தாக்கல் செய்ய அரசு மறுக்கலாம்.

திரு. துரைமுருகன்; அதிலே மில்காரரர்கள் எல்லாம்
உட்கார்ந்திருக்கிறார்கள். மில்காரர்களுக்குத் தெரிவது மாண்பு
மிகு உறுப்பினர்களுக்குத் தெரிய கூடாதா? பொதுமக்களைப்
பாதிக்கக்கூடிய இரகசியம் என்ன? மில்காரர்கள் வெளியே
சொல்ல முடியாதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு
தலைவர் அவர்களே, அப்படி விதிகளில் அரசிற்கு அதிகாரம்
இருந்தாலும், அதிகாரம் இருக்கிறது என்பதற்காக மறுக்க
வில்லை என்று நான் சொல்ல வந்தேன். அதற்கு முன்னாலே
மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள்.
அவர்கள் இடையிலே குறுக்கிட்டு சொன்னது நான் இன்னும்
நன்றாக இது குறித்து சொல்லவேண்டுமென்று கூறினார் என்று
எடுத்துக்கொள்கிறேன். இல்லாவிட்டால் இதை நான் சொல்லி
யிருக்க மாட்டேன். என்னென்ன ஆவணங்களைக் கொடுத்தோம்
என்று சொல்லியிருக்க மாட்டேன். அதை நான் சொல்ல
வேண்டும், செய்தித்தாள்களில் வரவேண்டுமென்பதற்காக மாண்பு
மிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார், எதிர்க் கட்சித் தலைவர்





அவர்களுக்கு நான் சரியாகப் பதில் அளிக்க வேண்டுமென்று
எனக்கு இருக்கிற அக்கறையை விட மாண்புமிகு உறுப்பினருக்கு
அதிக அக்கறை இருக்கிறது என்பதால் அவர் குறுக்கிட்டார்
என்ற நல்ல எண்ணத்தோடு இதை நான் எடுத்துக்கொள்கிறேன்.
கேட்கப்பட்டதிலே எட்டு ஆவணங்களை நாம்கொடுத்திருக்கிறோம்.
டெல்லி உச்ச நீதிமன்றத்திலே 1976-ல் வழங்கப்பட்ட தீர்ப்
பிற்குப் பிறகு எல்லா உரும்பு, மறுஉருக்கு ஆலைகளுக்குமான
வரிவிதிப்பு முடிவடைந்துள்ளதா? தொழிற் துறையினால்
ஏற்படுத்தப்பட்ட தொழில் நிறுவனங்கள் குழு என்ன பரிந்துரை
களைச் சொல்லியிருக்கிறது? அந்த டாஸ்க் குழுவிலே யார், யார்
உறுப்பினர்கள் என்பதை இப்போது தெரிவிக்கிறேன். இயக்குநர்,
தொழில் வளர்ச்சி; துணை இயக்குநர்; தொழில் மற்றும்
வணிகத்துறை இயக்குநர்; அரசு இணைச் செயலாளர், வணிக
வரி; அரசு இணைச் செயலாளர், பொதுப்பணித்துறை; அரசு
துணை செயலாளர்; நிதி; இவர்கள் எல்லாம் இருந்கதிருக்
கிறார்கள். அவர்கள் என்ன கேட்டிருக்கிறார்கள் என்று
பார்த்து அதையும் கொடுத்திருக்கிறோம். இரும்பு மறு உருக்
காலைக்கு வழங்கப்பட்ட வரிவிலக்கிற்கான அரசாணையின் நகல்,
வரி விலக்கிற்குரிய வரையறைகள், நிபந்தனைகள் எல்லாம்
கொடுத்திருக்கிறோம். நிபந்தனைகள் என்னவென்றால் அவர்கள்
இந்த வரி கொடுப்பதாக காட்டி அவர்கள் ஆவணங்களில் அதற்கு
வருமானவரி போன்றவைகளையெல்லாம் நீக்குவதற்காக கேட்
டிருப்பார்களனால், வரி வசூல் செய்திருப்பார்களானால் அவர்
களுக்கு வரி விலக்கு இல்லையென்ற நிபந்தனையின் பேரில் அரசு
சட்டம் போட்டது. அதையும் அந்தக் குழுவிற்கு கொடுத்திருக்
கிறோம். அது மட்டுமல்லாமல், சட்டத்துறைக்கு அனுப்பப்
பட்ட கடித நகல்கள், கோப்பு கடிதம், வரிவிதிப்பு குறித்து
அரசிற்குரிய அதிகாரம் பற்றி நிதித்துறையின் கருத்து, இவைகள்
எல்லாம் கேட்கப்பட்டு கொடுக்கப்பட்டன. எதிர்கால
பொறுப்புகளுக்கான விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டுமென்ற
உருக்காலைகள் வேண்டுகோள் குறித்து வருவாய் வாரியத்தின்
கருத்தென்ன? வருவாய் வாரியம் கலைக்காததற்கு முன்னால்
அங்கேயுள்ள வருவாய் வாரிய உறுப்பினர்கள் எல்லாம் சேர்ந்து
என்ன முடிவெடுத்தார்கள் என்பது கொடுக்கப்பட்டிருக்கிறது.
என்ன கொடுக்கப்பட்டதென்றால் அவர்கள் சிபாரிசு செய்திருக்
கிறார்கள். இது 5, 6—வது தமிழ்நாடு இரும்பு மறு உருக்
காலை ஆட்சிக்குழு நிறுவனம் பற்றி மேற்படி முறையீட்டிற்கான
நகல்—அதன் விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல்
7—வது ஆவணம், தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம்
1953—ன் கீழ் வணிகரிடமிருந்து வரி பாக்கியை, முழுமையாக
வோ அல்லது அதில் ஒரு பகுதியாகவோ, அல்லது அபராதமாக
வோ, அல்லது கட்டணமாகவோ, வசூலிக்காது அறிவிக்க
அதிகாரம் இருக்கிறதா? தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தின்
கீழ் அவர்கள் வரி வாங்காமல் இருந்தாலும், அல்லது விதிக்
காமல் இருந்தாலும், அதற்குச் சட்டத்திலே இடம் இருக்கிறதா
என்று கேட்டிருக்கிறார்கள். அவைகளையும் கொடுத்திருக்

கிறோம். வரி தள்ளுபடி சட்டத்திற்கு நிபந்தனைகள் உண்டா? நிபந்தனை போட்டிருக்கிறோம். இப்படி 8 ஆவணங்களை நாங்கள் கொடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எதையுமே கொடுக்கவில்லையென்று........

டாக்டர் மு. கருணாநிதி; தலைவர் அவர்களே, உச்ச நீதி மன்றம் அந்த வரியைப் பொறுத்து அரசுக்குத் சாதகமான தீர்ப்பை வழங்கி இருந்தும் கூட, ரூ. 37 கோடியை இழக்கின்ற அளவிற்கு ஒரு நிலைமை உருவாகி, ஒரு குழு அமைக்க வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது? ரூ. 37 கோடி இழக்கின்ற சூழ்நிலையில் ஒரு குழுவை அமைக்க இந்த அரசு முன் வந்த அதே நேரத்தில், ரூ. 26 கோடிக்கு என ஒரு பொறுக்குக் குழுவை அமைப்பதற்கு இந்த அரசு ஏன் முன் வரக் கூடாது?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே தெரிவித்தேன், 'பவர் டு தி கவர்ன்மென்ட்' அரசுக்கு என்ன அதிகாரம் என்பதைத்தான் உச்ச நீதிமன்றம் வரையறுத்தது. அவர்களிடமிருந்து வரி வாங்க வேண்டாம். வரி போடுகிற அதிகாரம் இருக்கிறதா, இல்லையா என்றுதான் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. இன்றைக்கும் வரி போடுவதற்கு இந்த அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால், நடந்து போன காலத்தில் உச்ச நீதிமன்றத்தில் இருக்கிறபொழுது. அவர்கள் வரி வசூலித்தார்களா, இல்லையா என்பதைப்பற்றித்தான் நான் தெரிவித்தேன். அவர்கள் வரி வசூலித்தார்களா, இல்லையா என்று பார்த்து, நிபந்தனையும் போட்டு, அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சலுகை, நிபந்தனை—கன்டிஷனில் போடப்பட்டிருக்கிறது. வரி வசூல் செய்யக்கூடாது; நீங்கள் விற்பனை வரியை, வருமான வரிக்காகக் கணக்குக் காட்டியிருக்கக் கூடாது. காட்டியிருந்தால் வரி உண்டு. இப்படி யெல்லாம் போட்டுதான் கொடுத்திருக்கிறோமோ தவிர, வேறொன்றும் இல்லையென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்குத் தமிழ் நாட்டிலே மட்டுமல்ல, ஸ்டீல் எங்கு வேண்டுமானாலும் போகலாம். எங்கு வேண்டுமானாலும் வரலாம். இங்கே இருக்கிற ஸ்டீல் ரோலிங் மில்லில் நாம் இரண்டு முனை வரி, பலமுனை வரி, முதலிலே கச்சாப் பொருளை வாங்குவதற்கு ஒரு வரி. அதை உருக்காக ஆக்கி, விற்பதற்கு ஒரு வரி; இரண்டு வரி போடுகிற பொழுது, அதனுடைய மானுபார்ச்சரிங் காஸ்ட், விலை அதிகமாகிறது. அப்படி அதிகமாகிறபொழுது, அது மார்க்கெட்டிலே வருகிறபொழுது, மற்ற வெளி மாநிலங்களோடு போட்டி போட முடியவில்லை.

திரு. எஸ். ஜி. ஹாஜாசெரீப்: எல்லா ஸ்டீல் ரோலிங் மில்சுக்கும் வரிச் சலுகை செய்துவிட்டு, ஒரே ஒரு ஸ்டீல் ரோலிங் மில்லுக்கு, இந்தியா ஸ்டீல் ரோலிங் மில்லிடம் இவர்கள் ரூ. 90 இலட்சம் வசூலித்திருப்பதை அரசாங்கம் கொடுக்குமா? அதைக் கொடுப்பது மிகவும் நல்லது. என்ன காரணம் என்றால் அவர்கள் ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள்.





மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லுக்கு இறைக்கும் நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் அங்கே பாயும். நான் இங்கே சொல்லிய படி, நமது மாநிலத்தில் இல்லை, கர்நாடக மாநிலத்தில் இல்லை. மறு உருக்கு விற்பனை வரியில் விதி விலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. கேரள மாநிலத்தில் சிறு இரும்பு உருட்டாலைக் காக, 5 ஆண்டுகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது மகாராஷ்டிரா மாநிலத்தில் 19—1—1982 க்குப் பிறகு, மூலப். பொருளின் மீது வரி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. மேற்கு வங்கத்தில் வெளி மாநிலத்திற்குச் செய்து அனுப்பும் பொருளுக்கு, மூலப்பொருள் 2 சதவீதம்; மாநிலத்தில் தயாராகும் இரும்புக்கு 3 சதவீதம் வசூலிக்கப்படுகிறது பஞ்சாபில் மூலப் பொருளுக்கு வரி விதிப்பு இல்லை. இப்படி எல்லா மாநிலங்களிலும் இருப்பதைத்தான் ஸ்டீல் ரோலிங் மில்லிலே நாம் செய்தோம் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

(பிற்பகல் 1–30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்; அவையின் முன் அனுமதி யுடன் அவையின் நேரம் நீடிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்கிறபொழுது ஒன்றைப் படித்தார்கள். இந்த அரசுக்கு எங்கெங்கே வரி போடு வதற்கு அதிகாரம் இருக்கிறது என்று சொல்கிற பொழுது, அதிலே

not exceding 5 per cent

என்பதை இரண்டு பர்சென்டாக ஆக்க இருக்கிறோம் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

While specifying different local areas fo the purpose of levying different rat s for different goods under sub-section (1), the Government shall have due regard to the population in the local area concerned and such other matters as may be prescribed என்று சொல்கிறபொழுது இது எந்தச் சட்டத்திலேயும் இருக்க வில்லையே, இந்தச் சட்டத்தில் மட்டும் இருக்கிறதே என்று சொன்னார்கள். நான் இதை யெல்லாம் பூராவும் படித்துக் காட்ட வேண்டியதில்லை என்று கருதுகிறேன். இப்படிப் போடுகின்றபொழுது சில தினங்களுக்கு முன்னாலே கர்னாடகா மாநிலத்திலே போடுகிறபொழுது அவர்கள் தெரிவித்திருக் கிறார்கள். இப்படி வரி போடுகிறபொழுது, இடத்திற்கு இடம் வேறி ஆகிறது. உச்ச நீதிமன்றத்திற்குச் செல்கிறபொழுது அதை நீங்கள் பெங்களூருக்கு ஒருவறாசவும், பக்கத்தில் இருக்கின்ற ஒரு ஊருக்கும் ஒரே மாதிரியாக எப்படி வரி போடுகிறீர்கள், எல்லா ஜனங்களுக்கும் ஒரே மாதிரியான வரி விதிக்க இயலாது.

உதாரணமாக சென்னை மாநகராட்சிக்கும் இன்னொரு நகராட்சிக்கும் இரண்டு பர்செண்ட் என்று வரியிருப்பது முடியாது. இப்படி எல்லா இடங்களிலும் ஒரே வரி விதிக்கக் கூடாது என்பதைத்தான் இன்றைக்கு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இல்லாவிட்டால் இதைக் கொண்டு வருவதற்குக் காரணம் இடத்திற்கு இடம் வேரியேஷன்; பாபுலேஷன், வாங்குகிற சக்தி அதற்கேற்றவாறு விதிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால்தான் இதைத் தெரிவிக்கிறோம் என்பதை நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்,

மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒன்றைப் படித்தார்கள். பூராவும் படித்துவிட்டு, அவர்கள் அரசியல் சட்டத்தில் 286-வது சட்டத்தைப் படித்தார்கள். அது விற்பனை வரியைப் பொறுத்து இருக்கிறது. விற்பனை வரியைப் பற்றித்தான் அதில் இருக்கிறதேயொழிய, அடிஷனல் எக்சைஸ் டூட்டி என்கிறபொழுது 4 பர்செண்ட்டுக்கு மேல், அதாவது அது மத்திய அரசின் கீழ் வருகிறபொழுது 4 பர்செண்டுக்கு மேல், போடக்கூடாது என்றுதான் இருக்கிறதேயொழிய, இதை நான் சொல்கிறபொழுது. விற்பனை வரிக்கும் நுழைவு வரிக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஏழாவது ஷெட்யூலில் 52-இல்

VIIth Schedule-52: "Tax on the entry of goods into a local areas for consumption use and therein. Tax on the consumption of the necessities."

என்று அந்த டாக்ஸை எங்கே போடுவது என்றே கூட்டியிருக்கிறோம். அந்த விற்பனை வரியை இங்கே படித்துக் காண்பித்ததுகூட அது எக்சைஸ் டூட்டி 4 பர்செண்ட்டுக்கு மேலே போடக் கூடாது என்றுதான் சொல்லியிருக்கிறார்களேயொழிய வேண்டு மன்றால் உறுப்பினரவர்கள் இதைப் படிக்கலாம். இவைகளை நான் உங்களுக்குத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொல்லியது விற்பனை வரிக்கும் நுழைவு வரிக்கும் அதிலே இருக்கிற இரண்டு அயிட்டங்களைப் படிக்கவில்லை. ஒன்றைமட்டும் படித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஏனென்றால் இங்கே அவர் இன்றைக்குப் பேசுவதாக இருந்திருக்கமாட்டார். இங்கே வந்தவுடன் பேசச் சொல்லியிருப்பார்கள். அரைகுறையாகப் படித்திருப்பார்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: சார் வருவாய்த்துறை அமைச்சருடைய அறிவுத் திறமையை நான் ஒத்துக்கொள்கிறேன். நான் படிக்கவில்லை என்று சொல்லாதீர்கள். அவர்களுடைய பேச்சில் நான் குறுக்கிட விரும்பவில்லை. எல்லோரும் பசியாக இருக்கிறார்கள் என்பதற்காக நான் விட்டு விடுகிறேன். நீங்கள்



வித்ட்ரா பண்ணுகிறேன் என்று சொல்லுங்கள். நான் விளக்கம் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். ஆனால் விளக்கம் தந்தும் பிரயோஜனம் இல்லை; நீங்கள் நிறைவேற்றுவது என்று முடிவாக வந்ததற்குப் பிறகு நான் என்னுடைய நேரத்தையும் உங்களுடைய நேரத்தையும் வீணாக்குவதற்கு விரும்பவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த அரசுக்கு உரிமை இருக்கிறதா இல்லையா என்பதை கவனிக்க வேண்டும். இந்த நுழைவு வரி போடுவதற்கு உரிமை உண்டு, கர்நாடகா மாநிலத்தில் இந்த வரியை எதிர்த்து உச்ச மன்றத்திற்குச் சென்று, போடுவதற்கு உரிமை உண்டு என்பதும், அந்த இடத்திற்கேற்றவாறு, பாபுலேஷனுக்குத் தகுந்தவாறு, விற்பனைக்கேற்றவாறு, வாங்கும் சக்திக்கேற்றவாறு போட வேண்டுமென்பதை உச்ச நீதிமன்றம் தெரிவித்து இருக்கிறது. இந்த அரசுக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன எல்லாக் கருத்துக்களுக்கும் பதில் சொல்லாவிட்டாலும், என்னால் முடிந்த வரையிலே அவர்களுக்கு பதில் அளித்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்து, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இந்த நுழைவு வரி தகாது, கூடாது. ஏழை மக்களைப் பெரிதும் பாதிக்கக் கூடியது என எல்லா தரப்பு மக்களாலும், வணிகப் பெருங்குடி மக்களாலும், பல்வேறு அரசியல் சார்பற்ற ஏழைகளாலும், எதிர்க்கட்சித் தலைவர்களாலும், அமைப்புக்களாலும் எடுத்துச் சொல்லப்பட்டும்கூட, அரசு மேலும் பிடிவாதமாக இந்த வரியை நுழைப்பது என்கிற முடிவிற்கு வந்திருக்கின்ற காரணத்தால் அந்தச் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படுகின்ற நேரத்தில் இங்கு இருக்க நாங்கள் மனம்ஒப்ப மல், இங்கிருந்து எங்களுடைய கண்டனத்தைத் தெரிவிக்க, வெளி நடப்பு செய்கின்றோம். (திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவரவர்களே, இதுவரையில் இல்லாத அளவிற்குப் புதிய வரியாக இந்த அரசாங்கம் நுழைக்க இருப்பதற்கு எதிர்க்கட்சிகள் சார்பிலே பல்வேறு காரணங்களைச் சொல்லியிருக்கிறோம். இந்த வரி விதிப்பினாலே ஏழை எளியமக்கள் பாதிக்கப்படுகிற காரணத்தினாலே, அரசாங்கம் இந்த வரியைத் திரும்பப் பெற வேண்டுமென்று நாம் வற்புறுத்தியிருக்கிறோம். அமைச்சரவர்களுடைய பதிலிலிருந்து அரசாங்கம் அதைத் திரும்பப் பெறவில்லை என்று தெரிகின்றது. என்றாலும்கூட, எதிர் வரிசையில் இருக்கின்ற எங்களது நியாயமான கோரிக்கையாக இந்த நுழைவு வரியை ஒரு பொறுக்குக் குழுவிற்கு அனுப்பவேண்டுமென்று கோரியிருக்கிறோம். அதையாவது இந்த அரசு ஏற்றுக் கொள்ள விரும்புகிறதா என அறிய விரும்புகிறேன்.

[1993 ஏப்ரல் 27

**திரு. என். சங்கரய்யா.** அதே கேள்வியைத் தான் நானும் கேட்கிறேன். அவர்கள் சொல்வதை எங்களால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. நாங்கள் சொல்வதை அவர்களால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. ஆகவே பலப் பல பிரிவுகளைக் கொண்ட ஒரு மசோதாவாக இருக்கக்கூடிய காரணத்தினாலே, இதை ஒரு பொறுக்குக் குழுவிற்கு அரசாங்கம் விடுவதற்கு முன் வருமா என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்க விரும்புகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி;** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அனைத்துப் பிரிவு மக்களையும் பாதிக்கின்ற ஒரு மோசமான நுழைவு வரியை எவ்வளவு தான் நாங்கள் எதிர்க் கட்சி வரிசையில் இருக்கின்றவர்கள் அத்தனை பேரும், அது கூடாது என்பதற்கு எங்களால் முடிந்த அத்தனை நியாயங் களையும் சொல்லியும் கூட, அமைச்சரவர்கள் விதிப்பதற்கு வேண்டிய நியாயங்களைத் தொடர்ந்து கூறிக்கொண்டும் வருவதால், இப்போது கடைசியாக நான் கேட்பதெல்லாம், இதிலே உள்ள பாதக சாதகங்கள் முறைப்படி சரியாக ஆராயப்படுவதற்கு ஒரு பொறுக்குக் குழுவிற்கு விடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்;** நீங்கள் பேசியவை களில் எல்லாம் இந்த வரியை வேண்டாம் என்று சொல்லியிருக் கிறீர்கள். அதில் ஊழல் வரும் என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் வேண்டும் என்பதற்காக இந்த அரசினுடைய கமிட்மெண்ட், இந்த அரசு என்னென்ன காரியங்களை செய்திருக்கிறது. செய்ய இருக்கிறது. இதையெல்லாம் நீங்கள் ஏற்றுக்கொள்வீர் களா இல்லையா என்று கேட்டால். நான் கேட்டுவிட்டு, உங்கள் முகத்தைப் பார்க்கிறபோது அரசு செய்யும் நல்ல காரியங்களை மேலும் நன்றாகச் செய்யவேண்டுமென்று தான் உங்களுடைய முகம் மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறது. அதற்குப்பிறகு அதற்கு வேண்டிய கமிட்மெண்ட் அதற்கு வேண்டிய பணத்திற்கு நாங்கள் எங்கே போவது என்று கேட்கிறபோது, எங்கே போவார்கள் இந்த அரசு என்று உங்கள் முகம் சொல்கிறது. அதற்குப் பிறகு நான் இந்த வரியை விதிக்கிறபோது, நான் சொன்ன காரணங்கள் அத்தனையும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அது வரி வேண்டுமா வேண்டாமா என்று நான் சொன்ன காரணங்களை ஒரே வரியிலே பார்க்கிறீர்களே தவிர நீங்கள் உளமார ஏற்றுக்கொண்டி ருக்கிறீர்கள். ஆனால் வரி மட்டும் வேண்டாம் என்கிறீர்கள். வரி இல்லாமல் எப்படிக் காரியத்தை ஆற்றமுடியும் என்பதை நீங்கள் எல்லாம் தயவு செய்து எண்ணிப் பார்த்து நீங்கள் இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மறுபடியும் கேட்டுக்கொள் கிறேன்.



1983 ஏப்ரல் 27]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த வரியைப் பற்றி பல காலமாக யோசித்து, ஆராய்ந்து மற்ற மாநிலங்களை எல்லாம் பார்த்து, தெளிவாக இருந்து, கடைசியில் கொண்டுவருவதின் காரணமாகவும் இதிலே ஐயப்பாடு ஏதும் இல்லாததன் காரணமாகவும், இது இருப்பதன் காரணமாகவும், திண்மை இருப்பதன் காரணமாகவும், மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் சொல்வது போல். வரி விதிக்கவேண்டுமென்கிற ஆசை இல்லாவிட்டாலும், வேறு வழி இல்லாததன் காரணத்தாலும், கடினங்கள் இருக்காது என்கிற காரணத்தினாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகின்ற சங்கடங்களை நீக்குவதற்கான வழிமுறைகளை நாங்கள் காண போம் என்கிற காரணத்தினாலும், இதை பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.

(பிற்பகல் 1–40)

**திரு. என். சங்கரய்யா :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னவர் அவர்கள் சிறிய விளக்கம் இப்போது சொன்னார்கள். பொறுக்குக் குழுவிலே போனால், அந்தக் குழுவிலே கடைசியிலே அரசாங்கம் எதிர்தரப்பிலே இருப்பவர்கள் சொல்லக்கூடிய அந்த வாதங்களை ஏற்றால் அந்தப் பொறுக்குக் குழுவிலே இந்த மசோதாவை வாபஸ் வாங்குவதற்கும் அல்லது ஒத்திவைப்பதற்கும் கூட உரிமையிருக்கிறது என்ற காரணத்தால் அதை விரிவாகப் பேசிப் பார்க்கலாம் என்று பார்த்தோம். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முடியாது என்று சொல்கிறார்கள். வருமானத்தை உயர்த்துவதற்கு பல வழிகளைச் சொன்னோம். விவசாய வருமான வரியை உயர்த்துங்கள், சாராய கலவை ஆலைகளை அரசே ஏற்று நடத்துங்கள். இந்த இரண்டு முக்கியமான வரியிலேயிருந்து வருமானத்தை நீங்கள் பெறமுடியும். ஆனால் இன்றைக்கு நாம் ஒருவருக்கொருவர் கன்வின்ஸ் பண்ணக்கூடிய நிலைமையிலே இல்லாத காரணத்தாலே பொதுமக்களுடைய நலன் கருதி அதற்கு மேல் இந்த மசோதா நிறைவேறுவதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒப்புக்கொள்ள முடியாத காரணத்தாலே, மக்களின் சார்பிலே இந்த நேரத்திலே நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதை பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப இணங்காத காரணத்தால் நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

**திரு என்.எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்கப் பேரவைத் தலைவர் அவர்களே இந்த நுழைவு வரி பற்றி விவாதிக்க பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்ற என்னுடைய

திரு என். எஸ். வி. சித்தன் [1983 ஏப்ரல் 27

நியாயமான கோரிக்கையை ஏற்க மறுக்கின்ற காரணத்திற்காக இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே வெளிநடப்பு செய்கிறோம்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள்வெளிநடப்புச் செய்தனர்).

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, வணிகர்களை அச்சுறுத்தவும், அலைக்கழிக்கவும், ஊழலைப் பெருக்கவும் உற்பத்தியைக் குறைக்கவும். வேலைவாய்ப்பை இழக்கவும் காரணமாக இந்தச் சட்டம் அமையும் என்று எடுத்துக்காட்டியும், வணிகர்கள் அனைத்துக் கட்சி தலைவர்கள் அமைப்புகள் அனைத்தும் எதிர்த்தபோதிலும் கட்சி சார்பற்ற வணிகர்கள் சங்கங்கள் 3 நாள் கடை அடைப்பு என்று அறிவித்த பிறகும் நமது அமைசசர் அவர்கள் மற்ற மாநிலங்களைக் கேட்டுவிட்டோம் என்று சொல்வதற்குப் பதிலாக இந்த மாநிலத்திலுள்ள மற்றக் கட்சித் தலைவர்கள் கேட்கிறார்கள் என்று சொல்லாத அளவிற்கு இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தான் தீருவேன் என்று சொல்கின்ற நேரத்திலே இதனை நீங்கள் பொறுக்குக் குழுவிற்கு விட்டாவது அதை ஆராய்ந்து பாருங்கள் என்று ஒரு படி கீழே இறங்கி வந்து சொன்னபிறகும் மனம் இறங்காமல் இந்தச் சட்டத்தை கொண்டு வருகின்ற காரணத்தால் நாங்கள் வெளி இறங்கி நடக்கிறோம். வணக்கம்.

(காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்),

திரு .பி. முகமது இஸ்மாயில்; பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் அதிலும் குறிப்பாக ஏழை மக்களைப் பாதிக்கின்ற இந்தச் சட்டம் நுழையக் கூடாது என்பதற்கு நாங்கள் எத்தனையோ முயற்சிகளை தெரிவித்து இருக்கின்ற காரணத்தாலும், நாங்கள் இங்கே இருந்தாலும் அந்தச் சட்டம் நுழைந்துவிடும் என்று நிலை ஏற்படுகிறது என்ற காரணத்தாலும் இந்தச் சட்டம் நுழைகின்றபோது அதைப் பார்த்துக்கொண்டு இருக்கின்ற அவல நிலைமை எங்களுக்கு ஏற்படக்கூடாது என்பதற்காகவும் என்னுடைய எதிர்ப்பை தெரிவிக்க வெளிநடப்பு செய்கிறேன்.

(ஜனதாகட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

திருமதி ஏ. எஸ்.பொன்னம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே நம்முடைய அமைச்சர் அவர்கள் எதிர் வரிசையிலே இருப்பவர்கள் அத்தனை பேரும் வலியுறுத்திக் கூறியும்கூட இந்த நுழைவு வரிச்சட்ட முன்வடிவு பொறுக்குக் குழுவிற்கு விடவேண்டும் என்று எல்லோரும் வலியுறுத்தியிருக்கிறோம். அப்படி வலியுறுத்திச் சொல்லிக்கூட பொறுக்குழு போட மனம் இல்லாத காரணத்தாலே நானும் தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் சார்பாக வெளி நடப்புச் செய்கிறேன்.

(தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் வெளி நடப்புச்செய்தார்).



[1983ஏப்ரல் 27]

டாக்டர் கே சௌரிராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களுடைய எதிர்ப்புக்கும் உணர்வுக்கும் சட்டமன்றத்திலே இருக்கின்ற அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கருத்துக்களை ஏற்காமலும் எதேச்சாதிகார மனப்பான்மையிலே நடந்து கொண்டிருக்கின்ற காரணத்தாலும், இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்ற காரணத்தாலும் இதைக் கண்டித்து நான் வெளி நடப்பு செய்கிறேன்.

(டாக்டர் கே. சௌரிராஜன் வெளிநடப்புச் செய்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''தமிழ்நாடு 1983—ஆம் ஆண்டு உள்ளூர்ப் பகுதிகளில் நுகர்தலுக்காக வரும் பயன்படுத்துதலுக்காக, விற்பனை செய்வதற்காக வரும் சரக்குகள் மீது நுழைவு வரிவிதிக்கும் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3

மாண்புமிகு திரு. எஸ், டி. சோமசுந்தரம்; நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்: In Clause-3, in sub-clause (1) for the words 'not exceeding five per cent', substitute the words 'not exceeding two per cent'

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3. திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது,

பிரிவுகள் 4 முதல் 37, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன

மாண்புமிகு திரு. எஸ்.டி சோமசுந்தரம்; தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு உள்ளூர்ப் பகுதிகளில் நுகர்தலுக்காக, பயன்படுத்தலுக்காக விற்பனை செய்வதற்காக வரும் சரக்குகள் மீது நுழைவு வரி விதிக்கும் (சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 34/1983) திருத்தப்பெற்றப்படி நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) கேளிக்கை வரி(மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1983

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த சட்டமுன்வடிவு) *சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.35/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்'';

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையில் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு 1983—ஆம் ஆண்டு கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.35 1983 நிறைவேற்றப்பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(பிற்பகல் 1-50)

5. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

பேரவைக் கூட்டத் தொடர் பற்றிய தகவல்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்தி வைப்பதற்கு முன் சில தகவல்களைப் பேரவைக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

**1983—ம் ஆண்டு ஏப்ரல் 22ம் தேதி தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



7—வது சட்டமன்றப் பேரவையின் 6—வது கூட்டத்தொடக்ன் 2-வது கூட்டம் 1983, மார்ச் 3—ம் நாள் துவங்கியது. அன்று முதல் இன்றோடு

| | |
|---|---|
| சட்டப்பேரவை கூடிய மொத்த நாட்கள் | 44 |
| மாலையிலும் பேரவை கூடிய நாட்கள் | 7 |
| மொத்த நேரம் .. | 229 மணி 40 நிமிடம் |

இக்கூட்டத்தொடரில் விடை அளிக்கப்பெற்ற மொத்த வினாக்கள் 1282—இவற்றில்

| | |
|---|---|
| உடுக்குறியிடாத வினாக்கள் .. | 687 |
| குறுகிய கால வினாக்கள் .. | 2 |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. | 593 |
| இவற்றின் மீது அனுமதிக்கப்பட்ட துணை வினாக்கள் .. | 2013 |
| ½ மணி நேரம் விவாதம் நடைபெற்றது .. | 1 |
| **கவன ஈர்ப்புத் தீர்மானங்கள்** | |
| கொடுக்கப்பெற்ற அறிவிப்புகள் .. | 417 |
| அனுமதி மறுக்கப்பெற்றவை .. | 282 |
| அனுமதிக்கப்பெற்றவை .. | 135 (88 பொருள் குறித்து) |
| அவையில் எடுத்துக் கொள்ளப்பெற்றவை .. | 68 (50 பொருள் பற்றி) |
| நிலுவையில் உள்ளவை .. | 67 (38 பொருள் பற்றி) |
| **ஒத்திவைப்புத் தீர்மானங்கள்:** | |
| கொடுக்கப்பெற்ற அறிவிப்புகள் .. | 502 |
| அறையிலேயே அனுமதி மறுக்கப் பெற்றவை .. | 326 |
| அவையில் விளக்கம் பெறுவதற்காக எடுத்துக் கொண்டு மறுக்கப்பெற்றவை .. | 128 (23 பொருள் குறித்து) |
| 54—வது விதியின் கீழ் மாற்றப்பெற்றவை .. | 48 (22 பொருள் குறித்து) |

உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள்!—

| | |
|---|---|
| அறிவிப்பு வரப்பெற்றவை .. | 26 |
| அறையிலேயே அனுமதி மறுக்கப் பெற்றவை .. | 2 |
| உரிமைக் குழுவிற்கு அனுப்பப் பற்றவை .. | 9 3 பொருள் குறித்து) |
| அவையில் எடுத்துக்கொண்டு தீர்ப்பு அளிக்கப்பெற்று அனுமதி மறுக்கப் பெற்றவை. .. | 3 |
| தீர்ப்பு அளிக்க வேண்டியவை .. | 3 (3 ஒரே பொருள் குறித்து) |

சட்ட முன் வடிவுகள்—

| | |
|---|---|
| அவையின் ஆய்விற்கு எடுத்துக் கோள்ளப் பெற்றவை .. | 19 |
| நிறைவேற்றப் பெற்றவை .. | 19 |
| வரப்பெற்ற தனியார் அலுவல் தீர்மானங்கள் .. | 7 |
| அனுமதிக்கப் பெற்றவை .. | 7 |
| விவாதிக்கப் பெற்று நாள் குறிப்பிடப் பெறாத தீர்மானம் .. | 2 |

சட்டப் பேரவையின் குழுக்கள்

இக் கூட்டத்தில்

| | |
|---|---|
| 1. பொதுக் கணக்குக் குழு .. | 6 |
| 2. பொது நிறுவனங்கள் குழு .. | 8 |
| 3. மதிப்பீட்டுக் குழு .. | 4 |
| 4. சட்ட விதிகள் ஆய்வுக் குழு .. | 1 |
| 5. அரசு உறுதி மொழிக் குழு .. | 1 |
| 6. உரிமைக் குழு .. | 1 |
| 7. கூட்டாய்வுக் குழு .. | 3 |
| அறிக்கைகள் அளித்துள்ளன, .. | 1 |

பேரவையின் முன் வைக்கப்பெற்ற ஏடுகள்—

| | |
|---|---|
| அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும் .. | 113 |
| ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள் | 171 |

நிதி அலுவல்கள்—

| | |
|---|---|
| 1983—84 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் பேரவையில் அளிக்கப் பெற்ற நாள் .. | 5-3-83 |



| | |
|---|---|
| வரவு செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள் .. | 6 |
| மானியக் கோரிக்கையின் மீது விவாதமும், வாக்கெடுப்பும் நடைபெற்ற நாட்கள் .. | 28 |
| நிதி ஒதுக்க மசோதா மீது விவாதம் நடைபெற்ற நாட்கள் .. | 1 |

மானியக் கோரிக்கைகள்—

| | |
|---|---|
| கொடுக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் .. | 3863 |
| அவையின் முன் வைக்கப்பெற்றவை .. | 3665 |
| அவையினால் ஏற்றுக்கொள்ளப்பெற்றது .. | ஏதும் இல்லை |
| விவாதிக்கப்பெற்று நிறைவேறிய மானியக் கோரிக்கைகள் .. | 58 |
| 'கில்லட்டின்' ஆனது .. | ஏதும்இல்லை |

பார்வையாளர்கள்—

| | |
|---|---|
| பேரவை நிகழ்ச்சியைக் காண வந்த மொத்த பார்வையாளர்கள் .. | 26,837 |
| பார்வையாளர் மாடத்தில் அனுமதிக்கப் பெற்றவர்கள் | |
| ஆண்கள் .. | 13,610 |
| பெண்கள் .. | 2,870 |
| பேரவைத் தலைவர் மாடத்தில் அனுமதிக்கப் பெற்றவர்கள் .. | 10,357 |
| | 26,837 |

நூலகம்—

| | |
|---|---|
| சட்ட மன்ற நூலகத்திற்கு வருகை தந்துள்ளவர்கள் .. | 690 |
| வழங்கப்பெற்றுள்ள நூல்கள் .. | 1,773 |
| தட்டச்சு செய்யப்பெற்ற பேரவை நடவடிக்கைகளின் மொத்த பக்கங்கள் .. | 9,672 |
| பேரவைக் கூட்டம் நடைபெற்ற எல்லா நாட்களிலும் வருகை தந்த உறுப்பினர்கள் .. | 21 |

பேரவை நிகழ்ச்சிகளை நல்லமுறையில் நடத்திச் செல்ல எங்களுக்கு ஒத்துழைப்புத் தந்த அவை உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். செய்தியாளர்களுக்கும் நம்முடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் அவை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற நமக்கு மிகவும் ஒத்துழைப்பு தந்த சட்டமன்றப் பேரவைச் செயலாளர் திரு. அழகர்சாமி அவர்களுக்கும், சட்டமன்ற அலுவலர்கள் அனைவருக்கும் நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது, நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவையை ஒத்திவைப்பதற்கு அவை முன்னவர் அவர்கள் தீர்மானத்தை மொழிவார்கள்.

### 8. அரசினர் தீர்மானம்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்

"பேரவை விதி 25 (1)—ன்படி பேரவை மீண்டும் கூடும்நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இக்கூட்ட அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவை ஒத்திவைக்கப்பெறுகிறது.

பின்னர் பிற்பகல் 1.53 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்திவைக்கப்பெற்றது.

### 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

#### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

—எதுவுமில்லை—

#### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

208. கீழ்க்காணப்பெறும் சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் அளித்துள்ள எழுத்து மூலமான சொத்து விவரங்கள் (தமிழ்நாடு சட்டத்தின் மேலவை 28-8-1969 ஆம் தேதியன்று ஏற்பளித்த தீர்மானத்தின்படி பேரவையில் வைக்கப்பெற்றது).



31-3-1982 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர்கள்

1. திரு. பி. மாணிக்கம்
2. திரு. ஈ. வி. ஏ. வள்ளிமுத்து
3. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி
4. திரு. கே. அருணாசலம்
5. திரு. ஜேப்பியார்
6. திரு. ஜே. எம். மியாகான்
7. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்
8. திரு. எம். சங்கரலிங்கம்
9. திரு. பி. ஆர். தாமஸ்
10. திரு. காடுவெட்டி கண்ணப்பன்
11. திரு. ஜி. வசந்த பை
12. திரு. வி.வி.வி. ஆனந்தம்

209. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும்—விடைகளும் (எண்கள் 1 முதல் 100 வரை).

3001

T.N.C.A. Debates

Official Report

Vol CP NO 9

27th April 1983

V211,31 N83

N83·51·4

136049

வெளியீடு 4–1–1984] [Issued 4-1-1984

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி
31 மார் 1984
3001
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 27, 1983—தொகுதி LP எண். 4
Wednesday the April 27th 1983 Volume LP No.4

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை–600 009
Legislative Assembly Department Fort St. George
Madras-600 009.

விலை ரூ. 3-50 பைசகள்] [Price Rs. 3-50 Paise

D
V2ll, 31 N83
N83.51.4
தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136049
சென்னை-600 008.

உள்ளடக்கம்

27-4-1983

பக்கங்கள்

1. வினாக்களும்— விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 389

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் 514—548

2. கிருஷ்ணா நதிநீர் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டிய தமிழக முதல்வருக்கு வாழ்த்து. 415—46

3. தகவல் கோரல்:

(அ) பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏட்டிற்குத் திருத்தம். 416

(ஆ) கரும்புக்கு கூடுதலாக அறிவிக்கப்பெற்ற தொகை விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்தல். 416

(இ) பீடித் தொழிலாளர்கள் பிரச்சினை. 416—417

(ஈ) மங்களதேவி கோவில் தமிழர்கள் வழிபாடு செய்ய வசதி செய்து கொடுத்தல். 417

(உ) திண்டுக்கலில் நிலவும் குடிதண்ணீர் பிரச்சினை. 417—418

(ஊ) நிலக்கோட்டைத் தொகுதியில் காலரா பரவி வருவதான செய்தி. 418

(எ) தேன் உற்பத்தியாளர் நிலைமை. 418—419

(ஏ) அம்பாசமுத்திரம் முன்சீப் கோர்ட் 419

(ஐ) தொலைக் காட்சி மூலம் இந்தி திணிக்கப் படுவதாக புகார். 419

(ஒ) பழனியில் நிலவும் குடிதண்ணீர் பிரச்சினை. 419—42

(ஓ) மின்வாரியப் பொறியாளர்கள் மாற்றம் 42

(ஔ) அரவங்காடு வெடிமருந்து தொழிற்சாலை ஊழியர்கள் போராட்டம். 420

(க) விவசாயத் தொழிலாளர்களுக்கு கைத்தறி ஆடை வழங்குவது. 420

## இணைப்பு—1

வரிசை எண்கள் 1—லிருந்து 100 வரையிலான வினாக்களுக்கான அட்டவணைப் பட்டியல்

| | உறுப்பினர் பெயர் | வினாக்களின் வரிசை எண்கள். |
|---|---|---|
| 1 | திரு. மு. அப்பாதுரை | 71, 99 |
| 2 | திரு. எம். அண்ணாதாசன் | 62 |
| 3 | திரு. இரா. அருணகிரி | 66 |
| 4 | திரு. த. ஆறுமுகம் | 93, 94 |
| 5 | திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் | 3 |
| 6 | திரு. செ. இராமலிங்கம் | 15 |
| 7 | திரு. எல். இளையபெருமாள் | 59 |
| 8 | திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் | 5, 24 |
| 9 | திரு. [illegible]. டி. உகம்சந்த் | 28, 47, 80 |
| 10 | திரு. ரா. உமாநாத் | 38 |
| 11 | திரு. சி. கணேசன் | 16 |
| 12 | திரு. என். கிட்டப்பா | 1 |
| 13 | திரு. குமரி அனந்தன் | 39 |
| 14 | திரு. கா. கோபாலகிருஷ்ணன் | 79 |
| 15 | திரு. ஏ. சி. சண்முகம் | 29 |
| 16 | திரு. வ. சத்தியமூர்த்தி | 96 |
| 17 | திரு. என். எஸ். வி. சித்தன் | 18 |
| 18 | திரு. எஸ். சிவராமன் | 37 |
| 19 | திரு. எம். சின்னசாமி | 13, 33, 57, 65, 70, 97 |
| 20 | திரு. ப. சுந்தரம் | 31, 76 |
| 21 | திரு. மா. சுப்பிரமணியன் | 43, 83, 84, 85 |
| 22 | திரு. கு. அ. செங்கோட்டையன் | 2 |
| 23 | திரு. செ. செம்மலை | 22, 23, 26, 34, 48, 91, 98 |
| 24 | திரு. ஏ. எம். சேதுராமன் | 77, 87, 88 |
| 25 | திரு. இரா. தாமரைக்கனி | 9, 20, 30, 49, 51, 52 |
| 26 | திரு. ஆர். தியாகராஜன் | 45 |
| 27 | திரு. பெ. திருமாறன் | 67, 68, 69 |
| 28 | திரு. பெ. சு. திருவேங்கடம் | 45, 25, 54. |
| 29 | திரு. வி. எம். தேவராஜ் | 89 |
| 30 | திரு. பூ. மு. நரசிம்மன் | 14, 58 |
| 31 | திரு. டி. கே. நல்லப்பன் | 72 |
| 32 | திரு. ப. நெடுமாறன் | 53 |
| 33 | திரு. பம்மல் நல்லதம்பி | 74 |
| 34 | திரு. எல். பலராமன் | 11, 61 |
| 35 | திரு. கு. பா. பழனியப்பன் | 7, 19 |
| 36 | திரு. நா. பழனிவேல் | 17, 78, 86 |
| 37 | திரு. ச. பாலகிருஷ்ணன் | 21 |
| 38 | திரு. வி. பாலகிருஷ்ணன் | 40, 64 |
| 39 | திரு. க. பாலசுப்பிரமணியன் | 81 |
| 40 | திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் | 27, 32, 35, 73, 82, 92 |
| 41 | திரு. ஜே. சி. டி. பிரபாகரன் | 12 |
| 42 | திரு. து. புருஷோத்தமன் | 44, 95 |
| 43 | திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் | 63 |
| 44 | திரு. ஆர். மணிமாறன் | 100 |
| 45 | திரு. எம். எஸ். மாணிக்கம் | 41 |
| 46 | திருமதி டி. யசோதா | 46 |
| 47 | திரு. கே. ரமணி | 8, 10, 50, 75 |
| 48 | செல்வி பி. விசயலட்சுமி | 90 |
| 49 | திரு. ப. வெங்கட்டசுப்பிரமணியன் | 36, 42, 60 |
| 50 | திரு. த. வேணுகோபால் | 55, 56 |
| 51 | திரு. மு. ஜான் வின்சென்ட் | 6 |

பக்கங்கள்

(ங) கண்ணகி கோயில் சாலை கல்வெட்டு 420—421

(ச) அமராவதி ஆற்றுக் கால்வாய் பாசனம் 421

(ஞ) பட்டுச் சேலைகள் விற்பனையாகாது தேங்கியுள்ள நிலை. 421

(ட) தேவிகுளம்பீர்மேடு பகுதி தமிழகத்தோடு இணைக்கப்படுவது. 421

(ண) திருவில்லிப்புத்தூரில் தொடர்ந்து மின்வாரிய அலுவலகம் இயங்கச் செய்வது. 422

(த) சென்னை நகரில் நிலவும் குடிதண்ணீர் பிரச்சினை. 422

(ந) வடாற்காடு மாவட்டம் வறட்சிப் பகுதியாக அறிவிக்கப்பெற வேண்டுமென்ற நிலை. 422—423

3. (அ) தலைவருக்குப பாராட்டு. 423

4. உரிமைப் பிரச்சினைகள்:

(அ) வருவாய்த்துறை அமைச்சர் மீது—தீர்ப்பு 423—425

(ஆ) திரு.எம்.கே. சீனிவாசன் மீதும், 'எதிரொலி' நாளிதழ் மீதும். 425—420

5. அறிவிப்புகள்:

(அ) அரசினர் சட்ட முன்வடிவுகள் (மேலவைச் செய்தி) 426

(ஆ) பேரவை கூட்டத் தொடர் பற்றிய—தகவல்கள் 506—510

6. கவன ஈர்ப்புகள்

(அ) காவேரிப்பட்டணம் மேல்நிலைப் பள்ளியை பழுது பார்த்தல். 427—428

(ஆ) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள குறைபாடுகளை நீக்குவது. 428—431

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்:

(அ) நுழைவு வரி விதிக்கும் சட்ட முன்வடிவு, 1983. 431—506

(ஆ) கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1983 509

8. அரசினர் தீர்மானம்:

9. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் 510—511

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புதன்கிழமை, 1983 ஏப்ரல் 27,

சித்திரை 14, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நன்றாற்ற லுள்ளுந் தவறுண்டு அவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை."

அவரவருடைய பண்புகளை ஆராய்ந்து அறிந்துஅவற்றிற்கு ஏற்ற முறையில் அவர்களுக்கு ஒரு நன்மையைச் செய்யா விட்டால், நாம் செய்யும் நன்மையால் அவர்களுக்குத் தீமையே உண்டாகும்.

### 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

### குமரி மாவட்டத்தில் மாட்டுத் தீவனம் தயாரிக்கும் தொழிற்கூடம் அமைக்கும் திட்டம்.

*வினா எண்.878—திரு. டி. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) குமரி மாவட்டத்தில் மாட்டுத் தீவனம் தயாரிக்கும் தொழிற்கூடம் அமைக்க அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் தொழில் துறையில் பின்தங்கி இருக்கும் குமரிமாவட்டத்தில், அதிலும் குறிப்பாக விளவன்கோடு வட்டத்தில் இப்படிப்பட்ட தொழில்களை ஆரம்பிப்பதற்கு தொழில் துறையில் ஏழு ஏக்கர் நிலமும், நான்கு கட்டிடங்களும் காலியாக யிருக்கிற மார்த்தாண்டம் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் பகுதியில் இந்த மாட்டுத் தீவனத்தை தயார் செய்கிற தொழிற்சாலையை அமைக்க புனர் பரிசீலனை செய்து அந்த மாவட்டத்திற்கு உதவி செய்யக்கூடிய அளவிற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அப்படிப்பட்ட கருத்துரு அரசு தரப்பில் இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினரின் உணர்வுகள் தக்க நேரத்தில் ஆலோசிக்கப்படும்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மாட்டுத் தீவனம் என்பது இன்றைக்கு மிக முக்கியமான பிரச்சினையாக வந்திருக்கிறது. இன்றைக்கு சமூக காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மேய்ச்சல் நிலங்களைக் கொண்டு வந்து விட்டார்கள். ஆகவே ஒவ்வொரு மாவட்டத்திலும் மாட்டுத் தீவனம் தயாரிக்கக்கூடிய தொழில் கூடம் ஏற்படுத்த அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ.கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, தமிழகத்திலே மூன்று இடங்களில் மாதவரம், ஆம்பூர், ஈரோடு ஆகிய இடங்களில் மாட்டுத் தீவன தொழிற்சாலைஇயங்கிக் கொண்டிருக்கிறது. நான்காவதாக மாட்டுத் தீவன தொழிற்சாலை ஒன்று மதுரை மாவட்டத்தில் தேசிய பால்வள நிறுவனத்தின் மூலமாக சுமார் ஒரு கோடி ரூபாய் முதலீட்டில் கப்பலூர் தொழில்பேட்டை பகுதியில் அமைய இருக்கிறது. இது சுமார் ஓராண்டுக் காலத்திலே செயல்பட விருக்கிறது. நாள் ஒன்றிற்கு 100 டன் உற்பத்தி செய்யும் திறனை கொண்டதாக கப்பலூர் தொழில்பேட்டையில், மதுரை மாவட்டத்தில் புதியதாகஅமையவிருக்கிற இந்தத் தொழிற்சாலை விவசாயிகளுக்கு பால் உற்பத்தியாளர்களுக்கு உதவியாக இருக்கும்.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கால்நடைகள் அதிகமாக இருக்கிற குமரி மாவட்டத்திலே மாட்டுத் தீவனம் அடுத்த மாவட்டங்களிலிருந்து தான் வரவேண்டியிருக்கிறது. ஆகவே மாட்டுத் தீவனத்தை உற்பத்தி செய்வதற்கு, அந்த மாவட்டத்தில் தொழில் வாய்ப்புகள் மிக கம்மியாக இருக்கிறதால், அடுத்து ஒரு திட்டத்தை தயாரிக்கிறபோது அதற்கு முன்னுரிமை தந்து அந்த மாவட்டத்திலே இந்தத் தொழிலை ஆரம்பிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் மாண்புமிகு உறுப்பினருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். உரிய நேரத்தில் நிச்சயமாக உங்களுடைய வேண்டுகோள் அனுதாபத்துடன் கவனிக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று இடத்திலே இருக்கின்ற இந்த மாட்டுத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலைகளிலே தயாரிக்கப்படும் அந்த தீவனம் விலை அதிகமாக இருக்கிறது என்று சொல்லப் படுகிறதே, வெண்மைப் புரட்சி நடத்தி முடிக்க வேண்டும்



என்று தீவிரமாகஇருக்கின்றஅமைச்சர் அவர்களின் எண்ணத்திற்கு மிக உதவியாக இருக்கக்கூடிய முறையிலே இன்றைக்கு எல்லா இடங்களிலும் பால் பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டு வருகிறது. இதற்கு மிக முக்கியமானது இந்தத் தீவனம். இதை வெளியிலே வாங்கினால் விலை மிகவும் அதிகமாக இருக்கிறது. நாம் தயாரிக்கின்ற அரசு பொறுப்பிலே இருக்கின்ற இந்த தொழிற்சாலைகள் தயாரிக்கின்ற அந்த தீவனங்கள்கூட அதிக விலையாக இருக்கிறது. அதைக் குறைப்பதற்கும், அதோடு இந்த தீவனங்கள் தயாரிப்பதிலே என்னென்ன மூலப் பொருள்கள் சேர்த்து இந்தத் தீவனங்கள் தயாரிக்கப்படுகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன மூலப் பொருள்கள் இந்த மாட்டுத் தீவனம் தயாரிப்பதற்குத் தேவைப்படும் என்ற விவரம் என்னிடத்திலே தற்போது இல்லை. ஆனால் விலை பிரச்னை பற்றி அவர்கள் சொன்னார்கள். நிச்சயமாக விலையில்கட்டுமான அளவிற்கு, நஷ்டம் வராத அளவிற்கு, தொழிற்சாலைகளுக்கும் கஷ்டம் வரக்கூடாது, வாங்குகின்ற விவசாயிகளுக்கு நட்டுமானம் ஆகின்ற அளவிற்கு ஒரு நியாயமான விலையை நிச்சயமாக தமிழக அரசு மேற்கொள்ளும். இப்போது வறட்சிக் காலத்தை முன்னிட்டுக்கூட இன்றையதினம் நாம் ஒரு கிலோ 1 ரூபாய் 32 காசுக்கு விற்றுக் கொண்டு இருக்கின்ற மாட்டுத் தீவனத்தை இந்த வறட்சியை முன்னிட்டு 1 ரூபாயாக இன்றைய தினம் நம்முடைய பால் உற்பத்தியாளர்களுக்குக் கொடுத்து அவர்களுக்கு உதவி செய்து கொண்டு வருகிறோம். அதுமட்டுமல்லாமல் இந்த வறட்சியான காலத்திலே நம்முடைய பால் உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு மேலும் 2 வகையிலே குறிப்பாக மராட்டிய மாநிலத்திலேயிருந்து உலர் தீவனம் வாங்குவதற்கு நாங்கள் ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். இரண்டாவதாக அனிமல் ஹஸ்பண்டரி துறையின் மூலமாக, கால்நடைப் பராமரிப்புத் துறையின் மூலமாக ஆந்திரா மாநிலத்திலிருந்து விரைவில் வைக்கோலை நியாயமான விலையிலே பெற்று இங்கே நியாயமான விலையிலே விவசாயிகளுக்கு வழங்கவும் இந்த இணையம் முயன்று கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.இ.எஸ்.எம்.பக்கீர் முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் இந்த வறட்சிக் காலத்திலே கிலோ ஒரு ரூபாய்க்கு நாங்கள் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள்—அதை நான் வரவேற்கிறேன். இப்படி ஒவ்வொரு மாவட்டத்திலேயும் மாடுகள் அதிகமாக இருந்து கொண்டிருக்கின்றன. அதற்காக நாம் லோன் அதிகமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகையினால் இப்படிப்பட்ட மாடு லோன் அதிகமாகக் கொடுக்கக்கூடிய இடங்களிலே இப்படிப்பட்ட தொழிற்சாலைகள் ஆரம்பித்து இன்னும் அதிக அளவிற்கு—ஏன் என்றால் இப்போது மாடுகள் வாங்குகின்றவர்கள் எல்லாம் லோன் வாங்குகின்றார்களே தவிர, அந்த

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** 3-5-1982 தேதியிடப்பட்ட கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையின் அரசாணை நிலை எண் 820-ல் நூலகத்தில் பணிபுரியும் அலுவலர்களை 1-4-1982 முதல் அரசு ஊழியர்களாக அறிவித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நூலகத்தில் பணிபுரியும் அலுவலர்களை அரசு ஊழியர்களாக்கும் செயற்குறிப்பு நீண்ட நாட்களாகப் பரிசீலனையில் இருந்தது. அந்தக் கோரிக்கையை நிறைவேற்றியதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களுக்கும், மாண்புமிகு கல்வியமைச்சரவர்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். தனியார் நூலகங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு அவர்கள் குறைந்த சம்பளம்தான் கொடுக்கிறார்கள். எனவே, தனியார் நூலகங்களையும் அரசே ஏற்றுக்கொண்டு அந்த ஊழியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவரவர்களே, அப்படிப்பட்டயோசனை அரசுக்கு இல்லை.

**திரு. எல். இளையபெருமாள்:** மாண்புமிகு தலைவரவர்களே, கார்ப்பரேஷன், முனிசிபாலிட்டிகளில் உள்ள நூலகங்கள் ஆரம்பிக்கப்பட்டு கிட்டத்தட்ட 25 ஆண்டுகள் ஆகியிருக்கும். அங்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டிருந்தும் அவர்கள் அந்த உத்தரவை அமல் செய்யாமல் இருக்கிறார்கள். எனவே, தனியான ஒரு உத்தரவைக் கொடுத்தாவது, அப்படிப்பட்ட இடங்களில் ரிசர்வேஷனைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறதா? இல்லையென்றால், வருங்காலத்திலாவது அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சதவீதத்தை அமல் நடத்த வேண்டுமென்று அரசாங்கம் அதிகாரிகளுக்கு புதிதாக உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்.** மாண்புமிகு தலைவரவர்களே, நூலகங்களைப் பொறுத்தவரையில் கடந்த நான்கைந்து ஆண்டுக் காலமாக மேற்கொண்டு புதிதாக நூலகங்களைத் திறக்கவில்லை. ஆகவே, புதிய ஆட்களை எடுக்கின்ற வாய்ப்பு மிகவும் குறைவாகத்தான் இருக்கிறது. ஆனால் புதிய ஆட்களை எடுக்கும்பொழுது அந்த விகிதாச்சாரத்தை மனத்தில் வைத்துக்கொண்டுதான் எடுப்போம். அதை மீறி யாரும் செய்ய முடியாது. முனிசிபாலிட்டி அல்லது கார்ப்பரேஷன் அல்லது பஞ்சாயத்து போர்டு நூலகங்களைப் பற்றி என்னிடத்தில் தற்போது விவரங்கள் இல்லை. எனவே அதுபற்றிப் பதில் சொல்லக் கூடிய நிலையில் இல்லை. அதுபற்றித் தனிக் கேள்வி கேட்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. சு. பாலன்:** மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, நூலகங்களைப் பொறுத்தவரையில் சென்னை மாநகராட்சியாலே ஆரம்பிக்கப்பட்டு அதன் வசத்தில் இருந்தபொழுது, ஆங்காங்கு வட்டங்களில் துவக்கப்பட்ட நேரத்தில், நூலகங்களில் படிக்கின்ற மக்கள் அதிகம் இல்லாத நேரத்தில், அப்பொழுது சிறிய கட்டிடங்களாகக் கட்டப்பட்டன. ஆனால் இப்பொழுது நூலகங்களில் படிக்கின்றவர்களின் எண்ணிக்கை அதிகமாக வளர்ந்துள்ளது. ஏற்கனவே உள்ள கட்டிடங்கள் பழுதடைந்து சரியான இடவசதி இல்லாத காரணத்தினால், ஒவ்வொரு வட்டத்திலேயும் இருக்கின்ற கட்டிடங்களை மாற்றியமைக்கின்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவரவர்களே சென்னை நகரத்திலே இருக்கின்ற கிளை நூலகங்களுக்கெல்லாம் கூடுமானவரையில் புதுக் கட்டிடங்களாக கட்ட வேண்டுமென்று அறிவித்து அது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இடங்கள் கிடைத்தவுடன் கட்டிடங்களை ஆரம்பித்துக் கட்டி வருகிறார்கள். இடம் கிடைப்பதிலே பெரிய சிரமங்கள் இருந்து வருகின்றன. அதற்குமேல் பத்து வட்டங்களுக்கு ஒரு சர்க்கிள் லைப்ரரி என்ற முறையில் பெரிய லைப்ரரியாகக் கட்ட வேண்டுமென்று சொல்லி அந்த வேலைகளும் நடந்து வருகின்றன. எங்கேயாவது வட்டத்திலேயோ, சர்க்கிளிலேயோ கட்டப்படவில்லையென்றால் இடம் கிடைக்காத காரணத்தினால் கட்டப்படாமல் இருக்கலாம். இடம் கிடைத்தால் ஆங்காங்கு வேலைகளைத் துவங்குவார்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவரவர்களே, நூலகங்களுக்குப் பள்ளி மாணவர்கள் புத்தகங்கள், பத்திரிகைகள் இவைகளைப் படிக்கச் செல்கிறார்கள். அங்கே சினிமாச் செய்திகள் பத்திரிகைகளிலே வருகிறது. கமலஹாசன், ரஜினிகாந்த், பாக்கியராஜ் ரசிகர்கள் அவர்களுக்குப் பிடிக்காத பக்கத்தைக் கிழித்துவிடுகிறார்கள். அதனால் செய்திகளை முழுமையாகப் படிக்கமுடியாமல் போய்விடுகிறது. அவைகளைக் கண்காணிக்க நூலகங்களில் அதிக அலுவலர்களைப் போட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, சினிமாப் பத்திரிகைகளைக் கிழிப்பது, அல்லது புத்தகங்களைக் கிழிப்பது, அல்லது ஏமாந்தால் புத்தகங்களை எடுத்துச்செல்வது எல்லா இடங்களிலும் இந்தத் தவறான காரியங்கள் இருக்கத்தான் செய்கிறது, அங்கே மட்டுமல்ல. எல்லா இடங்களிலும், அது லைப்ரரியாக இருந்தாலும் சரி, வேறு இடமானாலும் சரி, இந்தக் குறைபாடுகள் இருக்கின்றன. அது அதிகமாகிவிடாமல், குறைகின்ற விதத்திலே, கண்காணிப்புக் கொஞ்சம் கடுமையாக வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. நாமும் அவ்வப்போது எச்சரிக்கை செய்து வருகிறோம், இன்னும் சொல்லப்போனால்,

அதிகமான அளவில் நஷ்டம் ஏற்பட்டால் அதற்கு அந்த ஊழியர்கள் தான் பொறுப்பு என்ற நிலைமையை உருவாக்கி, அந்த ஊழியர்கள் அதிலே அதிகமாக கவனிக்கும்படி செய்து வருகிறோம்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய நூல்கங்களில் ஏற்கனவே பணியாற்றுகின்ற இரவுக் காவலர்கள், தற்போது நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறது உண்மைதான். அதற்கு மிக்க நன்றி. அவர்களுடைய சம்பளத்தைப் பொறுத்தவரையில், ஏற்கனவே அந்த வாச்மேனுடைய அடிப்படைச் சம்பளம் ரூ. 49 ஆக இருந்தது. இப்போதுஅவர்கள்சிற்றூழியர்கள் ஆக ஆக்கப்பட்டதற்குப் பிறகு, ரூ. 18 ஆக குறைக்கப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்ல அவர்கள் ஏற்கனவே பெற்றுவந்த வாய்ப்புகளெல்லாம் கணிசமாகக் குறைக்கப்பட்டு வந்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. அப்படி இருக்குமானால் அதை உடனடியாக நிவர்த்தி செய்ய, அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றிய விவரம் என்னிடத்தில் தற்போது இல்லை. தனியாக எழுதித் தந்தால், அதுபற்றி நான் பரிசீலிக்கச் சொல்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம்: தலைவரவர்களே, நூலகங்களில் பணி புரிந்த ஊழியர்கள், அதற்கு முன்பு லோகல் லைப்ரரி ஊழியர்களாக இருந்தபொழுது, அவர்களுக்குக் கிடைத்த ஊதியத்தை விட தற்போது அரசாங்க ஊழியர்களாக மாற்றப்பட்ட பிறகு, அடிப்படைச் சம்பளம் ரூ. 55 மாதச் சம்பளமாக குறைவாகக் கொடுக்கின்றது. இந்தக் குறையை நிவர்த்திக்க அரசு உடனடியாக ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்களும் இதே கேள்வியைக் கேட்டிருக்கிறார் எனக் கருதுகிறேன். இதைப்பற்றி பரிசீலிக்கச் சொல்கிறேன்.

திரு. சா. கிருட்டிணமூர்த்தி: தலைவரவர்களே, அரசு நூல் நிலையங்களை, தலைமை இடங்களில் தேர்வு செய்தும், இன்னும் நூல் நிலையங்கள் அமைக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அரியலூர், ஜயங்கொண்டான், ஆண்டிமடம் போன்ற இடங்களில் பார்த்த பின்பும், இன்னும் நூல் நிலையங்கள் அமைக்கப்படவில்லை. எனவே அது சம்பந்தமாக அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: புதிய கட்டிடங்கள் கட்டுவது என்பது, அந்தந்த மாவட்ட நூலக ஆணைக் குழுக்களிடத்திலே இருக்கின்ற நிதி வசதியைப் பொறுத்துத்தான் அமையும். ஆகவே நிதி வசதியைப் பொறுத்து அந்தக் கட்டிடங்களைக் கட்டுகின்ற வேலைகளைச் செய்வார்கள்.





திரு. கே. ஆர் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாவட்டத் தலைநகரங்களிலே அல்லது வேறு சில இடங்களிலே, புதிய நூலகங்களைக் கட்டுவதற்கு, இலவசமாக இடம் கிடைக்காத காரணத்தினால் கட்டப்படாமல் இருக்கிறது. அரசே காலி இடங்களைப் பார்த்து விலைக்குப் பெற்று, கட்டிடம் கட்ட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: வேறு இடங்களிலே, இலவசமாகத் தருவார்களேயானால், நாம் அங்கே கட்டவேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே பணத்தைக் கொஞ்சமாக வைத்துக் கொண்டு எங்கே பொதுமக்கள் ஆதரவு, ஒத்துழைப்பு இருக்கிறதோ, அந்த இடத்திலேதான் நாம் முதலிலே வேலையைத் தொடங்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற குடியாத்தம் பகுதியில் இந்த வேலை நடைபெறுவது தள்ளிப் போடக் கூடாது என்று விரும்புவாரேயானால், அது போன்ற ஒத்துழைப்பை அவர்களும் தந்தாக வேண்டும். அதுமட்டுமல்ல, நாம் இப்போது கட்டிடம் கட்ட வேண்டும் என்கிற நடவடிக்கைக்கு ஆதரவு தருகின்ற காரணம், நாம் வைத்திருக்கிற கட்டிடங்கள், நூல் நிலையங்களுக்கு ஒத்துவரக்கூடிய நிலையில் இல்லாத காரணத்தினால்தான். ஆகவே 2, 3 மணி நேரம் உட்கார்ந்து படிக்கக் கூடிய அளவிற்கு அந்தக் கட்டிட அமைப்பு இருக்கவேண்டுமென்று கருதுவதாலே தான் பல இடங்களிலே, குறிப்பாக மாவட்டத் தலைநகரங்களிலே, அதற்கான வடிவமைக்கப்பட்டு கட்ட வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். அந்த அடிப்படையிலே தான், இப்போது சில மாவட்டத் தலைநகரங்களில் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

## பருகூர் மேல்நிலைப் பள்ளிக் கட்டடம்.

*வினா எண். 881—திரு. பி. எஸ். துரைசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பருகூர் மேல்நிலைப் பள்ளி ஏரியில் கட்டியுள்ளதால் மழைக் காலங்களில் பள்ளியில் நீர்த்தேக்கம் ஏற்படுவதைத் தடுக்க அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பருகூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் எந்தக் கட்டடமும் ஏரியில் கட்டப்படவில்லை எனவும் மழைக்காலத்தில் ஏரியில் நீர்வரும்போது பள்ளியின் விளையாட்டு மைதானத்தில் மட்டும் சிறிது நீர்த்தேக்கம் ஏற்படுகிறது எனவும் இதனால் மாணவர்களுக்கு பெரிய அளவில் பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அளவிற்கு கடனைத்திருப்பிக் கொடுக்கின்ற அளவிற்கு மாட்டுக்கு தீவனம் கொடுக்கக்கூடிய ஒரு நிலையில்லாமல் இருக்கிறது. ஆகையினாலே தஞ்சை மாவட்டத்திலே இப்படிப்பட்ட ஒரு தொழிற்கூடம் ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை அளவிலே எல்லா மாவட்டங்களிலும் ஆரம்பிக்க வேண்டும் என்பதுதான் கொள்கை. அரசினுடைய கொள்கை. ஏற்கனவே நான் சொன்னதைப் போல 3 மாவட்டங்களினுடைய தலைநகரங்களிலே ஆரம்பித்திருக்கிறோம். நான்காவதாக, மதுரையில் கப்பலூர் தொழிற்பேட்டையிலே இந்த ஆண்டு ஒரு கோடி மூலதனத்திலே ஆரம்பிக்கிறோம். தொடர்ந்து பல மாவட்டங்களிலே அவ்வப்போது ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எண்டியூரில் பால் குளிருட்டும் நிலையம் அமைக்கும் திட்டம்

*வினா எண் 879—திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் வட்டம், எண்டியூர் கிராமத்தில், பால் குளிருட்டும் நிலையம் அமைக்கஅரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) இத் திட்டம் பற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) மற்றும் (ஆ) திண்டிவனம் பகுதியில் ஓர் குளிருட்டும் நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று ஒரு கோரிக்கை, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் பரிசீலனையில் உள்ளது. இக்கோரிக்கைக்கு முடிவெடுக்கும்போது, எண்டியூரிலும் மற்ற ஊர்களிலும் குளிர் நிலையம் அமைப்பதற்கான பல்வேறு வசதிகளையும் ஆராய்ந்து, உரிய நேரத்தில் முடிவெடுக்கப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக இந்த குளிருட்டும் நிலையம் ஏற்படுத்துவதற்கு அந்தப் பகுதியில் எத்தனை லிட்டர் பால் ஆரம்பக் கூட்டுறவு நிலையங்களிலிருந்து வந்தால் இப்படி புதிதாக ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் ஆர்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஏற்கனவே மாண்புமிகு புரட்சித் தலைவர் பொறுப்பேற்ற பிறகு இரண்டு இடங்களில், ஒன்று விழுப்புரம் இரண்டு சின்ன சேலம் ஆகிய இரண்டு இடங்களில், குளிருட்டு நிலையங்கள், 50 இலட்சம் ரூபாய் முதலீட்டில் 60 ஆயிரம் லிட்டர் திறன்கொண்ட குளிர் பதனம் செய்கின்ற நிலையத்தை உருவாக்கியிருக்கிறோம். மூன்றாவதாக சேத்தியாதோப்பில் புவனகிரி தொகுதியில் நெய்வேலிக்கு அருகில் இன்டகிரேட்டட் ரூரல் டெவலப்மெண்ட் புரோகிராம் அடிப்படையிலே 10 ஆயிரம் லிட்டர் கொள்திறன் கொண்ட ஒரு குளிருட்டு நிலையம் உருவாகிக் கொண்டிருக்கிறது. ஒன்றிரண்டு திங்களில் அது செயல்படத் துவங்கயிருக்கிறது. ஆக இப்போது ஏறத்தாழ 70 ஆயிரம் அளவிற்கு இன்றையதினம் கொள் திறனைக் கொண்ட வசதிகள், இன்பிராஸ்டரக்சர் இருக்கிறது. ஆனால் இந்த இரண்டாவது பால் பெருக்குத் திட்டம் முடிவதற்குள்ளாக மேலும் 25 லட்சம் ரூபாய் முதலீடு செய்து விழுப்புரத்தை 50 ஆயிரமாகவும், சின்ன சேலத்தை 50 ஆயிரமாகவும் ஆக்குகின்ற கருத்துருவும் அரசிடத்திலே இருக்கிறது.



(முற்பகல் 9-10)

அதற்காக 25 இலட்சம் ரூபாயையும் அரசு ஒதுக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தென்னார்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இரண்டாவது பால் பெருக்கத் திட்டம் முடிவடைந்ததும் 1,10,000 லிட்டர் பாலைக் குளிருட்டுகின்ற வசதியை அந்த மாவட்டம் பெறும்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனத்தில் பால் குளிருட்டும் நிலையம் அமைக்க இருப்பதைப்போல, இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு தமிழகத்தில் எத்தனை பால் குளிருட்டும் நிலையங்களை அமைத்திருக்கிறது? இன்னும் எத்தனை பால் குளிருட்டும் நிலையங்களைத் தமிழகம் முழுவதும் அமைப்பதற்கு அரசு திட்டமிட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது பொதுக் கேள்வியாக இருக்கிறது. அருள்கூர்ந்து தனிக்கேள்வி போடுமாறு உறுப்பினரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நூலகத்தில் பணி புரியும் அலுவலர்களை அரசு ஊழியர்களாக்கும் திட்டம்

*வினா எண். 880—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நூலகத்தில் பணிபுரியும் அலுவலர்களை அரசு ஊழியர்களாக்கும் உத்தேசம் உள்ளதா?

[1983 ஏப்ரல் 27

[முற்பகல் 9–20]

திரு. க. இரா. சின்னராசு : தலைவரவர்களே, பருகூர் மேல்நிலைப்பள்ளி கட்டப்பட்டிருப்பது ஒரு ஏரிக்கு மேல் பகுதியாகும். அந்த ஏரிக்கு எந்தவிதமான பாசனமும் இல்லை. ஆகையால் அந்த ஏரிக்கு கரையாக அமைந்திருப்பதை எடுத்து விட்டால் தண்ணீர் அகன்றுவிடும். அதனால் பள்ளிக்கூடத்திற்கு எந்தவிதமான விளைவும் ஏற்படாது. ஆகவே அதை அகற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட வாய்ப்பு இருக்குமானால் கல்வித்துறை அதுபற்றி முயற்சி எடுக்கும்.

## தமிழ்நாட்டில் அஞ்சல்வழி பாடத்திட்டம் மூலம் S,S.L.C. தேர்வு எழுதும் திட்டம்.

*வினா எண். 882—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அஞ்சல்வழி பாடத்திட்டம் மூலம் S.S.L.C. படித்து தேர்வு எழுதுவதற்கு ஏதேனும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆம்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, இதுபோன்ற அஞ்சல்வழி கல்வித் துறைக்கு தனியாக ஒரு இலாகா அமைத்து செயல்படுத்தப்படுமா ? இப்போது அதற்கான நடவடிக்கை எடுத்து இருப்பதாகக் கூறினார்கள். அதன் விவரங்களை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்த திறந்தவெளி கல்வி என்ற அடிப்படையில் (ஓப்பன் ஸ்கூல்) நடத்துவது என்ற கருத்துரு அரசினுடைய தீவிர பரிசீலனையில் இருந்துவருகிறது. இதை நம்முடைய தமிழ்நாடு கல்வி மற்றும் பயிற்சி ஆராய்ச்சி நிறுவனம் ஏற்று நடத்துவதாக முடிவு செய்திருக்கிறோம். இந்த திறந்தவெளி கல்வியின் முக்கிய நோக்கம் இடைநிலைக் கல்வியை 8-வது வகுப்போடு நிறுத்தியவர்களுக்கு — இல்லத்தரசிகள், தாய்மார்கள், வேலை செய்து வீட்டோடு இருக்கிற தாய்மார்கள் மற்றும் இடைநிலைக் கல்வி பயில இயலாதவர்கள்—மேல்நிலை கல்வி பயில விரும்பினால் அவர்களுக்கு இடைநிலைக் கல்வியை நிறைவு செய்யும் வண்ணம் வழிவகை செய்வது. இதில் இப்போது வருஷத்திற்கு 5000 பேர்களையாவது சேர்த்து கல்வி தர வேண்டுமென்று விரும்புகிறோம். ஆனால் இறுதியான முடிவு இன்னும் எடுக்கப் படவில்லை. இதிலே பொதுக் கல்வி, தொழில் பிரிவு என்று இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. தொழில் பிரிவு என்றால்



1983 ஏப்ரல் 27]

தொழில் பயிற்சி அல்ல. ஆனால் தொழில் பற்றிய கல்வியை அவர்கள் தந்து கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்த விரும்பி, அந்தக் கருத்துரு அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்த அஞ்சல்வழி பாடத் திட்டத்தில் சேருகின்றவர்களுக்கு வயது வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதாக அறிகிறேன். அதை தளர்த்தி, படிக்க விரும்புகின்ற அனைவரும் இந்தத் திட்டத்தில் சேர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, படிப்பை இடையிலே நிறுத்திவிட்டு, மறுபடியும் படிக்க வேண்டுமென்று விரும்புகிறவர்களுக்கு என்று கொண்டுவருகிற திட்டம் இது. ஆகையால் கூடியவரை எவ்வளவு அதிகமான பேர்களுக்கு படிக்க வாய்ப்பை ஏற்படுத்தித் தரமுடியுமோ அந்த அளவுக்கு செய்ய அந்தத் திட்டம் இறுதிவடிவம் பெறும்போது விதிகளை நாம் அமைக்க இருக்கிறோம்.

திரு. இல. பலராமன் : தலைவரவர்களே, இந்த அஞ்சல்வழி கல்வித் திட்டம் பற்றி அரசு ஆலோசிக்கிறது, எப்படி செயல்படுத்துவது என்பது பரிசீலனையில் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். இதற்கென்று எவ்வளவு திட்ட மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது ? மத்திய அரசினுடைய கொள்கை அல்லது ஆலோசனை அடிப்படையில் இது நடத்தப்பட இருக்கிறதா அல்லது மாநில அரசே தனிப்பட்ட முறையில் நடத்த திட்டம் தீட்டப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, மத்திய அரசும் இதேபோல் திட்டத்தை நடத்தி வருகிறார்கள். ஆனால அது அவ்வளவு வெற்றிகரமாக நடைபெறவில்லை என்ற கருத்து சொல்லப்படுகிறது. அதிலே தொடர்புடைய அதிகாரிகளை நாம் இதிலே இந்த ஆலோசனைக் குழுவில் நாம் போட்டு அவர்கள் கருத்துக்களையெல்லாம் வைத்துத்தான் நாம் இப்போது இந்தத் திட்டத்தைத் தயாரித்திருக்கிறோம். அஞ்சல் மூலம், அச்சடித்து 200 பக்கங்கள் கொண்ட பாடப் பகுதிகள், 20 முதல் 30 பாடப் பகுதிகள் இருபது தவணைகளில் மாணவர்களுக்கு அனுப்பப்படும். 102 மையங்களில் ஆண்டுக்கு ஏழு நாட்கள் நேர்முகமாக மாணவர்கள் ஆசிரியர்களைச் சந்தித்து பாடங்களில் ஏற்படும் ஐயங்களை அவர்கள் தெளிவாக்கிக்கொள்ள வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. கரஸ்பாண்டன்ஸ்–கம்–காண்ட்டாக்ட் கோர்ஸ், அஞ்சல் வழி தொடர்போடுகூட நேர்முகத் தொடர்பும் ஏழு நாட்கள் என்று ஒரு திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். மத்திய அரசு நடத்தும் திட்டம் நாடு முழுவதும் தழுவி இருக்கிற காரணத்தால் அதை நடத்துவதில் பல்வேறு சிரமங்கள் சில நேரங்களில்

[1973 ஏப்ரல் 27

(முற்பகல் 9–30)

திரு. பொ. உந்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்துவது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்வது, 1981–82, 1982–83ஆம் ஆண்டுகளில் அரசாங்கம் அறிவித்தபடி மக்கள் தொகையையும் அதற்கேற்ப பங்குத்தொகையும், அதற்கான இடமும் கொடுக்கவேண்டுமென்ற விதியின் அடிப்படையில், அந்த மாதிரி பங்குத் தொகையும், இடமும் கொடுத்த திருத்துறைப்பூண்டிக்கு முன்னுரிமை வழங்கப் படுமா என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, புதிதாக உயர்நிலைப் பள்ளிகள் துவங்க வேண்டுமென்று சொல்லுகிறபோது, ரூ. 10,000, ரூ. 12,000 பங்குத் தொகை கொடுப்பதோடு, அதற்கான இடத்தைத் தருவது, தற்காலிகமான கட்டிடத்தைத் தருவது போன்ற நிபந்தனைகளையெல்லாம் வைத்து, விண்ணப்பிக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. ஏறத்தாழ அப்படி எல்லோருமே விண்ணப்பிக்கிறார்கள். அதிலே நாம் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிற காரணத்தினால், அப்படி அவர்கள் விண்ணப்பித்திருந்தாலும், எவைகள் உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமோ, அதற்கு முன்னுரிமை கொடுத்துக் கொண்டிருக்கிறோம். திருத்துறைப் பூண்டிக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா என்று கேட்டார்கள். அப்படித் தருவதற்கில்லை. எல்லா ஊர்களிலிருந்தும் வரக் கூடியவற்றை மனதிலே வைத்து, பரிசீலிக்கப்படுகின்றது. இன்னும் சொல்லப்போனால், சாதாரணமாக ஒருவர் செய்து வந்த காரியத்தை, இப்போது இதற்கென ஒரு குழுவைப் போட்டு, அவர்கள் எல்லாவற்றையும் பரிசீலித்து, செலக்ட் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட ஒருவர் சிபார்சு செய்யக்கூடிய நிலைமையை இப்போது தடுத்திருக்கிறோம்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் கல்வி நிலயங்களிலே பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்று சொல்லப்படுகிறது. அப்படியானால், எத்தனை சதவிகிதம் அதிகரித்து வருகின்றது என்பதை அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியே பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் புதிதாக துவங்கப்படுமா என்பதாகும். நான் சொன்ன பதிலிலும், புதிதாக துவங்கப்பட்டு வருகின்றது என்பதாகும். உயர்நிலைப்பள்ளிகள் அதிகரித்து வருகின்றது என்பது, பெண்கள் அதிகமாகப் படிக்க வருகின்றார்கள் என்பதை எடுத்துக்காட்டு கிறது. இன்றைக்கு 1, 2வது வகுப்புகளிலே இருந்து, 12வது வகுப்பு வரையிலும் ஏறத்தாழ 90 லட்சம் குழந்தைகள்



1983 ஏப்ரல் 27]

படிப்பதில், 45, 46 சதவிகிதம் பெண்கள் படிக்கின்ற நிலைமையிருக்கிறது. இது அதிகரித்து வருகின்றது? இன்னும் இரண்டு ஆண்டுகளில், ஆண்களுக்குச் சமமாக பெண்கள் வந்து, ஆண்களைவிட அதிகமான அளவிற்கு போகக்கூடிய நிலைமை தமிழ்நாட்டிலே இப்போது உருவாகியிருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலில் 46 சதவிகிதம் அளவில் இன்றைக்குப் பெண்கள் படிக்கின்றார்கள் என்று சொன்னார்கள். இன்னும் இரண்டு ஆண்டுகளில், ஆண்களுக்குச் சமமாக படித்துவிடுவார்கள் என்றும் சொன்னார்கள். இன்றைக்கு அப்படி நிறைய பெண்கள் எஸ்.எஸ் எல்.சி., 10-வது, 9-வது வகுப்புகள் வரை படித்துவிட்டு, ஒருவிதமான வேலையும் இல்லாமல் அவஸ்தைப்படுகிறார்கள் என்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படியென்றால், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஐ.டி.ஐ. அமைப்பு பெண்களுக்கென தனியாக ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது படிப்பு வேண்டுமென்று சொல்லி, படிப்பதற்கு நாம் வாய்ப்பைத் தருகிறோம். வேலை தரவேண்டுமென்று வருகின்றபோது, அந்தத் துறையைச் சார்ந்த அமைச்சரிடத்தில் கேள்வியைக் கேட்டு, அதற்கான முயற்சிக்கு ஊக்கத்தைத் தந்து, நாம் ஏற்பாடு செய்யவேண்டும். குறிப்பாக கல்வித் துறையைப் பொறுத்த மட்டில், இந்த 2,3 ஆண்டுகளில் மட்டும் 5, 6 பாலிடெக்னிக்குகள் பெண்களுக்காக ஆரம்பித்திருக்கிறோம். இரண்டு பாலிடெக்னிக்குகளில் பெண்களுக்கென தனிப் பிரிவை ஆரம்பித்திருக்கிறோம். இந்தியாவிலேயே அதிகமான பெண்கள் பாலிடெக்னிக்குகள் இருப்பது தமிழ்நாட்டிலேதான். பெண்கள் பாலிடெக்னிக்குகள் மட்டுமல்ல; அவர்கள் தொழிற் கல்வி பெற வேண்டுமென்று வெளிப்படையாகச் சொல்லி, அந்தந்த நிலைக்கு ஏற்ப முயற்சிகளை மேற்கொண்டு வரக் கூடிய, அரசு தமிழக அரசுதான் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற அரசு உயர்நிலைப் பள்ளியை மலைப் பகுதியில் ஆரம்பிப்பதற்கு, அவர்கள் பாதித் தொகையை அதாவது ரூ. 5,000 கட்டினால் போதுமென்று சொல்லப் படுகிறது. அப்படி அரசு ஏதாவது அறிவித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுபற்றிய விவரம் இங்கே இல்லை. தனிக் கேள்வியைப் போட்டால் பதில் சொல்லலாம்.

இருக்கக்கூடும். ஆனால் நம் மாநிலத்தில் நடத்துகிறபோது அந்த சிரமங்கள் இதில் இருக்காது. இதை நல்லமுறையில் நடத்தமுடியும் என்று நம்புகிறோம். ஆனால் ஆரம்பத்தில் குறைவான எண்ணிக்கையில் நாம் ஆரம்பிக்கலாம் என்றிருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இந்த அஞ்சல் வழி பாட திட்டம் என்பதில் எஸ்.எஸ்.எல்.சி. படித்து தேர்வு பெறுவதற்காக நடக்கிற இத்திட்டத்தில் முதலில் சேருவதற்கு ஆரம்பத்தில் ஏதாவது படித்து சர்டிபிக்கேட் வேண்டும் என்று விதிகள் செய்ய அரசு நினைக்கிறதா? அல்லது அப்படிப் படிக்காமல், ப்ரைவேட்டாக படித்தவர்கள் நேரிடையாக அஞ்சல்வழி படித்து பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, ஓப்பன் ஸ்கூல் என்பதே எந்தத் தகுதியும் இல்லாமல் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் அதன் அர்த்தம். இருந்தாலும் இந்தத் திட்டத்தை ஆரம்பத்திலேயே அந்தளவிற்கு விரிவு படுத்தாமல் குறைந்தது எட்டாவது படித்திருக்கவேண்டும் என்ற வகையில் இதைச் செயல்படுத்தலாம் என்று கருதுகிறோம்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரியில் நடைபெற்று வந்த மாலைநேர வகுப்புகள் சென்ற ஆண்டு முதல் நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த வாய்ப்பை இழந்திருக்கக்கூடியவர்களுக்கு அஞ்சல் வழி சட்டக் கல்வி பயில அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அஞ்சல் வழி பாடத் திட்டம் மூலம் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதும் திட்டம் பற்றிய கேள்வி.

### 1982-83-ல் புதியதாகத் துவக்க அனுமதி வழங்கப்பட்ட பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள்.

*வினா எண். 883—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982-1983-ல் தமிழகத்தில் எத்தனை புதிய பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் துவக்க அரசு எண்ணியுள்ளது?

(ஆ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், செய்யூர் கிராமத்தில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி துவக்கப் படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 1982—83-ம் கல்வியாண்டில் 15 புதிய பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் துவக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

(ஆ) இல்லை.



திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மொத்தம் எவ்வளவு பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் துவங்க மனுக்கள் வந்திருக்கின்றன? சென்ற ஆண்டு 15 அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு எவ்வளவு பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் துவங்க அரசு எண்ணியுள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, எவ்வளவு இடங்களிலிருந்து வந்தது என்ற கணக்கு இப்போது என்னிடம் இல்லை. ஆனால் நாமே ஒரு திட்டத்தை சென்ற ஆண்டு துவக்கினோம். 200-க்கு அதிகமான பெண்கள் பயிலும் உயர்நிலைப் பள்ளிகள் பிரிக்கப்பட்டு பெண்களுக்கென தனி உயர்நிலைப் பள்ளி துவக்கப்பட வேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தக் கருத்துக்கு செயல்வடிவம் கொடுப்பதற்கு பத்து மேல்நிலைப் பள்ளிகளைப் பிரித்து பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் துவங்க ஆணை யிட்டோம். அது தவிர மூன்று பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் துவக்கியிருக்கிறோம். ஆகவே விண்ணப்பங்கள் வரவில்லை என்றாலும்கூட சிலயிடங்களில் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் துவக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு நாம் எவ்வளவு துவங்கப் போகிறோம் என்பதுபற்றி இப்போது சொல்வதற்கில்லை. வந்திருக்கிற விண்ணப்பங்களை வைத்து நாம் ஆராய்ந்து முன் உரிமை பிரகாரம் துவக்க விரும்புகிறோம்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, செய்யூர் கிராமத்தில் தற்போதுள்ள அரசாங்க உயர்நிலைப் பள்ளியில் சுமார் 1,700 மாணவ மாணவியர் கல்வி கற்கிறார்கள். அந்தப் பள்ளியில் தற்போது 500 மாணவிகள் கல்வி பயில்கிறார்கள். அந்நிலையில் செய்யூர் கிராமத்தில் இந்த ஆண்டாவது அந்தப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி துவக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இது பெரும்பாலும் நாம் நகரத்திலும் நகரத்தைப் போன்ற பகுதிகளிலேயும் பெண்களுக்கென தனியாக பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கக்கூடிய ஒரு கோரிக்கை வலுவாகச் சொல்லப்படுகிற காரணத்தால் முதலில் அவர்களுக்கு முதலிடம் தரவேண்டியவர்களாக இருக்கிறோம். கிராமப்புறங்களில் ஆண்களும் பெண்களும் படிப்பதால் பெரும்பாலும் பிரச்னைகள் அதிகமாகத் தோன்றுவதில்லை என்ற காரணத்தால் அதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே அதிகமாக, 200-க்கு மேற்பட்ட பெண்கள் படிக்கிற பள்ளிகளை பிரித்து பெண்களுக்கு என்று தனியாகப் பள்ளிகள் ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்கிறோம். அந்த இடங்களில் துவக்க வேண்டும் என்ற நிலையில் அந்த இடங்களுக்கு முதல் உரிமை தந்து நாம் இதைச் செய்து வருகிறோம். ஆனால் நாளா வட்டத்தில் அதுபோன்ற இடங்களையும் இரண்டாவதாக பெண்களுக்கென ஒரு உயர்நிலைப் பள்ளி வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[1983 ஏப்ரல் 27

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தனியார்கள் நடத்திவந்த ஆரம்பப் பள்ளிகளை முன்பு ஊராட்சி ஒன்றியங்கள் எடுத்துக் கொண்டது. அதே போல், இப்போது தனியார் நடத்தக்கூடிய ஆரம்பப் பள்ளிகளை அப்படி கொடுப்பதற்கு அவர்கள் முன்வந்தால், அந்த ஆரம்பப் பள்ளிகளை உடனடியாக அரசு ஏற்று நடத்த முன்வருமா? அதற்கான ஆணை பிறப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இது பற்றி தனியாகக் கேட்கவேண்டும். அப்படி ஏதாவது ஒரு நிலை இருக்குமானால் அது பற்றி ஒரு விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் எழுதி அனுப்புவாரானால் அதைப் பரிசீலித்து அதற்குத் தக்க பரிகாரத்தை அரசு காணும்.

திரு. என். வரதராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புதிய உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிப்பதற்கு ஒரு குழு அமைத்து இருப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் பரிசீலிக்கின்ற நேரத்தில் பின் தங்கிய கிராமப்புறப் பகுதிகளையும், 10 மைல் சுற்றளவில் பள்ளிகள் இல்லாத நிலைமைகளையும் கவனத்தில் கொண்டு பரிந்துரைகளை அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, பின் தங்கிய பகுதி, தூரம், அங்கேயிருக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை, சுற்றுப்புறத்தில் இருக்கின்ற தொடக்கப் பள்ளிகளில் இருக்கும் மாணவர்கள் எண்ணிக்கை அங்கேயிருந்து உயர்நிலைப் பள்ளிக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கை, ஆகிய அனைத்தையும் கருத்தில் வைத்துத்தான் அவர்கள் பரிந்துரை செய்வார்கள்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் தமிழ் நாட்டிலேதான் பெண்கள் அதிகமாகக் கல்வி பயிலுகிறார்கள் என்று சொன்னார்கள். அதைப்போலவே, பாலிடெக்னிக்கு களிலும் பெண்கள்தான் அதிகம் படிக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆகவே, அந்தக் கருத்தின் அடிப்படையில், இந்த ஆண்டில் புதிய பாலிடெக்னிக்குகள் ஏதேனும் ஆரம்பிப்பதற்கான உத்தரவை அரசு வெளியிடுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இதுவரைக்கும் அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் இல்லை



## 1981-82-ம் நிதியாண்டில் விற்கப்பட்ட கைத்தறி துணிகள்

*வினா எண். 884 திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981-82-ம் நிதியாண்டில் எவ்வளவு கைத்தறி துணிகள் விற்கப்பட்டன?

(ஆ) மத்திய அரசு, மற்றும் மாநில அரசு வழங்கிய தள்ளுபடி தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 1981-82-ம் நிதியாண்டில் விற்பனை செய்யப்பட்ட கைத்தறி துணிகளின் மதிப்பு கீழ் வருமாறு:

| | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் மூலம் விற்கப்பட்ட துணியின் மதிப்பு | 7,065.00 |
| பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விற்கப்பட்ட துணியின் மதிப்பு | 3,570.00 |
| மொத்தம் .. | 10,635.00 |

(ஆ) 1981-82-ம் நிதியாண்டில், தள்ளுபடி திட்டத்தின் கீழ் ரூ. 559.98 இலட்சம் வழங்கப்பட்டது. இதில், மத்திய மற்றும் மாநில அரசின் பங்கு முறையே ரூ. 302.38 இலட்சம் மற்றும் ரூ. 257.60 இலட்சம் ஆகும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: பேரவைத்தலைவர் அவர்களே, ஆண்டுக்காண்டு விற்பனை கூடியிருந்தாலும், அதிக அளவிற்குத் துணித் தேக்கம் ஏற்பட்டு இருக்கிறது. இந்தத் தேக்கத்திற்குக் காரணம், புதிய ரகங்கள் புகுத்தாததா, அல்லது புதிய நூல்களை அறிமுகப்படுத்தி புதிய ரகங்களைத் தயார் செய்யாததா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தேக்கம் அதிகமாக இருப்பதற்குக் காரணம் உற்பத்தி அதிகரித்து வருவதுதான். ஆண்டுக்காண்டு உற்பத்தியை அதிகரித்து வருகிறோம். இதற்கு முன்னால் கைத்தறித் தொழில் என்பது ஒரு சீரழிந்து வரும் ஷீணித்து வரும் தொழிலாகத்தான் இருந்தது. ஆனால் இப்போது அந்தத் தொழில் தொடர்ந்து வளர்ந்து வரும் நிலையை நாம் உருவாக்கியிருக்கிறோம். அதன் காரணமாக கைத்தறி நெசவாளர்கள் தற்போது அதிகமான அளவில் துணியை உற்பத்தி செய்வதால் தேக்கம் ஏற்படுகிறது. இன்று இருக்கும் நிலையைப் பார்க்கிறபோது, தேக்கத்திற்குக் காரணம் கடும் வறட்சி. இது கைத்தறித் துறையில் மட்டுமல்ல, எல்லாத் துறைகளிலும் இருக்கிறது.

[1983 ஏப்ரல் 27

திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துணி உற்பத்தி அதிகரித்து இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழ் நாட்டில் வறட்சியின் காரணமாக கிராமப் புறங்களில் உள்ள மக்கள் அதிக அளவிற்கு துணிகள் வாங்க முடியவில்லை. அதனாலும் தேக்கம் இருக்கிறது. மேலும் அவர்கள் செய்கிற உற்பத்தியில் 50% தான் அரசாங்கம் வாங்கி மீதி வாங்காமல் இருப்பதால் அந்தக் கைத்தறித் துணி நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். மேலும், அவர்கள் வேலை இல்லாமலும் இருக்கிறார்கள். ஆகவே, அரசே முழு உற்பத்தியையும் கொள் முதல் செய்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே அதற்காகத்தான் ஒரு சிறப்புத் திட்டத்தை இப்போது போட்டு இந்தக் கூட்டத்தொடரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஜனதா வேட்டி, சேலைகளை வாங்கி விவசாயத் தொழிலாளர்களுக்குத் தருவது என்ற திட்டத்தை நாம் அமல்படுத்துவதன் மூலமாக அந்த ஜனதா ரகத் துணிகள் தேக்கம் இருந்த நிலை மாறி, அதற்கும் மேலே இப்போது கூடுதலாக அவர்கள் அந்த ரகங்களை உற்பத்தி செய்யவேண்டிய நிலை ஏற்பட்டு இருப்பதாக அதிகாரிகள் விவரம் தெரிவிக் கிறார்கள் என்பதை இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

திரு கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை விவசாய கூலித் தொழிலாளர்களுக்கு' மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு கைத்தறி வேட்டியையும் சேலையையும் வழங்கியதே, கைத்தறி வாரியம் அதை அரசுக்கு விற்றதற்காக கைத்தறி வாரியத்திற்கு தள்ளுபடி தொகையை அரசு கழித்து விட்டதா? மைய அரசும் அதன் பங்குக்கான தள்ளுபடி தொகையை—ஏழை கூலி தொழிலாளர்களுக்கு துணிகள் தருவதற்கான பங்கை— மாநில அரசுக்கு மைய அரசு தரவேண்டிய தொகையை வழங்கியதா? அந்த தொழிலாளர்களுக்கு வேட்டியும் சேலையும் வழங்குவது தற்காலிகமா அல்லது ஆண்டுக்கு ஒரு முறை மேலும் வழங்கப்படுமா? அப்படி வழங்கப்படும் என்று சொன்னால், அடுத்த ஆண்டில், அமரர் அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவில் அதை வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆண்டுக்கு மட்டும் தான் அதை அறிவித் திருக்கிறோம் இந்த ஆண்டுதான் எதிர்பாராத வகையில் ஒரு பாதிப்பு நெசவாளிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதிலே ஜனதா ரகங்களை உற்பத்தி செய்வதிலே மைய அரசு நமக்கு உதவி செய்கிறது. அது நாம் எவ்வளவு துணிகளை உற்பத்தி செய்கிறோம் என்பதைப் பொறுத்து, உதவித் தொகை அமையும்



1983 ஏப்ரல் 27]

எவ்வளவு தொகை தருவார்கள் என்பது பிறகுதான் தெரியும். ஆனால் மைய அரசின் உதவியும் இதற்கு இருக்கிறது. அந்த ஜனதா ரக துணிகளை விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்குவது என்பது இந்த ஆண்டுக்கு மட்டும் தான் என்ற அடிப் படையில்தான் சொல்லியிருக்கிறோம். தொடர்ந்து இந்த முறை இருக்குமா இல்லையா என்பதைப்பற்றி அரசுதான் பிறகு முடிவு எடுக்கும்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே கைத்தறி துணி தேக்கம் இருப்பதற்கு காரணம் உற்பத்தி அதிகரித்துக் கொண்டேபோவதுதான் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள் உற்பத்திக்கு ஏற்ற அளவிற்கு அதை விற்பனை செய்வதற்கு, வாரத்திற்கு ஒரு நாளை கைத்தறி நாள் என்று வைத்து, கல்லூரி மாணவ, மாணவிகளும் அரசாங்க பணியிலே உள்ளவர்களும் பயன்படுத்தும் அளவிற்கு ஒரு பெரிய பிரச்சாரத் திட்டம் ஒன்றை உருவாக்க அரசாங்கம் ஆலோசிக்குமா? கைத்தறி நாள் என்ற அந்த நாளிலே, அனை வருமே கைத்தறித் துணியைத்தான் உடுத்துவது, கல்லூரி, மாணவ மாணவிகளோ, மற்ற அரசாங்கப் பணியாளர்களோ, பொது மக்களோ அனைவருமே அதை உடுத்த வேண்டும் என்ற அளவில் பிரச்சாரத்தை செய்ய வேண்டும். அதேநேரத்தில் அவர்களுக்கெல்லாம், மக்கள் நலம் நாடும் நற்பணிகள் சான்றிதழ்கள் வழங்கவும் அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுவாக பெண்கள், தாய்மார்கள் என்று பார்க்கிறபோது, அவர்கள் அதிகமான அளவுக்கு கைத்தறி துணிகளை ஆதரித்துத்தான் வருகிறார்கள், சேலைகள் கட்டு வதன் மூலமாக. ஆனால் கல்லூரிகளிலே போய் வாரத்திற்கு ஒரு நாள் என்று கட்டாயப்படுத்துவோமேயானால், கைத்தறிக்கு ஆதரவு கிடைப்பதற்கு பதிலாக எதிர்பாராத நிலைமைகளும் உருவாகக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. கல்லூரி மாணவர் களிடத்திலே மட்டும் எதையும் கட்டாயப்படுத்துகிற நிலைமையிலே நாம் இருக்கக்கூடாது. அதற்குப் பதிலாக கைத்தறி துணிகளின் உற்பத்தி அவர்களுடைய கவனத்தை கவருகிற அளவுக்கு இருக்குமேயானால், அவர்களாகவே அந்த விரும்பி வாங்கி அணிவார்கள். ஆகவே கைத்தறி துணிகளை நெய்வது என்பதே மக்கள் விரும்புகிற அளவுக்கு இருக்க வேண்டும் என்று ஏற்னெவே சொல்லியிருக்கிறோம். ஆகவே, அந்த வகையிலே மாணவ, மாணவிகள் விரும்பி அணிகிற அளவுக்கு நல்லவிதமான முறையிலே துணிகளை நெய்வார்களேயானால் அதுதான் சிறப்பான முறையாக

[1983 ஏப்ரல் 27

இருக்கும் பிரச்சாரத்தை பொறுத்தவரையில் எவ்வளவோ வகைகளில் அதை செய்து வருகிறோம். நாட்டினுடைய நலனில் அக்கறை கொண்டுள்ள மாணவர்கள் நிச்சயமாக அதைப் பயன் படுத்துவார்கள்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னை மாநகரத்திலே கைத்தறி கண்காட்சி நடந்து வருகிறது. அந்தக் கண்காட்சியிலே தள்ளுபடி தொகை அறிவிக்கப்பட்டது போதாத காரணத்தால் விற்பனை அவ்வளவாக இல்லை என்று சொல்லப்படுவது உண்மையா? கோவாப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலே வழங்கப்படக்கூடிய தள்ளுபடி விற்பனைச் சலுகையை தமிழகத்தில் இருக்கிற அத்தனை கைத்தறி சங்கங்களுக்கும் வழங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அது பற்றிய முடிவு விரைவிலே எடுக்கப்பட்டு அறிவிக்கப்படும்.

### வேடசந்தூர் தாலுகாவிலுள்ள ஊராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்ட வானொலிப் பெட்டிகள்

*வினா எண். 885 திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தாலுகாவிலுள்ள வேடசந்தூர், குசிலியம்பாறை, வடமதுரை ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள எத்தனை ஊராட்சி மன்றங்களுக்கு வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டன?

(ஆ) அவைகளில் பழுதடைந்து செயலற்று இருக்கும் வானொலிப் பெட்டிகள் எத்தனை?

(இ) அவைகள் தற்பொழுது யாருடைய பொறுப்பில் உள்ளன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) வேடசந்தூர் வட்டாரத்திலுள்ள வேடசந்தூர், குசிலியம்பாறை, வடமதுரை, ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 59 ஊராட்சி மற்றும் பேரூராட்சி மன்றங்களுக்கு 390 வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன

(ஆ) 134 (28-2-83 அன்றைய நிலவரப்படி).

(இ) அவை வேடசந்தூர் வானொலி மேற்பார்வையாளரின் பராமரிப்பில் உள்ளன.



1983 ஏப்ரல் 27]

### ஓமலூர் நகரப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம்.

*வினா எண். 886—திரு. செ. செம்மலை; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஓமலூர் நகரப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:
(அ) மற்றும் (ஆ) இது பற்றிய செயற்குறிப்பு அரசுக்கு வந்து சேர்ந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் நகரம் தாலுக்கா மையமாக இருந்தபோதிலும் அங்கே பேருந்து நிலைய வசதி இல்லாத குறைபாடு இருக்கிறது. ஓமலூர் பேரூட்சியைப் பொறுத்தவரையில் அங்கே நிதி பற்றாக்குறை காரணமாக, தன்னுடைய சொந்த நிதியிலிருந்து அந்தப் பேருந்து நிலையத்தை விரிவு படுத்த முடியாத நிலை இருக்கிறது ஐ.யு.டி.பி. ஸ்கீமிலே எல்லாம் கடன் கேட்டு பார்த்து மனு விண்ணப்பித்திருக்கிறார்கள். எனவே அந்தக் கடன் மனு மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, அங்கே பேருந்து நிலையத்தை அமைப்பதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சியினுடைய தீர்மானம் அரசுக்கு வந்து சேரவில்லை. வந்து சேர்ந்த உடன் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் பேருந்து நிலையம் கட்டுவதற்குரிய வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.

### கீரனூரில் பாதாள அறையை சுத்தம் செய்யும்பொழுது இறந்துபோன நகரசுத்தி தொழிலாளர்கள்.

*வினா எண். 887 திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூரில் உள்ள மூன்று நகர சுத்தி தொழிலாளர்கள் கீரனூரில் உள்ள பள்ளி வாசலுக்குச் சொந்தமான கழிப்பிடத்தில் பாதாள அறையை சுத்தம் செய்யும்போது இறந்து போனது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அவர்களது குடும்பத்திற்கு அரசு ஏதேனும் நிதி உதவி செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## கீழ்ப்பவானிப் பாசன திட்டப் பகுதியிலுள்ள கிணறுகள்

*வினா எண். 888—திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு நீர்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்பவானி பாசனத்திட்டப் பகுதியில் உள்ள கிணறுகளில் 10 குதிரை சக்திக்கு மேல் மின் இணைப்பு வழங்கப் படமாட்டாது என்ற அரசு உத்தரவு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அந்த உத்தரவு எந்த ஆண்டு போடப் பட்டது?

(இ) அதைத் தளர்த்தும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) ஆம்.

(ஆ) 1967–ம் ஆண்டு உத்தரவு போடப்பட்டது.

(இ) இல்லை.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கீழ்பவானி பாசனத்திட்ட பகுதியில் உள்ள கிணறுகளில் 10 குதிரை சக்திக்கு மேல் மின் இணைப்பு வழங்கப் படமாட்டாது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். தற்போது அந்த பகுதியில் ஒரு கிணற்றில் 5, 6 பங்குதாரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மின் இணைப்பு பெறுவது என்றால் தனித்தனியாக தான் மின் இணைப்பு பெறுவதற்கு அந்த பகுதியில் உள்ளவர்கள் விரும்புகிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் அப்படி பங்குதாரர்கள் கிணறுகளுக்கு மட்டும் அந்த சலுகையை வழங்கிட அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த கீழ்பவானி ஆயக்கட்டில் அதைச் சுற்றிலும் உள்ள பகுதியில் புதிய கிணறுகள் தோண்டுவது குறித்து 1963, 1965, 1967 ஆகிய 3 கால கட்டங்களில் அரசு பல்வேறு கோரிக்கைகளை பரிசீலனைச் செய்து சில முடிவுகளை எடுத்து இருக்கிறது. அதன்படிதான் இப்போது 100 மீட்டர் தூரத்திற்குள் ஒரு 10 குதிரை சக்தி அளவுக்கு அவர்கள் மின் இணைப்பு பெற்று அந்த மின் பொறிகளை பயன்படுத்தலாம் என்று நாம் உத்திரவு போட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது போல் மேலும் சில மாற்றங்கள் செய்ய அதாவது பிரதான கால்வாயிலிருந்து 100 மீட்டர் தூரத்திற்கு மேலும் அதைப்போல் கிளைக் கால்வாயிலிருந்து 50 மீட்டர் மேலுள்ள எல்லா கிணறுகளிலும் 10 குதிரை சக்தி இருக்க வேண்டும் என்ற கருத்துரு அரசு பரிசீலனை செய்து இருக்கிறது. அப்படி வருகிறபோது கிளைக் கால்வாய், பிரதான கால்வாய் என்ற பாகுபாடு இல்லாமல் 100 மீட்டர், 50 மீட்டர் பாகுபாடு இல்லாமல் ஒரே அளவு கோலை வேண்டுமானால் பின்பற்றலாம் என்ற கருத்துருவை அரசு தற்போது பரிசீலனையில் எடுத்துக்கொண்டு இருக்கிறது.



## கிருஷ்ணகிரி அணையிலுள்ள பூங்காவினை அழகுபடுத்தும் திட்டம்.

*வினா எண். 889—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரி அணை பூங்காவினை அழகுபடுத்த மின் விளக்கு பொருத்த எவ்வளவு தொகை ஒதுக்கியுள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களால் 1,69,700/– ரூபாய்க்கான மதிப்பீடு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இச்செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆண்டியப்பனூர் என்னுமிடத்தில் புதிய அணை கட்டும் திட்டம்.

*வினா எண் 890—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆண்டியப்பனூர் என்னுமிடத்தில் புதிய அணை கட்ட பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் விரைவில் கட்டி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) & (ஆ) திட்ட அறிக்கையின் மீது நில நிர்வாக ஆணையாளரின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதி நிலத்தடி நீரை நம்பியிருக்கிற பகுதி. இந்த ஆண்டியப்பனூரில் நீண்ட காலமாக அணைக் கட்ட வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்து அதற்கு பின்னால் அந்த அணை கட்டுவதற்கு பொறியாளர்கள் பார்வையிட்டு அங்கே கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்கு பின்னால் கூட இந்த சட்டமன்றத்தில் பல முறை கேள்விகள் கேட்கப்பட்டு 1981–ம் ஆண்டு பட்ஜெட் புத்தகத்தில் இந்த அணை எடுத்துக்கொள்ளப்படும் 1985க்குள் முடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்குண்டான என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்த அணையை கட்டுவதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம் வாணியம்பாடி வட்டத்தில் ஆண்டியப்பனூர் ஓடையின் குறுக்கே ரூபாய் 323 லட்சம் செலவில் ஒரு நீர் தேக்கம் அமைப்பதற்கான திட்ட அறிக்கைகள், மதிப்பீடுகள் எல்லாம் பாசனத்துறை பொறுத்த அளவில் தயார் செய்யப்பட்டு இப்போது அரசுக்கு அது வந்து விட்டது. இந்த திட்டம் பற்றிய நில நிர்வாக ஆணையாளருடைய அறிக்கை வந்த பிறகு இந்த திட்டத்தை எடுத்துக் கொள்வதற்கான வாய்ப்பு இருப்பதாகத்தான் அரசு இதுவரை கருதுகிறது. அப்படி வருகிறபோது மிகவும் பின்தங்கிய அந்த பகுதி வளம் அடைவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. எனவே திட்டத்தை விரைவில் எடுத்து செயல்படுத்துவதற்கு அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும்.

(முற்பகல் 9–50)

திரு. ப. சுந்தரம்; தலைவர் அவர்களே, நில ஆர்ஜிதம் செய்யப்படுவதற்காக பொறியாளர்கள் அமைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதை உடனடியாக அரசு செய்து இந்த ஆண்டிலேயே அதற்குண்டான வேலைகளை எல்லாம் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: திட்டத்தை எடுத்துக் கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும்.

திரு. கி. அன்பழகன்; தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதாலே எவ்வளவு ஏக்கர் பாசன வசதி பெறும் அந்த ஆண்டியப்பனூர் கால்வாய் செல்கிற பகுதிகளிலே அந்த ஏரிப்பகுதிகளின் மூலமாக பாசனம் பெறும் நிலங்களுக்கும் பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுக்க அந்தப் பகுதிகளிலேயும் பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கத் திட்டத்தினால் சுமார் 2 ஆயிரம் ஏக்கர் நிலம் இரு போக புஞ்சை சாகுபடி செய்ய பாசன வசதி கிடைக்கும் நீர்தேக்கத்தினுடைய கொள்ளளவு 112.20 மில்லியன் கன அடியாகும். அதன் காரணமாக 4349 டன் கூடுதலாக உணவு உற்பத்தி பெருகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போல் அந்தச் சில பகுதிகளிலே ஏற்கெனவே பாசன வசதி பெறக்கூடிய அந்த இடங்களையும் சேர்த்து அவர்களுக்கு பாசன வசதியை அளிக்கக்கூடிய வாய்ப்புகளையும் அரசு ஆராய்ந்து வருகிறது.



கடையகோட்டை அருகே நங்காஞ்சி ஆற்றில் அணை கட்டும் திட்டம்.

*வினா எண். 891—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் கடையகோட்டை அருகில் நங்காஞ்சி ஆற்றில் அணை கட்டும் திட்டம் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது செயல்படுத்த படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது; (அ) ஆம்.

(ஆ) இத் திட்டத்திற்கான ஆய்வு வேலை முடிந்தப்பின் பரிசீலிக்கப்படும்.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால் எவ்வளவு ஏக்கர் நிலம் பாசனம் பெறும்? இந்தத் திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது; தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால், 1116 ஏக்கர் புஞ்சை நிலங்களும், 59 ஏக்கர் நஞ்சை நிலங்களும் பயன் அடையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அதோடு தண்ணீர் பற்றாக்குறை உள்ள 429 ஏக்கர் நஞ்சை நிலங்களுக்கும் பாசன வசதி அளிக்க வாய்ப்பு இருக்கிறது. இதைத் தவிர மற்ற விவரங்களை தனிக் கேள்வி போட்டால் பதில் தெரிவிக்க முடியும்.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை தனிப்பட்ட சிலரின் நிலங்கள் பாதிக்கப்படுகிறது என்ற காரணத்தினால் நிறுத்தி வைப்பதற்கான முயற்சி ஏதாவது நடைபெறுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் பழனி தாலுகா இடையகோட்டை அருகில் நங்காஞ்சி ஆறு நீர்த்தேக்கத் திட்டம் என்பது மிகவும் பின் தங்கிய வறண்ட ஒரு பகுதிக்கு நாம் நன்மை செய்ய வேண்டு மென்ற அடிப்படையிலே எடுத்துக்கொண்டிருக்கிற ஒரு திட்டம். அதை நிறுத்தி வைக்கக்கூடிய முயற்சி எதுவும் நடக்கவில்லை. மாறாக சிலருடைய நிலங்கள் பாதிக்கப்படுகிறது. ஆகவே, அதனுடைய அளவை குறைக்கவேண்டுமென்று முயற்சிப்பதாக அரசுக்குத் தகவல் வந்து அப்படியெல்லாம் ஒருசிலருடைய நிலம் பாதிக்கப்படுகிறது என்ற காரணத்திற்காக நூற்றுக்கணக்கான ஏழை விவசாயிகள் பயன்பெறக்கூடிய அளவைக் குறைத்துவிடக்கூடாது என்ற கருத்தை அரசு வலியுறுத்தியிருக்கிறது. எனவே அந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகளை அரசு மேற்கொள்ளும்.

[1983 ஏப்ரல் 27

திரு. கே. குப்புசாமி; தலைவர் அவர்களே, தற்போது பொறியாளர்களால் தயாரிக்கப்பட்டிருக்கிற இந்தத் திட்டத்தின்கீழ் இந்த அணையில் 30 அடி தண்ணீர் தேங்குகிற அளவிலே தயாரிக்கப்பட்டிருக்கிறது. அங்கே வேறு பாசன வசதிகள் இல்லாத காரணத்தினால் அதை 60 அடி என்று உயர்த்தி இடையகோட்ட, அரவக்குறிச்சி போன்ற வடமேற்குப் பகுதிகளிலே உள்ள புஞ்சை நிலங்களுக்கு கிணறுகளிலாவது தண்ணீர் கிடைக்கும் என்ற அளவுக்கு அந்த அணையை இப்போது திட்டமிட்டிருக்கிற அளவை உயர்த்திக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, இப்போது ஆய்வு நிலையில் இருக்கக்கூடிய சூழ்நிலையில் பொதுவான கருத்துக்களைத்தான் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல் நிச்சயமாக ஒருசில ஏக்கர் அதுவும் ஒருசில நபர்களுடைய நன்மையைக் கருதி பாதிக்கப்படுகிறது என்பதற்காக திட்டத்தினுடைய அளவைக் குறைக்கவோ அணையின் உயரத்தைக் குறைக்கவோ யார் முயற்சித்தாலும் அரசு அதை ஏற்றுக் கொள்ளாது, அதிக அளவில் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு அந்தத் திட்டத்தை விரிவாக்கம் செய்து பெரிய திட்டமாக செயல்படுத்துவதற்கு அரசு விரும்புகிறது. அந்த நடவடிக்கைகளை அரசு உறுதியாக மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறி துறை போன்று கதர் துறைக்கும் எல்லா சலுகைகளும் அளிக்கும் திட்டம்.

*வினா எண். 892—திரு. பெ. சு. திருவேங்கடம்; மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி துறை போன்ற கதர் துறைக்கும் எல்லா சலுகைகளும் அளிக்கக் கோரி கிராம கைத்தொழில் கமிஷன் வேண்டுகோள் விடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்; (அ) ஆம்.

(ஆ) கைத்தறி நெசவாளருக்கு அளிக்கப்படும் வீட்டுவசதி தொழில் நுட்பப் பயிற்சி உதவி சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம் போன்ற சலுகைகள் பெரும்பாலும் கதர் நெசவாளர்களுக்கும் அளிக்கப்படுகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி தொழிலுக்கு வடிவமைப்பு நிலையம் இருப்பதைப்போல, கதர் தொழிலுக்கும் வடிவமைப்பு நிலையம் ஆரம்பிக்கும் செயல்குறிப்பு அரசிற்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.



1983 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ரகத் துணிகளை வெளியிட வேண்டுமென்ற எண்ணம் வாரியத்திற்கு இருக்கிறது. கதர் பட்டுக்கும், கதர் துணிகளுக்கும் வரவேற்பு இருந்தாலும் புது ரகத் துணிகளை அறிமுகப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டு புதிய வடிவமைப்பு நிலையம் டிசைனிங் சென்டர் ஆரம்பிப்பதற்கான முயற்சியை வாரியம் எடுத்து வருகிறது. இது பட்டுத் துணிக்கு மட்டுமல்ல, கதர் துணிக்கும் புதிய ரக சேலைகளை அறிமுகப்படுத்துவதற்கான முயற்சியை எடுத்து வருகிறது. சமீபத்தில் கதர் துறையில் தயாரிக்கிற சேலையில் ஜெய்ப்பூரிலே பிரிண்ட் செய்து வெளியிட விருக்கிறது. அதற்கு மீனாட்சி என்று பெயர் வைத்து கவர்ச்சிகரமாக 60 ரூபாய் விலையிலே வெளியிடவிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) கிருஷ்ணாநதி நீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டிய தமிழக முதல்வருக்கு வாழ்த்துக்கள்.

திரு. மி. வின்சென்ட்; பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு நிரந்தரமாக குடி தண்ணீர் பஞ்சத்தைப் போக்க கிருஷ்ணா ஆற்றில் ஸ்ரீசைலம் அணையிலிருந்து 250 மைல் நீளம் கால்வாய் வெட்டும் பணியை தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆந்திர மாநிலம் கடப்பா மாவட்டத்தில் பிரம்மகிரிமடம் என்ற இடத்திலே ஒரு அணைக் கட்டிற்கு அடிக்கல் நாட்டிக் கொண்டிருப்பது கண்ணெதிரே கலகலவென்று தெரிகிறது. இந்திய பிரதமரும், இந்திய ஜனாதிபதியும் வாழ்த்து கூறி விட்டனர். தமிழகத்திற்கு இந்தத் திட்டம் கொண்டு வந்த தானைத் தலைவர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். (மேசைத் தட்டும் ஒலி).

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, இதெல்லாம் பாயிண்ட் ஆப் ஆர்டரில் வருமா....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறார்கள்.

3. தகவல் கோரல்.

(அ) பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏட்டிற்கு திருத்தம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொரணம் அவர்களும் நாங்களும் சேர்ந்து மூன்று பேர்கள் 5-4-82 அன்று நோட்டிபிகேஷன் நம்பர் 8 இஷ்யூட் இன் ஜி.ஓ.எம்.எஸ். நம்பர் 723 லேபர் அண்டு எம்ப்ளாய்மென்ட் டிபார்ட்மென்ட், 7–4–82க்கு ஒரு அமென்ட்மென்ட் மூவ் பண்ணியிருந்தோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழுவிலே அதற்கு நேரம் ஒதுக்கப்படவில்லை.

(ஆ) கரும்புக்கு கூடுதலாக அறிவிக்கப்பெற்ற தொகை விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்தல்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற மாதம் கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகள் கோரிக்கை வைத்து வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கரும்பு உற்பத்தியாளர்களுக்கு 20 ரூபாய் கூடுதலாக கொடுப்பதாக அறிவித்தார்கள். கூடுதலாக அறிவிக்கப்பட்டது குறித்த உத்தரவு கரும்பு ஆலைகளுக்கு அரசாங்கம் அனுப்பாததால், விவசாயிகளுக்கு அதிகப்படியான தொகை கிடைக்காமலிருக்கிறது. எனவே அந்த உத்தரவு கரும்பு ஆலைகளுக்கு விரைவில் அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் அவையில் இல்லை.

(இ) பீடித் தொழிலாளர்கள் பிரச்சினை.

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு தலைவர் அவர்களே, மூன்று லட்சம் பீடித் தொழிலாளிகள் பாதிக்கப்படக்கூடிய பிரச்னையைப்பற்றி என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்களும் மற்றவர்களும் கவனஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தார்கள். பஞ்சப்படி விஷயத்திலே சரியாக வரையறுக்கப்படாததால் பெரிய குழப்பம் அங்கே நிலவுகிறது. இதனால் மூன்று லட்சம் பீடித் தொழிலாளிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு ஒரு டைரக்ஷன் கொடுத்து அவர்களின் பிரச்னையைத் தீர்த்து வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்குத்



தான் சட்டசபையின் கடைசி நாள் என்பதால் அவர்களின் பிரச்னையைப்பற்றி அரசாங்க தரப்பில் ஒரு வாக்குறுதி கொடுக்கும்படிச் செய்தால் நலமாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபற்றி பூங்காவனம் அவர்கள் நேற்றே கேட்டார்கள். நேற்றே அவருக்கு இதுபற்றி சொன்னேன். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கவனத்தில் இநதப் பிரச்சினை இருக்கிறதென்று கருதுகிறேன். பேச்சு வார்த்தைகள் மூலமாக நல்ல முடிவாக காண்பார்கள் என்று நம்புகிறேன்.

(ஈ) மங்களதேவி கோவிலில் தமிழர்கள் வழிபாடு செய்ய வசதி செய்து கொடுத்தல்

திரு. ஆர். டி. கோபாலன்; தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு சொந்தமான மங்களதேவி கோவிலிலே நடைபெறவிருக்கும் சித்திரா பௌர்ணமி திருவிழாவில் தமிழ்நாட்டு மக்கள் பீதியில்லாமல் வழிபாடு செய்ய மாண்புமிகு உள்துறை அமைச்சர் சேத்தி அவர்கள் சொல்லியிருந்தும், கேரளா அரசு பல கடுமையான கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி அவர்கள் பீதியடையும்படியும் ஒரு சூழ்நிலையை எற்படுத்தியிருப்பதால் தமிழக அரசு, மத்திய அரசுடனும், கேரள அரசுடனும் தொடர்பு கொண்டு அவர்களின் அச்சத்தை போக்க எற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றைய தினம் இந்த மன்றத்திலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசி பதிலளித்தார்கள். உங்களுடைய கருத்தை அரசாங்கம் கவனிக்குமென்று நம்புகிறேன்.

(முற்பகல் 10-00)

திரு. கோவைத்தம்பி; மாண்புமிகு * பேரவைத் * தலைவர் * அவர்களே *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுமாதிரி பிரச்னைகளைக் கிளப்பாதீர்கள், நல்லதல்ல. அது அவைக் குறிப்பில் கூட ஏற வேண்டாம்.

உ. திண்டுக்கல்லில் நிலவும் குடிதண்ணீர் பிரச்சினை

திரு. என். வரதராஜன்; பேரவைத் தலைவர் அவர்களே, நான் 54வது விதியின்படி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். நீங்களே திண்டுகல்லுக்கு நேரடியாக வந்து தண்ணீர் பற்றாக்குறையைப்பார்த்தீர்கள், 10 நாட்களுக்கு ஒருமுறை கூட தண்ணீர் கிடைக்கவில்லை. இந்தச் சட்டசபைக் கூட்டம் முடிந்தவுடன் விதி 54-ன் கீழ் கொடுத்ததையும் முடிந்ததாகக் கருதாமல் அதன்மீது நடவடிக்கை எடுத்து கவனிக்க வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1983 ஏப்ரல் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திண்டுக்கல் தண்ணீர் பிரச்னையை பொறுத்தவரைக்கும் இந்த மாமன்றத்தில் நிறைய பேசப்பட்டு இருக்கிறது. மேதகு ஆளுநர் அவர்களும் பேசியிருக்கிறார்கள். ஆகவே தகுந்த பரிகாரம் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன்.

(ஊ) நிலக்கோட்டைத் தொகுதியில் காலரா பரவி வருவதான செய்தி.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் இரண்டு மூன்று கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்தேன். அவை வரவில்லை. வராவிட்டாலும் பரவாயில்லை. அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ஆனால், நேற்றையதினம் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் தலைவரிடம் கொடுத்திருந்தேன். என்னுடைய மதுரை மாவட்டம் நிலக்கோட்டை தொகுதி அம்மாத்தூரில் ஒரே நாளில் 30, 40 பேர்களுக்குக் காலரா கண்டு, அதிலே 10 பேர்கள் இறந்து விட்டார்கள் என்று நேற்றையதினம் எனக்குத் தகவல் வந்திருக்கிறது. என்னுடைய ஊருக்கு 4—வது மைலில் இருக்கிறது. 10 பேர்களுக்கு மேல் இறந்துவிட்டதாக தகவல் வந்திருக்கிறது. ஆனால், மருத்துவமனையிலே நல்லமுறையிலே கவனித்திருக்கிறார்கள். இருந்தாலும் அதனைத் தடுக்கக் கூடிய அளவிலே உடனடியாக நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டு முடிக்கின்றேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஒன்றும் சரியான செய்தி அல்ல. 4, 5 பேர்கள் வாந்தி பேதியாலே அவதிப்பட்டார்கள், உடனடியாக சிகிச்சை செய்யப்பட்டது. மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். யாரும் இறந்து போகவில்லை. ஆகவே, ஒரு பீதியை உண்டாக்கத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்புகளைப் பொறுத்த வரைக்கும் எல்லா கவன ஈர்ப்புகளும் அரசுத் துறைக்கு அனுப்பப்படுகின்றன. அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள். (குறுக்கீடு) எல்லாமே போயிருக்கிறது. ஆகவே, கவன ஈர்ப்புத் தீர்மானம் அனுப்பியவர்கள் எங்களுக்கு வரவில்லையே, ஆகவே, என்ன ஆகுமோ என்ற அச்சமோ, ஆயாசமோ படத் தேவையில்லை,

(எ) தேன் உற்பத்தியாளர் நிலைமை

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்திலே, குறிப்பாக, குமரி மாவட்டத்திலே தேன் விலை வீழ்ச்சியின் காரணமாகத் தேன் உற்பத்தியாளர்கள் மத்தியிலே ஒரு........



1983 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஒரு கவன ஈர்ப்பிலே இதைப் பற்றி பேசிவிட்டீர்கள். திருப்பி, திருப்பி இதையே சொல்லிக்கொண்டிருக்க வேண்டாம்.

(ஏ) அம்பாசமுத்திரம் முன்சீப் கோர்ட்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 100 ஆண்டுகளாக நடைபெற்று வரும் அம்பாசமுத்திரம் முனிசீப் கோர்ட் படிப்படியாக, மூடப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதை ஆட்சேபித்து வழக்கறிஞர்கள் பகிஷ்கரித்து இருக்கிறார்கள். ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது இதுவரைக்கும் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது.

(ஐ) தொலைக்காட்சி மூலம் இந்தி திணிக்கப்படுவதற்கான புகார்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே இருக்கக்கூடிய டெலிவிஷனில் கடந்த ஞாயிற்றுக் கிழமை முழுமையாக தமிழிலே நிகழ்ச்சிகளே இல்லை. 17 நிமிடம் மட்டும் செய்திகள் மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. 6.30 மணிக்குச் சொல்லக்கூடிய செய்திச் சுருக்கம் கூட அன்றையதினம் 7.30 மணிக்குத் தள்ளிச் சொல்லப்பட்டிருக்கிறது. நாம் இந்தி எதிர்ப்பைப் பற்றி இவ்வளவு தூரம் சொல்லிக் கொண்டிருக்கும்போது, வழக்கு மன்றத்திலே இருக்கிற பொழுதுகூட, கடந்த ஞாயிற்றுக்கிழமை 6.30 மணிக்குச் சொல்ல வேண்டிய தமிழ்ச் செய்தியை ஒத்தி வைத்து 7.30 மணிக்கு 2 நிமிடம் சொல்லி அதற்குப் பிறகு 8.30 மணிக்குச் சொல்லியிருக்கிறார்கள். தொடர்ந்து அது நடந்து கொண்டேயிருக்கிற காரணத்தால், இந்த இந்தித் திணிப்பைப் பற்றி அரசாங்கம் தனியாக அக்கறை செலுத்தி தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(ஒ) பழனியில் நிலவும் குடிதண்ணீர் பிரச்சினை.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே இன்றையதினம் பழனிக்கு தண்ணீர் சப்ளை செய்யக்கூடிய கொடைக்கானல் லேக்கிலிருந்து தண்ணீர் எடுத்து விட வேண்டுமென்று சொல்லி. அமைச்சரிடம் நானும் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற உறுப்பினரும் கையெழுத்து வாங்கித் தங்களிடம் கொடுத்தோம். ஆனால், இதுவரையில் தண்ணீர் எடுக்கவிடவில்லை. 5.6 தினங்களுக்கு ஒருமுறை அங்கே தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது. ஆகவே, அது பழனியிலே மிகுந்த பதட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இன்றையதினம் இதுபற்றி பேசுவதற்கு அனுமதித்துவிட்டு... ... ... ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுவதற்கு அனுமதிப்பதென்ன? பேசியாயிற்று.

(ஓ) மின்வாரியப் பொறியாளர்கள் மாற்றம்.

**திரு. என். வி. என். சோமு:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மின்சாரத் துறையில் ஆயிரக்கணக்கான இன்ஜினீயர்கள் டிரான்ஸ்பர் செய்யப்படுகின்றார்கள் என்று கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்தேன். மாண்புமிகு அமைச்சர் கூட இங்கே இருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை அனுமதிக்கவே இல்லை. நிர்வாகத்திலே இருப்பதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தால் காலம் எப்படி போதும்?

(ஔ) அரவங்காடு வெடிமருந்து தொழிற்சாலை ஊழியர்கள் போராட்டம்.

**திரு. மு. அரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவங்காட்டிலே வெடி மருந்து தொழிற்சாலை தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருப்பது பற்றியும், அதே போல் குன்னூர் முன்சீப் கோர்ட்டுக்கு ஊழியர்களை நியமிக்காதது பற்றியும் நான் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லா ஒத்திவைப்புத் தீர்மானங்களும் அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன.

(க) விவசாயத் தொழிலாளர்களுக்கு கைத்தறியாடை வழங்குவது.

**திரு. இரெ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தேங்கியிருக்கக்கூடிய கைத்தறித் துணிகளை அரசே கொள்முதல் செய்து 60 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்று இந்த அவையில் அறிவிக்கப்பட்டது. ஆனால், அமைச்சர்கள் வழங்கியதைத் தவிர, வேறு எங்குமே வழங்கியதாகத் தெரியவில்லையே, அப்படி அவையில் அறிவித்தவாறு, கைத்தறி துணிகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழங்கிக் கொண்டு தானிருக்கிறார்கள். என் தொகுதியில் பூராவும் வழங்கி விட்டார்கள்.

(ங) கண்ணகிகோயில் சிலை கல்வெட்டு.

**திரு. கோ. விஸ்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நாம் அனைவருமே கண்ணகிக் கோயிலைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். அந்தக்





கோயிலிலே இருக்கிற சிலையைப் பற்றி கல்வெட்டு தமிழறிஞர் திரு. கோவிந்தராஜனார் என்பவர் 20 ஆண்டுகளுக்கு முன்பு 3 ஆண்டுகளாக முயற்சி எடுத்து......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுதுதானே கண்ணகி கோயிலைப் பற்றி திரு. கோபால் கேட்டார். அப்பொழுது நீங்கள் இல்லையென்று நினைக்கிறேன்.

(ச) அமராவதி ஆற்றுக் கால்வாய் பாசனம்

**திரு. ஆ. வெள்ளைச்சாமி** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமராவதி ஆற்றில் மாற்றுக்கோம் அருகிலே விவசாயத்திற்காக விடுகின்ற தண்ணீரை அங்கேயிருக்கிற கால்வாயின் வழியாக எடுத்துக்கொள்வது பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அது இதுவரையில் வரவில்லை. அது குறித்து அரசு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(ஞ) பட்டு சேலைகள் விற்பனையாகாது தேங்கியுள்ள நிலை

**திரு. ப. வெங்கட சுப்பிரமணியம்** மாண்புமிகு தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான காஞ்சிபுரம் நகரிலே இருக்கிற அனைத்து பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களும் லட்சக்கணக்கான வரி மதிப்புள்ள பட்டுச் சேலைகள் தேங்கி இருப்பதைப் பற்றி அரசு வறட்சி நிவாரண நடவடிக்கையாக அவைகளை வாங்கிக்கொள்ள வேண்டுமென்று ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பட்டுச் சேலைகளைப்பற்றி சென்ற வாரம் நீங்கள் பேசியிருக்கிறீர்கள். திரும்பத் திரும்ப அதையே பேசினால் எப்படி? கவன ஈர்ப்பு எல்லாம் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

(ட) தேவிகுளம் பீர்மேடு பகுதி தமிழகத்தோடு இணைக்கப்படுவது

**திரு. வே. இரா. ஜெயராமன்** மாண்புமிகு தலைவர் அவர்களே. தேவிகுளம் பீர்மேடு பகுதியை தமிழகத்தோடு இணைக்க வேண்டுமென்று கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவன ஈர்ப்புகளை அரசுக்கு அனுப்பியிருக்கிறேன் என்று ஏற்கனவே சொன்னேன்

நாம் இங்கே மற்றவர்கள் எடுத்துச் சொன்ன காரணத்தினாலும் அந்தப் பொருட்களிலே மண்ணெண்ணெய்க்கு விலக்கு அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சர்க்கரை என்ற தலைப்பின் கீழ் சர்க்கரை மிட்டாய், கன்பக்ஷனரிஸ் போன்றவற்றிற்கு மட்டும் விலக்கு அளிக்கப்படுகிறது. மின்சாரப் பொருள்கள் என்ற தலைப்பின் கீழ் பல்புகள், குழாய் விளக்குகள் வயர்கள் ஹோல்டர்கள் பிளக்குகள், சுவிட்சுகள் போன்ற வீடுகளுக்கு எல்லாம் பயன்படுகிற அளவுக்கு இருக்கிற சிறு சிறு பொருட்களுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது. அதனுடைய முழு விவரமும் பின்னாலே அறிவிக்கப்படும். மருந்து பொருட்களும் மருந்து வகைகளும் என்ற தலைப்பின்கீழ் சித்த மருந்துகள், யுனானி மருந்துகள் ஆயுர்வேத மருந்துகள் அரிஷ்டம் அசவம் சம் உட்பட நுழைவு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. துணி வகைகள் என்ற தலைப்பின்கீழ் கைத்தறித் துணிகள், கைத்தறிப் பட்டுத் துணி வகைகள் கதர் வகைகள் ஆகியவற்றிற்கு விலக்கு அளிக்கப்படுகிறது. அதை நடைமுறைப்படுத்தும் விதம் பின்னர் அறிவிக்கப்படும். நுழைவு வரியைப் பொறுத்த வரையில் பல பேர்களும் ஐயப்பாடுகளை வியாபாரிகளும் மற்றவர்களும் கிளப்பி இருக்கிறார்கள். இந்த நுழைவு வரி 16 நகராட்சி மன்றங்களிலே நுழையும் போது போடுகிற போது பல முறைகள் ஒவ்வொரு இடத்திலேயும் 2 சதவிகிதம் என்று போட்டு மல்டிபாயிண்ட் வரியாகி 8 சதவீதம் 9 சதவீதம் ஆகிவிடுமோ என்று சொல்கிறார்கள் ஆகவே திட்டவட்டமாக தெளிவாக ஐயப்பாடுகளைப் போக்க விரும்புகிறேன் இந்த நுழைவு வரி 2 என்பது ஏதேனும் ஒரு கட்டத்தில் மட்டும் ஒரு இடத்தில் மட்டும் போடப்படும் அதற்கான விதிமுறைகளும் மற்றவைகளும் வகுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எவ்வளவு குறைந்தாலும் தாங்க வேண்டும் இன்னமும் சொல்கிறேன் வியாபாரிகளும் மற்றவர்களும் முக்கியமான சிலவற்றை இன்றியமையாப் பொருட்கள் என்று கருதி ஏழை எளியவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சான்றோருடன் கூட பேச்சுவார்த்தை நடத்தி சிலபல நன்மைகளைச் சிந்திப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவைகள் பேரவையின் உறுதிமொழிகளானாலும் அரசின் நிதிக் கொள்கை அறிவிப்புகள் ஆகும். மேலும் இவ்வறிவிப்புகள் வரிவிதிப்புக் கொள்கைகள் பற்றியதாகும். கொள்கைகள் அவையில் வெளியிட்டபின் அரசு மசோதாக்கள் அல்லது சட்டமுன்வடிவுகள் அறிவித்த கொள்கைகளுக்கேற்பத்தான் அமைய வேண்டும். கொள்கைகளில் ஏதேனும் மாற்றம் இருந்தால் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்வதற்கு முன் பேரவைக்கு அறிவித்து மாற்றம் செய்வதே நல்ல பாராளுமன்ற முறையாகும்.





உறுப்பினர் விழிப்புணர்ச்சியை பாராட்டலாம், நேற்று இது குறித்து உறுப்பினர் எழுப்ப முயன்றபோது பேரவை முன்னவர்தான் அவையில் கூறிய எல்லா கொள்கை அறிவிப்பின் அடிப்படையில் அரசு திருத்தங்கள் கொண்டு வரப்படும் என்று கூறியதும் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

அரசு கொள்கையை எப்பொழுது வேண்டுமானாலும் மாற்றிக்கொள்ள உரிமை உண்டு. இதில் அவை மீறல் ஒன்றுமில்லை. ஏனென்றால் சட்டமுன்வடிவு பேரவையின் அனுமதியைப் பெற்றுத்தான் சட்டமாக முடியும். எனவே இதன் மீதான இறுதி முடிவு பேரவையின் கையில்தான் உள்ளது.

எனவே, இதில் எவ்வித உரிமை மீறல் பிரச்சினையும் எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

**(ஆ) திரு. எம்.கே. சீனிவாசன் மீதும் எதிரொலி நாளிதழ் மீதும்**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னை 21-4-1983 எதிரொலி நாளிதழில் சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்த அறிவிப்புகளை சட்டமன்ற செயலாளர் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கவில்லை என்று அதற்கு ஒரு உள்நோக்கத்தினையும் கற்பித்து திரு எம் கே சீனிவாசன் போலீசிற்கும், சபாநாயகருக்கும் புகார் செய்துள்ளதாக செய்தி வெளியிட்டுள்ளது எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

பேரவையில் அறிவிப்புகள் அனுமதிப்பதும், மறுப்பதும் பேரவைத் தலைவர் ஆணையின்மீது நடைபெறுகிறதேயன்றி செயலாளரின் விருப்பு வெறுப்பிற்கேற்ப அல்ல. The Secretary is the adviser to the Speaker in the matter of exercise of all the powers and functions that belong to the Speaker and to the House through the Speaker He acts under the authoriny and in the name of the Speaker but does not act under delegated authority மேலும் இந்த அறிவிப்புகள் எல்லாம் நேரடியாக என்னால் ஆணைகள் இடப்பட்டவை.

உறுப்பினர்களுக்குள்ள உரிமை செயலாளருக்குப் பொருந்தாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறு மட்டுமல்ல அது ஒரு உள்நோக்குடன் அவர்கள் தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்வதற்கு இடையூறாக அமைகின்றது. உறுப்பினர்களுக்குள்ள எல்லா உரிமைகளும் செயலாளருக்கு மட்டுமன்றி பேரவையில் பணிபுரியும் ஒவ்வொரு அலுவலருக்கும் பேரவையின் பணியிலோ கடமையிலோ ஈடுபட்டிருக்கும் பொழுது முழுமையாகப் பொருந்தும் அவ்வாறில்லை விடில் இந்த அவையின் பணிகள் செவ்வனே நடைபெறாது என்பதுதான் அடிப்படை. அதே அடிப்படையில் தான் பேரவைச் செயலகத்தை பற்றி பேரவையில் விவாதிக்கக் கூடாது என்ற மரபு கையாளப் படுகிறது.

நேர்முகமாகயின்றிமறைமுகமாக அவர்களது பணி இடையூறு செய்யப்பட்டாலும் அவை நடவடிக்கை எடுக்கும்.

Maay Parlimentary Practic 155வது பக்கத்தில் பின்வருமாறு உள்ளது.

**Both** House will treat as breaches of their Privillege, not onlyacts **ditectly tending** to obst**ruct** their officers in excution of their duty **but also** any conduct which may tend to deter them from doing **their** duty,

இந்த வெளியீட்டிற்குக் காரணமான திரு. சீனிவாசனும் இதை வெளியிட்ட நாளிதழ் எதிரொலியும் இப்பிரச்சினைக்கு பொறுப்பாவார்கள். எனவே இவர்கள் மீதுள்ள பிரச்னையை ஆய்ந்து அறிக்கையை பேரவைக்கு அனுப்பி வைப்பதற்காக பேரவை விதி 255ன் கீழ் உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்.

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே எதிரொலி பத்திரிகையின் மீதும், மற்றவை மீதும் கொடுக்கப்பெற்ற உரிமைப் பிரச்சினையை எடுத்துக் கொண்டீர்கள். ஆனால் நான் 'அண்ணா' பத்திரிகையின்மீது கொடுத்த உரிமைப் பிரச்சினையை ஏன் எடுத்துக் கொள்ளவில்லை,

மாண்புமிகு பேரவைத் தலைவர் தாங்கள் உரிமைப் பிரச்சினையாகக் கொடுக்கவில்லை. (குறுக்கீடு) அது என்னவென்று பார்க்கிறேன்

5. அறிவிப்புகள்

(அ) அரசினர் சட்ட முன்வடிவுகள் (மே. செ)

மாண்புமிகு பேரவைத் தலைவர் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்யப்பெற்று பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப்பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1983. ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை ட்ட முன்வடிவு எண். 30 1983)
2. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 2/1983)
3. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கைவரிஇரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 6/1983)
4. தமிழ்நாடு 1983—ஆம் ஆண்டு விளம்பர வரிச்சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண், 28/1983)



6. கவன ஈர்ப்புகள்

(அ) காவேரிப்பட்டணம் மேல்நிலைப் பள்ளியைப் பழுதுபார்த்தல்

டாக்டர் கே. சமரசம் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திலுல்ள காவேரிப்பட்டணம் அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் பெண்கள் உயர்நிலைபள்ளிக் கட்டிடம் பழுதடைந்த நிலையில் உள்ளது குறித்து அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் தலைவரவர்களே, தருமபுரி மாவட்டம், காவேரிப்பட்டணம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியும், அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளியும் ஒரே கட்டத்தில் நடைபெற்று வருகின்றன. ஆண்கள் மேல் நிலைப்பள்ளியில் 1974 மாணவர்கள் 42 பிரிவுகளில் படித்து வருகிறார்கள். பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் 920மாணவிகள் 19 பிரிவுகளில் படித்து வருகிறார்கள். ஆண்கள் மேல் நிலைப்பள்ளிக்குச் சொந்தமான 9 வகுப்பறைகள் கொண்ட ஒரு கட்டடத்திற்கு பூச்சு வேலை செய்ய வேண்டியுள்ளது என்றும், கற்காரைதளம் அமைத்த மூன்று வகுப்பறைகள் கொண்டகட்டடம் ஒன்றுசிறிது ஒழுகுவதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை பழுது பார்க்க பொதுப்பணித்துறையினர் மூலம் தகுந்தநடவடிக்கை எடுக்கப்படும் என்று பள்ளி கல்வி இயக்குநர் அறிவித்துள்ளார். இதுவன்றி பள்ளிக்கூடம் நடத்த முடியாமல் கட்டடம் பழுதடைந்து இடிந்து விழுந்து விடும் நிலையில் இருப்பதாகவோ ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகளிடையே கவலை நிலவும் நிலை உள்ளதாகவோ தகவல் ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள நிலை இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 10-20)

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே அறிக்கை கொடுக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் உண்மையிலே நான் சென்றபோது கூட ஒரு பாம்பு மேல் ஓட்டிலிருந்து கீழே விழுந்து அங்கேயிருந்த ஆசிரியர்கள் குழந்தைகள் எல்லாம் வெளியிலே வந்துவிடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. அங்கே ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்திலேயிருந்துதான் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு கொஞ்சம் கட்டிடம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. அந்த இடத்திலே முழுமையாகவே மேலே இருக்கின்ற ஓடுகள் சிதைந்தும், கூரைகள் எல்லாம் தகர்ந்தும்

(ண) திருவில்லிப்புத்தூரில் தொடர்ந்து மின்வாரிய அலுவலகம் இயங்கச் செய்வது

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே? ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் இதுவரையில் இயங்கிக் கொண்டிருந்த மின்துறை அலுவலகமும் ஆதிதிராவிட நல அலுவலகமும் வேறு ஊருக்கு மாற்றப் போவதாக ஸ்ரீவில்லிப் புத்தூரிலிருந்து இரவு 2 மணிக்கு ஒரு தந்தி வந்தது. இதனால், அந்தப் பகுதியில் ஒரு பெரும்பதட்ட நிலையிருக் கிறது. அங்கேயுள்ள அந்த அலுவலகங்களை மாற்றாமல் அங்கே இருக்கச் செய்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

(த) சென்னை நகரில் நிலவும் குடிதண்ணீர் பிரச்சினை

திரு. சு. பாலன் மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னையிலே குடிதண்ணீர் பற்றாக்குறைஇருக்கிறது என்பது நமக்கெல்லாம்தெரியும். ஆனால், குடிநீர் வாரியம் இப் பொழுது ஒன்று விட்டு ஒருநாள் குடிநீர் சப்ளை செய்வதாலே சரியான முறையிலே மக்களுக்குக் குடிநீர் கிடைக்கவில்லை. இப் பொழுதே ரெயில் மூலம் தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. இன்னும்3 மாதங்களுக்குக் கடும் வெயிலின்காரணமாக, கடும் பற்றாக்குறை இருக்கும். கடும் பற்றாக்குறை அதிகமாகும். மக்கள் அவதிப்படுகிறார்கள். ஆகவே, இந்த 3 மாதங்களுக்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதைத் தெரிவிக்குமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது.

(ந) வடாற்காடு மாவட்டம் வறட்சிப் பகுதியாக அறிவிக்கப் பெற வேண்டுமென்ற நிலை

திரு. துரை முருகன்பேரவைத் தலைவர் அவர்களே' நான் ஏற்கனவே தந்திருக்கும் அடிப்படையிலே பேசுகிறேன். அதாவது, வறட்சி என்பது தமிழகம் முழுவதும் இருந்தாலும், அதற்காக அரசு நடவடிக்கை எடுத்தது, மத்திய அரசு உதவியிருக்கிறது என்றாலும், குறிப்பாக, வட ஆற்காடு மாவட்டம் மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், அதை வறட்சிப் பகுதி என்று அறிவிக்க வேண்டுமென்று நான் தந்திருக்கிறேன்.



(முற்பகல் 10–10)

காரணம், வறட்சிப் பகுதி என்று அறிவிக்காத காரணத்தால் பல விவசாயிகள் பல ஐப்திகளுக்குப் ஆளாக்கப்படுகிறார்கள்; பல்வேறு பிரச்னைகளுக்கு ஆளாகிறார்கள். Drought declared area என்று வந்துவிட்டால் சில சலுகைகள் அவர்களுக்குக் கிடைக்கும். எனவே இது மிகவும் முக்கியமான பிரச்சினை. எனவே, வட ஆற்காடுமாவட்டத்தை வறட்சிப் பகுதி என்று அறிவிக்கவேண்டும். என்ற அடிப்படையில் அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறதுஎன்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழகம் முழுவதும் வறட்சிப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதனால் ஏதாவது செய்வார்கள்.

3. (அ)தலைவருக்குப் பாராட்டு

திரு. சு. முத்துகிருஷ்ணன் தலைவர் அவர்களே இந்த தொடர் கூட்டத்தைதாங்கள் சிறப்பாக நடத்தி தந்துள்ளதற்கு இந்தச் சமயத்தில் நான் எங்கள் பாராட்டுகளைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நன்றி, இது போல் தலைவரைப் பாராட்டுவது இருக்கட்டும். தொல்லை இல்லாது இருந்தால் சரி

4. உரிமைப் பிரச்சினைகள்.

(அ) வருவாய்த்துறை அமைச்சர் மீது தீர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நுழைவு வரி குறித்து நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்ட விவரங்கள் மற்றும் மாண்புமிகு நிதியமைச்சர் அவையில் கொடுத்த வாக்குறுதிகள் ஆகியவற்றிற்கு முரண்பாடாக மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் புதிய மசோதாவை சமர்ப்பித்துள்ளார்கள் என்றும் அவையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளைச் செயல் இழக்க வைப்பதோ அல்லது உறுதிமொழிகளுக்கு விரோதமாகச் செயல்படுவதோ அவையை அவமதிப்பதாகும் என்றும், எனவே வருவாய்த்துறை அமைச்சரின் செயல் அவை உரிமை மீறிய செயலாகும் என்றும் குறிப்பிட்டு பேரவை விதி 246—ன் கீழ் அவை உரிமை மீறல் பிரச்சினையை அவையில் எழுப்ப எனது இசைவை கேட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு ரகுமான்கான் அவர்கள் ஒரு முன்னறிவிப்பினை கொடுத்துள்ளார்கள்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேரவையின் 14—3—1983 அன்று நிதி அறிக்கையின் விவாதத்தில் பதிலுரையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்கள்—

பட்டிருக்கின்றன. ஆகவே தயவு செய்து இவைகளை உடனடியாக பழுது பார்த்து அதைச் சீர்திருத்துவதற்கு உரிய வழிவகைகளை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்,

**மாண்புமிகு** திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஆ) **கோயம்புத்தூர்** மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை யிலுள்ள குறைபாடுகளை நீக்குவது.

**மாண்புமிகு** பேரவைத் **துணைத்** தலைவர்: திருவாளர்கள் எம். ஆறுமுகம், ஏ டி. குலசேகர் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு **மக்கள் நல்வாழ்வுத்துறை** அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு எம். ஆறுமுகம்: துணைத் **தலைவர் அவர்களே**' ''கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி **மருத்துவமனையில்**, இந்திய மருத்துவ கவுன்சில் குறிப்பிட்டுள்ள **குறைபாடுகள்** நீக்கப்பெறாததால் அக்கல்லூரியின் **அங்கீகாரம் ரத்தாகும்** அபாயம் குறித்து'' அவசரப் பொது **முக்கியத்துவம் வாய்ந்த** நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் **துறை அமைச்சரின்** கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு** டாக்டர் **எச். வி.** ஹண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மருத்துவக் கல்லூரியை இந்திய மருத்துவக் குழுவின் ஆய்வாளர்கள் ஆய்வு செய்து, ஆய்வு அறிக்கை ஒன்றை கொடுத்துள்ளார்கள். அந்த ஆய்வு அறிக்கையில் மருத்துவக் கல்லூரி மற்றும் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள சில துறைகளை ஆய்வு செய்து அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அவ்வறிக்கையில் சில குறைபாடுகளும் அவற்றை நிறைவு செய்வதற்கான யோசனை களும் கூறப்பட்டுள்ளன. குறைபாடுகளை நீக்குவதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அக்குறைகளை நீக்குவதற்கு அரசு ஆவன செய்யும்.

எனவே, கோவை மருத்துவக் கல்லூரிக்கு உள்ள அங்கீகாரம் ரத்தாகும் அபாயம் ஏதுமில்லை.

திரு. ஏ. டி. குலசேகர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய மருத்துவக்கவுன்சில் கோயம்புத்தூர் மருத்துவமனைக்கு அங்கீகாரம் தர மறுப்பதாக நாங்கள் கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். அங்கே கோவை மருத்துவ மனைக் கல்லூரி **மருத்துவ மனையிலே இருதயப் பிரிவிலே இருதய நோயாளி**



களுக்கான இ. சி. ஜி. மெசின் வேலை செய்வதில்லை. அதை யொட்டி அங்கே அறுவைச் சிகிச்சை செய்வதற்காக உள்ள தியேட்டரில் சிலிண்டர்கள் மற்றும் உள்ள தண்ணீர் வசதி, மின்சார வசதி இல்லாமல் இருப்பதால் பெரிய அறுவைச் சிகிச்சைகள் தவிர்க்கப்படுகின்றன. இதன் காரணமாகவும் அங்கே உள்ள மருத்துவமனை மிகவும் அசுத்தமான நிலையிலே இருக்கின்ற காரணத்தாலும், மேலும் போஸ்ட்-கிராஜுவேட் எம் டி.,எம்.எஸ்.,டி.ஜி.ஓ. போன்ற கோர்ஸ்கள் ஆரம்பித்த காரணத்தால், இங்கே 2ஆண்டுகாலம் கௌரவமாக பணியாற்றிய மருத்துவர்கள் எல்லாம் சரிவர அங்கே வராத காரணத்தாலும் எக்ஸ்ரே மெசின் ஆறு மாதக் காலம்பிலிம் இல்லாததினால் அங்கே எக்ஸ்ரேக்கள் எடுக்கப்படவில்லை. அவசரமாக ஆக்சிடென்ட் ஏற்பட்டு வருகின்றநோயாளிகளுக்குமட்டும்அங்கே எடுக்கிறார்கள். மற்றபடி பொதுவாக வருகின்ற நோயாளிகளுக்கு எக்ஸ்ரேக்கள் எடுப்பது இல்லை. அதேபோன்று படுக்கைகள் மிகவும் பற்றாக் குறையாக இருக்கிறது. எனவே மருத்துவமனைக்கு வருகின்ற நோயாளிகள் சாகின்ற நிலைமையில் இருந்தால்தான் அங்கே அவர்கள் அனுமதிக்கப்படுகின்ற ஒரு நிலையிருக்கிறது. எனவே இதையெல்லாம் அனுசரித்துத்தான் இந்திய மருத்துவக் கவுன்சில் அங்கீகாரத்தை ரத்து செய்வதற்கு, இருக்கிறது. எனவே இந்தக் குறைகளைப் போக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு** டாக்டர் **எச், வி. ஹண்டே**: மாண்புமிகு பேரவைத் **துணைத்** தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானம் என்பது இந்தியன் மெடிக்கல் கவுன்சில் என்ன குறைபாடுகளைச் சொல்லியிருக்கிறது. அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா என்பதை கேட்டிருந்தால் நான் தெளிவாக பதில் சொல்லி யிருப்பேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த மருத்துவ மனையில் தனியாக ஏற்படுகின்ற தொல்லைகள், சங்கடங்கள், அங்கே உள்ள சில குறைபாடுகள் எல்லாவற்றையும் ஒரு பட்டியலாகச் சொல்லி இருக்கிறார்கள். அதிலே எந்த அளவிற்கு நாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைகளாக இருக்கின்றன, ஏற்றுக்கொள்ள முடியாத குறைகளாக இருக்கின்றன என்று தெளிவாக ஒரு பெரிய பதில் சொல்லவேண்டியிருக்கிறது. ஆகவே அந்த விவரத்திற்குள் நுழையாமல் இந்தியன் மெடிக்கல் கவுன்சில் சொல்லியிருக்கின்ற கருத்து என்னவென்றால், வேறு ஏதாவது குறைகள் இருக்குமானால் பலமுறை சொல்லியிருக்கிறார்கள், நான் போய் சோதனை செய்திருக்கிறேன், பார்த்திருக்கிறேன். அங்கே நோயாளிகள் பல பேர்கள் அனுமதிக்கப்பட்டிருக் கிறார்கள். அங்கேயிருக்கும் பிரச்சினை என்னவென்று சொன்னால் சாதாரண நோய் என்று இருந்தால் கூட அனுமதிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்துவதுதான். சீரியஸ் நோய் என்று இருந்து, அவர்கள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்க வேண்டும் என்ற நிலைஇருந்து, அவர்கள் அனுமதிக்கப்படவேண்டும் என்று

சொன்னால் பிரச்னை வராது எல்லோரும் அனுமதிக்கப்பட வேண்டும் என்று கோருகிறார்கள் அதற்குப் பலபேரிடமிருந்து சிபார்சு பெற்று வருகிறார்கள். அப்படி பலர் சிபார்சு செய்கிற நேரத்தில் எல்லோரும் அனுமதிக்க வேண்டும் என்ற வற்புறுத்தலும் ஏற்படுகிறது. ஆகவே, அந்தப் பிரச்னைகளுக்குள் எல்லாம் நான் நுழையாமல் அந்த கவுன்சில் சொல்லி இருக்கிற கருத்துக்களை மட்டும் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அவர்கள் ஆப்பரேஷன் தியேட்டர் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அங்கே ஒன்று—இரண்டு ஆபரேஷ தியேட்டர் இருப்பதாக யாரும் கருதிவிடக் கூடாது. அங்கே பத்து ஆபரேஷன் தியேட்டர்கள் இருக்கின்றன. அந்த மெடிகல் கவுன்சில் சொல்லியிருப்பது—அந்த ஆபரேஷன் தியேட்டர்கள் ஏர் கன்டிஷன் செய்யப்படவில்லை. அந்த ஆபரேஷன் தியேட்டர் இரண்டு மூன்று டிப்பார்ட்மென்ட்டுகள் பங்கிட்டுக்கொள்கின்றன. E.N.T. and Opthalmology Departments are sharing the same operation theatre which has to be separated. They want a separate operation theatre for Obstcterics and gynaecology. இவைகளையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குறைபாடுகளை எல்லாம் உடனடியாக கவனித்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளச் சொல்லியிருக்கிறோம்.

இன்னொன்றையும் சொல்கிறேன். நம்முடைய இந்தியாவிலே பல்வேறு மருத்துவ மனைகள் இருக்கின்றன. கல்லூரிகளோடு இணைக்கப்பட்ட மருத்துவ மனைகள் இருக்கின்றன. அந்தப் பட்டியலைப் பார்க்கிறபோது, இது தரமான மருத்துவமனை என்ற தகுதியோடுதான் இருக்கிறது. இந்திய மருத்துவக் கவுன்சில் குறைபாடுகள் சொல்வதால் நமக்கு நல்லதுதான். அதிலே ஒன்றும் தவறு இல்லை. அவர்கள் அதை இன்ஸ்பெக்ஷன் செய்து அந்தக் குறைபாடுகளைச் சொன்னதன் மூலம் நாம் அவைகளை நிவர்த்தி செய்து அதை சீர்செய்ய முடியும். அதனால் ஒன்றும் பாதகம் இல்லை.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது இந்திய மெடிகல் கவுன்சில் அந்தக் கல்லூரியில் உள்ள சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியிருப்பதாக சொன்னார்கள். அதிலே சொல்லியிருப்பது—குறிப்பாக—ஆபரேஷன் தியேட்டர் ஏர்-கன்டிஷன் செய்யப்படவில்லை; ஒவ்வொரு துறைக்கும் தனித்தனி ஆபரேஷன் தியேட்டர் இல்லை. என்று சொல்லி இருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, அந்த மெடிகல் கவுன்சில் சுட்டிக்காட்டிய குறைபாடுகளின் அடிப்படையில், அந்த ஆபரேஷன் தியேட்டர்கள் ஏர்-கன்டிஷன் செய்யப்பட்டு விட்டனவா, ஒவ்வொரு துறைக்கும் என்று தனித்தனி ஆபரேஷன் தியேட்டர் கட்டப்பட்டு விட்டதா? இல்லையெனில் அவற்றைச் செய்வதற்கு அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்குமா? அதற்காக ஒதுக்கிய தொகை எவ்வளவு? தற்போது வேலைகள் ஏதேனும் நடைபெற்று வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நவம்பர் 1982—ல் தான் அவர்கள் பார்வையிட்டு இரண்டு மாதத்திற்குப் பிறகு அறிக்கை கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே, அதற்குப் பிறகு தான் அதற்கான மதிப்பீடுகள் தயாரித்து, அதைச் செய்ய முடியும். அவர்கள் அனுப்பிய பரிந்துரைகளின் அடிப்படையில் தக்க நடவடிக்கைகள் உடனடியாக எடுத்துக்கொள்ளப்படும் என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 7. அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) நுழைவு வரி விதிக்கும் சட்டமுன்வடிவு 1983.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு உள்ளூர்ப் பகுதிகளில் நுகர்தலுக்காக, பயன்படுத்தலுக்காக, விற்பனை செய்வதற்காக வரும் சரக்குகள் மீது நுழைவு வரி விதிக்கும் சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.34/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில், மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு உள்ளூர்ப் பகுதிகளில் நுகர்தலுக்காக, பயன்படுத்துதலுக்காக, விற்பனை செய்வதற்காக வரும் சரக்குகள் மீது நுழைவு வரி விதிக்கும் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 34/1983).... சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைக் கொண்ட ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பெற வேண்டும்."

திரு. என். சங்கரய்யா: துணைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திருத்தத்தை வழிமொழிகிறேன்.

---

*1983-ம் ஆண்டு ஏப்ரல் 21-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பற்றுள்ளது.

(முற்பகல் 10–30)

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலேஇருக்கின்றமிகப்பெரும்பாலான மக்களாலே வணிகர்களாலே, தொழில் துறையில் இருக்கின்றவர்களாலே மிகக் கடுமையாக எதிர்க்கப்பட்ட நுழைவு வரி இன்றைக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் இதற்கு முன்னாலே ஒரு வரி இந்த மாதிரி கடுமையாக மக்களாலே கண்டிக்கப்பட்டிருக்கிறதா என்று நான் எண்ணிப் பார்க்கிறேன். எனக்குத் தெரிந்த வரையில் இதைப் போன்று கண்டனத்திற்குரிய வரி இதற்கு முன்னாலே இங்கே விதிக்கப்படவில்லை. இன்றைக்குக் காலையிலே கூட செய்தி ஏடுகளில் பார்த்தேன். தமிழ்நாட்டில் இருக்கிற வணிகர்கள் எல்லாம் இந்த நுழைவு வரிக்கு ஏற்கெனவே கடைகள், தொழில் நிறுவனங்களை மூடி கண்டனம் தெரிவித்திருந்தாலும் வரும் காலத்தில் 3 நாட்களுக்கு கடைகளையும் தொழில் நிறுவனங்களையும் மூடி அதன் மூலம் மக்கள் படுகின்ற இன்னலை எடுத்துச் சொல்ல இருக்கிறார்கள்.

இந்த நுழைவு வரியைப் பொறுத்தவரையில் இந்த சட்ட மன்றத்திலே எதிர் வரிசையில் இருக்கிற அத்தனை எதிர்க் கட்சி உறுப்பினர்களும் திருத்தம் கொடுத்திருக்கிறோம்! கண்டனம் தெரிவித்திருக்கிறோம். இந்த நுழைவு வரியை தமிழ்நாட்டில் நுழையவிடக்கூடாது என்று பல்வேறு காலகட்டங்களில் சொல்லியிருக்கிறோம். தமிழகஅரசைப் பொறுத்தவரையில் இந்த வணிக வரி என்பதன் மூலம் தமிழக வருவாயில் நிரம்பக் கிடைக்கிறது. ஏறத்தாழ இந்த ஆண்டு கணக்கை எடுத்துக் கொண்டால் 750 கோடி ரூபாய்க்குமேல் வருவாய் கிடைக்கிற ''தங்க முட்டையிடுகிற பொன் வாத்தாக'' இருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

மாற்றுத் தலைவரவர்களே, நான் உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் தங்க முட்டையிடுகின்ற இந்த பொன் வாத்தை அறுத்து விடாதீர்கள், நிறைய தங்க முட்டை இருக்கும் என்று நினைத்து பொன்வாத்தை அறுத்தால் எப்படி இருக்குமோ அதைப்போன்றுதான் அரசின் எண்ணத்திற்கு மாறான பலனை இந்த வரி தோற்றுவிக்கும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அதிலும் இந்த நுழைவு வரி என்பது சில பல இனங்களை குறிப்பிட்டு, 10 அல்லது 15 இனங்களுக்குத்தான் போடப்படுகிறது என்று சொன்னாலும் கூட பல்வேறு இனங்களைப் பார்க்கும்போது, அவற்றிலே, நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான பிரிவுகள் இருப்பதை எங்களால் பார்க்க முடிகிறது. அந்தப் பிரிவுகளுக்கும் இந்த வரி பொருந்துவதாக இருக்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் பெட்ரோலியம் பொருள் என்று எடுத்துக்கொண்டால் அதிலே நூற்றுக்கணக்கான பொருள் இருக்கிறது. புகையிலை, ஜவுளி வகைகள் என்று



எடுத்துக்கொண்டால், அதிலும் நூற்றுக்கணக்கான பொருள் இருக்கிறது. ஆக மாண்புமிகு அமைச்சர் அவர்களாலே சர்க்கரை வனஸ்பதி, ஜவுளி வகைகள், சிமென்ட், பெட்ரோலியப் பொருள்கள், காகிதமும் காகித அட்டைகளும், மருந்துப் பொருள்களும், மருந்து வகைகளும், மின்சாரப் பொருள்கள், மோட்டார் வாகனங்கள், இரும்பும் எஃகும், வெட்டி எடுத்த கனிப்பொருள்கள். நிலக்கரி போன்ற பொருள்களுக்குத்தான் இந்த வரி என்று சொல்லப்பட்டாலும் அவற்றின் பிரிவுகளைப் பார்க்கும் போது ஆயிரக்கணக்கான பொருள்களுக்கு இந்த வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஏற்கெனவே பல்வேறு மாநிலங்களிலே இந்த வரி விதிக்கப் பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்வார்கள். பல்வேறு மாநிலங்களில் இது போடப்பட்டிருந்தாலும் கூட அந்தந்த உள்ளாட்சிகளுக்கு வருவாய் கிடைக்கின்ற 'அக்ட்ராய்' என்ற வகையில்தான் மற்ற மாநிலங்களில் இருக்கிறது. நம்முடைய அரசு இந்த வரியை குறிப்பாக நகராட்சி, மாநகராட்சிகளில் கணக்கிட்டு, அவை மூலம் போடுவதாக இருந்தாலும் ஏற்கெனவே இருக்கிற விலைவாசி உயர்வால் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் இன்றைக்கு வறட்சியால், பற்றாக்குறையால் மக்கள் அல்லல்படும்போது இந்த வரி அவர்கள்மீது வைக்கிற இன்னொரு சுமை என்று குறிப்பிட விரும்புகிறேன். அது மட்டும் அல்ல, இந்த வரி விதிப்பினாலே, நகர எல்லைகளில் சோதனைச் சாவடிகள் நிறுவப்பட மாட்டாது என்று அறிவிக்கப்பட்டிருந்தாலுங்கூட, நாளடைவிலே வரி வசூலை ஒழுங்குபடுத்துவதற்காக அதற்கென தனியாக சோதனைச் சாவடிகளை ஏற்படுத்தப்பட வேண்டிய கட்டாயம் வரும். அந்தச் சோதனைச் சாவடிகளில் பேருந்துகள் மாத்திரம் என்றில்லாமல், தனியார் வாகனங்களில் வரும் பயணிகளும், இந்தச் சோதனைச் சாவடிகளில் நிறுத்தப்படுவதன் விளைவாக வீணான சிரமத்திற்கும், காலதாமதத்திற்கும் உள்ளாக்கப்படுவார்கள் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். அன்னிய நாடுகளிலிருந்து நமது நாட்டுக்கு வரும், இந்தியர்களுக்கும், மற்றும் அன்னிய சுற்றுலாப் பயணிகளுக்கும் நமது சோதனைச் சுங்கச் சாவடிகளிலே, ஏற்படும் இன்னல்களைப் போலவே, இதனாலும் மக்களுக்கு இன்னல் ஏற்படும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல, நுழைவு வரி சோதனைச் சாவடிகளினால் நெடுஞ்சாலைகளிலே சரக்கு போக்குவரத்து வாகனங்கள் நிறுத்தப்படுவதினாலே எரிபொருள் வீணாகிறது, என்பது மட்டும் அல்ல, இதனால் ஏற்படும் செலவு என்பது 80 ஆயிரம் போக்குவரத்து வாகனங்கள் செயலற்று நிறுத்துவதற்கு ஒவ்வியது என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாறு எரிபொருள் வீணாவதுடன், நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து இடைஞ்சல்களும் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இவை எல்லாவற்றையும்விட இந்த நுழைவு வரியினாலே, லஞ்ச ஊழல்கள் பெருக இடம் இருக்கிறது,

(திரு. என். எஸ். வி. சித்தன்) [1983 ஏப்ரல் 27

அரசினர் எதிர் பார்க்கின்ற. வரி 20 கோடி என்று சொன்னாலும் கூட, நான் எண்ணிப் பார்க்கிறேன், அது 70 அல்லது 80 கோடி ரூபாய்க்கு மேலேபோனாலும் போகலாமென்று. அப்படி அரசுக்கு வருவாய் அதிகமாக வந்துகொண்டிருக்கிற இந்த நேரத்திலும் கூட, இந்த வரி தவிர்க்கப்படுகிற காரணத்தாலே, நீக்கப்படுகிற காரணத்தாலே, அரசாங்கத்திற்கு வரி இழப்பு ஏற்படுவதற்கானஇன்னொரு சாத்தியக்கூறும் ஏற்படுகிறது ஆகையினால் லஞ்சமும் ஊழலும், பெருகு தற்கு இந்த நுழைவு வரி வாய்ப்பாக இருக்கும் என்று இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன். அந்த வரி விதிப்பினாலே தொழிற்சாலைகளிலே உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களின் விற்பனை மற்ற மாநிலங்களோடு போட்டியிட்டு விற்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு, நம்முடைய மாநிலத்திலேதொழில்கள் பாதிக்கக்கூடிய ஒரு நிலையும் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

நுழைவு வரியைப் பொறுத்த அளவிலே உலகெங்கும் உள்ள பொருளாதார மற்றும் வரிவிதிப்பு நிபுணர்களால் தீவிரமாக விவாதிக்கப்பெற்று, அது நாட்டுக்கு ஒவ்வாது என்று பல்வேறு கால கட்டங்களில் அது கைவிடப்பட்டது என்பதையும், இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நுழைவு வரி ஒரு பிற்போக்கான வரி என்றும், அதை மாநிலங்கள் ரத்து செய்து விட வேண்டும் என்றும் பாரதப் பிரதமர் அவர்கள் கூட ஒரு முறை சொன்னதாகவும், அதற்குப் பிறகு மேதகு சுகாதியா தலைமையிலே அமைக்கப்பட்டிருந்த குழு கூட, ஒரு சமயத்திலே இது பற்றிய விவரங்கள் தெரிவித்திருப்பதாக நான் எண்ணிப் பார்க்கிறேன். வரிகள் கட்டணங்கள் சம்பந்தமாக ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க மைய அரசு நியமித்த எல்.கே.ஜாய்குழுவும், நுழைவு வரியை ஒழித்துவிட வேண்டும் என்று வலியுறுத்தியதாக நான் கருதுகிறேன்.

இவை எல்லாவற்றையும் விட, அந்த வரியை வசூலிப்பதிலே ஒரு ரூபாய்க்கு 82 காசு செலவு ஆகும் என்று முன்னாள் மைய ராஜாங்க கப்பல் அமைச்சர் திரு. பூட்டாசிங் அவர்கள் ஒரு முறை தெரிவித்திருக்கிறார்கள். அவர் பாராளுமன்றத்திலே பேசுகிறபோது, நாட்டிலே நுழைவு வரி சோதனைச் சாவடிகளை அகற்றி விட்டால், நாட்டிலே பெட்ரோல், டீசல் உபயோகம் 10 சதவீதம் குறையும் என்றும், அதன் மூலமாக 236 கோடி ரூபாய் அன்னிய செலாவணி மிச்சமாகும் என்றும் ஒரு முறை கூறியதாக கூட நான் எண்ணிப் பார்க்கிறேன். ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது எல்லாம், இந்த நுழைவு வரிகளை பல்வேறு இனங்களுக்கு வைத்திருப்பதாலே பணக்காரர்களுக்கு மட்டும் அல்ல, நடுத்தர மக்கள், இன்னும் சமுதாயத்தில் பொருளாதார துறையில் அடித்தளத்தில் இருக்கும் மக்கள் கூட பாதிக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது.



1983 ஏப்ரல் 27] (திரு. என். எஸ். வி. சித்தன்)

உதாரணமாக மருந்து பொருள்களுக்கு, இந்த நுழைவு வரி போடப்படுகிறது. மருந்து உற்பத்தியை எடுத்துக் கொண்டால், 1974 ஆம் ஆண்டு வரை அது பலமுனை வரியாக இருந்து 74 ஆம் ஆண்டுக்கு பின்னாலே ஒரு முனை வரியாக 8 சதவீதமாக விதிக்கப்பட்டது என்று நான் அறிகிறேன். அதற்கு மேலேயும் கூட 5 சதவீதம் சர்-சார்ஜூம், அதற்கும், மேலே 5 சதவீதம் அடிஷனல் சர்சார்ஜூம், அதற்கு மேலேயும் கூட அடிஷனல் டர்ன் ஓவர் டாக்ஸ் என்று சொல்லி, 3 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாக கொண்டு வந்து, ஒட்டு மொத்தமாக வியாபாரத் தொகை 3 லட்சத்திற்கு மேலே போனால் செலுத்த வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே, இப்படி ஏற்கெனவே மிகுந்த இடர்பாட்டுக்கு உட்பட்டிருக்கிற, அந்த மருந்துகளுக்கு அரசாங்கம்போட்டிருக்கிற வரிகளினாலே மேலும் விலையை அதிகரிப்பதோடு, அதனை உட்கொள்ளுகிற சாதாரண ஏழைநடுத்தர மக்களுக்கு அதனுடைய விலை அதிகமாக போகிற காரணத்தாலே, இந்த வரி வசதியானவர்களை மட்டும் அல்ல, சாதாரண மக்களையும் பாதிக்க இருக்கிறது என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல, அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் வரி விதிக்கின்ற நேரத்திலே தமிழகம் முழுவதற்கும் ஒட்டு மொத்தமாக ஒரே மாதிரியாக இருக்கவேண்டுமே தவிர, ஒரு சில நகராட்சிகளுக்கு அல்லது மாநகராட்சிகளுக்கு என்று விதிப்பது தவறு. அது மட்டும் அல்லாமல், இந்த வரியே, மாநகராட்சிகளும், நகராட்சிகளும் மட்டுமே விதிக்க வேண்டிய வரிகளே தவிர, அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், அந்த வரி விதிப்பு சரிதானா என்ற கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன்.

(முற்பகல் 10 40)

அது மட்டும் அல்ல, இந்தவரியை வசூலிக்கின்ற நேரத்திலே, சம்பந்தப்பட்ட வியாபாரி வரி ஏதாவது பாக்கி வைத்திருந்தால், அந்த வியாபாரி வரி செலுத்தவில்லை என்று சொன்னால், அவருக்கு யார் பணம் கொடுக்க வேண்டுமோ, அவரிடம் இருந்து வசூல் செய்யலாம் என்ற ஒரு பகுதி கூட அந்த வரி விதிப்பின் மூலமாக ஏற்பட்டிருப்பதாக நான் பார்க்கிறேன். இது எந்தக் காலத்திலேயாவது சரியாக இருக்குமா? வணிக வரியைப் பொறுத்த அளவிலே கூட, இதற்கு முன்னாலே வணிக வரி பாக்கியாக இருந்தால் கூட, இப்படி வசூலிக்கின்ற முறை இல்லை என்றுதான் நான் கருதுகிறேன். அப்படி இருக்கிற போது, இந்தத் துறைக்கு மட்டும் அது எப்படி பொருத்தமாக இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. அதிலும் கூட இந்த வரி விதிப்பிலிருந்து மேல் முறையீடு செய்கிற நேரத்தில் அப்பலேட் அதிகாரிக்கு மேல்முறையீட்டு அதிகாரிக்கு 30 நாட்களுக்குள்ளாகவே அவர்கள் மேல் முறையீடு செய்ய வேண்டும் என்று இதில் போடப்பட்டிருக்கிறது. வணிக வரிப்

பற்றி பல்வேறு கால கட்டங்களில் பேசுகிறபோது இந்த மேல் முறையீடு முறையே தேவை இல்லை. ஏன் என்று சொன்னால் கீழே இருக்கக்கூடிய ஒரு அதிகாரி போடுகின்ற வரியை சரி என்று சொல்வதற்கு மேலே ஒரு அதிகாரி தேவை இல்லை. ஆகவே மேல்முறையீட்டைப் பொறுத்த அளவில் டிரிபுனல் என்று சொல்லுகின்ற நடுவர் மன்றத்திற்கு விடுவது வியாபாரிகளைப் பொறுத்த அளவில் மக்களைப் பொறுத்தவரையில் தொல்லைகளை குறைப்பதோடு விரைவில் அவர்களுக்கு நிவாரணம் கிடைப்பதற்கு வழியாக இருக்கும். ஆகவே இந்த வரியை பொறுத்த அளவில் இதற்கு முன்னால் சொல்லப்பட்ட பல்வேறு காரணங்களையும் வாதங்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் ஏனைய மாநிலங்களில் இருக்கின்றன என்ற ஒரு காரணத்தை திரும்ப திரும்ப சொல்வார் என்று நான் கருதுகிறேன். ஏனைய மாநிலங்களில் இருந்தாலும் கூட தமிழகத்தைப் பொறுத்த வரையில் இதுவரை இந்த வரி இல்லாமல் இருந்தது. ஆகவே வருகின்ற காலத்திலும் இந்த வரி இல்லாமல் ஆட்சி செய்யக்கூடிய முறையை நாம் தொடரலாம்.

அது மட்டும் அல்ல, அரசாங்கத்திற்கு வரி தேவையாக இருக்குமானால் நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிற நேரத்தில் ஒன்றைச் சொன்னார்கள் சாராய கலவை ஆலையை பொறுத்த அளவில் இன்றைக்கு தனியார் துறைக்கு கொடுத்து இருப்பதை விடுத்து அரசே ஏற்றுக்கொள்ளுமானால் அரசாங்கத் துறையிலேயும், கூட்டுறவுத் துறையிலேயும் அதை செயல்படுத்தப்படுமானால் அதன் மூலம் வருகின்ற வரி இந்த நுழைவு வரி மூலமாக கிடைக்கின்ற வரியை விட அதிகமான வரி கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதைப்போலவே அரசாங்கத்தின் வரி வசூல் செய்வதிலே இன்றைக்கு இருப்பதைவிட அதிகமான அக்கறை காட்டப்படுமானால் பறக்கும் படை போன்ற நிறுவனங்களை அரசு இன்னும் கொஞ்சம் முனைப்பாகசெயல்படுமானால் வரி வசூலை வியாபாரிகளிடமிருந்து பெறுவதிலே அரசு இன்னும் கொஞ்சம் அதிக அக்கறை காட்டுமானால் அரசுக்கு கிடைக்கிற வரி, கிடைக்கின்ற முறை இருக்கின்ற காரணத்தினால் இந்த நுழைவு வரியை அரசு ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு முன்னால் நான் சொன்னதைப்போல இப்படி ஒரு எதிர்ப்பு இருக்கிற காரணத்தினால் அரசு இதை பரிவுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு முன்னால் கூட நீதி விசாரணைப்பற்றி பேசுகிற போது அன்றைக்கு எதிர் வரிசையில் இருக்கின்ற அத்தனைக் கட்சித் தலைவர்களும் சொன்ன கோரிக்கையை நமது முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற அரிசன பெண் இறப்பு சம்பந்தமாக நீதி விசாரணைக்கு அவர்கள் உத்தரவிட்டார்கள். அதைப்போலவே இந்த நியாயமான ஒரு கோரிக்கையை



அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு இந்த நுழைவு வரியை அவர்கள் திரும்பப் பெறவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி அந்த நுழைவு வரியை திரும்பப் பெறுவதிலே அவர்களுக்குஏதாவது தயக்கம் இருக்குமானால் இதை ஒரு பொறுக்கு குழுவினுடைய ஆய்வுக்கு விடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொறுக்குக் குழுவில் இந்த மாமன்றத்தில் இருக்கின்ற உறுப்பினர்களும் மேலவையில் இருக்கின்ற உறுப்பினர்கள் எல்லாம் அங்கம் பெறச்செய்து அதை கொஞ்சம் விரிவாக விசாரித்து சமுதாயத்தில் இருக்கின்ற மக்கள், வணிகத்துறையில் இருக்கின்ற மக்கள் தொழில் துறையில் இருக்கின்ற மக்கள், வரி செலுத்துகின்ற அத்தனை பேருடைய எண்ணங்களையும் கருத்தில் கொண்டு அதன் மூலமாக இந்த வரியை வசூலிப்பதா வேண்டாமா என்பதை முடிவு செய்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் கூறிக்கொண்டு இந்த நுழைவு வரியைப் பொறுத்த வரையில் அரசு பிடிவாதமாக இதைப் போட்டுதான் ஆக வேண்டும் என்ற நிலையில் இன்றைக்கு இல்லை. இன்னும் கொஞ்சம் ஜனநாயக அமைப்போடு எதிர்க் கட்சியினுடைய குரலுக்கு மரியாதை தெரிவிக்கின்ற வகையில் அமைச்சர் அவர்கள் இதை கொஞ்சம் தீர ஆலோசித்து ஒன்று திரும்பப் பெற வேண்டும் அல்லது திரும்பப் பெறுவதிலே சிக்கல் இருக்குமானால் பொறுக்குக் குழுவினுடைய ஆய்வுக்குவிட வேண்டும் என்று சொல்லி என்னுடைய திருத்தத்தை வலியுறுத்தி அமைகிறேன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். அதாவது அரசாங்கத்தினுடைய தரப்பிலிருந்து ஏற்கனவே நிதியமைச்சர் அவர்கள் 2 சதவீதம் போடலாம் என்று சொன்னார்கள். இப்போது 5 சதவீதம் என்று மாற்றி இருக்கிறார்கள். இந்த அவையில் ஏற்கனவே நிதியமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதிக்கு முரணானது என்று தான் நண்பர் ரகுமான்கான் அவர்கள் இங்கே ஒரு உரிமைப் பிரச்னை கொடுத்து மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் கூட இது நியாயம்தான் என்று அவர்கள் தீர்ப்பு அளித்து இருக்கிறார்கள். இப்போது இந்த பில்லை நாம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் போகிறோம். இப்போது அரசுத் தரப்பில் அதற்கு வேண்டிய அமெண்டுமெண்டு, திருத்தங்கள் தரப்பட்டு இருக்கிறதா? திருத்தங்கள் தரப்பட்டால் தான் அதன்மீது நாம் எழுந்து பேசலாம். அப்படி என்றால் ஏற்கனவே கொடுக்கப்பட்ட பில்லின் மீது விவாதம் நடைபெறுமானால் சபாநாயகர் அவர்கள் சொன்ன தீர்ப்புக்கு அமெண்டுமெண்டு கொடுத்து இருக்க வேண்டும். இப்போது அதற்கு மதிப்பு இல்லாமல்போய்விடுகிறது. சபைத் தலைவருடைய ஆணையை மதிக்காமல் அவையினுடைய முன்னவிராக இருக்கின்ற நிதியமைச்சர் அவர்கள் 2 சதவீதம் என்று சொன்ன தையும் மீறி இப்போது 5 சதவீதத்திலே நாம் விவாதம் நடத்துவதா? அப்படி என்றால் சபாநாயகருடைய தீர்ப்பு என்ன ஆவது. இதற்கு அரசு தரப்பிலிருந்து விளக்கங்கள் தந்தால்தான் நாங்கள் பேசமுடியும். சபாநாயகர் அவர்கள் சொல்லியதற்கு கவர்மெண்டு சைடில் அமெண்டுமெண்டு

கொடுத்து இருக்கவேண்டும். அவர்கள் தீர்ப்பு கொடுத்து ஆகிவிட்டது. சர்க்கார் தரபபிலே கொடுக்கவில்லை. சபாநாயகருடைய ஆணையையே ஆளுங்கட்சியிலே மந்திரிகள் வரிசையிலே மதிக்கவில்லை என்ற நிலை உருவாகியிருக்கிறது. எனவே அதைத் தெரிந்துகொண்ட பிறகுதான் நாங்கள் இதைப் பற்றி பேசமுடியும். எனவே இதிலே தங்களுடைய தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே சட்ட முன்வடிவு கொண்டுவருகிறபோது not exceeding 5 per cent என்று இருக்கிறது. எப்போதும் பொதுவாக சட்ட முன்வடிவு கொண்டுவரப்படுகிற போது அதற்கு மேல் போகக்கூடாது என்று அரசு கொண்டுவருவதுதான் முறையாக இருக்கிறது. சில நாட்களுக்கு முன்னாலே இங்கே விவாதிக்கப்பட்டபோதுகூட சிலடுகளுக்கும்/சுருள்களுக்கும் எவ்வளவு போடவேண்டுமென்று சொல்கிறபோது "Not exceeding 0.90 per cent per slide and not exceeding 1.5 per cent for "Surul" என்றுதான் கொண்டுவந்திருக்கிறோம். ஆனாலும் பட்ஜெட்டிலே வருகிறபோது அதற்கு 30 பைசா என்றும் இதற்கு 60 பைசா என்றும் இருக்கிறது. "not exceeding" என்று சொன்னால் அதற்கு மேல் போகக்கூடாது என்றுதான் அர்த்தமே தவிர வேறு ஒன்றும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் எல்லாவற்றையும் படித்தால் தெரியும். நான் கூட அவர்களுக்கு கடைசியிலே அவைகளைப் படித்துக் காட்டலாம் என்று இருந்தேன். இருந்தாலும் இப்போது அவர்கள் அதைத் திருப்பித் திருப்பி சொல்வதினாலே நான் சொல்லவிரும்புகிறேன், not exceeding 5 per cent என்பதை not exceeding 2 per cent என்று திருத்திக்கொள்கிற முறையிலே அந்த அமண்மன்டை சேர்த்து ஏற்றுக்கொண்டு நீங்கள் பேசலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அதுமாதிரி அரசு தரப்பிலே ஏதாவது திருத்தம் கொண்டு வருகிறீர்களா என்பதைச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, Not exceeding 5 per cent என்று இருப்பதை Not exceeding 2 per cent என்றுதிருத்திக்கொள்கிறமுறையிலே அமெண்ட்மென்ட் வருவதாக வைத்துக்கொண்டு அதை நான் முன்மொழிகிறேன். Not exceeding என்று வருகிறது என்று இந்த அவையிலே சொன்னதற்குப் பிறகு எப்படி திருப்பிக் கேட்க முடியும்?

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இரண்டாவது பாயின்ட். ஏற்கெனவே பல பொருட்களுக்கு பட்டு, கைத்தறித் துணி, மண்ணெண்ணெய், வீட்டுக்குப் பயன்படுத்தும் மின் விளக்குகள், வயர், சுவிட்சுகள், வெல்லக்கட்டி, சித்தா யுனானி, ஆயுர்வேத மருந்துப் பொருட்களுக்கு விதிவிலக்கு நுழைவு வரியிலிருந்து........





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது எல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டரிலே வராது, இது எல்லாம் டீடெய்ல்ஸ். இவ்வளவு டீடெய்லாக பாயின்ட் ஆப் ஆர்டரிலே வராது.

திரு. க. அன்பழகன்: துணைத் தலைவர் அவர்களே, தலைவர் அவர்கள் காலையிலே அளித்த தீர்ப்பு அடிப்படையில் ஏற்கனவே முன்னவர் அவர்கள் நிதியமைச்சர் என்ற முறையில் எந்த எந்தப் பொருட்களுக்கு இந்த வரி முறை கைகொள்ளப்பட மாட்டாது என்று அறிவித்திருக்கிறார்களோ அந்தப் பொருள்களும் இந்தப் பில்லிலே இருக்கிற காரணத்தினாலே அவைகளுக்கும் நீங்கள் அமெண்ட்மென்ட் மூலமாக திருத்தங்கள் தருவீர்களா என்று கேட்பதற்குத்தான் துரைமுருகன் கேட்கிறார். அது சட்டமன்ற நடைமுறைப் பிரச்சினை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, பேராசிரியர் அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். அதேபோல் வழக்கறிஞர் துரைமுருகன் சொல்லியிருக்கிறார்கள். உங்களுக்கு இதிலே விளக்கமாக தெரிவித்து இருக்கிறோம். சட்டத்திலே வரியை நீக்குவதற்கோ குறைப்பதற்கோ எல்லாவிதமான அதிகாரமும் அரசுக்கு மட்டும் என்று எடுத்துக்கொண்டிருக்கிறோம். ரூல்ஸ் போடுகிறபோது சட்டமன்றத்திலே நிதியமைச்சர் அவர்கள் எதை எதைச் சொன்னார்களோ சொன்னது அத்தனையும் ரூல்ஸிலே போட்டு விதிகளிலே போட்டு நடைமுறைப்படுத்தப்படும். சென்ற ஆண்டிலே பட்ஜெட்டிலேகூட கொண்டுவரப்பட்டிருக்கிறது, அதற்குப் பிறகு நிதியமைச்சர் அவர்கள் சில விதிவிலக்குகளைக் கொடுத்ததற்குப் பிறகு விற்பனை வரியிலே நாம் ரூல்ஸ் மூலமாகத்தான் அதைச் செய்திருக்கிறோம். ஆனால் ரூல்ஸ் போட்டாலும்கூட நோட்டிபிகேஷன் ஆப் ரூல்ஸ் தான் அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். நோட்டிபிகேஷன் ஆப் ரூல்ஸில் போட்டால் உடனடியாக அதை ஏற்றுக்கொள்வதற்கும் ஏற்றுக்கொள்ளாததற்கும் இரண்டு அவைகளுக்கும் அதிகாரம் இருக்கிறது. நோட்டிபிகேஷன் ஆப் ரூல்ஸ் என்று போட்ட பிறகு உடனடியாக அவையிலே வைத்து நிறைவேற்றப்படும். நிதியமைச்சர் என்ன அவையிலே சொன்னார்களோ அது அத்தனையும் நடைமுறைப்படுத்தப்படும்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிற விளக்கம் எதிர்காலத்திலே அரசாங்கத் தினுடைய ரூல்ஸ் மூலம் விதிமுறைகள் மூலமாக முன்னவர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்துக்கள் இடம்பெறச்செய்யப்படும், அந்தக் கருத்துக்களுக்குட்பட்டு இயற்றப்படும் என்று தெரிவிக் கிறார்கள். இந்தச் சட்டத்திலே ஷெட்யூல்ட் குட்ஸ் என்று பட்டியலிலே பார்க்கிறபோது முன்னவர் அவர்கள் சொன்ன அயிட்டங்களும் சேர்க்கப்பட்டிருப்பதாக திட்டவட்டமாக தெரிகிறது. முன்னவர் அவர்கள் சொன்ன நாவலர் அவர்கள் இங்கே தெரிவித்துள்ள அந்த பொருட்கள் உள்ளிட்ட ஷெட்யூல்ட்

குட்ஸ் என்ற தலைப்பிலே வருகிற அந்தக் கருத்துக்களும், ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீஸன்ஸ் என்பதிலே பொருட்களும் அந்தத் தலைப்புக்களுக்கு அந்தப் பெயர்களுக்கு உள்பட்ட பொருட்களில் பல இந்த விலக்குக்கு உரியதாக முன்னவர் அவர்களால் சொல்லப்பட்டிருக்கிற காரணத்தினாலே அந்த திருத்தம் இதிலே இடம் பெறுவதுதான் அவசியமாக தேவை. ஏனென்றால் விதிமுறைகள் செய்கிறபோது இந்த கருத்துக்களை மனதிலே கொள்ளப்படும் என்று சொன்னாலும், விளக்கங்கள் சொல்கிறபோது வேறு விதமாக மாறும். எனவே இந்த சட்டத்திலே ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ் என்று வந்திருப்பதிலும், 'ஷெட்யூல்ட் கூட்ஸ்' பட்டியலிலும் நிச்சயமாக மாற்றம் செய்யப்பட்டால் தான், திருத்தம் இருந்தால் தான் இந்த அவையில் பேசுகிறவர்கள் தங்கள் கருத்துக்களை தெளிவாக சொல்ல ஏதுவாக இருக்கும்.

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பேராசிரியர் அவர்களை இந்த அறிக்கையில் ஆங்கிலப் பிரதியில் 20-ம் பக்கத்தையும், தமிழ் பிரதியில் 2-ம் பக்கத்தையும் பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அதில் 36-வது விதியில் விளக்கமாக சொல்லியிருக்கிறோம். "the application of the provisions of this Act would cause undue hardship to the general public" ஜெனரல் பப்ளிக் எங்கெங்கு கஷ்டப்படுகிறார்களோ அங்கேயெல்லாம் நீக்கப்படுமென்றும், ".... by notification issued, whether prospectively or retrospectively, make an exemption, or reduction in rate, in respect of tax payable under this Act on any scheduled goods or class of scheduled goods" ஷெட்யூல்ட் கூட்ஸ் எங்கே இருக்கிறதோ அதற்கும் தான் சொல்லியிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் இது எப்போதும் வாடிக்கையாக செய்கிற ஒன்றுதான். இந்த அவையில் வரி நீக்கப்பட்டதென்று சொன்னவைகளுக்கு திருப்பி நாங்கள் வரி போட மாட்டோம். அதற்கு பிறகு இப்போது சேர்க்க வேண்டும், சேர்க்கவேண்டுமென்று சொன்னால் என்ன செய்வது? பேரவையில் என்ன சொல்லப்பட்டதோ அது நிறைவேற்றப்படும். இதை பேராசிரியர் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த சட்டத்தினுடைய 36 வது விதியைக் கொண்டு அரசு எல்லா உரிமைகளையும் பெற்றிருக்கிறது. நீக்கவோ, தளர்த்தவோ, விலக்கவோ அல்லது இன்னும் சொல்லப்போனால் மொத்தமாக இந்த பில்லை கைவிடக் கூட அதிகாரம் அரசிற்கு இருக்கிறது. ஒரு கடமை கூட இருக்கிறது. ஆனால் அதேநேரத்தில் வரி விதிப்பிற்காக ஐடெம்கள் கொடுக்கப்பட்டு ஒரு சட்டத்திலே நிறைவேறுகிறபோது அவைகளுக்கு உட்பட்டவை என்று திட்டவட்டமாக சொல்லப்பட வேண்டும். ஏனென்றால் விரிவாக



நீங்கள் ஷெட்யூல் தருகிறபோது. இந்த அவையிலே சொல்லப்பட்ட அந்த கருத்து இங்கே 'டொபோக்கோ அண்ட் இட்ஸ் புராடக்ட்ஸ்' என்று இருக்குமானால் அதிலே எதற்காவது விதிவிலக்கு அல்லது நீக்கப்படுவதாக இருந்தால் அது இதிலே சொல்லப்படவேண்டும். விதிமுறைகளிலே சொல்வோம் என்று சொல்வது அரசாங்கத்திற்கு இருக்கக்கூடிய அதிகாரத்தை எப்போதும் நீங்கள் பயன்படுத்தக்கூடிய ஒன்று. அது இன்றைக்கு மட்டுமல்ல, இந்த சட்டத்தில் மட்டுமல்ல, என்றைக்கும் உங்களுக்கு இருக்கக்கூடிய ஒன்று. எனவே அமெண்ட்மென்ட் கொடுப்பது உங்களுக்கு கஷ்டமில்லை. அப்படி அமெண்ட்மென்ட் வருமானால் இதை இன்னும் தெளிவாக வாதிடப் பயன்படும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் இதற்கு மேலே விளக்கம் சொல்லத் தேவையில்லை என்பதால் சொல்லவில்லை. முடிவு எடுத்த பிறகு அதற்கு போட வேண்டும், போடவேண்டுமென்று சொன்னால்— விடாப்பிடியாக நீங்கள் கேட்கிறீர்களே தவிர வேறல்ல.

திரு. துரைமுருகன் : 5 பெர்சண்ட்டை 2 பெர்சண்டிற்கு மிகாமல் என்று அமெண்ட்மென்ட் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னீர்களே, இம்தவம் நீக்கப்படும் என்று சொல்ல வேண்டியதுதானே; இதிலே என்ன மர்மம்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; அதையெல்லாம் நீங்கள் பேசுகிறபோது பேசலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்த நுழைவு வரியை திராவிட முன்னேற்றக் கழகம் மிக கடுமையாக எதிர்க்கிறது என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நேற்றைய தினம் நிதியமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம் தந்த சமயத்திலே கூட கெரோசின் போன்ற பொருள்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படுமென்று பட்ஜெட் உரையிலே பதிலிலே சொல்லியிருக்கிறேன் என்றும், அதற்கான அமெண்ட்மென்ட் சட்டத்தைக் கொண்டு வருகிறபோது இந்த மன்றத்திலே தாக்கல் செய்யப்படுமென்றும் அவை முன்னவர் நேற்றையதினம் உறுதிமொழி அளித்தார்கள், அதன் அடிப்படையில் மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் அவர்கள் அதை நிறைவேற்றுகிற விதத்திலே அந்த அமெண்ட்மென்ட்களைச் சட்டமன்றம் இந்தச் சட்டத்தை விவாதிக்கிற சமயத்திலே எந்தெந்தப் பொருள்களுக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டுமோ அவைகளுக்குண்டான அமெண்ட்மென்ட்களை தாக்கல் செய்வதுதான் முறை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படும். அதுமட்டுமல்லாமல் இப்போது நீங்கள் எல்லாம் பேசுகின்றபோது கூட வேறு எதையும் கேட்பீர்கள். எல்லாவற்றிற்கும் சேர்த்து ஒன்றாக ரூல்ஸ் போட்டுவிடலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நுழைவு வரி தமிழ்நாட்டிலே கொண்டு வரப்படும் என்று அறிமுகப்படுத்தியதற்குப் பிறகு, தமிழ்நாட்டிலே இருக்கக் கூடிய வியாபாரிகள், பொதுமக்கள், எல்லோரும் அடங்கிய குழுவினர்கள் சட்ட மன்றத்திலே எங்கள் மூலமாக, இதனை எடுத்து வைத்து, இந்த நுழைவு வரி தவிர்க்கப்பட வேண்டுமென்றும் தேவையற்றது என்றும் இந்தச் சட்டத்தை முன்மொழின்ற காலத்திலேயே நாங்கள் கூறியிருக்கின்றோம். அதனைத் தொடர்ந்து நம்முடைய நிதியமைச்சரும், அவையின் முன்னவரும் கூட இது ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து அமுல்படுத்தப்படும் என்றும் பட்ஜெட் உரையிலே குறிப்பிட்டிருந்தாலும், அது ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து அமுலுக்கு வராது சட்டம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றியதற்குப் பிறகுதான் அமுலுக்கு வரும் என்று மார்ச் 31 ஆம் தேதிக்கு முன்னதாகவே அவர்கள் அறிவித்தார்கள். என்ன காரணத்திற்காக அப்படி அறிவித்தார்கள்? இந்தச் சட்டத்தை 31 ஆம் தேதிக்கு முன்னதாகவே இன்ட்ரடியூஸ் செய்வதிலே என்ன சிரமம்? என்ன பேரம்? என்ன வாக்குவாதம்? அதிலே தோல்வி கண்டதற்குப் பிறகு இன்றையதினம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றக்கூடிய கட்டாயத்திலே ஆளுங்கட்சியினர்—அரசாங்கம் தள்ளப்படுகிறதோ என்று நான் ஐயப்படுகிறேன். ஒன்றை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். முன்பெல்லாம் வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆண்ட காலத்தில் ஆக்ட்ராயாக இருந்தது. ஆக்ட்ராயாக இருந்ததை மாற்றி, ஆக்ட்ராய் நாகரீகமான முறையிலே விதிக்கப்படக்கூடிய வரி அல்ல; போட்டவரி, இடத்திற்கு இடம் மாறுபட்டு, அதனால் பல தொல்லைகள் வருகின்றன என்ற காரணத்தினால்தான் அந்த ஆக்ட்ராய்க்குப் பதிலாக, விற்பனை வரியை வெள்ளைக்காரன் காலத்திலே கொண்டு வந்தார்கள். மத்திய அரசாங்கம் வெளியிட்டுள்ள "Sales Tax Administration in India" என்ற புத்தகத்திலே, மிகத் தெளிவாக அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

''Comptroller and Auditor-General of India has stated, "in India the Todhunter Committee, i.e., Indian Taxation Enquiry Committee, 1924 recommended for the first time that local retail tax may be introduced as a substitute for Octroi and Terminal Taxes levied by the Municipalities.'' இந்தியாவிலே சேல்ஸ் டாக்ஸ் வந்ததற்கு மூல காரணமே, ஆக்ட்ராய் என்று அந்தக் காலத்திலேயே ஒவ்வொரு நகராட்சியிலும் வசூலித்தார்கள், அது காட்டுமிராண்டித்தனமான வரி. அந்தக் காட்டுமிராண்டித்தனமான வரியினை வசூலிப்பது தவறு என்று கருதித்தான் 1924-லே வெள்ளைக்காரர்கள் டாடண்டர் கமிட்டியிலே விவாதித்து, முடிவு செய்த பிரகாரம், ஆக்ட்ராயும், டெர்மினல் டாக்சும் ஒழிக்கப்படவேண்டிய வரிகள், அதற்குப் பதிலாக, விற்பனை வரியைப் போடலாம் என்று பரிந்துரை செய்தார்கள். அவர்கள் பரிந்துரை செய்ததனுடைய அடிப்படையிலேதான் "In the Government of India Act 1935, Tax on sale of goods and on advertisement was made a provincial subject, vide entry number 48 in the list II Schedule VII 1935''லே ஹவுஸ் ஆஃப் காமன்சிலே நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டத்தின்



பட்ட அந்தச் சட்டத்தின் பிரகாரம், மத்திய அரசினுடைய 35-வது சட்டத்தினுடைய பிரகாரம், மாநிலங்கள் ஆக்ட்ராய்க்கு பதிலாக, டெர்மினல் டாக்சுக்குப் பதிலாக, விற்பனை வரியைக் கொண்டு வரலாம்.

இது மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்ட உரிமையாகும் என்று அன்றையதினம் ஹவுஸ் ஆஃப் காமன்ஸ்-இலே முடிவு செய்தார்கள். அதையொட்டித்தான் சென்ட்ரல் ப்ராவின்சஸ் என்று சொல்லக்கூடிய மத்திய மாகாணத்திலே முதன்முதலிலே அவர்கள் பெட்ரோல் டாக்ஸ் என்று 1938-இலே முதலிலே போட்டார்கள். அதற்குப் பிறகுதான், 'For all practical purposes, the epoch-making event in the History of sales tax was the passing of the Madras General Sales Tax primarily to make up the loss of revenue due to the introduction of prohibition.' 1939-இல் இராஜாஜி அவர்கள் தமிழ்நாட்டினுடைய, (மட்ராஸ் பிரசிடென்ஸி) னுடைய பிரைம் மினிஸ்ட்டராக அல்லது சீஃப் மினிஸ்ட்டராக அன்றையதினம் இருந்த சமயத்தில் கவர்ன்மென்ட் ஆஃப் இந்தியா ஆக்டினுடைய அடிப்படையில் இந்த ஆக்ட்ராய்க்குப் பதிலாக, டெர்மினல் டாக்சுக்குப் பதிலாக சேல்ஸ் டாக்ஸ் போடலாம், அது மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்ட உரிமை என்று ஹவுஸ் ஆஃப் காமன்ஸ்—லே நிறைவேற்றிய சட்டத்தினுடைய அடிப்படையில் அவர்கள் இங்கே இந்த சேல்ஸ் டாக்சை கொண்டு வந்தார்கள். இதற்கு ஓரிரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாகவே மத்திய மாகாணங்களிலே, சென்ட்ரல் ப்ராவின்சஸிலே சில செலக்ட்டட் குட்ஸ்-க்கு பெட்ரோல் டாக்ஸ் என்ற விதத்திலே சேல்ஸ் டாக்ஸை விதித்தார்கள். காம்ப்ரஹென்சிவ் ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் என்ற முறையில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான் முதன்முதலாகக் கொண்டு வந்தார்கள்.

(முற்பகல் 11-00)

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அப்பொழுது அவர்கள் கொண்டு வந்ததற்கு நியாயம் கற்பிக்கும் வகையில் அவர்கள் சொன்ன வாதங்களெல்லாம் மது விலக்கை அமல்படுத்துவதன் காரணமாக மாநிலங்கள் வருவாயை இழந்து விடுகின்றன; அந்த இழப்பைச் சரிக்கட்டுவதற்காக இப்படி இந்த விற்பனை வரியைக் கொண்டு வந்தால், அது மதுவிலக்கினால் வரக்கூடிய வரியிழப்பினைத் தடுப்பதற்குச் சாதகமாக இருக்கும் என்றுதான் அன்றையதினம் திரு. இராஜாஜி அவர்கள் கொண்டு வந்தார்கள்.

அப்படிக் கொண்டு வந்த சமயத்தில் தமிழ்நாட்டினுடைய வரி எத்தனை கோடி? இன்றையதினம் எத்தனை கோடி என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். அந்தக் காலத்திலே சில பொருட்களுக்கு விற்பனை வரி இருந்தது. இன்றையதினம்

விற்பனை வரி இல்லாத பொருளே இல்லை என்று சொல்லுகின்ற அளவிற்கு எல்லாயிடங்களிலும், எல்லாப் பொருட்களுக்கும்-ஏறக்குறைய எல்லாப் பொருட்களுக்கும் விற்பனை வரி போடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு, இன்றையதினம் சற்றேறக்குறைய 100 கோடி ரூபாய்க்கு மேலே, நம்முடைய பட்ஜெட்டினுடைய வருவாயில் சற்றேறக்குறைய பாதிக்குக் குறையாமல் கற்பக விருட்சமாக, காமதேனுவாக விற்பனை வரி அமல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த அரசாங்கத்திற்கு உள்ளபடியே முனிசிபாலிட்டிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருக்குமேயானால், அந்தக் கார்ப்பரேஷனுக்கும், முனிசிபாலிட்டிகளுக்கும் இன்னும் கொஞ்சம் பணம் தேவை அதைக் கொடுக்க வேண்டுமென்ற என்ற நிர்ப்பந்தம் உண்டாகுமேயானால் அது பத்து கோடியாக இருந்தாலும் சரி, அல்ல 20 கோடியாக இருந்தாலும் சரி இப்பொழுது அமுலில் இருக்கக்கூடிய விற்பனை வரியை வசூல் செய்தால், முறையாகச் செய்து அதிலே வரி ஏய்ப்பு ஏற்படாமல் தீர்க்கப்படுமேயானால் இந்த 20 கோடிக்குப் பதிலாக இன்னும் சற்றேறக்குறைய 50 கோடி ரூபாய் அளவிற்கு, இப்பொழுது இருக்கக்கூடிய விற்பனை வரிச் சட்டத்திலேயே வசூல் செய்யக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. அவ்வாறு செய்யாமல், அன்றையதினம் ஒரு பேரலல் லெஜிஸ்லேஷன் என்று சொல்வதைப் போல இருக்கிறது. திரு இராஜாஜி அவர்கள் அன்றையதினம் மது விலக்குக்காக என்று விற்பனை வரியைக் கொண்டு வந்தார்கள். அன்றையதினம் மதுவிலக்கும் கிடையாது; விற்பனை வரியும் நிரந்தரமாகிவிட்டது. அது ஏறக்குறைய 600 கோடி ரூபாய்க்கு, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய கன்ஸ்யூமர்ஸ் தலையிலே சுமத்தப்பட்டிருக்கக்கூடிய ஒரு நிலமைக்கு எப்படி சுமக்கப்பட்டதோ அதேபோலத்தான் இன்றையதினம் அது கொண்டு வந்திருக்கக்கூடிய நுழைவு வரியும் ஒரு பேரலல் லெஜிஸ்லேஷனாக, மெட்ராஸ் ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் என்று சொல்வதைப்போல இது இன்னொரு அங்கமாக விங்காக இருந்து கொண்டு, தமிழ்நாட்டிலே உள்ள பல முனிசிபாலிட்டிகளுக்கும் இவைகளை எக்ஸ்டன்ட் செய்யக்கூடிய வாய்ப்பகள் இருக்கின்ற காரணத்தினால் இது பொதுமக்களையும், வியாபாரிகளையும் மிகவும் கடுமையாகப் பாதிக்கும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இதை இங்கே நான் சொல்லுகின்ற சமயத்தில் இன்னொன்றையும் சொல்லியாக வேண்டும். மத்திய அரசாங்கத்தினுடைய போக்கையும் நான் இங்கே கூற விரும்புகிறேன். மத்திய அரசாங்கமே சேல்ஸ் டாக்ஸ்களை ஒழிக்க வேண்டுமென்று அண்மைக் காலத்திலே பேசி வருகிறார்கள். அவர்கள் எக்சைஸ் டியூட்டி போட்டு கொடுகிறோம், உங்களுக்கு சேல்ஸ் டாக்ஸை ஒழிப்பதினால், இழப்பு ஏற்படுவதற்கு நாங்கள் எக்சைஸ் டியூட்டியிலே இருந்து கொடுத்து விடுகிறோம் என்று, விற்பனை வரியை ஒழிக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கம் முயன்று கொண்



டிருக்கக்கூடிய இந்தக் காலகட்டத்தில், இந்த வரியைக் கொண்டு வருவது மத்திய அரசாங்கத்திற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவர்கள் எடுக்கின்ற முயற்சிகளுக்கு எதிர் நடவடிக்கையாகத்தான் இந்தச் சட்டம் இந்த மாமன்றத்திலே கொண்டு வரப்படுகிறது என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசாங்கம் சென்ட்ரல் சேல்ஸ் டாக்சினை போட்டிருக்கிறார்கள். அந்த சென்ட்ரல் சேல்ஸ் டாக்சை டிக்ளேர் செய்வதற்கு இந்த நுழைவு வரியைப் பயன்படுத்தக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதை இங்கே நான் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. மத்திய அரசாங்கம் சில பொருள்களை டிக்ளேர் செய்திருக்கிறார்கள். அந்தப் பொருள்களுக்கெல்லாம் சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் போட்டு, இவைகளையெல்லாம் 'பார்லிமெண்டரி டிக்ளேர்டு குட்ஸ்' என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பொருள்களுக்கு எல்லாம் நுழைவு வரி என்ற பெயரால் இங்கே புதிய வரி போடுவது ஏற்கத்தக்கதல்ல என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது தவிர்க்கப்படவேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி, மத்திய அரசிற்காக பேசுகிறார்களா அல்லது மாநில அரசிற்காகப் பேசுகிறார்களா என்று தெரியவில்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நான் மக்களுக்காகச் சொல்கிறேன். கத்தி எடுத்து கழுத்தை வெட்டக்கூடியவர்கள் நீங்கலாக இருந்தாலும் சரி, அல்லது அவர்களாக இருந்தாலும் சரி, அது தவறு. மக்களின் நலனைக் கருதி, நாம் பாதுகாக்க வேண்டுமென்ற அடிப்படையிலே தான் நான் சொல்கிறேன். நீங்கள் இரண்டு பேரும் போட்டி போட்டுக்கொண்டு மக்களின் கழுத்தை அறுக்காதீர்கள் என்று சொல்கிறேன். நீங்கள் அறுக்க மாட்டீர்கள். உங்களால் முடியாது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மத்திய அரசு வரி போடுகிறது என்பதற்காக நாம் போட்டு விட்டால், அது நமக்கு நல்லதல்லவா? நம்முடைய மாநிலத்தை பொறுத்தவரைக்கும்..

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நான் சொல்லக் கூடியதெல்லாம், consumer is already very much affected இங்கே வாங்கி உபயோகிக்கக் கூடியவன் அந்தப் பொருள்களுக்கு, ஏறத்தாழ 30% வரியாகக் கொடுக்கிறான். எக்ஸைஸ் டியூட்டி, சி.எஸ்.டி. அல்லது சேல்ஸ் டேக்ஸ் மூலமாக கொடுக்கிறான். இப்போது அதையும் சேர்த்து

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1983 ஏப்ரல் 27

விட்டால், அவர்கள் வாங்கக்கூடிய பொருளுக்கு மூன்றில் ஒரு பங்கு வரியாகக் கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்படும். அதை நீங்கள் செய்தாலும், அவர்கள் செய்தாலும் தவிர்க்கப்பட வேண்டும். பொதுமக்களின் நன்மையைக் கருதி, இது குறைக்கப் பட வேண்டும். ஆகவே விரைவாக, வேகமாக, இரண்டுபேரும் மக்களுடைய போக்கெட்டிலிருந்து, போட்டிப் போட்டுக்கொண்டு நாங்கள் எடுக்கிறதா, அவர்கள் எடுக்கிறதா என்று செய்வது நல்லதல்ல.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். 1956-ல் சென்ட்ரல் சேல்ஸ் டேக்ஸ் அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டது. மாநிலங்களுக்கு சேல்ஸ் டேக்ஸ் அதிகாரங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டதற்கு பிறகு, ஒவ்வொரு மாநிலமும் போட்டி போட்டுக்கொண்டு, இண்டர் ஸ்டேட் சேல்ஸ் டேக்ஸ்-வரி போடுவதற்கு முற்பட்டன. பிறகு 1956-ல் 6-வது அமெண்ட் மெண்டு டு தி கான்ஸ்டிட்யூஷன் என்கிற தலைப்பில், அரசியல் சட்டம் 286-வது பிரிவிற்கு திருத்தங்களைக் கொண்டுவந்தார்கள். அப்படி அவர்கள் திருத்தங்களைக் கொண்டுவருவதன் மூலமாக, மத்திய அரசாங்கம் நோட்டிஃபை செய்யக்கூடிய பொருள்களுக்கு மாநிலங்கள் சேல்ஸ் டேக்சை போடக்கூடாது அல்லது அந்த மாநிலத்திற்குள்ளே நுழைகின்ற போது, வரி வசூலிக்கக்கூடாது என்ற அதிகாரத்தை 6-வது அமெண்டுமெண்ட் ஆப் தி கான்ஸ்டிட்யூஷன் 1956 சென்ட்ரல் சேல்ஸ் டேக்ஸ் அதிகாரத்தை பாராளுமன்றத்திற்கு வழங்கி, அந்த அரசியல் சட்டத்தை திருத்தினார்கள். 286 பிரிவு ஒன்றிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்—'No law of a State shall impose, or authorise the imposition of, a tax on the sale or purchase of goods where such sale or purchase shall take place—என்று சொல்லிவிட்டு, மூன்றாவது பிரிவிலே கீழே குறிப்பிட்டபடி சொல்கிறார்கள். Any law of a State shall, in so far as it imposes or authorises the imposition of, a tax on the sale or purchase of goods declared by Parliament by law to be of special importance in inter-State trade or commerce, be subject to such restrictions.......' இவைகள் எல்லாம் ரெஸ்ட்ரிக்ஷன் இல்லாமல் எப்படியாகும்? இன்றைய தினம் நோட்டிபிகேஷனிலே நீங்கள் என்னென்ன பொருள்களுக்கு வரி போட்டிருக்கிறீர்கள் என்று பார்த்தால், சர்க்கரை, டெக்ஸ்டைல்ஸ், டொபேக்கோ, சிமெண்ட், பெட்ரோலியம் ப்ராடக்ட்ஸ், வனஸ்பதி, ட்ரக்ஸ், பேப்பர், கார்ட்போர்டுகள், அயர்ன் அண்டு ஸ்டீல், கோல் அண்டு கோக், எலக்ட்ரிகல் குட்ஸ், அட்டாமொபைல்ஸ், ஓர்ஸ்—இவைகளிலே சற்றேறக்குறைய அனைத்தும் வெளி மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்கு வருமேயானால், அவர்கள் போடக்கூடிய சி.எஸ்.டி., சென்னையிலே இருக்கக்கூடிய ஒரு வியாபாரி ஆந்திரத்திலிருந்து ஒரு மூலப்பொருளைக் கொண்டுவருகிறபோது விதிக்கப்படுகிறது ஆனால் இங்கிருந்து ஆந்திராவிற்குப் போனால் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?



1983 ஏப்ரல் 27] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

(முற்பகல் 11–10)

நீங்கள் சி.எஸ்.டி. என்று இங்கே 4 பர்செண்ட் கொடுத்து விட்டால் மட்டும் போதாது, எங்களுக்கும் ஒரு என்ட்ரி டாக்ஸ் கொடுங்கள் என்று கேட்கப் போகிறீர்கள். இது இந்திய அரசியல் சட்டத்திலே மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கக்கூடிய அதிகாரத்தை மீறுகின்ற செயல் அல்லவா என்ற வினாவை நான் கேட்கவிரும்புகிறேன். ஆகையினாலே தான் நான் சொல்லுகிறேன். "Any law of a State shall in so far as it imposes, authorises the imposition of the tax on the sale or purchase of the goods declared by Parliament, by law to be of special importance in inter-State trade or commerce be subject to such restrictions and conditions" இது ரெஸ்ட்ரிக்சன் அல்லவா? இந்த என்ட்ரி டாக்ஸ் மத்திய அரசாங்கத்தினுடைய சென்ட்ரல் சேல்ஸ் டாக்சினை கட்டுப் படுத்தக்கூடிய, இன்னும் சொல்லப்போனால் அதற்கு மேலே வரி விதிக்கக்கூடிய அளவிற்கு புகுத்தப்படக்கூடியது அல்லவா என்ற கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன். ஆகையினாலேதான் இந்த நுழைவு வரி மிகப் பிற்போக்கான வரியாகும். இவைகள் எல்லாம் மிடிவியில் சிட்டி ஸ்டேட் என்று ஏறக்குறைய 12 ஆம் நூற்றாண்டு அல்லது 13 ஆம் நூற்றாண்டில் மிடிவியில் சிட்டி ஸ்டேட் என்று சொல்லக்கூடிய காலத்திலே அவர்கள்தான் இந்த என்ட்ரி டாக்சை வைத்து இருந்தார்கள். அந்த ஒரு கால கட்டத்திற்கு இப்போது நம்முடைய நாட்டிலே இருக்கின்ற முனிசிபல் நகரங்கள் எல்லாம், சிட்டி ஸ்டேட்ஸ் கான்செப்ட் நீங்கள் தள்ளுகின்றீர்களா என்று என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை. ஆகையினாலே இந்த வரியை நாங்கள் மிகக் கடுமையாக எதிர்க்கிறோம். எங்களுடைய கட்சித் தலைவர் அதைக் கொண்டு வரக்கூடிய சமயத்திலே சொன்னார்கள். அரசாங்கத்திற்கு உண்மையாக வரி தேவைப்படுமானால், இன்னும் ஒரு 20 கோடி அதிகமாகத் தேவைப்படுமானால், இப்படி ஆயிரக் கணக்கான, லட்சக்கணக்கான வியாபாரிகள் இருக்கக்கூடிய சேல்ஸ் டாக்ஸ் கமிஷனரிடத்திலே, அதிகாரிகளிடத்திலே புஸ்த கத்தைக் கொண்டு காட்டியபிறகு நடங்கள் என்று சொல்லியும் செக்போஸ்ட் என்று வைத்துக்கொண்டு அவர்களுக்கு தொல்லைகள் கொடுப்பதை விட்டுவிடுவது நலம். 10 பிளன்ட்டிங் யூனிட் மூலமாக—அவைகள் தேசியமயமாக்கிவிட்டால்—வரக்கூடிய ஏறக்குறைய 20, 24 கோடி ரூபாய்—எவன் எவனோ சாப்பிடு கிறான்—அவைகள் எல்லாம் அரசாங்கத்திற்கு வந்துவிடுமானால் அரசாங்கத்திற்குத் தேவையான வரி கிடைக்காதா? பணம் கிடைக்காதா என்ற கேள்வியைத்தான் எங்களுடைய கட்சித் தலைவர் அவர்கள் எடுத்து வைத்தார்கள் என்று கூறி இந்தச் சட்டத்தை திராவிட முன்னேற்றக்கழகம் எதிர்க்கின்றது. இதை அரசாங்கம் உடனடியாக வாபஸ் வாங்கவேண்டும் என்று சொல்லி, இது ஊழலுக்கு வழிவகுக்கும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

[1983 ஏப்ரல் 27

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே வைத்திருக்கின்ற நுழைவு வரி விதிக்கும் சட்ட முன்வடிவின் மீது சில கருத்துக்களைச் சொல்ல அனுமதித்ததற்காக உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தச் சட்டமுன்வடிவிலே பேசுகின்ற எதிர்க்கட்சி நண்பர்கள் எல்லாம் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டால் நாட்டிலே ஊழல் அதிகமாக தலைவிரித்தாடும் என்றும், இதனால் பல்வேறு தரப்பட்ட மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்றும் சொன்னார்கள். ஆனால் நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஊழல் என்று சொல்வது ஏதோ புதிதாக இந்த நாட்டிலே மட்டும் அல்ல, தமிழ்நாட்டிலே மட்டும் அல்ல, இந்தியாவிலே புதிதாக இப்போதுதான் நுழைவதாகக் கற்பனை செய்து கொண்டு சொல்வதைத்தான் நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்தச் சட்டமானது இந்தியாவிலே ஏறக்குறைய 14 மாநிலங்களிலே இருக்கின்றது. அதிலும் குறிப்பாக மேற்கு வங்கம் உள்பட இந்தியாவிலே உள்ள காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்கின்ற 12 மாநிலங்களிலும் இருக்கின்றது என்று சொன்னால் அவர்கள் எல்லாம் ஒன்றும் தெரியாமலோ அல்லது அறியாமலோ கொண்டு வந்திருக்கிறார்கள் என்று யாரும் யூகம் செய்ய முடியாது. ஆகவே இப்படிப்பட்ட சட்டங்களைச் செயல்படுத்துவதற்கு அதிகமாக செலவு ஆகிறது என்றும், அதனால் அதிகமான அதிகாரிகளை நியமிக்க நேரிடுகிறது என்றும், ஆகவே அரசுக்கு அதிகமான செலவு ஏற்படும் என்றும் இங்கே தெரிவித்த அவர்களுக்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கனவே இருந்த அதிகாரிகளை வைத்து இந்தச் சட்டத்தைச் செயல்படுத்துவதற்கு நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, அவர்கள் சொன்னது எல்லாம் எதிர்க்கட்சிகள் என்ற பெயராலே எதை எடுத்தாலும் எதிர்த்துக்கொண்டு இருப்பது என்று சொல்கிறார்களே தவிர, இந்த வரியால் அரசுக்கு என்ன லாபம், அந்த லாபத்தால் அரசு மக்களுக்கு என்ன செய்ய இருக்கிறது என்பதைக் கொஞ்சம்கூட புரிந்து கொள்ளாமலேயே சொல்வதை எண்ணிப் பார்த்துத்தான் இந்தச் சட்டத்தால் என்ன லாபம் இருக்கிறது என்பதை நான் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பாவேந்தன் பாரதிதாசன் பாடினான். 'கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே, இங்கு வேரில் பழுத்த பலா, மிகக் கொடியது என்று எண்ணிடப்பட்டுதண்ணே, குளிர் வடிகின்ற வட்டநிலா' என்று கோரிக்கை அற்றுக் கிடக்கும் சமுதாயத்தைப் பார்த்துப் பாடினான். சமுதாயத்திலே நலிந்தவர்களைப் பார்த்துப் பாடினான். அப்படிப் பாடிய பாவேந்தன் பாரதிதாசன் கனவை நனவாக்கும் வகையில் இன்றையதினம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் அப்படிப்பட்ட சமுதாயத்தில் உள்ள மக்களை, அப்படிப்பட்ட சமுதாயத்திலே பெற்று எடுத்த இளம் சிறார்களை பஞ்சத்தில் இருந்து, பட்டினியில் இருந்து காப்பாற்றவேண்டும் என்றுதான் இந்த நாட்டிலே சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சத்துணவுத் திட்டத்



1983 ஏப்ரல் 27] [திரு. க. பாலசுப்பிரமணியன்]

திற்கு சத்து கொடுப்பதற்காக இப்படிப்பட்ட வரி போடப்பட்டு இருக்கிறது. உலகத்திலே எங்கும் இல்லாத வகையில் தன்னிறைவுத் திட்டம் தமிழகத்தில் தான் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. இன்று தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாகத் தொடர்பு இல்லாத கிராமங்கள் தொடர்பு பெற்று இருக்கின்றன. பள்ளிகள் எல்லாம் நிரந்தரமான கட்டிடங்களைப் பெற்று இருக்கின்றன. மர நிழலில் இருந்த பள்ளிகள் இன்றைக்கு மாடிக்கட்டிடங்களில் மாறியிருக்கின்றன. இதற்குக் காரணம் முறையாக வரிகளை விதித்து, முறையாக அதை வசூலித்து, இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்காக அவை செலவிடப்படுகின்றன என்பதுதான்.

இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பூதாகரமான கற்பனைகளை இங்கே தெரிவித்தார்கள் ஏதோ சென்னையில் புறப்படுகிற ஒரு வாகனம் சென்னையில் இருந்து புறப்படுகிறது என்று சொன்னால், செங்கற்பட்டு நகரத்தில் நுழைகிறபோது வரி கட்டவேண்டும், அதற்கு அடுத்து திண்டிவனத்தில் நுழைகிறபோது வரி கட்டவேண்டும் அதைத்தாண்டி பண்ருட்டி செல்கிறபோது அங்கே வரி கட்டவேண்டும், அதையும் தாண்டி தஞ்சை செல்கிறது என்று சொன்னால், அங்கேயும் வரி கட்டவேண்டும் இப்படி ஏறக்குறைய 10,15 இடங்களில் வரி கட்டவேண்டிய நிலை வரும் என்று கற்பனை செய்து நாட்டு மக்களிடையே ஒரு பீதியை ஏற்படுத்தும் வகையில் சொன்னார்கள். இதில் இருந்து என்ன தெரிகிறது என்று சொன்னால், ஒரு இடத்தில் வரி கட்டிவிட்டால் மற்ற இடத்தில் வரி கட்டாமல் செல்லலாம். ஆனால் இவர்கள் சொல்வதன் மூலம் என்ன நிலைமையேற்படும் என்று சொன்னால் ஆங்காங்கு இருக்கின்ற நகராட்சியில் இருக்கும் வியாபாரிகள், மாநகராட்சியில் இருக்கும் வியாபாரிகள் ஆகியோரை இப்போதிருந்தே பலதரப்பட்ட ஊழல்களுக்குத் தயாராக இருங்கள் என்று சொல்வதுபோல் இருக்கிறது. ஆனால் நான் தெரிவித்துக்கொள்வேன், புரட்சித் தலைவர் ஆட்சியில் ஒரு வரி போடப்படுகிறது என்று சொன்னால் அந்த வரியை யாருக்குப் போடவேண்டும், அதன் காரணமாக யாருக்குப் பாதகம் ஏற்படும் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டு தான் போடுகிறார்கள்.

இங்கே பேசிய மாண்புமிகு பெரியவர் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுகிறபோது மத்திய அரசு பொது விற்பனைச் சட்டம் மூலம் வரி போடுகிறது என்பதை எதிர்க்கும் அளவிற்கு அல்லது அதை காப்பி அடிக்கும் வகையில் செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். மத்திய அரசு செய்வதைக் காப்பி அடிக்கக் கூடாது என்று ஒன்றும் இல்லை. அப்படியானால் மத்திய அரசு செய்யும் எதையும் நாம் செய்யக்கூடாது என்று சொல்கிறார்களா? மாநில அரசு போடுகின்ற இந்த வரி விதிப்பு மூலம் சாதாரண ஏழை எளிய மக்களுக்கு இன்னும் சொல்லப்போனால், சமுதாயத்தில் நலிந்தவர்கள், வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் ஆகியோரை இது பாதிக்காது என்று தெளிவாகச் சொல்லித்தான் இதைச்செய்கிறார்கள். இங்கேயிருக்கிற வருவாய்த்துறை அமைச்சராக இருந்தாலும் சரி,

முதலமைச்சராக இருந்தாலும் சரி, மற்ற அமைச்சர்களாக இருந்தாலும் சரி, போடுகின்ற வரி எந்த மக்களிடமிருந்து பெறப் படுகிறது. அந்த வரியால் மக்களுக்கு லாபம் ஏற்படுகிறதா என்பதைச் சிந்தித்துப் பார்த்துத்தான் வரியைப் போடுகிறார்கள். 100 க்கு 80 மக்களுக்கு லாபம் ஏற்பட்டு 20 சதவீதம் மக்கள் வரி கட்டும் நிலையைத்தான் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த வரியை நல்ல முறையில் செயல்படுத்துவதற்கு வர இருக்கின்ற காலத்தில் தமிழக அரசு நல்ல ஏற்பாடுகளைச் செய்யும் என்பதிலே நம்பிக்கை இல்லை என்று அவர்கள் சொன்னாலும், எல்லாக் காலங்களிலும் புரட்சித் தலைவரை நம்பிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதிலும் புரட்சித் தலைவர் அவர்களைத் தாராளமாக நம்பலாம் என்று கூறி இந்த வரி விதிப்பை ஆதரித்து என் உரையை முடிக்கிறேன்.

(முற்பகல் 11 20)

**திரு. ரா. கிருஷ்ணன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு உள்ளூர்ப்பகுதிகளில் நுகர்தலுக்காக, பயன்படுத்துதலுக்காக, விற்பனை செய்வதற்காக வரும் சரக்குகள் மீது நுழைவு வரி விதிக்கும் இந்தச் சட்ட முன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எதிர்க்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இன்றைக்குப் பல்வேறு வகைகளில் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில் இப்படிப்பட்ட புதிய வரியைப் போட்டு அவர்களை மேலும் பல சிக்கல்களுக்கு ஆளாக்கியிருப்பது வருந்தத்தக்கது, கண்டிக்கத் தக்கது. ஏற்கெனவே மத்திய சர்க்காரின் பட்ஜெட் மூலம் விலைவாசி ஏறியிருக்கிறது. இரயில்வே பட்ஜெட்டிலே போட்ட சரக்கு இரயில் கட்டணம் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. தபால் கவர் 50 பைசாவாக இருந்தது இன்றைக்கு 55 பைசாவாக ஆகியிருக் கிறது. அந்த அளவுக்கு மிக நுணுக்கமாக வாய்ப்பு உள்ள இடங்களில் எல்லாம் வரி போட்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில் தமிழ்நாட்டில் இந்த அரசின் சார்பாக இப்படிப்பட்ட ஒரு புதிய வரியைப் போடுவது மிகவும் கண்டிக்கத்தக்கது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, தமிழ்நாடு பூராவும் வறட்சியால் பாதிக்கப் பட்டிக்கிறது. எங்கு பார்த்தாலும் தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கிறது. சென்னை நகரிலும், திண்டுக்கல்லிலும் அதைப் போன்ற மற்ற இடங்களிலும் தண்ணீரை விலைகொடுத்து வாங்கிக் குடிக்கக்கூடிய பரிதாபம் ஒருபுறம் இருக்கிறது. தண்ணீருக்கு என்று சில வீடுகளில் 5 ரூபாயிலிருந்து 50 ரூபாய் வரையில் தினம் செலவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த அரசினுடைய தொலைநோக்கு இல்லாத காரணத்தால், மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டு தமிழகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக் கிறது. மின்சாரத்தட்டுப்பாட்டால் வரலாறு காணாத அளவுக்குத் தொழிற்சாலைகளை மூடக்கூடிய அளவிற்கு நிலைமை இருக்கிறது.





தொழிற்சாலைகள் மூடப்பட்ட காரணத்தால் இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஒரு புறம் இருக்கிறது. 'லே ஆப்' என்ற நிலைமையால் பல்வேறு தொழிற்சாலைகளில் நிரந்தரத் தொழிலாளர்களுக்குப் பாதிச் சம்பளம் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது ; தற்காலிகத் தொழிலாளர்கள் வேலையை இழந்திருக்கிறார்கள். ஆக இப்படித் தொடர்ச்சியாகப் பல்வேறு சூழ்நிலைகளில் தமிழக மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் இன்றைக்குப் புதிய வரியைப் போட்டு, அவர்களை மேலும் பல கஷ்டங்களுக்கு ஆளாக்குவது கண்டிக்கத்தக்கது. அது தடுக்கப்பட வேண்டும். ஆகவே இந்தச் சட்ட முன்வடிவை ஆய்வு செய்யாமல் தயவுசெய்து வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் இங்கே நேர்முக வரி ஆண்டுக்காண்டு குறைந்து கொண்டே வருகிற அதே நேரத்தில் மறைமுக வரி ஒவ்வோராண்டும் கூடிக்கொண்டே போகக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நேர்முக வரி என்பது வசதி படைத்தவர்கள், தொழிலதிபர்கள் செலுத்துகின்ற வருமான வரி போன்றது. போடக்கூடிய 19 சதவீத வரியைக் கூட தொழிலதி பர்கள் முறையாக செலுத்தத்தயாராக இல்லை அதன் காரணமாக கோடிக்கணக்கான ரூபாய் வருமான வரி டிமிக்கிக் கொடுக்கப் பட்டிருக்கிறது என்று மைய அரசின் சார்பில் பாராளுமன்றத்தில் கூறப்பட்டு, பத்திரிகைகளில் செய்திவந்ததைப்பார்த்திருக்கிறோம். ஏற்கெனவே 45 சதவீதமாக இருந்த இந்த மறைமுக வரியானது இன்றைக்கு 81 சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. மறைமுக வரி என்பது ஏழை எளிய மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்கள்மீது போடக்கூடிய வரி. அதன் மூலம் சாதாரண மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். வெளியில் சொல்வதோ ''வரியைக் குறைப்போம், வசதியைப் பெருக்குவோம்'' என்று. ஆனால் நடைமுறையைப் பார்த்தால் நேர்மாறாக இருக்கிறது. இப்படிப் பட்ட சாதாரண மக்கள் பயன்படுத்தும் பொருள்களுக்கு போடக் கூடிய விற்பனை வரி, மறைமுக வரி நிச்சயமாகத் தடுக்கப்பட வேண்டும். அது மட்டுமல்லாமல் புதிய வரி போடுவதை நிச்சயமாகப் போடக்கூடாது என்று வலியுறுத்திக் கூற விரும்பு கிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் 5 சதவீதம் என்பதை 2 சதவீதம் என்ற அளவுக்கு வரியைக் குறைப்போம் என்று சொன்னார்கள். அதை வாக்குறுதியாகச் சொல்கிறேன் என்றார்கள். ஆனால் அதுபற்றி ஒரு ஆதாரபூர்வமாக, எழுத்துப்பூர்வமாக திருத்தம் கொடுக்க தயாராக இல்லை. இப்படிப்பட்ட ஒருசூழ்நிலை இருக்குமானால் இந்த அரசு அவ்வப்போது இந்த வரியை உயர்த்தக் கூடிய நிலைமை ஏற்படும். அந்த நிலைமை இருந்தால் நிச்சயமாக சதவீதம் என்பது நாளை 5 சதவீதமாக ஆக்கப்படலாம். அந்த அபாயம் இதிலே இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே நிச்சயமாக, ஒட்டுமொத்தமாக இந்த வரி கூடாது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. ரா. கிருஷ்ணன்] [1983 ஏப்ரல் 27

அதோடு, இந்தப் புதிய வரி மூலம் 20 கோடி ரூபாய் வசூல்செய்ய இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இந்த ஆண்டு சரியான முறையில் வரியை வசூல் செய்த காரணத்தால் சென்ற ஆண்டைவிட சுமார் 60 கோடி ரூபாய் அதிகமாக வசூல் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஏற்கெனவே மத்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ள எல். கே. ஜா குழுவினுடைய அறிக்கையிலும் கூட, புதிய வரிகள் போடுவது சரியல்ல என்றும், அதே நேரத்தில் இருக்கக் கூடிய வரிகளை முறைப்படுத்தி, சரிப்படுத்தி வசூல் செய்வதன் மூலமாகவே வருவாயை அதிகரிக்க முடியும் என்றும் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் புதியதாகப் போடுகின்ற இந்த நுழைவு வரிகளை நீக்கிவிட்டு, ஏற்கெனவே இருக்கக்கூடிய வரிகளை, சட்ட அமைப்பு விதிகளின் மூலமாக முறையாக வசூல் செய்யக்கூடிய வகையினை சரிப்படுத்த வேண்டும். அதுதான் ஒரு சரியான வழியாக இருக்க முடியும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏற்கெனவே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இதைப் பற்றி பேசுகிறபோது, அப்படிப்பட்ட நுழைவு வரிகள் பல்வேறு மாநிலங்களிலேயும் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டினார்கள். அது உண்மைதான். ஆனால் பல்வேறு மாநிலங்களிலேயும் இருக்கின்ற அந்த நுழைவு வரிகளை, மத்திய அரசாங்கத்தின் ஆலோசனைகளின் பேரில், அந்த அரசாங்கங்கள் நீக்குவதற்குத் தயாராக இல்லை. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இன்னமும் அதிகமான நிதியினை மத்திய அரசாங்கத்திடமிருந்து நாம் எதிர் பார்க்கிறோம். மத்திய அரசாங்கமும் கொடுப்பதற்குத் தயாராக இல்லை. ஆகவே இப்படிப்பட்ட புதிய வரிகளைப் போட்டு மத்திய அரசாங்கத்தை நிர்ப்பந்தப்படுத்துவதன் மூலமாகக் கூட நமக்கு அதிகமான நிதி கொடுக்க முன் வந்தால், இப்படிப்பட்ட வரிகளை போடுவதை நாம் அவசியமாகத்தான் நினைப்போம் என்றும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆனால் இதில் நான் குறிப்பிட விரும்புவது கொக்கு தலையில் வெண்ணெய் வைத்து பிடிக்கின்ற கதைதான் இது நேரிடையாக மத்திய அரசாங்கத்திடமிருந்து நமக்கு கிடைக்க வேண்டிய நியாயமான நிதி உதவியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பதை விட்டுவிட்டு, சுற்றி வளைத்து புதிய ஒரு சட்டத்தையும் வரிகளையும் போட்டு, அதன் விளைவாகத் தமிழக மக்களின் மீது அதிகமான வரிப் பளுவைச் சுமத்தி, அதை நிவர்த்தி செய்ய மத்திய அரசாங்கம் நிதி உதவி செய்ய முன் வரும் என்று கற்பனையாக நீங்கள் நினைப்பீர்களேயானால், நிச்சயமாக அது தவறான எண்ணம் தான் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு இன்றைக்கு தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இங்கேபல்வேறுநிலைகளிலே இருக்கக்கூடியவியாபாரிகள்சங்கங்கள் இந்த வரிகளை எதிர்த்து, அவர்களுடைய கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்திருக்கின்றன. ஆனால் இந்த வரிகளினால் அவர்கள் மட்டும் தான் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது அல்ல, தமிழ்



1983 ஏப்ரல் 27] (திரு. ரா. கிருஷ்ணன்)

நாட்டினுடைய பொது மக்கள் தான் இதனால் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அதோடு ஏற்கெனவே இருக்கிற சில வரி வசூல் முறையிலே கூட அரசாங்கம் சரியான வாய்ப்புகளைப் பயன்படுத்தத் தயாராக இருக்கிறதா இல்லையா என்று நான் கேட்க விரும்புகிறேன். காரணம் இங்கேயேகூட பலர் அதுபற்றிப் பேசினார்கள். உருக்கு உருட்டு ஆலை சம்பந்தமாக.

அதில் 4 சதவீதமாக உயர்த்திப் போடப்பட்ட வரி, உயர் நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெறப்பட்டு, பிறகு உச்ச நீதி மன்றத்தில் அப்படி வசூல் செய்யலாம் என்று தீர்ப்பு வழங்கப் பட்டும் கூட, போடப்பட்ட அந்த வரி ரத்து செய்யப்பட்டிருப்பது எவ்வளவு கோடி ரூபாயைத் தமிழ்நாட்டு அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுத்தியிருக்கிறது என்பதை அனைவரும் அறிவார்கள். ஒரு பக்கம் அப்படி உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு மாறாக வரி பாக்கிகளை ரத்து செய்வது, இங்கே இன்னொரு பக்கம் நுழைவு வரி என்ற பெயரால் தமிழ்நாட்டு மக்களின் தலைமீது புதிய பளுவைப் போட்டு, அரசாங்கத்திற்கு வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்காகப், போடவேண்டியிருக்கிறது என்று காரணம் சொல்வதை, நிச்சயமாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் இன்னொன்றையும் நான் கூற விரும்புவது, ஏற்கெனவே மதுவிலக்கு தளர்த்திய சட்டத்தின் மூலமாகப் பல கோடி ரூபாய் வருமானம் அரசுக்கு ஏற்பட்டு வருகிறது. ஆனால் கள்ளச்சாராயம் பெருகி வருவதன் காரணமாக, அரசாங்கத்திற்கு வரவேண்டிய அதிக வருமானம் கணிசமான அளவுக்கு குறைகிறது. இவைகளையெல்லாம் முறைப்படுத்தி, சரிப்படுத்துவதன் மூலமாக அரசாங்கத்தின் வருவாயை உயர்த்த வழி இருக்கிறது. ஆகவே இருக்கிற நிலைமைகளை மாற்றி அமைக்கிறபோது, நமக்கு நிச்சயமாகக் கூடுதலாக வருமானத்தை எதிர்பார்க்கிற வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்புகளை அரசாங்கம் உபயோகப்படுத்திக் கொண்டு, இந்த நுழைவு வரிகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல தமிழ்நாட்டிலே பலவகையான தொழிற்சாலைகள் இருக்கின்றன அந்தத் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் மூலப்பொருள்களை நாம் அதிக அளவில் வெளி மாநிலங்களிலே இருந்துதான் வரவழைக்கிறோம். அப்படி நம்முடைய தொழிற் சாலைகளுக்கு மூலப்பொருள்கள் வருகிறபோது இங்கே குறிப்பிடப் பட்டிருக்கிற ஷெட்யூலில் இருக்கிற அந்த மூலப்பொருள்களின் மீது வரியைப் போடுவதன் காரணமாக, நிச்சயமாக தொழிற் சாலைகளின் நிலைமை பாதிக்கப்படும். தொழில்கள் பாதிக்கப் படும், உற்பத்தி குறையும், அதன் மூலமாகத் தமிழ்நாட்டினுடைய வருமானம் கணிசமாகப் பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது)

ஒன்றை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். அத்தோடு ஏற்கெனவே இங்கே பிரிவு 5 (4) (1)-ல், அந்த அதிகாரிகளுக்குத் தன்னிச்சையாக முடிவு செய்யக்கூடிய அதிகாரத்தை வழங்க இந்த சட்டம் வகை செய்கிறது. அப்படித் தன்னிச்சையாக முடிவு செய்யக் கூடிய நிலைமை ஏற்படுமேயானால், நிச்சயமாக ஊழல்கள் நாட்டிலே அதிகரிக்கும். சோதனைச் சாவடிகளில் எப்போதுமே நாம் வழக்கமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் — இதற்கு முன்பு கூட — அங்கே மிகவும் பயங்கரமான ஊழல்கள் இருக்கின்றன. ஆகவே ஊழல்களை அதிகரிக்கக்கூடிய இந்தச் சட்டத்தை நிச்சயமாகத் தமிழ்நாடு அரசாங்கம் திரும்பப் பெற்றுக் கொண்டு, தமிழ்நாட்டு மக்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்யவேண்டும் என்று கூறி முடிக்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 11-30)

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இப்போது இங்கே நம்முடைய விவாதத்திற்குவந்து இருக்கிற மசோதா சம்பந்தமாக இது ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தும்போதே இந்த அவையில் இருக்கின்ற அத்தனை எதிர் வரிசையில் இருக்கின்ற கட்சிகள் எல்லாம் இந்த வரி சம்பந்தமாக இதை நீங்கள் அறிமுகப்படுத்துவதை நாங்கள் எதிர்க்கிறோம், இதை நீங்கள் திரும்பப்பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அப்போதே வற்புறுத்தியிருக்கிறோம். அதை எல்லாம் மீறி திரும்பவும் மசோதா கொண்டு வந்து இந்த வரி விதிக்கக்கூடிய இந்த ஒரு நிலையை ஏற்படுத்துவதற்காக இங்கே திரும்பவும் கொண்டு வந்து இருக்கிறீர்கள். அட்டவணையில் சொல்லக்கூடிய இந்தப் பொருள்களுக்கு நுழைவு வரி நீங்கள் விதிக்க உத்தேசித்து இருக்கிற இந்த பொருள்கள், சர்க்கரை, துணிகள், புகையிலை அதன் துணைப் பொருள்கள், சிமெண்டு, பெட்ரோலியம் பொருட்கள், வனஸ்பதி, மருந்துகள் மருந்துப் பொருட்கள், சாகித அட்டைகள் இப்படி சாதாரண மக்கள் ஏழை எளிய மக்கள் உபயோகிக்கின்ற பொருட்களுக்குக் கூட அத்தனை பொருட்கள் மீதும் இப்போது நீங்கள் இந்த வரியை விதிப்பதற்காக இங்கே மசோதா கொண்டு வந்து இருக்கிறீர்கள் இந்த வரி விதிப்பு சம்பந்தமாக ஏற்கனவே வணிகர்கள் பூராவும், தமிழ்நாடு பூராவும் உள்ளவர்கள் எல்லாம் இது எப்படி அவர்களை பாதிக்கிறது என்பது மட்டும் அல்லாமல் பொதுமக்களை எப்படி பாதிக்கும் என்று ஏற்கனவே இது சம்பந்தமாக உண்ணாவிரதப் போராட்டம் மற்ற இயக்கங்கள் எல்லாம் நடத்தியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்கிறநேரத்தில் இது பல மாநிலங்களில்—14 மாநிலங்களில்—இது மாதிரி நகர் பிரவேச வரி ஆக்ட்ராய் வரி போன்ற வரிகள் இருக்கின்றன. அது மாதிரியாக நாங்கள் இங்கே கொண்டு வந்து இருக்கிறோம் என்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த நுழைவு வரி சம்பந்தமாக இங்கே சொல்லக்கூடிய வாதம் நியாயமான வாதம் அல்ல என்பதை





நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கனவே இது எவ்வளவு மோசமான வரி என்பதை இந்த ஆக்ட்ராய் வரி ஒரு அருவறுக்கத் தக்க வரி, இது கைவிடப்படவேண்டும் என்று சொல்லி ஏற்கனவே இருக்கின்ற பல மாநிலங்களில் வரி சம்பந்தமாக பொருளாதார நிர்வாக சீர்திருத்த கமிஷனுடைய தலைவர் திரு. எல். கே. ஜா. போன்றவர்கள் எல்லாம் கூறியிருக்கிறார்கள் என்பதை ஏற்கனவே சொல்லியிருக்கிறார்கள்; நாங்களும் சொல்லியிருக்கிறோம். அது மட்டும் அல்லாமல் இன்றைக்கு நம்முடைய தமிழகத்திலே விற்பனை வரி சம்பந்தமாக சென்ற ஆண்டுக்கு முந்தைய ஆண்டு 490 கோடி ரூபாய்க்கு நம் அரசுக்கு விற்பனை வரியாகக கிடைத்து இருக்கிறது. சென்ற ஆண்டு 1981–82 ம் ஆண்டு 590 கோடி ரூபாய் நாம் எதிர்பார்த்ததை விட அதிகமாக 50–60 கோடி ரூபாய் கிடைத்து இருக்கிறது. இந்த ஆண்டு 1982–83க்கு ஏறக்குறைய 690 கோடி ரூபாய் விற்பனை வரி மூலமாக அரசுக்கு வருமானம் கிடைக்க இருக்கிறது. டிசம்பர் வரை வந்த கணக்கீட்டு அடிப்படையில் பார்ப்போம் என்று சொன்னால் சென்ற ஆண்டு கிடைத்ததை விட 100 கோடி ரூபாய்க்கு அதிகமாக விற்பனை வரி மூலமாக கிடைக்கிறது. இதிலே கூட வியாபாரிகள் ஒரு யோசனையை அமைச்சர் இடத்திலே நேராகச்சொன்னார்கள். 26 கோடி ரூபாய் நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள், அதற்கு இந்த வரிக்குப் பதிலாக வேறு ஆலோசனை சொல்கிறோம். விற்பனை வரியில் சில மாற்றங்களை செய்வதன் மூலமாக இந்த 26 கோடி ரூபாய்க்கு அதிகமான வருமானம் வரக்கூடிய ஒரு ஏற்பாட்டை சுலபமாக கிடைப்பதற்கு வழியை சொல்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றி எல்லாம் அரசு ஆலோசிக்காமல் இந்த மாதிரி ஒரு நுழைவு வரி கொண்டு வருவதன் காரணமாக நீங்கள் பட்ஜெட்டில் சொல்கிற காலத்தில் 26 கோடி ரூபாய் என்று சொன்னீர்கள். இந்த 2 சதவீதம் வரி என்று சொல்லும் நேரத்திலே 20 கோடிவரும் என்று நீங்கள் சொன்ன நேரத்தில் வியாபாரிகள் சொன்னார்கள் இந்த நுழைவு வரி என்று சொல்லக்கூடிய பொருட்களுக்கு எல்லாம் நீங்கள் வரி விதிப்பதால் ஏறக்குறைய 60 கோடி ரூபாய் வரையில் அரசுக்கு வரி கிடைக்கும். அவர்கள் உத்தேசமாக ஒரு கணக்கு போட்டு சொல்லியிருக்கிறார்கள். ஏன் என்றால் இன்றைக்கு இருக்கின்ற பொருட்கள் அத்தனை பொருட்களும் நகரத்திற்கு வந்துதான் மறுபடியும் கிராமத்திற்குப் போக வேண்டும். ஆகவே நகரத்திற்கு வருகின்ற நேரத்தில் நீங்கள் நுழைவு வரி என்று சொல்லக்கூடிய வரியைப போடுவதன் காரணமாக விற்பனை வரியை நீங்கள் 5 சதவீதம் உயர்த்துகிறீர்கள் என்று தான் அர்த்தமே தவிர இதற்கு வேறு அர்த்தமே கிடையாது. இருக்கிற சேல்ஸ்டாக்ஸ் நேரிடையாக உயர்த்துவதற்குப் பதிலாக மறைமுகமாக 5 சதவீதம் உயர்த்துகிறீர்கள் என்று அர்த்தம். அது மட்டும் அல்லாமல் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், பட்ஜெட் உரையிலே நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்தில் நுழைவு வரி 2 சதவீதம் விதிக்கப்படும் என்று சொன்னார்கள். நீங்கள் இப்போது கொண்டு வருகிற இந்த மசோதாவில் 5 சதவீதத்திற்கு

மேற்படாமல் என்று போட்டுவிட்டு, அந்த 5 சதவீதத்திற்கு மேற்படாமல் என்று சொல்லிவிட்டு அப்போது வெவ்வேறு நகரத்தில் வெவ்வேறு விதத்தில் அரசு நிர்ணயிக்கும் அளவிலே அரசு நிர்ணயிக்கிறார்கள். வரி விதிப்பதற்கு அதிகாரத்தைப் பெறுகிறீர்கள். அப்படி என்றால் ஒரு நகரத்தில் 5 ஒரு நகரத்தில் 4, ஒரு நகரத்தில் 3 உங்களுடைய நோக்கம் போல. எந்த எந்த நகரத்தில் எப்படி எப்படி இந்தப் பொருட்களுக்கு போடலாம் என்று சொல்லக்கூடிய முறையில் நீங்கள் போடுவதற்கு அதிகாரத்தைப் பெறுகிறீர்கள். இது என்ன வினோதமான சட்டமாக இருக்கிறது. இதற்கு முன்னால் எத்தனையோ சட்டங்கள் வந்து இருக்கின்றன. போடுகிற நேரத்திலே இந்த பொருட்களுக்கு இத்தனை சதவீதம் வரி இந்தப் பொருட்களுக்கு 2 சதவீதம் இதற்கு 1 சதவீதம், இதற்கு ஒரு முனை வரி இதற்கு பல முனை வரி என்று போடுகிறார்கள். இந்தச் சட்டத்திலே 5 சதவீதத்திற்கு மேற்படாமல் என்று சொல்லிவிட்டு இந்த பொருட்களுக்கு இவ்வளவு வரி என்று சொல்லாமல் நீங்கள் நினைத்தபடி எல்லாம் 5 சதவீதம்வரை போடுவதற்கு வேண்டிய அதிகாரத்தைப் பெறுவதற்கு இந்தச் சட்டத்திலே நீங்கள் வரி வகையை வைத்து அதிகாரம் கேட்கிறீர்கள். ஆகவே வரி சம்பந்தமாக இது ஏற்கெனவே இந்த 13 பொருட்களுக்கும் 2 சதவீதம் என்று சொன்னாலும் 60 கோடி ரூபாய் வரையில் வருமானம் வரும் என்று வியாபாரிகள் சொல்கிறார்கள். இப்போது 4 சதவீதம், 5 சதவீதம் என்று வைத்தாலும் ஏறக்குறைய 100 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் அரசுக்கு வரும். ஏற்கெனவே சாதாரண மக்கள் வாங்குகிற பொருட்களின் விலைகள் எல்லாம் உயர்ந்ததன் காரணமாகத் தங்களுடைய வாழ்க்கையை நடத்தமுடியாத அளவுக்கு மிக மிகக் கஷ்டத்திற்கு அவர்கள் ஆளாகியிருக்கிற நேரத்திலே மேலும் நுழைவு வரி என்று போடுவதன் காரணமாக—சென்னையிலேயும் சென்னையிலிருந்து வாங்கிக்கொண்டு போய் திருச்சியிலே விற்கிறபோது, அதைத் திருச்சியிலிருந்து வாங்கிக் கொண்டுபோய் திருநெல்வேலியில் விற்கிறபோது இப்படி மூன்று இடங்களிலே 5 ரூபாய் 5 ரூபாய் வீதமாக மொத்தம் 15 ரூபாய் 100 ரூபாய்க்கு அதிகப்படுகிற காரணத்தினாலே 115 ரூபாய் கொடுத்து வாங்கவேண்டிய நிலை மக்களுக்கு ஏற்படுகிறது. அதைப்போலவே ஏற்கெனவே துணிகளுக்கு எக்சைஸ் டியுட்டிதான் போடுவார்கள், கைத்தறிக்கோ மற்றவைகளுக்கோ விற்பனை வரி கிடையாது, ஏற்கெனவே ஒரு லட்சம், 2 லட்சம் விற்பனை ஆகிற இடங்களிலே கூட வரி இல்லாத காரணத்தினாலே அங்கேயெல்லாம் ஒழுங்காகக் கணக்குகளை எழுதுகிறார்கள். பிரச்சினை இல்லை அதிலே. இப்போது இந்த வரியைப் போட்டால் ஒரு வேஷ்டி, சேலை வாங்கினால் அதற்கு 10 ரூபாய் அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இன்னொரு நகரத்திற்குப் போனால் இன்னொரு 10 சதவீதம் போடுகிற நிலைமை இருப்பதால் இன்னொரு பத்து ரூபாய் அதிகமாகிறது. பொது மக்கள் தலையிலே — ஏற்கெனவே விலைவாசி உயர்வினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற சாதாரண மக்கள் மீது—இன்னும் பெரிய பாரத்தைத் தூக்கி வைக்கிறீர்கள்.



இந்த வரி சம்பந்தமாக வியாபாரிகளுக்கு ஏற்பட்ட தொந்தரவுகள் தொல்லைகள் ஏற்படும். அது மட்டுமல்ல, சென்னைக்கு நாங்கள் பஸ்ஸிலே வருகிறபோது பார்க்கிறோம். செக்போஸ்டிலே எல்லா லாரிகளையும் வரிசையாக நிறுத்தி வைத்துப் பார்ப்பதைப் பார்க்கிறோம். அதைப்போலவே இந்த வரியைக் கொண்டுவந்தால் ஒவ்வொரு நகரத்திலேயும் லாரிகளை நிறுத்தி என்ன என்ன பொருட்கள் இருக்கின்றன, இன்வாய்சை கொண்டுவா என்று சொல்லி கேட்கின்ற நிலை ஏற்பட்டு அதன் காரணமாக லாரிகள் மூலமாகப் பொருட்களைக் கொண்டு வருவதிலே காலதாமதம் ஏற்படும்.

இந்த சேல்ஸ்டாக்ஸ் என்பதை 1937 ஆம் ஆண்டிலே இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழ்நாட்டிலேதான் கொண்டு வந்தார்கள். மதுவிலக்கைக் கொண்டுவந்ததற்காக அப்போது ஒரு பைசா என்று—அந்த ஒரு பைசா இன்றைக்கு அரை பைசா தான் மதிப்பு வரும்—ராஜாஜி முதலமைச்சராக இருந்தபோது கொண்டுவரப்பட்டது. அப்போது அதன் மூலமாக வருமானம் அரசுக்கு 22 கோடி ரூபாய் தான் வந்தது. இன்றைக்கு அதுவே வளர்ந்து கிட்டத்தட்ட 600 கோடி ரூபாய்க்கு உயர்ந்திருக்கிறது. சாதாரணமாக ஒரு ஆள் ஒரு மனிதன்மீது 120 ரூபாய் வரையில் வரியைத் திணிக்கக்கூடிய நிலைமை ஏற்கனவே இருக்கிறபோது இப்போது இந்த நுழைவு வரி என்ற முறையிலே கொண்டுவருவது சரியல்ல, அத்தனை பேர்களும் இந்த வரி வேண்டாம் என்று சொல்கிறபோது, எதிர்க்கட்சிகள் எல்லாம் இது வேண்டாம என்று சொல்கிறபோது இது மக்களைப் பெரிதும் பாதிக்கும் என்றும் வியாபாரிகளுக்கு தொந்திரவுகளை, தொல்லைகளை ஏற்படுத்தும், ஊழல்களை அதிகப்படுத்தும் என்றும் அத்தனை பேர்களும் சொல்கிறபோது, இப்படியெல்லாம் இருக்கிறபோது வரி விதிப்பைக் கொண்டு வருவது நியாயமல்ல. இந்த நேரத்திலாவது இந்த எண்ணத்தை கைவிட்டு இந்த மசோதாவை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த வரி விதிப்பு சரக்குப் போக்குவரத்தில் மிகுந்த காலதாமதத்தை ஏற்படுத்தும், வியாபாரிகளுக்கு மிகுந்த தொந்திரவுகளை, தொல்லைகளை உருவாக்கும், ஊழல்கள் பெருகுவதற்கு வழிவகுக்கும், பொருட்களின் விலைகள் உயர்ந்து சாதாரண ஏழை எளிய மக்கள் பாதிப்புக்கு ஆளாவார்கள் என்ற காரணத்தினாலே இந்த வரிவிதிப்பைக் கைவிட்டுவிட்டு இந்த மசோதாவைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

(முற்பகல் 11-40)

திரு. பி. முகமது இஸ்மாயில்: மாண்புமிகு மாற்றுத் தலைவா அவர்களே, நுழைவு வரி மசோதாவிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிற விவாதத்தில் பங்கேற்று ஜனதா கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்திலே வைக்க விழைகிறேன். நுழைவு வரி மிக மிக பிற்போக்கான வரி; எனவே அது நிறுத்தம் செய்யப்பட வேண்டுமென்று

பொருளாதார சீர்திருத்தக் கமிஷன் தலைவர் அவர்களும், ஏனைய பொருளாதார நிபுணர்களும் கருத்து வழங்கி வருகிற இந்த வேளையில் தமிழக சர்க்கார் முனைந்து நின்று எங்கேயிருந்தோ இந்தப் புதிய வரியைக் கண்டுபிடித்து இங்கே திணிப்பதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறது. எனவே ஜனதா கட்சி இதை மிகக் கடுமையாக எதிர்க்கிறது. இந்த மன்றத்திலே நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்கிறபோது நிதியமைச்சர் அவர்கள் இத்தகைய வரி வரப்போகிறது என்று கோடிட்டு காட்டினார்கள். அப்போதே இந்த மன்றத்திலே பல கட்சிகளுடன் ஜனதா கட்சியும் கடுமையாக எதிர்த்தது. மேலவையிலே எதிர்ப்பு தெரிவித்ததாக செய்திகள் வந்தன. வணிக பிரமுகர்கள், வணிக சமுதாயம் முழுமையாக எதிர்த்துக் கொண்டிருக்கிறது. மக்கள் சமுதாயத்தில் பெரும்பகுதி இந்த வரியை முழுமையாக எதிர்த்துக் கொண்டிருக்கிறது. இந்த எதிப்புகளை எல்லாம் பொருட்படுத்தாமல் இந்த அரசு நுழைவு வரியை எப்படியும் நுழைத்து விடுவது என்று முனைந்து செயல்படுவதைப் பார்த்து நாங்கள் வேதனைப்படுகிறோம். இந்த வரி விதிப்பிற்கு சொலலப் படுகிற காரணம் அரசிற்கு அதிகமான செலவுகள் ஏற்படுகின்றன, செலவுகளை சரிகட்டுவதற்கு வருவாய் தேவை என்று நியாயம் கற்பிக்கிறார்கள். அதிகமான செலவுகள் ஏற்படுகின்றன என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். அதற்கு அதிகமாக வருவாய் தேவைப்படுகிறது என்பதையும் ஏற்றுக் கொள் கிறோம். அதிகமாக ஏற்படுகிற செலவுகளைச் சரிக் கட்டுவதற்காக ஏற்கெனவே பல வழிகளிலே வருவாய் ஆதாரங்களை நீங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். மதுவிலக்கைத் தளர்த்தியதன் காரணமாக ஏழைகள் சிரித்துக்கொண்டே இந்த அரசிற்கு 155 கோடி ரூபாய்களை வரியாகத் தந்து கொண்டிருக்கிறார்கள். மதிய உணவுத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். அதற்கு அதிகப் படியாகப் பணம் தேவைப்படுகிறது, 134 கோடி ரூபாய் பணம் தேவைப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இங்கே இதற்கு முன்னாலே சுட்டிக்காட்டிய ஒரு கருத்தை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். மதிய உணவுத் திட்டத்திற்குப் புதிய பெயர் வைத்த காரணத்தினால் 134 கோடி ரூபாய் இந்த அரசு செலவிடுகிற ஒரு கட்டாய நிலைக்கு தள்ளப்படுகிறதோ என்ற அச்சம் எங்களுக்கு உண்டு; இதை நான் சொல்வதற்கு காரணம் இதேமாதிரியான திட்டத்தை ஆந்திரா மநிலமும் அமல்படுத்திக். கொண்டிருக்கிறது. அதன் பெயர் மதிா உணவுத் திட்டம்டி அந்தத் திட்டத்தின் செலவை சரிக்கட்டுவதகாக 100 கோக ரூபாயை அவர்கள் மத்திய அரசிலேயிருந்து மானியமாய்ப் பெறுகிற வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் இங்கே நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் மதிய உணவுத் திட்டத்திற்கு முதல்வரின் சத்துணவுத் திட்டம் என்று பெயர் மாற்றி வத்ததன் காரணத்தால் மத்திய அரசிலேயிருந்து அத்தகைய மானியத்தைப் பெறுவதற்கு வகையற்ற நிலையில் இருக்கிறோம். எனவே அரசு 134 கோடி ரூபாய் அதிகமாகச் செலவிட வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. மத்திய அரசு நமக்கு உதவி செவதாகவும் இல்லை. எனவோ



இந்த மன்றத்திலே கேட்டுக் கொள்வது, மதிய உணவுத் திட்டத்தையும் மக்கள் தருகிற வரிப்பணத்திலேயிருந்து தான் நாம் அமல்படுத்துகிறோம். முதல்வரால் கொண்டு வரப்படுகிற திட்டம், முதல்வரின் திட்டம் என்று பெருமையாகக் கூறிக் கொள்வதுண்டு. ஆனால் திட்டங்கள் அனைத்தும் அரசின் திட்டங்களாக வெளியிடப்படுகின்றன. ஆனால் மதிய உணவுத் திட்டம் என்பதை முதல்வரின் திட்டம் என்று எதற்காகப் பெயர் வைத்தீர்கள் என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஒருவேளை அரசாங்கத்திற்கு விளம்பரத்திற்கு அது துணை புரியலாம். ஆனால் அதேநேரத்தில் இப்போது மக்கள் 100 கோடி ரூபாயை இழந்திருக்கிறார்களே, அதை கணக்கில் எடுக்க வேண்டாமா என்று கேட்டுக் கொள்கிறேன். அதிகமான செலவுகளைச் சரிகட்டுவதற்காகப் புதிய வரிகளை திணிக்க இந்த அரசு முனைந்து கொண்டிருக்கிறது. இங்கே எதிர்ப்புக் குரல் எழுப்பப்பட்ட போது பல பொருள்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுமென்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே உறுதியளித்தார்கள், ஆனால் அந்த பொருள்களுக்கு இதுவரையில் விதிவிலக்கு அளிப்பதற்கான திருத்தங்கள் இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப் படவில்லை. இருக்கிற நிலையில் இந்தச் சட்டம் நிறைவேறுவதாக இருந்தால், இங்கே சுட்டிக் காட்டியிருக்கிற அத்தனை பொருள்களுக்கும் ஒட்டுமொத்தமாகச் சுட்டிக்காட்டியிருக்கிற 13 பொருள்களுக்கும், அதன்கீழ் வருகிற நூற்றுக்கணக்கான பொருள்களுக்கும் வரி விதிப்பதற்கான அதிகாரத்தை இந்த அரசு இந்தச் சட்டம் மூலமாகப் பெறுகிறது என்பதை மறந்துவிடக் கூடாது. எனவே தான் நீங்கள் வாக்குறுதி அளித்ததைப் போல, விதிவிலக்கு என்று சுட்டிக்காட்டுகிற போது, அந்தப் பொருள்கள் மீது வரிவிதிப்பு செய்வதற்கான அதிகாரம் இந்த அரசிற்கு இல்லாமல் போய்விடும். இப்போது அந்த அதிகாரத்தை இந்தச் சட்டத்தின் வாயிலாக நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். அதற்கு விதியளிக்கிற அதிகாரத்தை நிர்வாகத் துறைக்கு வழங்கயிருப்பதாகச் சொல்லப்படுகிறது. நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்வது நிதி ஆதாரத்தை தேடிக்கொள்கிறபோது, குறிப்பாக புதிய வரிகளை புகுத்துகிறபோது இந்த மாமன்றத்தின் அங்கீகாரத்தையும் ஆதரவையும் பெற்று சட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்பது தான் மரபு. அந்த மரபுகளை எல்லாம் மீறி நிர்வாகத் துறைக்கு அதிகமான அதிகாரத்தை சட்டத்தின் வாயிலாக, இந்த சட்டமுன்வடிவு வழங்குவதற்கு முற்படுகிறதோ என்ற சந்தேகம் எங்களுக்கு ஏற்படுகிறது. இங்கே இதனால் வசூலிக்கிற தொகையில் ஒரு பகுதியை உள்ளூரிலேயிருக்கிற அமைப்புகளுக்கு வழங்கிவிடுவதற்கான குறிப்பையும் பிரிவு 34 சுட்டிக்காட்டுகிறது; அது எந்த அளவிற்கு எந்தெந்த நகரசபைகளுக்கு அல்லது உள்ளூர் பகுதிகளுக்கு வழங்கப்படுகிறதென்பதை இந்த சட்டத்தில் கோடிட்டுக் காட்டவில்லை. எனவே அந்தக் கொண்டிருக்கிற அதிகாரத்தை நிர்வாகமே தங்களுடைய கரங்களில் வைத்திருக் கிறதென்று இதிலேயிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. இந்தப் புதிய வரியின் வாயிலாக எனக்கு முன்னால் பேசிய

(திரு. பி. முகமது இஸ்மாயில்) [1983 ஏப்ரல் 27

மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளதைப் போல. ஊழல்கள் அதிகமாகும்; விலைவாசிகள் ஏற்றம் பெறும். ஏற்கனவே, விலைவாசி ஏற்றம் காரணமாக, மக்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். இப்பொழுது போடும் வரியினால், மக்கள் இன்னும் அதிகமாகப் பாதிக்கப்படுகிற நிலை ஏற்படுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விழைகிறேன். ஏற்கனவே, மத்திய அரசாங்கம் பல கோடிக்கணக்கான ரூபாய்களை வரியாக விதித்திருக்கிறது. விலைவாசிகள் கட்டுக்கடங்காமல் ஏறிக் கொண்டே இருக்கின்றன. ஏழை, எளியவர்களுக்கு அத்தியா வசியமான பண்டங்கள் அத்தனையின் விலையும் ஏறிக் கொண்டே இருக்கின்றன. சென்ற சில தினங்களுக்கு முன்னால் பத்திரிகையிலே வந்த செய்தியைப் பார்க்கும்போது, மிகுந்த அச்ச உணர்வு நமக்கு ஏற்படுகிறது. விலைவாசிகள் எந்த அளவிற்கு அதிகமாக ஏறிக் கொண்டிருக்கின்றன என்பதைப் புள்ளி விவரங்கள் நமக்குத் தகவல் தந்து கொண்டிருக்கின்றன. சென்ற 15 தினங்களுக்கு முன்னால், நுகர்வோர் குறியீட்டு எண் ஏறி, மத்திய அரசின் பணியாளர்களுக்கு இரண்டு முறைகள் பஞ்சப்படி தருவது என்று அரசு முடிவு மேற்கொண்டிருக்கிறது. அதோடு நின்றுவிடாமல் எஞ்சிய குறுகிய 3 மாதங்களிலே நுகர்வோர் குறியீட்டு எண் 500–ஐத் தாண்டி விட்டது. 1960-61 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாக எடுத்துக் கொண்டால், 500-ஐத் தாண்டியிருக்கிறது. அதைக் கணக்கிட்டுப் பார்க்கின்றபொழுது, இன்னும் 3 தவணைகள் பஞ்சப்படி தருகின்ற அளவுக்கு மத்திய அரசும் மாநில அரசும் தள்ளப் படுகின்ற நிலையிருக்கிறது. அந்த அளவுக்கு விலைகள் மிக அதிகமாக ஏறிக் கொண்டிருக்கின்றன. சுருக்கமாகச் சொல்வது என்றால், மாதம் ஒன்றுக்கு 8 புள்ளிகளை, நுகர்வோர் விலையீட்டுக் குறி எண் தாண்டிக் கொண்டு வருகிறது என்பதை இந்த மன்றத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இத்தகைய கடுமையான புதிய வரி விதிப்பின் வாயிலாக மக்களுக்கு ஏற்படுகின்ற இந்தத் துயரங்களையெல்லாம் கணக்கில் எடுத்து, பொருள்களின் விலைவாசிகள் ஏற்றப்படுவதற்கு மத்திய அரசோடு நாமும் போட்டியிட்டுக் கொண்டு புதிய வரிகளைப் புகுத்தி, விலைவாசி ஏற்றத்திற்குத் துணை நிற்க வேண்டா மென்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே நீங்கள் சுட்டிக்காட்டியிருக்கிற பொருள்களைப் பார்க்கும் போது, அத்தியாவசியமான பொருள்களுக்கு வரி விதிக்கப்படுவதில் முனைப்பு காட்டப்படுகிறது. அன்றாடத் தேவைப் பொருள்கள் அனைத்தையும் இங்கே சுட்டிக்காட்டி யிருக்கிறீர்கள். லக்சரி பொருள்கள் ஏதாவது இந்த அரசின் கண்ணோட்டத்தில் வந்ததா என்பதை நாம் எண்ணிப் பார்க் கின்றபொழுது, ஆடம்பரப் பொருள்கள் அனைத்தும் விடுதலை பெற்றிருக்கின்றன. அந்த ஆடம்பரப் பொருள்கள் உங்கள் கண் களுக்கு தெரிந்ததாகவே தெரியவில்லை. ஆடம்பரப் பொருள் களை எல்லாம் விட்டுவிட்டு ஏழைகள் அன்றாடம் உபயோகிக் கின்ற பண்டங்கள் மீது......



1983 ஏப்ரல் 27]

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** : மாற்றுத் தலைவர் அவர்களே, ஆடம்பரப் பொருள்கள் விடப்பட்டது என்று சொன்னார்கள். என்ன, என்ன பொருள்கள் விடப் பட்டிருக்கின்றன என்று சொன்னால், அதை அரசு யோசிக்கும்.

திரு. பி. முகமது இஸ்மாயில்: எலெக்ட்ரிக் கூட்ஸ் என்று சொல்லியிருக்கிறீர்கள். எலெக்ட்ரிக் கூட்ஸில் நீங்கள்விளக்கமாகத் தந்திருக்கிற பொருள்களைப் பார்த்தபொழுது, டெலிவிஷன் போன்ற பொருள்களை நாம் பார்க்க முடியவில்லை, ஏர் கூலர் போன்ற பொருள்களை நாம் பார்க்க முடியவில்லை. இந்தப் பொருள்களை எல்லாம் ஆடம்பரப் பொருள்கள் என்ற அளவுக்கு இன்று அளவும் இந்தச் சமுதாயம் ஏற்றிருக்கிறது. அவைகள் எல்லாம் உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையென்பதை நான் சுட்டிக்காட்ட விழைகிறேன். ஆக, ஏற்கனவே, எனக்கு முன்னால் பேசிய தோழர்கள் சுட்டிக்காட்டிய குறைகளை எல்லாம் போக்குகின்ற வகையிலும் இந்த சட்ட முன்வடிவை, முடிந்தால் வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டும்; இல்லாவிட்டால், ஒரு செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி, மிக ஆழமாக ஆராய்ந்து, பிறகு கொண்டு வரவேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

(முற்பகல் 11–50)

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நுழைவு வரி விதிப்பதற்கு வகை செய்யும் சட்ட முன்வடிவில் காந்தி–காமராஜ் தேசிய காங்கிரசினுடைய கருத்தாக, அதனை இங்கே கொண்டு வருதல் கூடாது என்பதற்கு ஆதாரமாக சில சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், கொண்டு வந்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிலபல பொருள்களை இந்த வரவு செலவுத் திட்டத்திலே அறிவித்திருந்தார்கள். ஏழை, எளியவர்கள் பயன்படுத்திக்கொண்டிருந்த சிம்னி விளக்கு போன்றவைகளுக் கெல்லாம் வரி விலக்கு கொடுத்தார்கள், மாட்டுத் தீவனத்திலே மரவள்ளிக்கிழங்கு திப்பி போன்றவைகளுக் கல்லாம் இருந்த வரியினை இல்லையென்று சொன்னார்கள். ''கோவலர் வாழ்க்கை கொடும்பாடு உடையது அன்று'' என்று சொன்னதை போலே, அந்த ஆவினங்களை வைத்துப் பிழைக்கின்றவர் களெல்லாம் இவருக்குப் பாமாலை சூட்டுகின்ற அளவிற்கு மகிழ்ச்சியடைந்தார்கள். அந்த அமைச்சரிடமிருந்தா இந்த வரி வருகிறது என்பதனை எண்ணிப் பார்க்கின்ற பொழுதுதான் என்ன காரணம் என்று தெரியாமல் நாங்கள் திகைக்கின்றோம். மலரிலிருந்து நல்ல கள்ளை எதிர்பார்க்கிறோமே தவிர, கல் ல அல்ல.

அதைப்போலத்தான், இந்த வரியைப் பொறுத்தவரையில் நுழைப்பு வரியாக இருக்கின்ற இந்த வரி பலரினுடைய உழைப்பைக் கெடுக்கும் என்பது எங்களுடைய எண்ணம். ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்றபொழுது இது சட்ட வடிவம்

அப்படியே பெறுமேயானால், ஏன் இது சட்டமாகவே ஆகுமேயானால் இலஞ்சத்திற்கு மஞ்சம் அமைத்துக் கொடுத்ததாக அமையும்; ஊழலுக்கு ஊற்றுக்கால் தோண்டிக் கொடுத்ததாக அமையும்.

இன்னும் சொல்லப்போனால், அரசுக்கு வரி செலுத்துவதை விட, அரசுக்கு வரி கட்டுவதைவிட அதிகாரிகளைச் சரிக்கட்டுவது எப்படி என்று சிந்திக்கின்ற வியாபாரிகளினுடைய பட்டியலை அதிகரிக்கச் செய்யும். சாலையோரத்திலிருக்கின்ற சோதனைச் சாவடிகள் அத்தனையும் வேதனைச் சாவடியாக ஆகும். அவை சாவடிகளா அல்லது நம்மைச் சாகடிப்பவைகளா என்று எண்ணுகின்ற அளவிற்கு வணிகர்களும், அந்தப் பொருட்களை எடுத்துச் செல்லுகின்றவர்களும் வேதனையால் வெந்து, நொந்து துடிக்கின்ற அளவிற்குச் செயல்கள் நடைபெறும்.

ஆதலாலே, இந்தச் சட்ட முன்வடிவின் முன்னால் நாம் என்னென்ன பிரச்னைகளைச் சந்திக்க இருக்கின்றாம் என்று சொல்லுகின்ற தகவல்களை நான் இங்கே தர இருக்கிறேன். விலைவாசி ஏறும் என்பதிலே, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போலவே உலகத்திலிருக்கின்றவர்கள் அத்தனை பேர்களும் ஒத்துக் கொள்வார்கள். அந்தக் கருத்து உண்மைதான் என்று. ஆனால் உயர்கின்ற விலைவாசிக்கேற்ப வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களினுடைய வாங்கும் சக்தி, அதன் மூலம் மக்களினுடைய நிதிநிலை உயருமா என்றால் நிச்சயமாக உயராது.

இது ஆக்ட்ராய் என்று சொல்லப்பட்டு, அந்தப் பெயரே சரியாக இல்லை என்று அதற்குப் பதிலாகத்தான் நம்முடைய அமைச்சரவர்கள் நுழைவு வரி என்று போட்டிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். இது ஆக்ட்ராயையும் சேரவில்லை; வெறும் நுழைவு வரியையும் சேரவில்லை. இந்த இரண்டும் சேர்ந்த ஒரு கலப்பட வரியாக இருந்து கொண்டிருக்கிறது.

இதைப் பொறுத்தவரையிலே பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் இருக்கின்ற நேரத்திலேயும் சில அதிகாரிகள் இந்த வரிகளை நீங்கள் போடலாமே என்று சொன்னது உண்டு. ஏனென்றால் அமைச்சர் பெருமகனுக்கு ஆலோசனை சொல்லுகின்ற அதிகாரிகளிலே சிலர் இப்படிப்பட்ட வரிகளின் மூலம்தான் வருமானத்தைப் பெருக்க முடியும் என்று நினைத்து அதனை அமைச்சர் பெருமதனாருக்குச் சொல்லியிருக்கலாம். இதே கருத்துக்களை, இதே ஆலோசனைகளை முன்பு முதலமைச்சராக இருந்த பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் ஆட்சிக் காலத்திலேயும் இந்த அதிகாரிகள் சொன்னது உண்டு. ஆனால், கூடாது என்று ஒரே வரியிலே அதனைத் தடுத்து நிறுத்தி விட்டார்; இந்த வரி வேண்டாமென்று ஒரு வரியிலே தடுத்து நிறுத்தியவர் அவர்.





அதற்குப் பின்னாலே பேரறிஞர் அண்ணா என்று போற்றப்பட்டு முதலமைச்சராக இருந்தவர் காலத்திலேயும் அதிகாரிகள் ஆலோசனையைச் சொன்னார்கள். இவைகளையெல்லாம் ஏதோ உங்களுடைய உணர்வுக்குத் தருகின்ற உணவாக நான் கருத வில்லை. ஏற்கனவே அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து எடுத்த பகுதிகளைக் கையிலே வைத்திருக்கின்ற காரணத்தினாலே சொல்கிறேன். அவர்கள் இவைகளையெல்லாம் ஆதரிக்கவில்லை. ஆதலால், அந்த வரிகள் அந்தக் காலத்திலே போடப்படவில்லை எங்கள் பெருந்தலைவர் காமராஜருடைய காலத்திலே இது வேண்டாமென்று ஒதுக்கப்பட்டு, தள்ளப்பட்டது. அதைப் போலவே பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலேயும் வெறுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டது. அப்படிப்பட்ட ஒன்றை நீங்கள் இங்கே மீண்டும் கொண்டு வர வேண்டுமா என்பதுதான். Tapping the rich என்று சொல்கிறார்கள். அதுதான் கொள்கை என்றெல்லாம் பேசுகிறோம். Tapping the rich and pating the poor என்று சொல்லுகின்ற பொழுது இந்த நுழைபபு வரிச் சட்டத்தை நான் பார்க்கிறேன். அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரங்கள் அநேகம்; அனந்தம். அந்த அதிகாரங்களை அவர்கள் வைத்துக் கொண்டிருந்தால் எத்தனை அனர்த்தம் வரும் என்பதை நம்மால் எண்ணிப்பார்க்க முடியவில்லை. ஆகவே, wrapping the rich with so much of power என்று சொல்லுகிறபோது என்ன நடக்கும்? grabbing the merchants ஆக வந்து சேரும். அவர்களை யெல்லாம் ஒரு பொறியிலே மாட்டி வைத்தது போலேயாகும். அவர்களை அதிகாரிகள் அலைக்கழிக்கின்ற ஒரு சூழ்நிலை அங்கே உருவாகும். அதைப்போலவே உற்பத்தி நமக்குக் குறைந்து போகும். இங்கிருக்கின்ற தொழிலை வெளியே தூக்கிக்கொண்டு போகலாமா என்று சொல்லுகின்ற சிந்தனை தொழிலதிபர் களுக்கு ஏற்படும். இங்கே இன்று வேலை செய்து பிழைத்துக் கொண்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் உருவாகுமோ என்று சொல்லுகின்ற அச்ச நிலை ஏற்படும்.

இவைகளையெல்லாம் பார்த்துத்தான் நான் மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்வேன், நல்ல செய்திகளை யெல்லாம் உங்கள் காதிலே போடுகின்ற நேரத்தில், நீங்கள் அவைகளை ஏற்றுச் செய்வீர்கள் என்ற நம்பிக்கையின் அடிப் படையிலே சொல்கிறேன். இந்த நுழைப்பு வரியிலே என்ன நியாயம் இருக்கிறது என்பதைச் சிந்துத்துக் கூட எங்களால் பார்க்க முடியவில்லை.

உதாரணமாகச் சொல்லப் போனால், ரூ. 20 கோடி தான் வருவாய் வரும் என்று நினைக்கிறீர்கள். நீங்கள் இதன்மூலம் அறிந்தவர்கள் சொல்கிறார்கள். ரூ. 200 ஆனால் விவரம் வருமானம் என்று. ரூ 200 கோடிக்கு கோடியைத் தாண்டும் ஒரு நூறு என்ன, பல நூறு கோடி, வேறு மேல் வருமேயானால், விளைந்து கிடக்கின்ற கதிர்களாக யாருக்கோ போய்ச் சேரும்.

இருந்து கொண்டிருக்கின்ற கழனியிலே போகின்ற ஒரு களிறானது' அதன் வாய்க்குப்போவது கொஞ்சம், அதனுடைய காலிலே பட்டு சிதறுவது அதிகம் என்பது போல, அரசுக்குப் போகிற வருமானம் கொஞ்சமாகும் என்றும், அதிகாரிகளுக்குப் போகின்ற லஞ்சம் மிக அதிகமாகவும் இருக்கும் என்பது தான் இன்று இதனைத் தெரிந்தவர்கள் போடுகின்ற கணிப்பு.

பிற மாநிலங்கள் 14, இப்படிப்பட்ட வரிகளைப் போட வில்லையா என்று அமைச்சரவர்கள் ஒரு வினாவை கொடுக்கிறார்கள். பிற மாநிலங்கள் எதற்காக போட்டன என்கிற விவாதத்திற்குள்ளே நுழையாமல், பிற மாநிலங்கள் செய்வதில் நன்மை இருந்தால், அதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமே தவிர, பிற மாநிலங்கள் மிகப் பிற்போக்காக ஒன்றைச் செய்கின்றபோது பேசுகின்ற நாம் அதனை எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதுதான் என்னுடைய பணிவான வேண்டுதல்.

பக்கத்திலே இருக்கின்ற மாநிலத்தை எடுத்துக் கொண்டால், ஆந்திராவிலே 1981—ல் இந்த வரியினை போட்டார்கள். அங்கு இருக்கின்ற வணிகப் பெருமக்கள், அறிஞர் பெருமக்கள். பொது மக்கள் அத்தனை பேரும் எதிர்ப்பு தெரிவித்த காரணத்தினாலே ஆந்திராவிலே 1981-லே கொண்டு வரப்பட்டது இப்போது கைவிடப்பட்டது. ஆக பக்கத்து மாநிலமே, கிருஷ்ணா நீரை விடுகின்ற மாநிலமே, அதைக் கைவிட்டு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கின்றபோது, என்றாவது அதனுடைய ஞாபகம் வரவேண்டுமென்றபதற்காகத்தான் அதன் தொடர்பாக நாம் இதைக் கைவிடலாமா என்று சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதுவும் ஆந்திராவே விடுகின்றது என்கிற போது, இன்னொரு முக்கியத்துவம் இருக்கிறது. 1983-84-லே விற்பனை வரியா வர இருப்பது, ரூ. 710 கோடி என்று சொல்கிறார்கள். ஏறத்தாழ 4.8 கோடி மக்களைக் கொண்டிருக்கிற தமிழகத்திலே 710 கோடி ரூபாய் வருமானம் வரும் என்று நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் ஆந்திர மாநிலம் 6 கோடி மக்களைக் கொண்டதாக இருந்தாலும், இன்றைக்கு அருகாமையிலே கூட அந்த வருமானத்தை எட்டிப் பிடிக்க முடியாத நிலையிலே அது இருந்து கொண்டிருக்கிறது. நம்மை விட ஏறத்தாழ ரூ. 150 கோடிக்கு குறைவானது தான் வருமானம். 6 கோடி மக்கள். ஆனால் நம்முடைய அளவிற்கு அவர்கள் வருவாய் இல்லை. ஆக நீங்கள் தலைக்கு தலை என்று கணக்குப் பார்த்தால், 'பர் கேபிட்டா'' நாம் கொடுக்கின்ற அளவிற்கு, பக்கத்திலே இருக்கின்ற கேரளாவோ, கர்நாடகமோ, ஆந்திராவோ, அல்லது வேறு எந்த மாநிலமோ, இந்த அளவிற்கு வரி செலுத்தவில்லை என்று சொல்கிற அளவிற்கு, விற்பனை வரியின் மூலமாக மேலும் பெருக்கிக் கொண்டிருக்கிறோம். அதற்கு மேலே இப்போது என்ன நடக்கிறது என்று சொன்னால், இங்கிருந்து ஒவ்வொரு பகுதிக்கு போகும்போது சில மாற்றங்கள் வரும் என்று நான் கருதுகின்றேன். உதாரணத்திற்கு சிலவற்றைச் சொல்கிறேன். வெளியிலிருந்து வருகின்ற ஒவ்வொரு சரக்கிற்கும்,





இந்த ஊரிலே மூலப்பொருள்கள் நமக்குக் குறைவு. இன்ஜினீயரிங் குட்ஸ் என்று நாம் எல்லாம் வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்கின்ற அளவிற்கு விற்பண்ணர்களாக இருக்கிறோம். விற்பனையிலும் கெட்டிக்காரர்களாக இங்கே இருக்கிறோம். ஆனால் எத்தனை பொருள்கள் இங்கே கிடைக்கிறது? சேலத்திலிருந்து வரும் உருக்கு அதை நினைத்துப் பார்த்தால், நெஞ்சு உருகுகிறதே தவிர, இங்கே உருக்கு வரவில்லையே. உருட்டு ஆலைதான் வந்திருக்கிறது. வேறு எது வருகிறது? உருக்கு வருகிறதா, இரும்பு வருகிறதா? எல்லாவற்றையும் வெளியூரிலிருந்து கொண்டுவர வேண்டியிருக்கிறது. வெளியூரிலிருந்து கொண்டு வந்து, இந்த ஊரிலே நுழைவு வரியைச் சேர்த்து விதித்தால்' பக்கத்தில் இருக்கின்ற மாநிலத்தோடு நாம் போட்டியிட்டு வணிகத்தைப் பெருக்க முடியுமா? நாம் உற்பத்தி செய்த பொருள்களை விற்பனை செய்ய முடியுமா? என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

உதாரணமாக சிமெண்டிற்கு 82—லே நாம் 8 சதவிகித வரி விதித்திருக்கிறோம். இப்போது 12 சதவீதம் என்று வரி விதித்திருக்கிறோம். இப்படி 12 சதவீதமாக்கியதற்கு பின்னால் அந்த சிமெண்டை கோடீஸ்வரன் மட்டும் தான் பயன்படுத்துகிறானா, அந்த தெருக் கோடியிலே இருக்கிறவன் ஒரு சின்ன வீட்டைக் கட்டுவதற்காக அதைப் பயன்தடுத்துகிறான் அல்லவா? அந்தப் பகுதியிலே இருக்கிற, ஒரு சிற்றூரிலே இருக்கிற ஒரு விவசாயி தனது கிணற்றிற்குப் பயன்படுத்துகிறான் அல்லவா? இப்படிப்பட்டவர்கள் உபயோகிக்கிற சிமெண்டிற்கு வரி போடப் பட்டிருக்கிறது.

அது மட்டுமன்று. கைத்தறித் துணிக்கு இன்றைக்கு அந்த வரிவிலக்கு அளித்திருப்பதாகச் சொன்னார்கள், கைத்தறித் துணிக்கு விலக்கு என்று சொன்னதை மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் இங்கே படித்தும் உறுதிபடுத்தினார்கள். அது தவிர மற்ற மாநிலத்தவரோடு போட்டியிடுகின்ற டெக்ஸ்டைல்ஸ் களிலே, இப்போது சென்னையிலே ஏராளமான டெக்ஸ்டைல்ஸ், கோயம்புத்தூர் போன்ற பகுதிகளிலே உற்பத்தி ஆகின்ற துணிகள் எல்லாம் வெளி மாநிலங்களுக்குப் போவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அங்கே இந்த வரியைப் போட்டு, வரியைப் போட்டு எங்கே நாம் வைத்திருக்கின்ற சந்தைகளை பக்கத்திலே இருக்கின்ற மாநிலம் பிடித்துக்கொள்ளுமோ என்று சொல்கிற அச்சம் இருக்கிறது, அதைப்போலவே கைத்தறித் துணி, கைத்தறி பட்டு, கதர்த் துணி, இது தவிர மற்ற துணிகளுக்கு எல்லாம் வரி என்று சொல்கிற போது, சைக்கிளிலே வைத்து வியாபாரம் செய்கின்றவன் இருக்கிறான். சிறிய சிறிய அளவிலே வியாபாரம் செய்கின்றவன் இருக்கின்றான் இவர்கள் எல்லாம் கிராமப் புறங்களிலே இருக்கின்ற மக்களுக்குக் கூட, கண்ணிலே பளபள வென்று தெரியட்டும் என்று பட்டுத் துணிகளை, கைத்தறித் துணியைப் போல் இல்லாது, பட்டுத் துணிகளைக் கொண்டு

(நண்பகல் 12–00)

போவது உண்டு. துணியை எடுத்துக்கொண்டால் * ** வரி போடலாமா? எல்லோராலும் பாராட்டப்படுகின்ற எல்லோருடைய கண்ணையும் கவருகின்ற ** பட்டுக்கு நீங்கள் வரி போடுகிறோம் என்று சொன்னால் * * * நான் சொல்வது இங்கே நெய்யப்பட்ட, அல்லது இயந்திரத்திலே நெய்யப்பட்ட பட்டுக்கு, சாதாரண பட்டுப்புடவை என்று சொல்கிறோமே, கிராமத்திலே இருக்கின்ற பட்டிக்காட்டிலேயிருக்கிற பெண்கள் கூட அவர்களுடைய திருமணத்திலாவது பயன்படுத்த வேண்டுமென்று நினைக்கிறார்களே, அந்த பட்டுக்குமா நாம் வரி போடுவது, அதுவும் நுழைவு வரி போடுவது என்பதை எல்லாம் எண்ணுகிற போது, எத்தனையோ வகையிலே மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல ஏற்கனவே புகையிலைக்கும், துணிக்கும் சிமெண்ட்டுக்கும் எக்சைஸ் டியூட்டி இருக்கிறது. ஆக விற்பனை வரி இல்லாமல் எக்சைஸ் டியூட்டி என்று இருப்பதற்கு நாம் வரி போடுவதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறோமோ என்ற ஐயப்பாடு நமக்கெல்லாம் ஏற்படுகிறது. எக்சைஸ் டியூட்டிலேயிருந்து நமக்கு கிடைக்க வேண்டிய விகிதாச்சாரம் அதிகமாக கிடைக்க வேண்டும் என்று சொன்னால், அதற்கு வாதாடுவதற்கு அதற்காக போராடுவதற்கு இந்த ஆளும் கட்சியோடு சேர்ந்து போராடுவதற்கு நாமும் தயாராக இருக்கிறோம். மத்திய அரசாங்கம் நமக்குக் கூடுதலாகத் தரவேண்டுமென்று சொல்வதற்கு தயாராக இருக்கிறோம். ஆனால் அதேநேரத்திலே மீண்டும் மீண்டும் வரி என்று சொல்கின்ற நேரத்திலே, உதாரணத்திற்குச் சொல்லப்போனால் வெளியிலேயிருந்து வருகின்ற எல்லாப் பொருள்களுக்கும், அந்தப் பொருள்களின் மீது நீங்கள் வரி விதிக்கிறீர்கள் என்று சொல்கிற எண்ணம் வந்தது என்று சொன்னால் வணிகர்கள் வரியைத் தவிர்ப்பதற்கு முயற்சித்திருக்கலாம். நான் ஏமாற்றுவது என்று கூடச் சொல்லவில்லை. நான் அவாய்ட்ன்ஸ் என்று சொல்கிறேன். சீட்டிங் என்று கூடச் சொல்லவில்லை. ஆனால் அவாய்ட்ன்ஸ் என்று வருகிறது அல்லவா. உதாரணமாக வெளியிலேயிருந்து கப்பல் மூலம் வருகின்ற ஒன்றினை நீங்கள் டெஸ்டிநேஷனுக்குத்தான் போய்ச் சேருகின்ற இடத்திற்குத்தான் வரி என்ற நிலை இருக்குமானால் அவர்கள் இங்கே சென்னையிலே அதை இறக்குவதற்குப் பதிலாக டெஸ்டிநேசன் கூடுவாஞ்சேரி என்று போட்டு, கூடுவாஞ்சேரியிலே ஒரு கோடவுனைப் போட்டு அதன்மூலம் இங்கே வருகின்ற வரியை அவர்கள் தவிர்ப்பதற்கு முயலலாம் அல்லவா, அப்படித் தவிர்ப்பதற்கு முயன்றால் என்ன செய்வது என்பதற்குத்தானோ என்னவோ அதிலே வரி என்று சொல்

* * பேரவைத் தலைவரின் குறிப்புரைக்கிணங்க பட்டு என்று மாற்றப்பட்டது.

* * *பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.





கிறார்கள். எனவே கூடுவாஞ்சேரியிலே ஒரு கோடவுனை வைத்துக்கொண்டு அந்தக் கோடவுன் மூலமாக அந்த வணிகத்தை அவர்கள் செய்யத் தொடங்குவார்களானால், அரசாங்கத்திற்கு வருகின்ற வருவாய் எல்லாம் கெட்டுவிடுகின்றது என்று சொல்லுகின்ற கவலை எல்லாம் நமக்கு இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல் பெட்ரோலுக்கு நீங்கள் வரி போடுவதன்மூலம் ஒரு லிட்டர் பெட்ரோல் 13 காசு அதிகமாகிறது. ஒரு லிட்டர் டீசல் 7 காசு அதிகமாகிறது. வருகின்றவர்கள் தாம்பரத்திலே பிடித்துக்கொள்ள மாட்டார்களா? இங்கேயிருக்கின்ற வணிகர்கள் அவர்களுடைய வணிகத்திற்கு பாதகம் ஏற்படாதா? தாம்பரத்திற்கு ஒரு பட்டுத் துணி வருகிறது என்று சொன்னால், அதனை நுழைவு வரிக்கு உட்பட்ட ஒன்றாக நீங்கள் ஆக்கிவிடுவீர்கள். இவைகளையெல்லாம் நான் குறிப்பிட்டு முடிவுரையாக சொல்ல விரும்புவது நீங்கள் அதிகாரம் கேட்கிறீர்கள்? எந்த இடம் என்று அறிவிக்கின்ற உரிமை எங்களுக்கு வேண்டும். எவ்வளவு விகிதாச்சாரம் என்று அறிவிக்கின்ற உரிமை எங்களுக்கு வேண்டும். எவ்வளவு அபராதம் என்று விதிக்கின்ற உரிமை அதிகாரிகளுக்கு வேண்டும், இந்தச் சட்டப் பேரவையினுடைய மன்றத்தினுடைய உரிமைகள் அத்தனையையும் நீங்கள் கேட்கிறீர்கள். signing our own death w rrant. என்று சொல்வதைப் போல எங்களுடைய உரிமைகளை வெட்டிக் குழி தோண்டி புதைப்பதற்கு நாங்களே மண் வெட்டிக் கொடுப்பதைப் போல ஒரு காரியத்தை நாங்கள் செய்ய இயலாது என்ற காரணத்திற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக் கொள்வேன், இந்த வரியை எடுத்துவிடுங்கள். உங்களுடைய மதிப்பு, மரியாதை உயர்கின்ற அளவிலே வேறு வகையிலே நமது வருமானத்தைப் பெருக்குகின்ற அளவிற்கு காரியங்களைச் செய்யலாம். எனவே, இந்த சட்ட முன்வடிவை இந்த வரி விதிக்கின்ற இந்த சட்டத்தை வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டு, அதை வாபஸ் வாங்க முடியவில்லை என்றாலும் அதை செலக்ட் கமிட்டி என்று சொல்லுகின்ற அந்தக் கமிட்டிக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு சட்டப் பேரவை தற்காலிகத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நடந்து கொண்டிருக்கக்கூடிய இந்த விவாதத்திலே ஒரு சில கருத்துக்களை மட்டும் நான் இங்கே கூற விரும்புகிறேன். இந்த வரியைப் பொறுத்த வரைக்கும் இந்தியாவிலே பல மாநிலங்களிலே இருக்கின்றது என்று காரணம் சொல்லப்படுகின்றது. இங்கே பேசிய ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் மேற்கு வங்கத்திலே இருக்கிறது என்ற சொன்னார்கள். உண்மை. 1972 ஆம் ஆண்டிலே அங்கேயிருந்த ஆட்சியின்போது அது அங்கே கொண்டு வரப்பட்டது. ஆகவே இன்று இந்தியாவிலே பல்வேறு மாநிலங்களிலே இந்த வரி இருக்கிறது என்பது தமிழகத்திற்குப் பொருந்தாது என்று எதற்குச் சொல்கிறேன் என்றால் தமிழகத்திலே மிக உயர்ந்த அளவிற்கு விற்பனை வரி உயர்ந்து கொண்டே வருகிறது.

[திரு. என். சங்கரய்யா] [1983 ஏப்ரல் 27

ஓராண்டு காலம், இரண்டாண்டு காலம் என்ற கால அளவிலே மட்டும் 100 கோடி ரூபாய்க்கு மேல் விற்பனை வரியிலே அதிக வருமானம் தமிழகத்திற்கு கிடைத்து இருக்கிறது. இந்த விற்பனை வரி என்ற மறைமுகமான வரி மூலமாகவே பொருள்களின் விலை யானது ஏராளமாக உயர்ந்து இறுதியில் சாதாரண மக்களை அது பாதிக்கிறது என்பது தெரியும். இதிலே கொடுக்கப்பட்டு இருக்கும் பொருள்கள் மிகவு விரிவான ஒரு பட்டியல் என்ற வகையில் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இந்த விரிவான பட்டியல் பொருள்களின் மீது நுழைவு வரி போடப்படுமானால் நிச்சயமாக அடுத்து வரும் காலத்தில் தமிழகத்தில் பொதுமக்கள் வாங்கி உபயோகிக்கும் பொருள்களின் விலை அதிகரிக்கும் என்பது தெளிவாகத் தெரிகிறது. அரசாங்கத்திற்கு இதிலே சொல்லப் பட்டு இருப்பதுபோல் 20 கோடி சொச்சம் தான் வருமானம் என்று சொல்வதை நான் ஆட்சேபிக்கிறேன். காரணம் இது ஒரு மேஜிக் பறவை பறந்து விரிந்து வருகிறமாதிரி செய்யப்படக் கூடிய ஒரு வரியாகும். இப்போது கொடுத்து இருக்கும் திருத்தத்தின்படி பார்த்தால்கூட 2 சதவீத வரி விதிக்கப் படுகிறது என்று. இருந்தாலுங்கூட அது ஊராட்சிப் பகுதி, நகரியப்பகுதி, மற்றும் தமிழகத்தின் அனைத்து முனிசிபாலிட்டிகள் மற்றும் தமிழகத்திலே உள்ள 17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பஞ்சாயத்துக்கள் என்று எங்கே வேண்டுமானாலும் இந்த வரியைக் கொண்டு வரலாம் என்றால் இதன் வியாபகம் பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்க்குமேல் வரி வசூல் செய்வதற்கு இந்த அரசாங்கம் வழி வகுத்துக் கொண்டு இருக்கிறது என்பது தான் பொருள். இதற்கு பதிலாக நேரடியாக விவசாய வருமான வரியை உயர்த்துவதன் மூலமாக சற்று அதிகப் பணம் தமிழக அரசுக்கு பெற வாய்ப்பு இருக்குமானால், அது மக்களை பாதிக்காது. ஆனால் அந்த விவசாய வருமான வரி சம்பந்தப் பட்ட சட்ட முன்வடிவு இன்னும் ஆய்வுக் குழுவின் ஆய்வில் இருந்துகொண்டு இருக்கிற காரணத்தால் அதைப்பற்றி எந்த விதமான முடிவும் செய்யப்படாமல் இருக்கிறது. அந்த நேரடி யான வரி போடுவதுதான் சரியான பாதையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு இந்த வரி என்பது அரசாங்கம் சொல்வதைப்போல் பலமடங்கு தொகையைக் கொண்டு வரக்கூடிய, மக்களிடமிருந்து வசூலிக்கக்கூடிய ஒரு வரியாக இருக்கிறது என்பதை நாம் தெளிவாக உணர வேண்டும்.

இந்தச் சட்டத்திலே ஏராளமான உப பிரிவுகள் இருக்கின்றன. இது ஒரு சிறிய சட்டம் அல்ல. ஓரிரு பக்கங்களைக் கொண்ட சட்டம் அல்ல. எத்தனையோ பக்கங்களைக் கொண்ட சட்ட மாகும். இதிலே பெனல்டி—அபராதம்— போடப்பட்டு இருக்கும் பல ஷரத்துக்கள் இருக்கின்றன. செக்யூரிட்டி டெபாசிட் வாங்க வேண்டும் என்று சொல்லப்படும் பல ஷரத்துக்கள் எல்லாம் இதிலே இருக்கின்றன என்பதால் இதை நிதானமாக பரிசீலிக்கப் பட வேண்டிய கட்டாயம் இருக்கிறது. தமிழகத்தில் உள்ள சிறிய வியாபாரிகள், மத்திய தர வியாபாரிகள் மற்றும்



1983 ஏப்ரல் 27] (திரு. என். சங்கரய்யா)

அனைத்து ரக வியாபாரிகளும் இதற்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து இருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு இந்த வரியைக் கொண்டு வரலாம் என்று யோசனை தெரிவித்து இருக்கும் அதிகாரிகள் இந்த அரசுக்கு நல்லது செய்யவில்லை என்பது எங்களுடைய திட்டவட்டமான அபிப்பிராயம். காரணம், தமிழகம் முழுவதும் இன்றைக்குக் கடுமையான வறட்சி நிலவிக் கொண்டு இருக்கிறது. இதன் காரணமாக மக்கள் பெரிதும பாதிக்கப்பட்டு இருக்கும் சூழ்நிலை இருக்கிறது. தமிழகத்தில் உள்ள மக்கள் இந்த நிலையை எப்படிச் சமாளிப்பது என்று தெரியாமல் திகைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இத்தகைய நிலையில் இந்த வரியைக் கொண்டு வருவதன் மூலமாக அரசாங் கத்திற்கு வர்த்தகர்கள் வட்டாரத்தில் மட்டுமல்ல, தமிழக பொதுமக்கள் மத்தியிலும் இதற்கு கடுமையான எதிர்ப்பு இருக்கிறது. இத்தகைய நிலையில் இந்தச் சட்டத்தைக்கொண்டு வருவது நியாயம்தானா என்பதை நான் கேட்டுக் கொள்கிறேன். அரசியல் கட்சி என்ற முறையில் ஆளும் கட்சிக்கு இது நல்லது தானா என்று கேட்டால், இது நல்லது அல்ல என்ற ஒரே ஒரு முடிவுக்குத்தான் நாம் வரமுடியும். ஆகவே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அரசாங்கத்திற்கு மீண்டும் சொல்வது இதைப்பற்றி மறுபரிசீலனை செய்யலாம். அவசர அவசரமாக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து இன்றைக்கே நிறைவேற்றி விட வேண்டும் என்பது அல்ல. ஆகவே, எத்தனையோ சமயங்களில் இத்தகைய மறுபரிசீலனை செய்யப்பட்டு இருக்கிறது. இந்த எதிர்வரிசையில் இருக்கும் அத்தனை கட்சிகளும் இதை எதிர்க்கிறார்கள் என்று சொன்னால், தமிழகத்தில் உள்ள பெரும்பகுதி மக்கள் இதை எதிர்க்கிறார்கள் என்பதுதான் பொருள். நான் அறிந்த வரையில் கடந்த பல ஆண்டுகளில் தமிழகத்தில் இருக்கும் வணிகப்பெருமக்கள் இத்தகைய அளவிற்குக் கடுமையான எந்த வரிவிதிப்பையும் எதிர்த்தது இல்லை. அவர்களுக்கு விதிக்கப்பட்டு இருக்கிற கணக்குப் புத்தகம் வைப்பது, அவர்கள் கணக்கு கொண்டுவந்து மாதாமாதம் சமர்ப்பிக்க வேண்டும் என்று சொல்வது, ஒரு மாதத்திற்கு எவ்வளவு வரி வரும் என்று அவர்கள் நினைக்கி றார்களோ அதை முன்கூட்டியே கட்ட வேண்டியது என்பது எல்லாம் 'ட்ரகோனியன்' ஷரத்துக்கள். அவைகள் இந்த நாட்டு மக்களையும், வணிகப் பெருமக்களையும் பெரிதும் கடுமையான முறையில் பாதிக்கும் என்பதால் அவர்கள் 3 நாள் ஹர்த்தால் செய்யும் முடிவுக்கு வந்து இருக்கிறார்கள். அரசாங்கம் இதை ஏதோ ஒரு அரசியல் நோக்கத்திற்காக என்று கிஞ்சித்தும் நினைக்க வேண்டாம்.

(பிற்பகல் 12-10)

இன்றைக்கு இந்தப் பிரச்சனையின் தன்மையைப் பார்க்கும் போது இது மிகவும் கடுமையானது என்று நாங்கள் கருது கிறோம். தமிழக மக்களை இது கடுமையாகப் பாதிக்கும்

என்பதால் 20 கோடி ரூபாய் வருமானம் வரும் என்று சொன்னாலும் அரசாங்கம் அந்த வருமானத்தை வேறு இனங்களிலே பெற்றுக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தால் இதை அரசாங்கம் கைவிட வேண்டும்.

இன்றைக்கு வருகின்ற விற்பனை வரியின் மூலமாக வருமானத்தைப் பெருக்க முடியும். ஏற்கெனவே சொல்லியிருப்பதைப்போல சாராயம் சம்பந்தப்பட்ட பிளன்டிங் யூனிட்டுகளை அரசாங்கம் ஏற்று நடத்தினால் பல மடங்கு வருமானத்தைப் பெருக்க முடியும். வருமான வரியின் மூலம் அதிக வருமானம் பெற முடியும். பிளான்டேஷன் மூலமாக வருமானம் பெற முடியும். நிலக்கிழார்களிடமிருந்து நேரடியாக வரி பெற முடியும். அதை எல்லாம் விட்டுவிட்டு இதைக் கொண்டு வந்திருப்பது நல்லது அல்ல; மக்களுக்கு நல்லது அல்ல; அரசாங்கத்திற்கு நல்லது அல்ல; ஆளும் கட்சிக்கு நல்லது அல்ல; மக்கள் எதிர்ப்பு தான் உருவாகும் என்பதால் இந்த வரி விதிப்பைக் கைவிட வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டு அமர்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவரவர்களே, பயன்படுத்துகின்ற பொதுமக்களாலும் வாணிபத் துறையிலே ஈடுபட்டிருக்கின்ற பல்வேறு வகையான வணிகப் பெருமக்களாலும் எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களாலும் நாட்டிலே இருக்கின்ற அரசியல் சார்புடைய ஏடுகள் மாத்திரம் அல்லாமல், நடுநிலையாக இருக்கின்ற பல்வேறு ஏடுகளாலும் கண்டிக்கப்படுகின்ற ஒரு வரியை நுழைவு வரி என்கின்ற பெயரால் இந்த அவையிலே அவையினுடைய முன்னவர் நிதி அமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் நிதிநிலை அறிக்கயிலே அறிவித்த காலம் தொட்டு, அதிலே சில பொருள்களுக்கு விலக்கு அளிக்கப்படும் என்று அவர்கள் ஆறுதல் கூறியதும் ஏற்கத்தக்கது அல்ல. முழுமையாக கைவிட வேண்டுமென்று குரல் எழுப்பப்பட்டு, சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்ட நேரத்திலும் இந்த அவையிலே அனைத்துக் கட்சிகளால், ஆளும் கட்சியை தவிர மற்ற கட்சிகளால் கடுமையான எதிர்ப்பு உணர்வு காட்டப்பட்டும், அனைத்தையும் மீறி இன்றையதினம் ஜனநாயகத்தை கிஞ்சிற்றும் மதிக்காத ஒரு நிலையில் இந்த வரியை விதித்தே தீருவோம் என்ற பிடிவாத நோக்கத்தோடு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் மூலமாக இந்த அரசு இந்த அவையிலே விவாதிப்பதற்கு வைத்து, ஆளும் கட்சிக்கு இருக்கிற பெரும்பான்மை பலத்தின் காரணமாக நிறைவேற்றி விடலாம் என்கின்ற அந்த துணிவோடு செயல்பட்டுக் கொண்டு இருப்பதை மீண்டும் ஒரு முறை நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வன்மையாகக் கண்டிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.





(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்த வரியைப் பற்றி கூறப்படுகிற நேரத்தில் பொருளாதார நிர்வாக சீர்திருத்தக் குழுவினுடைய தலைவர் எல்.கே.ஜா அவர்கள் 'ஆக்ட்ராய்' வரி ஒரு அருவருக்கத்தக்க வரி, இதை கைவிட வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அதே கருத்தை சட்ட நிபுணர் பல்கிவாலா அவர்கள் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அரசியல் கட்சி ஏடு அல்லாத பொதுவாக நடைபெறுகிற ஏடு என்று பலரும் கருதிக் கொண்டிருக்கிற தினமணியில் எழுதிய தலையங்கத்தில் கூட இந்த வரியினால் சரக்குப் போக்குவரத்து தாமதமடையும்; வணிகர்களுக்குத் தொல்லை உண்டுபண்ணும்; ஊழலுக்கு வித்திடும். அதனைவிட பொருள்களின் விலை உயர்ந்து மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. எனவே இந்த வரியைக் கைவிட வேண்டுவது அவசியமாகும்; இப்போது கொண்டுவரப்பட்டுள்ள மசோதாவை வாபஸ் பெற வேண்டும். அப்படி முடியாவிட்டால் இதனை சட்ட மன்றத்தின் கூட்டு ஆய்வுக் குழுவின் பரிசீலனைக்கு விடுவதே நல்லது. கூட்டு ஆய்வுக் குழு பொது மக்களின் கருத்தை அறிந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். இந்த மசோதாவை அவசர கோலமாக நிறைவேற்றுவதைத் தவிர்க்க வேண்டும் என்று 23-4-1983 தேதியிட்ட தினமணி பத்திரிகையின் தலையங்கம் சுட்டிக் காட்டியிருக்கிறது.

ஆனால் எதையும் பொருள்படுத்தாமல் எல்லாவிதமான கருத்துக்களையும் புறக்கணித்து விட்டு, இந்த நுழைவு வரியைத் திணிப்பது அரசாங்கத்தினுடைய பிடிவாத குணத்தைத்தான் காட்டுகிறது என்பதை நான் சுட்டிக்காட்டிச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

இதிலே கூட காலையிலே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த சில பிரச்னைகளை நாம் மறந்துவிடுவதற்கில்லை. நிதிநிலை அறிக்கை விவாதம் நடைபெற்று பதில் அளித்த நேரத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சில பொருள்களைக் குறிப்பிட்டு, அவைகள் எல்லாம் இந்த வரிகளிலேயிருந்து விலக்கு அளிக்கப்படும் என்று எடுத்துக் கூறினார்கள். அப்படி விலக்கு அளிக்கப்படாத சூழலில் இந்த சட்ட முன்வடிவு தயாரிக்கப்பட்டிருக்கிறதே அது சரிதானா என்கிற ஒழுங்குப் பிரச்னையை அல்லது உரிமைப் பிரச்னையை எல்லாம் இங்கே எழுப்பப்பட்டு, அதற்கு அவைத் தலைவராகிய தாங்களும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய விழிப்புணர்ச்சியை நான் பாராட்டுகிறேன் என்று கூறி விட்டு, அதைப்போல அதற்கான திருத்தங்கள் இந்த அவையிலே வைக்கப்படும் என்று சொன்ன அவை முன்னவர் அவர்களுடைய அந்தப் பரந்த மனப்பான்மையையும் தாங்கள் பாராட்டுவதாகச் சொன்னீர்கள்.

ஆனால் இங்கே எதிர்க்கட்சியினுடைய துணைத்தலைவர் பேராசிரியர் அவர்கள் அது குறித்து, பிரச்னையை எழுப்பிய போது, வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அவர்கள் குறிப்பிட்டது "இதிலே நான், இவைகளில்

எல்லாம் எது எது நீக்கப்படும் என்று நிதியமைச்சர் அவர்கள் கூறினார்களோ, அவைகளை எல்லாம் குறிப்பிடவில்லை என்று சொன்னாலும் கூட, அவைகள் குறிப்பிலே ஏற்றுக்கொள்ளப் பட்ட பின்னர், அதற்கான விதிமுறைகள் வகுப்பதற்கான நடவடிக்கைகள் கவனிக்கப்படும் என்று சொன்னார்கள்.''

இங்கே தரப்பட்டிருக்கிற சட்ட முன்வடிவினுடைய 29வது பக்கத்தில் விவர அட்டவணை என்கிற பகுதியில் 2 (1) என்கிற பிரிவினை காண்க என்ற தலைப்பின் கீழ், 'அட்டவணையிடப் பட்ட சரக்குகள்' என்ற தலைப்பில், என்ன சொல்லப்பட்டிருக் கிறது என்றால், மூன்றாவதாக சர்க்கரை என்று குறிப்பிட்டு விட்டு, நிதியமைச்சர் அதற்கு என்ன அறிவித்தார்களோ, எது எது நீக்கப்படும் என்று சொன்னார்களோ, அதை அந்த சர்க்கரை என்ற தலைப்பிலே மாத்திரம், வளைவு அடைப்புக்குள் (கற்கண்டு, மிட்டாய் போன்றவை நீங்கலாக)—என்று நிதி யமைச்சர் எடுத்துச் சொன்ன அந்தப் பகுதியை மாத்திரம், வளைவு அடைப்புகளுக்குள்ளே அமைக்கப்பட்டிருக்கிறது. அதுவும் சர்க்கரை என்ற பொருளுக்கு மாத்திரம்.

ஆனால் ஐந்தாவதாக, பெட்ரோலியப் பொருள்கள் என்று வருகிற அந்தப் பகுதியில், மண்ணெண்ணெய்க்கு விலக்கு அளிக்கப் படும் என்று நிதியமைச்சர் அவர்கள் சொன்னார். ஆனால் இதில் அப்படி மண்ணெண்ணெய்க்கு விலக்கு அளிக்கப்படவில்லை. அதிலே வரிசையாக பெட்ரோல், டீசல், விமான எரிபொருள், தூய்மைப் படுத்தப்படாத எண்ணெய், கனிம எண்ணெய்வகைகள், உயர் எண்ணெய், வெப்பம் தணிக்கும் எண்ணெய், மசகு, தார், திரவ பெட்ரோலிய வாயு, மண்ணெண்ணெய் நாப்தா என்று எல்லாவற்றையும் அடக்கிப் போடப்பட்டிருக்கிறது. இதிலே ஏன் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூறியதுபோல் விலக்கு அளிக்கப்பட்ட பொருள்கள், அடைப்பு வளைவுக் குறிகளுக் குள்ளாவது போடப்படவில்லை? சர்க்கரையை குறிப்பிடும்போது மாத்திரம், கற்கண்டு, மிட்டாய் போன்றவை நீங்கலாக என்று வளைவு குறி போட்டு சுட்டிக் காட்டியிருப்பது ஏன்? அதே போல மண்ணெண்ணெய்க்கும் அப்படி வளைவு குறி போட்டு, அது நீங்கலாக என்று ஏன் சுட்டிக் காட்டப்படவில்லை என்று கேட்க விரும்புகிறேன்? ஆகவே, இது ஒரு அவசர கோலம் அள்ளித் தெளி என்ற வகையிலேதான் இந்தச் சட்ட முன்வடிவு தயாரிக்கப் பெற்றிருக்கிறது. அதனாலேதான் ஏற்ற திருத்தங்கள் கூட வைக்கப்படாமல், அவையில் இந்தச் சட்ட முன்வடிவு விவாதத்திற்கு ஏற்றுக்கொள்ளப் பெற்று, உறுப்பினர்கள் அதற்குரிய பிரச்னைகளை எழுப்பிய பிறகு, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் வாய்மொழியாகவே சொன்னார்.

''நான் 5 சதவீதத்திற்கு மேற்படாமல்'' என்று குறித்து இருப்பதை '2 சதவீதத்திற்கு மேற்படாமல் என்று திருத்திக் கொள்கிறோம்'' என்று வாய்மொழியாகவே சொல்லி, பலரும் பேசி, கிட்டத்தட்ட நான் பேச இருக்கிற, ஒரு 5 அல்லது 10 நிமிடங்களுக்கு முன்புதான் வாய்மொழியாகச் சொன்ன அந்த திருத்தம் எழுத்து வடிவத்திலே; 2 சதவீதம் தான் என்ற அளவிலே எங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.





இவைகளையெல்லாம் குறிப்பிடுவதற்குக் காரணம், இந்தச் சட்டத்தைப் பற்றி உங்களுக்கே ஒரு வகைதொகையான, நிலையான கருத்து இல்லை. உங்களுக்கே பெரும் குழப்பங்கள் ஏற்பட்டிருக்கிற காரணத்தாலேதான், சரியான திருத்தங்கள் வைக்கப்படாமல், அல்லது நிதியமைச்சர் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல், இப்படிப்பட்ட முரண் பாடான சட்ட முன்வடிவு இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12–20)

பல உறுப்பினர்களும், கட்சியினுடைய தலைவர்களும் இங்கே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். மிக வேடிக்கையானதும், இதுவரையில் எந்த வரி விதிப்புச் சட்ட முன்வடிவிலேயும் இல்லாததுமான ஒரு விசித்திரம் பக்கம் 3–லே குறிப்பிடப்பட்டி ருக்கிறது. ''....வெவ்வேறு சரக்குகளுக்கு. வெவ்வேறு உள்ளூர்ப் பகுதிகளுக்கு வெவ்வேறு வீதங்களில் இவ்வரியை அரசு குறிப் பிடலாம்'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது எத்தகைய சிக்கலான பிரச்னையை உருவாக்கக் கூடும் என்பதை இந்த அரசு எண்ணிப் பார்க்க வேண்டும். வெவ்வேறு சரக்குகள் என்றால் என்னென்ன சரக்குகள்? இதிலே குறிப்பிட்டிருக்கிறபடி இன்னதுதான் என்று கிடையாதா? வெவ்வேறு உள்ளூர்ப் பகுதிகள் என்ன என்ன பகுதிகள் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறதா கிடையாது வெவ்வேறு வீதங்கள் என்ன என்ன வீதங்கள் எந்த எந்த சரக்குகள் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறதா என்றால் கிடையாது, இந்த சிக்கல் எவ்வளவு பெரிய ஊழலுக்கு வழி வகுக்கும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஏன் என்றால் இந்த வெவ்வேறு சரக்குகள் என்று வருகிற நேரத்தில் ஒரு வியாபாரி அல்லது ஒரு வணிகர் தன்னிடத்தில் இருக்கின்ற சரக்கு இன்ன சரக்குதான் என்று எழுதச் சொல்கின்ற அந்த சலுகையை அதிகாரியிடத்தில் பெறுகின்ற நேரத்தில் அங்கே எத்தகைய ஊழல் தொடங்கும் அல்லது ஏற்கனவே இருக்கின்ற ஊழல் பெருகும் என்பதை தயவு செய்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

அதைப்போல்தான் 4-வது பக்கத்தில் 3-வது பகுதியில் உள்ளூர் பகுதிக்குள் தன் சொந்தக் கணக்கிலோ அல்லது தன் முதலாளிக் கணக்கிலோ அச்சரக்குகளைக் கொண்டு வருகிற அல்லது கொண்டு வரும்படிச் செய்கிற பதிவான வணிகரால் அல்லது தம்மை வணிகராகப் பதிவு செய்துகொள்வதற்கு உட்பட்டவரால் அல்லது அச்சரக்குகள் அவ்வாறு கொண்டு வரப்படும்போது ஒப்படை எடுத்து கொள்பவரால் அல்லது ஒப்படை எடுத்துக் கொள்ள உரிமையுடையவரால் இந்த வரி செலுத்தப்பட வேண்டும், என்று 4-வது பக்கத்திலே 3–வது பகுதியில் சொல்லப் பட்டிருக்கிறது. இதே பக்கத்தில் அத்தியாயம் 3-ல் 5–வது பகுதியில் விவாக் கணக்குகளும் வரி விதிப்பும்:—(1) 8–ஆம் பிரிவில் என்ன சொல்லப்பட்டிருந்த போதிலும், இச்சட்டத்தின்

கீழ் பதிவு செய்துகொண்டுள்ள ஒவ்வொரு வணிகரும், இச் சட்டத்தின் கீழ் பதிவு செய்துகொள்வதற்குட்பட்ட ஒவ்வொரு வணிகரும், வரையறுக்கப்படக்கூடிய கால அளவிற்குள்ளும், முறையிலும், வரையறுக்கக்கூடிய தகவல்கள் அடங்கிய கணக்குகளை, வரி விதிப்பு அதிகாரிக்கு ஒவ்வொரு ஆண்டும் அனுப்ப வேண்டும், என்று இருக்கிறது. எனவே நண்பர் அழகர்சாமி இங்கே எடுத்துக் காட்டியதுபோல் இது நுழைவு வரியா அல்லது உள்ளபடியே விற்பனை வரியை இன்னும் உயர்த்தி விதிக்கப்படுகின்ற ஒரு வரியா என்பதை அரசுதான் எங்களுக்கு விளக்க வேண்டும். ஏன் என்றால் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு வரப்படுகின்ற பொருட்களுக்கு அந்த நகரத்தினுடைய எல்லையில் விதிக்கப்படுகின்ற வரிக்கு பெயர் நுழைவு வரி.

ஆனால் இங்கே காட்டப்படுகின்ற குறிப்புகளை படிக்கின்ற நேரத்தில் வணிக பெருமக்கள் அதற்கான ரெக்கார்டுகளை வைத்துக்கொள்ள வேண்டும், கணக்கு பதிவேடுகளை வைத்துக்கொள்ள வேண்டும், அதற்கான பதிவுகளை செய்துகொள்ள வேண்டும் என்று எல்லாம் வருகின்ற இந்த பிரிவுகளை பார்க்கும்போது இது ஒவ்வொரு நகரத்திலும் இருக்கின்ற வியாபாரிகளிடத்தில் வணிகர்களிடத்தில் வழக்கம்போல் விற்பனை வரி அதிகாரிகள் சென்று கணக்கு கேட்டு விற்பனை வரி பெறுவதைப் போல் நுழைவு வரி என்ற பெயரால் பலமடங்கு அதிகமான விற்பனை வரியை செலுத்தக்கூடிய ஒரு இன்னலுக்கு வியாபாரிகள் ஆளாகி அப்படி ஆளாகின்ற வியாபாரிகள் வாங்கி பயன்படுத்துகின்ற பொதுமக்கள் தலையில் அந்த பளுவை சுமத்த அதன் காரணமாக பொதுமக்கள், ஏழை எளியவர்கள், விவசாய பெருங்குடி மக்கள், தொழிலாளர்கள் அத்தனை பேரும் பாதிக்கின்ற ஒரு நிலைமைதான் ஏற்படுகிறது. எல்லா கட்சித் தலைவர்களுக்கும் அனுப்பியிருக்கின்ற வியாபாரிகளுடைய பல்வேறு சங்கங்களைச் சேர்ந்த மகஜர்களில் குறிப்பாக ஜவுளி வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கின்ற வியாபாரிகள் அனுப்பியிருக்கின்ற மகஜரைப் படித்துப் பார்த்தால் இந்த நுழைவு வரியால் எந்த கைத்தறியைக் காப்பாற்ற வேண்டும் என்று நாம் எல்லாம் இன்றைக்கு கவலைப்பட்டுக் கொண்டு இருக்கிறோமோ அந்தக் கைத்தறிக்கு கிராமத்தில் இருக்கின்ற மக்களுக்கும், எவ்வளவு இடையூறுகள் ஏற்படுகின்றன என்பதை அந்த மகஜரில் உள்ள சில வாசகங்களை படித்துப் பார்த்தால் புரிந்துகொள்ளலாம். இந்த வரி அமுலுக்கு வந்தால் சிறிய நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் கிராமத்திலுள்ள சிறிய வர்த்தகர்கள் தங்கள் கொள்முதலை அண்டை மாநிலங்களில் செய்வார்கள். இதனால் தமிழகத்தில் மொத்த வாணிகம் பாதிக்கப்பட்டு அண்டை மாநிலங்கள் பயனடையும். நம் மாநிலத்தில் பொருளாதார சீர்குலைவு ஏற்படும். இதை நம்பி வாழும் சிப்பந்திகள், மூட்டை கட்டுகின்றவர்கள், கைவண்டி இழுப்பவர்கள், லாரிகள், பாரம் தூக்குகிறவர்கள் முதலிய அனைவரும் பாதிக்கப்படுவார்கள். அதே சமயம் மாநிலங்களில் உற்பத்தியாகும் கைத்தறி துணிகள்



வர்த்தகமும் பெரிதும் பாதிக்கப்படும். உதாரணமாக மில் துணி கொள்முதலுக்கு அண்டை மாநிலத்தை அணுகும் வியாபாரிகள் அங்கேயே கைத்தறி துணியையும் வாங்கி விடுவார்கள் என்று கைத்தறி துணி வியாபாரத்தில் ஏற்படக்கூடிய அந்த சீர்கேட்டினையும் அவர்கள் இந்த மகஜரின் மூலமாக சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இப்படி பல்வேறு வணிக நிறுவனங்களின் சார்பாக அவர்களுடைய பெரிய சங்கங்களின் சார்பாக மகஜர்கள் அளிக்கப்பட்டும், முதலமைச்சர் அவர்களை நேரிடையாக சந்தித்து அவர்களுடைய பிரதிநிதிகள் உரையாடல் நிகழ்த்தியும் கூட இறுதியாக தாங்கள் கொண்டதே கொள்கை என்கின்ற வகையில் மிக பிடிவாதமாக இந்த வரியை திணிப்பதை திராவிட முன்னேற்றக்கழகத்தால் மிகவும் வன்மையாக கண்டிக்கப்படுகிறது என்பதை நான் மீண்டும் வலியுறுத்துகின்றேன்.

நம்முடைய ஜனதா கட்சியினுடைய தலைவர் அவர்கள் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போதும் இங்கே குறிப்பிட்டார்கள். பல்வேறு வகையில் இந்த அரசு பணத்தை விரையம் ஆக்குவதை அல்லது வரவேண்டிய வருமானங்களை இழப்பதைச் சரி செய்யுமேயானால் இந்த வரி விதிப்புக்கு இடமே இருந்திருக்காது என்று குறிப்பிட்டார்கள். ஜனதா கட்சியினுடைய தலைவர் நண்பர் இஸ்மாயில் அவர்கள் சொல்கிறபோது சொன்னார்கள். பக்கத்திலே இருக்கிற ஆந்திர மாநிலத்தில் நம்முடைய உடன் பிறப்பு எம். டி. ராமராவ் ஆண்டுகொண்டிருக்கிற ஆந்திர மாநிலத்தில் 67 லட்சம் குழந்தைகளுக்கு அங்கே இந்த மதிய உணவிற்காக செலவிடப்படுகிற தொகை 100 கோடிக்கு குறைவானது இன்னும் சொல்லப்போனால் 80 அல்லது 85 கோடி தான் என்று அங்கிருந்து செய்திகள் வருகின்றன. ஆனால் தமிழ்நாட்டில் 130 கோடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்டு அதே நேரத்திலே சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிடமிருந்து அரிசி வாங்குகிற காரணத்தினால் அவர்களுக்குத் தருகிற இழப்பு என்ற பெயரால் 50 கோடி ரூபாய் அரசு அந்த இழப்பை ஏற்றுக்கொள்கிற வகையில் சற்றொப்ப 185 கோடி ரூபாய் அளவுக்கு அடுத்தடுத்து வருகிற ஆண்டுகளில் 200கோடி ரூபாய் அளவுக்கு இந்த சத்துணவுத் திட்டத்திற்குச் செலவிடப்படுகிறது என்றால் ஆந்திரத்திலே அதே எண்ணிக்கையிலே உள்ள குழந்தைகளுக்கு 100 கோடிக்கும் குறைவாக செலவாகும் பொழுது இங்கே 200 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது என்றால் எங்கேயோ தவறு இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடலாமா?

அதைப்போலவே வரவேண்டிய வருமானத்தை வருவாயை நாம் இழந்து இருக்கிறோம். வரிவிதிப்பே வருவாய்த் துறையைப் பொறுத்த விஷயம் என்ற காரணத்தினால் வருவாயைப் பற்றி பேசுவதில் தவறு இல்லை, ஏனென்றால் எத்தனையோ உறவில்லாத விஷயங்கள் பல, சில நேரங்களிலே இந்தச் சபையிலே அங்கீகரிக்கப்பட்ட காரணத்தினால் இதுவும் அங்கீகரிக்கப்படும், இது

பொருத்தமுடைய விஷயம் என்பதால் சொல்கிறேன். வருவாய் வரியினாலே கிடைக்கிறது. ஆனால் அப்படிக் கிடைக்க வேண்டிய வரிகளை யெல்லாம் உதறித் தள்ளிய பெரும் குற்றச்சாட்டுக்கு ஆளான ஒரு அரசு இன்றைக்கு உள்ள இந்த அரசு என்பதை நான் எடுத்துக் காட்டுவது என்னுடைய கடமையாகும்.

ஸ்டீல் ரீரோலிங் மில் இவைகள் வரி கட்டுவதைப்பற்றி ஒரு பிரச்சினை எழுந்து தங்களால் வரி கட்ட இயலாது எனவே தள்ளுபடி செய்யவேண்டும் அல்லது.......

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தூண்டிலப் போடுகிறபோது இங்கேதான் வரப் போகிறார்கள் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். இதற்கு முன்பே பேசியதற்கு நான் பதில் சொல்லி இருக்கிறேன். நீங்கள் இங்கே பேசுவதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. நீங்கள் பேசலாம்;

**டாக்டர் மு. கருணாநிதி:** வீராணம்பற்றி பல முறை பேசப் பட்டிருக்கிறது. இருந்தாலும் வீர்புக்காக மறுபடியும் பேசப்பட வில்லையா? அதைப்போல் நான் சொன்னால் இப்போது மறுபடியும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் பதில் அளிப்பார்கள், அது புதிய பதிலாகக்கூட இருக்கும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். வேறு யாரும் குற்றஞ் சாட்ட வேண்டியதில்லை. பொதுக் கணக்குக் குழு அதனுடைய தலைவராக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. வி. கிருஷ்ணமூர்த்தி இருந்தாலுங்கூட அந்தக் குழுவிலே இருப்பவர்கள் பெரும்பாலோர் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள். நிதிய மச்சர் உள்ளிட்ட பெரும்பாலோர் அந்தப் பொதுக் கணக்குக் குழுவிலே உறுப்பினர் களாக இருக்கிறார்கள். அந்தக் குழு என்ன தெரிவிக்கிறது? ஸ்டீல் ரீ ராலிங் மில்ஸ், அந்த ஆலைகளே முன்வந்து விற்பனை வரிக் கடனை கடனாகக் கோரியிருந்தபோது பணிக்குழு விற்பனை வரிக் கடனுக்குப் பதிலாக விற்பனை வரி விலக்கு முன்னுரிமை அளித்து பரிந்துரை செய்தது கண்டு பொதுக் கணக்குக் குழு வியப்படைகிறது அந்தப் பரிந்துரையால் அரசுக்குப் பல கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. தவிர்த்திருக்கக்கூடிய அந்த இழப்புக்குப் பொறுப்பாளியாக இருந்த எல்லோர் மீதும் பொறுப்பு நிர்ணயிக்கப்பட வேண்டு மென்று பொதுக் கணக்குக் குழு விழைகிறது. ஆக 1970 ஆம் ஆண்டிலிருந்து 1982 ஆம் ஆண்டு வரையில் 12 ஆண்டுகளாக ஆண்டு ஒன்றுக்கு 3.12 கோடி 3 கோடியே சொச்சம் ரூபாய் வீதம் 37 கோடி ரூபாயை நாம் வலிய இழந்திருக்கிறோம். அவர்கள் கேட்டது அதை கடனாக பாவியுங்கள், கடனாகவா கேட்கிறீர்கள், நாங்கள் வரியையே விலக்கு செய்கிறோம் என்று அவர்களுக்கு வரியையே விலக்குச் செய்துகொடுத்தது. அது மாத்திரமல்ல, திராவிட முன்னேற்றக் கழக அரசில் இந்தப் பிரச்சினை உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு 1976 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் அரசுக்குச் சார்பாக அந்த ஆலை அதிபர்கள் அந்த வரியைக் கட்டித்தான் தீர வேண்டும் என்று



ஒரு தீர்ப்பை அளித்தபிறகும் அந்தத் தீர்ப்பைத் தூக்கிக் குப்பைக் கூடையிலே போட்டுவிட்டு நீங்கள் கடனா கேட்கிறீர்கள், கடன் கூட இல்லை, வரி விலக்கே கூட செய்கிறோம் என்ற அளவிற்கு ஆசீர்வாதம் செய்து ஆலை அதிபர்களைக் காப்பாற்றிய அசகாய சூரர்களுடைய அரசாகத்தான் இந்த அரசு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. நம்முடைய மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர் திரு. சங்கரய்யா அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். நானும் நிதிநிலை அறிக்கையிலே பேசுகிறபோது குறிப்பிட்டிருக்கிறேன். பாட்லிங், பிளெண்டிங், சாராயக் கலவை தொழிற்சாலை மூலமாக ஏறத்தாழ 30 கோடி ரூபாய் தனியார்களுக்கு போகிறது. யாரோ ** அல்லது ** இருந்து கொண்டு, ** வைத்துக்கொண்டு 30 கோடி ரூபாயை தனி அதிபர்கள் ஆதாயங்கள் பெறுகிறார்கள்.

(பிற்பகல் 12-30)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** எங்கள் மேலே சாட்டப்பட்ட குற்றச்சாட்டே நாங்கள் ** கொடுத்திருக்கிறோம் என்பதுதான். அது ** இல்லையா என்பதைப் பற்றிதான் விசாரணை செய்வதற்கு விசாரணைக் குழு போட்டிருக்கிறது. ஆகவே, அதிலே ** இருக்கிறது; யாருக்கே கொடுத் திருக்கிறோம். ** இருக்கிறவர்களுக்குக் கொடுத்திருக் கிறோம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிகுந்த அனுபவம் உள்ளவர்கள். அவர்கள் பேசுவதில் தவறு கண்டுபிடிப்பதாக தயவுசெய்து கருதக் கூடாது. ஏனென்றால் நீங்கள் எங்கள் மேலே சாட்டப்பட்ட குற்றச்சாட்டே ** கொடுத்திருக்கிறது என்பதுதான். எங்கள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டே ** உள்ளவர்களுக்குக் கொடுக்கப்பட்டது என்பது தான். அது உண்மையா, இல்லையா என்பதை விசாரிப்பதற்காகத் தான் விசாரணைக் குழு எங்கள் மீது நாங்களே, போட்டுக் காண்டிருக் கிறோம். ஆகவே அந்த வார்த்தைகள் அவைக்குறிப்பிலே இல்லாமல்இருப்பது நலமாகயிருக்குமென்று தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்த அவை எல்லா உரிமைகளையும் பெற்றது. நீதிபதிகளைப் பற்றி விமர்சிக்கலாம் என்ற அளவிற்கு இந்த அவையில் தாங்கள் எங்களுக்கு உரிமை அளித்திருக்கிற நேரத்தில் ஒரு விசாரணை கமிஷனிலேயிருக்கிற பிரச்னைப் பற்றி பேசுவது தவறல்ல என்று தான் நான் கருதுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீதிபதிகளை விமர்சிக்கலாம் என்று நான் சொல்லவில்லை. நீதிமன்றங்களிலிருக்கிற தீர்ப்புகளைப்பற்றித்தான் சொன்னேன். நீதிபதிகள் என்று சொன்னதை மாற்றிக்கொள்ள வேண்டும்.

டாக்டர் மு. கருணாநிதி : நான் தீர்ப்புக்களைக் கூட விமர்சிக்கவில்லை. விவரங்களைத்தான் சொல்கிறேன். சாராயக் கலவைத் தொழிற்சாலையில். . . .

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் அவர்கள் பேசியதிலே ** இருக்கிறது; ** கொடுக்கப்பட்டிருக்கிறதென்று சொன்னவைகள் அவைக் குறிப்பிலே இருக்கக் கூடாது; நீக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அதில் தங்களின் உத்தரவைக் கோருகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : ** லைசென்சே பெறவில்லையா? அதையாவது சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த இடத்திலே உங்களுக்கு பிரச்சினை?

மாண்புமிகு திரு எஸ் டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, எங்கள் மேலே சாட்டப்பட்ட குற்றசாட்டே, அது பிளெண்டிங் யூனிட் ஆனாலும் சரி, அல்லது சில்லரைக் கடையானாலும் சரி, அல்லது ஹோல்சேல் கடையானாலும் சரி, இவைகளில் நான் படித்துக் காண்பித்தேன். அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்றால் இவைகளில் எல்லாம் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. அதிலே அதிகமாக மார்ஜின் கொடுத்து, பிராபிட் மார்ஜினில் எல்லாம் எங்களுக்கு பங்குண்டு என்று கூறப்பட்ட குற்றச்சாட்டை விசாரிப்பதற்குத்தான் விசாரணைக்கமிஷன் போடப்பட்டிருக்கிறது. விசாரணைக் கமிஷன் போடப்பட்டிருக்கிறதாலே ** உள்ளவர் பெயரும் அதிலே வந்திருக்கிறது. ஆகவே ** என்றும் அதிலே வந்திருக்கிறது. அவைகளைத் தவிர மற்றவற்றைப் பேசுவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மது என்றுகூட சொல்லக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மது என்று செல்வதைப் பற்றியல்ல. விசாரணைக் குழுவிலே இருப்பதைப் பேசவேண்டியதில்லை, அது குறித்துப் பேசப்பட்டவைகளைத்தான் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.

டாக்டர் மு. கருணாநிதி : விசாரணைக் குழு என்ற வார்த்தையையே நான் பயன்படுத்தவில்லை. நான் சொல்வது தனியார்கள் ** இருப்பவர்கள் . . .

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது விசாரணைக் குழுவின் முன்பு இருக்கிற சப்ஜெக்ட் என்று அமைச்சர் சொல்கிறார்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 26 கோடி ரூபாய் தனிப்பட்ட முதலாளிகள் ** உள்ளவர்களோ, ** உள்ளவர்களோ, சம்பாதிப்பதை அரசே ஏற்றுக்கொள்ளுமானால் அதனால் ஏற்ற வருவாய் அரசிற்கு கிடைக்குமென்பதைத் தான் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் எதிர்க கட்சித் தலைவர் அவர்களுக்கு இருக்கிற சாமர்த்தியமும், திறமையும். அதைச் சொல்கிறபோது எந்த அளவிற்குச் சொல்லவேண்டுமோ அதைச் சொல்கிற அனுபவம் அவர்களுக்கு இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பு இப்படி ** என்று பேசியது, ** என்று பேசியதை எல்லாம் நீங்கள் நீக்கியிருக்கிறீர்கள். எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒன்றாகவும், மற்றவர்களுக்கு ஒன்றாகவும் நீங்கள் தீர்ப்பளிப்பது நியாயமில்லை. அதிலே ** என்ற வார்த்தையும் ** என்ற வார்த்தையும் இருக்க வேண்டாம் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்று சொல்வதிலே ** என்று சொல்வதிலே பிரச்சினைகள் இல்லை. குற்றச்சாட்டு மாதிரி வருவதால் தான் பிரச்சினை வருகிறது. ** இரண்டையும் விட்டுவிட்டு மீதி எல்லாம் பேசுங்கள். அவைகள் மட்டும் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன.

டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே கொழுத்திருக்கிற தனியார் முதலாளிகளுக்கு—கொடுத்திருக்கிற அல்ல; கொழுத்திருக்கிற தனியார் முதலாளிகளுக்கு—ஏறத்தாழ ரூ. 30 கோடி இந்த பிளன்டிங் பாட்லிங் தொழிற்சாலை மூலமாகவும், மாவட்ட சாராய மொத்த வியாபார நிலையங்களின் மூலமாகவும் செல்லுகின்ற அந்த வருவாய் அரசுக்குக் கிடைக்க, இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லப்பட்ட யோசனைகள், பல்வேறு கட்சிகள் செயற்குழு, பொதுக்குழுக்களில் நிறைவேற்றிய அந்தக் கருத்துக்கள் இவைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டாலே, இந்த அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டாலே, போட்ட வரிகளை எல்லாம் நம்பித்தான் அரசு நடத்தவேண்டு மன்று இந்தப் பயங்கரமான, ஊழல்கள் மலியக் கூடிய புதிய வரியைப் போடுகின்ற அபாயத்திலிருந்து அரசு தன்னை மீட்டுக்கொண்டிருக்க முடியும் என்பதற்காகத்தான் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

(டாக்டர் மு. கருணாநிதி) [1983 ஏப்ரல் 27

எந்த அளவிற்குப் பணம் விரயம் ஆகிறது என்பதையும் இங்கே எங்களுக்குத் தந்திருக்கிற அறிக்கையிலேயிருந்து என்னால் காட்டமுடியும். ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு, 1981—தணிக்கை செய்யப்பட்ட மாநாட்டுக் கணக்குகள் விவரம் இங்கே எங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது, அதிலே இந்த உலகத் தமிழ் மாநாட்டிற்காக சுமார் ரூ. 10 கோடி மொத்தமாகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்றுள்ளது. கேட்டால் நிரந்தரமாக சில காரியங்கள் செய்யப்பட்டன என்று முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு, அல்லது அதற்கு முந்தைய ஆண்டு, இங்கே பேசியபொழுது, தன்னுடைய பதில் உரையில் குறிப்பிட்டார்கள். நிரந்தரமான செலவுக்காக, ரூ. 9 கோடி, அந்த ரூ. 10 கோடியில் செலவிடப்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால், இங்கே வைக்கப்பட்டிருக்கிற, தணிக்கை செய்யப்பட்ட மாநாட்டுக் கணக்கு விவரத்தில், ரூ. 9 கோடி அல்ல; ரூ. 6 கோடி நிரந்தரச் செலவுக்காகச் செய்யப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நிரந்தரச் செலவுகூட என்ன? கட்டணம் செலுத்திச் செல்ல வேண்டிய கழிப்பிடங்கள்—கக்கூஸ்கள்—மதுரை மாநகரத்தில், ரூ. 1 கோடியே 11 இலட்சம் செலவில் கட்டப்பட்டிருக்கிறது. இன்று அவைகளும் பயன்படுகின்றனவா என்பதை மதுரையிலே உள்ளவர்களை விசாரித்தால் தெரியும். அதைப்போல, சாலை வசதி, மதுரை மாநகராட்சிக்கும், திருப்பரங்குன்றத்திற்கும் ரூ. 3½ கோடிக்குச் செய்யப்பட்டிருக்கிறது. அந்தச் சாலைகள் எல்லாம் இன்று பயன்படக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்றனவா என்று சென்று பார்த்தால் தெரியும். மதுரையிலே, ரூ. 1.18 கோடிக்குக் குடிநீர் வசதி செய்யப்பட்டதாக அதிலே கணக்கு இருக்கிறது. ஆனால், மதுரை நகரத்தில் குடிநீர் இல்லாமல், இன்றைக்கு மக்கள் தவித்துக் கொண்டிருக்கிற நிலைமையையும் நம்மால் காண முடிகிறது. அதிலே இன்னொரு குறிப்பு—குமரிக் கண்டம் என்ற ஒரு படம், 2,000 அல்லது 3,000 அடிகள் கொண்ட படம். அது 11 பிரதிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்காகியிருக்கிற செலவு ரூ 9¼ இலட்சம். அந்தத் துறையிலே அனுபவம் உள்ளவன் என்ற முறையில் சொல்கிறேன். பெரிய நடிகர்களை வைத்துப் படம் எடுத்தால் கூட, ரூ. 12 இலட்சம் . . .

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, முன்பே நீங்கள் இங்கே தெரிவித்திருக்கிறீர்கள், சில தினங்களுக்கு முன்னால், திடீரென்று குற்றச்சாட்டைச் சொன்னால் எப்படி மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்ல முடியும் என்று. இன்றைக்கு இப்படித் திடீரென்று சொன்னால், எப்படிப் பதில் சொல் முடியும்? என்னுடைய இலாகாவைப் பற்றியது அல்ல அது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டுகள் அல்ல தணிக்கை அறிக்கையிலே வந்துள்ள செய்திகளைச் சொல்கிறார்



1983 ஏப்ரல் 27]

டாக்டர் மு. கருணாநிதி : பெரிய நடிகர்களை வைத்துப் படம் எடுத்தால்கூட, 12,000 அடி கொண்ட கலர் படத்தை வெளியிட்டால்கூட, ரூ. 10 இலட்சம் அல்லது ரூ. 11 இலட்சம்தான் ஆகும். அந்தக் குமரிக் கண்டத்திலே பெரிய நடிகர்கள் யாரும் நடித்ததாகத் தெரியவில்லை. 2,000 அல்லது 3,000 அடி உள்ள ஒரு டாக்குமென்டரி பிலிம், 11 பிரதிகள் எடுப்பதற்கு ரூ. 9¼ இலட்சம் செலவிடப்பட்டது என்பது நம்பத் தகுந்ததாக இல்லை. இப்படிப் பல செலவுகள். அதைப் போலவே, உலகத் தமிழ் மநாடு நிகழ்ச்சிகளை, ஊர்வலத்தை நிழல் படம்—திரைப் படம் அல்ல; நிழல் படம்—எடுக்க ஆகி இருக்கிற செலவு போட்டோ எடுக்க செலவு ரூ. 2½ இலட்சம் என்று இந்தத் தணிக்கைக் குழு ரிப்போர்ட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது, இப்படித் தேவையற்ற, அதே நேரத்திலே, அநாவசியமான, அதே நேரத்திலே அளந்து போடாத கணக்கற்ற நிலையிலே செலவைச் செய்து நிதிப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை, ஆகவே வரி போடுகிறோம் என்று கூறுவது எப்படிப் பொருத்தம் உடையதாகும்?

(பிற்பகல் 12-40)

கடந்த நான்கைந்தாண்டுக் காலத்திலே மாத்திரம் பத்திரிகைகளுக்குச் செய்தித் துறை மூலம் பல்வேறு இலாகாக்களுடைய விளம்பரங்கள் இதுவரையிலே காங்கிரஸ் அரசுக் காலத்திலோ, கழக ஆட்சிக் காலத்திலோ இல்லாத அளவிற்கு ஆறு கோடி ரூபாய் பத்திரிகை விளம்பரத்திற்காக இந்த அரசு செலவிட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, பல நேரங்களில், கேள்வி நேரங்களிலேகூட நம்முடைய அமைச்சர்களெல்லாம் சொல்வார்கள். இந்தப் பிரச்னை மத்திய அரசிலே இருக்கிறது; பாராளுமன்ற உறுப்பினர்கள் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், காங்கிரஸ் உறுப்பினர்கள் இவர்களெல்லாம் சென்று மத்தியிலே இருக்கின்ற அரசிடம் வலியுறுத்துங்கள் என்று அமைச்சர்கள் கேள்வி நேரத்திலே சொன்னதையெல்லாம் நான் கேட்டிருக்கின்றேன். இப்படிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இங்கே இருக்கும்பொழுது, அது அன்னியில் அரசு அதிகாரிகள் இருக்கும்பொழுது டெல்லியிலே தமிழ்நாட்டு அரசாங்கத்தினுடைய பிரதிநிதி என்கின்ற ஒருவர் தேவைதானா? அதற்கு இரண்டாயிரம் ரூபாய் மாதச் சம்பளம் தர வேண்டியதுதானா? அது எவ்வளவு செலவு?

அரசுப் பிரதிநிதியாகத் தலைவர் அவர்களே, தாங்கள் இருந்தீர்கள். தாங்கள் அந்தப் பணியை, தங்கள் அரசுப் பிரதிநிதியாக ஒரு மகுடம் சூட்டப்பட்டு உட்கார வைக்கப்படாவிட்டாலும்கூட அந்தப்பணியைநிறைவேற்றுவதிலே வல்லவர் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். (குறுக்கீடு) அது தேவைப்படும், கோடைக் காலம்தான், எனவே அது தேவைப்படும்.

ஆனால் தொடர்ந்து அரசு அரசியல் கட்சி சார்புடையவர்களை, அதிகாரிகள் அல்லாதவர்களை இப்படிப்பட்ட பணிக்கு அங்கே ஈடுபடுத்துவதன் மூலமாக அவர்கள் எந்தக் காரியத்தையும் அங்கே இந்த அரசின் சார்பாகச் செய்யாத ஒரு சூழ்நிலையில் இலட்சக்கணக்கான ரூபாய்—இதுவரையில் அந்தக் கணக்கு தரப்படவில்லை—அந்த அளவிற்கு அரசுப் பிரதிநிதி என்கின்ற பெயரால் செலவழிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட வீண் செலவுகளைக் குறைத்தும், வரவேண்டிய வருவாய்களை ஒழுங்காகக் கவனித்து அவைகளைப் பெறுகின்ற முயற்சியிலே ஈடுபட்டு இந்த அரசு இயங்குமேயானால் இப்படிப்பட்ட வரிகளைப் போட வேண்டிய அவசியமே இல்லை. எனவேதான் இதையொரு ஆய்வுக் குழுவிற்கு, பொறுக்குக் குழுவிற்கு விடவேண்டுமென்றுகூட நம்முடைய நண்பர்கள் திரு. சித்தன் அவர்களும் மற்றும் பலகட்சிகளைச் சேர்ந்தவர்களும், எனக்கு முன்னால் பேசிய திரு. சங்கரய்யா அவர்களும், நண்பர் திரு. குமரி அனந்தன் அவர்களும் இங்கே சுட்டிக்காட்டினார்கள்.

இது பொறுக்குக் குழுவிற்கு விடப்படும் என்றால், அந்தக் காலதாமதத்தினால் பல்வேறு காரியங்கள் தவறாகக்கூட நடைபெறக்கூடும். பொறுக்குக் குழுவிற்கு அதை விடலாம் என்றால் கூட இதனுடைய அடிப்படையை நாம் ஏற்றுக்கொண்டதாக அர்த்தம், எனவே, இந்த அடிப்படையையே தகர்க்கின்ற அளவிற்கு இந்த நுழைவு வரியைத் தமிழகத்திலே நுழைய விடாமல் தடுக்க வேண்டுமென்கின்ற முறையோடு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த வரிவிதிப்பை மீண்டும் மீண்டும் வன்மையாகக் கண்டித்து, இதைத் திரும்பப் பெறுவதே உசிதமான வழி என்று வருவாய்த் துறை அமைச்சருக்கும், இந்த அரசுக்கும் அறிவித்து அமைகின்றேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த நுழைவு வரியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களையெல்லாம் இங்கே சொல்லியிருக்கிறார்கள். கருத்துக்களைச் சொல்கிறபொழுது, புதிதாக நம்முடைய மாநிலத்திலே வந்திருக்கிறது என்பதனாலேயே மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், வெளியே இருக்கின்ற வியாபாரிகள் புதிதாக ஒரு வரி வருகிறது; புதிதாக வருவதை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்திவிட வேண்டுமென்றும், ஆகவே தங்களுடைய பலத்தையெல்லாம் ஒன்றாகத் திரட்டிக் காண்பித்து, அதை மக்களிடத்திலே சொல்வது மட்டுமல்ல, செய்தித் தாள் மூலமாகவும் விளம்பரங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் வைத்துக்கொண்டு இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.





இங்கே சொல்கிறபொழுது ஒன்றைச் சொன்னார்கள். இதில் தவறுகள் நடந்து விடுமோ என்கின்ற எண்ணத்தையெல்லாம் இங்கே சொல்லியிருக்கிறார்கள். தவறுகள் நடந்து விடுமே என்றால், தவறுகள் நடக்கும் என்பதற்காக, நல்ல காரியங்களை நாம் செய்வதற்கு முற்படும்பொழுது அதைச் செய்யாமல் நிற்க முடியாது. தவறு நடக்குமே என்றால், தவறு நடக்காமல் தடுத்து நிறுத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் ஊழல்கள் வந்து விடுமே, இலஞ்சம் அதிகரித்து விடுமே என்று அவர்களுடைய ஒருமித்த கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எந்தத் துறையாக இருந்தாலும், எதுவாக இருந்தாலும், தவறுகள் நடக்கத்தான் செய்கின்றன.

தவறுகள் இன்றைக்கா வருகின்றன? மன்னர் காலத்திலே ஆரம்பித்த அந்த ஊழல்கள், தவறுகள் தொடர்ந்து ஜனநாயகக் காலத்தில் இன்றுவரையில் வருகின்றன. அதிகரிக்கின்றன, அல்லது குறைகின்றன. அதற்காக, அதிகரிக்கின்றன என்பதனாலேயோ, குறைகின்றன என்பதனாலேயோ அதை நாம் விட்டுவிட முடியாது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், வணிக வரித் துறையைப் பற்றிச் சொல்கின்றபொழுது, எல்லா அதிகாரிகளும் பணம் வாங்குகிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் சொல்கிறபடி எல்லா அதிகாரிகளும் பணம் வாங்குவது இல்லை. என்னுடைய முழு மனதுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தவறு செய்கிறவர்கள் எல்லா இடங்களிலும், எல்லாத் துறைகளிலும் இருக்கிறார்கள். தவறு செய்யாதவர்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள். இதை நாம் தவிர்க்க முடியாது. ஆகையால் இலஞ்சத்தை ஒழிக்கமுடியாது என்று நான் சொல்கிறபோது, லஞ்சத்தை ஒழிக்கமுடியாது என்பதற்காக லஞ்சத்திற்கு முத்தம் கொடுக்க நான் தயாராக இல்லை. நான் மட்டும் அதற்கு முத்தம் கொடுக்கத் தயாராக இருந்தால், அது எப்படி நடைபெற முடியும்? சமுதாயத்தில் அத்தனை பேருடைய ஒத்துழைப்பும் இருந்தால்தான் அந்த இலஞ்சத்தை ஒழிக்க முடியும். இல்லையென்றால் அதை ஒழிக்கமுடியாது என்ற காரணத்தினால், இதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியுமா என்று பார்க்க வேண்டும்.

உணவுக் கட்டுப்பாடு. உணவுக் கட்டுப்பாட்டில், இன்றைக்கு அங்கேயும் சில தவறுகள் நடக்கின்றன. சிறு சிறு தவறுகள் ஏற்படுகின்றன என்ற காரணத்தினால், உணவுக் கட்டுப்பாட்டை வேண்டாம் என்று கருதமுடியுமா? அரிசி கொள்முதல் செய்யாமல் இருக்கமுடியுமா? சமுதாயத்தின் அடித்தளத்திலே உள்ளவர்கள், ஏழை எளியவர்கள், குறைந்த விலையில் அவர்களுக்கு எப்படி அரிசியைக் கொடுக்கமுடியும்? எப்படிப்பட்ட தவறுகள் நடந்தாலும், எப்படிக் கொடுக்கவேண்டுமென்கிற நிலைமையில்தான் நாம் இருக்க வேண்டுமென்று சொல்லிக்

கொள்ள ஆசைப்படுகிறேன். இல்லாவிட்டால், உணவுக் கட்டுப்பாட்டில் தவறு நடைபெறுகிறது என்ற காரணத்தால், நல்ல காரியம் செய்வதை விட்டுவிடக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு இந்த சட்டத்தை ஏன் கொண்டுவருகிறோம் என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். இன்றைக்கு இந்த அரசிற்கு எப்படிப் பற்றாக்குறை வந்தது? 1983–84–ஆம் ஆண்டு ஏறக்குறைய ரூ. 184.55 கோடி பற்றாக் குறை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட பற்றாக்குறை ஏற்படுகிறபோது, அது இங்கு மட்டுமல்ல. பல மாநிலங்களிலே உள்ள அரசுகளுக்கும் ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசிற்கும் ஏற்பட்டிருக்கிறது. அப்படி வருகிறபோது நாம் சரிகட்ட வேண்டாமா இல்லையா என்பதற்கு சரிகட்ட வேண்டியது அரசினுடைய கடமையாகும் என்பதை தெரிவித்துக்கொள் கிறேன். அப்படி சரிகட்டும்போது சில இடங்களில் வரிபோடுகிற நிலை ஏற்படுகிறது. அது ஏழைகளை பாதிக்கிறதா, பணக்காரர் களைப் பாதிக்கிறதா என்பதை அரசும் எண்ணக் கடமைப்பட்டிருக் கிறது. மாண்புமிகு உறுப்பினர்களும், தங்களுடைய கருத்துக் களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

சென்ற ஆண்டில், 1981-ல் வறட்சி வந்தது. வறட்சிக் காக மத்திய அரசை நாம் கேட்டது எவ்வளவு என்றால் ரூ. 110 கோடி. அவர்கள் அனுமதித்தது ரூ. 49.7 கோடி, அவர்கள் கடனாகக் கொடுத்தது ரூ. 22.58 கோடி, மானிய மாகக் கொடுத்தது ரூ. 9.68. ஆக மீதமுள்ளவைகளுக்கு என்ன செய்வது? ரூ 58 கோடி தக்காவிக் கடனில் ரூ. 18 கோடியை நாம் செலவு செய்திருக்கிறோம் மத்திய அரசிட மிருந்து கடனாகவும் மானியமாகவும், ரூ. 31 கோடிதான் கிடைத்தது. இத்தகைய நிலையில் நாம் எவ்வாறு சமாளிக்க வேண்டும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்

தற்சமயம் நாடு பூராவும் வறட்சியாக இருக்கிறது. நாடு பூராவும் என்றால்: இந்தியா பூராவும் என்று சொல்கிறார்கள். நாம் நாடு பூராவும் என்று சொன்னால், தமிழகத்தைச் சொல் கிறோம், மற்ற மாநிலங்களைப் பார்க்கிறோம், கேட்டது ரூ. 217 கோடி. அவர்கள் அனுமதித்தது ரூ. 57.6 கோடி. ஆனால் இன்று வரை மத்திய அரசு அனுமதித்தது ரூ. 47.63 கோடியாகும் ஆனால் மத்தியப் பேரரசு கொடுத்தது எவ்வளவு என்றால் ரூ 15 கோடி. அப்படி யென்றால், இந்த இடைவெளியை எப்படிச் சமாளிப்பது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட நிலையில், விவசாயக் கடன்களை ரத்து செய்யவேண்டுமென்று அரசிற்கு விண்ணப்பங்கள் வருகின்றன. ஏன் இந்த நுழைவு வரி வசூல் என்ற கருத்தை எல்லோரும் கேட்கிறார்கள்.

வறட்சி ஏற்படுகிறபோது, விவசாயத் தொழிலாளர் களும், மற்றவர்களும் இன்றைக்கு நாட்டிலே வேலையில்லாமல் சங்கடப்படுகிறார்கள். அதற்கு நிதியுதவி செய்து. இந்த அரசிற்கு மத்திய அரசு கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும்



(பிற்பகல் 12–50)

பொதுப்பணித் துறையில், நெடுஞ்சாலை வளர்ச்சித் துறையிலே ஊரக வளர்ச்சித் துறையிலே அவர்களுக்கு வேலை கொடுப்பதற் கான பணிகளைப் பெருக்கி. வேலை வாய்ப்பை உருவாக்கி யிருக்கிறது. அப்படி வேலை வாய்ப்பை உருவாக்கியது மட்டு மல்ல, உங்களுக்குத் தெரியும், நம்முடைய செய்தித்தாள் களிலே வந்திருக்கிறது இங்கேயும் சொல்லப்பட்டு இருக்கிறது. இன்றைக்குத் தமிழகத்திலே ஏறக்குறைய— ஏறக்குறைய என்று சொல்வதைவிட சரியாகக்கூடச் சொல்லலாம். — 70 லட்சம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். 70 லட்சம் தொழிலாளர்கள் என்றால், அதிலே ஒரு குடும்பத்திற்கு 6 பேர்கள், 7 பேர்கள் என்றாலே 6 லட்சம், 7 லட்சம் அல்லது 10 லட்சம் குடும்பங்கள் இருக்கின்றன. ஒரு குடும்பத்திற்கு ஒரு வேட்டி ஒரு சேலை என்றால் 10 லட்சம் கொடுக்க வேண்டியிருக்கிறது அப்படி 10 லட்சம் கொடுப்பதற்கு என்ன செலவாகும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், இதில் இந்த அரசு ஏழை விவசாயிகள் நிலமற்ற விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தருவது என்பதை இங்கே உள்ள அத்தனை உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்பது எனக்குத் தெரியும். சரி, அவர் களுக்கு வேட்டி கொடுப்போம், சேலை கொடுப்போம் என்பதையும் இங்கே உள்ள அத்தனை பேர்களும் ஏற்றுக் கொள்வார்கள், மறுக்க மாட்டார்கள். இந்தச் செல வினங்களை நீங்கள் யாரும் மறுக்கமாட்டீர்கள். இந்தச் செலவினங்களை மறுக்காமல் இருக்கிறபோது, அதற்கு வர வேண்டுமே. சட்டியிலே இருந்தால்தானே அகப்பையில் வரும். சட்டியை மட்டும் வைத்துக்கொண்டு, அதுவும் மொட்டைச் சட்டியை வைத்துக் கொண்டு நல்ல பெரிய அகப்பையை வைத்துக்கொண்டு துழாவினால் எப்படி வரும். எனவே இன்றைக்கு இருக்கிற சங்கடங்களை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதேபோல் இந்தச் சத்துணவுத்திட்டம். இந்தத் திட்டத் திலே மாறுபட்ட பல்வேறு கருத்துக்கள் இருக்கும். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறபோது நீங்கள் அதிகமாக செலவழிக்கிறீர்கள் என்று சொன்னார்கள். ஆனால் இதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன் சத்துணவுத் திட்டம் நல்ல திட்டம். ஏழை எளிய மாணவர்களுக்கு எல்லாம். உணவு அளிக்கவேண்டும் என்பதை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் ஆனால் சத்துணவுத் திட்டம் என்கிறபோது ஏதோ ஒரு சோத்துப் பிரச்னையாக யாரும் அதை எண்ணக்கூடாது. சோத்துப் பிரச்னை அல்ல. விஞ்ஞான ரீதியாக கண்டுபிடிக்கிறபோது குழந்தைகளுக்கு எப்போது அறிவு வளர்கிறது என்றால் 3 வயதிலிருந்து 6, 7

வயது வரையிலும் வளர்கிறது. ஆளும் வளரனும், அறிவும் வளரனும் என்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் பாடியதைப் போல ஆளும் வளர வேண்டும், அறிவும் வளர வேண்டும், சத்துணவு இல்லாவிட்டால் என்ன செய்யமுடியும்? சத்துணவுக் கொடுத்தால் தானே. நான் இன்னும் உங்களுக்குச் சொல்வேன், எதிர்காலத்திலே இந்தச் சமுதாயம் அறிவுள்ள சமுதாயமாக ஆற்றலுள்ள சமுதாயமாக ஆகவேண்டும். இந்த நாடு பொருளாதார ரீதியில், விஞ்ஞான ரீதியில், வளரவேண்டும் என்றால் எப்படி வளரமுடியும். எதிர்கால சந்ததிகள் அறிவுள்ள சமுதாயமாக ஆகவேண்டும் அதிலே பாரதிதாசன் சொல்லி யதைச் சொல்லவேண்டுமென்றால், குன்றினைப் போல் உடல் வலிமை வேண்டும், கொடுமைகள் தீர போராடுதல் வேண்டும். குன்றினைப் போல் உடல் வலிமை வேண்டும், கொடுமைகள் தீரப் போராடுதல் வேண்டும் என்றால் நோஞ்சானாக இருந்தால் எப்படி முடியும். அதுமட்டுமல்ல, தின்றவே தின்று தெவிட்டல் இல்லாமல், அன்றன்று வாழ்வில் புதுமை காணவேண்டும். அறிவோடு ஆண்மையை கூர்மையாக வளர்க்கவேண்டும் என்று இப்படி பாரதிதாசன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே விஞ்ஞான ரீதியிலேதான் இது கொடுக்கப்படுகிறது. இன்றைக்குத் தமிழகத்தை எடுத்துக் கொண்டாலும், இந்தியத் துணைக் கண்டத்தை எடுத்துக்கொண்டாலும், வைட்டமின் ஏ இல்லாமல் பல பேர்கள் கண்ணை இழக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இப்படிக் கண் பார்வை இழப்பதை எல்லாம் பார்த்துத்தான் முதல்வர் அவர்கள் இதை வெறும் சோத்துப் பிரச்னையாகப் பார்க்காமல் விஞ்ஞான ரீதியாக இந்தச்சத்துணவு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்:

மற்றொன்று சொல்லவேண்டுமென்றால், நியாய விலைக் கடைகள். மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசுகிறபோது நியாய விலைக் கடைகளிலே எல்லாப் பொருள்களும் இருக்க வேண்டும், குறைந்த விலையிலே கிடைக்கவேண்டும். அரிசி இல்லை, ஏன் ஒரு குடும்பத்திற்கு 20 கிலோ அரிசி கொடுக்க வில்லை? ஏன் 10 கிலோ அரிசி கொடுக்கிறீர்கள் என்று கேட்டார்கள். அப்படி நியாயவிலைக் கடைகள் என்று தமிழகத் திலே எவ்வளவு இருக்கின்றன என்றால் 17,844 நியாயவிலைக் கடைகள் இருக்கின்றன. இவைகள் எல்லாம் தேவை என்று எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். இந்த நியாயவிலைக் கடைகளை நடத்துவதற்கும் பணம் கொடுக்கிறது அரசு. அப்படிச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், 1979 80-ல் ரூ 125 லட்சம் கொடுத்திருக்கிறது. 1980—81-ல் ரூ 132 லட்சம், 1981-82-ல் ரூ. 254 லட்சம், என்று இப்படிக் கடைகளை நடத்து வதற்குப் பணம் கொடுக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அரிசி அங்கே கொடுக்கப்படுகிறது. எப்படிக் கொடுக்கப்படுகிற அரிசி எவ்வளவு கொடுக்கப்படுகிறது என்று சொன்னால், நல்ல ரகமாக இருந்தால் 2 ரூபாய், சாதாரண கமாக இருந்தால் 1¾ ரூபாய், 1 கிலோ. 1 கிலோ





அரிசி-நல்ல ரகமாக இருந்தால் 3 ரூபாய், மோட்டா ரக மாக இருந்தால் ரூ 2.50. இப்படி வாங்குகிற அரிசியைக்குறைந்த விலைக்குக் கொடுக்கிறபோது நமக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படு கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இது எப்போதும் நடந்தது இல்லை. நாட்டிலே நன்றாக மழை பெய்து, நன்றாக பயிர்கள் விளைகிறபோது இந்த நியாய விலைக் கடைகளில் அதிகமாக விற்கவில்லை. உங்களுக்கு உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், 1979-80-ல் 1.60 லட்சம் மெட்ரிக் டன் அரிசிதன் விற்று இருக்கிறது. அன்று அதற்குக் கொடுத்த உதவிப்பணம் எவ்வளவு என்றால் ரூ. 293.80 லட்சம்தான். ஆனால் 81.82-ல் 2.25 லட்சம் மெட்ரிக் டன் உதவித் தொகை 681.8 லட்சம் வறட்சி எப்போது வந்தது, 81—82-ல். 2.25 லட்சம் மெட்ரிக் டன் நியாயவிலைக் கடையில் நாம் விற்று இருக்கிறோம். ஒரே ஆண்டில் நாம் கொடுத்த உதவித்தொகை பலமடங்கு ஏறியிருக்கிறது. 1981–82—ல் 7.05 லட்சம் மெட்ரிக் டன் கொடுத்து இருக்கிறோம். அந்த வருஷம் மட்டும் அரசு கொடுத்த பணம் எவ்வளவு என்றால் ரூ. 3525 லட்சம்—முதல் வருஷம் சுமார் 600 லட்சம். அடுத்த வருஷம் ரூ. 3525 லட்சம் என்றால் 6 மடங்கு 7 மடங்கு அதிகரித்து இருக்கிறது ஒரே ஆண்டில் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். அதே நிலை இன்று நீடிக்கிறது. இன்று 1982-83—ல் 8 லட்சம் மெட்ரிக் டன் அரிசி கொடுத்து இருக்கிறோம். அதற்கு ரூ. 600 லட்ச ரூபாய் அரசு மானியமாகக் கொடுத்து இருக்கிறது. 3.50 ரூபாய் ரூ. 2½ என்ற அளவிற்கு வாங்கப்படுகிற அரிசியை ரூ. 2 1 3/4 என்று விற்றால், அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. இப்போது வருகிற ஆண்டில், 1983-84-ல் இன்னும் வறட்சி இருக்கிறது என்பதால், அரிசி எவ்வளவு செலவாகும் என்றால், 9 லட்சம் மெட்ரிக் டன். எதிர்பார்க்கிற நஷ்டம் எவ்வளவு என்றால் இந்த ஆண்டில் ரூ. 60 கோடி வருகிறது. இந்தப் பணத்திற்கு எங்கே போவது? மாண்புமிகு உறுப்பினர்கள் இதை யெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இப்படி வரிகள் போடுகிறோம் என்று சொன்னால், அது ஏழை எளியவர்களுக்கு, வாழ்க்கையின் அடி தளத்தில் உள்ளவர்களுக்கு உதவி செய்வதற்குத்தான். அரசு எவ்வளவு கஷ்டப்பட்டாலும் கடன் வாங்கியாவது அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று சொல்லுகிற மாண்புமிகு உறுப்பினர்களின் அந்த எண்ணங்களைப் பார்க்கிறபோது, இவ்வளவு செலவினங்கள் வருகிறதே என்பதை எண்ணிப்பார்க்கிறபோது, இப்படிப்பட்ட வரிகளைக் கொண்டு வரவேண்டிய நிலைமை இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இன்றைக்குக் காவல்துறைக்குக் குறைந்த விலைக்குப்பொருள்கள் தருகிறோம். அரிசி 1 கிலோ 1 ரூபாய், துவரம் பருப்பு ஒரு கிலோ ரூ 2.50, கடலைப்பருப்பு ரூ. 2¼ என்று இப்படியெல்லாம் குறைந்த விலைக்குக் கொடுக்கிறோம். இதன் காரணமாக 2

கோடி ரூபாய், 3 கோடி ரூபாய் அதிகமாகி ஒரு வருஷத்திற்குச் செலவிடவேண்டிய நிலை இருக்கிறது. இவையெல்லாம் செய்வதற்குப் பணம் வேண்டும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நீங்கள் எல்லாம் மிகமிக ஆவலோடும், ஆர்வத்தோடும் இந்த நாட்டு மக்களுக்காக, சென்னை நகர மக்களுக்காக கிருஷ்ணா நீர் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டீர்கள். அது குறித்து இந்த அரசு செய்துகொண்ட ஒப்பந்தத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கே படித்துக் காட்டினார்கள். அதற்கு எவ்வளவு செலவாகும் என்பதையும் எடுத்துச் சொன்னார்கள். அந்தப் பணத்திற்கு எங்கே போவது? அது மட்டுமல்லாமல், நம்முடைய வாய்க்கால்களைச் சீர்படுத்தி, ஏரிகளைப் பலப்படுத்தி, அந்தத தண்ணீரை சேமித்து வைப்பதற்காக ஏறத்தாழ 236 கோடி ரூபாய் செலவு வருகிறது என்று மதிப்பிடப் பட்டுள்ளது. ஆந்திராவில் செய்யப்படுகிற வேலைகளுக்கு நம்முடைய பங்காக அவர்களுக்கு நாம் ஆண்டுக்கு 60 கோடி ரூபாய் தரவேண்டியிருக்கிறது. ஏறத்தாழ 200 கோடி ரூபாய் நம் தரவேண்டும். எனவே ஏறத்தாழ 436 கோடி ரூபாய் நாம் இதற்கு செலவிட வேண்டியிருக்கிறது என்றால் என்ன செய்வது? இவைகளையெல்லாம் எண்ணிப்பார்த்து, இன்றையதினம் நம்முடைய வருவாயை ஓரளவிற்குச் சரிபடுத்த இந்த நுழைவு வரி இங்கே கொண்டு வரப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இதை சொல்லுகிறபோது இங்கே நான் உங்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வரி ஒருமுறைதான் வசூல் செய்யப்படும்; இரண்டாம் முறை வசூல் செய்யப்படமாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

(பிற்பகல் 1-00)

இன்றைக்கு இங்கே பேசும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் செக் போஸ்டிலே நிறுத்திவிடுவார்கள், சில சங்கடங்களை உருவாக்குவார்கள் என்று சொன்னார்கள். நிச்சயமாக செக் போஸ்டிலே நிறுத்தமாட்டார்கள். இதை எல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் இந்த வரியைக் கொண்டு வந்திருக்கிறோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியிலே இதைக் கொண்டு வந்திருக்கிறோம். அண்ணா அவர்கள் என்ன சொன்னார்கள்?

திரு. துரைமுருகன் : அண்ணா அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால் இந்தமாதிரி நுழைவு வரி எல்லாம் போடக் கூடாது அப்படி என்று சொன்னார்கள். (சிரிப்பு);





மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அண்ணா அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை, உறுப்பினர்கள் தெரிந்துகொள்வதற்காக, படித்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இவ்வளவு செலவினங்கள் இருக்கின்றன என்று தெரிவித்துக்கொண்டேன். ஆனால் இப்போது நாங்கள் வரியைக் கொண்டு வருகிறோம் என்றால் ஏதோ விளையாட்டுக்காகக் கொண்டு வரவில்லை. மன்னர் ஆட்சியில் எவ்வளவு வேண்டுமானாலும் பணத்தை வாங்கலாம்; அதை எப்படி வேண்டுமானாலும் செலவழிக்கலாம். ஆடம்பரமாகச் செலவிடலாம். ஆனால் இங்கே முடியாது. இப்போது நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் கூட நாங்கள் செய்திருக்கிற கணக்கையும். இன்றைக்கு சி. ஏ. ஜி. ஆடிட் செய்திருக்கிறதையும் படித்துக் காட்டினார்கள். ஒவ்வொரு இடத்திலும் இங்கே செக்கிங் இருக்கிறது; தடுப்புச் சுவர் இருக்கிறது. ஆனால் அப்படிச் சொல்லுகிறபோது வரியைப் போடுவது மட்டுமல்ல; வரியைப் போட்டபிறகு முறையாக வாங்கி, முறையாகச் செலவிடுகிற கடமையும் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு இருக்கிறது. இல்லை என்றால் சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல; பொது மக்களே கேட்பார்கள், நீங்கள் வரி போட்டீர்களே, என்ன செய்தீர்கள் என்று.

அண்ணா வழியில்தான் நாங்கள் வரியைக் கொண்டு வந்திருக்கிறோம். இன்னும் சொல்ல வேண்டுமானால் 1967 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17—ந்தேதி வரவு—செலவுத் திட்டத்தில் அண்ணா அவர்கள் சொன்னதைப் படிக்கிறேன். ஏனென்றால் அண்ணா அவர்கள் சொன்னாரா இல்லையா என்று கேட்பார்கள். ''வரி குறைப்பு முறையிலும், வரி அறிவிப்புத் திட்டத்திலும், சலுகை தரும் முறையிலும் சமூகத்தில் குறைந்த வருவாய்ப் பிரிவினர் நலனைப் பாதுகாக்கும் நோக்குடன் அமைக்கப்படுவதே சரியான சமூக நீதி என்று இந்த அரசுக் கருதுகிறது'' இதை ஏன் சொல்கிறேன் என்றால் இது அண்ணா அரசுதான். அண்ணா எதை நினைத்தாரோ அதைத்தான் இந்த அரசு நினைக்கிறது; அதன்படி நடக்கிறது. ''தாங்கள் கூறிய தரத்தில் உள்ளவர்களை (மேஜரராக இருப்பவர்கள், சேர்த்து, கோடிக் கணக்கில் உள்ளவர்களுக்கு இந்தச் சலுகைகளைத் தந்துவிடுவது பொருளற்ற போக்காகும். வறிய நிலையில் உள்ளோர் நலனுக்காகவும், நாட்டின் பொது நலனுக்காகவும், நலிந்த வாழ்வினர் நலனுக்காகவும் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கையாக....

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் புரிகின்ற வாதத்திலிருந்து இந்த 'என்ட்ரி டாக்ஸ்', நுழைவு வரியை அண்ணா அவர்களே அன்றைக்கு ஆதரித்திருக்கிறார்கள் என்கின்ற ஒரு தவறான கருத்து பொதுமக்களிடத்திலே பரப்பப்பட்டுவிடக் கூடாது. அண்ணா சொல்லித்தான் இந்த வரியைப் போட்டோம் என்பதைப்போல அமைச்சரவர்கள்

கூறுகின்றார்கள். அண்ணா கூறிய பொதுப்படையான கருத்தை இதற்காகப் பயன்படுத்துவது நல்லதல்ல. எங்காவது அண்ணா அவர்கள் நுழைவு வரி போடவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்களா என்று படித்துக் காட்டினால் நலம். ஏனென்றால் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலும் அதற்குப் பின்னால் கழக ஆட்சி நடைபெற்ற போதும் சென்னை மேயராக இருந்த நண்பர் முனுசாமி அவர்கள் அண்ணா அவர்களை அணுகி, பிறகு அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு எங்களை அணுகி, இந்த நுழைவு வரியை சென்னைக்கு மாத்திரமாவது போட வேண்டும்; மாநகராட்சி மன்றம் அதனுடைய பயனைத் துய்க்க வேண்டுமென்று கேட்டபோது அண்ணா அவர்களும் மறுத்துவிட்டார்கள், அண்ணாவுக்குப் பிறகு நம்முடைய ஆட்சியிலும் — உங்களையும் சேர்த்துதான் சொல்லுகிறேன் — நண்பர் முனுசாமி அவர்களுடைய கோரிக்கை மறுக்கப்பட்டுவிட்டது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, வரி போடுவதைப்பற்றி அண்ணா அவர்கள் என்ன கருத்தை வைத்திருந்தார்கள் என்பதைத் தெரிவிக்கிறேன். அதற்கு வசதி நிறைந்த உள்ளோர் நாட்டின் பொது நலனுக்காகவும் நலிந்த வாழ்வினர் நலனுக்காகவும் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்காகவும் செலவுத் தொகையில் இங்கே தான் அண்ணா வருகிறார்—ஒரு கணிசமான பகுதியைத் தந்து உதவும் பொறுப்பை மேற்கொள்வதை பாரம் என்று கருதக் கூடாது. அறம், பொறுப்பு என்று கருத வேண்டும். அது மட்டுமல்லாமல் இப்படிப்பட்ட வரி போடுவதை நல்லோர் அங்ஙனமே கருதுவர் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

டாக்டர் மு. கருணாநிதி ; தலைவர் அவர்களே, அண்ணா அவர்கள் இப்படிப்பட்ட ஒரு நுழைவு வரியைப்போடலாம் என்று உத்தரவிட்டாரா? நண்பர் முனுசாமி அவர்கள் சொன்ன நுழைவு வரி சம்பந்தமான கருத்துக்களை அவர் ஏற்றுக் கொண்டாரா இல்லையா என்பதை, அப்போதைய அமைச்சராக இருந்த, இப்போது நிதியமைச்சராக உள்ள நாவலர் அவர்கள் குறிப்பிடுவார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நுழைவு வரியை அண்ணா ஏற்றுக் கொள்ளவில்லையே தவிர, எல்லோரும் சொன்னது மாதிரி வரியே போடவேண்டாம் என்று சொல்லவில்லை. வரி போடலாம் என்றுதான் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி—கூச்சல் குழப்பம்) எத்தனையோ வரிகளை அண்ணா அவர்கள் காலத்தில் போடவில்லை. பிறகு நாம் போட்டுக் கொண்டு வந்தோம். அதே மாதிரி பண்டித ஜவஹர்லால் நேரு காலத்திலும் கூட போடப்படாத எத்தனையோ வரிகள் தற்போது பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் காலத்திலே



போடப்பட்டு வருகின்றன. அது மட்டும் அல்லாமல் நுழைவு வரி எங்கேயிருந்து வந்தது? அதை எங்கேயிருந்து கொண்டு வந்தீர்கள் என்று மாண்புமிகு காங்கிரஸ் கட்சி தலைவர் அவர்கள் கேட்ட உடனேயே காங்கிரஸ் மாநிலங்களிலேயிருந்துதான் அதை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம் என்று நான் பதில் சொன்னேன். (சிரிப்பு) வேண்டும் என்றால், அந்த மாநிலங்களுக்கெல்லாம் சென்று நேரிடையாக ஆராய்ந்து பார்த்து, இதிலே எந்தவிதத் தவறோ, தகராறுகளோ ஏற்படாத அளவுக்கு அவர்கள் எப்படிச் சாமர்த்தியமாக நடந்து கொண்டு வருகிறார்கள் என்பதைப் பார்த்து, அவைகளைப் பயன்படுத்தி நம் மாநிலத்திலும் குற்றங்குறைகள் ஏற்படாமல் நடவடிக்கை எடுக்கலாமே தவிர, வரியே போடக்கூடாது என்பது சரியல்ல. வரிகளைப் போடத்தான் வேண்டும். ஆனால் இதைக்கூட நாங்கள் ஒன்றும் மகிழ்ச்சியாகப் போடவில்லை, வேறு வழி இல்லாமல்தான் போடுகிறோமே தவிர, வேறல்ல. ஆகவே, இந்த வரிகளைப் போடலாம் என்பது என்னுடைய கருத்து.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப் : மிஸ்டர் ஸ்பீக்கர் சார், எந்தெந்த இனங்களுக்கு நுழைவு வரி போடப் போவதாக இங்கே சொல்லியிருக்கிறார்களோ, அவைகளில் பல பொருள்களின் மீது 2,3 தடவை சேல்ஸ் டாக்ஸ் இன்க்ளுட் செய்யப்பட்டிருக்கிறது. நுழைவு வரியும் போட்டு, சேல்ஸ் டேக்ஸும் போட்டுப் பார்க்கும்போது அது மிக அதிகமாக விலை உயரும் நிலை இருக்கிறது......

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் பேசி முடித்து விடுகிறேன். பின்னால் வேண்டுமானால் சொல்லுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நான் அண்ணா அவர்கள் பேசிய கருத்துக்களைக் கூறிக் கொண்டிருந்தபோது, அதை பாதியிலேயே வெட்டி விட்டார்கள். அதைப் மேலும் வெட்டி விடலாம் என்று நீங்கள் வேறு வகையிலே கேள்வி கேட்கிறீர்கள். இதற்கெல்லாம் நான் பின்னால் பதில் சொல்கிறேன். மாண்புமிகு அண்ணா அவர்கள் அப்படிச் சொல்லவில்லை. இப்படி வரிகள் போடுவதை ஏற்றுக் கொள்வதை பாரம் என்று கருதக் கூடாது, அறம் என்று கருதவேண்டும். அதற்குப் பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும். அது மட்டும் அல்ல, நல்லவர்கள் அதனை அங்கீகரிப்பார்கள் — என்னைப் போல — என்றும் சொன்னார்கள். (சிரிப்பு) நுழைவு வரி போடுவதை அண்ணா அவர்கள் ஏற்றார்களா என்று கேட்டார்கள். இதுபோன்று எதிர்க்கட்சிகள் எதிர்காலத்தில் கேட்பார்கள் என்று எண்ணியிருந்தால், எந்தெந்த வரிகளை எல்லாம் போடலாம், எவைகளையெல்லாம் போடவேண்டாம் என்று அண்ணா அவர்கள் எழுதி வைத்திருக்கக்கூடும். ஆனால் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படும், இப்படிப்பட்ட கேள்விகள் கேட்பார்கள் என்று அண்ணா அவர்கள் அப்போது எதிர்பார்க்கவில்லை. (சிரிப்பு)

அது மட்டும் அல்ல, அவர்கள் மேலும் சொல்கிறார்கள் — வரியைப் போடாமல் ஆட்சியை நடத்தவேண்டும் என்று நான் குறிப்பிட மாட்டேன் — அப்படி என்றால் வரி போடலாம் என்று அர்த்தம் — போடுகின்ற வரியை போடத்தக்க இடத்திலே போடவேண்டிய முறைப்படி போடவேண்டும், என்றும் குறிப்பிடுகிறார்கள். வரியைப் போடவேண்டிய இடத்தில் போடவில்லை, போடவேண்டிய முறைப்படி போட வில்லை என்று எடுத்துச் சொல்லுங்கள். அதை மாற்றிக் கொள்கிறேன்.... (குறுக்கீடு).... அண்ணா பேசுவதைக் குறிப்பிடப்போகிறேன். ஆகவே, இப்போது அண்ணா பேசப் போகிறார், அண்ணா பேசும்போது குறுக்கிடக்கூடாது. 'அப்படி வரியைப் போடாமலேயே ஆட்சியை நடத்தலாம் என்று நாங்கள் சொல்லவில்லை' என்று குறிப்பிட்டு, அவர் மேலும் சொல்கிறார் — வரியைப் போடுகிற முறையிலே போடத்தக்க இடத்திலே போடவேண்டும். வரியைப் போடாமலே ஆட்சியை நடத்தலாம் என்று நாங்கள் சொல்லவில்லை, ஆனால் நான் சொன்னதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்து வைத்துக்கொண்டு, வரியே போடமாட்டோம், என்று நாங்கள் சொன்னதாக சொல்கிறார் — இப்போதும் எதிர்க் கட்சித் தலைவர் சொல்வது போல — ஆனால் நான் அதைப் பற்றி என்னுடைய முதல் பேச்சிலே சட்டமன்றத்திலேயும் ஒரே மாதிரித்தான் சொன்னேன். வெளியிலே பொதுக்கூட்டங் களிலேயும் அப்படித்தான் நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம்— ஆனால் நான் சொன்னதிலே, ஏழைகளுக்கு வரி போட மாட்டோம், மற்றவர்களுக்கு வரி போடுவோம் என்று சொன்னதிலே, ஏழைகள் என்ற ஒரு வார்த்தையை மட்டும் அவர்கள் எடுத்து விட்டார்கள் என்று அவர்கள் சொன் னார்கள்.

(பிற்பகல் 1–10)

ஆகவே தாங்கக் கூடியவர்களுக்கு வரி போடவேண்டும். அப்படிப் போடப்பட்ட வரிகளை தக்க காரியங்களுக்குப் பயன் படுத்த வேண்டும் என்றுதான் நான் சொன்னேன் என்று அண்ணா அவர்களே குறிப்பிட்டிருக்கிறார். நான் இங்கே அண்ணா சொன்னதைச் சொல்வதற்கு காரணம் நான் இதற்கு முன்னால் படித்துக் காண்பிக்கிறபோது இந்த அரசு எது எதற்கு வரி போட்டுக்கொண்டு வருகிறது, அப்படிச் செய்து கொண்டு வருகிறபோது என்ன என்ன நன்மை செய் கிறோம் அதற்குப் பணம் வேண்டுமா; வேண்டாமா என்பதற்குத் தான் இதை நான் படித்துக் காண்பித்தேன் என்பதை உங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல, இங்கே வரி போடுகின்றபோது நாங்கள் மட்டும் போடவில்லை என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். இங்கே சட்டம் கொண்டுவருகிறபோது மாண்புமிகு நிதி





யமைச்சர் அவர்கள் 'நாட் எக்ஸீடிங் ஆப் 2%' என்று சொன்னதை இந்த அரசு ஏற்றுக்கொண்டு அமெண்டுமெண்டு உங்களுக்கு கொடுத்து இருக்கிறார்கள். நான் கடைசியில் அமெண்டுமெண்டை படிக்கிறேன். ஆனால் இந்தப் பொருட் களில் சிலவற்றுக்கு எடுக்க வேண்டும் என்று சொன்னார்களோ, விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்று சொன்னார்களோ சர்க்கரை, துணிகள், புகையிலை ஆனால் இங்கே பட்டுக்கு வரி உண்டா என்று கேட்டார்கள். நிச்சயமாக, பட்டுக்கு வரி போட வில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் பேசுகிறபோது எப்படி பட்டுக்கு முதலில் சொன்னீர்களோ அப்படித்தான் நானும் பட்டுக்கு முதலில் சொல்லிவிட்டேன். துணிகள், புகயிலை, உற்பத்திப் பொருட்கள், சிமிண்ட், பெட் ரோலியம், வனஸ்பதி, காகித அட்டைகள், நிலக்கரி, இரும்பு, மின்சாரப் பொருட்கள் மோட்டார் வாகனங்கள், வெட்டி எடுக்கப் படும் பொருட்கள் இவைகளுக்கு எல்லாம் வரி என்று சொல்லி, வரி எது எதற்கு இல்லை என்று கேட்டார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப் பினர்கள் சட்டமன்றத்தில் நன்கு இருந்து பழக்கப்பட்டவர்கள், வழக்கறிஞர்களுக்கு நன்கு தெரியும். அரசு ஒரு நோட்டிபிகேஷன் ஆனாலும் சரி, விதிமுறைகள் ஆனாலும் சரி அதையே வெளியே நான் சொன்ன பிறகு நடைமுறைப்படுத்தப்பட்டாலும் இங்கே சட்டமன்றப் பேரவையிலும், மேலவையிலும் கொண்டு வந்து அதை நீங்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏற்றுக்கொள்ள வில்லை என்றால் திரும்ப அது கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்லியபடி அவர்கள் என்ன என்ன சொன்னார்களோ அவை நடைமுறைப்படுத்தப்படும். இந்த வரியை என்றைக்கு வசூல் செய்கிறோமோ வரி வசூல் செய்கிற அன்றிலிருந்து இவை களுக்கு எல்லாம் விதிவிலக்கு உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சர்க்கரை என்ற தலைப்பின் கீழ் சர்க்கரை மிட்டாய், மற்றும் மிட்டாய் வகைகள், மின்சாரப் பொருட்கள் என்ற தலைப்பின் கீழ் பல்புகள், குழல் விளக்குகள், ஒயர், ஹோல்டர், பிளக்குகள், மற்றும் ஸ்விச்சுகள், மருந்து பொருட்கள் என்ற தலைப்பின் கீழ் இங்கே முதலிலே நமது நிதியமைச்சர் அவர்கள் தெரிவிக்கும்போது சித்த மருந்துகள், யூனானி மருந்துகள், ஆயுர்வேத மருந்துகள் என்று தெரிவித்தார்கள். ஆனால் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தபடி எல்லா மருந்துப் பொருட்களுக்கும் வரிவிலக்கு கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலில் சட்டத்தைக் கொண்டு வந்து இருப்போமானால் இவைகள் வந்து இருக்காது இப்போது. நான் விளக்கமாகச் சொன்னேன் நிதியமைச்சர் சொல்லாததையும் மாண்புமிகு உறுப்பினர்கள் விருப்பத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்றால் அதையும் யோசித்து இந்த அரசு செய்யும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். துணி வகைகள் என்ற தலைப்பின் கீழ் கைத்தறித் துணிகள், கைத்தறி பட்டுத் துணிகள் மற்றும் கதர் துணிகள், பெட்ரோலிய

(திரு. எஸ். டி.சோமசுந்தரம்] [1983 ஏப்ரல் 27

பொருட்கள் என்ற தலைப்பின் கீழ் மண்ணெண்ணை இவைகளுக்கு எல்லாம் வரி இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * என்ற பெயர் தவறுதலாக வார்த்தைகள் வெளியே வந்து சிரிப்பு எல்லாம் ஏற்பட்டது என்று நான் கேள்விப்பட்டேன். ஆகவே *என்பதற்குப் பதிலா *என்ற இடத்திலே எல்லாவற்றிலும் பட்டு என்று வரும்.

திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * *

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் 2 பேரும் பேசியது எப்படி அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டதோ அதைப் போலவே நான் முதலிலே பேசுகிறபோது நான் பேசியதையும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியதிலேயும் அந்த பினாமி என்ற வார்த்தையை நான் பயன்படுத்தியதையும் பினாமி என்ற வார்த்தையை அவர் பயன்படுத்தியதையும் அதையும் சேர்த்து நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எல்லாம் நீக்கி ஆகி விட்டது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் *போட்டுக் கொள்வது இல்லை,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்திரவிடுகிறேன்.

மாபுண்மிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அது மட்டுமல்ல, இந்த நுழைவு வரி, ஆக்ட்ராய் என்பது இங்கே மட்டும் கொண்டுவரப்படவில்லை. நான் முதலிலேயே தெரிவித்தபடி மகாராட்டிரம், பஞ்சாப், இராஜஸ்தான், உத்திரபிரதேசம் மேற்கு வங்கம், கர்நாடகம், குஜராத், ஹரியானா, ஜம்மு காஷ்மீர், மணிப்பூர், டெல்லி, பாண்டிச்சேரி என்கின்ற 14 மாநிலங்களிலே கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் இங்கே போடுகிறபோது

not exceeding two per cent

என்றால் பாயின்ட் நாட், நாட், நாட்."என்றுகூட வரும்; வராது என்று சொல்லவில்லை; வராது மகாராட்டிரத்திலே என்னவென்றால் அரை சதவீதத்திலிருந்து

not xceeding two per cent

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



1983 ஏப்ரல் 27] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

என்று போட்டிருக்கிறார்கள. அதேபோல் கட்டடப் பொருட்கள் மற்ற பொருட்களுக்குப் போட்டிருக்கிறார்கள், நான் அதைப் படிக்கவேண்டாமென்று கருதுகிறேன். அதைப் போல் கர்நாடகத்திலே துணிவகைகளுக்கு 1 சதவீதம் போட்டிருக்கிறார்கள். மேற்கு வங்கத்திலே மருந்து வகைகளுக்கு— குறிப்பாக இங்கே மருந்துக்கு வரியே பூராவும் எடுத்துவிட்டோம், நிதியமைச்சருடைய அனுமதியின்பேரில் மற்ற அமைச்சர்களின் அனுமதியின்பேரில் மருத்துகளுக்கு வரியே பூரணமாக நீக்கி விட்டோம்—மருந்துகளுக்கு மதிப்பில் 8 சதவீதம் போட்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் வரி போடவேண்டும், வாங்க வேண்டும் என்று இல்லை. உங்களுக்கு ஒன்று சொல்லவேண்டு மென்றால் நெல், அரிசி கோதுமை, சோளம், கம்பு, ராகி, திணை, வரகு, சாமை, குதிரை, ரவா, தேங்காய் பால் பன், பொறை போன்ற அனைத்து உணவுப் பொருட்களுக்கும் இந்த அரசு வரி விதித்து இருக்கிறது. நெல்லுக்கு ஆந்திரா மாநிலத்திலே 4%; கர்நாடகத்தில் 4%; கேரளத்தில் 1%: அரிசிக்கு ஆந்திரத்திலே 4%; கர்நாடகத்திலே 4%; கேரளத்திலே 1%; நாம் வரிப் போடவில்லை, கோதுமைக்கு ஆந்திரத்திலே 4% கர்நாடகத்திலே 4%; கேரளத்திலே 1%; சோளம், மக்கா சோளம், கேழ் வரகு இவற்றிற்கு நாம் வரி போடவில்லை, அவர்கள் எல்லாவற்றிற்கும் 2%, 3%, 4%, 4%, என்று போட்டு இருக்கிறார்கள். நாம்அந்த அளவுக்கு வ போடாமல் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது ஒன்றைச் சொன்னார்கள். இங்கே எதிர்க்கட்சித் தலைவர் பேசுகின்ற போது ஒன்றைச் சொன்னார்கள். ஸ்டீல் ரோலிங் மில் பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றிச் சொல்கிறபோது உயர்நீதி மன்றத்திலே வழக்கு சென்றது. உயர் நீதி மன்றம் அரசுக்குள்ள அதிகாரத்தை நிர்ணயித்தது. இந்த அரசுக்கு அதிகாரம் இருக்கிறதா, இல்லையா என்ற ஒரு கேள்வி வருகிறபோது உயர்நீதிமன்றம் அரசுக்கு அதிகாரம் உண்டு என்று சொல்லியிருக்கிறது. அது மட்டுமல்ல, நான் பலமுறை சொல்லியபடி இங்கே சொல்லவேண்டுமென்றால் ரோலிங் மில், அங்கே கச்சா பொருள் முதலிலே எங்காவது ஒரு இடத்திலே அதற்கு வரி போட்டிருந்தால் அதுவும் இந்த மாநிலத்தில் வரி போட்டிருந்தால் அதனுடைய புராடக்டுக்கு உருக்கி வெளியே அனுப்புவதற்கு வரியில்லை. எங்காவது வரி போட்டிருந்தால்? அதற்கு வரி உண்டு என்பதை விளக்கமாக நான் தெரிவித்து இருக்கிறேன். இன்றைக்கு அவர்கள் ஏறக்குறைய 62 பேர்கள் ரோலிங் மில்லிலே உள்ளவர்கள்—எதிர்க்கட்சித் தலைவர் எடுத்தவுடனே பேசியதால் நான் அது எங்கே இருக்கிறதுஎன்று தேடிப் பிடித்தேன், 62 மில்காரர்களும்—அரசிடத்திலே வரிவிலக்குதான் கேட்டிருக்கிறார்கள். ஆனால் இந்தியன் ஸ்டீல் ரோலிங் மில் மட்டும்தான் வரி விதிப்பும் ஹாலிடே—கடனாக—வைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்

என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சாதராணமாக அதுபற்றி ஒரு கமிட்டி போடப்பட்டது, கொடுக்க வேண்டுமென்று அந்தக் கமிட்டியிலே உள்ளவர்கள் சொன்னதற்குப் பிறகு இந்த அரசு பரிசீலனை செய்து கொடுத்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1.20)

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, அந்த டாஸ்க் கமிட்டியினுடைய மினிட்ஸ் புக்கை பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியிலே கேட்டு தரமாட்டேன் என்று சொல்லியிருக்கிறார்கள். என்ன கேட்டார்கள்? எப்படி டிஸ்கஷன் நடந்ததென்று கேட்டால், பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டிக்கே அந்த ரிப்போர்ட்டை, கொடுக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள்? நான் அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன், என்ன நிலைமைகள் என்பதை இந்த மன்றத்திலே வைத்துவிடுங்களேன். இந்த மன்றத்தை விட சுப்ரீம் பாடி வேறு கிடையாது என்று சபாநாயகர் சொல்லிக் கொண்டிருக்கிறார். மினிட் புக்கை இந்த அவையிலே வைப்பதற்கு உங்களுக்கு என்ன தயக்கம்? அதிலே என்ன மயக்கம்? வைக்கப்படுமா என்று அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் முதலிலேயே தெரிவித்தேன்; நம்முடைய விதிகள் 232(1)-ன்படி ஆவணங்கள் அளிப்பது பொது நலனுக்கு ஒவ்வாது என்ற காரணத்தின் அடிப்படையில் அந்த ஆவணங்களைக் குழுவின் முன்பு தாக்கல் செய்ய அரசு மறுக்கலாம்.

திரு. துரைமுருகன்; அதிலே மில்காரரர்கள் எல்லாம் உட்கார்ந்திருக்கிறார்கள். மில்காரர்களுக்குத் தெரிவது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிய கூடாதா? பொதுமக்களைப் பாதிக்கக்கூடிய இரகசியம் என்ன? மில்காரர்கள் வெளியே சொல்ல முடியாதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படி விதிகளில் அரசிற்கு அதிகாரம் இருந்தாலும், அதிகாரம் இருக்கிறது என்பதற்காக மறுக்கவில்லை என்று நான் சொல்ல வந்தேன். அதற்கு முன்னாலே மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள். அவர்கள் இடையிலே குறுக்கிட்டு சொன்னது நான் இன்னும் நன்றாக இது குறித்து சொல்லவேண்டுமென்று கூறினார் என்று எடுத்துக்கொள்கிறேன். இல்லாவிட்டால் இதை நான் சொல்லியிருக்க மாட்டேன். என்னென்ன ஆவணங்களைக் கொடுத்தோம் என்று சொல்லியிருக்க மாட்டேன். அதை நான் சொல்ல வேண்டும், செய்தித்தாள்களில் வரவேண்டுமென்பதற்காக மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார், எதிர்க் கட்சித் தலைவர்





அவர்களுக்கு நான் சரியாகப் பதில் அளிக்க வேண்டுமென்று எனக்கு இருக்கிற அக்கறையை விட மாண்புமிகு உறுப்பினருக்கு அதிக அக்கறை இருக்கிறது என்பதால் அவர் குறுக்கிட்டார் என்ற நல்ல எண்ணத்தோடு இதை நான் எடுத்துக்கொள்கிறேன். கேட்கப்பட்டதிலே எட்டு ஆவணங்களை நாம்கொடுத்திருக்கிறோம். டெல்லி உச்ச நீதிமன்றத்திலே 1976-ல் வழங்கப்பட்ட தீர்ப்பிற்குப் பிறகு எல்லா இரும்பு, மறுஉருக்கு ஆலைகளுக்குமான வரிவிதிப்பு முடிவடைந்துள்ளதா? தொழிற் துறையினால் ஏற்படுத்தப்பட்ட தொழில் நிறுவனங்கள் குழு என்ன பரிந்துரைகளைச் சொல்லியிருக்கிறது? அந்த டாஸ்க் குழுவிலே யார், யார் உறுப்பினர்கள் என்பதை இப்போது தெரிவிக்கிறேன். இயக்குநர், தொழில் வளர்ச்சி; துணை இயக்குநர்; தொழில் மற்றும் வணிகத்துறை இயக்குநர்; அரசு இணைச் செயலாளர், வணிக வரி; அரசு இணைச் செயலாளர், பொதுப்பணித்துறை; அரசு துணை செயலாளர்; நிதி; இவர்கள் எல்லாம் இருந்கதிருக்கிறார்கள். அவர்கள் என்ன கேட்டிருக்கிறார்கள் என்று பார்த்து அதையும் கொடுத்திருக்கிறோம். இரும்பு மறு உருக்காலைக்கு வழங்கப்பட்ட வரிவிலக்கிற்கான அரசாணையின் நகல், வரி விலக்கிற்குரிய வரையறைகள், நிபந்தனைகள் எல்லாம் கொடுத்திருக்கிறோம். நிபந்தனைகள் என்னவென்றால் அவர்கள் இந்த வரி கொடுப்பதாக காட்டி அவர்கள் ஆவணங்களில் அதற்கு வருமானவரி போன்றவைகளையெல்லாம் நீக்குவதற்காக கேட்டிருப்பார்களனால், வரி வசூல் செய்திருப்பார்களானால் அவர்களுக்கு வரி விலக்கு இல்லையென்ற நிபந்தனையின் பேரில் அரசு சட்டம் போட்டது. அதையும் அந்தக் குழுவிற்கு கொடுத்திருக்கிறோம். அது மட்டுமல்லாமல், சட்டத்துறைக்கு அனுப்பப்பட்ட கடித நகல்கள், கோப்பு கடிதம், வரிவிதிப்பு குறித்து அரசிற்குரிய அதிகாரம் பற்றி நிதித்துறையின் கருத்து, இவைகள் எல்லாம் கேட்கப்பட்டு கொடுக்கப்பட்டன. எதிர்கால பொறுப்புகளுக்கான விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டுமென்ற உருக்காலைகள் வேண்டுகோள் குறித்து வருவாய் வாரியத்தின் கருத்தென்ன? வருவாய் வாரியம் கலைக்காததற்கு முன்னால் அங்கேயுள்ள வருவாய் வாரிய உறுப்பினர்கள் எல்லாம் சேர்ந்து என்ன முடிவெடுத்தார்கள் என்பது கொடுக்கப்பட்டிருக்கிறது. என்ன கொடுக்கப்பட்டதென்றால் அவர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்கள். இது 5, 6—வது தமிழ்நாடு இரும்பு மறு உருக்காலை ஆட்சிக்குழு நிறுவனம் பற்றி மேற்படி முறையீட்டிற்கான நகல்—அதன் விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் 7—வது ஆவணம், தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் 1953—ன் கீழ் வணிகரிடமிருந்து வரி பாக்கியை, முழுமையாகவோ அல்லது அதில் ஒரு பகுதியாகவோ, அல்லது அபராதமாகவோ, அல்லது கட்டணமாகவோ, வசூலிக்காது அறிவிக்க அதிகாரம் இருக்கிறதா? தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் அவர்கள் வரி வாங்காமல் இருந்தாலும், அல்லது விதிக்காமல் இருநதாலும், அதற்குச் சட்டத்திலே இடம் இருக்கிறதா என்று கேட்டிருக்கிறார்கள். அவைகளையும் கொடுத்திருக்-

கிறோம். வரி தள்ளுபடி சட்டத்திற்கு நிபந்தனைகள் உண்டா? நிபந்தனை போட்டிருக்கிறோம். இப்படி 8 ஆவணங்களை நாங்கள் கொடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எதையுமே கொடுக்கவில்லையென்று........

டாக்டர் மு. கருணாநிதி; தலைவர் அவர்களே, உச்ச நீதி மன்றம் அந்த வரியைப் பொறுத்து அரசுக்குத் சாதகமான தீர்ப்பை வழங்கி இருந்தும் கூட, ரூ. 37 கோடியை இழக்கின்ற அளவிற்கு ஒரு நிலைமை உருவாகி, ஒரு குழு அமைக்க வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது? ரூ. 37 கோடி இழக்கின்ற சூழ்நிலையில் ஒரு குழுவை அமைக்க இந்த அரசு முன் வந்த அதே நேரத்தில், ரூ. 26 கோடிக்கு என ஒரு பொறுக்குக் குழுவை அமைப்பதற்கு இந்த அரசு ஏன் முன் வரக் கூடாது?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே தெரிவித்தேன், 'பவர் டு தி கவர்ன்மென்ட்' அரசுக்கு என்ன அதிகாரம் என்பதைத்தான் உச்ச நீதிமன்றம் வரையறுத்தது. அவர்களிடமிருந்து வரி வாங்க வேண்டாம். வரி போடுகிற அதிகாரம் இருக்கிறதா, இல்லையா என்றுதான் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. இன்றைக்கும் வரி போடுவதற்கு இந்த அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால், நடந்து போன காலத்தில் உச்ச நீதிமன்றத்தில் இருக்கிறபொழுது. அவர்கள் வரி வசூலித்தார்களா, இல்லையா என்பதைப்பற்றித்தான் நான் தெரிவித்தேன். அவர்கள் வரி வசூலித்தார்களா, இல்லையா என்று பார்த்து, நிபந்தனையும் போட்டு, அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சலுகை, நிபந்தனை—கன்டிஷனில் போடப்பட்டிருக்கிறது. வரி வசூல் செய்யக்கூடாது; நீங்கள் விற்பனை வரியை, வருமான வரிக்காகக் கணக்குக் காட்டியிருக்கக் கூடாது. காட்டியிருந்தால் வரி உண்டு. இப்படியெல்லாம் போட்டுதான் கொடுத்திருக்கிறோமே தவிர, வேறொன்றும் இல்லையென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்குத் தமிழ் நாட்டிலே மட்டுமல்ல, ஸ்டீல் எங்கு வேண்டுமானாலும் போகலாம். எங்கு வேண்டுமானாலும் வரலாம். இங்கே இருக்கிற ஸ்டீல் ரோலிங் மில்லில் நாம் இரண்டு முனை வரி, பலமுனை வரி, முதலிலே கச்சாப் பொருளை வாங்குவதற்கு ஒரு வரி. அதை உருக்காக ஆக்கி, விற்பதற்கு ஒரு வரி; இரண்டு வரி போடுகிற பொழுது, அதனுடைய மானுபார்ச்சுரிங் காஸ்ட், விலை அதிகமாகிறது. அப்படி அதிகமாகிறபொழுது, அது மார்க்கெட்டிலே வருகிறபொழுது மற்ற வெளி மாநிலங்களோடு போட்டி போட முடியவில்லை.

திரு. எஸ். ஜி. ஹாஜாசெரீப்: எல்லா ஸ்டீல் ரோலிங் மில்சுக்கும் வரிச் சலுகை செய்துவிட்டு, ஒரே ஒரு ஸ்டீல் ரோலிங் மில்லுக்கு, இந்தியா ஸ்டீல் ரோலிங் மில்லிடம் இவர்கள் ரூ. 90 இலட்சம் வசூலித்திருப்பதை அரசாங்கம் கொடுக்குமா? அதைக் கொடுப்பது மிகவும் நல்லது. என்ன காரணம் என்றால் அவர்கள் ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள்.





மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லுக்கு இறைக்கும் நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் அங்கே பாயும். நான் இங்கே சொல்லிய படி, நமது மாநிலத்தில் இல்லை, கர்நாடக மாநிலத்தில் இல்லை. மறு உருக்கு விற்பனை வரியில் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. கேரள மாநிலத்தில் சிறு இரும்பு உருட்டாலைக்காக, 5 ஆண்டுகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது மகாராஷ்டிரா மாநிலத்தில் 19—1—1982 க்குப் பிறகு, மூலப். பொருளின் மீது வரி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. மேற்கு வங்கத்தில் வெளி மாநிலத்திற்குச் செய்து அனுப்பும் பொருளுக்கு, மூலப்பொருள் 2 சதவீதம்; மாநிலத்தில் தயாராகும் இரும்புக்கு 3 சதவீதம் வசூலிக்கப்படுகிறது பஞ்சாபில் மூலப் பொருளுக்கு வரி விதிப்பு இல்லை. இப்படி எல்லா மாநிலங்களிலும் இருப்பதைத்தான் ஸ்டீல் ரோலிங் மில்லிலே நாம் செய்தோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1–30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்; அவையின் முன் அனுமதியுடன் அவையின் நேரம் நீடிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்கிறபொழுது ஒன்றைப் படித்தார்கள். இந்த அரசுக்கு எங்கெங்கே வரி போடுவதற்கு அதிகாரம் இருக்கிறது என்று சொல்கிறபொழுது, அதிலே

not exceding 5 per cent

என்பதை இரண்டு பர்சென்டாக ஆக்க இருக்கிறோம் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

While specifying different local areas fo the purpose of levying different rat s for different goods under sub-section (1), the Government shall have due regard to the population in the local area concerned and such other matters as may be prescribed என்று சொல்கிறபொழுது இது எந்தச் சட்டத்திலேயும் இருக்கவில்லையே, இந்தச் சட்டத்தில் மட்டும் இருக்கிறதே என்று சொன்னார்கள். நான் இதையெல்லாம் பூராவும் படித்துக் காட்ட வேண்டியதில்லை என்று கருதுகிறேன். இப்படிப் போடுகின்றபொழுது சில தினங்களுக்கு முன்னாலே கர்னாடகா மாநிலத்திலே போடுகிறபொழுது அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இப்படி வரி போடுகிறபொழுது, இடத்திற்கு இடம் வேறி ஆகிறது. உச்ச நீதிமன்றத்திற்குச் செல்கிறபொழுது அதை நீங்கள் பெங்களூருக்கு ஒருவறாசவும், பக்கத்தில் இருக்கின்ற ஒரு ஊருக்கும் ஒரே மாதிரியாக எப்படி வரி போடுகிறீர்கள், எல்லா ஜனங்களுக்கும் ஒரே மாதிரியான வரி விதிக்க இயலாது.

உதாரணமாக சென்னை மாநகராட்சிக்கும் இன்னொரு நகராட்சிக்கும் இரண்டு பர்செண்ட் என்று வரியிருப்பது முடியாது. இப்படி எல்லா இடங்களிலும் ஒரே வரி விதிக்கக் கூடாது என்பதைத்தான் இன்றைக்கு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இல்லாவிட்டால் இதைக் கொண்டு வருவதற்குக் காரணம் இடத்திற்கு இடம் வேரியஷன்; பாபுலேஷன், வாங்குகிற சக்தி அதற்கேற்றவாறு விதிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால்தான் இதைத் தெரிவிக்கிறோம் என்பதை நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்,

மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒன்றைப் படித்தார்கள். பூராவும் படித்து விட்டு, அவர்கள் அரசியல் சட்டத்தில் 286-வது சட்டத்தைப் படித்தார்கள். அது விற்பனை வரியைப் பொறுத்து இருக்கிறது. விற்பனை வரியைப் பற்றித்தான் அதில் இருக்கிறதேயொழிய, அடிஷனல் எக்சைஸ் டூட்டி என்கிறபொழுது 4 பர்செண்ட்டுக்கு மேல், அதாவது அது மத்திய அரசின் கீழ் வருகிறபொழுது 4 பர்செண்டுக்கு மேல், போடக்கூடாது என்றுதான் இருக்கிறதேயொழிய, இதை நான் சொல்கிறபொழுது. விற்பனை வரிக்கும் நுழைவு வரிக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஏழாவது ஷெட்யூலில் 52-இல்

VIIth Schedule-52: "Tax on the entry of goods into the local areas for consumption use and therein. Tax on the consumption of th necessities."

என்று அந்த டாக்ஸை எங்கே போடுவது என்றே காட்டியிருக்கிறோம். அந்த விற்பனை வரியை இங்கே படித்துக் காண்பித்ததுகூட அது எக்சைஸ் டூட்டி 4 பர்செண்ட்டுக்கு மேலே போடக் கூடாது என்றுதான் சொல்லியிருக்கிறார்களேயொழிய வேண்டுமென்றால் உறுப்பினரவர்கள் இதைப் படிக்கலாம். இவைகளை நான் உங்களுக்குத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொல்லியது விற்பனை வரிக்கும் நுழைவு வரிக்கும் அதிலே இருக்கிற இரண்டு அயிட்டங்களைப் படிக்வில்லை. ஒன்றைமட்டும் படித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஏனென்றால் இங்கே அவர் இன்றைக்குப் பேசுவதாக இருந்திருக்காது. இங்கே வந்தவுடன் பேசச் சொல்லியிருப்பார்கள். அரைகுறையாகப் படித்திருப்பார்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: சார் வருவாய்த்துறை அமைச்சருடைய அறிவுத் திறமையை நான் ஒத்துக்கொள்கிறேன். நான் படிக்கவில்லை என்று சொல்லாதீர்கள். அவர்களுடைய பேச்சில் நான் குறுக்கிட விரும்பவில்லை. எல்லோரும் பசியாக இருக்கிறார்கள் என்பதற்காக நான் விட்டு விடுகிறேன். நீங்கள்





வித்ட்ரா பண்ணுகிறேன் என்று சொல்லுங்கள். நான் விளக்கம் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். ஆனால் விளக்கம் தந்தும் பிரயோஜனம் இல்லை; நீங்கள் நிறைவேற்றுவது என்று முடிவாக வந்ததற்குப் பிறகு நான் என்னுடைய நேரத்தையும் உங்களுடைய நேரத்தையும் வீணாக்குவதற்கு விரும்பவில்லை.

மாண்புமிகு திரு.எஸ்.டி.சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த அரசுக்கு உரிமை இருக்கிறதா இல்லையா என்பதை கவனிக்க வேண்டும். இந்த நுழைவு வரி போடுவதற்கு உரிமை உண்டு, கர்நாடகா மாநிலத்தில் இந்த வரியை எதிர்த்து உச்ச மன்றத்திற்குச் சென்று, போடுவதற்கு உரிமை உண்டு என்பதும், அந்த இடத்திற்கேற்றவாறு, பாபுலேஷனுக்குத் தகுந்தவாறு, விற்பனைக்கேற்றவாறு, வாங்கும் சக்திக்கேற்றவாறு போட வேண்டுமென்பதை உச்ச நீதிமன்றம் தெரிவித்து இருக்கிறது. இந்த அரசுக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன எல்லாக் கருத்துக்களுக்கும் பதில் சொல்லாவிட்டாலும், என்னால் முடிந்த வரையிலே அவர்களுக்கு பதில் அளித்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்து, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இந்த நுழைவு வரி தகாது, கூடாது, ஏழை மக்களைப் பெரிதும் பாதிக்கக் கூடியது என எல்லா தரப்பு மக்களாலும், வணிகப் பெருங்குடி மக்களாலும், பல்வேறு அரசியல் சார்பற்ற ஏழைகளாலும், எதிர்க்கட்சித் தலைவர்களாலும், அமைப்புக்களாலும் எடுத்துச் சொல்லப்பட்டும்கூட, அரசு மேலும் பிடிவாதமாக இந்த வரியை நுழைப்பது என்கிற முடிவிற்கு வந்திருக்கின்ற காரணத்தால் அந்தச் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படுகின்ற நேரத்தில் இங்கு இருக்க நாங்கள் மனம்ஒப்பாமல், இங்கிருந்து எங்களுடைய கண்டனத்தைத் தெரிவிக்க, வெளி நடப்பு செய்கின்றோம். (திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவரவர்களே, இதுவரையில் இல்லாத அளவிற்குப் புதிய வரியாக இந்த அரசாங்கம் நுழைக்க இருப்பதற்கு எதிர்க்கட்சிகள் சார்பிலே பல்வேறு காரணங்களைச் சொல்லியிருக்கிறோம். இந்த வரி விதிப்பினாலே ஏழை எளியமக்கள் பாதிக்கப்படுகிற காரணத்தினாலே, அரசாங்கம் இந்த வரியைத் திரும்பப் பெற வேண்டுமென்று நாம் வற்புறுத்தியிருக்கிறோம். அமைச்சரவர்களுடைய பதிலிலிருந்து அரசாங்கம் அதைத் திரும்பப் பெறவில்லை என்று தெரிகின்றது. என்றாலும்கூட, எதிர் வரிசையில் இருக்கின்ற எங்களது நியாயமான கோரிக்கையாக இந்த நுழைவு வரியை ஒரு பொறுக்குக் குழுவிற்கு அனுப்பவேண்டுமென்று கோரியிருக்கிறோம். அதையாவது இந்த அரசு ஏற்றுக் கொள்ள விரும்புகிறதா என அறிய விரும்புகிறேன்.

திரு. என். சங்கரய்யா. அதே கேள்வியைத்தான் நானும் கேட்கிறேன். அவர்கள் சொல்வதை எங்களால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. நாங்கள் சொல்வதை அவர்களால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. ஆகவே பலப் பல பிரிவுகளைக் கொண்ட ஒரு மசோதாவாக இருக்கக்கூடிய காரணத்தினாலே, இதை ஒரு பொறுக்குக் குழுவிற்கு அரசாங்கம் விடுவதற்கு முன் வருமா என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்க விரும்புகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அனைத்துப் பிரிவு மக்களையும் பாதிக்கின்ற ஒரு மோசமான நுழைவு வரியை எவ்வளவுதான் நாங்கள் எதிர்க் கட்சி வரிசையில் இருக்கின்றவர்கள் அத்தனை பேரும், அது கூடாது என்பதற்கு எங்களால் முடிந்த அத்தனை நியாயங்களையும் சொல்லியும் கூட, அமைச்சரவர்கள் விதிப்பதற்கு வேண்டிய நியாயங்களைத் தொடர்ந்து கூறிக்கொண்டும் வருவதால், இப்போது கடைசியாக நான் கேட்பதெல்லாம், இதிலே உள்ள பாதக சாதகங்கள் முறைப்படி சரியாக ஆராயப்படுவதற்கு ஒரு பொறுக்குக் குழுவிற்கு விடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; நீங்கள் பேசியவைகளில் எல்லாம் இந்த வரியை வேண்டாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதில் ஊழல் வரும் என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் வேண்டும் என்பதற்காக இந்த அரசினுடைய கமிட்மெண்ட், இந்த அரசு என்னென்ன காரியங்களை செய்திருக்கிறது. செய்ய இருக்கிறது. இதையெல்லாம் நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா இல்லையா என்று கேட்டால். நான் கேட்டுவிட்டு, உங்கள் முகத்தைப் பார்க்கிறபோது அரசு செய்யும் நல்ல காரியங்களை மேலும் நன்றாகச் செய்யவேண்டுமென்று தான் உங்களுடைய முகம் மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறது. அதற்குப்பிறகு அதற்கு வேண்டிய கமிட்மெண்ட் அதற்கு வேண்டிய பணத்திற்கு நாங்கள் எங்கே போவது என்று கேட்கிறபோது, எங்கே போவார்கள் இந்த அரசு என்று உங்கள் முகம் சொல்கிறது. அதற்குப் பிறகு நான் இந்த வரியை விதிக்கிறபோது, நான் சொன்ன காரணங்கள் அத்தனையும் ஏற்றுக்கெண்டிருக்கிறார்கன். அது வரி வேண்டுமா வேண்டாமா என்று நான் சொன்ன காரணங்களை ஒரே வரியிலே பார்க்கிறீர்களே தவிர நீங்கள் உளமார ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால் வரி மட்டும் வேண்டாம் என்கிறீர்கள். வரி இல்லாமல் எப்படிக் காரியத்தை ஆற்றமுடியும் என்பதை நீங்கள் எல்லாம் தயவு செய்து எண்ணிப் பார்த்து நீங்கள் இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மறுபடியும் கேட்டுக்கொள்கிறேன்.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த வரியைப் பற்றி பல காலமாக யோசித்து, ஆராய்ந்து மற்ற மாநிலங்களை எல்லாம் பார்த்து, தெளிவாக இருந்து, கடைசியில் கொண்டுவருவதின் காரணமாகவும் இதிலே ஐயப்பாடு ஏதும் இல்லாததன் காரணமாகவும், இது இருப்பதன் காரணமாகவும், திண்மை இருப்பதன் காரணமாகவும், மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் சொல்வது போல். வரி விதிக்கவேண்டுமென்கிற ஆசை இல்லாவிட்டாலும், வேறு வழி இல்லாததன் காரணத்தாலும், கடினங்கள் இருக்காது என்கிற காரணத்தினாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகின்ற சங்கடங்களை நீக்குவதற்கான வழிமுறைகளை நாங்கள் காண்போம் என்கிற காரணத்தினாலும், இதை பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.

(பிற்பகல் 1–40)

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னவர் அவர்கள் சிறிய விளக்கம் இப்போது சொன்னார்கள். பொறுக்குக் குழுவிலே போனால், அந்தக் குழுவிலே கடைசியிலே அரசாங்கம் எதிர்தரப்பிலே இருப்பவர்கள் சொல்லக்கூடிய அந்த வாதங்களை ஏற்றால் அந்தப் பொறுக்குக் குழுவிலே இந்த மசோதாவை வாபஸ் வாங்குவதற்கும் அல்லது ஒத்திவைப்பதற்கும் கூட உரிமையிருக்கிறது என்ற காரணத்தால் அதை விரிவாகப் பேசிப் பார்க்கலாம் என்று பார்த்தோம். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முடியாது என்று சொல்கிறார்கள். வருமானத்தை உயர்த்துவதற்கு பல வழிகளைச் சொன்னோம். விவசாய வருமான வரியை உயர்த்துங்கள், சாராய கலவை ஆலைகளை அரசே ஏற்று நடத்துங்கள். இந்த இரண்டு முக்கியமான வரியிலேயிருந்து வருமானத்தை நீங்கள் பெறமுடியும். ஆனால் இன்றைக்கு நாம் ஒருவருக்கொருவர் கன்வின்ஸ் பண்ணக்கூடிய நிலைமையிலே இல்லாத காரணத்தாலே பொதுமக்களுடைய நலன் கருதி அதற்கு மேல் இந்த மசோதா நிறைவேறுவதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒப்புக்கொள்ள முடியாத காரணத்தாலே, மக்களின் சார்பிலே இந்த நேரத்திலே நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதை பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப இணங்காத காரணத்தால் நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

திரு என்.எஸ்.வி.சித்தன்: மாண்புமிக்கப் பேரவைத் தலைவர் அவர்களே இந்த நுழைவு வரி பற்றி விவாதிக்க பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்ற என்னுடைய

நியாயமான கோரிக்கையை ஏற்க மறுக்கின்ற காரணத்திற்காக இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே வெளிநடப்பு செய்கிறோம்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள்வெளிநடப்புச் செய்தனர்).

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, வணிகர்களை அச்சுறுத்தவும், அலைக்கழிக்கவும், ஊழலைப் பெருக்கவும் உற்பத்தியைக் குறைக்கவும். வேலைவாய்ப்பை இழக்கவும் காரணமாக இந்தச் சட்டம் அமையும் என்று எடுத்துக்காட்டியும், வணிகர்கள் அனைத்துக் கட்சி தலைவர்கள் அமைப்புகள் அனைத்தும் எதிர்த்தபோதிலும் கட்சி சார்பற்ற வணிகர்கள் சங்கங்கள் 3 நாள் கடை அடைப்பு என்று அறிவித்த பிறகும் நமது அமைச்சர் அவர்கள் மற்ற மாநிலங்களைக் கேட்டுவிட்டோம் என்று சொல்வதற்குப் பதிலாக இந்த மாநிலத்திலுள்ள மற்றக் கட்சித் தலைவர்கள் கேட்கிறார்கள் என்று சொல்லாத அளவிற்கு இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தான் தீருவேன் என்று சொல்கின்ற நேரத்திலே இதனை நீங்கள் பொறுக்குக் குழுவிற்கு விட்டாவது அதை ஆராய்ந்து பாருங்கள் என்று ஒரு படி கீழே இறங்கி வந்து சொன்னபிறகும் மனம் இறங்காமல் இந்தச் சட்டத்தை கொண்டு வருகின்ற காரணத்தால் நாங்கள் வெளி இறங்கி நடக்கிறோம். வணக்கம்.

(காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்),

**திரு .பி. முகமது இஸ்மாயில்;** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் அதிலும் குறிப்பாக ஏழை மக்களைப் பாதிக்கின்ற இந்தச் சட்டம் நுழையக் கூடாது என்பதற்கு நாங்கள் எத்தனையோ முயற்சிகளை தெரிவித்து இருக்கின்ற காரணத்தாலும், நாங்கள் இங்கே இருந்தாலும் அந்தச் சட்டம் நுழைந்துவிடும் என்று நிலை ஏற்படுகிறது என்ற காரணத்தாலும் இந்தச் சட்டம் நுழைகின்றபோது அதைப் பார்த்துக்கொண்டு இருக்கின்ற அவல நிலைமை எங்களுக்கு ஏற்படக்கூடாது என்பதற்காகவும் என்னுடைய எதிர்ப்பை தெரிவிக்க வெளிநடப்பு செய்கிறேன்.

(ஜனதாகட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

**திருமதி ஏ. எஸ்.பொன்னம்மாள்:** பேரவைத் தலைவர் அவர்களே நம்முடைய அமைச்சர் அவர்கள் எதிர் வரிசையிலே இருப்பவர்கள் அத்தனை பேரும் வலியுறுத்திக் கூறியும்கூட இந்த நுழைவு வரிச்சட்ட முன்வடிவு பொறுக்குக் குழுவிற்கு விடவேண்டும் என்று எல்லோரும் வலியுறுத்தியிருக்கிறோம். அப்படி வலியுறுத்திச் சொல்லிக்கூட பொறுக்குழு போட மனம் இல்லாத காரணத்தாலே நானும் தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் சார்பாக வெளி நடப்புச் செய்கிறேன்.

(தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் வெளி நடப்புச்செய்தார்).



**டாக்டர் கே சௌரிராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களுடைய எதிர்ப்புக்கும் உணர்வுக்கும் சட்டமன்றத்திலே இருக்கின்ற அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கருத்துக்களை ஏற்காமலும் எதேச்சாதிகார மனப்பான்மையிலே நடந்து கொண்டிருக்கின்ற காரணத்தாலும், இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்ற காரணத்தாலும் இதைக் கண்டித்து நான் வெளி நடப்பு செய்கிறேன்.

(டாக்டர் கே. சௌரிராஜன் வெளிநடப்புச் செய்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1983—ஆம் ஆண்டு உள்ளூர்ப் பகுதிகளில் நுகர்தலுக்காக வரும் பயன்படுத்துதலுக்காக, விற்பனை செய்வதற்காக வரும் சரக்குகள் மீது நுழைவு வரிவிதிக்கும் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

**தீர்மானம்** பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3

**மாண்புமிகு திரு. எஸ், டி. சோமசுந்தரம்;** நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்: In Clause-3, in sub-clause (1) for the words 'not exceeding five per cent', substitute the words 'not exceeding two per cent'

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3. திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது,

பிரிவுகள் 4 முதல் 37, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன

**மாண்புமிகு திரு. எஸ்.டி சோமசுந்தரம்;** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு உள்ளூர்ப் பகுதிகளில் நுகர்தலுக்காக, பயன்படுத்தலுக்காக விற்பனை செய்வதற்காக வரும் சரக்குகள் மீது நுழைவு வரி விதிக்கும் (சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 34/1983) திருத்தப்பெற்றப்படி நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்டமுன் வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) கேளிக்கை வரி(மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1983

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த சட்டமுன்வடிவு) *சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.35/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையில் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு 1983—ஆம் ஆண்டு கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண்.35 1983 நிறைவேற்றப்பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(பிற்பகல் 1-50)

5. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

பேரவைக் கூட்டத் தொடர் பற்றிய தகவல்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்தி வைப்பதற்கு முன் சில தகவல்களைப் பேரவைக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

**1983-ம் ஆண்டு ஏப்ரல் 22ம் தேதி தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



7-வது சட்டமன்றப் பேரவையின் 6-வது கூட்டத்தொடக்ன் 2-வது கூட்டம் 1983, மார்ச் 3-ம் நாள் துவங்கியது. அன்று முதல் இன்றோடு

| | |
|---|---|
| சட்டப்பேரவை கூடிய மொத்த நாட்கள் | 44 |
| மாலையிலும் பேரவை கூடிய நாட்கள் | 7 |
| மொத்த நேரம் .. | 229 மணி 40 நிமிடம் |

இக்கூட்டத்தொடரில் விடை அளிக்கப்பெற்ற மொத்த வினாக்கள் 1282—இவற்றில்

| | |
|---|---|
| உடுக்குறியிடாத வினாக்கள் .. | 687 |
| குறுகிய கால வினாக்கள் .. | 2 |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. | 593 |
| இவற்றின் மீது அனுமதிக்கப்பட்ட துணை வினாக்கள் .. | 2013 |
| ½ மணி நேரம் விவாதம் நடைபெற்றது .. | 1 |

கவன ஈர்ப்புத் தீர்மானங்கள்

| | |
|---|---|
| கொடுக்கப்பெற்ற அறிவிப்புகள் .. | 417 |
| அனுமதி மறுக்கப்பெற்றவை .. | 282 |
| அனுமதிக்கப்பெற்றவை .. | 135 (88 பொருள் குறித்து) |
| அவையில் எடுத்துக் கொள்ளப்பெற்றவை .. | 68 (50 பொருள் பற்றி) |
| நிலுவையில் உள்ளவை .. | 67 (38 பொருள் பற்றி) |

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்:

| | |
|---|---|
| கொடுக்கப்பெற்ற அறிவிப்புகள் .. | 502 |
| அறையிலேயே அனுமதி மறுக்கப் பெற்றவை .. | 326 |
| அவையில் விளக்கம் பெறுவதற்காக எடுத்துக் கொண்டு மறுக்கப்பெற்றவை .. | 128 (23 பொருள் குறித்து) |
| 54-வது விதியின் கீழ் மாற்றப்பெற்றவை .. | 48 (22 (பொருள் குறித்து) |

[1983 ஏப்ரல் 27

உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள்!—

| | | |
|---|---|---|
| அறிவிப்பு வரப்பெற்றவை | .. | 26 |
| அவையிலேயே அனுமதி மறுக்கப் பெற்றவை | .. | 2 |
| உரிமைக் குழுவிற்கு அனுப்பப் பெற்றவை | .. | 9 3 பொருள் குறித்து) |
| அவையில் எடுத்துக்கொண்டு தீர்ப்பு அளிக்கப்பெற்று அனுமதி மறுக்கப் பெற்றவை. | .. | 3 |
| தீர்ப்பு அளிக்க வேண்டியவை | .. | 3 (3 ஒரே பொருள் குறித்து) |

சட்ட முன் வடிவுகள்—

| | | |
|---|---|---|
| அவையின் ஆய்விற்கு எடுத்துக் கோள்ளப் பெற்றவை | .. | 19 |
| நிறைவேற்றப் பெற்றவை | .. | 19 |
| வரப்பெற்ற தனியார் தனி தீர்மானங்கள் | .. | 7 |
| அனுமதிக்கப் பெற்றவை | .. | 7 |
| விவாதிக்கப் பெற்று நாள் குறிப்பிடப் பெறாத தீர்மானம் | .. | 2 |

சட்டப் பேரவையின் குழுக்கள்

இக் கூட்டத்தில்

| | | |
|---|---|---|
| 1. பொதுக் கணக்குக் குழு | .. | 6 |
| 2. பொது நிறுவனங்கள் குழு | .. | 8 |
| 3. மதிப்பீட்டுக் குழு | .. | 4 |
| 4. சட்ட விதிகள் ஆய்வுக் குழு | .. | 1 |
| 5. அரசு உறுதி மொழிக் குழு | .. | 1 |
| 6. உரிமைக் குழு | .. | 3 |
| 7. கூட்டாய்வுக் குழு | .. | 1 |

அறிக்கைகள் அளித்துள்ளன,

பேரவையின் முன் வைக்கப்பெற்ற ஏடுகள்—

| | | |
|---|---|---|
| அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும் | .. | 113 |
| ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள் | | 171 |

நிதி அலுவல்கள்—

| | | |
|---|---|---|
| 1983—84 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் பேரவையில் அளிக்கப் பெற்ற நாள் | .. | 5-3-83 |



1983 ஏப்ரல் 27]

| | | |
|---|---|---|
| வரவு செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள் | .. | 6 |
| மானியக் கோரிக்கையின் மீது விவாதமும், வாக்கெடுப்பும் நடைபெற்ற நாட்கள் | .. | 28 |
| நிதி ஒதுக்க மசோதா மீது விவாதம் நடைபெற்ற நாட்கள் | .. | 1 |

மானியக் கோரிக்கைகள்—

| | | |
|---|---|---|
| கொடுக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் | .. | 3863 |
| அவையின் முன் வைக்கப்பெற்றவை | .. | 3665 |
| அவையினால் ஏற்றுக்கொள்ளப்பெற்றது | .. | ஏதும் இல்லை |
| விவாதிக்கப்பெற்று நிறைவேறிய மானியக் கோரிக்கைகள் | .. | 58 |
| 'கில்லட்டின்' ஆனது | .. | ஏதும் இல்லை |

பார்வையாளர்கள்—

| | | |
|---|---|---|
| பேரவை நிகழ்ச்சியைக் காண வந்த மொத்த பார்வையாளர்கள் | .. | 26,837 |
| பார்வையாளர் மாடத்தில் அனுமதிக்கப் பெற்றவர்கள் | | |
| ஆண்கள் | .. | 13,610 |
| பெண்கள் | .. | 2,870 |
| பேரவைத் தலைவர் மாடத்தில் அனுமதிக்கப் பெற்றவர்கள் | .. | 10,357 |
| | | 26,837 |

நூலகம்—

| | | |
|---|---|---|
| சட்ட மன்ற நூலகத்திற்கு வருகை தந்துள்ளவர்கள் | .. | 690 |
| வழங்கப்பெற்றுள்ள நூல்கள் | .. | 1,773 |
| தட்டச்சு செய்யப்பெற்ற பேரவை நடவடிக்கைகளின் மொத்த பக்கங்கள் | .. | 9,672 |
| பேரவைக் கூட்டம் நடைபெற்ற எல்லா நாட்களிலும் வருகை தந்த உறுப்பினர்கள் | .. | 21 |

பேரவை நிகழ்ச்சிகளை நல்லமுறையில் நடத்திச் செல்ல எங்களுக்கு ஒத்துழைப்புத் தந்த அவை உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். செய்தியாளர்களுக்கும் நம்முடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் அவை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற நமக்கு மிகவும் ஒத்துழைப்பு தந்த சட்டமன்றப் பேரவைச் செயலாளர் திரு. அழகர்சாமி அவர்களுக்கும், சட்டமன்ற அலுவலர்கள் அனைவருக்கும் நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது, நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவையை ஒத்திவைப்பதற்கு அவை முன்னவர் அவர்கள் தீர்மானத்தை மொழிவார்கள்.

8. அரசினர் தீர்மானம்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்

''பேரவை விதி 25 (1)–ன்படி பேரவை மீண்டும் கூடும்நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இக்கூட்ட அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவை ஒத்திவைக்கப்பெறுகிறது.

பின்னர் பிற்பகல் 1.53 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

—எதுவுமில்லை—

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

208. கீழ்க்காணப்பெறும் சட்மன்ற மேலவை உறுப்பினர்கள் அளித்துள்ள எழுத்து மூலமான சொத்து விவரங்கள் (தமிழ்நாடு சட்டத்தின் மேலவை 28-8-1969 ஆம் தேதியன்று ஏற்பளித்த தீர்மானத்தின்படி பேரவையில் வைக்கப்பெற்றது).





31-3-1982 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர்கள்

1. திரு. பி. மாணிக்கம்
2. திரு. ஈ. வி. ஏ. வள்ளிமுத்து
3. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி
4. திரு. கே. அருணாசலம்
5. திரு. ஜேப்பியார்
6. திரு. ஜே. எம். மியாகான்
7. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்
8. திரு. எம். சங்கரலிங்கம்
9. திரு. பி. ஆர். தாமஸ்
10. திரு. காடுவெட்டி கண்ணப்பன்
11. திரு. ஜி. வசந்த பை
12. திரு. வி.வி.வி. ஆனந்தம்

209. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும்—விடைகளும் (எண்கள் 1 முதல் 100 வரை).

## இணைப்பு—1

வரிசை எண்கள் 1—லிருந்து 100 வரையிலான வினாக்களுக்கான அட்டவணைப் பட்டியல்

| உறுப்பினர் பெயர் | வினாக்களின் வரிசை எண்கள். |
|---|---|
| 1 திரு. மு. அப்பாதுரை .. .. | 71, 99 |
| 2 திரு. எம். அண்ணாதாசன் .. .. | 62 |
| 3 திரு. இரா. அருணகிரி .. .. | 66 |
| 4 திரு. த. ஆறுமுகம் .. .. | 93, 94 |
| 5 திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் .. .. | 3 |
| 6 திரு. செ, இராமலிங்கம் .. .. | 15 |
| 7 திரு. எல். இளையபெருமாள் .. .. | 59 |
| 8 திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் .. .. | 5, 24 |
| 9 திரு. எ. டி. உகம்சந்த் .. .. | 28, 47, 80 |
| 10 திரு. ரா. உமாநாத் .. .. | 38 |
| 11 திரு. சி. கணேசன் .. .. | 16 |
| 12 திரு. என். கிட்டப்பா .. .. | 1 |
| 13 திரு. குமரி அனந்தன் .. .. | 39 |
| 14 திரு. கா. கோபாலகிருஷ்ணன் .. .. | 79 |
| 15 திரு. ஏ. சி. சண்முகம் .. .. | 29 |
| 16 திரு. வ. சத்தியமூர்த்தி .. .. | 96 |
| 17 திரு. என். எஸ். வி. சித்தன் .. .. | 18 |
| 18 திரு. எஸ். சிவராமன் .. .. | 37 |
| 19 திரு. எம். சின்னசாமி .. .. | 13, 33, 57, 65, 70, 97 |
| 20 திரு. ப. சுந்தரம் | 31, 76 |
| 21 திரு. மா. சுப்பிரமணியன் .. .. | 43, 83, 84, 85 |
| 22 திரு. கு. அ. செங்கோட்டையன் .. .. | 2 |
| 23 திரு. செ. செம்மலை .. .. | 22, 23, 26, 34, 48, 91, 98 |
| 24 திரு. ஏ. எம். சேதுராமன் .. .. | 77, 87, 88 |
| 25 திரு. இரா. தாமரைக்கனி .. .. | 9, 20, 30, 49, 51, 52 |
| 26 திரு. ஆர். தியாகராஜன் .. .. | 45 |
| 27 திரு. பெ. திருமாறன் .. .. | 67, 68, 69 |



| | |
|---|---|
| 28 திரு. பெ. சு. திருவேங்கடம் .. .. | 45, 25, 54. |
| 29 திரு. வி. எம். தேவராஜ் .. .. | 89 |
| 30 திரு. பூ. மு. நரசிம்மன் .. .. | 14, 58 |
| 31 திரு. டி. கே. நல்லப்பன் .. .. | 72 |
| 32 திரு. ப. நெடுமாறன் .. .. | 53 |
| 33 திரு. பம்மல் நல்லதம்பி .. .. | 74 |
| 34 திரு. எல். பலராமன் .. .. | 11, 61 |
| 35 திரு. கு. பா. பழனியப்பன் .. .. | 7, 19 |
| 36 திரு. நா. பழனிவேல் .. .. | 17, 78, 86 |
| 37 திரு.ச. பாலகிருஷ்ணன் .. .. | 21 |
| 38 திரு. வி. பாலகிருஷ்ணன் .. .. | 40, 64 |
| 39 திரு. க. பாலசுப்பிரமணியன் .. .. | 81 |
| 40 திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் .. .. | 27, 32, 35, 73, 82, 92 |
| 41 திரு. ஜே. சி. டி. பிரபாகரன் .. .. | 12 |
| 42 திரு. து. புருஷோத்தமன் .. .. | 44, 95 |
| 43 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் .. .. | 63 |
| 44 திரு. ஆர். மணிமாறன் .. .. | 100 |
| 45 திரு. எம். எஸ். மாணிக்கம் .. .. | 41 |
| 46 திருமதி டி. யசோதா .. .. | 46 |
| 47 திரு. கே. ரமணி .. .. | 8, 10, 50, 75 |
| 48 செல்வி பி. விசயலட்சுமி .. .. | 90 |
| 49 திரு. ப. வெங்கட்டசுப்பிரமணியன் .. | 36, 42, 60 |
| 50 திரு. த. வேணுகோபால் .. .. | 55, 56 |
| 51 திரு. மு. ஜான் வின்சென்ட் .. .. | 6 |

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

1—

உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பதவிக்கான நியமனத்தில் தமிழாசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கும் திட்டம்

வினா: 4838 — திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உயர் நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பதவிக்கு நியமனம் செய்வதில் தமிழாசிரியர்களுக்கு முன்னுரிமை தரவேண்டும் என்று அரசு ஏதேனும் ஆணை பிறப்பித்துள்ளதா?

விடை:

இல்லை.

2—

கோபி செட்டி பாளையத்தில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டும் திட்டம்

வினா: 5427—திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபி செட்டி பாளையத்தில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டும் திட்டம் ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில் எத்தனை வீடுகள் கட்ட திட்டமிடப் பட்டுள்ளது?

விடை:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

3—

வெள்ளிமேடு பேட்டையில் அரசு மருத்துவமனை தொடங்கும் திட்டம்

வினா: 5772—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் திண்டிவனம் வட்டம் வெள்ளிமேடு பேட்டையில் அரசு மருத்துவமனை தொடங்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்றப்படும்?

விடை:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



4—

நூல்களை வெளியிட சுயேச்சை நிறுவனம் ஏற்படுத்தும் திட்டம்

வினா: 5953—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு நிதி உதவியுடன் சுயேச்சை நிறுவனம் ஒன்று, நூல்களை வெளியிட நிறுவும் செயற்குறிப்பு, அரசின் பரிசீல னையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

விடை:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

5—

சென்னை பல்கலைக்கழகத்தில் பார்மசி பட்ட வகுப்புகள் துவங்கும் திட்டம்

வினா 6256-திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பல்கலைக் கழகத்தில் பார்மசி பட்ட வகுப்பு கள் துவங்க தமிழக அரசு ஆலோசனை ஏதேனும் செய்து வரு கிறதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?

(இ) எப்பொழுது துவங்கப்படும்?

விடை:

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விக்கு இடமில்லை.

6—

விளையாட்டுப் பிரிவில் அரசாங்க ஊழியர்களாகப் பணி புரியும் பயிற்சியாளர்கள்

வினா: 6482—திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) விளையாட்டுப் பிரிவில் தமிழ்நாட்டில் அரசாங்க ஊழியர்களாக எத்தனை பயிற்சியாளர்கள் பணிபுரிகிறார்கள்?

[1983 ஏப்ரல் 27

(ஆ) இதுவரை எத்தனை பயிற்சியாளர்கள் ஓய்வு பெற்றிருக்கிறார்கள்?

(இ) ஓய்வு பெற்ற பயிற்சியாளர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்கப்பட்டுள்ளதா? இல்லையெனில் என்ன காரணம்?

விடை:

(அ) அரசாங்க ஊழியர்களாய் விளையாட்டுப் பிரிவில் பயிற்சியாளர்கள் பணிபுரியவில்லை

(ஆ) மற்றும் (இ) கேள்விக்கிடமில்லை.

7—

கீழ்ப்பெரும்பாக்கம் பகுதியில் ரெயில்வே லெவல் கிராசிங்குக்குப் பதிலாக கீழ்ப்பாலம் அமைக்கும் திட்டம்

வினா: 6536—திரு. கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சென்னை செல்லும் இருப்புப் பாதையில் கீழ்ப்பெரும்பாக்கம் பகுதியில் ரெயில்வே லெவல் கிராசிங்குக்குப் பதிலாக கீழ்ப்பாலம் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கையினை அரசு எடுக்குமா?

விடை:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

8—

சிங்கா நல்லூரிலுள்ள இ. எஸ். ஐ. மருத்துவமனை

வினா: 6735 திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரம் சிங்காநல்லூரில் உள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு தற்போது உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பிரிவில் எவ்வளவு படுக்கைகள் உள்ளன? எத்தனை டாக்டர்கள் உள்ளனர்?

விடை:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1983 ஏப்ரல் 27]

9—

தமிழ்நாட்டில் அரசவை சிற்பி ஒருவரை நியமிக்கும் திட்டம்

வினா: 6934 திரு இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

தமிழ்நாட்டின் கலாச்சாரத்திற்கே தலையான சிற்பக் கலையை போற்றும் வண்ணம் ஆஸ்தான சிற்பி ஒருவரை நியமிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை—

திறமை வாய்ந்த சிற்பிகளை தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு கௌரவிக்கிறது. ஆனால் அரசவை சிற்பி என்று நியமிக்க கருத்துரு அரசிடம் தற்சமயம் இல்லை.

10

குத்தியாலத்தூர் திங்களூர் வட்டாரத்திலுள்ள தொழுநோயாளிகள்

வினா 7020 திரு. கே. ரமணி மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) பெரியார் மாவட்டம் சத்தியமங்கலம் தாலுக்கா குத்தியாலத்தூர் திங்களூர் வட்டாரத்தில், அணுக்கரை அருகியம் அத்தியூர் போன்ற ஊர்களில் தொழுநோயாளிகள் அதிகம் உள்ளதும், மருத்துவ வசதி இல்லாமலிருப்பதும் அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக தொழுநோய் தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க அங்கு மருத்துவ அதிகாரிகள் அனுப்பப்படுவார்களா?

விடை—

(அ) வினாவில் குறிப்பிட்டுள்ள ஊர்களில் தொழுநோயாளிகளின் எண்ணிக்கை அதிகம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

11—

ஆரணி ரோட்டிலிருந்து செங்கற்பட்டுக்கு இரயில் பாதை அமைக்க ஆலோசனை கூறும் திட்டம்.

வினா 7229 திரு. எல். பலராமன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

வடாற்காடு மாவட்டம் (களம்பூர்) ஆரணி ரோட்டிலிருந்து செங்கற்பட்டுக்கு இரயில்பாதை அமைத்து இரயில் இல்லாத பகுதியான ஆரணி, செய்யார், வந்தவாசி தாலுக்கா மக்களுக்கு இணைப்பு வழங்க அரசு மத்திய அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளதா

விடை—

இல்லை

12—

மாவட்டந்தோறும் கலப்படத்தை கண்டுபிடிக்கும் நிறுவனம் அமைக்கும் திட்டம்

வினா: 7251 திரு. ஜே.சி.டி. பிரபாகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1954-ம் ஆண்டு உணவுப்பொருள் கலப்பட தடைச் சட்டத்தின் கீழ் உணவுப் பொருள் கலப்படத்தைக் கண்டுபிடிக்கும் நிறுவனங்கள் எண்ணிக்கையில் குறைவாக இருப்பதால் விரைவான நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் மாவட்டந்தோறும் இவை நிறுவப்படுமா?

விடை:

மாவட்டம் ஒவ்வொன்றுக்கும் ஒரு ஆய்வுக்கூடம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை

13—

நகராட்சிப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்ட பொதுமக்களைக் கொண்ட குழு அமைக்கும் திட்டம்

வினா: 7452 திரு.எ .சின்னசாமி: மாண்புமிகுஉள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகராட்சி பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கு பொதுமக்களைக் கொண்ட கட்டிடக்குழு அமைத்துக்கொள்ள சம்பந்தப்பட்ட நகராட்சிக்கு அரசு அதிகாரம் வழங்கியுள்ளதா?

(ஆ) கரூர் நகராட்சி மேல்நிலைப்பள்ளிக் கட்டடக்குழுவிற்கு அரசு அனுமதி மறுக்கப்பட்டது உண்மையா?

விடை:

(அ) மற்றும் (ஆ) இல்லை

14—

சமூகவியல் பாடத்தினை கட்டாயமாக்கும் திட்டம்

வினா 7643 திரு. பூ. மு. நரசிம்மன் மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூக சீர்திருத்த முன்னேற்ற உணர்வுகளை ஊட்டும் சமூகவியல் பாடம் அனைத்து மாணவர்களுக்கும் கட்டாய பாடமாக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில் சமூகவியல் (சோஷியாலாஜி) பாடம் பத்தாம் வகுப்பு முதல் கல்லூரிவரை கட்டாய சிறப்பு பாடமாக வைக்கப்படுமா?

விடை:—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



15—

பல்லவன் போக்குவரத்துக்கழகம் மூலம் சென்னை நகரில் Students Special பஸ் விடும் திட்டம்.

வினா: 7902: திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Students Speical பல்லவன் பஸ் சென்னை நகரில் விடும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்போது முதல் அது அமுல்படுத்தப்படும்?

விடை:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

16—

செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியுடன் இணைந்திருந்த செவிலியர் பயிற்சி நிலையம்.

வினா 8001 திரு. சி. கணேசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியுடன் இணைந்து இருந்த செவிலியர் பயிற்சி நிலையத்தை அரசு நிறுத்தி விட்டதா?

(ஆ) ஆம் எனில் மீண்டும் அதைத் தொடங்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

விடை:

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

17—

ஈரோட்டிலிருந்து தாராபுரம் வழியாகப் பழனிக்கு இரயில் பாதை அமைக்க பரிந்துரை செய்யும் திட்டம்

வினா 8217—திரு. நா. பழனிவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோட்டிலிருந்து தாராபுரம் வழியாகப் பழனிக்கு இரயில் பாதை அமைக்கும் திட்டம் ஏதேனும் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

18—

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள காடுகளில் வாசனைப் பொருட்கள் தயாரிப்பதற்கான மரங்கள், செடிகள் வளர்க்கும் திட்டம்

வினா: 8426 — திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் அரசு வசம் உள்ள காடுகளில் 1972-73 முதல் 1979-80 வரை வாசனைப்பொருள்கள் தயாரிப்பதற்கு உபயோகப்படக் கூடிய மரம் செடி வளர்க்க அரசு செலவு செய்ததா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாவை?

விடை:

(அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

19—

பெரும்பாக்கம், கரிசானூர், சிறுநாவூர் கிராம புறம்போக்கு நிலங்களிலுள்ள கருப்பு கற்கள்

வினா 9096—திரு. கு. பா. பழனிப்பன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) தென்னாற்காடு மாவட்டம் திண்டிவனம் வட்டத்தில் பெரும்பாக்கம் கரிசானூர், சிறுநாவூர் கிராமங்களில் புறம்போக்கு நிலங்களில் அரசாங்க அனுமதியின்றி தனியார் விலையுயர்ந்த கருப்புக்கல் வெட்டி விற்பனை செய்து வருவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) அது பற்றி அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை:

(அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.



20—

1981 ஏப்ரலில் சென்னையில் பெண்கள் நடத்திய வரதட்சிணைக் கொடுமை பற்றிய ஊர்வலம்.

வினா 9401—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் பெண்கள் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரதட்சிணைக் கொடுமை சம்பந்தமாக ஊர்வலம் நடத்தி அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

(இ) என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

21—

பழனியில் மயில்கள் சரணாலயம் அமைக்கும் திட்டம்

வினா. 9579 திரு. ச. பாலகிருஷ்ணன்:

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனியில் மயில்கள் சரணாலயம் அமைக்க அரசு எண்ணியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு?

விடை:

(அ) மற்றும் (ஆ). பழனியில் மயில்கள் சரணாலயம் அமைக்கும் யோசனை ஏதும் தற்போது இல்லை.

22—

கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் மீண்டும் செலக்ஷன் தேர்வு முறையினைக் கொண்டு வரும் திட்டம்

வினா, 9623. திரு. செ. செம்மலை:

திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் மீண்டும் செலக்ஷன் தேர்வு முறை கொண்டுவர அரசு உத்தேசித்துள்ளதா?

[1983 ஏப்ரல் 27

(ஆ) ஆம் எனில் நடப்பு ஆண்டிலிருந்து அமுல் படுத்தப்படுமா?

விடை:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**23—**

மாணவர்கள் தேர்வு எழுத பள்ளிக்கு வருகை தரும் நாட்களில் சதவிகிதத்தை உயர்த்தும் திட்டம்

வினா 9625. திரு. செ. செம்மலை. மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) மாணவர்கள் தேர்வு எழுத குறிப்பிட்ட சதவிகித நாட்கள் பள்ளிகளுக்கு வருகை தந்திருக்க வேண்டும் என்று தற்போது இருக்கும் சதவிகிதத்தை உயர்த்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எத்தனை சதவிகிதம் உயர்த்தப்படும்?

விடை.

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**24—**

சென்னையில் மாணவர்களுக்கு வழங்கப்படும் பஸ் கட்டண சலுகைகளை இதர இடங்களுக்கும் விரிவு படுத்தும் திட்டம்.

வினா 1003 திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் பஸ் கட்டண சலுகைகள் போல் இதர இடங்களுக்கும் விரிவு படுத்த தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

விடை.

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடம் இல்லை.



1983 ஏப்ரல் 27]

**25—**

தமிழ்நாட்டிலுள்ள நூலகங்களுக்கு ஆலோசனைக் குழுக்கள் அமைக்கும் திட்டம்.

வினா 10192. திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நூலக ஆணைக் குழுக்களுக்கு தேர்தல் நடத்தப்படாமல் இருந்து வருவதால் ஆலோசனைக் குழு அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன

விடை:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**26—**

நெடுஞ்சாலைகளில் பேரூராட்சிகளின் எல்லைகளில் வேகத் தடை (Speed Breaker) அமைக்கும் திட்டம்.

வினா. 10250 திரு. செ. செம்மலை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

பேரூராட்சிகளின் வழியாகச் செல்லும் நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து அதிகமாக உள்ள இடங்களில் விபத்துக்களைத் தவிர்க்க பேரூராட்சி எல்லைகளிலும் வேகத்தடை (Speed Breaker) அமைக்கப்படுமா?

விடை:

தற்போது திட்டம் எதுவும் இல்லை.

**27—**

அனைத்து கல்லூரிகளிலும் விண்ணப்பத்தாள்களின் விலையினை ஒரே சீராக்கும் திட்டம்.

வினா 10300— திரு. வி. பி. பாலசுப்பிரமணியம் மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் விண்ணப்பத் தாள்களின் விலை ஒரே சீராக இருக்க அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

விடை:

தனியார் கல்லூரிகளில் இளநிலைப்பட்ட வகுப்புக்களைப் பொறுத்தவரை மட்டுமே விண்ணப்பத்தாள்களின் விலைகளில் வித்தியாசம் உள்ளது. இதைச் சீராக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

28—

1981–ம் ஆண்டு நடைபெற்ற பத்தாம் வகுப்புத் தேர்வுகள்

வினா 10312—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981–ம் ஆண்டு பத்தாம் வகுப்பு தேர்வுகளில் 100% மாணவர்கள் வெற்றி பெற்ற பள்ளிகள் எத்தனை?

(ஆ) 30% கீழ் வெற்றி பெற்ற பள்ளிகள் எத்தனை?

விடை:

(அ) 110.

(ஆ) 404.

29—

மாநகரங்களிலும், நகரங்களிலும் சில்லறை வாணிக விறகு கடைகள் திறக்கும் திட்டம்.

வினா 1391 திரு. ஏ. கே. சண்முகம் மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) சென்னை மாநகரில் அரசு சில்லறை வாணிக விறகு கடைகளைத் திறந்துள்ளது போல் மற்ற மாநகரங்களிலும், நகரங்களிலும் இது போன்ற சில்லறை வாணிகக் கடைகளைத் திறப்பதற்கான செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது துவங்கப்படும்?

விடை:

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

30—

திராவிட மொழிகள் பற்றி ஆய்வு செய்யும் மையம் ஆரம்பிக்கு திட்டம்.

வினா 10849 திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—.

தமிழ்நாட்டில் திராவிட மொழிகள் பற்றி ஆய்வு செய்யும் மையம் ஆரம்பிக்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை:

இல்லை.



31—

திருப்பத்தூருக்கு பாலாறு குடிநீர் திட்டத்தை விரிவு படுத்தும் திட்டம்

வினா 10986 திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூருக்கு பாலாற்றிலிருந்து கொண்டு வரும் குடிநீர்த் திட்டத்தை விரிவு படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எந்த முறையில் விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளது?

விடை:-

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்க்கு இடமில்லை.

32—

தனியார் பள்ளிகள், கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கை, ஆசிரியர் நியமனம் ஆகியவைகளுக்காக குழு அமைக்கும் திட்டம்

வினா 10995 திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

அரசு மானியம் பெறும் தனியார் பள்ளிகள், கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கை, ஆசிரியர் நியமனம் ஆகியவைகளுக்கு அரசு குழு அமைத்து உத்தேசித்துள்ளதா?

விடை:-

இல்லை.

33—

கரூர் நகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்.

வினா 11062 திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கரூர் நகராட்சியில பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது பணிதுவங்கும்?

(இ) இத்திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

விடை:-

(அ) இல்லை

(ஆ) மற்றும் (இ) இவ்வினாக்கள் எழ இடமில்லை.

34—

அனைத்து மேல்நிலைப்பள்ளிகளிலும் தொழில்முறைக் கல்வி ஆரம்பிக்கும் திட்டம்.

வினா 11101 திரு. செ. செம்மலை: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:—

தொழில் முறைக் கல்வி கட்டாயப்படுத்தப்பட்டு அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் தொழில் முறைக் கல்வி ஆரம்பிக்கப் படுமா?

விடை—

இல்லை.

35—

கிராமப் பகுதிகளிலுள்ள மேல்நிலைப்பள்ளிகளுக்காக நடமாடும் பரிசோதனைக் கூடங்கள் ஏற்படுத்தும் திட்டம்.

வினா 11128 திரு. வி.பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கிராமப்பகுதிகளில் உள்ள மேல்நிலைப்பள்ளிகளில் பரிசோதனைக் கூடங்கள் இல்லாததை நிவர்த்திக்க நடமாடும் பரிசோதனைக் கூடங்கள்(Mobile Laboratary) ஏற்படுத்த அரசிடம் திட்டம் உண்டா?

விடை—

மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக் கூட வசதி செய்து தருவதற்கு தக்க நடவடிக்கைகள் அரசால் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது. ஆனால் நடமாடும் பரிசோதனைக் கூடங்கள் ஏற்படுத்துவது பற்றி திட்டம் ஏதும் இல்லை.

36—

காஞ்சி மாநகரில் வழிகாட்டிகளுடன் கூடிய சுற்றுலாப் பேருந்துகள் விடும் திட்டம்.

வினா 11260— திரு. பி. வெங்கடசுப்பிரமணியன் மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) காஞ்சி மாநகரில் வழிகாட்டிகளுடன் கூடிய சுற்றுலா பேருந்துகள் விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது இத்திட்டம் செயல் படுத்தப்படும்?

விடை:-

(அ) மற்றும் (ஆ) இல்லை.



37—

சின்னசேலம் அரசினர் மருந்தகத்தை மருத்துவமனையாக்கும் திட்டம்.

வினா 11337 திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சின்னசேலம் அரசினர் மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்றி படுக்கைகள் கொண்ட கட்டிடம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) தற்போதைக்கு ஏதுமில்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

33—

Conditions for starting schools affiliated to C.B.S.E.

Q. N. 11440 Thiru R. Umanath: will the Hon. the Minister for Education be pleased to state.—

(a) Whether this Government have made any proposal to the Centre that the conditions for starting schools affiliated to C. B. S. E. should be on par with schools under recognition by the state Government and state Governmen s be given powers to inspect the C. B. S. E. affiliated schools peri dically and to take necessary action according to the Inspection Report.

(b) If so, the details thereof?

விடை:-

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

39—

பள்ளிகளில் யோகாசனப் பாடத்தைக் கட்டாயமாக்கும் திட்டம்.

வினா 11517 திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக பள்ளிகளில் யோகாசனப் பாடம் கட்டாயமாக்கப் படுமா?

விடை:-

இல்லை.

40—

சிவகாசி நகரில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம்.

வினா 11637 திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி நகரில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம்எனில், எப்பொழுதுஅத்திட்டம் அமுல் நடத்தப்படும்?

(இ) அதற்காக அரசு ஒதுக்கிய தொகை எவ்வளவு?

விடை:-

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

(இ) இவ்வினா எழ இடமில்லை.

41—

வேதாரண்யத்திலிருந்து புதுக்கோட்டை, கடலூர் ஆகிய ஊர்களுக்கு பேருந்து விடும் திட்டம்.

வினா 11720 திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு போக்குவரததுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யத்திலிருந்து புதுக்கோட்டை, கடலூர் ஆகிய ஊர்களுக்குப் பேருந்து விடவேண்டும் என்று கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அது நிறைவேற்றப்படும்?

விடை:-

(அ) இல்லை

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

42—

காஞ்சிபுரத்தில் மேற்கல்விக்கான மாலை நேரக் கல்லூரி தொடங்கும் திட்டம்.

வினா 11747 திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரத்தில் மேற்கல்வி தொடர மாலை நேரக் கல்லூரி ஒன்று தொடங்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை:-

இல்லை.



43—

தஞ்சை—சென்னை சாலையை அரசு நெடுஞ் சாலையாக்கும் திட்டம்.

வினா 11763 திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சையிலிருந்து சென்னை செல்லும் சாலையை அரசு நெடுஞ்சாலையாக சேர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

விடை:-

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

44—

அரசுக்குச் சொந்தமான பொருள் போக்குவரத்துக் கழகம்.

வினா 11847 திரு. க. புருஷோத்தமன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக அரசுக்குச் சொந்தமான பொருள் போக்குவரத்துக் கழகம் இப்பொழுது இலாபத்தில் இயங்குகிறதா?

விடை:-

இல்லை.

45—

விருத்தாசலம் ஒன்றியத்திலுள்ள கிராமங்களுக்கு குடி தண்ணீர் வசதி கோரி கொடுக்கப்பட்ட மனு.

வினா 11921 திரு. ஆர். தியாகராஜன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் ஒன்றியத்திலுள்ள பரூர், மூ. பட்டி புதூர், சின்னப்பரூர், இராஜப்பாளையம், சின்னார்குப்பம், கோனாகுப்பம், ஆகிய கிராமங்களுக்கு குடிதண்ணீர் வசதி கோரி 29-6-81இல் மாவட்ட ஆட்சியாளருக்கும் அரசுக்கும் மனு கொடுக்கப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

விடை:-

(அ) இல்லை

(ஆ) இவ் வினா எழ இடமில்லை.

46—

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள நீரோ சர்ஜரி பிரிவு.

வினா 11945 திருமதி டி. யசோதா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நீரோ சர்ஜரி துறையில் உள்ள படுக்கைகளை அதிகரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை:-

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

47—

சென்னை—திண்டுக்கல் சாலையில் மதுராந்தகம் அருகில் மாற்றுவழிப்பாதை அமைக்கும் திட்டம்.

வினா 12095 திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை—திண்டுக்கல் சாலையில் மதுராந்தகம் அருகில் மாற்று வழிப்பாதை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை:-

(அ) இல்லை

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

48—

குடிசை மாற்று வாரியம் மூலம் ஒதுக்கப்பட்ட குடியிருப்புகள்.

வினா 12146 திரு. செ. செம்மலை: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசை மாற்று வாரியத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட குடியிருப்புகளை மற்றவர்களுக்கு விற்றதாக ஒதுக்கப்பட்டவர்கள் மீது சென்ற ஆண்டு ஏதேனும் வழக்கு தொடரப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரங்கள் யாவை?



விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

49—

சென்னையில் வழங்கப்படும் குடிநீர்.

வினா 12322 திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் 1981-ம் ஆண்டு கழிவுநீர் குடிநீருடன் கலக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக வீட்டுவசதி வாரிய என்ஜினியர்கள் அரசுக்கு மனு கொடுத்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில், தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

50—

சிங்காநல்லூரிலுள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை.

வினா 12427 திரு. கே. ரமணி: திரு. ஏ. டி. குலசேகர்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் மாநகராட்சி, சிங்காநல்லூரிலுள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையில் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை வார்டு ஒன்று தனியாக ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆமெனில் அது குறித்த விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

51—

மதுரையில் கூட்டுறவுத் துறை மூலம் ரொட்டி தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் திட்டம்.

வினா 12655 திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் கூட்டுறவுத் துறையின் மூலம் ரொட்டி தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல், எவ்வளவு மதிப்பீட்டில் செயலுக்கு வரும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

52—

கிராம சுகாதார அபிவிருத்திக்கான டென்மார்க் நாட்டு உதவி.

வினா 12868 திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கிராம சுகாதார அபிவிருத்திக்காக டென்மார்க் நாட்டு உதவியுடன் மூளைக்காய்ச்சல், தோல் வியாதிகள் முதலியவைப்பற்றி ஆராய்ந்துஒழிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் டென்மார்க் நாடு மேற்படி கிராம சுகாதார அபிவிருத்திக்கு எத்தனை கோடி ரூபாய் உதவி செய்கிறது?

(இ) முதல் முறையில் இந்தத்திட்டம் எந்தெந்த மாவட்டத்தில் செயல்பட இருக்கிறது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

53—

கவிமணி தேசிய விநாயகம் பிள்ளைக்கு மணிமண்டபம் கட்டும் திட்டம்.

வினா 12924 திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கவிமணி தேசிய விநாயகம் பிள்ளைக்கு மணிமண்டபம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

தற்சமயம் இல்லை.





54—

ஜவ்வாது மலைப்பகுதியில் சுற்றுலாத்துறை சார்பில் ஓட்டல் கட்டும் திட்டம்.

வினா 13211 திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜவ்வாது மலைப்பகுதியில் சுற்றுலாத்துறை சார்பில் ஓட்டல் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் நிலை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

55—

நடுநிலைப்பள்ளிகளில் 1 முதல் 8-ம் வகுப்பு வரை ஆங்கிலப்பாட போதனைப் பிரிவு ஏற்படுத்தும் திட்டம்.

வினா 13398 திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனைத்து நடுநிலைப் பள்ளிகளிலும் 1 முதல் 8-ம் வகுப்புவரை ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு ஆங்கிலப் பாட போதனைப்பிரிவு ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

56—

வடாற்காடு மாவட்டத்தில் அகர்பத்தி தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

வினா 13400 திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டத்தில் அகர்பத்தி (ஊதுபத்தி) தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை

57—

பாசனக்குளங்களை நவீனப்படுத்தும் திட்டம்.

வினா 13612 திரு. எம். சின்னசாமி: திரு. பி. கந்தசாமி மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீர்ப்பாசனக் குளங்களை நவீனப்படுத்தி நீர் விநியோகத்தைச் சிக்கனப்படுத்த நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அக்குழுவின் உறுப்பினர்கள் யார்?

விடை—

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

58—

குசஸ்தலி நதியினைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் திட்டம்.

வினா 13633 திரு. பூ. மு. நரசிம்மன்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் பள்ளிப்பட்டு வட்டத்தில் ஓடும் குசஸ்தலி நதியினை பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்க அரசிடம் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

59—

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள சோஷியல் காடு வளர்ப்புத் திட்டம்.

வினா 13651 திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சோஷியல் (Social Foretsry scheme) காடு வளர்ப்பு என்ற பெயரில் தென்னாற்காடு மாவட்டம், திண்டிவனம், திட்டக்குடி, விருத்தாச்சலம், காட்டுமன்னார்குடி ஆகிய வட்டங்களில் ஏழை ஆதி திராவிடர்கள் பின்தங்கிய வகுப்பு மக்கள் 25 ஆண்டுகளாக பயிரிட்ட நிலங்களை அரசு வனத்துறையினர் எடுத்துக்கொண்டது உண்மையா?

விடை—

இல்லை.



60—

உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியர்கள்

வினா. 13784—திரு. ப. வெங்கடசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியர் ஆங்கிலத்தில் சிறப்புப் பட்டம் பெற்றவராகத்தான் இருக்க வேண்டும் என்ற நியதி உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

61—

கேளூர் பகுதியில் 1980–81–ம் ஆண்டில் நோயினால் இறந்த கால்நடைகள்

வினா 13814 திரு. எல். பலராமன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் போளூர் ஒன்றியம் கேளூர் பகுதியில் 1980–81–ம் ஆண்டில் கால்நடைகள் கட்டுப்படுத்த முடியாத நோயினால் இறந்தது உண்மையா?

(ஆ) அச்சம்பவம் என்ன நோயினால் ஏற்பட்டது?

(இ) இந்நோயினால் எத்தனை கால்நடைகள் இறந்தன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

(இ) இவ்வினா எழாது.

62—

திருவரம்பூர் பி. எச். இ. எல். நிர்வாகத்துக்கு திருச்சியின் பல பகுதிகளிலிருந்து பேருந்துகள் விடும் திட்டம்.

வினா 13980 திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவரம்பூர் பி.எச்.இ.எல். நிர்வாகத்துக்கு காலை மாலை ஆகிய இருவேளைகளிலும் சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் திருச்சியின் பல பகுதிகளிலும் இருந்து நிரந்தரமாக விடுவதற்கு நிர்வாகத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதா

[1983 ஏப்ரல் 2

(ஆ) இதனால் சோழன் போக்குவரத்துக் கழகம் நட்டமடைவது உண்மையா?

(இ) ஆம் எனில், இந்த இழப்பை ஈடுகட்ட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

63—

நிலச் சீர்திருத்தத்திற்காக மண்வளப் பாதுகாப்பு துறையிலிருந்து வழங்கப்பட்ட தொகை

வினா 14077 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலச் சீர்திருத்தத்திற்காக மண்வளப் பாதுகாப்பு துறையிலிருந்து தனி நபருக்குத் தொகை முழுவதும் கொடுத்து வந்தது உண்மையா

(ஆ) ஆம் எனில், தற்சமயம் அதை நிறுத்தி வைத்திருப்பதின் நோக்கம் என்ன

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

64—

சிவகாசிக்கு அருகே துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம்

வினா: 14103; திரு. வி. பாலகிருஷ்ணன் மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்டவினாக்களுக்குவிடையளிப்பாரா—

(அ) சிவகாசிக்கு அருகே துணை மின் நிலையம் அமைக்கப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான மதிப்பீடு எவ்வளவு?

(இ) அந்நிலையம் எவ்வளவு K. V. A. கொண்டதாக இருக்கும்? விரைவில் பணி தொடங்கப்படுமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விக்கு இடமில்லை.



1983 ஏப்ரல் 27]

65—

புதுக்கோட்டை நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித்துறை கோட்டப் பொறியாளர் அலுவலகத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்

வினா 14188 திரு. எம். சின்னசாமி: திரு. இரா. தாமரைக்கனி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை கோட்டப் பொறியாளர் அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து கரூருக்கு தனியாக கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

66—

திருப்பத்தூரில் பேருந்து நிலையம் கட்டும் திட்டம்.

வினா 14260 திரு. இரா. அருணகிரி: மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் திருப்பத்தூரில் பேருந்து நிலையம் கட்ட செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் வேலை எப்போது துவங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

67—

ஆலங்குடியில் வனஸ்பதி தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

வினா 14296 திரு. பெ. திருமாறன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் வனஸ்பதி தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

விடை—

இல்லை.

[1983 ஏப்ரல் 27

68—

கட்டளைக் கால்வாயின் உபரிநீரை புதுக்கோட்டை மாவட்டத்திற்குப் பயன்படுத்தும் திட்டம்.

வினா 14297 திரு. பெ. திருமாறன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கட்டளைக் கால்வாயின் உபரி நீரை புதுக்கோட்டை மாவட்டத்திற்கு பயன்படுத்தும் செயற்குறிப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில் எந்தெந்த பகுதிகள் பயன்பெறும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

69—

புதுக்கோட்டை மன்னர் கல்லூரி.

வினா 14313 திரு. பெ. திருமாறன் மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மன்னர் கல்லூரிக்குக் கூடுதல் கட்டிடங்கள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

விடை—

தற்போது இல்லை.

70—

பனை நுங்கைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் திட்டம்

வினா 14323 திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு கதரி மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனை நுங்கைப் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.



1983 ஏப்ரல் 27]

71—

தூத்துக்குடி அனல்மின் திட்டத்திலுள்ள வாகனப் பிரிவு.

வினா 14360 திரு. மு. அப்பாத்துரை மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி அனல்மின் திட்டத்திலுள்ள வாகனப்பிரிவு (AUTO SECTION) முழுமையாக செயல்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

72—

பெருந்துறையில் வட்டாட்சியர் அலுவலகம் கட்டும் திட்டம்.

வினா எண் 14417 திரு. தி. கா. நல்லப்பன் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் பெருந்துறை வட்டாட்சியர் அலுவலகம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை.

73—

கல்லூரிகளின் வேலை நேரத்தை மாற்றியமைக்கும் திட்டம்.

வினா 14477 வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கல்லூரிகளில் வேலை நேரத்தை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

74—

நெய்வேலியில் சிறு தொழிற்பேட்டை ஒன்றை உருவாக்கும் திட்டம்.

வினா 14517 திரு. பம்மல் நல்லதம்பி மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் நெய்வேலியில் கிடைக்கும் மின்சாரம், பழுப்பு நிலக்கரி போன்ற மூலப்பொருள்களை பயன்படுத்தி அப்பகுதியில் சிறு தொழிற்பேட்டை ஒன்று உருவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) இல்லையெனில், இனியாகிலும் தொழிற்பேட்டை உருவாக்க திட்டம் தீட்டப்படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

75—

ஈரோட்டிலுள்ள சாயப்பட்டறைகள் மற்றும் பவர்லூம் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் பெண்கள்.

வினா 14522 திரு. கு. ரமணி மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் ஈரோட்டில் உள்ள சாயப் பட்டறைகளிலும் பவர்லூம் தொழிற்சாலைகளிலும் இரவு நேரங்களில் பெண்களை வைத்து வேலை செய்விப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதைத் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

76—

திருப்பத்தூரில் ஒரு பெண்கள் கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம்.

வினா 14616 திரு. ப. சுந்தரம் மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் ஒரு பெண்கள் கல்லூரி ஆரம்பிக்க திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.





77—

மாம்பாக்கம் பிர்காவில் வனத்துறை சரகம் ஏற்படுத்தும் திட்டம்.

வினா 14653:—திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி மாம்பாக்கம் பிர்காவில் வனத் துறை சரகம் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

78—

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் குடும்பத்திற்கு அரசு நிதி உதவி செய்யும் திட்டம்.

வினா 14737:—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காலம் சென்ற நடிகர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் குடும்பத்திற்கு அரசு நிதி உதவி செய்து உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

79—

வடபுதுப்பட்டியில் அரசு உயர்நிலைப்பள்ளி அமைக்கும் திட்டம்.

வினா 14819: திரு. கோ. கோபாலகிருஷ்ணன். மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி வடபுதுப்பட்டியில் அரசு உயர்நிலைப்பள்ளி அமைக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில்' எப்பொழுது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

80—

மதுராந்தகத்திலிருந்து சென்னை மற்றும் வேலூருக்கு துரிதப் பேருந்து விடும் திட்டம்.

வினா 14871: திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம்–சென்னை மற்றும் மதுராந்தகம்–வேலூர் (வழி) (வந்தவாசி, ஆரணி) துரித பேருந்து (Point to Point) விடும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் விடப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

81—

சீர்காழி, சிதம்பரம் நெடுஞ்சாலையில் சேந்தங்குடி அருகே மேம்பாலம் கட்டும் திட்டம்.

வினா 14931:—திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி, சிதம்பரம் நெடுஞ்சாலையில் சீர்காழி அருகிலுள்ள சேந்தங்குடி என்னுமிடத்தில் மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

82—

வேடசந்தூர் நகரில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டும் திட்டம்.

வினா 14942: வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் நகரில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.



83—

திருவையாறு அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குச் சொந்தக்கட்டடம் கட்டும் திட்டம்.

வினா 14973: திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குச் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

84—

கல்லணை பாலத்தை விரிவுபடுத்தும் திட்டம்.

வினா 14975: திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லணை பாலத்தை பேருந்து செல்லும் வகையில் விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் எப்போது தொடங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

85—

திருவையாறு, திருவோணம் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

வினா 14978: திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் திருவையாறு, திருவோணம் பகுதிகளில் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க புதிய திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அவைகளுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது? எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

86—

பழனியிலுள்ள மகளிர் பாலிடெக்னிக்.

வினா 15010:—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனியில் உள்ள மகளிர் பாலிடெக்னிக்கில் மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டு Co-Education ஆக மாற்றப்படும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

87—

வாழைப் பந்தல் அரசு உயர்நிலைப் பள்ளியில் விஞ்ஞான ஆய்வுக்கூடம் அமைக்கும் திட்டம்.

வினா 15052:—திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதியில் வாழைப்பந்தல் அரசு உயர்நிலைப் பள்ளியில் விஞ்ஞான ஆய்வுக்கூடம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது எவ்வளவு மதிப்பீட்டில் துவங்க உள்ளது?

விடை—

(அ) இல்லை

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

88—

ஆற்காடு தொகுதியில் 'சிட்கோ' நிறுவனம் மூலம் சிறிய தொழிற்கூடங்கள் ஆரம்பிக்கும் திட்டம்.

வினா 15056: திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதியில் 'சிட்கோ' நிறுவனத்தின் மூலம் சிறிய தொழிற்கூடங்கள் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போதிலிருந்து தொழிற்கூடங்கள் செயல்படும்?



விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

89—

வேலூர் நகராட்சி மூலம் திருமண மண்டபம் கட்டும் திட்டம்.

வினா 15091:—திரு. வி. எம். தேவராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகராட்சி திருமண மண்டபம் கட்டுவதற்கு அரசிடம் கடன் கோரி மனு செய்துள்ளதா?

விடை—

இல்லை.

90—

கிராமங்களில் தெருவிளக்குகள் எரிவதைச் சரிபார்க்க ஒன்றிய அளவில் மேற்பார்வையாளரை நியமிக்கும் திட்டம்.

வினா 15120: செல்வி வி. விசயலட்சுமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமங்களில் தெருவிளக்குகள் சரியாக எரிவதில்லையென்று வரும் பரவலான புகார்களை தடுக்க ஒன்றிய அளவில் மேற்பார்வையாளரை நியமிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா?

விடை—

இல்லை.

91—

சென்னை பெரியார் நகரில் (பெரவள்ளூர்) அரசு மேல்நிலைப் பள்ளி ஏற்படுத்தும் திட்டம்

வினா 15180: திரு. செ. செம்மலை: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் அரசு ஊழியர்களுக்கென ஏற்படுத்தப்பட்ட பெரியார் நகரில் (பெரவள்ளூர்) அரசு மேல்நிலைப்பள்ளி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

[1983 ஏப்ரல் 27

92—

புத்தகங்கள் வெளியிடுவோருக்கு மலிவு விலையில் காகிதம் வழங்கும் திட்டம்.

வினா 15450: வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புத்தகங்கள் வெளியிடுவோருக்கு மலிவு விலையில் காகிதம் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

93—

அரியலூர் இரயில்வே நிலையம் அருகே பெரம்பலூர்-மானா மதுரை சாலையில் ஒரு மேம்பாலம் அமைக்கும் திட்டம்.

வினா 15484: திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூர் இரயில்வே நிலையத்தில் இரயில்வே லைன் குறுக்கே செல்லும் பெரம்பலூர் மானா மதுரை சாலையில் ஒரு மேம்பாலம் அமைக்க திட்டம் உள்ளதா?

விடை

இல்லை.

94—

அரியலூர்-திட்டக்குடி சாலையில் வெள்ளாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம்.

வினா 15488—திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூர்-திட்டக்குடி சாலை கி.மீ. 26/2-ல் வெள்ளாற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசிடம் செயற்குறிப்புள்ளதா?

விடை—

இல்லை.

95—

எல்லா குடிசை மாற்று வாரிய கட்டிடங்களுக்கும் மின்சார இணைப்பு கொடுக்கும் திட்டம்

வினா 15505: திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—



1983 ஏப்ரல் 27]

எல்லா குடிசை மாற்று வாரிய கட்டிடங்களுக்கும் மின்சார இணைப்பு கொடுக்க அரசிடம் ஏதேனும் செயற்குறிப்புள்ளதா?

விடை—

இல்லை.

[illegible]—

[illegible]ணைக்குடி-திருப்பு[illegible]லாணிச் சாலையில் பாலம் கட்டும் திட்டம்.

வினா 15694:—திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் ஆணைக்குடி-திருப்புல்லாணிச் சாலையில் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பணி எப்பொழுது மேற்கொள்ளப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

97—

கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகம்

வினா 15786:—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஆறு மாதத்தில் பயன் தரக்கூடிய கரும்புரக ஆராய்ச்சி நடைபெறுவது உண்மையா?

விடை—

இல்லை.

98—

எல்லா தாலுக்கா தலைமையிடங்களிலும் அரசு ஊழியர்களுக்கு வாடகை வீடுகள் கட்டித் தரும் திட்டம்.

வினா 15898: திரு. செ. செம்மலை: மாண்புமிகு தொழி[illegible]ளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு [illegible]யளிப்பாரா—

(அ) எல்லா தாலுக்கா தலைமையிடங்களிலும் அரசு [illegible]களுக்கு வாடகை வீடு கட்டித்தரும் செயற்குறிப்பு [illegible] உள்ளதா?

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbian Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

## IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
Palaniappa Bros., Tiruchirappalli-2.
S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

## IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabhu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B.B. Ganguli Street, Calcutta-17.

---

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT
PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 15TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

136049

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

99—

தாமிரபரணி ஆற்றில் ஸ்ரீவைகுண்டம் அணைக்கு கிழக்கே ஏரலில் ஒரு அணை கட்டும் திட்டம்.

வினா 16018: திரு. மு. அப்பாத்துரை: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் தாமிரபரணி ஆற்றில் ஸ்ரீவைகுண்டம் அணைக்கு கிழக்கே ஏரலில் ஒரு அணை கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்றப்படும்-

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

100—

திருப்பூர் ரயில் நிலையம் அருகிலுள்ள சிறிய பாலத்திற்கு பதிலாக மேம்பாலம் கட்டும் திட்டம்.

வினா, 16180: திரு. ஆர். மணிமாறன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் ரயில் நிலையம் அருகில் உள்ள சிறிய பாலத்திற்கு பதிலாக மேம்பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அத்திட்டம் நிறைவேற எவ்வளவு காலம் பிடிக்கும்?

விடை—

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

V211,31 N83
N83•51•4